


கல்கி
தீபாவளி
மலர்
மணியம்
1958
KALKI DEEPAVALI NUMBER


எந்தச்
சமயத்திலும்
எந்த
இடத்திலும்
எந்தச்
சந்தர்ப்பத்திலும்
உங்கள் முழு அழகு
பொலிவதற்கு
கடாவ்
வாயில்கள்



— ஆர்காட்டில் அச்சடித்த பருத்தி ஆடை

சாயக் கலை

ஒரு தேசத்தின் அழகுணர்ச்சி அத்தேசத்து கைத்திறன் வாய்ந்த தொழிற் சிற்பிகளால் உருவாக்கப்படும் கலைச்சாதனங்களிலிருந்து வெளியாகிறது. சாயக் கலையிலும் அச்சு பாட்டர் வேலைகளிலும் நிபுணரான இந்திய சாயத் தொழிலாளி கண்ணைக் கவரும் வர்ணங்களில் இந்தியப் பெண்மணிகளுக்குள்ள அபிமானத்துக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்கிறார். பாரதப் பெண்மணிகளின் கண்கவர் ஆடைகள் சாய நிபுணர் உபயோகிக்கும் சரியான சாயத்தினால் இன்னும் அதிக வனப்புடன் விளங்குகின்றன. டில்லி நர்த்தகிகள் அணியும் அழகிய அச்சு வேலைப்பாடுள்ள மஞ்சள் வர்ணப் பாவாடைகள், நீல நிற வாயில்கள்; தக்காணத்து கும்மி பெண்மணிகளின் தகதகவென ஜொலிக்கும் சிவப்பு மற்றும் பழுப்பு நிறப் புடவைகள்; பாட்னி பெண்மணிகளின் கவர்ச்சியான ஆடைகள்; ராஜபுதன மாதர்கள் அணியும் வானவில் நிற ஆடைகள் — இவை யாவும் இந்திய சாய நிபுணரின் அசாதாரண கைத்திறனுக்கு உற்ற சான்றாகும்.

இந்தியர்களின் பல்வேறு நிறமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் அதுல் ஸ்தாபனம் உயர்ந்த ரக பலவகை சாயங்களை உற்பத்தி செய்வதில் மகத்தான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அந்தவகை சாயங்களின் உற்பத்தி, சிறந்த பயிற்சி பெற்ற ரசாயன, நுட்பத் தொழில் நிபுணர்களின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. முன்னேற்றத்தை நாடும் இந்த இளைஞர்கள், தொழில் திறனிலும் கலைப் பண்பிலும் இந்தியாவின் பண்டையப் புகழை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக, உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் தொண்டாற்றி வருகிறார்கள். இவ்விதம் கைத்தொழில் முன்னேற்றத்தில் அவர்கள் தங்கள் பங்கைச் செய்து வருகிறார்கள். இது ஒவ்வொரு இந்தியனுக்கும் அளவு கடந்த பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். இந்த மகிழ்ச்சியை வெளியிடச் சாயக் கலையின் வளர்ச்சிக்காகப் பாரதநாடு புதிதாகத் தொடங்கியுள்ள இந்த முயற்சிக்கும் பூரண ஆதரவையும் உதவியையும் அளிப்பார்கள்.

THE ATUL PRODUCTS LTD.


ATUL, Via BULSAR, WESTERN RAILWAY

PNJ-AT-3


ஜூபிலி பிலிம்ஸ்
வி. கோவிந்தராஜன்
அளிக்கும்
பார்த்திபன் கனவு
மணியம்—



திரைக்கதை
விந்தன்
சங்கீதம்
வேதா
படப்பிடிப்பு:
செல்வராஜ்
காட்சி ஜோடனைகள்
மணியம்
டைரக்ஷன்
யோகானந்
கல்கியின் எழுத்துக்கு எழுத்து எண்ணத்துக்கு எண்ணம்
பிரதிபலிக்கும் திரை ஓவியம்


COTTON MILLS
The Coimbatore Cotton Mills Limited.
SINGANALLUR · COIMBATORE.
MANAGING AGENTS: R. BHEEMA NAIDU & CO.

நாங்கள் தங்குவது...



- முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டுள்ளது
- பிரத்தியேக நீச்சல் குளம்
- ஒவ்வொரு அறையிலும் டெலிபோன், குளிர்சாதனப் பெட்டி, 'ஷவர் பாத்' வசதி
- அறைகள் ரூ. 45ம் அதற்கு மேலும்

THE

ASHOKA HOTEL

THE LARGEST LUXURY HOTEL OF THE EAST

Diplomatic Enclave — NEW DELHI.

Grams: "Ashoka Hotel" Phone: 34481 (40 Lines)

Newfields-AH/9


விரைவில்
வருகிறது
வாசு பிலிம்ஸ்
ஒரே வழி
கதை, வசனம்-ஜாவர் சீதாராமன் • இசை-கோவர்தன்
பாடல்கள்-கவிஞர் கண்ணதாசன் • காமிரா-தம்பு • ஆர்ட்-பாலு
டைரக்ஷன்-K.சங்கர்
ஸ்டுடியோ: ஜெமினி
...பூரண உரிமையாளர்...
செந்தமிழ் சித்ரா
(வலம்புரி சிங்காரம் செட்டியார்)
நெ.25, தாண்டவராயன் தெரு,
மதராஸ்-14.




S.R. ருசாம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

தபால் பெட்டி 1151, மதுரை 21.


மங்கள ஸ்நானத்திற்கு
உத்தமமானது!
அருணகிரிவிலாஸ்
சீயக்காய் பவுடர் (REGD.)
ARUNAGIRI VILAS
SOAPNUT POWDER
KARAIKUDI
CHARI


தங்க பஸ்பம்
புகையிலை
தங்க பஸ்பம்
THANGABASPAM TOBACCO
MILD SCENTED
N. ஆறுமுகம் பிள்ளை
தயாரிப்பாளர்கள்
N. ஆறுமுகம் பிள்ளை.
தங்கபஸ்பம் புகையிலை பாக்டரி.
காரைக்குடி.
CHARI

பொருளடக்கம்



சொற்பொழிவுகள்

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் ஸ்ரீ ராம்தீர்த் யோகாஸ்ரமத்தில் உடற்பயிற்சி, மன அமைதி, தெய்வ பலம் ஆகிய பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெறும்.



SHRI YOGIRAJ UMESHCHANDRAJI



யோகாசன வகுப்புக்கள்

தினசரி காலை 7-30 முதல் 9-30 மணி வரையிலும் மாலை 6 முதல் 7-30 மணி வரையிலும் ராம்தீர்த் யோகாஸ்ரமத்தில் தவறாமல் நடைபெறும். பெண்மணிகளுக்கு மாலை 3-லிருந்து 5 மணி வரை விசேஷ வகுப்புக்களும் நடைபெறும். பெண்மணிகளுக்குப் பெண் உபாத்தியாயர்களே வகுப்பு நடத்துவர். பல நோய்கள் இயற்கை வைத்திய முறைப்படி குணப் படுத்தப்படுகின்றன

யோகாசன சித்திரப் படங்கள்

வழ வழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக் கவரும் விதத்தில் பெரிதாகச் சித்திரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 2-50, தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.

உமேஷ் யோக தரிசனம் (முதல் பாகம்)

குஜராத்தி, ஹிந்தி, ஆங்கிலம், மராத்தி ஆகிய நான்கு மொழிகளில் உள்ளன

நூற்றுக்கு மேற்பட்ட விரிவான கண்ணைக் கவரும் பலவித யோகாசன புகைப்படங்களுடனும் கூடியது. காலம், நேரம், தேசம், வயது ஆகியவைக்கேற்ப இந்த ஆசனங்களின் பலன்கள் விவரிக்கப்பட்டுள்ளன. குடல் பயிற்சி, குடல் ஆதிக்கம் ஆகியவற்றுக்கு இந்த நூல் சிறந்த வழிகாட்டி. இந்தப் புத்தகத்தில் கண்ட யோகாசனங்களைச் செய்து ஆரோக்கியம் பெறலாம். வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் படங்கள் அச்சாகியுள்ளன. விலை ரூ. 12/- தபால் செலவு ரூ. 2 தனி.

ராம்தீர்த் ப்ராம்மி எண்ணெய் ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

பொடுகு, தலைமயிர் விழுதல் ஆகியவற்றை நீக்கும் ஒப்புயர்வற்ற கூந்தல் தைலம் இங்கு தயாராகிறது. ராம்தீர்த் பிரம்மி எண்ணெய் கூந்தலுக்கும், மூளைக்கும் சிறந்தது. கண்களுக்குக் குளுமை, மூளை, ஞாபகசக்தியின் விருத்தி, சுகமான தூக்கம் ஆகியவற்றுக்குக் கைகண்ட மருந்து. உடலைத் தேய்த்து, பிடித்து விடுவதற்கு மிகவும் உகந்தது. எல்லோருக்கும் எக்காலத்துக்கும் உபயோககரமானது. விலை பெரிய புட்டி ரூ. 4/-, சிறிய புட்டி ரூ. 2/- தபால் செலவு தனி.

பலவித உன்னதமான மூலிகைகளினால் ராம்தீர்த் பிரம்மி எண்ணெய் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஸ்ரமம்

Phone: 62899 — தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய்-14 — Grams: PRANAYAM, Dadar-Bombay

சென்னை டெப்போ: 4/441, தங்கசாலைத் தெரு, சென்னை-3

வேலனையே அழைப்பாய்

கல்கி

பல்லவி

வேலனையே அழைப்பாய்—
விந்தைக்குயிலே!
கோலக் கிளியைத் துணை
கூட்டிச் சென்றிடும் என்
(வேலனையே)

அனுபல்லவி

நீல வெளிதனிலே
நிமிர்ந்து பறந்து பாடி
நேரஞ் செய்யாமலிந்த
நிமிஷம் எழுந்து வர
(வேலனையே)

சரணம்

சோலை யழகும் சொர்ணம்
ஓடி ஒளிர்ந்து பாயும்
ஓலைக் குருத்தும் தென்னம்
பாளை வெடித்த பூவும்
மாலை வெய்யிலும் மஞ்சள்
கோலமும் கண்டு மனம்
பாலித்தருள் செய்யென்றிப்
பேதை உரைத்ததாக
(வேலனையே)



மோர்க் துளி

பிரயாகையில் சமாதியடைந்த திரவிடதாசருடைய பூர்வாச்ரமப் பெயர் நாராயண வாஜபேயர். அவர் திருவல்லிக்கேணியில் வேத வேதாந்த சாஸ்திரம், புராணம் எல்லாம் ஓதிப் புகழ்பெற்ற பண்டிதர். படிப்பெல்லாம் முடிந்த பின் மக்களுக்குப் பாகவதம் சொல்லி ஆஸ்திகமும் பக்தியும் வளரச் செய்து வந்தார். அவருடைய பிரவசனம் எங்கே நடந்தாலும் அங்கு பெருங் கூட்டம் வந்து சேர்ந்து விடும். ஆண் பெண் குழந்தைகள் எல்லாரும் மெய்ம் மறந்து கேட்பார்கள்.

இவருக்கு ஒரு அபிமான சிடர் இருந்தார். அவர் பெயர் லக்ஷ்மண சாஸ்திரி. இளைஞராயினும் புராணங்கள் நன்ருகப் படித்து ஞானம் அடைந்தவர். அடக்கமே உருக் கொண்டாற் போன்றவர். நாராயண வாஜபேயருடன் கூடவே இருந்து குருவுக்குச் சுசுருஷை செய்து வந்தார்.

** ** **

பத்து வருஷங்கள் குருவினிடம் பழகியபின் லக்ஷ்மண சாஸ்திரி தாமே புராணப் பிரவசனம் செய்ய ஆரம்பித்தார். வெகு சீக்கிரத்தில் நல்ல பெயர் பெற்ருர். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே குருவின் அளவு இவரும் புகழ் அடைந்து விட்டார். ராமாயணம் சொன்னுல் மக்கள் திரள் திரளாகக் கேட்க வருவார்கள். அனைவர் கண்களிலும் நீர் ததும்பும்.

லக்ஷ்மண சாஸ்திரியின் புகழ் நாடு முழுதும் பரவிற்று. பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வந்து அவரை அழைத்துப் போய்ச் சன்மானம் செய்தார்கள். வாஜபேயரும் தம்முடைய சிஷ்யன் முன்னுக்கு வந்தது கண்டு சந்தோஷம் அடைந்தார்.

"லக்ஷ்மணு! பகவானுடைய பிரசாதம் பெற்று விட்டாய்!" என்பார்.

அவரும், "குருநாதா! எல்லாம் உங்களுடைய ஆசீர்வாதத்தின் பயன்" என்பார்.

** ** *

பாலில் மோர்த் துளி ஒன்று விழுந்து விட்டது. கலி புருஷனுடைய வேலை. சித்திரை மாதம் சுக்லபக்ஷம். லக்ஷ்மண சாஸ்திரி முத்தியாலு பேட்டையில் சுந்தர காண்டம் சொல்லிக் கொண்டிருந்தார். "அற்புதம், அற்புதம்!" என்று எல்லாரும் கொண்டாடினுர்கள். அன்பர் ஒருவர்—அவர் ஒரு வக்கீல். சாஸ்திரியை ஒரேயடியாய்ப் புகழ்ந்து எழுதி அதைப் பத்திரிகையில் பிரசுரமும் செய்வித்தார். அந்த ஆங்கிலப் பத்திரிகையை அவரே நாராயண வாஜபேயரிடம் கொண்டு வந்து படித்துத் தமிழில் மொழி பெயர்த்து விளக்கமாக விஷயத்தைச் சொன்னுர்.

வாஜபேயருடைய உள்ளத்தில் பொருமை புகுந்து விட்டது.

'தம்முடைய படிப்பு எவ்வளவு, இந்தச் சிடன் படிப்பு அதற்குமுன் எம்மாத்திரம்! தம்மைப் பற்றி ஒருவராவது பத்திரிகையில் இது வரை புகழ்ந்து எழுதியதில்லை. ஏதோ கூட்டத்தில் சில வைதிகர்கள் ஸ்தோத்திரம் செய்து பேசுவதுண்டு. ஆனல் எந்தப் பத்திரிகையிலும் புகழுரை வந்ததில்லை. இந்தச் சின்னப் பயலுடைய ராமாயணப் பிரவசனத்தைப் பற்றி இங்கிலீஷ் பத்திரிகையில் இத்தனை புகழுரையா?' என்று எண்ணி எண்ணித் துடித்தார் வாஜபேயர்.

அது முதல் வாஜபேயருக்கு இரவில் தூக்கம் சரியாக வரவில்லை. படுத்தபின் வெகு நேரம் லக்ஷ்மண





சாஸ்திரி உருவமும் பத்திரிகை நினைவும் மனத்தைக் கடைந்து கொண்டே இருக்கும். சிஷ்யனைக் கண்டால் முன் போல் சுமுகமாகப் பேசுவதில்லை. சில நாட்கள் கழித்து அவருடன் பேசுவதையே நிறுத்தி விட்டார்.

ஆங்கிலப் பத்திரிகையில் வந்த புகழுரையைப் படித்து, புதுப் புது ஊர்களிலிருந்து பல சங்கங்கள் முன்னைவிட அதிகமாக லக்ஷ்மண சாஸ்திரியை அழைத்தார்கள். அவருடைய ஊக்கமும் பக்தியும் மேன்மேலும் வளர்ந்து மிக அழகாக அவர் ஹரிகதா காலக்ஷேபங்கள் நடத்தி வந்தார். ஊர் ஊராக ஓய்வின்றிப் போய்க் கதை சொல்லி வந்தார்.

மழை காலத்தில் கொஞ்சம் இருமல் கண்டது. நாட்கள் செல்லச் செல்ல நோய் அதிகமாயிற்று. எந்த மருந்துக்கும் அது கேட்கவில்லை. பிரவசனங்களை நிறுத்த வேண்டியதாயிற்று.



''குருவிடம் பக்தி குறைந்து விட்டது. அகங்காரம் மேலிட்டது. அதனால் நோய்ப்பட்டுக் கிடக்கிறான்'' என்று நாராயண வாஜபேயர் உள்ளத்தில் திருப்தி அடைந்தார், சிலரிடம் இதை வெளிப்படையாகச் சொல்லவும் செய்தார். இந்த அபவாதம் ஊரெல்லாம் பரவிற்று.

ஒரு நாள் பிரவசனம் செய்யும் போது இடையில் 'சிலர் கொஞ்சம் படித்து விட்டு அகம்பாவங் கொண்டு பத்திரிகைகளில் தம் பெயரும் வரச் செய்து தாம் மிகப் பெரியவர்கள் என்று எண்ணிக் கொள்வதும் உண்டு' என்று சாஸ்திரியின் பெயரைச் சொல்லாமல் வாஜ பேயர் ஹாஸ்யமாகப் பேசினார். எல்லாரும் சிரித்தார்கள். அதைக் கண்டு வாஜபேயரும் சந்தோஷப் பட்டார். ஆனால் பொது மக்களோ ஹாஸ்யத்தின் போது சிரித்த போதிலும் மனத்தினுள் வருத்தப் பட்டார்கள். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. லக்ஷ்மண சாஸ்திரிக்கு அகம்பாவம் என்பது கொஞ்சங்கூட இல்லையே. இவர் இப்படிச் சொல்கிறாரே என்று வருத்தப்பட்டார்கள். அன்று முதல் வாஜபேயரின் பிரவசனங்களுக்கு வரும் கூட்டம் குறைய ஆரம்பித்தது.



'தூக்கம் வரமாட்டேன்' என்கிறதே என்று படுக்கையில் புரண்டுபுரண்டு இரவெல்லாம் கழிப்பார் வாஜபேயர். வரவர உடல்நிலை கெட்டுப் போய் நீரிழிவு ஆரம்பித்தது.

ஒரு நாள் வாஜபேயர் கண்முன் ஆஞ்சநேயன் நின்றான். சாக்ஷாத் ஹநுமான்! ''அடே, பிராமண அதமா! நீ உன் சிஷ்யன்பேரில் பொறாமைப்பட்டாயா?'' என்றான் வாயுபுத்திரன். அதாவது வாஜபேயர் அந்த ராத்திரியில் கொஞ்சம் தூங்கினார். தூங்கினது அவ

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ருக்குத் தெரியாது. மனச்சாட்சியின் வேலை கனவு உண்டாகி, கனவை நனவாகவே எண்ணிப் பயந்தார்.

"ஊரார் எல்லாம் அப்படி என்னிடம் சொல்லு கிறார்கள். இது உண்மையா ?" என்றான் ஹநுமான்.

"இல்லை, இல்லை, நான் அப்படியெல்லாம் பொரு ளைப்படவில்லை. பொய்" என்றார் வாஜபேயர்.

"பொய்யில்லை ! என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?" என்றான் ஹநுமான். சொல்லி விட்டுக் கனவில் வந்த ஹநுமான் மார்பில் ஒரு குத்துக் குத்தினான். வாஜ பேயர் 'ஆ' என்று கதறி எழுந்தார்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்று மனைவி சமா தானப்படுத்தி மறுபடியும் படுக்கச் சொன்னாள்.

'ஆஞ்சநேயர் ஆஞ்சநேயர்' என்று வாஜபேயர் உளறினார். மனைவிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

வாஜபேயர் உடல் நிலை அதிக மோசமாயிற்று. இரவில் சிலசமயம் தூக்கத்தோடு மெய்ம்மறந்து எழுந்து நடப்பார். வீட்டில் மனைவியும் குழந்தைகளும் பயந் தார்கள். வரவர இப்படித் தூக்கத்தில் எழுந்து நடப்பது அதிகமாயிற்று. மனைவியின் கவலையும் அதிக மாயிற்று. பல கோயில்கள் சென்று வாஜபேயர் மனைவி பிரார்த்தனை செலுத்தினாள். திருப்பதி வெங்கடேசனை வேண்டிக் கொண்டு கையில் அணிந்திருந்த கட்டித் தங்க வளையல்களை உண்டியில் போட்டாள். ஜயம் பூண்டி காளிகோயிலில் யாருக்கும் தெரியாமல் ஒரு கோழிப் பலிக்கும் ஏற்பாடு செய்தாள்.

ஒரு நாள் வாஜபேயர் இரவில் எழுந்து, "சுதர்சன சக்கரம் துரத்தி வருகிறது, துரத்தி வருகிறது, ஐயோ!" என்று கதறினார். கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று மனைவி புலம்பினாள். அது முதற்கொண்டு தூக்கத்தில் எழுந்து நடப்பதும் வீட்டைவிட்டு ஓடுவதும் சாதாரணமாகி விட்டது. கோளாறு அதிகமாயிற்று.

ஒரு நாள் மத்தியானம் படுத்துக் கொஞ்ச நேரம் நன்றாக உறங்கினார். மனைவிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. "சுவாமி, ஈசுவரா ! சொஸ்தப்படுத்தி விட்டாயா ?" என்று மனைவி பிரார்த்தனை செய்தாள்.

வாஜபேயர் திடீரென்று எழுந்து, "ஐயோ ! ஐயோ !" என்று கூச்சல் இட்டுக் கொண்டு வீட்டை விட்டு ஓடினார். மனைவி தெருவில் கொஞ்ச தூரம் தொடர்ந்து ஓடினாள், பிறகு வெட்கப்பட்டு நின்று அழுதுகொண்டு வீடு திரும்பினாள்.

வாஜபேயர் நேராக ஓடி லக்ஷ்மண சாஸ்திரியின் வீட்டுக்கே போய்ச் சேர்ந்தார்.

"அப்பனே ! நீதான் காப்பாற்ற வேண்டும். நீ தான் துருவாசனைக் காப்பாற்ற வேண்டும் !" என்று சிடனுடைய காலைத் தொட்டு 'ஓ' எனப் புலம்பினார். லக்ஷ்மண சாஸ்திரிக்கு இதைத் தாங்க முடியவில்லை. துக்கப்பட்டார். அப்பொழுது அவருடைய தேக ஸ்திதி யும் மோசமாக இருந்தது. காசம் கண்டு கஷ்டப்பட்டுப் படுக்க முடியாமல் தலையணையை மார்பில் அணைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். குருவினிடம் அவருக்குத் தளராத பக்தி. எழுந்து நின்று வாஜபேயரைக் கட்டி யணைத்துக் கொண்டு,—"இதுவென்ன அபசாரம் ! வேண்டாம். நான் சிறுவன். என்னை நீங்கள் காலைத் தொட்டு நமஸ்காரம் செய்யலாமா ? நான் அழிந்து போவேன் !" என்று தடுத்தார். தூக்கத்திலிருந்து தெளியாமல் ஓடி வந்த வாஜபேயர் அப்போது திடீ ரென்று விழித்துக் கொண்டு பிரமித்தார்.

"ஏன் இங்கே வந்தேன் ? லக்ஷ்மணா ! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை !" என்று சொல்லி விட்டுத் திரும்பிப் போய் விட்டார்.

⁂ ⁂ ⁂

சில நாட்கள் கழித்து மறுபடியும் இவ்விதமே நடந்தது. லக்ஷ்மண சாஸ்திரியின் வீட்டுக்கு வாஜபேயர் ஓடி வந்து அவருடைய காலில் விழுந்து, "அப்பனே ! விஷ்ணு சக்கரம் துரத்தி வருகிறது. துருவாசன் பிழைக்க மாட்டான். நான் என்ன செய்வேன் ?" என்று புலம் பினார். லக்ஷ்மண சாஸ்திரியின் பாதங்களைப் பிடித் தவர் விடாமல், "காப்பாற்று, காப்பாற்று !" என்று கூச்சலிட்டார்.

லக்ஷ்மணசாஸ்திரி பஞ்ச பாத்திரத்திலிருந்து தண் ணீர் எடுத்து வாஜபேயர் தலையில் தெளித்து 'ராம ராம' என்று ஜபித்தார். சில நிமிஷங்கள் கழித்து வாஜபேயர் நினைவு தெளிந்தார். தெளிந்து, "அப்பனே ! லக்ஷ்மணா! உன்னை நான் குறை கூறினது மகாபாபம். இந்தப் பாபத்துக்கு என்ன விமோசனம் ? நீதான் சொல்ல வேண்டும்" என்று கண்களில் நீர் பெருகக் கெஞ்சினார்.

"சுவாமி ! எனக்கு ஒரு தப்பும் நீங்கள் செய்ய வில்லையே ! என்னுடைய கெட்ட காலம், யாரோ பத் திரிகையில் எழுதி விட்டார்கள். அதை மறந்து விடுங்கள். ஆஞ்சநேயன் நம்மைக் காப்பாற்றுவான் !" என்று சொல்லி லக்ஷ்மண சாஸ்திரி கால்மணி நேரம் 'ராம ராம' என்று ராம நாம ஜபம் செய்தார். பிறகு வாஜபேயரை அவர் வீட்டுக்கு அழைத்துப் போய்க் குருவினுடைய மனைவியையும் தரையில் விழுந்து நமஸ் கரித்து விட்டுத் தம் வீட்டுக்குத் திரும்பி வந்து படுத்தார்.

⁂ ⁂ ⁂

நாராயண வாஜபேயருடைய கோளாறு குறைய வில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஒருநாள் வாஜபேயர் யாருக்கும் தெரி யாமல் குடும்பத்தை விட்டு விட்டுப் பிரயாகை சென்று விட்டதாக ஊரில் செய்தி பரவிற்று.

சில நாட்கள் கழித்துப் பிரயாகையில் ஓர் ஆஞ்ச நேயர் கோயிலில் வாஜபேயர் தினமும் பூஜை செலுத்தி வருவதாகவும், அங்கே ஒரு சந்நியாசியிடம் சேர்ந்து அவருக்குச் சமையல் செய்து சிசுருஷை புரிந்து வருவ தாகவும் சமாசாரம் வந்தது.

ஓர் ஆண்டு கழித்து மனைவிக்குக் கடிதம் வந்தது. உடல்நிலை சுகப்பட்டு வருவதாகவும், இரவில் சரியாகத் தூங்குவதாகவும், எல்லாம் 'பாதாள ஹநுமானு'டைய கிருபை என்றும், தாம் பிரயாகையிலேயே வாழ்நாட் களைக் கழிக்கப் போவதாகவும் வாஜபேயர் தம் மனை விக்கு எழுதியிருந்தார். கடிதத்தை லக்ஷ்மண சாஸ்திரி யிடம் காட்டிப் புலம்பினாள் குருபத்தினி.

பிரயாகை க்ஷேத்திரத்தில் நாராயண வாஜபேயர் பத்து வருஷங்கள் ஸ்ரீதர சந்நியாசிக்குச் சமையல் செய்து பணிவிடைகள் புரிந்து வந்தார். பிறகு சந்நியாசி யிடம் தாமும் தீட்சை பெற்றுத் துறவு பூண்டார். இரண்டு ஆண்டுகளில் தேக வியோகம் அடைந்து பரம பதம் ஏகினார்.

⁂ ⁂ ⁂

பிரயாகையில் நாராயண வாஜபேயரை அடக்கம் செய்த பிருந்தாவனம் இன்னும் இருக்கிறது. ஸ்ரீதர சந்நியாசியின் பிருந்தாவனத்துக்குக் கிழக்கில் பத்து கஜ தூரத்தில் இருக்கிறது. அதற்குத் 'திராவிட தாசர் பிருந்தாவனம்' என்று பெயர் வழங்கி வருகிறது.

லக்ஷ்மண சாஸ்திரி கடந்த நந்தன வருஷத்தில் வடக்கே யாத்திரை சென்றபோது பிரயாகையில் சில நாட்கள் தங்கித் தம் குருவின் பிருந்தாவனத்துக்கு மூன்று நாட்கள் பூஜை செலுத்தினார். அவருக்கு இருந்த காசநோய் அது முதல் நின்று விட்டது. கடைசியாக அவருக்கு வைத்தியம் செய்த அலகாபாத் ஹோமியோ சிகிச்சைக்காரர் தம்முடைய மருந்தினால்தான் நின்றது என்று எல்லாரிடமும் சொல்லிக் கொள்கிறார். குருவுக் குச் செலுத்தின பூஜையினால்தான் நோய் நின்றது என்று சாஸ்திரி திடமாக நம்புகிறார். எதுவாயினும் இப் போது லக்ஷ்மண சாஸ்திரி சுகமாகவும் சந்தோஷமாக வும் ராமாயண கதை சொல்லிக் கொண்டு வருகிறார்.

பக்தருள் சிறந்த பரதன்

ராமாயணத்துக்குக் கதாநாயகன் யார்?

துன்பத்தையும் இன்பத்தையும் ஒன்ருக எண்ணி ஞன் ராமன். 'காட்டுக்குப் போ'வென்று தந்தையின் உத்தரவைக் கைகேயி வாயிலாகக் கேட்டதும் சிறிதும் மனம் கலங்காமல் 'அங்ஙனமே ஆகுக' என்ருன் என்பது வால்மீகியின் வாக்கு. கம்பரோ, கைகேயியின் சொற்கேட்டு, ராமன் மகிழ்ந்தான் என்கிருர்.

" ஒப்பதே முன்பு மற்றவ் வாசகம்
உணர்ந்த பின்னர்
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை
வென்ற தம்மா."

ஆனல் ராமன் காட்டுக்குப் போன துயரத்தைப் பரதன்தான் அனுபவித்தான். செய்தி கேட்டதும், "அங்குசத்தாலும், தோமரத்தாலும் புண்படுத்தப் பட்ட யானை எனத் தரையில் வீழ்ந்தான். சினம் கொண்ட கட்செவியெனப் பெரு மூச்சு விட்டான். கண் சிவந்து ஆடை தளர்ந்து திருவிழாவின் முடிவில் தோன்றும் கொடியைப் போல் கசங்கி நின்ருன்" என்கிருர் வால்மீகி.

பரதனுடைய துயரம் மிகுந்த கோலத்தைக் கண்டு குகன் வியந்தான்.

வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனிய கனிகின்ற
துயரானைக் கண்ணுற்ருன்
விற்கையி னின்றிடைவிழ
விம்முற்று நின்றெழிந்தான்.

என்கிருர் கம்பர்.

பதினன்கு வருஷங்கள் கழிந்த பிறகு ராமனுக்கு அயோத்தியில் பட்டாபிஷேகம் நடந்தது. அப்போதும் ராமன் களிப்புறவுமில்லை; வருந்தவுமில்லை. தான் ஆதியில் கைகேயியினிடம், "எனக்குப் பொருளாசை கிடையாது; ரிஷியெனக் கருதுவாய்" என்றுரைத்த சொல்லை நடத்தையில் காண்பித்தான். ஆனல் ராமன் முடிசூடியபொழுது மகிழ்ச்சியடைந்தது பரதன்!

அயோத்தியா காண்டத்தில் "முனிவரெல்லாரும் ஒன்று கூடி ராமனுக்கு முடி சூட்டி நான் காண தேவர்கள் அருள வேண்டும்" என்று சபதம் செய்திருந்தான் பரதன். முடிசூடும் தறுவாயில் 'வெகு நாட்களாய் வளர்ந்து வந்த என் மனோரதம் இன்றுதான் கைகூடியது' என்று ஆனந்தக் களிப்புற்ருன்.

ஆகவே, ராமனைக் கடவுள் என்றே கருதுவோம். இன்பத்தையும் துன்பத்தையும் கடந்து நிற்கும்கடவுளைக் கதாநாயகன் என்று சொல்வது பொருந்தாது. நல்லொழுக்கம், அன்பு, மன உறுதி எல்லா நற்குணங்களும் வாய்ந்து தன்னெறி தவருத நாயகன் பரதன் என்றே சொல்லுவோம்.

காட்டுக்குச் சென்ற ராமனைக் காணும் வரையில் பரதன் பட்ட துயரத்தை வால்மீகியும் கம்பரும் பலவிதமாக வர்ணித்திருக்கிருர்கள். 'ராமரைக் காணும் வரை என் மனம் சாந்தி அடையாது' என்று பரதன் சொன்னதை வால்மீகியில் அடிக்கொரு தடவை காணலாம். ராமன் கிழங்கைத் தின்று புல்லில் தூங்கி வருந்தியதை அறிந்தும் தன் உயிர் போகவில்லையே என்று வருந்தியதைக் கம்பர் சுவையுடன் சொல்கிருர்.

"இயன்றதென் பொருட்டினல் இவ்விடர் உனக்கென்ற
போழ்தும்
அயின்றனை கிழங்கும் காயும் அமிர்தென, அரியபுல்லில்
துயின்றனை யெனவுமாவி துறந்திலென் சுடருங்காசு
குயின்றுயர் மகுடஞ்சூடும் செல்வமும் கொள்வ னென்
யானே!"



பக்தி நூல்களில் பக்தர்களுடைய தன்மையைக் குறித்தும், அவர் வேண்டும் முக்தியைக் குறித்தும் பலவாறு விவரித்திருக்கிருர்கள். தான் வழிபடும் கடவுளைக் காணது தவிப்பது பக்தரின் வழக்கம். வைணவ நூல்களில் வைகுண்டத்தில் நித்திய சூரிகளாக இருப்பவர்கள் கடவுளுக்குப் பொருந்திய தோற்றத்தையும் உருப்பையும் பெற்று இடைவிடாது ஆனந்தத்தை அனுபவிப்பார்கள் என்று உரைக்கப்பட்டுள்ளது. இதையே பக்தர்கள் வேண்டுவார்கள். இதற்கு வடமொழியில் 'சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம்' என்பார்கள். (அதாவது வைகுண்ட வாசமும், கடவுளுடைய தரிசனமும், அவரைப் போல் தோற்றமும்) ஆனல் பரதன் இவ்விதமான ஆனந்தத்தைக் கோரவில்லை.

தனக்கு முன் பிறந்தோன் என்றும், தந்தை என்றும், சுற்றம் என்றும், தெய்வம் என்றும் ராமனைக் கருதி, அவன் படும் துயரெல்லாம் தான் படவேண்டுமென்று வருத்தத்தைத் தேடி அழைத்துக் கொண்டான்.

ராமன் காட்டுக்குப் போன செய்தியைக் கேட்டதும், 'அடியேனும் புல் மீதோ புவி மீதோ உறங்குவேன், காய்கனியே உட்கொள்வேன், மரவுரி உடுப்பேன், சடை தரிப்பேன்' என்று சபதம் செய்து ராமன் திரும்பவும் அயோத்தியை அடையும் வரை தானும் நகரத்துக்குச் செல்லாமல் நந்திக் கிராமத்திலேயே தங்கி வந்தான். கடவுளுடன் சாலோக்ய, சாரூப்யத்தை—இத்துயர் நிலையில் அனுபவித்த பக்தன் பரதன் ஒருவனே! ராமனுடன் கூடவே இல்லாவிடினும் அவன் பாதுகையைத் தலைமேல்வைத்து; பதினன்கு வருஷங்கள் அதற்கு ஆராதனம்

புரிந்து ராமனோடு ஒரு புதுவிதமான சாமீப்யத்தையும் அடைந்தான் பரதன்.

'பக்தி என்பது அன்பே உருவானது' என்பது பக்தி சூத்ர வாக்யம். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர்.

கலியில் கடவுளை அடைவதற்குப் பக்தியே எளிதான வழி என்றுரைப்பது மிகையாகாது.

பக்தி செய்வதற்கு அபார ஞானமும் கலைகளில் திறமையும் சாத்திரங்களில் சாமர்த்தியமும் தேவை இல்லை. இவ்விதத்தில் தான் பக்தி செய்யலாம் என்ற கட்டுப்பாடுமில்லை. பக்தியை மனத்தால் செலுத்தலாம். வாயால் பாடலாம். செயலால் காண்பிக்கலாம். தனிமையிலே கடவுளை நினைத்துப் பரவசமடையலாம். கோஷ்டியில் கூடிநின்று குதூகலமடையலாம். குல தர்மத்தையும் சாதி தர்மத்தையும் தாண்டி அனைவருக்கும் ஒரே வழியைக் காட்டி, பக்தியானது கடவுளை வழிபடுவோரை ஒன்றாக இணைக்கிறது.


பக்திக்கென்று தனி முயற்சியும் வேண்டாம். நாம் செய்யும் செயல்கள் யாவையும் கடவுளுக்கு என்று அர்ப்பணம் செய்துவிட்டால் அதுவே பக்தியுடன் செய்யும் பூஜையாகி விடுகிறது. பாகவதத்தில் கண்ணனை பயத்தாலும் வெறுப்பாலும் மனத்திலே எண்ணினாலே போதுமானது; இடைவிடாது தியானிப்பதுதான் முக்கியம் என்று வியாசர் கூறியிருக்கிறார். ஏனென்றால் வேற்றுமையெல்லாம் கடவுளின் அருள் பெறும் வரையில்தான்.

கீதையை உபதேசித்த கண்ணன், பக்தரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

"என்னையே எப்பொழுதும் எண்ணி உயிரை என்னிடம் செலுத்தி, என் கதைகளை ஒருவருடன் ஒருவர் சொல்லிக் களித்து இடைவிடாது இன்புற்றிருப்பார்."

மேற்கூறிய அம்சங்களில் ஒவ்வொன்றும் பரதனிடத்தில் பொருந்தியிருப்பதை நாம் காண்கிறோம்.

ராமனை நினைத்து மனம் உருகினான்; குகனிடம் சென்று, தென் திசை செங்கை கூப்பி, 'எவ்வழி உறைந்தான் நம்முன்?' என்று வினவினான். ராமனைக் கண்டதும் பரவசமடைந்தான். அவனையே மனத்தில் எண்ணி ஆட்சியை நடத்தினான். ராமனுடைய துயருடன் துயரடைந்து, மகிழ்ச்சியுடன் மகிழ்ச்சியுற்றான். ராமனிடத்தில் பரதனுக்கு இருந்த அன்புக்கு எல்லையே இல்லை. 'கரைகாணுக் காதலான்' என்று குகனுக்குச் சொன்ன வாக்கு பரதனுக்குப் பொருந்தும்.




பரதனுக்கு ராமனிடம் அன்பும் பக்தியும் மேற்கூறியவாறு கரைபுரண்டு ஓட, ராமபிரானுக்கும் பரதனிடம் அளவிலா அன்பு இருந்தது என்பதைக் காண்கிறோம். இதைக் கம்பரும் வால்மீகி முனிவரும் ஒருங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கம்பருடைய அபிப்பிராயத்தில் ராமன் பரதனை தன்னைவிட வேறாகவே கருதவில்லை. ஆழியான் உலகத்தை பரதனே ஆள, தாழிரும் சடைகள் தாங்கி, காட்டில் முனிவரோடு ஏழிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து திரும்பி வா, என்று கைகேயி ராமனிடம் சொன்னபோது, ராமன் அவளுக்குக் கூறிய பதில் அவனுக்குப் பரதனிடம் இருந்த அன்பைக் காட்டுகிறது.

**"என்பின்னவன் பெற்றசெல்வம்
அடியனேன் பெற்றதன்றோ"**

என்றான் ராமன்.

விபீஷணன் ராமனிடம் வந்து சரணடைந்த போது அவனை பகைவன் தம்பியானதினால் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று ஆலோசனை சொன்னார்கள். இதையெல்லாம் கேட்ட ராமன் 'சரண் புகுந்தவர்களுக்கு அடைக்கலம் தந்தே தீருவேன்' என்று சொல்லிவிட்டு, நாட்டையும் வீட்டையும் துறந்து, மாதாவையும் மனையாளையும் மறந்து, ராமனே கதி என்று காட்டுக்கு வந்த லட்சுமணனிடம், "சூழ்ந்தாய் தம்பிமார் அனைவரும் பரதனைப் போல் இருப்பார்களா?" என்று சொன்னதாக வால்மீகி வாக்கு.

பக்தருள் சிறந்து பரமனின் அருளைப் பூரணமாக பெற்ற பக்தன் பரதனே!


மோட்டார் சைகிளில் போகும் மனிதர்...
ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார்
எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார் கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார் இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது
ROYAL ENFIELD
ராயல் என்பீல்ட்
படிப்படியாக தயாரிப்பவர்கள்:
தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்.
மதராஸ்-19.
பூரண விற்பனையாளர்கள்:
தி மதராஸ் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெ
மதறாஸ் பெங்களூர் டில்லி



முதற் காட்சி

நாலைந்து பனை மரங்களின் அரவணைப்பில், பனையோலை வேய்ந்த குடிசை ஒன்று. மழையும் கடற்காற்றும் அரித்த மண் சுவர்கள், சாதிக்காய்ப் பலகையால் சேர்க்கப் பெற்று, வாயெல்லாம் பொக்கையும் ஆணியுமாய்த் திகழ்கின்ற கதவு. ஓட்டைக் கூரை. குடிசையைச் சுற்றி, சில கத்தரிச் செடிகள்; பூத்துக் குலுங்கும் அவரைப் பந்தல். காய்களைத் தூக்க முடியாமல் துவண்டு, நீள்வதற்கு மறந்த பூசனிக் கொடி. உடை முள் வேலிக் கருகில் நிலவாகைச் செடியின் பொன் விழிகள்.

வேலிக்கு வடக்கே தாழையும் முட்செடியும் மண்டிய மணல் வெளி. அதற்கு அப்பால் கடற்பாடியிலிருந்து தாமரைக் குளத்துக்குச் செல்லும் பெரிய சாலை.

மேற்கே, ஒரு கல் தொலைவில், கடற்பாடி நகரத்து வீடுகள் திட்டுத் திட்டாகத் தென்படுகின்றன. அவற்றிலிருந்து, நகரின் ஆட்காட்டி விரல்போல் நிமிர்ந்து, வானத்தைச் சுட்டுகிறது பஞ்சாலை ஒன்றின் கறுத்த புகை போக்கி.

குடிசையின் வாசலில் அதன் சொந்தக்காரனான குருசாமி நிற்கிறான். ஐம்பது வயதிருக்கும். உழைப்பால் முறுக்கேறி, வறுமையால் மெலிந்த உடல். விழியிலே, அது என்ன பிடிவாதமா, முரட்டுத்தனமா, நிராசையால் விளைந்த சாந்தியா, எதுவென்று குறிக்க முடியாத ஒரு உறுதி. இடுப்பில் அழுக்கேறிய நாலு முழ வேஷ்டி. மேலே கிழிந்த அரைக்கை சட்டை.

நாடகம் தொடங்கும் போது, குருசாமியோடு பேசக் கொடுத்து நிற்கிறார் புன்னைவனம். ஊரிலே பெரியமுதலாளியான, நிலவன்பாதூர் பச்சை நந்தி பிள்ளையின் கணக்குப் பிள்ளையாகப் பல ஆண்டுகள் உழைத்ததன் பயனாக, வழுக்கைத் தலையும், வெளுத்த வேட்டியும், சாலிக்கோத்தும், இடது கையிலே அடக்கமாகத் துவளும் வெள்வேட்டியும், 'கணக்குப்பிள்ளை ஐயா' என்ற பட்டமும் பெற்றவர்; குழைந்து போவது, வளைந்து கொடுப்பது, 'நமக்கேன் பாடு' என்ற தத்துவங்களில் ஊறி ஊறி, தனக்கெனத் தனிப் பண்பில்லாத நீர்க் குமிழ்ப்போன்ற நிலையை நோக்கி, வெள்ளி பிரேம் போட்ட வெள்ளெழுத்துக் கண்ணாடியோடு நடந்து செல்லும் மனித இயந்திரம்.

—

புன்னைவனம்: தம்பி குருசாமி! பிறகு என்ன செய்யப் போறே?

குருசாமி: *(மெல்ல நகைத்து)* செய்யரது என்னுங்க, இந்தக் கை இருக்குது. இந்தத் தோட்டம் இருக்குது. கடவுள் இருக்கிறாரு.

புன்னைவனம்: தம்பி! இப்பவும் ஒன்னும் மோசம் போகல்லே. நான் போய், நம்ப முதலாளியிடம் சொல்லி, உன்னைத் திரும்பவும் மில்லிலே வேலைக்கு எடுத்துக்கிடச் சொல்றேன். நீ மாத்திரம்.......

குருசாமி: நான் என்ன செய்யணுமுங்க?

புன்னைவனம்: உன்னுடைய பிடிவாதத்தை விட்டுட்டு நல்ல பிள்ளையா...

குருசாமி: என் பாட்டன் முப்பாட்டன் காலத்துலேருந்து எங்கிட்ட உள்ள இந்த 'நிலத்தையும், வீட்டையும் உங்க முதலாளி கையிலே ஒப்படைச்சுட்டு, நல்ல பிள்ளையா தலை யிலே துணியைப் போட்டுட்டுப் போகணும், இல்லையா?

புன்னைவனம்: சிவசிதம்பரம், சிவசிதம்பரம்! இது தானே ஆகாது. அப்பேன். உனக்குத்தான் நாயமான விலை தாரேன்னு முதலாளி சொல்றாரே?

குருசாமி: அதெல்லாம் வேறே வழியில்லேன்னு இப்பம் சொல்லுறாரு. நிலத்தைப் புறம்போக்குன்னு சாதிச்ச எடுத்துக் கிடப் பாத்தாரு முடியல்லே. இப்பம் விலை பேசுறாரு. அப்ப டித்தானே, கணக்கப் பிள்ளை, ஐயா?

புன்னைவனம்: நீ அந்தப் பழங் கதை யெல்லாம் இப்ப மறந்துடணும்.

குருசாமி: அவரு மறக்கல்லீங்களே? பிறகு, எதுக்கு என்னை வேலையை விட்டு நீக்கினாரு. அதைச் சொல்லுங்க.

புன்னைவனம் *(மென்று விழுங்கி)*: அதுவா...அதுவா... அது...ஏதோ பெரியவங்க கோபத்திலே செய்தா, அதைப் பெரிசு பண்ணாதே. அடிக்கிற கை தான் அப்பா, அணைக்கவும் செய்யும். நான் போய்ச் சொல்லி...

குருசாமி: வேண்டாங்க...

புன்னைவனம்: சிவ சிதம்பரம்! சிவசிதம்பரம்! நல்லது உன் காதிலே ஏறவில்லையே, தம்பி.

குருசாமி: அதே மாதிரியே, என் நிலத்திலேயும் ஒருத் தரும் ஏறுமே இருந்தாப் போதுமுங்க.

புன்னை வனம்: தம்பி, இங்கே பார், நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு.

குருசாமி: கேட்க என்ன இருக்குதுங்க? இந்தக் கட்டை சாயர வரைக்கும் இந்த நிலத்தையும் வீட்டையும் விடப் போறதில்லே.

புன்னைவனம்: வேண்டாம் குருசாமி! வேண்டாம். ஏதோ எங்க முதலாளி பக்கம் பேசறேன்னு நினையாதே. நானும் உன் மாதிரி ஏழைதான். அவரும் நல்ல சாஸ்திரத்துக்குத் தானே ஒன் நிலத்தைக் கேட்குறாரு? பள்ளிக்கூடம் பெரிய தருமம் அப்பா, அதுக்குத்தானே உன் நிலம் போகப் போகுது. அதுவும் உன்னைச் சும்மா கொடுக்கச் சொல்லவில்லே. நாயமான விலை. என்ன உனக்குப் பிடித்தமில் லையா? வேணும்னு ஆயிரம் இரண்டா யிரம் கூட்டித் தரச் சொல்லுறேன். உன்னை மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கிடச் சொல்லுறேன். நாம் ஏழைங்க. அவங்களை எதிர்க்க முடியுமா? ஒத்துப் போகணும் தம்பி, ஒத்துப் போகணும். ஒதுங்கிக்கூடப் போகணும். பணம் பாதா ளம் வரைக்கும் பாயும், ஆமாம்.

[வழுக்கைத் தலையைத் தடவுகிறார்.]

குருசாமி: *(சிரித்து)* பாயட்டும் ஐயா, பாயட்டும்! நல்லாப் பாயட்டும்! நான் என்ன பாதாளத்திலே குதிச்சு அங்கே பாயர பணத்தைப் பொறுக்கிவாந் திடவா போறேன்? இந்த ஒண்டிக் கட் டைக்குப் பணம் எதுக்கு? காசு தான் எதுக்கு?

புன்னைவனம்: நாக்குலே ஒரு வார்த்தை தம்பி! ஒன்னும்





கூட வரப் போறதில்லே. சிவசிதம்பரம், தெரியாமலா பெரியவங்க சொன்னாங்க !

'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே'

அதுசரி! ஒரு பேச்சுக்குச் சொல்றேன், கோபப்பட மாட்டியே?

குருசாமி : கோபமா? சும்மாச் சொல்லுங்க. கணக்குப் பிள்ளே ஐயா? நீங்க எங்க ஐயாமாதிரி. இந்த மறவனுக்கு ரோசமெல்லாம் மனுங்கிப்போய் ரொம்ப நாளாச்சு.

புன்னைவனம் : பணம் காசு ஒண்ணும் வேண்டாமுனு சொன்னியே,நிசந்தானே?

குருசாமி : (மெல்ல நகைத்து) உண்மைதானுங்க. ஒரு காலத்திலே அதுக்கெல்லாம் ஆசைப்பட்டது நிசந்தான். இப்போ... இப்போ ...என்னுலே சொல்ல முடியல்லீங்க. நான் என்ன படிச்சவனு. மனசிலே உள்ளதைப் பேச்சிலே தூக்கி வைக்க?...

புன்னைவனம் : படிச்சவங்களா? சிவசிதம்பரம்! உள்ளதை மறைக்கத்தான் அவங்க பேச்சை விசுவாங்க. நீ கம்மாச் சொல்லு, தம்பி !

குருசாமி : பணம் காசு எல்லாத்துலேயும் ஆசை போயி நாளு வருஷமாச்சுதுங்க. அவ போனதிலேருந்து...அவ போனதிலேருந்து ...... முதல்லேஐயாபோனது. பிறகு அவ போனது. பிறகு...பிறகு......

[பேச்சு வராமல் விம்மி நிற்கிறான்.]

புன்னைவனம் : (கலங்கியவராய்) தம்பி, குருசாமி! இந்தக் கிழவனுக்குக் குட்டிச்சுவர் மாதிரி வயசாகி என்ன, புத்தி மாத்திரம் இல்லே. ஆமாம். ஆறின புண்ணைப் போய்க் கிளறி னேன் பாரு. வருத்தப் படாதே தம்பி! எனக்கு எல்லாம் தெரியும். மருதப்பத்தேவரு மகதானே உன் சமுசாரம்? எனக்குச் சின்னப் பிள்ளேயிலே யிருந்து தெரியும். நல்ல பொண்ணு. தங்கமான பொண்ணு. என்னவோ அப்பா. உனக்கு! இந்தச் சோதனே வேண்டாம். அவளேத்தான் கடவுள் கொண்டு போனருன்னு உன் மகள், அந்தச் சின்னக் குட்டி கல்யாணியும் சாக வேண்டாம்... அடே. சே, என் புத்தியைப் பாரு... வேண்டாததைச் சொல்லித் தொலேக்கிறேன். அதையெல்லாம் மறந்துடு, தம்பி!

குருசாமி : (குரல் தழதழக்க) மறக்க முடியல்லீங்க, கணக்குப் பிள்ளே ஐயா!

[எங்கோ வெறித்துப் பார்க்கிறான்.]

புன்னைவனம்: (கண் கலங்கியவராய்) வருத்தப்படாதே. தம்பி! நம்ம கையிலே என்ன இருக்கு? இருக்கிறதையும் செய்ய மாட்டேன்னு சாதிக்கிறோம். இல்லாததை எண்ணிக் கஷ்டப்படறோம். உம்... உம்... எல்லாம் அவன் செயல். சிவசிதம்பரம்! (வந்த காரியத்தை நினைத்தவர் போல) அப்போ நான் வரட்டுமா, தம்பி! ஏதோ யோசனே பண்ணி முடிவு சொல்லு. வரட்டுமா ?

குருசாமி : இருங்க ஐயா, ஒரு விசயம் கேக்கணும். நம்ப கடற்பாடி ஊரிலே முத்துக் குளிப்பு இப்போ நடக்குதே...

புன்னைவனம் : ஆமாம்.

குருசாமி : அதிலே ஒண்ணும் ஏமாத்து இல்லீங்களே?

புன்னைவனம் : ஏன் கேட்கிறே?

குருசாமி : ஒண்ணுமில்லீங்க. நேத்து என்னே வேலேயிலேருந்து நீக்கிவிட்டாங்க இல்லே?...

புன்னைவனம் : ஆமாம், ஆமாம். அதை நான் சரியாக்கிப் போடறேன்.

குருசாமி : அப்போ, கையிலே எனக்குப் போனசுப் பணமா இருநூறு ரூபாய் கொடுத்தாங்க.



புன்னைவனம் : போகட்டும், அந்த மட்டுக்கும் புண்ணியவாங்கதான்.

குருசாமி : அதை அப்படியே முத்துச் சிப்பி வாங்கப் போறேன்.

புன்னைவனம் : முத்துச் சிப்பியா? உனக்கு ஏதாச்சும் பயித்தியம் பிடிச்சிருக்கா?

குரு : அவ அவ...... சாகக் கிடந்தப்போ நம்ம ஊரிலே முத்துக் குளிப்பு நடந்ததுங்க. அது...ஒரு முத்து — ஒரு நல்ல முத்து — வேணும்னு கேட்டுச்சு. அப்போ கையிலே பணம் இல்லீங்க...

புன்னைவனம் : அதுக்காக?

குரு : இந்த இருநூறு ரூபாய்க்கும் முத்துச் சிப்பி வாங்கப் போறேனுங்க. ஒரு முத்துக் கூடவா கிடைக்காமப் போகும்? கிடைச்சா, அவ போட்டோ படம் வச்சிருக்கேனுங்க. அதுக்கு அந்த முத்தைப் போட்டால் என் நெஞ்சு ஆறுமுங்க....

புன்னைவனம் : குருசாமி, குருசாமி! இப்போதான் இந்தக் கிழவனுக்குத் தெரியுது. ஏன் ஒன் நிலத்தையும் வீட்டையும் விலேக்குத் தரமாட்டேங்கிறேன்னு இப்போத்தான் தெரியுது. நான் என்ன செய்யட்டும்?

குரு : ஆமாம். எங்க ஐயா, அவ, அந்த .... அந்த என் மக கல்யாணி, போனவங்க மூணுபேரும் எனக்கு இந்த நிலத்திலே, இந்த வீட்டிலே இருக்காங்க. இந்த இடந்தான் என் உசிருங்க....

புன்னைவனம் : இப்போ தெரியுதப்பா! நான் என்ன செய்யட்டும்? எங்க முதலாளி பிடிவாதமா இருக்காரே ? சொல்லிப் பார்க்கிறேன். சிவ சிதம்பரம்!...சிவ சிதம்பரம்!... பணத்தை விழுக்காதே, தம்பி. அதெல்லாம் சேராலங்களுக்குத்தான் சேரும். ஏழை முத்துச் சிப்பி வாங்கினல் ஓடு தான் கிடைக்கும். வரட்டுமா?

வெளியிலிருந்து குரல் : ஏய், கணக்குப் புள்ளே ! நில் ஐயா, எங்கே ஓடப் பார்க்குறீரு?

புன்னைவனம் : அது யாரு?

குரு : எங்கள் தொழிலாளி சங்கத் தலைவரு கோடையிடி கோதண்டம் வாராரு. நீங்க, நிக்காதீங்க, போங்க !

[புன்னைவனம்போகத் திரும்புகிறார். கோதண்டம் வருகிறன். அவனுக்கு முப்பது வயதிருக்கும். கொப்புத் தலே. இருந்தாலும் கேசம் நீண்டு அடர்ந்து கலேந்து தொங்குகிறது. கட்டம் போட்ட வெப்புயனியன். இடுப்பிலே கைலி. கையிலே ஓயாமல் புகையும் சிகரெட்டு. மனத்திலே...

கோதண்டம் : கணக்குப் பிள்ளே யென்று கயவன் பச்சைநந்திக்குப் பல்லிளித்துப் பல்லவி பாடும் இல்லுமுல்லே, எங்கே செல்கிறாய்? நில். உன் முதலாளி பச்சைநந்திப் பிள்ளேயின் பச்சோந்தி நாடகத்தைப் பட்டவர்த்தனமாக்கி, பட்டப் பகலிலே நடக்கும் அட்டகாசத்தைக் கட்டுக் கொட்டை பரப்பாவிட்டால், என் பெயர் கெட்டிக் கோதண்டமா? சொல் ஐயா, சொல். சொல்லி விட்டுப் பிறகு செல், ஐயா !

புன்னைவனம் : (திணறிப் போய்) இல்லீங்க, தம்பி!

கோதண்டம் : இல்லையா? இல்லையா? இல்லையா?

இல்லே யென்ற சொல்லே — இங்கே
இல்லேயாக வைப்போம்.

இல்லேயாம்! ஆம், முதலாளிப் புச்சிக்கும் அகற்றுக் தானம் போடும் கூனத்துக்கும் மானம் இல்லே, வெட்கமில்லே, அறிவில்லே, பரிவில்லே.

புன்னைவனம் : சிவ சிதம்பரம், சிவ சிதம்பரம் ! நான் வரேனுங்க, தம்பி. குருசாமி, நான் வரேன். *[போகிறார்]*

கோதண்டம்: போகட்டும், அந்தப் புல்லர் கூட்டத்துப் புழுக் கணக்கன். குருசாமி அண்ணே, பரபரக்காதே. முதலில் இதற்கொரு முடிவு காணவேண்டும்.

குரு: வாங்க, தம்பி! முடிவு என்னுங்க, எல்லாந்தான் முடிஞ்சு போச்சே.

கோதண்டம்: முடிந்ததா? முடியவில்லே, முடியவில்லே, முதலாளிப் பண மூட்டை முடிந்திடவில்லே. இதற்கொரு முடிவு காண வேண்டும். மூலை முடுக்கு, சந்து பொந்து, பட்டி தொட்டி எங்கும் நமது கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். உன்னே மயக்க வந்த புன்னைவனத்தின் சின்னத்தனத்தைச் சின்னாபின்னமாக்கி, ஊர் சிரிக்க, உலகம் சிரிக்க உழைப்பான் இந்தக் கோதண்டம். இன்று மாலையில் ஈராயிரம் பேர் இசையும் பொதுக் கூட்டம். இன்றைக்கு வாய்ப் பேச்சு. நாளைக்குக் கைவீச்சு. என்ன அண்ணே, கவலைப்படாதே. உன்னே அந்த உலுத்தன் உடனடியாக வேலைக்கு எடுக்கா விட்டால், ஆலைக்குக் கல்லெடுப்பு. ஆமாம். ஒரு நூறு ரூபாய் மட்டும் கொடு.

குருசாமி: எதுக்குத் தம்பி?

கோதண்டம்: எதற்கா? எதற்கென்று கேட்கிறாய்? கும்பி கொதிக்கும் தம்பியருக்குச் சம்பளம் உயர்த்த; உரிமை யற்றவர்க்குப் பெருமை வழங்க; வாடும் மக்கள் பெயரால் ஆடும் முதலாளி வர்க்கத்துக்குப் பாடம் கற்பிக்க. ஒரு நூறு ரூபாய், ஒரு நூறு.

குருசாமி: எனக்கு வேலே வேண்டாமுங்க. என் கையிலே பணம் இல்லிங்க.

கோதண்டம்: அண்ணே! அதெல்லாம் செல்லாது இந்த ஆராய்ச்சி மன்னனிடம். போனசு பணம் நேற்று வாங்கவில்லே? இந்தக் கோதண்டம் இல்லா விட்டால் போனசு ஏது? போனசு போனதாகப் போயிருக்குமே! கொடுத்த கையைக் கடிக்க வாரியே. எடு நூறு ரூபாய். கூட்டம் போடுவோம், குரல் கொடுப்போம், கொடி ஏற்றுவோம். பிறகு....

குருசாமி: இல்லிங்க. அந்தப் போனசுப் பணத்துக்கு அப்படியே முத்துச் சிப்பி வாங்கப் போறேன்.

கோதண்டம்: முத்துச் சிப்பியா? முத்தா? அடடா, அடடா, குருசாமி, நீயும் என்ன, முதலாளியாகப் போகிறயா? போ, போ, அழிந்து போ. அதற்குள் உன்னே அணைத்துக் காக்கும் சங்கத்துக்கு, ஐம்பது ரூபாயாவது கொடு. போதும், அப்பா!

குருசாமி: வேண்டாமுங்க.

கோதண்டம்: வேண்டாமா? உன் நிலத்தையும் வீட்டையும் வேட்டையாடும் அந்தப் பச்சோந்திப் பாவிக்குப் பாடம் கற்பிக்க வேண்டாமா?

குருசாமி: அதெல்லாம் வேண்டாமுங்க. நீங்க சும்மாப் போங்க. நிலத்தையும் வீட்டையும் ஒருத்தரும் தொட மாட்டாங்க.

கோதண்டம்: சங்கத்தின் பெருமையை மங்க விடலாமா? அநீதியை அழித்து, சமூகர்களுக்குச் சாவுமணி அடிக்க வேண்டாமா?

குருசாமி: செய்யுங்க, என்னே விட்டுடுங்க. நான் கடற்பாடிக்குப் போகணும்.

கோதண்டம்: சரி, சரி, சரி, சந்தா வரியாக...

குருசாமி: இந்தாங்க, ஏதோ காப்பிச் செலவுக்கு வச்சுக்குங்க. நான் வாரேன்.

[கோதண்டத்தின் கைக்குள்ளே ஒரு நோட்டை வைத்து விட்டுப் போகிறான்]

கோதண்டம் (கையைப் பிரித்துப் பார்த்து): ஒரு ரூபாய், ஒரே ஒரு ரூபாய். எச்சில் பொறுக்கும் நாய். ஓயாமல் ஒழியாமல் உழைக்கும் உத்தமனுக்கு ஒரு ரூபாய். போ, போ, குருசாமி உனக்கு வழி வைக்கிறேன்.

[சிகரெட்டை வீரத்தோடு பார்க்கிறான். அது அணைந்து விட்டது. அதை வீசி எறிந்து விட்டுப் போகிறான்.]

இரண்டாம் காட்சி

[திவான்பகதூர் பச்சைநந்திப் பிள்ளையின் வீட்டின் முன் அறை. வலது புறம் ஜன்னல் வழியாகத் தோட்டத்தின் ஒரு பகுதி தெரிகிறது. அறையின் நடுவில் வட்டமேசை அருகில் பச்சைநந்தி நிற்கிறார். நல்ல உயரம்; ஆனும் சிறிது கனம்; தலையிலே அடர்ந்த வெள்ளை கேசம்; கறுப்புச் சாயம் ஏற்றிய மீசை; மெல்லிய கூர்மையான உதடுகள்; எதிரே உள்ளவரைத் தடவிக் கொடுக்கும் கண்கள்; பட்டு ஜிப்பா, ஜரிகை வேட்டி, விரலில் வைர மோதிரம். பக்கத்தில் கணக்குப் பிள்ளை, புன்னைவனம் சஞ்சலத்தோடு ஏதோ சொல்ல வாயெடுத்து, உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்கிறார்.]

பச்சைநந்தி: உனக்கு உலகம் தெரியாது. புன்னைவனம் வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணி ஏமாந்து போகிறாய். நான் அந்தப் பயல் குருசாமியை வழிக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்துட்டேன்.

புன்னைவனம்: எனக்கு என்னவோ ஐயா, அந்த நிலம் வேண்டாமுனு தோணுது.

பச்சைநந்தி: பிறகு பள்ளிக்கூடத்துக்கு அஞ்சு ஏக்கர் வேணுமே? அஞ்சு ஏக்கரும் ஐம்பதினாயிரம் ரூபாயும் இருந்தால் பேசுங்க என்று கலெக்டர் சொல்லி விட்டாரே. ஐம்பதினாயிரம் ரூபாய்...ஐம்பதினாயிரம். பணம் ஏதோ வீட்டுக் கொல்லையிலே முளைக்கிற மாதிரி அந்தக் கலெக்டர் புண்ணியவான் பேசுறன். அவங்க வீட்டு முதலா இருந்தாத் தெரியும். நம்ப மூன்றரை ஏக்கரோடே, அந்தக் குருசாமியோடே ஒன்னே கால் ஏக்கரைச் சேர்த்தா, அநேகமாக அஞ்சு ஏக்கராயிடும். ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு எங்கே போறது?

புன்னைவனம்: நான் சொன்ன கோவிக்க மாட்டீங்களே? கவர்ன்மெண்ட் பாண்டிலே ஒரு பத்து லட்சம் நமக்குக் கிடக்குதே. அதிலேருந்து...

பச்சைநந்தி: நல்லாச் சொன்னே, புன்னைவனம், நல்லாச் சொன்னே. உங்க ஐயா வீட்டு முதல்னு நினைச்சையோ? ஊ...ம்...என் நினைப்புத்தான் என்ன? அந்தத் தொகையை அப்படியே ஏதாவது ஒரு முட்டுக்கு வைச்சிருக்கேன். அதைப் போய்க் கரைக்கப் பார்க்கிறியே?

புன்னைவனம்: செலிதம்பரம், செலிதம்பரம்! பிறகுவழி?

பச்சைநந்தி: ஊரிலே நன்கொடை வசூல் செய்து விட்டால் போச்சு.

புன்னைவனம்: நிலத்துக்கு...

பச்சைநந்தி: அந்தப் பயல் குருசாமியை வழிக்குக் கொண்டாந்திடறேன். நீ கவலைப்படாதே.

புன்னைவனம்: ரோட்டுக்கு வடக்கே மருதங்னெறு ஐயரு தோட்டம் இருக்குதே. அதை வாங்கிப் பள்ளிக்கூடத்துக்கு வைக்கலாங்களேன்.

பச்சைநந்தி: அந்த ஐயரு, கல்லிலே நார் உரிக்கிற கஞ்சப் பயல். கொடுத்தால் பதினஞ்சு ஏக்கரும் சேர்த்துத் தான் கொடுப்பானும். லச்சரூபாய் வேணுமாம். லச்ச ரூபாய்க்கு எந்த மூதி கிட்டப் போறது?

புன்னைவனம்: எனக்கு ஒன்னு தோணுதுங்க.

பச்சைநந்தி: என்ன?

புன்னைவனம்: நமக்கு இந்தப் பள்ளிக்கூட வியவகாரமே வேண்டாமுங்க. அதெல்லாம் பணமுள்ளவங்க செய்யர காரியமாகத் தோணலிங்க.

பச்சைநந்தி: அதென்ன புன்னைவனம், அப்படிச் சொல்லுறே? இந்த ஊர்ப் பெரிய முதலாளின்னு இத்தனை



வருசம் இருந்துட்டு, ஒரு பள்ளிக்கூடம் கூட வைக்காட்டா? என் பேரு விளங்க வேண்டாமா? இன்னொரு விசயம் உனக்குச் சொல்லணும். நீ ஏதோ நமக்கு நட்டமாயிடுச்னு நினைக்காதே. கவர்ன்மெண்ட் இரண்டு தொகையை வைச்சே ஓட்டலாம். மிச்சங்கூடப் பிடிக்கலாம்னு தாமரைக் குளத்து முதலியார் சொல்றாரு. பேருக்குப் பேரு. வரும்படிக்கு வரும்படி. என்ன, புன்னைவனம்?

புன்னைவனம்: சிவ சிதம்பரம்! சிவ சிதம்பரம்!

பச்சைநந்தி: நீ உன் சிவ சிதம்பரத்தை விடமாட்டே போலே இருக்குது. சரி, போயி அந்தக் கோதண்டம் இருக்கிறான் பாரு அவன்கிட்ட தயமாய்ப் பேசி, இங்கே அழைச்சிட்டு வா.

புன்னைவனம்: கோதண்டமா? அவன் உறவே வேண்டாமுங்க. ஒவ்வொரு நாளும் அவன் உங்களைத் திட்டுற திட்டு. சந்தைப் பேட்டையிலே கூட்டம், கும்பாவி, ஒழிக கோஷம், எல்லாம் உங்களை எதிர்த்துத்தான்.

பச்சைநந்தி (சிரித்து): நீ உன் சிவ சிதம்பரத்தைக் கட்டி அழுது சிவனேன்னு இரு. அப்பா. உனக்கு உலகம் என்ன தெரியும்? கோதண்டம் திட்டுறானு? திட்டிக் கொட்டத்தானே அவனுக்கு வாய்க்கரிசி போட்டுக் கிட்டு வாரேன். எதிர்க்கட்சியிலே நம்ப கையாள் அவன்தான். நீ எழுதற வட்டச் செலவுத்தொகையெல்லாம் எங்கே போவுது தெரியுமா?

புன்னைவனம்: எங்கேயோ?

பச்சை நந்தி (சந்தேகத்துடன் புன்னைவனத்தைப் பார்த்து): எங்கேயோ போவுது. உனக்கென்ன? அவனை அழைச்சிட்டு வா, முதல்லே!

புன்னைவனம்: ஒரு வார்த்தை முதலாளி. அந்தக் குருசாமி நல்லவனுங்க. அவன் நிலத்தின் மேலே, அந்தக் குடிசையின் மேலே, உசிரை வைச்சிருக்கான். நமக்கு வேண்டாம், முதலாளி! அந்த ஏழை பாவத்தைக் கொட்டிக்க வேண்டாம்.

பச்சை நந்தி (சிறிது கோபமாக): லேய், புன்னைவனம், எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டியோ? நிறுத்திக்கிடும். அது யாரு அங்கே, வாசல்லே? கோதண்டம் வரான். நீர் உள்ளே போய்க் கணக்கு வழக்கைச் சரி பாரும். புத்தி சொல்ல வந்திட்டாரு புலவரய்யா!

[புன்னைவனம் போகிறான்; கோதண்டம் வருகிறான்.]

கோதண்டம்: என்னுங்க முதலாளி, சௌக்கியந்தானே? வணக்கமுங்க. வணக்கம், நன்றி. வானொட்டும் மகிழ்ச்சி.

பச்சைநந்தி: வாங்க கோதண்டம், வாங்க. உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

கோதண்டம்: இங்கே பேசலாமில்லே?......

பச்சைநந்தி: சும்மாப் பேசுங்க. இங்கே ஒரு ஈ காக்கை இல்லே. என்ன, காரியத்தை முடிச்சட்டீங்களா?

கோதண்டம்: அதென்ன அப்படிக் கேட்கிறீங்க? முடிக்காமே? கோதண்டமா கொக்கோ? ராவோடு ராவே போனேன். அந்தக் குருசாமிப் பயல் முத்துச் சிப்பி வாங்க வருக்குள்ளே போயிருந்தான். பிறகு என்ன? சிகரெட் துணி, மேல் காத்து, குருசாமி குடிசை மூணும் ஒண்ணுக் கலந்தா என்ன ஆகும்? சாம்பல், சாம்பல், சாம்பல். சாம்பல் ஆயின் சாம்பல் ஆயின், தேம்பல், தேம்பல், தேம்பல், தேம்பல்.

பச்சைநந்தி: உஸ்! இரைந்து பேசாதீங்க. சுவரு கோழிக்குக் கொண்டை பறி போகும். மெதுவாப் பேசுங்க.

கோதண்டம்: சரி, நான் மெதுவாப் பேசறேன். நீங்க மெதுவாக அந்தத் தொகையை எடுக்கறீங்களா?

பச்சைநந்தி: (ஒன்றும் தெரியாதவர் போல்) எந்தத் தொகை?

கோதண்டம்: என்ன விளையாடுறீங்களா? நாம் பேசிக்கிட்டபடி ரூபாய் ஐந்நூறை எடுங்க.

பச்சைநந்தி: ஐந்நூறு ரூபா? அடேயப்பா, அந்த பச்சை நோட்டா? யார் கிட்டே அவ்வளவு பணம் இருக்குது?

கோதண்டம்: சும்மா விளையாடி நேரம் கடத்தாதேயுங்க. ரூபாயை எடுத்து வையுங்க.

பச்சைநந்தி: இப்போ டெலிபோனை எடுக்கப் போறேன்.

கோதண்டம்: டெலிபோனு?



பச்சைநந்தி: ஆமாம், நீங்க பேசாம வாலைச் சுருட்டிக்கிட்டுப் போகாட்டி, டெலிபோனை எடுத்துப் போலீசுக்குப் போன் செய்யப் போறேன். நீங்க ராத்திரி குருசாமி குடிசைக்கு நெருப்பு வைக்கறப்போ...

கோதண்டம்: ஏ, முதலாளி மூதியே! என்னிடமா உன் ஏறுமாறு?

பச்சைநந்தி: உஸ்! அந்த மோனை எதுகை விச்செல்லாம் இந்தப் பச்சை நந்திகிட்டச் செல்லாதுங்க. பிரசங்க மேடைக்கு வைச்சிக்கிடுங்க. என் காசிலே வளரும் மோனையும் எதுகையும் என்னை என்ன செய்யும்? ராத்திரி குருசாமி குடிசைக்குத் தீ வைச்சீங்களே, அப்போ நம்ப குருவி நாது அதைப் பார்த்துக் கிட்டு இருந்துதுங்க. தெரியுமா? நீங்க தான் தீ வைச்சீங்கன்னு சாட்சி சொல்லத் தயாராய் இருக்குது. புரியுதுங்களா? வசையா மாட்டிக்கிட்டே, கோதண்டம்! நீ குருசாமிகிட்ட நூறு ரூபாய் கேட்டதுக்குச் சாட்சி இருக்கு. ஏய்,புன்னைவனம்!

[புன்னைவனம் வருகிறார்.]

புன்னைவனம்: ஏன் முதலாளி, கூப்பிட்டீங்களா?

பச்சைநந்தி: கோதண்டம் ஐயா, நேத்துக் காலையிலே குருசாமிகிட்டே நூறு ரூபாய் கேட்டாரா?

புன்னைவனம்: ஆமாங்க, நானும் மாயாண்டித் தேவரும் குடிசை மறைவிலேருந்து காதாலே கேட்டோம்.

கோதண்டம்: அட, சிவசிதம்பரம்! கெடுத்திட்டியே கதையை, சிவசிதம்பரம் சிவசிதம்பரம்!

பச்சைநந்தி: நீ உள்ளே போ, புன்னைவனம்!

[புன்னைவனம் போகிறார்]

கோதண்டம் (சிரித்து): பிள்ளைவாள், வெற்றி நமதே. கோதண்டத்தை அடிக்கும் வேதண்டமாகப் பச்சோந்தி பாய்ந்தது. வெல்க பச்சோந்தி, வாழ்க பச்சோந்தி!

[சிரிக்கிறான்]

பச்சைநந்தி: இந்தத் துடுக்குப் பேச்சொண்ணும் வேண்டாம், பேசாமல் போய்ச் சேரும். இனி உம்ம சம்பளமெல்லாம் நம்மிடம் சாயாது. உம்ம குடுமி இவன் கையிலே இருக்குது. எச்சரிக்கையாய் இரும்.

கோதண்டம் (ஏளனமாக): உத்தரவு, எசமானே! தாங்களும் எச்சரிக்கையாய் இருக்க. இந்த அடிமை வேண்டுகிறேன். தங்கள் வீடு இன்னும் சிறிது நேரத்தில் தீக்கிரையாகும்; தங்கள் உயிர் நமனுக்குப் பலியாகும்; எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை!

பச்சைநந்தி: என்ன உளறுகிறாய்?

கோதண்டம் (சிரித்த வண்ணம் பாடுகிறான்):

ஐய ஒரு சேதி கேளும்—இந்த
ஆண்டைக்காரப்பயல் நடத்தை
யெல்லாம்
வரவரக் கெட்டுப் போச்சு...

பச்சைநந்தி (பதற்றத்துடன்): சும்மா இருக்க மாட்டாய்?

[டெலிபோனை எடுக்கிறார்]

கோதண்டம்: எடுமய்யா எடும், டெலிபோனை எடுத்துப் புலி போலப் பாயும். அது செத்த டெலிபோன், ஐயா. கயிற்றை அறுத்து விட்டுத்தான் உள்ளே நுழைந்தேன். ஒருத்தரையும் கூப்பிடாதேயும். கூப்பிட்டால் குத்திப் போடுவேன். ஏய், பச்சோந்தி! இந்தக் கோதண்டத்தையா ஏமாத்தப் பார்த்தே. இதைக் கேள். கனிலே சேதி தெரியுமா?

பச்சைநந்தி (மெல்லிய குரலில்): என்ன?

கோதண்டம்: முத்துச் சலாபத்திலே நேத்து பெரிய பெரிய முத்து கிடைச்சது. உமக்கு எப்படித் தெரியும்? குருசாமி குடிசை எரியறப்போ இங்கே இருக்கப்படாதுன்னு நீர்தான் தாமரைக் குளத்துக்கு ஓடிப் போய் ஒளிஞ்சுக்கிட்டீரே! உமக்கு எப்படித் தெரியும்?


பச்சைநந்தி (உதட்டை நாக்கால் தடவிக் கொண்டு): அப்படியா, அப்படியா? பெரிய முத்தா, பெரிய முத்தா? அட, எனவே, நான் இல்லாமப் போனேனே? எத்தனை ரூபாய்க்கு, கோதண்டம்? எத்தனை ரூபாய்க்கு?

கோதண்டம்: ரெண்டு லட்ச ரூபாய்க்கு மேலே... அதிலே ஒரு வேடிக்கை.

பச்சைநந்தி: என்ன வேடிக்கை? யாருக்கு முத்து கிடைச்சது?

கோதண்டம்: அதான் வேடிக்கை. நம்ம குருசாமிக்கு வச்சது இருபது ஆயிரம் ரூபாய் கிடைச்சதாம்.

ஆஹா, கடைசியாக நீங்கள் காத்திருந்து பெற்ற ஒரு சோப்!



டூமெக்ஸ் பேபி சோப்



உங்கள் குழந்தை அவசியம் விரும் பக்கூடிய ஒரு சோப். குழந்தைகள் டூமெக்ஸ் பேபி சோப் உபயோகித்து ஸ்நானம் செய்ய விரும்புகிறார்கள்.

டூமெக்ஸ் ப்ரைவேட் லிமிடெட்,
வேவல் ஹவுஸ, பெல்லார்ட
எஸ்டேட், பம்பாய்—1

WISHING YOU A HAPPY DEEPAVALI



பச்சைநந்தி (திகைத்து): ஆ...ங்... யா...யாருக்கு? கு...குருசாமிக்கா?

கோதண்டம்: எனக்கு இப்படி வரும்னு தெரிஞ்சா, அவன் குடிசைக்குத் தீ வைச்சிருக்க மாட்டேன். சத்தியமாய்ச் சொல்லுறேன், மாட்டவே மாட்டேன்.

பச்சைநந்தி: லட்சத்து இருபதினாயிரம் ரூபாயா? குருசாமிக்கா?

கோதண்டம்: ஆமாம்! பொறுமையாய் இருக்கிறதா? ஐயாவுக்குச் சேதி தெரிஞ்சதும், ஒரு திட்டம் போட்டேன். கோதண்டத்தின் ஐந்து கணத் திட்டம். குருசாமி குடிசைக்கு நீங்கதான் தீ வைச்சிட்டீங்கன்னு மில் தொழிலாளர் மீட்டே சேதியைப் பரப்பிட்டேன். இன்னிக்கி வேலை நிறுத்தம் தொடங்கியாச்சு. இப்போ வருவாங்க. குருசாமியை அழைச்சிட்டு இப்போ வருவாங்க. திவான்பகதூர் பச்சைநந்திப் பெருமான் வீட்டுக்குத் தீ வைக்க, அவரை நேரிலே நாயம் கேக்க. என்ன சொல்றெய், பச்சோந்தி? என்னைக் கவிழ்க்கவா பார்த்தாய்? கோதண்டம் வளைந்தால் கொலை விளையும். தெரிஞ்சுக்கோ தம்பி. முதல்லே தெரிஞ்சுக்கோ.

பச்சைநந்தி: தம்பி, கோதண்டம்! நீதான் இந்தச் சமயத்திலே...

[தோட்டத்திலிருந்து பெரும் கூட்டத்தினர் நெருங்கும் ஆரவாரம், கோஷங்கள்]

கோதண்டம்: வேட்டை நாய்கள் வருகின்றன. கெட்டுக்கெட்ட முதலாளி, உன்னை வேட்டையாட வருகின்றன.

பச்சைநந்தி. தம்பி, தம்பி, கோதண்டம், போனதெல்லாம் போகட்டும்... உனக்கு ஐந்நூறுக்கு ஆயிரமாத் தந்துடறேன். போலீஸ்காரங்க ணைரிலேஇல்லையா? ஆயிரம் ஆயிரமாய் லஞ்சம் கொடுத்துத் தொலைக்கிறேனே.

புன்னைவனம் (உள்ளேயிருந்து பதறும் குரலில்): ஐயா, முதலாளி, ஐயா! சன வெள்ளம் சாயுது. எக்கச்சக்கமா வருது. சிதம்பரம், சிவசிதம்பரம்!

[கூட்டத்தினர் ஆரவாரம் வலுக்கிறது]

கோதண்டம் (ஜன்னல் அருகில் சென்று): புரட்சி ஓங்குக. புன்மை ஒழிக. வாருங்கள் வலிமைத் தோழரே, வாருங்கள். ஏன் அங்கே நிற்கிறீர்கள்? முன்னேறுங்கள். முதலாளித்துவத்தைக் குழி தோண்டிப் புதையுங்கள். புரட்சி ஓங்குக!

பச்சைநந்தி (மெல்ல ஜன்னலருகில் போய், விரும்பாதவர் போல் எட்டிப் பார்த்து): அடேயப்பா, சகல மாதிரியில்லா வருது. ஏ, புன்னைவனம், கதவைத் தாளிட்டயா? அந்த மூடிக்கு அறிவேது?

கோதண்டம்: தாளிட்ட கதவைத் தரைமட்ட மாக்குவோம். கள்ளச் சந்தைப் பணத்தைக் கொள்ளையடிப்போம்.

பச்சைநந்தி (அவசரமாகக் கோதண்டத்திடம் ஒரு கத்தை பத்து ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து): இதை வைச்சுக்கோ, தம்பி. இதை அச்சாரமா வைச்சுக்கோ. ஆயிரம் ரூபாய் இருக்குது.

கோதண்டம்: வழிக்கு வந்தாயா, வாயில்லாப்பூச்சியே. மட்டற்ற மகிழ்ச்சி, நன்றி, வணக்கம். (ஏளனமாகச் சிரித்து, பணத்தை இடுப்பில் செருகிக் கொள்கிறான்) தோழர்களே! இப்படி வாருங்கள். முதலாளி ஐயா, கதவைத் திறந்து விடச் சொல்லுங்கள். தோழர்களே! இதோ இருக்கிறான், உங்கள் தலைவன் கோதண்டம்.

வெளியிலிருந்து குரல்: கோதண்டம்!

பல குரல்கள்: ஒழிக!

குரல்: கோதண்டம்!

பல குரல்கள்: ஒழிக!

பச்சைநந்தி: (நம்பிக்கை தளிர்க்க) என்னவோ ஒரு மாதிரியில்லே சத்தம் போடுறாங்க. என்ன கோதண்டம், எங்கே போறீங்க? இரும் ஐயா, இரும். எங்கே, நான் கொடுத்த ரூபாயை எடும். அதோ போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயாவும் வாராரு. புரிஞ்சேன். அந்த மட்டுக்குப் புரிஞ்சேன். கலெக்டரும் வாராரு. ஐயா, ஐயா, வாங்க, வாங்க. (இரைந்து) இந்தக் கோதண்டம் என்னைக் கொலை பண்ணுறானே! வாங்க, வாங்க, ஏ, புன்னைவனம், கதவைத்திறந்து தொலையுமய்யா? ஓடாதே, ஓடாதே, கோதண்டம். உன்னை விடமாட்டேன். ரூபாயைக் கீழே வைச்



சிட்டுப் போ. ஆமாம். அடேய், கோதண்டம், கொலைகாரப் பாவி!

[கோதண்டத்தின் மடியைப் பிடித்துக் கொள்கிறார். அவன் திமிருகிறான். விடுவித்துக்கொண்டு ஓடப் பார்க்கிறான். அதற்குள் உட்புறமிருந்து போலீசார் தாள்வரும், கலெக்டரும், தொழிலாளர் நாலைந்து பேரும், குருசாமியும், புன்னைவனமும் வருகிறார்கள்.]

போலீஸ் இன்ஸ்: ஏய், கோதண்டம், நில், நகர்ந்தால் சுட்டுப் போடுவேன்.

கோதண்டம்: பாருங்கள், பாட்டாளி மக்களே, பாவிப்பயலின் பாழ்த்த மூகத்தினை. குருசாமியின் கூரைக்குக் கொள்ளி வைத்தான். குருட்டு மமதையில் கொக்கரித்தான். இதோ, இவன்தான், இவன்தான், இந்தப் பச்சோந்திதான். உங்கள் தலைவன் கோதண்டம் பேசுகிறேன். இந்தக் கயவனுக்குப் பாடம் கற்பியுங்கள்.

[பச்சைநந்தி விழிக்கிறார்.]

போலீஸ் இன்ஸ்: நாலுரத்தி நாலு, முன்னூத்தி முப்பத்தாறு! நீங்க ரெண்டு பேரும் கோதண்டம் ஐயாவைப் பார்த்துக்குங்க. ஐயா, தொழிலாளர் தலைவரே, பேசாமல் இரும். உம்ம நாடகமெல்லாம் இன்றோடு முடிந்தது. திவான் பகதூர் பிள்ளையவர்களே! நீரும் அப்படியே நில்லும்.

குருசாமி: ஐயா, இன்ஸ்பெக்டர் ஐயா! நான் ஒரு வார்த்தை பேசட்டுங்களா? ஐயா, முதலாளி ஐயா...

பச்சைநந்தி: உன்னோடு எனக்கென்ன பேச்சு? இன்ஸ்பெக்டர், இவனைக் கைது செய்யும். இவன்தான் இத்தனை கலகத்துக்கும் காரணம். என்ன பேசாமல் இருக்கிறீர்? கலெக்டர் ஐயா! நீங்க சொல்லுங்க.

போலீஸ் இன்ஸ்: (சிரித்துக்கொண்டு) நல்லவேடிக்கை! (கலெக்டரைப் பார்த்து) ஸார், தங்கள் உத்தரவு என்ன?

கலெக்டர்: குருசாமித்தேவர் என்ன சொல்லுகிறார், கேட்போம்.

புன்னைவனம்: அதுதான் நல்ல யோசனைங்க. சிவசிதம்பரம், சிவசிதம்பரம்!

பச்சைநந்தி: வேய், புன்னைவனம்! பேசாமலிரும் வேய். இன்ஸ்பெக்டர் ஸார், கலெக்டர் ஸார், நல்ல சமயத்தில் வந்தீங்க. இல்லாவிட்டால் என் உயிரே போயிருக்கும்.

கலெக்டர்: திவான்பகதூர்! உங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. உங்கள் உயிரையும், உங்கள் மில்லையும் இன்று காப்பாற்றியது நாங்கள் இல்லே, இந்தக் குருசாமித் தேவர்.

பச்சைநந்தி: (திகைப்புடன்) என்ன, குருசாமியா, குருசாமித் தேவரா?

குருசாமி: முதலாளி ஐயா, அப்படியெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நேத்து ஏதோ முத்துச் சிப்பி வாங்கினேனுங்க. அதிலே கொஞ்சம் முத்துக் கிடைச்சதுங்க. உடனே வித்துட்டேனுங்க. ஒரே ஒரு முத்தை மாத்திரம் வைச்சிருந்தேன். வீட்டுக்கு வந்து அவ படத்திலே போடணும்னு.

புன்னைவனம்: வீடே இப்போ எரிஞ்சு போச்சே!

கலெக்டர்: எரித்தவர்களைச் சும்மா விடப் போவதில்லை.

குருசாமி: வீடு போயிரிச்சன்னு எனக்குத் தெரிஞ்சதுங்க.

புன்னைவனம்: தம்பி! உனக்கு யார் சொன்னாங்க!

குருசாமி: இவங்கதான். இதோ நிற்கிறாங்களே நம்ம மில் தொழிலாளிங்க. இவங்கதான் சொன்னாங்க. அது பெரிய கதையிங்க.

கோதண்டம்: பெரிய கதையா, இல்லே அண்ணே, பேதமைக்கதை. இந்த முதலாளிப் பேய் உன் இரத்தத்தை உறிஞ்சி உன் வீட்டையும் சுட்டது.

பச்சைநந்தி: நானு, எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்களே? நேத்திரவு நான் தாமரைக்குளத்து முதலியார் வீட்டிலேயில்லா இருந்தேன்?

போலீஸ் இன்ஸ் (சிரித்து): அதை யெல்லாம் கோர்ட்டிலே சொல்லிக் கொள்ளும்.

குருசாமி: கோர்ட்டு எதுக்குங்க? முத்துச் சலாபத்திலேருந்து காலையிலே நான் வரப்போ, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயாவும், கலெக்டர் ஐயாவும் கூட வந்தாங்க. எக்கச்சக்கமா பணம் எடுத்திட்டுவரேன், அதுக்காகக் காவல் வேணும்னு பெரிய மனசு பண்ணி வந்தாங்க. அவங்க காரிலே ஏறிக்கச் சொன்னாங்க. வழியிலே மில்லுக்கு எதிரே நம்ப மில் தம்பிமாரெல்லாம் ஒரே கூட்டமாகக் கூச்சல் போட்டுக்கிட்டு நின்னாங்க.

தொழிலாளி: உண்மைதான். முதலாளி ஐயா! குருசாமி அண்ணன் மாத்திரம் அப்போ வந்து உண்மையை விளக்காமல் போனால், இன்னைக்கு மில்லுக்கே தீ வைச்சிருப்போம். எங்க ரத்தம் அப்படிக் கொதிக்கப் போச்சு.

குருசாமி: தம்பி! பதறாதீங்க. நம்ப முதலாளி எனக்கு ஏதோ கெடுதல் நெனைச்சுட்டாருன்னு நம்பினீங்க. அப்படி ஒண்ணுமில்லே. நல்ல காரியத்துக்காக என் நிலத்தைக் கேட்டாரு. நல்ல விலை கொடுக்கறேன்னு சொன்னாரு. நான்தான் முரண்டு பிடிச்சிட்டிருந்தேன்.

கோதண்டம்: உன்னை வேலையை விட்டு நீக்கியது கூட நாயந்தானே?

தொழிலாளி: அதென்ன ஐயா, அண்ணன்கிட்ட 'உன்னை,' 'நீ' யென்று பேசறீங்க? வாயை அடக்கி மரியாதையாகப் பேசணும், ஆமாம்...

குருசாமி: தம்பீ, கோவிச்சுக்காதீங்க. கோதண்டம் ஐயா எப்படியும் பேசிட்டுப் போகட்டும். அவரு பேச்சு எப்பவுமே ஒரு தினுசாகத்தானே இருக்கும்? வேலையை விட்டு நீக்கினாருன்னு சொல்றீங்க? நானே விலகத்தான் நெனைச்சுக்கிட்டிருந்தேன். அவங்க கிட்ட வேலை பார்த்துக்கிட்டு, அவங்க உப்பைத் தின்னுக்கிட்டு, அவங்க கேட்ட நிலத்தை விடமாட்டேன்னு சாதிச்சிட்டிருக்க எனக்குப் பிடிக்கலிங்க. நானே வேலையை விடத்தான் இருந்தேனுங்க. முதலாளி ஐயா முந்திக்கிட்டாங்க, அவ்வளவுதான். அதுவும் நல்லதாப் போச்சு.

புன்னைவனம்: குருசாமி, நீ தெய்வமப்பா. வீடு எரிஞ்சது கூடப் படுபாவிகள் அதுக்குத் தீ வைச்சது கூட நல்லதுன்னு நெனைக்கிறியோ?

குருசாமி: ஆமாங்க. என் குருட்டுப் பிடிவாதமும் கூடவே எரிஞ்சு போச்சே, அது நல்லதில்லீங்க? நான் என்னவோ அந்தக் குடிசையிலேதான் எல்லாம் இருக்கதுன்னு எண்ணிக் கிட்டிருந்தேன். இப்போ தெரியுது, அது எரிஞ்சப்புறம். எல்லாம் — எல்லாம் — என் மனசிலே இருக்குதுங்க. அதை ஒருத்தரும் ஒண்ணும் செய்ய முடியாதுங்க.

தொழிலாளி: அது சரிதான், அண்ணே! அதற்காக உங்க வீட்டுக்குத் தீ வைக்கிறதா? அயோக்கியத்தனம்.

குருசாமி: வீடு தீப்பிடிச்சு எரிஞ்சு போச்சு. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். யாரு செய்தாங்க.' அது கடவுளுக்குத் தெரியும்.

போ. இன்ஸ்பெக்டர்: இவன் அதைக் கண்டு பிடித்தே தீருவான்.

புன்னைவனம்: எனக்குத் தெரியும். நான்... நான்...

குருசாமி: கணக்குப் புள்ளே ஐயா! காரியத்தைக் கெடுத்துப் போடாதீங்க. சில நிதம்பரம், சில நிதம்பரம்னு சொல்லிக்கிட்டே இருக்கீங்களே. அந்தத் தெய்வத்து மேலே பாரத்தைப் போட்டுச் சும்மா இருங்க. நேத்துக் காலையிலே



என் நிலத்தை முதலாளிக்காகக் கேட்டீங்க, இல்லையா? எனக்கு முதலாளி கிட்ட நேரே அதைக் கொடுக்கறேன்னு சொல்லக் கூச்சமாயிருக்குது. நிலத்தை எடுத்துக்கிடச் சொல்லுங்க, நல்லாப் பள்ளிக்கூடம் கட்டச் சொல்லுங்க, ஆனால் ஒண்ணு.......

பச்சைநந்தி (கலங்ியவராய்): குருசாமி! குருசாமி!

புன்னைவனம்: என்ன ஒண்ணுங்கிறே, குருசாமி.

குருசாமி: எனக்கு அந்த நிலத்துக்குக் கிரயம் ஒண்ணும் வேண்டாமுங்க. நான் ஒண்டிக்கட்டை, எந்தப் பிள்ளைக்கு அதை வைச்சிட்டுப் போகப் போறேன்? ஊர்ப் பிள்ளைங்க எல்லாம் அங்கே... அங்கே நம்ப வீட்டுலே வெளயாடட்டும். இன்னம் ஒரு விசயம். கலெக்டர் ஐயா, நீங்கதான் அதுக்கு உதவி செய்யணும்!

கலெக்டர்: சொல்லுங்க.

குருசாமி: எனக்கு மருதம் விளைத்து ஐயரு தோட்டத்திலே வேலை போட்டுக் குடுத்துட்டாரு. என் வயித்துப் பாடு கழிஞ்சிடும். இந்தப் பணம்—முத்துச் சலாபத்திலே கிடைச்சது—அதை...,

கலெக்டர்: அதை என்ன செய்யணும்னு சொல்றீங்க?

குருசாமி: அது எவ்வளவு தொகைங்க?

போ. இன்ஸ்பெக்டர்: லட்சத்து இருபதினாயிரம் ரூபாய்.

குருசாமி: அடேயப்பா, நான் என்ன செய்யப் போறேன் அவ்வளவு பணத்தையும்? ஐயா, கலெக்டர் ஐயா, அதிலே இருபதினாயிரம் ரூபாயைத் தொழிற் சங்கத்துக்கு எழுதி வைச்சுடுங்க. அவங்க மாத்திரம் வேலை செய்யர தொழிலாளி ஒருவரைத்தான் சங்கத்துக்குத் தலைவராக வச்சிக்கிடணும். சங்கக் காரியதரிசியும் அப்படியே இந்த மில்லிலே வேலை பார்க்கிறவங்களாகத்தான் இருக்கணும்.

தொழிலாளி: அதுதான், அண்ணே, காலையிலேயே ஒப்புக் கொண்டாச்சே!

கோதண்டம்: அட, நன்றி கெட்ட நாய்களா, பதர்களா, பேடிகளா, உங்களுக்கு உயிரை விட்ட இந்தக் கோதண்டத்தை... இந்தக் கோதண்டத்தை...

தொழிலாளி: அட, சும்மா இருங்க ஐயா. நாக்கு அறுபட்டுப் போயிடப் போவுது.........கோதண்டமோ வெறுந்தண்டமோ?

குருசாமி: தம்பீ, அவரை ஒண்ணும் சொல்லாதீங்க. ஏதோ அவருக்குத் தெரிஞ்ச, புரிஞ்சிற வழி அதுதான். கலெக்டர் ஐயா, இன்னொரு விசயமுங்க. அந்தப் பாக்கி லச்சரூபாயைப் பள்ளிக்கூடத்துக்கு வைச்சிடுங்க, எங்க முதலாளி பேராலேதான் அது நடக்கணுமுங்க.

பச்சைநந்தி: குருசாமி! குருசாமி! நீ என்ன சொல்லுகிறாய் அப்பா, உனக்குத் துரோகம் நெனைச்சேன், தம்பீ, உன் வீட்டை...

குருசாமி: வீட்டை எனக்கு வாங்கித் தந்தீங்க. ஓட்டைக் குடிசையிலே ஆசை வைச்சு உண்மையை மறந்து போனேன், ஐயா. எனக்கு இப்போத்தான் புத்தி வந்திச்சு. இந்த ஏழையைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சிடுங்க.

[திவான் பகதூர் காலில் விழுகிறான். அவர் அவனைத் தூக்கி, ஆரத் தழுவிக் கொள்ளுகிறார்.]

பச்சைநந்தி (கண்ணீருடன், குரல் தழுதழுக்க): எனக்கும் புத்தி இப்போதான் வந்திச்சு. பணம் என் கண்ணை மறைச்சு, என் நெஞ்சைக் கல்லாக்கிப் போட்டது, அப்பா. இப்போ தெரிஞ்சுது. நானுந்தான் ஒண்டிக் கட்டை. என் கையிலே உள்ள சொத்தை யெல்லாம் மில்லு, நிலம், கரை, தோட்டம், வீடு வாசல் எல்லாத்தையும் இந்த ஊர் கல்விச் சாலைக்கு எழுதி வைச்சிடறேன். இந்த வீடு மாத்திரம்—அப்பா, நீ மறுக்கப்படாது. இந்த வீடுமாத்திரம் உனக்கு.

[விம்முகிறார்.]

புன்னைவனம் (உணர்ச்சியுடன்): அவருக்கும், ஒங்களுக்கும், ஆமாம் முதலாளி ஐயா, ஒங்களுக்குத்தான் இந்த வீடு எதுக்குங்க? வீடே காத்திருக்குது; வீடே காத்திருக்குது. பொன்னம்பலவா! எல்லாம் உன் அருள்.

திரை



வாழிநின்றன் மேன்மை எல்லாம்



★ ✲ ★

மெய்த்தவத்தின் பேரொளியே!
மேதினிவாழ் மாந்தரெலாம்
உய்த்துணரத் தெள்ளமுதம்
ஊட்டுகின்ற துறவரசே!
பொய்த்தொழிலும் வஞ்சனையும்
பூசல்களும் ஓயாமல்
மொய்த்தவரத் துன்ப(ம்)அலை
மோதுகின்ற உள்ளத்தில்

இத்தனைநாள் பார்த்தறியா
இன்பஒளிக் காட்டிமனப்
பித்தகற்றிச் சாந்திதரும்
பெரியோய்; வெம் பிணிவிலக்கும்
சத்தியத்தின் அருமருந்தே!
சஞ்சலத்தை மனவயலில்
வித்திட்டுப் பயிராக்கி
வெய்துயர்வாய்ப் படுமெங்கள்

சித்தத்தின் களைவிலக்கிச்
செழுங்கருணைப் புனல்பாய்ச்சி
அத்துவிதக் கனிபழுக்கும்
அரியதரு வளர்க்கின்ற
வித்தகரே! இசைபொங்கும்
வீணையொலித் தன்குரலில்
தத்துவத்தேன் மழைபொழியும்
தயைமிக்கோய்! அஞ்சலிகள்.

மாற்றறியாப் பொன்வண்ணம்.
மதுரமுகம்; மறைமுனிவர்
வீற்றிடம் கோவில்; அருள்
விழிநோக்கால் எம்மிதயச்
சேற்றிலுமோர் தாமரைப்பூ
சிலிர்க்கிற(து); ஐம் புலன் வென்று
நேற்றின்று நாளையெனும்
நிலைகடந்த ஞானகுரு

நாராயண வடிவாய்
நமச்சிவத்தின் பூரணமாய்
ஓராண்டு நமக்கிங்கு
ஒதுக்கியதால் இன்னுமொரு
நூறாண்டு தர்மத்தின்
நுண்சுடரைக் காக்கஎமைச்
சேர்க்கி விட்டதவச்
செம்மல்திருத் தாள்பணிவோம்.

ஆதவனைப் போலெழுந்து
ஆட்கொள்ளும் ஆசிரியர்
பாதஅர விந்தமலர்
பட்டஇடம் கண்ணொத்தி
வேதநெறி பற்றிவிட்டால்
வேதனையின் வேர்மடியும்;
சாதலிலா அமரநிலை
சார்ந்துவிடும்; பிறைநிலவைக்


காதலுடன் முடிசூடிக்
கங்கையையும் அங்குவைத்து
சிதைமாய்ப் பாம்பணியும்
சிவபெருமான் அருள்புரிவார்;
பாதியுடல் தான்பகிர்ந்த
பார்வதியும் அருள்புரிவாள்;
ஆதிமுதற் சங்கரராய்
அவதரித்த மகனீயர்

தூயதவப் பரம்பரையின்
தூண்டா மணிவிளக்கே!
ஆயகலை வாணிபெயர்
அணிசந்த்ர சேகரேந்த்ரா!
பாயும்அருள் வெள்ளத்தில்
பாழ்த்தமரம் பூக்குலுங்கும்;
வாயுரைக்கு வல்லதல.
வாழிநின்றன் மேன்மையெலாம்.

ஓங்கிவளர் மரம்முதலில்
ஒருசிறிய வித்துக்குள்
தூங்குவதைப் போலேயாம்
துயின்றிருந்தோம்; கருணைமனப்
பாங்கிலுயிர் விழிப்பூட்டும்
பானுமஹா ஜோதியினால்
நீங்கியதெம் இருள்வினைகள்;
நிரம்பியது சிவபோதம்.

இந்த்ரஸரஸ் வதிவரிசை
எமைப்புரக்கும் அருள்வேந்தர்;
வந்துதிக்கும் ஞானகுலம்;
வாரிசெனப் பரமகுரு
தந்தஜெய இந்திரரின்
தவப்பாத மலர்போற்றி!
சிந்தையினுள் நிறைந்தமஹான்
சீர்ப்பாத மலர்போற்றி!!

★



டி. வி. சுவாமிநாதன்

ஓய்வுக்கு இது நேரமல்ல...





சுதந்திரம் பெற்றுப் பதினொரு
ஆண்டுகள் இடைவிடாது ஊக்கத்
துடன் அரும்பணியாற்றி யிருக்கிறோம்.
ஆனாலும் நாம் சுயதேவைப் பூர்த்
தியை பூரணமாக அடைய—அந்தப்
பாதையில் முன்னேற—இன்னும்
எவ்வளவோ செயலாற்ற வேண்டி
யிருக்கிறது. இந்தப் பாதையில்
முன்னேறுவதற்கு முயற்சி
கூட்டுறவு, ஒழுக்கம் அனைத்தும்
இருந்தால்தான் முடியும்.
ஒவ்வொரு மனிதனும் தன்னால்
இயன்ற அளவு சரீரப்
பிரயாசையுடன் தொண்டாற்ற
உறுதி கொள்ள வேண்டும்.
பாரதத்தைப் போன்ற ஜனநாயக
நாட்டில் திட்டங்கள் வெற்றி
பெறுவதற்கு, எண்ணங்கள்
பிரதிபலிப்பதற்கு இது
ஒன்றே வழியாகும்.

HIND

ASP/HC-128

ஹிந்த் ஸைக்கிள்ஸ் லிமிடெட், 250, வொர்லி, பம்பாய்-18





டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.


“உங்கள் பெண் மிக அழகி-ல்லாமலிருக்கலாம், ஆனால் அவள் என் பையனுக்கு ஏற்ற மனைவி என்பதை நான் அறிவேன். அவள் விஷயம் தெரிந்தவள். ஆம், அவள் புடவைகளுக்கு உபயோகிப்பது **டினோபால்**”.

தயாரிப்பவர்கள்: ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி வாடி, பரோடா


ஏக விநியோகஸ்தர்கள்: ஸுஹ்ருட் கெய்கி ட்ரேடிங் பிரைவேட் லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 965, பம்பாய்

சிறிதளவு டினோபால் வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

SISTA'S-SG-42-TAM



ஹம்பியில் இருக்கும் மூப்பதடி உயரமுள்ள இந்த லட்சுமிநரசிம்மர் சிற்பம் உயர்ந்த கலை நுணுக்கங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. பகைவர்கள் இந்தச் சிற்பத்தின் பல பாகங்களைப் பின்னப்படுத்தி விட்டார்கள். மடியில் வீற்றிருக்கும் மகாலட்சுமியின் கை மட்டும் தான் இப்பொழுது இருக்கிறது. ஹம்பிக்குச் சென்று இதைப் பார்த்த நமது ஓவியக் கலைஞர் மணியம் சிதைந்து போன பகுதிகளையெல்லாம் தம்முடைய கற்பனையைக் கொண்டு பூர்த்தி செய்து லட்சுமிநரசிம்மரின் திருக்கோலத்தை நாம் தரிசிக்கும்படி செய்திருக்கிறார்.







★ ஹம்பியில் பார்க்க வேண்டிய காட்சிகளில் ஒன்று விட்டல்ராயர் கோவிலுக்கு முன்புள்ள கல் ரதம். கருங்கல்லைக் கொண்டு அமைத்திருக்கும் அந்த ரதத்தை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அதன் சக்கரங்களைச் சுழற்றினால் சுழலும். அவ்வளவு கலை நுணுக்கத்துடன் நிர்மாணித்திருக்கிறார்கள். இந்த ரதத்துக்கு முன்னால் கிருஷ்ணதேவராயர் கைகூப்பி வணங்கி நிற்கும் அற்புதக் காட்சியைமேலே உள்ள படத்தில் காணலாம்.

★ தென்னாட்டுச் சங்கீதக்கலை இராய மன்னர்கள் காலத்தில் மிக உன்னத நிலையில் இருந்தது. விட்டல் ராயர் கோவிலை ஒட்டியுள்ள கல்யாண மண்டபத் தூண்களில் காணும் சிற்பங்கள் ராயர் காலத்தின் சங்கீதச் சிறப்பை இன்றைக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தூண்களில் உள்ள சிற்பங்களையெல்லாம் கல்யாண மண்டபத்தில் ஒரு இடத்தில் உயிருடன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் நமது ஓவியக் கலைஞர் மணியம்.

கல்கி தீபாவளி மலர்-1958




Coffee
ours for quality
RAW
ROAST
OR
GROUND
GANESH & Co
(MADRAS) PRIVATE LTD.
Retail Branches
285, China Bazar Road, MADRAS-1
71, Pondy Bazar, T. NAGAR, MADRAS-17

அன்பும்

க. சந்தானம்



பத்து வருஷத்துப் பணி பத்தே நிமிஷத்தில் பாழாகி விட்டது. அற்ப விஷயம். பலனை ஆயுள் முழுதும் அனுபவிக்க வேண்டும்.

நடந்தது பின்வருமாறு: ரங்கநாயகி தனது அறையி லிருந்து சாமான்களைக் கூடத்தில் எடுத்து வைத்தாள். ஒரு தகரப் பெட்டி, சிறிய படுக்கை, வழிக்குப் பலகாரம் வைத்த அடுக்கு, கூஜா. அவளுக்கு அந்தப் பிரயாணம் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால் தவிர்க்க முடியாமல் போகவேண்டி விருந்தது. தன் பிரயாணச் சாமான்களுக்கு அருகில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தாள்.

பாலுவும், கோபுவும் பால் சாப்பிட்டுவிட்டு, கூடத்துக்கு வந்தார்கள். பாட்டியைக் கண்டதும் ஓடிப் போய் மடியில் உட்கார்ந்து கொண்டனர்.

''இதெல்லாம், என்ன பாட்டி? ஊருக்குப் போகிறாயா?'' என்று கேட்டான் ஆறு வயதுள்ள பாலு.

''ஆமாம், பாலு! டில்லிக்குப் போகிறேன். மூன்று மாதத்தில் வந்து விடுவேன்'' என்றாள் பாட்டி.

உடனே தம்பி கோபு உரத்த குரலில் அழ ஆரம்பித்து விட்டான்.

''நானும் உன்னோடு வருவேன்'' என்று அவளைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டான். ''நான் மட்டும் தனியாக இருப்பேனா, என்னையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும்'' என்று கத்தினான் பாலு.

''இதுமாதிரி பிடிவாதம் செய்யக் கூடாது, என் கண்மணிகளே! நான் திரும்பிவரும் வரையில் அம்மாவைத் தொந்தரவு செய்யாமல் சமர்த்தாக இருக்க வேண்டும்'' என்று இருவரையும் அணைத்து முத்தமிட்டாள் ரங்கநாயகி. இதனால் குழந்தைகளின் பிடிவாதம் மேலும் அதிகமாயிற்று. போட்டி போட்டுக் கொண்டு இருவரும் அழ ஆரம்பித்தனர்.

இதைக் கேட்ட கோதை சமையலறையிலிருந்து அவசரம் அவசரமாக வெளியே வந்தாள். அவளைப் பார்த்துப் புன்சிரிப்புடன், ''இவர்கள் செய்கிற பிடிவாதத்தைப் பார்'' என்றாள் மாமியார்.

கோதையும் சிரித்துக்கொண்டு அவர்களை அதட்டி, ''சரி போதும், நிறுத்துங்கள். பாட்டி ஊருக்குப் போய்விட்டுச் சீக்கிரம் வந்து விடுவாள்'' என்றாள்.

''அதெல்லாம் முடியாது, அம்மா! எங்கள் துணிகளையும் எடுத்துக் கொடு'' என்று கூச்சலிட்டான் பாலு.

''நான் இங்கே இருக்க மாட்டேன், பாட்டி! அம்மா அடிப்பாள்'' என்று அழுதான் கோபு.

கோதைக்குத் திடீரென்று கோபம் பொங்கியது. ''என்ன சொன்னாய், தடிப் பயலே! உன்னை நன்றாக அடிக்கத்தான் வேண்டும்'' என்று கோபுவைக் கன்னத்தில் மெதுவாக அடித்தாள்.

''பார்த்தாயா, பாட்டி! நீ இருக்கும்பொழுதே அடிக்கிறாள். நீ போய்விட்டால் தினம் இப்படித்தான் அடிப்பாள். நாங்கள் இங்கு இருக்க மாட்டோம்'' என்று கத்தி அழுதான் பாலு. அவனையும் 'பளீர், பளீர்' என்று இரண்டு அடி போட்டு இருவரையும் கையைப் பிடித்து இழுத்துப் போய்ப் படுக்கை யறையில் கட்டில்களில் படுக்க வைத்து, ''சத்தம் போடாமல் வாயை மூடிக் கொண்டு கிடக்க வேண்டும், ஜாக்கிரதை!'' என்று மிரட்டி விட்டு வந்தாள்.

ரங்கநாயகிக்குத் துக்கம் தாங்கவில்லை. கண்களில் நீர்சொரிய மருமகளைப் பார்த்து, ''எதற்காக இப்படிக் குழந்தைகளை அடிக்கிறாய்? எனக்கு அபசகுனம் மாதிரி இருக்கிறது. பிரயாணத்தை நிறுத்திவிடலாமா என்று யோசிக்கிறேன்'' என்றாள் கோபமாக.

கோதைக்கும் ஆத்திரம் பொங்கியது. ''உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். நீங்கள் கொடுக்கும் இடத்தினால் இரண்டும் குட்டிச்சுவராகப் போய்க் கொண்டிருக்கின்றன'' என்றாள்.

இந்தச் சொற்கள் ரங்கநாயகியின் பேரில் கூரிய அம்புபோல் பாய்ந்தன.

''அப்படியானால், நான் இந்தவீட்டுக்குத் திரும்பிவர மாட்டேன்'' என்றாள் ரங்கநாயகி தடுமாறிய குரலில்.

''அதுவும் உங்கள் இஷ்டம்'' என்று கூறிவிட்டுக் கோதை சமையலறைக்குப் போய்விட்டாள். வாசலில் மோட்டார் சத்தம் கேட்டதும், ரங்கநாயகி கண்ணீ

துன்பமும்



ரைத் துடைத்துக் கொண்டு தனது அகத்தின் உணர்ச்சி முகத்தில் காணுமலிருக்க முயற்சி செய்தாள்.

உள்ளே நுழைந்து கொண்டே ராமநாதன், "அம்மா, நேரமாகி விட்டது. புறப்படு" என்றான். அங்கிருந்த சாமான்களை எடுத்துக் கொண்டு போய் வண்டியில் பின்புறம் வைத்தான். உள்ளே வந்து தன் மனைவியைக் கூப்பிட்டு, "கோதை! அம்மா புறப்பட வேண்டும். குழந்தைகள் எங்கே?" என்று கேட்டான்.

கோதை கூடத்தில் வந்து மௌனமாக நின்றாள். ரங்கநாயகி ஜனகரத்தில், "இருவரும் நான் ஊருக்குப் போகிறேனென்று அழுது, கூட வருவோமென்று பிடிவாதம் செய்தார்கள். அவர்களைச் சமாதானப்படுத்திப் படுக்க வைத்திருக்கிறாள்" என்றாள்.

அதைப்பற்றி அவசரத்தினால் ராமநாதன் சிந்திக்கவில்லை. வீட்டை விட்டு வெளியில் வந்தான். ரங்கநாயகியும் கோதையைப் பார்த்து, "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வாசலில் வந்து மோட்டாரில் ஏறிக் கொண்டாள். ராமநாதன் அவளைக் கொண்டுபோய் டில்லி வண்டியில் ஏற்றிவிட்டுவந்தான்.

மூன்றாவது வகுப்பில் மாதருக்காக ஒதுக்கி வைத்திருக்கும் ரயில் பெட்டியில் ஒரு மூலையில் உட்கார்ந்து, இதுவரை நடந்ததையும் இனிமேல் நடக்கப் போவதையும் பற்றி ரங்கநாயகி சிந்திக்கலானாள்.

★

ரங்கநாயகிக்கு வயது ஐம்பத்தைந்து. மிகவும் இனிமையாகக் கழிந்து வந்த அவள் வாழ்க்கை திடீரென்று பத்து வருஷங்களுக்கு முன் பெரிய சோதனைக்கு இலக்காயிற்று. அவள் புருஷன் பாலசுப்பிரமணியம் எழும்பூரில் வக்கீலாக இருந்தார். சுமாரான சம்பாத்தியமான போதிலும் கூரிய மதிக்கும், நல்ல ஒழுக்கத்துக்கும் தமது தொழில் வருப்பாருள் நல்ல கௌரவம் பெற்றிருந்தார். இரண்டே பிள்ளைகள். நால்வரும் அன்னியோன்யமாக இருந்தனர். மூத்த மகன் கோவிந்தன் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்ததும் தமது குடும்பத்துக்கு நிகரில்லை என்று தாய் தந்தையர் பூரித்தனர். அவனுடைய பயிற்சி முடிந்ததும் அஸ்ஸாமில் உதவி கலெக்டராக வேலையில் அமர்ந்தான். ஆறு மாதத்தில் ஓர் வங்காளிப் பெண் மேனகாவை அங்கேயே மணம் புரிந்து கொண்டு தன் அன்னைக்குக் கடிதம் எழுதினான். பெற்றோர்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் சில மாதங்களில் எல்லாம் மறந்து விடும், நடந்ததை ஏற்றுக்கொண்டு, மீண்டும் குடும்பத்துடன் ஒற்றுமையாகி விடலாம் என்று எதிர்பார்த்தான்.

கோவிந்தனின் கடிதத்தை இரண்டு நாட்களுக்கு ரங்கநாயகி கணவனிடம் காட்டவில்லை. இரண்டாவது மகன் ராமநாதனிடம் காட்டி இருவரும் ரகசியமாக ஆலோசித்தனர். சட்டப் பரீக்ஷை முடிந்து, ராமநாதன் தந்தையிடம் வக்கீல் வேலையில் புகுவதற்குப் பயிற்சி பெற்று வந்தான். அண்ணன் வங்காளிப் பெண்ணை மணந்ததில் அவனுக்கு ஆச்சரியமுமில்லை; வருத்தமுமில்லை. கலப்பு விவாகத்தைப் பற்றி இருவரும் பன்முறை தீவிரமாக வாத விவாதம் செய்திருந்தனர். ஆனால் வீட்டில் மட்டும் நல்ல வைதிகப் பிள்ளைகளாகப்



பாவனை செய்து வந்தனர். இக்காலத்தில் இம்மாதிரி காதல் மணம் சகஜமாகி விட்டதென்றும், கோபித்துக் கொள்ளுவதில் பயனில்லை என்றும் தாயாரிடம் வற்புறுத்தி ஓரளவு அவள் வருத்தத்தைக் குறைத்தான். முடிவில் கோர்ட் இல்லாத நாளில் நல்ல சமயம் பார்த்து, கணவனிடம் கோவிந்தனின் கடிதத்தை ரங்கநாயகி கொடுத்தாள். ஒரு மூலையில் ராமநாதன் பத்திரிகையைப் படிப்பதுபோல் உட்கார்ந்திருந்தான்.

கடிதத்தைப் பாலசுப்பிரமணியம் இரண்டு முறை படித்தார். பிறகு அதை மடித்து எதிரிலிருந்த மேஜையில் வைத்துவிட்டுத் தம் மனைவியைப் பார்த்தார்.

"காலத்தின் கோலம், நாம் என்ன செய்வது?" என்றாள் ரங்கநாயகி. அவள் கண்களில் நீர் ததும்பியது. கணவனுக்குக் கோபம் வந்தது. "போதும், அழுகையை நிறுத்து. நீ கொடுத்த இடத்தின் பலன்தான் இது" என்று கூறிவிட்டு ராமநாதனை நோக்கினார்.

"நீ யாரைப் பார்த்து வைத்திருக்கிறாய்?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டார்.

"நான் ஒருவரையும் பார்க்கவில்லை. அண்ணா இப்படிச் செய்வான் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை" என்றான். "இனிமேல் எனக்கு நீ ஒரே பிள்ளைதான். அதை மறக்காதே" என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். ரங்கநாயகியும், ராமநாதனும் அவரைத் தனிமையில் விட்டுவிட்டுத் தத்தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றனர்.

மூன்று மாதங்கள் கழித்துத் தமக்குப் பிடித்த இடத்தில் பெண் பார்த்து ராமநாதனுக்கு விவாகம் செய்வித்தார். கோதை மிகவும் நல்ல பெண். கல்யாணமானவுடன் புருஷன் வீட்டுக்கு வந்து தன் மாமியாருக்கும், மாமனாருக்கும் பெண்ணைப் போலவே பணிவிடை செய்து அவர்கள் அன்பைப் பெற்று வந்தாள்.

ராமநாதனுக்கு விவாகமான மறுநாளே ஒரு உயில் எழுதித் தம் சொத்துக்களையெல்லாம் பாலசுப்பிரமணியம் இரண்டாவது மகனுக்குக் கொடுத்து விட்டார். அதன் பிரதி ஒன்றைத் தபாலில் கோவிந்தனுக்கு அனுப்பினார். அதை அவன் பொருட்படுத்தவில்லை. தனக்கும் அது இஷ்டமென்று தம்பிக்கு ஆசி கூறிக் கடிதம் எழுதினான். சிலமாதங்கள் சென்றன. திடீரென்று மாரடைப்பால் பாலசுப்பிரமணியம் மரணமடைந்தார். ராமநாதன் தந்தையின் வக்கீல் தொழிலில் புகுந்து முன்னேறி வந்தான். பாலுவும், கோபுவும் பிறந்தனர். பெற்ற பாக்கியம் ஒன்றுதான் கோதையைச் சேர்ந்ததே ஒழிய வளர்த்ததெல்லாம் பாட்டி ரங்கநாயகிதான்.

தந்தை இறந்த பிறகு தவறாமல் மாதம் ஒருமுறை கோவிந்தன் தம்பிக்கும் தாயாருக்கும் கடிதம் எழுதி வந்தான். எட்டு வருஷங்கள் அல்லாமல் வேலை பார்த்த பின் டில்லியில் மத்திய அரசாங்கத்தில் உபகாரியதரிசியாக நியமிக்கப்பட்டான். டில்லிக்கு வரும்படி தாயாரைக் கோவிந்தன் மிகவும் வற்புறுத்தினான். ராமநாதனுக்கும் அண்ணனுடன் மீண்டும் தொடர்பு ஏற்படுத்த அதிக ஆவல். முடிவில் மூன்று மாதங்களுக்கு ரங்கநாயகி டில்லிக்குப் போய்க் கோவிந்தன் குடும்பத்தோடு இருந்து விட்டுத் திரும்புவது என்று ஏற்பாடாயிற்று. அவளுக்குத் தனிமையில் சொந்தச் சமையல் செய்வதற்கும் ஆசாரமாக இருப்பதற்கும் வேண்டிய எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்வதாகக் கோவிந்தன் தெரிவித்தான்.

3

சென்னையிலிருந்து வண்டி புறப்பட்டது முதல் அது டில்லி போய்ச் சேரும் வரையில் ரங்கநாயகியின் மனம் ஓர் சிந்தனைச் சுழலில் சிக்கிச் சுழன்று கொண்டிருந்தது. தனது குற்றங் குறைகளை எண்ணி வருந்தினாள். 'கோவிந்தனைத் தான்கெடுத்ததாகக் கணவன் குற்றம் சாட்டினார். அதே குற்றத்தைக் கோதையும் என் பேரில் சுமத்தித் தன் குழந்தைகளைக்கெடுத்ததாகக் கூறினாள். என்னிடம் தவறு இல்லாமல் இருந்தால் இருவரும் இப்படிச் சொல்லுவார்களா? நான் அன்பு என்று எண்ணியது பிரயோசனமற்ற பாசமல்லவா? களை பயிரைப் போலவே இருப்பதுபோல அன்பும் பாசமும் பார்ப்பதற்கு ஒரேவிதமாகக் காணப்படுகின்றன. என்னுடைய உணர்ச்சி உண்மையான அன்பாக இருந்தால் நான் ஏன் அந்தச் சிறு பெண் மீது கோபித்துக் கொள்ள வேண்டும்? தன் குழந்தைகளைக் கண்டிக்க அவளுக்கு அதிகாரமில்லையா?' என்று தன்னையே வினவிக் கொள்வாள். உடனே அவள் எண்ணங்கள் கோதையின் மீது திரும்பும். 'குழந்தைகளை அடிப்பது என்ன தூர்க்குணம்? அதுவும் எனக்கு எதிரில் அடிக்க வேண்டுமா? அந்த அடியெல்லாம் என்னை அடித்தது போலல்லவா இருந்தது. அவளை எவ்வளவு அன்புடன் சொந்த மகளுக்கு மேல் பாராட்டினேன். நான் கோபத்தில் வீட்டுக்குத் திரும்புவதில்லை என்றால், அப்படிச் சொல்லக் கூடாது என்று ஒரு வார்த்தை கூடக் கூற வேண்டாமா? கொஞ்சங் கூட நன்றி கிடையாதா?' என்று பெருமூச்சு விடுவாள். தான் கூறியது தவிர்க்க முடியாத சபதமா என்று ஆராயத் தொடங்குவாள். 'நான் இனி எப்படிச் சென்னைக்குத் திரும்பி அந்த வீட்டில் நுழைய முடியும்? ஆனால் அவர்களையெல்லாம் துறந்து என் வாழ்க்கையின் பயன் என்ன? நடந்ததை ராமநாதனிடம் சொல்லுவாளா? தன்னை மன்னித்துத் திரும்ப வேண்டும் என்று கோதையே நேரில் எழுதுவாளா? அப்படி எழுதினால், அதை ஏற்றுத் திரும்ப வேண்டுமா? டில்லியிலேயே கோவிந்தனோடு இருந்து விடுவது நலமா?' என்று சந்தேகப்படுவாள். அப்பொழுது கோவிந்தன் குடும்பத்தைப் பற்றி நினைப்பாள். 'வங்காளிப் பெண் என்று நினைத்தாலே அருவருப்பாக இருக்கிறதே. கோவிந்தனுக்கு எப்படிப் புத்தி இவ்விதம் போயிற்று? அவளோடு என்ன பாஷையில் பேசுவேன்! என்ன சாப்பிடுகிறாளோ? என்ன உடுத்துகிறாளோ? குழந்தைகளுக்காவது கோவிந்தன் நம்மூரில் வழக்கமான பெயர்களை வைக்கக் கூடாதா? கங்கா-யமுனா நல்ல பெயர்கள்தான். ஆனால் நம் குழந்தைகளுக்குத் தகுந்த பெயர்களா? கோவிந்தனை எவ்வளவு செல்வமாக வளர்த்தேன். அவனும் என்மீது எவ்வளவு பிரியமாக இருந்தான்! அவன் பிதாவுக்கு அவனைப் பற்றி எவ்வளவு பெருமை! அதனால் தான் அவர் அகால மரணமடைந்தாரோ?' என்று எண்ணுவாள். இந்தச் சிந்தனைகள் சக்கரம்போல் சுழன்று வந்தன. சாப்பிடுவதற்கே மனம் வரவில்லை.



பிரயாணத்தின் இரண்டு நாட்களும் இரவில் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுச் சிறிது கண் அயர்ந்தாள்.

4

தனது சிந்தையில் மூழ்கியிருந்த அவளுக்கு டில்லி ஸ்டேஷன் வந்து சேர்ந்ததுகூடத் தெரியவில்லை. பக்கத்திலிருப்பவர்கள் இறங்குவதைக் கண்டுதான் தெரிந்தது. கோவிந்தன், மேனகா, அவர்களின் இரு பெண்கள் கங்கா-யமுனா எல்லோரும் அவள் இருக்கும் வண்டிக்கு எதிரில் வந்தனர். ஒருகூலி அவளுடைய பெட்டியையும் படுக்கையையும்எடுத்து வெளியே வைத்தான். தனது சாப்பாட்டு அடுக்கையும் கூஜாவையும் எடுத்துக் கொண்டு இறங்கினாள். 'அம்மா' என்று கோவிந்தன் அந்தச் சாமான்களை வாங்கிக்கொண்டு அவளைப் பிடித்து இறக்கினான். குழந்தைகள் 'தாதி — பாட்டி' என்று கத்திக் கொண்டு அவள் கைகளைப் பிடித்துக்கொண்டார்கள். சிறிது ஒதுங்கியபடியே மேனகா கைகூப்பினாள். பலவித உணர்ச்சிகளால் ரங்கநாயகி குழம்பிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். ஆனந்தமா, துக்கமா, இரண்டுமா என்று யார் கூற முடியும்? தனது பிரிய புத்திரனைக் கண்டதும் அவன்மீதிருந்த கோபம், வருத்தம் எல்லாம் மறைந்து விட்டன. அன்பு மட்டுமே அரசாண்டது. குழந்தைகள் மீதும் அது படர்ந்தது. மேனகையின் அழகைக் கண்டு பிரமித்தாள். ஆனால் டில்லியில் வசிக்கும் வடநாட்டுப் பெண்கள் மாதிரி பல பூச்சுக்களோடு பிரகாசித்த அவள் தோற்றம் அருவருப்பாக இருந்தது. அதை வெளிக் காட்டாமல், அவளை ஆசிர்வாதம் செய்து அனைவரும் வெளிவந்து மோட்டாரில் வீடு வந்து சேர்ந்தனர்.



தன் தாயின் சமையல், படுக்கை எல்லாவற்றுக்கும் கோவிந்தன் நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தான். காலையிலும் மாலையிலும் அவளிடம் வந்து அரைமணி நேரம் உட்கார்ந்து சென்னைக் குடும்ப சமாசாரங்களையும், பழைய காலத்திய சம்பவங்களையும் பற்றிப் பேசிப் போவான். பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரத்தைத் தவிர இதர வேளைகளில் கங்காவும், யமுனாவும் அவளைச் சுற்றிச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ரங்கநாயகியிடம் தமிழ் கற்றுக்கொண்டு அவளுக்கு ஹிந்தி கற்றுக் கொடுத்தார்கள். பாலுவும் கோபுவும் இவர்களோடு இங்கு வந்து விளையாடினால் எவ்வளவு ஆனந்தமாக இருக்குமென்று அடிக்கடி அவள் எண்ணுவது வழக்கம். தான் சென்னைக்குப் போகாவிட்டாலும், ராமநாதன் கோதையையும் குழந்தைகளையும் இங்கே அழைத்து வரலாமல்லவா? அதற்கு ஓர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டான். கோர்ட்டுகள் மூடிய பிறகு இரண்டு மாதங்கள் தன்னுடைய இரண்டு மகன்களும், குடும்பங்களும் ஒன்று கூடிக் கண்ணாரக் கண்டு விட்டால் பிறகு தனக்கு இப் புவியில் வேறொன்றும் வேண்டாம் என்று கருதினாள்.

5

தனது மாமியார் புறப்பட்டுப் போன பிறகு கோதை மிகவும் வருந்தினாள். 'எத்தனை வருஷங்கள் என்னை அன்புடன் ஆதரித்திருக்கிறாள். நானும் எவ்வளவு அன்புடன் பணிவிடை செய்திருக்கிறேன். எல்லாவற்றையும் ஒரு நிமிஷ ஆத்திரத்தால் பாழாக்கி விட்டேனே' என்று பரிதபித்தாள். 'ஆயினும் பெரியவர்களும் பொறுமை இழக்க வேண்டுமா? குழந்தைகளை இரண்டு அடி அடித்தால் என்ன முழுகிப் போய்விட்டது? அதற்காக இந்த வீட்டுக்குத் திரும்பி வர மாட்டேன் என்று சபதம் செய்ய வேண்டுமா? ஆனால், எத்தனை நாட்கள் வங்காளி மருமகளோடு அவளால் சமாளிக்க முடியும்? தானே ஒரு மாதத்துக்கெல்லாம் திரும்பி வந்து விடுவாள்' என்று முடிவு செய்து கொண்டாள்.

குழந்தைகள் தன்னைப் பற்றி ராமநாதனிடம் புகார் செய்வார்களென்று எதிர்பார்த்தாள். அப்பொழுது நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லலாம் என்று தீர்மானம் செய்தாள். ஆனால் பாலுவும், கோபுவும் அம்மா அடித்ததைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. தந்தை திரும்பி வந்தவுடன் 'பாட்டி ஊருக்குப் போய் விட்டாளா? எப்பொழுது திரும்பி வருவாள்?' என்று கேட்டனர். 'சீக்கிரம் வந்துவிடுவாள்' என்று அப்பா கூறவே, தெருவில் விளையாடப் போய் விட்டனர். அதற்குப் பிறகு எப்பொழுதாவது அவளைப் பற்றியும், டில்லியில் இருக்கும் கோவிந்தன் குழந்தைகளைப் பற்றியும், ஏதாவது கேட்பார்கள். சாதாரணமாகக் குழந்தைகளுக்கு அருகிலிருந்து தங்களைக் கவனிப்பவர்கள் மீது தான் அன்பு. வெகு தூரத்தில் இருப்பவர்களை நினைத்து வருந்தும் குழந்தைகளின் ஆரோக்கியம் குறைவாக இருக்கும் அல்லது வேறு ஏதாவது கோளாறு இருக்கும்.

கோவிந்தன் ராமநாதனுக்கு அடிக்கடி கடிதம் எழுதி வந்தான். ரங்கநாயகி சௌக்கியமாக இருப்பதாகவும், கங்கா யமுனாவிடம் மிகவும் பற்றுக்கொண்டு விட்டதாகவும் எழுதியிருப்பதைப் படித்து ராமநாதனுக்கு ஓரளவு ஆச்சரியமும், ஏமாற்றமும் உண்டாயிற்று. எப்பொழுது சென்னைக்குத் திரும்புவாள் என்ற கேள்விக்கு அண்ணன் பதில் எழுதவில்லை. குழந்தை



களைக் கவனித்து விட்டு வேலைகளையெல்லாம் தனியாக ஒரு மாதம் செய்தபொழுதே கோதைக்கு மாமியாரின் அருமை புலப்பட்டது. ஒருவேளை தன்னிடம் கூறியபடி சென்னைக்கு வராமலே இருந்து விடுவாளோ என்ற திகிலும் ஏற்பட்டது. இரண்டு மாதங்கள் பார்த்தாள். பிறகு தனது குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்டு, குழந்தைகள் பாட்டிக்காக ஏங்குவதாக ஒரு பொய்யுங் கூறி உடனே திரும்பி வந்து விடவேண்டும் என்று கடிதம் எழுதினாள். அது போய்ச் சேருமுன் கோவிந்த னிடமிருந்து ராமநாதன் குடும்பத்தோடு டில்லிக்கு வரவேண்டுமென்ற அழைப்பு வந்தது. கோர்ட்டு சாத்தியவுடன் எல்லோரும் போய் இரண்டு மாதங்கள் இருந்துவிட்டு ரங்கநாயகியை அழைத்து வர ஏற்பாடு செய்தார்கள். பாலுவுக்கும் கோபுவுக் கும் ஒரே கொண்டாட்டம். கங்கா—யமுனையைப் பற்றி ஓயாமல் ஏதாவது கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

6

மே மாதம் 15-ம் தேதி புறப்படுவதாகத் தீர் மானம் செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஒரு வாரத் துக்கு முன் டில்லியில் குடி ஜலத்தில் சாக்கடைத் தண்ணீர் கலந்ததால் ஓர் கொடிய மஞ்சக் காமாலை தொத்துநோயாகப் பரவி வருவதாகப் பத்திரிகையில் ராமநாதன் படித்தான். அதைப் பற்றி, கோவிந்தனும் எழுதித் தற்சமயம் டில்லிக்குவரும் திட்டத்தை ஒத்திப் போடும்படி யோசனை கூறினான். இரண்டு நாட்களுக் கெல்லாம், ரங்கநாயகியும் அந்த நோய்க்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்று தந்தி வந்தது. ராமநாதன் திடுக்கிட்டான். அவனைவிடக் கோதைக் குத்தான் கவலை அதிகமாயிற்று. எப்படியாவது மாமி யாரைப் பார்த்து விட்டு வரவேண்டுமென்று துடித் தாள். கோவிந்தனுக்குத் தந்தியடித்தார்கள். அவர்கள் ஒருவரும் இப்பொழுது வரக் கூடாதென்று கோவிந் தன் கண்டிப்பாக உத்தரவிட்டு விட்டான்.

பத்து நாட்கள் ஆஸ்பத்திரியிலிருந்து ரங்கநாயகி இறந்தாள். கடைசி நாட்களில் 'ராமநாதன், கோதை, பாலு கோபு' இவர்களைப் பற்றியே புலம்பிக் கொண் டிருந்தாள். கோவிந்தனை மட்டும் தினம் ஒருமுறை பார்த்துப் போக டாக்டர் அனுமதித்தார். அவன் கூடிய வரையில் அன்னைக்கு ஆறுதல் கூறினான். 'எப்படி யாவது சென்னைக்கு அழைத்துப் போய் விடு' என்று மன்றாடினாள் ரங்கநாயகி. உலகை விட்டு நீங்கும் பொழுது கடவுளை நினைப்பது எவ்வளவு கடினம் என் பதை உணர்ந்து பெரியாழ்வார் 'அப்போதைக்கிப் போதே சொல்லி வைத்தேன், அரங்கத்து அரவணைப் பள்ளியானே' என்று திடமாக இருக்கும் பொழுதே பிரார்த்தனை செய்தார். இப்படிச் செய்யாவிடினும் ரங்கநாயகி அவர் மற்றொரு பாட்டில் உபதேசித்தபடி திருமாலின் நாமங்களையே தன் குழந்தைகளுக்குச் சூட்டி விருந்ததால் 'ராமநாதா, கோவிந்தா' என்று சொல்லிக் கொண்டே உயிர் நீத்தாள்.

'கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்து இருமினோ,
நாயகன் நாரணன் தம் அன்னை நரகம் புகாள்'

ரங்கநாயகியின் மரணச் செய்தி கிடைத்ததும் கோதையின் துக்கத்துக்கு எல்லையில்லை. அன்று நடந்த தையெல்லாம் கணவனிடம் சொல்லி அழுதாள். அதைக் கேட்டு ராமநாதனின் சோகம் பன்மடங்காயிற்று. வாச லில் விளையாடிக் கொண்டிருந்த பாலுவும் கோபுவும் உள்ளே வந்ததும் பெற்றோர்கள் அழுவதைப் பார்த்து மௌனமாக நின்றனர். "பாட்டி போய் விட்டாள், பாலு!" என்றாள் கோதை. 'அதென்ன அம்மா, எப் பொழுது திரும்பிவருவாள்?" என்று வினவினான் கோபு.



தீபாவளியும் தமிழரும்

தீபாவளிப் பண்டிகை, குமரிமுதல் இமயம் வரையுள்ள சைவ, வைணவ, சமண, பௌத்த சமயங்களைப் பின்பற்றும் மக்களால் வெகு உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இஸ்லாமியராகவும், கிறிஸ்தவராகவும் இல்லாத இந்திய மக்கள் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். ஆனால், அந்தப் பண்டிகைகளில் ஒன்று சைவருக்கு மட்டுமே உரியதாக இருக்கும். மற்றொன்று வைணவருக்கு மட்டும் உற்சாகமளிப்பதாயிருக்கும். இன்னொன்று பௌத்தர்கள் மட்டுமே கொண்டாடுவதாயிருக்கும். பின்னொன்று சமணர்கள் மட்டும் சந்தோஷப்படுவதாயிருக்கும். ஏனைய விழாக்கள் ஒவ்வொன்றின் நிலையும் இதுதான். ஆனால் இந்தியர்களுக்குரிய புராதனப் பண்டிகைகளில் தீபாவளி ஒன்றுதான் உள்நாட்டுச் சமயங்களைச் சார்ந்த மக்கள் எல்லோரும் ஒன்று கலந்து கொண்டாடும் பண்டிகையாக இருந்து வருகிறது.

ஆனால், தமிழகத்தில் ஒரு சிலர், 'தீபாவளிப் பண்டிகையைத் தமிழருக்கு உரியதன்று' என்றும், ஆரியருக்கே உரியதென்றும் அதைத் தமிழர் கொண்டாடக் கூடாதென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர்.


ஆம்; மதத்தின் பெயரால், தெய்வத்தின் பெயரால் கொண்டாடப்படும் எந்த விழாவையும் கண்டித்து வருபவர்கள்தான் தீபாவளிப் பண்டிகையையும் கண்டிக்கின்றனர்.

ஆனால், அதை வெளிப்படையாகச் சொன்னால், தங்கள் நாத்திக நோக்கத்தை ஆத்திகர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற அச்சத்தால் 'தமிழர்' என்ற இன உணர்ச்சியைப் பயன்படுத்தித் தீபாவளிப்பண்டிகையை எதிர்க்கின்றனர். ஏதோ மற்றத் தெய்வீகப் பண்புகளையெல்லாம் தாங்கள் ஏற்றுக் கொள்பவர்கள் போலவும், ஆரியக் கலப்புடைய காரணத்துக்காக மட்டுமே இந்தத் தீபாவளிப் பண்டிகையை எதிர்ப்பவர்கள் போலவும் இவர்கள் நடிக்கின்றனர்.

இனம் வேறு; மதம் வேறு. அப்படியே, இன வழிப்பட்ட கலாசாரம் வேறு; மத வழிப்பட்ட கலாசாரம் வேறு. இவை வேறு வேறாக இருப்பினும், ஒன்றுக்கொன்று விரோதமானவை அல்ல. இனவழி தமிழனாக இருக்கும் ஒருவன், மதவழி சைவனாகவோ, வைணவனாகவோ, அல்லது இஸ்லாமியனாகவோ இருக்க முடியும். இன உறவுக்கான எல்லையை விட சமய உறவுக்கான எல்லை பெரியது. சான்றாக, ஒருவன் தன்னைத் தமிழனாக நினைக்கும்போது அவனுடைய உறவினர் மூன்று கோடி பேர்தான். அவனே இந்துவாகவோ அல்லது இஸ்லாமியனாகவோ இருக்கும்போது, உறவினர்களின் எண்ணிக்கை பல கோடியாகப் பெருகி விடுகிறது. இனமும் மதமும் வெவ்வேறாக இருப்பினும் ஒன்றுக்

ம. பொ. சிவஞானகிராமணியார்





கொன்று விரோதமாக இல்லாததால் இரண்டு வட்டாரத்தோடும், ஒருவன் ஏககாலத்தில் உறவு வைத்துக் கொள்ள முடிகிறது.

தீபாவளிப் பண்டிகை, மதவழிப்பட்டதே அன்றி, தமிழர் என்ற இன வழிப்பட்டதன்று. ஆகவே, இன வரலாற்றைக் கூறும் தமிழ் இலக்கியங்களில் இல்லாத பண்டிகையைத் தமிழர் கொண்டாடக் கூடாதென்று கூறுவது அவர்களுடைய மத உணர்ச்சியைக் கொன்று மதவழிப்பட்ட உறவைச் சீர்குலைப்பதாகும். இதை நாத்திக நெஞ்சமுடையவர்களைத் தவிர வேறு எவரும் செய்ய மாட்டார்கள்.

தமிழர் வாழ்ந்த வரலாற்றைக் கூறும் இலக்கியங்களில், அதுவும் புராண காலத்துக்கு முன்பு எழுதப்பட்ட சங்க இலக்கியங்களில் இடம் பெறாத எந்தப் பண்டிகையையும் தமிழர் கொண்டாடக் கூடாதென்றால், இஸ்லாமிய—கிறித்துவ மதங்களுக்குத் தமிழகத்தில் இடமே இல்லை. அல்லது அந்த மதங்களைப் பின்பற்றும் மக்களைத் தமிழர்களாக எண்ணுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. உண்மைக்கு மாறான இந்த நிலைமையை இஸ்லாமியத் தமிழரும் கிறித்துவத் தமிழரும் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

மதஉணர்ச்சி படைத்த மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் பெரும்பாலானவை புராண காலத்தில் தோன்றியவையாகும்.

அதாவது, சமயப் பிரிவுகள் பலவாகத் தோன்றிய காலத்தில், போக்குவரத்து வசதிகள் அதிகரித்த சந்தர்ப்பத்தில் பண்டிகைகள் தோன்றின. ஆம், நம் பிரதேசத்திலுள்ள மக்களும் இன்னொரு பிரதேசத்திலுள்ள மக்களும் அவ்வப்போது சந்தித்துப் பழகுவதற்குச் சமயப் பண்டிகைகளும் பயன்பட்டன. சங்க இலக்கியங்களில் இல்லாத எந்தப் பண்டிகையையும் தமிழர் கொண்டாடக் கூடாதென்று நமது முன்னோர் கருதியிருந்தால், தமிழினத்தாரில் சாதாரண மக்கள் வேங்கடத்துக்கு வெளியே உள்ளவர்களோடு உறவு வைத்துக் கொண்டிருக்க முடியாது.

சமய வழிபட்ட எந்தப் பண்டிகளையும் மொழி வழிபட்ட ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நிகழ்வதில்லை. இந்து சமயப் பண்டிகைகள் மட்டுமல்ல. இஸ்லாமிய கிறித்துவ சமயங்களைச் சார்ந்த தமிழர்கள் கொண்டாடும் பண்டிகைகளும் இது போலத்தான்.

ஆகவே, மதவழிப்பட்ட பண்டிகைகளைத் தமிழர் கொண்டாடக் கூடாதென்று கூறுவோர், மதம் காரணமாக உலகத்தாரோடு தமிழருக்கு ஏற்பட்டுள்ள உறவைக் கண்டிப்போராவர்; மதங் காரணமாக ஏற்பட்டுள்ள கலாசார வாழ்வையும், இலக்கிய வளர்ச்சியையும் அழிப்போராவர். இதைவிடப் படுமோசமான நாசவேலை வேறு இருக்க முடியாது.

தமிழருடைய வாழ்வை, சங்க காலம்—புராண காலம்—தற்காலம் என மூன்றாகப் பிரித்தால், காலத்துக்குக் காலம் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம்.


சங்க காலத்தில் கொண்டாடப்பட்ட விழாக்களில் சில, புராண காலத்தில் மறைந்துவிட்டன. இதற்குச் சான்றாக இந்திர விழாவைக் குறிப்பிடலாம்.

அதுபோல, புராண காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பண்டிகைகள் சில தற்காலத்தில் மதிப்பிழந்தால் அல்லது மறைந்து போனால் அது இயற்கைதான்.

ஆனால், விழாக்கள் தோன்றுவதற்கும் மறைவதற்கும் கால மாறுதல் காரணமாக இருக்க வேண்டுமேயன்றி, இனப் பூசலோ அல்லது சாதி வெறியோ காரணமாகி விடக் கூடாது. அதெல்லாம் காட்டுமிராண்டிகளின் செய்கை.

பொதுவாக, பண்டிகைகள் எல்லாம் சமயங்களின் பெயரால் புராணங்களின் பெயரால் கொண்டாடப்படினும் அந்தப் பண்டிகைகளைத் துவக்கி வைத்ததற்குக் காரணம், பொருளாதாரம்தான். நாட்டின் செல்வம் ஒரு சிலரிடையே தேங்கி விடாமல் நாடு முழுவதும் பரவலாகச் சுற்றி வரும்படி செய்வதற்காகத்தான் நமது முன்னோர்கள் பண்டிகைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஒரு பண்டத்தைக் கொடுத்து இன்னொரு பண்டத்தை வாங்கும் பண்டமாற்று வாணிபம் இருந்த காலத்தில் தேசத்தின் செல்வம் ஒரு சிலரிடையே அதிகப்படியாகத் தேங்கி விடுவதற்குச் சந்தர்ப்பம் குறைவாக இருந்தது. ஆனால், பண்டத்தைப் பணத்துக்கு விற்கும் முறை ஏற்பட்ட காலத்தில்தான் பணம் ஒரு சிலரிடையே தேங்கிவிடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் பாங்குகள் இல்லாத





காரணத்தால் தேங்கிய பணத்தைப் புதைத்து வைக்கும் மூடத்தனமும் ஏற்பட்டது.

இப்படிப் பணத்தைத் தேக்குவதாலும், புதைத்து வைப்பதாலும் தேசத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து போகாமல் செய்வதற்குத் தான் தேர்-திருவிழாக்களும், ஸ்தல யாத்திரைகளும், பண்டிகைகளும் ஏற்படுத்தப்பட்டன. அந்தக் காலத்தில் சமயத்தின் துணை கொண்டல்லாமல் வேறு விதமாகத் தேசத்தின் பொருளாதாரக் கட்டுக்கோப்பை நிலைநிறுத்துவது சாத்தியமில்லாமலிருந்தது போலும்.

மற்றும் தெய்வ பக்தியின் பெயரால் துவக்கி வைத்தால்தான், அதைத் தொடர்ந்து செய்து வரும் மனப்பான்மை மக்களிடையே நிலவியிருந்தது. ஆகவே, பண்டிகைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கான பொருளாதாரக் காரணங்களை மறைத்து,தெய்வத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் கற்பனைக் காரணங்களைச் சொல்லி வந்தனர் மதவாதிகள்.

தீபாவளி போன்ற பண்டிகைகளுக்குத் தெய்வீகச் சம்பவங்களைக் கற்பித்ததன் காரணம் இதுதான். அப்படிக் கற்பித்தவர்கள் தாங்கள் வாழ்ந்த காலம், பேசிய மொழி ஆகியவற்றுக்கேற்பச் சம்பவங்களைச் சிருஷ்டிப்பது இயற்கை; எதிர்பார்க்க வேண்டியதுமாகும்.

தீபாவளிப் பண்டிகையையொட்டி வழங்கி வரும் புராணக் கதையும் கற்பனையே யன்றிச் சரித்திரமன்று. ஆகவே, அதை வைத்துக் கொண்டு ஆரிய — திராவிட இனச் சண்டைக்குத் தூபமிடுவது அறியாமையேயாகும்.

புராண காலத்தில் கற்பிக்கப்பட்ட பண்டிகைகள் அனைத்துமே இந்தக் காலத்துக்கும், எதிர்காலத்துக்கும் தேவையென்று நான் வாதிக்கவில்லை. காலத்துக்கேற்ப ஒவ்வொன்றும் மாறி வருகின்றன. அது போலவே, பண்டிகைகளையும் மாற்றியமைக்கலாம். ஆனால் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டுக்கோப்பு சரிந்து விழாதபடிக்கு அந்த மாறுதலைத் திட்டமிட்டுப் படிப்படியாகச் செய்ய வேண்டும். அதோடு மக்கள் அடிக்கடி, ஆயிரம் - பதினாயிரம் - லட்சம் என்ற கணக்கில் கூடிப் பழகுவதற்கும் உற்சாகமாகப் பொழுது போக்குவதற்கும் புதிது புதிதாகத் தேசியத் திருவிழாக்களைச் சிருஷ்டிக்க வேண்டும். இந்த ஒன்றை உருப்படியாகச் செய்து விட்டால் மறைந்து தீரவேண்டிய பழைய பண்டிகைகள் காலப் போக்கில் தானாகவே மறைந்துவிடும். 'ஒழிக' கூச்சல் தேவையில்லை.

இன்றைய பாரத சமுதாயம் சமயத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அமைந்திருக்கிறது. அந்த அஸ்திவாரத்தை மாற்றியமைப்பதென்பது எளிதான காரியமல்ல. சான்றாக சமயத்தின் பெயரால் நாட்டில் நிகழ்ந்து வரும் தேர் திருவிழாக்கள், ஸ்தல யாத்திரைகள், தீபாவளி, சங்கராந்தி போன்ற சமயப் பண்டிகைகள் ஆகியவற்றைத் திடீரென்று கைவிட்டு விட்ட ஒரு தமிழகத்தைக் கற்பனை செய்து பார்த்தால், தமிழினத்தின் வாழ்வே சீர்குலைந்து போன பயங்கரக் காட்சிதான் கண் முன்பு தோன்றும். நல்ல வேளையாக, பொருளாதாரக் கண்ணோட்டமின்றி நாத்திகம் பேசுவோரின் பேச்சை மக்கள் கேட்காததால் தான் நாடு பிழைத்திருக்கிறது. சமயக் கலப்பற்ற பொருளாதார அஸ்திவாரம் கொண்ட ஒரு சமுதாயத்தை அமைக்க முடியுமா?

இனத்தையும், மதத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளும் கூட்டத்தாரால் அதைச் செய்ய முடியாது.

தீபாவளியை முன்னிட்டு எண்ணெய், காய்கறி, ஆடை முதலிய பண்டங்கள் நாடு முழுவதும் பல கோடி ரூபாய்களுக்கு விற்பனையாகின்றன. அதன் காரணமாக, அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் நல்ல ஊதியம் பெறுகின்றனர். இதுவும் அந்தப் பண்டிகையை மக்கள் கொண்டாடி மகிழ்வதற்கான காரணங்களில் ஒன்றாகும். தீபாவளிப் பண்டிகையை ஒட்டி வழங்கிவரும் கதை எதுவாயினும் சரி; அதைப் பற்றி மக்களுக்குக் கவலையில்லை. அந்தக் கதையும் நன்கு ரசித்துப் பொழுதுபோக்கப் பயன்படுகிறது: அவ்வளவுதான்!





துரிதமாகத் தயாராகிறது
கல்கியில் வந்த
தொடர்கதை சித்திரம்
படித்து மகிழ்ந்தார்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள்
நாவலாசிரியர் அகிலனின் அற்புத கற்பனை.
ஸ்ரீ விஜயகோபால் பிக்சர்ஸாரின்
பாவை விளக்கு
மூலக்கதை. அகிலன்
திரைக்கதை, வசனம். A.P.நாகராஜன்
சங்கீதம். K.V.மஹாதேவன்
பாடல்கள். அ.மருதகாசி
டைரக்ஷன். K.சோமு
ஸ்டுடியோ. பிலிம் சென்டர்
தயாரிப்பாளர்கள்.. கோபண்ணா • விஜயரங்கம்
BEEBEES
விநியோகஸ்தர்கள் — சேலம்: எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம் ★ கோயமுத்தூர் & நீலகிரி: தி ஈரோடு பிக்சர்ஸ் சர்க்யூட், ஈரோடு ★ மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி (கன்யாகுமரி உள்பட): தி எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை
இதர விவரங்களுக்கு
ஸ்ரீ விஜயகோபால் பிக்சர்ஸ், 8, கோபதி நாராயணசாமி செட்டித் தெரு, சென்னை - 17

அட்டைப்பட விளக்கம்

உமா-மகேசுவரர்

பொருளும் சக்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கண்ட முடிவு. ஓர் அணுவாயினும் அதற்குள் மாபெரும் சக்தி யிருக்கிறது என்பது மேல்நாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மூலமாக நிர்ணயித்த விஷயம்.

இந்தச் சக்தி யிருப்பதாலேயே பொருள்கள் எல்லாம் அழகு பெற்றுத் துலங்குகின்றன! உலகம் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் 365¼ நாளில் சுற்றிவருகிறது என்பதை நினைத்தால் வியப்பு மேலிடும். செடிகள் பருவந்தோறும் அழகிய புஷ்பங்களைத் தருவதையும், இனிய கனிகளைத் தருவதையும் நினைத்தால் அந்தச் சக்தியின் கலை யுணர்ச்சியை வியக்காமலிருக்க முடியாது. இப்படி இயற்கையில் உள்ள ஒவ்வொரு பொருளுமே அழகு துலங்கும் பொருளாகும். அதனால்தான் பட்டினத்தடிகள், "ஈசன் அழகன்" என்றார். எப்படிப்பட்ட அழகன்! 'அண்டத்தைப் போல் அழகியதாம்!' என்றார்.

இப்படிப் பொருளும் சக்தியும் பிணைந்திருப்பதை நம் முன்னோர்கள் சிவம் என்றும் பார்வதி என்றும் வழிபட்டார்கள். உலகின் தன்மையறிந்து வழிபட்டார்கள் என்பதற்கு மாணிக்கவாசகரின் கேள்வி பதிலாக அமைந்திருக்கும் திருச் சாழல் பாடலே தக்க சான்றாகும்.

"இமயமலையரசன் இமவானின் மகளான உமையை உலகறிய, அக்னி சாட்சியாக மணந்தான் என்பது என்ன விந்தை?" என்கிறாள் தோழி.

"அவன் அவளுடைய உறவை நாடவில்லை எனில் கலையாரு பொருந்திய பொருள்களெல்லாம், உலகமெல்லாம் கலங்கிச் சின்னபின்னப்பட்டுப் போகும்!" என்று பதில் சொல்கிறாள் மற்றொரு தோழி.

மலை அரையன் பொற்பாவை வாள்நுதலாள்
பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா(து) ஒழிந்தனனேல்
உலகனைத்தும்,
கலைநவின்ற பொருள்கள் எல்லாம்
கலங்கிடுங்காண் சாழலோ.

உலகம் சூரியனை 365¼ நாளில் சுற்றிவருவதை நானூறு நாட்களில் சுற்றி வருவதாகவோ, நாற்பது நாட்களில் சுற்றி வருவதாகவோ வைத்துக் கொண்டால், உலகம் என்ன பாடுபட்டுப் போகும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாகும்.

ஆகவே, இந்த உலகைக் காப்பாற்றி ஒரு நியதியில் நடத்துபவள் அன்னை பராசக்தி. அதை உணர்ந்தே பொருளுக்கு அதிபதியான சர்வேசுவரன் உலகறிய சக்தியை மணந்தான்.

அந்த உமா மகேசுவரனையே இவ்வருஷத்திய தீபாவளி மலரின் அட்டைச் சித்திரமாக நமது ஓவியக் கலைஞர் மணியம் வழங்கியிருக்கிறார். அவர்கள் காதல் நீடூழி வாழ்க என்று பிரார்த்தித்து இந்தப் புனிதத் திருநாளில் வணங்குவோமாக!

பகவான் புத்தர்

நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு -பாரதியார்

புத்தர் பிரான் தோன்றியது இந்த நாட்டிலே, ஞானத்தைப் பெற்றது இந்த நாட்டிலே. ஆனால் புத்த மதத்தினர் இந்தியாவைவிட இலங்கை, பர்மா, சீனு முதலிய கிழக்காசிய நாடுகளில்தான் ஏராளமாக இருக்கின்றனர். இது ஒரு விந்தையாகத் தோன்றலாம். பாரதப் பண்பை உணர்ந்தவர்களுக்கு இதில் ஒரு வியப்பும் தோன்றாது. 'நல்லன யாவையும் நாடுறு நாடு' இது! புத்தமதக் கோட்பாடுகளை யெல்லாம் இந்து ஸநாதன தர்மம் ஏற்றுக் கொண்டு, புத்தர் ஆண்டவனின் ஒன்பதாவது அவதாரம் என்ற பதவியும் அளித்து விட்டது! இப்படிப்பட்ட நாம் புத்தரின் 2500வது ஜெயந்தி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியதில் வியப்பென்ன இருக்கிறது!

சென்ற ஆண்டு புத்த ஜெயந்தி விழா கொண்டாடியதிலிருந்து பாரத மக்களின் நினைவெல்லாம் புத்தர் பிரானின் வாழ்க்கைச் சம்பவங்களையே சுற்றிச் சுற்றி வந்தது! சாதாரண மக்களின் நிலை இதுவென்றால் ஓவியர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? ஓவியர் ராஜம், புத்தர்பிரான் வாழ்க்கையிலிருந்து நான்கு முக்கியமான காட்சிகளைப் பொறுக்கி எடுத்து, புகழ் பெற்ற இந்தியக் கலைப்பாணியில் வண்ண ஓவியங்களாகத் தீட்டி யிருக்கிறார்.

1. புத்தருக்கு இளமைப் பிராயத்திலே சித்தார்த்தன் என்று பெயர். இளவரசன் சித்தார்த்தன் யசோதரையின் சுயம்வரத்தில் குறி பார்த்து அம்பெய்யும் வில்வித்தையில் மற்றவர்களைத் தோற்கடிக்க, மங்கை நல்லாளின் மலர்க் கரம் பற்றினான். இது அவன் மாமன் தேவதத்தனுக்குப் பொறாமை யுண்டாக்கியது. யசோதரை திரை மறைவில் அமர்ந்திருந்து இந்தக் காட்சியைப் பார்க்கிறாள்.

2. இன்பத்தில் மூழ்கியிருந்த சித்தார்த்தன் ஒரு நாள் தேர் ஏறித் தெரு வழியாகப் போனபோது, பிணி, மூப்பு, சாக்காட்டைப் பார்த்தான். அவன் மனம் சஞ்சலப்பட்டது. மனித வாழ்வு இவ்வளவுதானு என்று தோன்றியது. அதுமுதல் உண்மையை நாடி அறிய வேண்டும் என்று தீரா ஆவல் கொண்டான்.

3. தண்ணிலவு பொழியும் இனிய இரவு வேளையில், இளம் மனைவி யசோதரையையும், பச்சிளம் குழந்தை ராகுலனையும் தூங்கும்போது விட்டுவிட்டு, உலகம் உய்யும் பொருட்டு, உண்மையை நாடிப் புறப்படுகிறான் சித்தார்த்தன்.

4. உண்மையைக் கண்ட ஞானி, அன்பைக் கண்ட ஞானி புத்தர்; மனத்தில் வேற்றுமை மாற்றிய புண்ணியன் புத்தர்; அவருக்கு அம்பபாலி என்னும் கணிகை அன்புடன் இனிய தின்பண்டங்கள் அளிக்கப் புத்தர் ஏற்றுக் கொண்டு அருளினார். அம்பபாலி தன்னுடைய வாழ்வு சிறந்ததாக மகிழ்ந்தாள். ஆனால் வேற்றுமை உணர்ச்சி நீங்கப்பெறாமல் புத்தருடன் தொடர்ந்த தேவதத்தன் புத்தரின் செய்கை கண்டு வியப்பில் ஆழ்கிறான். சில பேருக்கு எவ்வளவுதான் உண்மையைச் சொன்னாலும் புரிவதில்லை அல்லவா?

பகவான் புத்தரின் புனிதமான இந்த வாழ்க்கைக் காட்சிகளை மலரில் 101-104 பக்கங்களில் காணலாம்.

மங்கையர்க்கரசி

சித்திர விளக்கம்

பாண்டியநாடு அமைதி இழந்து தவித்துக் கொண்டிருந்த காலம். பாண்டிய நாட்டில் சமணர்களின் ஆதிக்கம் நிலவியது. சைவ சமயத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னன் சமண சமயத்தைத் தழுவி விட்டான். அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும் என்று மதுரை மக்களில் பெரும்பாலோர் சமண சமயத்தைத் தழுவி விட்டனர். பாண்டிய மன்னன் சமண முனிவர்கள் விருப்பப்படியே நாட்டை நடத்தி வந்தான். சைவக் கோயில்கள் பல சமணக் கோயில்களாயின. பாண்டிய மன்னனின் போக்கைக் கண்டு இன்னது செய்வது என்று தெரியாமல் பாண்டிமா தேவியான மங்கையர்க்கரசியும், மந்திரி குலச்சிறையாரும் திகைத்துக் கொண்டிருந்தனர். சமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கச் சக்தியில்லாமல் சைவ சமயப்பற்றுள்ள அனைவரும் அடங்கி ஒடுங்கிப் போய்க் கிடந்தார்கள்.

ஒருநாள் மாலை. மங்கையர்க்கரசி வழக்கம்போல் பிரார்த்தனை செய்துவிட்டுத் திரும்பினாள். அவளுக்கு ஒரு அதிசயமான செய்தி காத்துக் கொண்டிருந்தது. "திருமறைக்காடு என்னும் ஊரில் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசருடன் வந்திருக்கிறார்" என்று ஒரு தூதன் சொன்னான்.

"என்ன அதிசயம்! மூன்றுவது வயதிலேயே உமையம்மை பாராட்ட உண்ட ஞானசம்பந்தர் திருமறைக்காடுக்கு வந்திருக்கிறாரா? சைவசமயப் பெரியார் வந்திருக்கிறாரா? 'அவரைக் காணும் பேறு என்று வாய்க்குமோ?' என்று இருந்த திருஞானம் வந்திருக்கிறாரா?" என்று ஆவேசம் வந்தவளைப்போல் சொல்லிக் கொண்டாள்.

உடனே அமைச்சர் குலச்சிறையாரைக் கூப்பிட்டு அனுப்பினார் மங்கையர்க்கரசியார். அவருடன் கலந்து ஆலோசித்து, ஞானசம்பந்தரை அழைத்து வரத் தூதனை அனுப்பினர்.

திருமறைக்காடு சென்று ஞானசம்பந்தரைக் கண்ட பாண்டிமாதேவியின் தூதன் 'மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் தங்களை மதுரையம்பதிக்கு எழுந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றனர்" என்று கூறி வணங்கினான்.

பாண்டிமாதேவி எதற்காகத் திருஞான சம்பந்தரை மதுரையம்பதிக்கு வரவழைக்கிறாள் என்பதை உணர்ந்த திருநாவுக்கரசர், "சமணர்கள் மிகப் பொல்லாதவர்கள். நீ அங்கு போக வேண்டாம்" என்று தடுத்தார்.

வாலிபப் பிராயத்தினரான சம்பந்தர் வயது முதிர்ந்த திருநாவுக்கரசரின் வாக்குக்கு இணங்கவில்லை. "நான் இப்பொழுதே மதுரைக்குப் புறப்பட்டுப் போகத்தான் போகிறேன். எம்பெருமான் எனக்குத் துணை இருப்பார்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டார்.

நாவுக்கரசரும் கடைசியில் அவருக்கு விடை கொடுத்து மதுரையம்பதிக்கு அனுப்பி வைத்தார்.

திருஞானசம்பந்தர் மதுரை எல்லையை அடைந்தார். சம்பந்தர் தமது நகரின் எல்லையை அடைந்து விட்ட செய்தியை அறிந்த பாண்டிமாதேவி குலச்சிறையாரை அனுப்பி அழைத்து வரத் தக்க ஏற்பாடு செய்தார்.

சம்பந்தரை அரச மரியாதைகளுடன் மதுரை நகருக்கு அழைத்து வந்தார்கள். தம் வேண்டுகோளுக்கு இணங்கி வந்த சம்பந்தரைக் காணப் பாண்டிய மன்னனிடம் விடைபெற்று மங்கையர்க்கரசி புறப்பட்டாள். சம்பந்தர் ஆலவாய் இறைவனை வணங்கிவிட்டுத் திரும்பும்போது அம்மையார் ஞான சம்பந்தரை வணங்கி அருள் பெற்றாள்.

சம்பந்தர் தமக்கென்று அமைத்திருந்த மடத்தில் தம் சைவப் படைகளுடன் சென்று தங்கினர்.

சம்பந்தர் வரவை அறிந்த சமணர்கள் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்தனர். எப்படியும் சம்பந்தரை ஒழித்துவிட வேண்டும் என்று முடிவு கட்டிய சமணர்கள் மன்னனிடம் சென்றனர். சமண முனிவர்களின் கைப்பாவையாக இருந்த பாண்டியன் அவர்கள் விருப்பத்துக்கெல்லாம் தலையை ஆட்டினான். "சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைக்கவேண்டும்" என்று கேட்டதற்கும் பாண்டியன் "சரி" என்று உத்தரவு கொடுத்து விட்டான்.

வெறிபிடித்த சமணர்கள் சம்பந்தரின் மடத்துக்குத் தீ வைத்து விட்டனர். திக்கும் நீந்தமிழால் தெய்வத் திருத்தொண்டு செய்து வரும் திருஞான சம்பந்தர் தங்கியிருந்த மடத்தைத் தீ தாவிப் பிடித்துவிட்டது. சமணர்கள் செய்த கொடுமையைச் சீடர்களாக்கள் சம்பந்தரிடம் கூறினர். சம்பந்தர் இதைக் கேட்டுப் பதற்றமுற்றாரா? இல்லை; புன்முறுவல் பூத்தார். 'குடிகள் தவறுக்கு அரசன்தான் பொறுப்பு. ஆகவே இந்தக் கொடுமையை மன்னன்தான் அனுபவிக்க வேண்டும்' என்று எண்ணினர் சம்பந்தர். ஆனால் அரசனிடம் கருணை கொண்ட உள்ளத்தோடு, "பையவே சென்று பாண்டியர்க்கு ஆக" என்று அக்கினிக்குக் கட்டளை இட்டார்.

என்ன ஆச்சரியம்! அடுத்த கணம் மடத்தில் இருந்த தீ அணைந்துவிட்டது. ஆனால் அது பாண்டிய மன்னனைச் சென்று பிடித்துக் கொண்டது. வெப்பு நோய்க்கு உள்ளான பாண்டியன் நோயின் கொடுமை தாங்காமல் அவதிப் பட்டான். சமண முனிவர்கள் மணிமந்திர மருந்துகளைக் கொண்டு பாண்டியனின் வெப்பு நோயைக் குறைக்க அரும்பாடு பட்டனர். மன்னனின் நோய் நீங்கியபாடாக இல்லை. மன்னன் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

சமணர்களின் தீச்செயலே மன்னனின் வெப்பு நோய்க்குக் காரணம் என்பதை உணர்ந்த பாண்டிமாதேவியும், குலச்சிறையாரும் மன்னனிடம் சென்று, "இந்த நோய் சமணர்களின் தீச்செயலால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. திருஞான சம்பந்தரால்தான் தங்கள் நோய் தீரும்" என்றனர்.

நோயினால் அவதிப்பட்ட மன்னன், எப்படியாவது நோய் நீங்கினால் போதும் என்று எண்ணினான். "உடனே சம்பந்தரை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்" என்று குலச்சிறையாருக்கு உத்தர விட்டான். "அவரால் என்னுடைய நோய் நீங்குமானால் நான் அவர் பக்கமே நிற்பேன். மீண்டும் சைவ சமயத்துக்கு மாறுவேன்" என்று கூறினான் பாண்டிய மன்னன்.

இதைக்கேட்ட மங்கையர்க்கரசியும் குலச்சிறையாரும் மனத்துக்குள் மகிழ்ந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் சம்பந்தரை அழைத்து வர ஏற்பாடு செய்தனர்.

சமணர்களுக்குப் பாண்டியனிடம் சம்பந்தரை மட்டும் தனியே அனுப்பவிருப்பமில்லை. 'சம்பந்தரால் மன்னன் மீண்டும் சைவசமயத்தாராக மாறி விடுவானோ?' என்று அவர்களுக்குப் பயம். ஆகவே, "சம்பந்தர் மட்டும் தங்களுக்கு வைத்தியம் செய்ய அனுமதிக்க வேண்டாம். தங்கள் உடலில் அவர் ஒரு பக்கம் வைத்தியம் செய்யட்டும். நாங்கள் ஒருபக்கம் வைத்தியம் செய்கிறோம்" என்று மன்னனிடம் கேட்டுக்கொண்டனர். மன்னன் என்ன பதில் சொல்வான்? "அப்படியே நடக்கட்டும்" என்று உத்தரவிட்டான்.

சமணர்கள் விருப்பப்படியே அவர்களுக்கு அரசனின் உடலில் இடப் பக்கத்தை விட்டுவிட்டு, வலப்பக்கமாகத் தாம் அமர்ந்து நோய் நீக்க முற்பட்டார் சம்பந்தர்.

சமண முனிவர்கள் மயில்பீலியை எடுத்துக் கொண்டு அரசனின் இடப்பக்கம் நோய் நீக்க முயன்று கொண்டிருந்தனர்.

சம்பந்தர் ஐந்தெழுத்து ஓதித் திருநீறு எடுத்து மன்னனின் வலப்பக்கத்தில் பூசித் தம்முடைய அருள்கரங்களினால் தடவினர். அடுத்த கணம் மன்னனின் வலப்பக்க வெப்பு நோய் நீங்கியது. என்ன முயன்றும் சமணர்களால் நோயை நீக்க முடியவில்லை.

வலப்பக்கத்து வெப்பமும் இடப்பக்கம் போய்ச் சேர்ந்து விட்டது. ஒருபக்கம் வெம்மையும் மறு பக்கம் தண்மையும் கண்ட மன்னன் சம்பந்தரையே மறு பக்கத்து நோயையும் நீக்க வேண்டினான். சம்பந்தரும் அவ்வாறே நீக்கினர்.

பின்னர் அனல் வாதம், புனல் வாதங்களால் சமணர்களை வென்றார் சம்பந்தர். புனல் வாதத்துக்கென்று எழுதிய பதிகத்தில் 'வேந்தனும் ஓங்குகவே' என்று அமைத்துப் பாடியதால் பாண்டியனின் கூனும் நிமிர்ந்தது.

இவ்வாறு வெப்ப நோயும் உடற்கூனும் நீங்கியதால் அரசன் திருந்தனிந்து மீண்டும் சைவனானான். குடிகளும் சைவசமயத்துக்கு மாறினர்.

மங்கையர்க்கரசியின் ஒழுக்கத்தால், உயர்ந்த பண்பால் பாண்டிய நாடு சமணர்கள் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டது. சைவம் தழைத்தோங்கும் தெய்வத் திருநாடாக மாறியது.

மங்கையர்க்கரசியாரின் இந்த அற்புத வாழ்க்கைச் சித்திரத்தைத்தான் ஓவியக் கலைஞர் வினு மனத்தைக் கவரும் வண்ண ஓவியமாக 59 – 62-ம் பக்கங்களில் வழங்கியிருக்கிறார்.



தீபாவளி வாழ்த்துக்கள்!
CAUVERY
SUPER
காவேரி சூபர் சோப்
மேட்டூர் சந்தன சோப்
காவேரி பார் சோப்
KAMADHENU
காமதேனு வனஸ்பதி
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. ~ சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்


MC-474


மங்கையர்க்கரசி
கதைச்
சித்திரம்
கல்கி தீபாவளி மலர் 1958






கல்கி தீபாவளி மலர் 1958


கவர்ச்சி
யுடன்
களிப்பை
அளிக்கும்...
ஜஸ்மின்
ரேயான் ஸில்க் துணிகள்
எம்பாஸ்டு காட்டன் மற்றும்
ஸாட்டின்
பிரிண்டட் ஷிபோஜி
பிக்மெண்ட் பேன்ஸி பிரிண்ட்
பளாக்டு டபேட்டா ஹபுதாய்
ப்ராக்கேடு மற்றும் வெல்வெட்டு
ஜஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிட்.,
பம்பாய்-2.

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்





சங்கரதாஸ் சுவாமிகள்



நாடகக் கலை இன்று நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. பிறமொழியாளரும் போற்றிப் புகழும் அளவுக்கு நாம் முன்னேறி வருகிறோம். இன்றைய நிலையை அடைவதற்கு எத்தனை ஆண்டுகள் சிரமப்பட்டோம்; எப்படிப்பட்ட கஷ்டங்களை யெல்லாம் தாங்க வேண்டி வந்தது என்பதை எல்லோரும் எண்ணிப் பார்ப்பதில்லை. சிறப்பாக இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்து நன்கறிந்து முன்னேற வேண்டிய கடமையும், உரிமையும் உடைய நாடக, திரைப்படக் கலைஞர்களில் சிலர் கூடத் திரும்பிப் பார்க்க மறந்து விடுகிறார்கள்.

தமிழ் நாடகக் கலையின் இன்றைய வளர்ச்சியிலே எத்தனையோ பெரியார்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள். நாடக இலக்கியம் படித்துமட்டும் வளரும் இலக்கியமல்ல. பார்த்தும் மகிழும் இலக்கியமாகும். எனவே, அச்சிலே வெளிவந்துள்ள நாடக நூல்களின் அளவைக் கொண்டு அதன் வளர்ச்சியைக் கணக்கிட முடியாது. பரம்பரை, பரம்பரையாக அரங்கிலே ஆடி வந்துள்ள நாடகங்களின் வளர்ச்சியையும் அளவுகோலாகக் கொள்ளவேண்டும். இந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் இந்தக் கலைக்குப் பணியாற்றிய எல்லோரிலும் சிறந்த இரு பெரியார்கள் நம் கண்முன்னே நிற்கிறார்கள். ஒருவர் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என நாடக உலகம் அறிந்தவர்களால் போற்றப்படும் தவத் திரு **சங்கரதாஸ் சுவாமிகள்**. மற்றொருவர் இன்றும் நம்மிடையே முதுபெரும் புலவராக வாழ்ந்து வரும் நாடகப் பேராசிரியர் **பம்மல் திரு சம்பந்த முதலியார்** அவர்களாவார்.



இவ்விரு பெரியார்களின் அரவணைப்பிலேதான் தமிழ் நாடக உலகம் வளர்ந்து வந்திருக்கிறது. இன்றைய உயர்ந்த நிலையையும் அடைந்திருக்கிறது. நாம் இங்கே பேசப் போவது காலஞ்சென்ற தவத் திரு சங்கரதாஸ் சுவாமிகளைப் பற்றிய செய்திகளாகும்.

அந்த நாளில் தமிழ் நாடகஉலகில் ''சுவாமிகள்'' என்றாலே அது சங்கரதாஸ் சுவாமிகள் ஒருவரைத்தான் குறிக்கும். தமிழ் நாடக மேடையை வளர்த்த தந்தை அவர். நடிகர்களுக்கெல்லாம் பேராசிரியர் அவர்.

1867-ம் ஆண்டில் ஆவணி மாதம் 22ஆம் நாள் தூத்துக்குடியிலே அவர் பிறந்தார். பதினாறாவது வயதிலேயே வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்கள் முதலியவற்றைப் பாட ஆரம்பித்து விட்டார். இருபத்து நான்காவது வயதில் நாடகத் துறையிலே பிரவேசித்தார். 1922-ம் ஆண்டு நவம்பர் மாதம் பதின்மூன்றும் நாள் புதுவையிலே சமாதி அடைந்தார்.

சென்ற இரண்டு ஆண்டுகளாகத் தமிழகத்தில் சுவாமிகளின் நினைவு நாள் சென்னை, புதுவை, மதுரை, திண்டுக்கல் முதலிய நகரங்களில் விரிவான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. சுவாமிகள் சமாதி அடைந்த இடத்தில் புதுவையில் அவரது நினைவாக ஒரு மண்டபமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அமைக்கப்பட்டது. தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் கட்டப் பெற்ற இந்த மண்டப நிர்மாணத்துக்கும், ஆண்டுதோறும் கலைமகன் நினைவு விழாவை நடத்துவதற்கும் புதுவைத் தோழர்களே முன்னின்று செயலாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சங்கரதாஸ் சுவாமிகள் நாற்பதுக்கு மேற்பட்ட மேடை நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவற்றில் சில நாடகங்கள் பாடல்களை மட்டும் கொண்டவை. இருபது நாடகங்களுக்கு மேல் பாடல்களும், வசனங்களுமாக எழுதியிருக்கிறார். 'வள்ளி திருமணம்', 'பவளக்கொடி' முதலிய நாடகங்களை இன்றும் நடித்து வரும் 'ஸ்பெஷல் நாடக' நடிகர்கள் இன்னும் சுவாமிகளின் பாடல்களையே பாடி வருகின்றனர். நாடகத்தைத் தொழிலாகக் கொண்டு நடித்து வரும் நடிக, நடிகையர்களில் சென்ற அறுபது ஆண்டுகளுக்கிடையே சுவாமிகளின் பாடல்களையோ, வசனங்களையோ உபயோகிக்காதவர்கள் எவருமில்லை என்றே சொல்லி விடலாம். தவத் திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றியருளிய நாடகங்கள்தாம் தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வம் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

டி. கே. ஷண்முகம்

தமிழ் நாடகக்கலை உயர வேண்டுமென்று சுவாமிகள் பல தோத்திரப் பாக்களிலே பாடியிருக்கிறார். அந்த நாளில் திங்கட்கிழமை தோறும் பஜனை நடைபெறுவதுண்டு. அப்போது சிறுவர்களாகிய நாங்கள் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து இந்தப் பாடல்களைக் குதூகலமாகப் பாடுவோம். ஒரு பாடலின் சில வரிகளைப் பாருங்கள் :

தேவரும் மகிழ்கின்ற
 செந்தமிழ் நாடகம்
சீர்கெட்டுப் போச்சுதம்மா
சித்த மெலிவாலே வாடுகின்றோம்
செம்மை செய்து தாராய் வேண்டி
 நின்றோம்

தினமும் புகழ்கின்றோம்
சேவித்து மகிழ்கின்றோம்
உன் - திருவடி மா மலரையலால்
ஒரு துணையே தருள் புரிவாய்—


இவ்வாறு எத்தனையோ பாடல்களில் கலைமகளைப் போற்றி நாடகக் கலை சீர்ப்படவேண்டும் என்ற கருத்தை வைத்து அற்புதமாகப் பாடி யிருக்கிறார் சுவாமிகள்.

எழுதியதை அடித்துவிட்டு, திருத்திஎழுதும் வழக்கம் அவரிடம் எப்போதும் இருந்ததில்லை. எப்போதாவது சிந்திக்க நேரும் சமயங்களில் கூட 'சிவமயம்', 'வேலு மயிலுந் துணை' என்று எழுதிக் கொண்டேதானிருப்பார். பிறகு விட்ட இடத்தைத் தொடர்ந்து பாடலைப் பூர்த்தி செய்வார். அவருடைய நாடகக் கையெழுத்துப் பிரதிகளில் நான் இந்த உண்மையைப் பார்த்திருக்கிறேன்.

பழம் பெரும் நடிகர்களான கல்யாணராமய்யர், ராமுடு ஐயர், சாமி நாயுடு நாடக சபைகள் முதல்



நானும் எனது சகோதரர்களும் பயிற்சி பெற்ற தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை வரை தமிழகத்திலிருந்த எல்லா நாடக சபைகளிலும் சுவாமிகளின் நாடகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவரது சமரச சன்மார்க்க நாடக சபையிலேதான் சங்கீத ஒளி விளக்காகத் திகழ்ந்த திரு எஸ்.ஜி. கிட்டப்பாவும் அவரது சகோதரர்களும் பயிற்சிபெற்றனர்.



புதுவையில் இருக்கும் சங்கரதாஸ் சுவாமிகள் சமாதி மண்டபம்

ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாமல் நாடகங்களை நடத்தி வந்த பெரிய நடிகர்களின் போக்கிலே வெறுப்புற்ற சுவாமிகள் கட்டுப்பாடுடைய சில சிறுவர் குழுக்களைத் தோற்றுவித்து வருங்கால நாடக வளர்ச்சிக்கு வழி வகுத்துக் கொடுத்து விட்டு இறுதி வரை பிரமச்சாரியாகவே யிருந்து, தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை புதுவையில் நாடகங்கள் நடித்துக் கொண்டிருந்தபோது தமது பூத வுடலை நீத்துப் புகழுடம்பெய்தினர்.

சமீபத்தில் நாடக இலக்கியத்தைப் பற்றி விமர்சித்த நண்பரொருவர் "சங்கரதாஸ் நாடகங்களில் இலக்கியச் சுவை யென்பது குதிரைக் கொம்பாகத்தான் இருந்தது" என்று பொருள்பட எழுதியிருக்கிறார். இவர் இளைஞர். முறையோடு நடைபெற்ற சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் எதையும் இவர் பார்த்திருக்க முடியாது. ஏதோ பழைய நாடகங்களெல்லாம் வெறும் கேலிக் கூத்தாக இருந்ததாக நாடக உலகம் தெரியாத இவருடைய எண்ணம்.

இலக்கியச் சுவை மலிந்த சுவாமிகளின் நாடகப் பாடல்களைப் போல் எழுத இன்று எவரும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவருடைய நாடக வசனங்களில் ஆங்காங்கு திருக்குறள், நாலடியார் முதலிய செந்தமிழ்க் கருவூலங்கள் சிதறிக் கிடக்கும். சுவாமிகள் தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நன்கு கற்றுணர்ந்தவரென்பது அவரது நாடகங்களிலே தெரியும். சதி அனுசூயா நாடகத்தில் கல்வியைப் பற்றிச் சொல்லும் ஒரு பாடலைப் பாருங்கள்......

தீயாலே வேகாது நீரால் நனையாது
 திருடர் கொள்ளலாகாது — தன்னைச்
சேர்ந்த சகோதரர் பங்கிடலாகாது
 சிந்தை மயங்காது

ஓயாமல் ஈந்தாலும் ஒங்கும் குறையாது
ஒருமையும் எழுமையும் உதவும் தவறாது
கல்வியை அல்லது நல்ல பயன் தர

 வல்லது சொல்ல வுண்டோ ?
 உய்வு முண்டோ—

எத்தனையோ பாடல்களையும் வசனங்களையும் இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இலக்கியச்சுவை இல்லையென்றால், அது சுவாமிகளின் குறையல்ல. அவர் நாடகங்களைப் பற்றி எழுதிய இளைஞரின் அறியாமையைக் குறிக்கும்.

சங்கரதாஸ் சுவாமிகள் எழுதியுள்ள நாடகங்கள் பெரும்பாலும் புராண இதிகாசக் கதைகள். அவை இன்று ஒரு சிலருக்குப் பிடிக்காதிருக்கலாம். பாடல்கள் நிறைந்த அந்த நாடகங்களை 'இரவல் குரல்' தேவைப்படும் இன்றைய நாடக உலகம் நடிக்க முடியாதிருக்கலாம். ஆனால் அவைதாம் தமிழ் நாடக மேடையைப்

பாதுகாத்துத் தந்தவை என்பதை நன்றியுணர்ந்த தமிழர்கள் மறந்துவிடக் கூடாது. அந்த நாடகங்கள் நமக்குப் போதிக்கும் பெருண்மைகளையும், அவற்றைப் பல ஆண்டுகளுக்கு முன்னே இயற்றியருளிய புலவர் பெருமானின் நாடகத் திறனையும் நல்லிசைப் புலமையையும் குறைவுபடுத்திப் பேசுதல் கூடாது.

ஒரே நாளிரவில் ஒரு நாடகம் முழுவதையும் எழுதி முடிக்கும் மகத்தான ஆற்றல் சுவாமிகளுக்கு இருந்தது. இது வெறும் புகழ்ச்சியன்று. நான் நேரில் அறிந்த உண்மை. அப்போது எனக்கு ஏழு வயது; என்றாலும் நன்றாக நினைவிருக்கிறது. தத்துவமீனலோசனி வித்துவ பால சபையில் நாங்கள் இருந்தோம். குழுவின் உரிமையாளர்களில் ஒருவர், "சுவாமி! சண்முகம் கதாநாயகனாக நடிப்பதற்கு ஏற்றபடி ஒரு நாடகம் எழுதவேண்டும்" என்று கூறினார்.

சுவாமிகள் அந்த உரிமையாளரைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தார். அடுத்த கணமே அவருடைய சிந்தனை செயல்பட ஆரம்பித்து விட்டது. உரிமையாளர் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தைகள் அவருடைய நாடக இதயத்தைத் தொட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அப்பொழுதிருந்தே அவர் வானத்தையும் பூமியையும் பார்த்துப் பார்த்துச் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்.

அன்று மாலையே சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்றார். 'அபிமன்யு சுந்தரி' அம்மானைப் பாடல் பிரதியொன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'அரிக்கன்' விளக்கை வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தார். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்த போது சுவாமிகள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவரது படுக்கையருகே அவருடைய கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. 'அபிமன்யு' நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப் பெற்றிருந்தது.


இந்தக் காலத்தில் ஒரு நாடகம் எழுதுவது என்றால் எத்தனை எத்தனை முன் ஏற்பாடுகள், ஆலோசனைகள், விவாதங்கள். வசனம் எழுதுவது ஒருவர், பாடல் இயற்றுவது வேறு ஒருவர். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இயற்றிய நாடகம் மேடையில் நடிப்பதற்குப் பொருத்தமாக இருக்குமா என்பது வேறு விஷயம்.

திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஒரே நாள் இரவில் நூற்றுக்கணக்கான பாடல்கள் உரையாடல்களுடன் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதியிருந்த அந்த நாடகத்தைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டார்கள். ஒரு நாடகத்தை நகல் எடுப்பதற்குக்கூட ஒரு நாள் இரவில் முடியாது. நான்கு மணி நேரம் நடைபெறக் கூடிய ஒரு நாடகத்தைக் கற்பனையாகவே ஒரு இரவுக்குள் முடித்து விட்டார் சுவாமிகள். அவரை முருகனருள் பெற்ற அருட்பெரும் புலவர் என்று எல்லோரும் பாராட்டினார்கள். சுமார் முப்பத்தொரு ஆண்டுகள் நாடகப் பணியிலேயே சுவாமிகள் வாழ்க்கையைக் கழித்திருக்கிறார். இடையே சில காலம் வாழ்வில் வெறுப்புற்றுத் துறவிக் கோலத்துடன் அவர் ஸ்தலயாத்திரை செய்த போது எல்லாரும் அவரை சுவாமிகள் என்று குறிப்பிட்டார்கள். அப்பெயரே அதன் பிறகு அவருக்கு நிரந்தரமாகி விட்டது.

தமிழ் நாடக உலகுக்கு அரும் பணி புரிந்த நமது பெருமைக்குரிய முன்னோர்களை நாம் என்றும் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். முந்தையோரைப் போற்றுவதன் மூலமே நாமும், நாடக உலகமும் முன்னேற முடியும் என்பது தமிழ் உலகம் கண்ட உண்மை.

தமிழ் நாடக முதல்வர் தவத்திரு 'சங்கரதாஸ் சுவாமிகளைத் தமிழ் உலகம் நன்றியுடன் போற்றுமாக.





சாத்தான் மாளிகை

பரதன்

ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்துக்கு பிரமோஷனு, ஸஸ்பென்ஷனு என்பது சாத்தான் மாளிகை மர்மத்தில் தொக்கி நின்றது.

அதெப்படி, ஏன், என்பதைத் துப்பறிந்து பார்ப்பதற்கு, சாத்தான் மாளிகைக்குப் போக வேண்டும். ஆனால் அந்த உப்பரிகைக்குப் போய்த் துப்பறிந்து ஆராய்ந்து பார்ப்பதற்கு ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்துக்கே தைரியமில்லை என்றால் நமக்கு எங்கே அந்தத் துணிவு வரப்போகிறது?


இந்தச் சம்பவம் சாத்தான் மாளிகையின் முன்புறம் ஒருநாள் திடீரென்று ஆரம்பித்தது. நாளுக்கு நாள் விருத்தியாகி வந்து, அந்தத் தெருவே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு தெருவில் ஒரு வாரமாக இவ்வளவு கலாட்டா நடந்து கொண்டிருந்தால், சட்டமும் சட்டத்தின் அங்கமும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? எட்டாவது நாளாவது 'ஏ ஒன்' போலீஸ் ஸ்டேஷனில் அந்தத் தெருவில் போகிறவரை யாவது கூப்பிட்டு, ஒரு 'கம்ப்ளெயிண்ட்' தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருக்குமா? போலீஸ் டயரியில் கம்ப்ளெயிண்ட் தாக்கல் ஆகிவிட்டால் அப்புறம் கேட்பானேன்! 'சந்தேகிக்கும் கட்டம் கட்டாயம் வந்தே தீர வேண்டும். சந்தேகம் ஒரு மாதிரி ஸ்திரமானதும் புலன் விசாரணைப் படலம் வராமல் எப்படி இருக்கும்? புலன் விசாரணை கட்டத்தில் தான் நமது ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம் பிரசன்னமாகிறார். ஏனென்றால் அது அவர் 'டூட்டி'களில் ஒன்று. ஸ. இ. சம்பூர்ணப் பிரவேசம் ஆனதும் கதையின் மர்மம் முற்றுகிறது; தெருவில் கூட்டம் அதிகரிக்கிறது. தெருவில் போக்குவரத்துச் சாதனம் தடைப்படுகிறது. ஜனங்கள் அதி ஆவலோடு சாத்தான் மாளிகை மர்மத்தை, அக்கறையுடன் கன்றிக் கவனிப்பதுடன், சாத்தான் மாளிகைக்கு என்றுமில்லாத ஒரு பிரசித்தியளிக்கிறார்கள். அவர்கள் கற்பனாசக்தி கரை புரண்டு தெருவெல்லாம் வெள்ளமாக ஓடுகிறது. அவரவர்கள் கற்பனாசக்திக்குத் தகுந்தவாறெல்லாம் ஆளுக்கொரு கதையைக் கட்டி, புனைந்து காற்றில் பறக்க விடுகிறார்கள்.

''சாத்தான் மாளிகைன்னு எந்த மவராசன் பேரு வச்சானோ! அப்படியே வெளங்காமே போயிடுச்சு'' என்பார் ஒரு வேதாந்தி.

''இது தெரியாதா ஐயா உங்களுக்கு! அந்த ஊட்டுலே பழைய காலத்திலே குட்டிசாத்தான் பூசை எல்லாம் பலமா நடந்து வந்திச்சி! ஒருநாளு அந்தக் குட்டிசாத்தான் இன்னு சொல்லிருக்குது. 'ஐயா! ஆளுகார ஆசாமி! நீ நமக்குப் பூஜை கீஜை போடறது இருக்கட்டும்! எனக்கு இப்ப ஒரே தாவமா கீது! இன்னு வொல்றே' அப்டின்னு கேட்டிக்கிது!

''அந்த மன்னன் பாவம், காப்ராகார ஆளு! பத்தி ரெம்ப ஜாஸ்தி. அவருக்குப் புள்ளே இல்லேன்னு குட்டிசாத்தான் பூசை போட்டுக்கினு வர்ரூரு. அவரு கேட்டாராம், 'தாவம்னு இன்னு ஒணும்? ஜோடா, கிம்பிலீஸ் கலரு ஐஸ் போட்டுக் கொணுரவா? இல்லாங்காட்டி இளநீரு, மோரு பாணவம் கொணுரட்டுமான்னு கேட்டிருக்காரு! அது இன்னு சொல்லிச்சாம்! பத்தா! உன் இதயத்திலே ஓடற ரத்தம் எனக்குப் போதுமப்பா! அதைக் குடிச்சி என் தாவத்தைத் தீர்த்துக்கிறேன், அப்டீன்னுச்சாம்!''

''அடப் பாவிப்பய மவனுதே! பாரேன். அது நெஞ்சளுத்தம்! ஊம்!''



"அப்பாலே இன்னு? அந்த அப்பாவி ஆனு பாவம், ஒரே பக்தி பரவசத்திலே, இளநீருசீவற அருவாளே எடுத்தான்! ஒரே வீவு! பளும்...அதும்''

"எதை? குட்டிச்சாத்தானேயா?''

"ஹாம்! அதை வெஞ்சுருத்தா நீயும் நானும் ஏன் ஐயா பைத்தம் கணக்கா இங்கே அண்ணாந்து பார்த்து நின்னுக் கினுகிரோம்! அந்தப் பாவி மன்னன் தன் கழுத்தையே ஒரே வீவா வீவி எடுத்துக்குட்டினாத்தான் காலடியிலே காணிக்கையா வைச்சப்புட்டுத் தலையில்லா முண்டத்தைக் குமிஞ்சுகினு 'ஏ குட்டிசாத்தானே குடி'ன்னாரு!''

"தலை! தலை! மனுசனுக்கு என்ன தவிரியம் இருக்கணும்!''

"இதெல்லாம் இப்ப நடந்ததா? யாரு பார்த்தாங்களாம்?'' என்ற ஒருசந்தேகக் குரல் கிளம்பியது.

"ஆம்! பார்க்கிறங்க குந்திக்கினு கழுத்தை வீவிக்கறதை'' என்றார் ஒரு அவநம்பி.

"இப்போ நடந்ததில்லேயா! அதிருக்கும் அம்பது வர்சம்! அதுக்கப்பாலே அந்த ஊட்டுலே நடக்காத ஓமாலாரம் இல்லே'' என்றார் முதல் மர்மவீரர்.

"ஆம்! அதான் அங்கே மூனு கொலே, நாலு தற்கொலே நடந்திருக்குதாமே!''

"அல்லாம் எதுனாலே தெரியுமா! அந்த ஊட்டு நடுமத்தியிலே ஒரு கிணறு இருக்குதாம்......''

"ஊட்டுக்கு நடுவிலே கிணறு? சரிதான்! கொலே, தற்கொலே எல்லாம் ஏன் நடக்காதாம்!''

இப்படியாகத் தானே சாத்தான் மாளிகைப் புராணம் வாய்க்கு வாய் விக்கிரமாதித்தன் கதைபோல் வளர்ந்து ஒரு பெரிய புராணமாகி விட்டது. சுருங்கச் சொன்னால் அந்த ஏழு நாட்களில் சாத்தான் மாளிகையில் நடந்த கொலைகள் சுமார் எழுநூறு இருக்கும்; தற்கொலைகள் நானூறு; அங்கச்சேதங்கள் ஆயிரம்; இந்திய குற்றச் சட்டப் புத்தகத்தில் அடிபடாத குற்ற வகைகள் எண்ணிறந்தவை. எல்லாம் வாய்ச் சொல்லாலேயே!

இப்படி நாளொரு வண்ணமும், ஆளொரு கதையுமாக வளர்ந்தன!

சாத்தான் மாளிகை மேல் மாடி அறையில் இரவுதோறும் விளக்குகள் எரிந்து எரிந்து அவிந்தன. அமானுஷ்யக் கூச்சல்கள் கிளம்பின. ஆனால் வீடோ பூட்டப்பட்டிருந்தது. ஸப்இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்துக்கு இந்த மர்மத்தைக் கண்டு பிடித்துத் தெளிவுபடுத்தும் பொறுப்பு ஏற்பட்டது. ஸ. இ. சம்பூர்ணம் மெத்த சாதுவான மனிதர். கையும் களவுமாகப் பிடித்த திருடனைக் கூட வேறு யாரோ போல், அடிக்க மாட்டார்; உதைக்க மாட்டார்; தோலை உரிக்க மாட்டார்; அதட்டிக்கூடக் கேட்கமாட்டார்; தெய்வ பக்தியுடையவர்; பயந்த சுபாவம். ஆனால் கடமை உணர்ச்சி வந்துவிட்டால் அவர் அச்சத்தையும் பயத்தையும் மறந்து பல்லைக் கடித்து, கண்ணை மூடிக்கொண்டு வேலையை எப்படியோ செய்து விடுவார். நேர்மையாக வேலை பார்ப்பவராதலால் தம் பெண்கள் இருவருக்கும் கலியாணம் செய்வதற்குள் பத்தாயிரம் ரூபாய் கடன்பட்டுத் தவித்தார். இருந்தாலும் வேறு வழிகளில் சம்பாதிக்கத் துணிந்தவரல்ல.



சீக்கிரம் ப்ரமோஷன் கிடைக்க, ஸப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைக்காதா என்று பழனி ஆண்டவனை வேண்டினார். இப்போது அதற்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது.

வந்தார் ஸப் இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம், எட்டு ஏழுமலை இன்னும் நாலைந்து கான்ஸ்டேபிள்களுடன் அரிவாமணைத் தெரு சாத்தான் மாளிகைக்கு.

"என்ன, இங்கே?'' என்று முதலில் கூடியிருந்த தெரு மகாஜனங்களை விசாரித்தார். யுத்தகளத்தில் எதிரி விமானங்களைக் குறி பார்க்கும் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் போல், ஆள் காட்டி விரல்கள் மேல் நோக்கிச் சுட்டிக் காட்டின. அண்ணாந்து பார்த்தார் ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம்.

ஆம்! அதென்ன! பூட்டின வீட்டு மாடியில் விளக்கு ஏற்றி ஏற்றி அணைகிறதே! ஆ! அதோ! என்ன நிழல் தெரிகிறது, கண்ணாடி ஜன்னலில். ஏதோ தொங்கிக் கொண்டிருக்கிறது! அது மெல்ல ஆடுகிறது! என்ன! என்ன! ஒரு மனித உருவமா? உயிர் இருக்கிறதா? சவமா தொங்குகிறது? நிழலிலிருந்து எப்படி கணிக்க முடியும். ஆ! அதென்ன கூக்குரல் — பல குரல்கள் — பிசாசா? பேயா? பழனி ஆண்டவா! நீதான் காக்க வேண்டும் — இப்படியெல்லாம் அவர் மனத்தில் தோன்றியது.



பக்கத்தில் விசாரித்தார்:

"யார் அந்தப் பெரிய வீட்டில் குடியிருந்தவர்கள்?''

சில வருஷங்களுக்கு முன் யார் யாரோ குடிவருவார்கள், மாயமாகப் போய் விடுவார்கள்! ஒருவரும் நிலைத்ததில்லை. வீட்டுக்குச் சொந்தக்காரர் எங்கேயோ அக்கரைச் சீமையில் வியாபாரம். இங்கு வருவதேயில்லை. யாரோ ஏஜெண்டு வழியாகத்தான் வாடகைக்கு விடுவது என்று கேள்வி! யார் கண்டார்கள்? அந்த வீடு பேய் பிசாசு நடமாடும் வீடு. யாரும் அருகே போவதில்லை. இந்தத் தகவல் தான் அந்தத் தெருவாசிகளிடம் கிடைத்தது.

கடைசியாக யாரோ வடக்கத்தியார் —ஒரு ஆணும், பெண்ணும் வந்ததாகத் தெரிந்தது. அவர்கள் அந்த வீட்டில் இருக்கும்போது, மேல் மாடியில்தான் வாசம். யார் யாரோ வருவார்கள், போவார்கள். சாமான்கள் வந்து இறங்கும், போகும். இரவில் பல சமயங்களில் ஒரே கூச்சல் — ஓலமிடுவது போல், இடி இடிப்பது போல், கடல் அலை போல், சீட்டி அடிப்பதுபோல் சத்தங்கள் வரும். அக்கம் பக்கத்தில் யாரும் என்ன, ஏது என்று கேட்கத் துணிவதில்லை.

சில நாட்களுக்கு முந்தித்தான் அந்த வடக்கத்தி ஆசாமி வீட்டைப் பூட்டிக் கொண்டு போனவர் திரும்பி வரவில்லை. அவர் எப்போது போனார், எப்படிப் போனார் என்று யாராலும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. ஒருவர் அவர் தனியாகத்தான் போனார் என்றார்கள். அவருடன் வந்த பெண்மணி எங்கு போனாள் என்று சொல்ல முடியவில்லை. அதுதான் போற்றக்குரிய நம் தனி மரபு. பிறர் விவகாரத்தில் தலையிடாதது.

"ஓகோ! சரிதான்! இதில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருக்கிறாளா? சரிதான்! அவள் உயிருடன் இருக்கிறாளா? அந்த ஜன்னல் நிழல்? புடவைமாதிரி நிழல் தெரிகிறதே. ஒரு வேளை......'' இப்படியெல்லாம் ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்தின் மனம் கலங்கியது.

கடைசியில் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ஒரு கையில் தைரியத்தையும் மற்றொரு கையில் கைத்துப்பாக்கியையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "வாருங்கள்'' என்று தங்கள் பரிவாரங்களுக்கு உத்தரவிட்டார். சாத்தான் மாளிகை வாசற் கதவை அடைந்தார். "உடை பூட்டை!'' என்றார்.

எட்டு ஏழுமலை பூட்டை உடைத்தார். டார்ச் லைட் வெளிச்சத்தில் உள்ளே புகுந்தார்கள். கூட்டத்தை உள்ளே விடாமல் வாசலில் இரண்டு கான்ஸ்டேபிள்கள் பாரா நின்றார்கள். டார்ச் வெளிச்சத்தில் மாடிப்படி ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு போனார்கள். பத்திரமாகக் கையைச் சுவரிலோ, மாடிப்படியிலோ வைக்காமல் சென்றார்கள்.

கடைசிப் படி ஏறியதும் டார்ச்சை நாலாபக்கமும் திருப்பினார் ஸ. இ.

ஆ! இதென்ன! ரத்தக்கறை! ஆம், ரத்தக் கறைச் சொட்டுகள்......கொலை! கொலையுண்ட ஆசாமி அப்படியே காயத்துடன் தள்ளாடி நடந்திருக்க வேண்டும்.
"ஜாக்கிரதை! ஒன்றையும் மிதிக்காமல், தொடாமல் வாருங்கள்!'' என்று


தீப ஒளி வீசும்
தீபாவளிப்
பெருநாளில்
வாசகர்களுக்கு
எமது
அன்பு கனிந்த
வாழ்த்துக்கள்
கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்
கோயமுத்தூர்
ஏ எஸ். மேனன்

உத்தரவிட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர். "மர்மத்தை அம்பலமாக்கப் போகிறேம்! அடுத்தபடி இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம்..."—இந்த எண்ணம், அவருக்கு உற்சாகத்தையும் மனோ பலத்தையும் கொடுத்தது.

ரத்தக்கறைச் சுவடுகளைத் தொடர்ந்து அடுத்த அறைக்குப் போனார். இரத்தக் கறையைத் தொடர்ந்தார், தொடர்ந்தார், தொடர்ந்தே மேலே சென்றார். ரேடியோப் பெட்டி ஒன்றின் பக்கத்தில் அந்த அடையாளங்கள் முடிவுற்றன.

'ஆ! இந்த அறைதான் தெருவிலிருந்து தெரியும் அறை. இங்கிருந்துதான் கூச்சல்கள் வந்திருக்கின்றன. நிச்சயம் தான்! கொலைதான். அதோ! அந்த ஜன்னல்.....??......, ஒரு கோட்டும் கால்சராயும், அந்த ஜன்னல் பக்கத்தில் மாட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. பக்கத்தில் கொடியிலிருந்து ஒரு புடவை தொங்குகிறது ... சரிதான்! கொலை செய்த அவசரத்தில் இதை விட்டு விட்டுப் போய் விட்டான் மனிதன். சரியான துப்புகள்! சரியாக மாட்டிக் கொண்டான்!'

சுவரெல்லாம் தட்டிப் பார்த்தார். பூமியைத் தட்டிப் பார்த்தார்.



கட்டில் அடியிலெல்லாம் பார்த்தார். ரத்ன கம்பள விரிப்பைச் சுருட்டி எடுத்துப் பார்த்தார். 'அட, இதென்ன! கட்டிலின் அடியில், கட்டில் கால் பதிந்த இடத்தில் ஒரு சிறிய துவாரம்?' இரண்டு விரல்களை விட்டுத் தூக்கினார். அப்படியே ஒரு மரப் பலகை பெயர்ந்தது.

ஆச்சரியம்! உள்ளே பொந்து! அந்த அறைத் தரையையும் ஊடுருவிச் சென்றது. உள்ளே ஒரு பக்கம் ஒரே ரூபாய் நோட்டுகள்! மற்றொரு பொந்தில் வைரக் கற்கள், சிவப்பு, நீலக் கற்கள், வைடூரியங்கள். மற்றொரு பக்கம் சிறிய தங்கக் கட்டிகள்! ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்தின் தலை சுற்றியது. இது உண்மையா? கனவா? நனவா? அல்லது ஸினிமாவா?

ஐயோ! அந்த அறை அப்படியே சுழலுகிறதே! அந்த ஜன்னல்......சவம்......குரல்கள்......? தொப்பென்று சத்தம் கேட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்தை எட்டு எழுமலை, விஷ்ணுபகவானை ஆதிசேஷன் தாங்குவது போல் தாங்கிக் கொண்டார்.

டெலிபோனில் சங்கதி பறந்தது. இன்ஸ்பெக்டர் இஞ்சிக் கண்ணு, சுப்ரண்டு சுப்பண்ணு எல்லோரும் விரைந்தோடி வந்தார்கள்.

போலீஸ் வண்டி, ஆம்புலன்ஸ் வண்டி எல்லாம் அரிவாமணைத் தெருவில் சாத்தான் மாளிகை வாசலில் வந்துசேர்ந்தன.

தெருவில் கூடியிருந்த கூட்டம் அதிகரித்தது. தெரு முழுதும் நிரம்பிவிட்டது. "அதான் ஐயா! ஜன்னலிலே தொங்கிகிட்டு இருந்துச்சே, பொம்பிளே—படுபாவி பொம்பளையைக் கொலை செஞ்சிருக்கான், ஐயா!"

"அட, பொம்பளே இல்லே ஐயா! இனுசுபெக்டர், ஐயா!"

"அட, போய்யா! குட்டிசாத்தான் இஞ்சிபெட்டரையே அடிச்சுப் போட்டுடுச்சாம்! ஏன் ஐயா இவுங்க சும்மா இல்லாமே! இன்னுதான் போலீசா இருக்கட்டும்! குட்டிசாத்தான்கிட்ட அவங்க பப்பு வேவுமா?"

** ** **

சில நாட்கள் கழித்து ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம் ஆஸ்பத்திரியில் கண் திறந்தார். பக்கத்தில் இன்ஸ்பெக்டர் இஞ்சிக்கண்ணு நின்று கொண்டிருந்தார். அவர் கட்டிலருகே வந்த சுப்ரண்டு சுப்பண்ணு, "கங்கிராஜுலேஷன்ஸ் இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம்!" என்றார். சம்பூர்ணம் கண்ணைக் கசக்கிக் கொண்டார்; தம்மையே கிள்ளிக்கொண்டார். அவருக்குத் தாம் கொலை செய்யப்படவில்லை என்று தெளிவாயிற்று. தாம் உயிருடன் இருப்பதும் ஊர்ஜிதமாயிற்று.

"சம்பூர்ணம்! உங்களால்தான் அந்த ஆல்இண்டியா 'கேஸ்' பிடிபட்டது. கள்ள நோட்டுகள், போலித் தங்கம், நகைக் கற்கள் இவற்றில் வியாபாரம் அந்த 'கேஸ்'ருக்கு. இதில் ஈடுபட்டிருந்த ஒரு பட்டாணியன், ஒரு பஞ்சாபிப்பெண்மணி, நம்ம ஊர் கேடி இரண்டு பேர்கள் எல்லாரும் உம்முடைய சாமர்த்தியத்தால் அகப்பட்டு விட்டார்கள். உமக்கு முன்னமேயே வரவேண்டிய இன்ஸ்பெக்டர் பதவி இன்றுதான் கெஜட் ஆகியிருக்கிறது!" என்றார் சுப்பண்ணு சிரித்துக் கொண்டு.

"தாங்க்ஸ்! தாங்க்ஸ்! உங்களுக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சந்தேகம். அந்தச் சாத்தான் மாளிகையில் நடந்த கொலை...?"

"கொலையுமில்லே, ஒன்றுமில்லே" என்றார் சுப்பண்ணு.

"அந்த ரத்தக் கறைகள்? கூச்சல்கள்?" என்று மிகுந்த சந்தேகத்துடன் கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம்.

"அதுவா?...அது மனித ரத்தம் அல்ல. எலி ரத்தம்! அந்த வீட்டில் மனிதர்கள் இல்லாதபோது எலிகள் சந்ததி சந்ததியாக வளர்ந்து கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தன. இந்த எலிகள் எங்கு பார்த்தாலும் கேட்பாரற்று ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கும் போது ரேடியோப் பெட்டியின் மேலும் நடமாடியிருக்கின்றன. இந்த வீட்டில் கடைசியாக இருந்த அந்த வடக்கத்தியான் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தவன் போலீஸ் வருவதறிந்து காபராவில் ஒரு நாள் அப்படியே அதை அணைக்காமல் ஓடி விட்டான். எலிகள் திருப்பும் விசை மீது ஓடியாட, நல்ல நாளிலேயே பலவித சப்த ஜாலங்கள் செய்யும் ரேடியோப் பெட்டியிலிருந்து இன்னும் கோரமான சத்தங்கள் கிளம்பின. அதைத்தான் ஜனங்கள் பேய் பிசாசு என்று எண்ணி மிரண்டார்கள்."

"விளக்கு அணைந்து அணைந்துப் போடப்பட்டது?"

"அதில் ஒரு 'லூஸ் காண்டாக்ட்'—கம்பியில் எங்கோ கொஞ்சம் தொடர்பு சற்று விட்டிருந்தது. அதனால் அப்படி விளக்கு அணைந்து அணைந்து எரிந்தது.

"ரத்தக்கறைதான் எலி ரத்தம் என்றேனே. அங்கேயிருந்த பூனை வேட்டையாடி எலியை ரத்தத்துடன் இழுத்துப் போயிருக்கிறது.

"பட்டாணியன் நிஜார், பஞ்சாபிப் பெண்ணின் புடவை நிழல்கள் கண்ணாடி மின்னலில் உயிரற்ற மனித உருவம் தொங்குவது போல் கீழே இருப்பவர் கண்ணுக்குத் தெரிந்தது. சாத்தான்



மாளிகை மர்மத்தை நீர்தானே வெளிப்படுத்தினீர், இன்ஸ்பெக்டர் சம்பூர்ணம்!" என்று சுப்ரண்டு சுப்பண்ணு அவர் கையைக் குலுக்கித் தோளைத் தட்டிக் கொடுத்து விட்டுப் போனார். இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்தின் உள்ளத்தில் அழுங்கிக் கிடந்த மர்மங்களெல்லாம் இப்பொழுது வெட்ட வெளிச்சமாயின.

அவர் மனம் சம்பூர்ண சந்தோஷமடைந்தது. வரப்போகும் தீபாவளிக்குச் சம்பூர்ணம் தம் மனைவி பல வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருந்த பட்டாக பார்டர், மத்தாப்பு பேட் ஜரிகைப் பட்டுப்புடவையை அவள் எதிர்பாராதபடி, ஆச்சரியப்படும் வண்ணம் கொடுக்கத் திட்டம் போட்டார்.

அந்தத் தீபாவளியை அவர்கள் எப்படி உல்லாசமாகக் கழிப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து கொண்டே, இன்ஸ்பெக்டர் சம்பூர்ணத்துக்கு அடுத்த பிரமோஷன் டெபுடி சுபரண்டாக இன்றொரு (கொலையில்லாத) சாத்தான் தோட்ட மர்மம் கிடைக்கட்டும் என்று மனப்பூர்வமாக ஆசி கூறுவோம்.


உங்கள்
புன்னகையில்
ஒளிவீசச்
செய்யுங்கள்
அதற்கு ஏற்றது
போர்ஹான்ஸ்
டூத்பேஸ்ட்
ஜ்யாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ., பிரைவேட் லிட்.


இந்த மகிழ்ச்சி நிறைந்த
நன்னாட்களில்
மர்பி ரேடியோ
உங்கள் இல்லங்களில்
குதூகலத்தை
அளிக்கட்டும்!
இலவசம்! உங்களுடைய புது மர்பி ரேடியோவுடன், உங்கள் கடைக்காரர் 12½" × 14½" அளவில் உங்களுக்குப் பிடித்தமானதும், உலகத்திலேயே மிக அழகான குழந்தைகளில் ஒன்றான ஒரு மர்பி குழந்தையின் வண்ணப் படத்தையும் கொடுப்பார்.
மலர்களாலும் விளக்கொளிகளாலும் அலங்கரிக்கப்பட்டு வீடுகளிலெல்லாம் குதூகலத்துடன் கொண்டாடி மகிழும் புனிதமான பண்டிகை இன்று. இம்மாதிரி பண்டிகை நாட்களில் 'மர்பி' லக்ஷக்கணக்கான மக்களுக்கு இன்பம் அளிக்கும் இன்றியமையாத வஸ்து. உங்கள் குடும்பத்துக்கு ஒரு மர்பி ரேடியோ வாங்கி வையுங்கள். நமது பண்டிகைகளின் விசேஷ நிகழ்ச்சிகளும் கொண்டாட்டங்களும் உங்கள் வீட்டில் நிரம்பி இருக்கட்டும். வீட்டில் பல ஆண்டுகளுக்கு அலங்காரமாக மர்பி ரேடியோ ஒலித்துக் கொண்டு விளங்கும்!
பலரும் விரும்புவது!
12 சிறந்த மாடல்கள்
ஏஸி, ஏஸி/டிஸி, டிரை பாட்டரி
ரூ. 215லிருந்து ரூ. 575 வரை
வரிகள் தனி.
murphy radio
தென் இந்தியாவுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்.
முகமது இப்ராஹிம் & கோ., (பிரைவேட்) லிமிடெட்
சென்னை - பெங்களூர் - ஹைதராபாத்


வைத்திய நிபுணர்களுக்கு ஓய்வு கிடைத்தால் அதை எப்படிக் கழிப்பார்கள்? என்று ஒரு நோயாளி கற்பனை செய்கிறார்.
குழந்தை வைத்தியர்
பாலர் புத்தகம்
HUMAN ANATOMY
இருதய நிபுணர்
காது வைத்தியர்
கர்நாடக சங்கீதம்
கண் வைத்தியர்
கண்ணப்ப நாயனார் சரித்திரம்
சர்ஜன்
ரணகளம்
சரித்திர நாவல்
வயிற்று நோய் வைத்தியர்
சமையல் புத்தகம்
மிருக வைத்தியர்
கிஷ்கிந்தா காண்டம்
நோயாளி



கற்பனை கற்பிக்கும் கருணை

அகலிகை சாபம் பெற்றதும், அதிலிருந்து அவள் விமோசனம் பெற்றதும் உலகறிந்த கதை. கோதமன் மனைவியான அகலிகையை இந்திரன் விரும்புகிறான். அதற்காகக் கோதமனைப் பர்ணசாலையிலிருந்து அகற்றி விட்டு, கோதமன் உருவிலேயே அகலிகையை நாடி வருகிறான் இந்திரன். கோதமனே வந்திருக்கிறான் என அகலிகை அவனை வரவேற்கிறாள். அவன் விருப்பத்துக்கு இணங்கி நிறை அழிகிறாள். இடைபுகுந்த உண்மைக் கோதமன் இந்திரனையும் அகலிகையையும் சபிக்கிறான். அகலிகை பெறுகின்ற சாபம், அவள் கல்லாக என்று. பின்னர் ராமனது பாததூளியால் சாபம் நீங்குகிறாள் அவள்.


அகலிகையைக் 'கல்லாகப் போ' என்று சாபம் கொடுப்பானேன்? இதைப்பற்றி அகலிகையே எண்ணுகிறாள். அகலிகை செய்த தவறு அவள் மனதார அறிந்து செய்த தவறு அல்ல. பிறன் ஒருவனது வஞ்சனையால், சூழ்வினை வசத்தால், அறியாது செய்த பிழை. என்றாலும் பிழை பிழைதானே. பிழை செய்தவர் தண்டனை பெற வேண்டியதும் நியாயந்தானே. இதை எண்ணுகிறாள் கோதமன். அகலிகையைத் திரும்பவும் பெண்ணாகவே பிற என்று சாபமிட்டிருந்தால் பின்னரும் ஆடவரது வஞ்சனைக்கு 'இலக்காகலாம். அதனாலோ, அல்லது 'வேறு காரணங்களாலோ எவ்வளவோ துயருக்கும் ஆளாகலாம். பெண்ணென்று பிறந்து விட்டால் பிழையும்தான் உடன்பிறக்கிறதே. ஏதோ ஒரு மிருகமாக, ஒரு பறவையாக, இல்லை ஒரு மரமாகப் போக என்று சாபம் கொடுத்திருந்தாலும் '(அப்படி 'எல்லாம் சாபம் கொடுப்பதுதானே முனிவர்களது வழக்கம்) அந்தச் சாபத்தை அனுபவிக்கும் காலம் முழுவதும் உணர்வுடையவர்களாக வாழ்ந்து, வேடுவர்களாலும், மற்றவர்களாலுமே துயர் உறுத்தப்பட்டு வாழ வேண்டியிருக்கலாம். அறிந்து செய்த பிழைக்கு இப்படியெல்லாம் தண்டனை பெறலாம். அறியாது செய்த பிழைக்கு—ஆம்! உணர்வே இல்லாத ஒரு பொருளாகவும், ஒருவராலும் துன்புறுத்தப்பட முடியாத—இல்லை, துன்புறுத்தினாலும் அந்தத் துன்பத்தை உணரும் சக்தி அற்ற பொருளாகப் போக என்று சபிப்பதுதானே முறை. அதனால்தானே மிக்க கருணையோடு, கோதமன் அகலிகையை உணர்வே இல்லாத, துன்பமே பெற இயலாத கல்லாக என்று சபித்திருக்கிறான். இத்தனையையும் கோதமன் எண்ணினானோ இல்லையோ, இப்படியெல்லாம் கருதித்தான் கருணையோடு தன்னைக் கல்லாகும்படி சபித்திருக்கிறான் என்று நினைக்கிறாள் நெஞ்சில் பிழைப்பில்லாத அகலிகை. இந்த அகலிகைகூட இந்தக் கருணையை, ஆம்! நீதி வழங்குவதிலும் கருணையோடு வழங்கும் நியதியை எண்ணுகிறாளோ என்னவோ? அவள் எண்ணியதாகக் கவிஞன் எண்ணுகிறான். பாடுகிறான் :

> எம்பெருமான் பேருள்தான்
> என்னென்கேன்—தாங்கவொணுத்
> துன்புறுவேன் துன்னின்
> உணர்வென்று துன்புறாக்
> கல்லாக என்று கருணை வெள்ளத்து
> ஆழ்த்தினன் என்
> பொல்லாத குற்றம் பொறுத்து

என்று கோதமனது பேரருளை, அவன் காட்டிய கருணையை அகலிகை உணர்ந்து உணர்ந்து மகிழ்வதாகக் கவிஞன் கற்பனை பண்ணுகிறான். கவிஞர் திருநெல்வேலி மாவட்டத்திலே வெள்ளகால் என்ற ஊரிலே பிறந்து தமிழுக்கு அரிய தொண்டுகளெல்லாம் செய்து பல வருஷங்களுக்கு முன்னமேயே அமரரான வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்தான். காதலன் உள்ளத்தில் இத்தனை கருணை இருந்ததோ இல்லையோ, கவிஞன் உள்ளத்திலே கருணை இருக்கிறது. கவிஞன் உள்ளத்தில் இத்தனை கருணையை நிறைத்து விடுகிறான் கருணாமூர்த்தியான கடவுள்.

★

இது அறியாது செய்த பிழைக்குத் தண்டனை கொடுப்பதில் கடவுள் காட்டும் கருணை. அறிந்தே பிழை செய்கின்றவர்களிடமும் கருணை காட்டுகிறான் அவன். அவனை விட்டு விலகி விலகி ஓடி, அவன் தவறு என்று ஒதுக்கி வைத்த காரியங்களையே வாழ்நாள் முழுவதும் செய்துவரும் மனிதனை, அவன் தனக்கு ஒவ்வாதவன் என்று ஒதுக்கிவிட்டால் தவறு ஒன்றும் இல்லையே. கடவுள், அப்படித்தான் அறவழியினின்றும் நீங்குபவர்களை, அவனை நினையாதவர்களைப் பற்றி நினைப்பதே இல்லையா? இல்லை. இத்தகைய மக்களையும் அவர்கள் தீமைகள் செய்து விட்டாலும் அவன் நினைக்கிறான். அவர்களைத் தொடர்ந்து வந்து அவர்களை நல்வழிப்படுத்துகிறான். அவர்கள் விலகிவிலகி ஓடினாலும் விடாப்பிடியாக அவர்களைத் தேடித் 'தொடர்ந்து ஓடி வந்து அருள் புரிகிறான். அப்படியெல்லாம் ஏது பிழை செய்தாலும் ஏழை மக்களுக்கு இரங்கி, தீது புரியாத தெய்வமாக அவன் வாழ்கிறான். அவன் அளப்பரிய கருணை நிறைந்தவன். 'ஆம்; அவன் கருணாகரன். இப்படி ஒரு கற்பனை. இந்தக் கற்பனைக்கு ஒரு உருவம் கொடுக்கிறான் ஆங்கிலக் கவிஞன் பிரான்சிஸ் தாம்சன் அவனுடைய அருள் வேட்டை என்ற பாட்டிலே. ஆண்டவனிடமிருந்து ஓடி ஓடிப் போகும் மனிதனைத் துரத்திக் கொண்டே ஓடுகிறது ஒரு வேட்டை நாய். கல்லிலும் முள்ளிலும் அவன் கடுகி 'நடந்தாலும், அந்த வேட்டை நாயின் பாதங்கள் அவனைத்





தொடர்ந்தே செல்கின்றன. வானுலகம் வரை ஓடி நக்ஷத்திர மண்டலங்கள் இடையே ஓடி ஒளிந்து கொள்ள முயன்றாலும், பூவுலகில் இயற்கையோடு இயற்கையாய் ஒன்றி மறைந்தாலும், இல்லை, குழந்தைகளோடு ஏனைய செல்வங்களோடு கூடிக் குலவி உலகையே மறந்தாலும், ஓடிவரும் வேட்டை நாய் விடுவதாக இல்லை. எங்கு சென்றாலும், எதுவினை செய்தாலும் மனிதனைத் தொடர்ந்து கொண்டே வருகிறது. வந்து கவ்விப் பிடித்துத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு போகிறது. இப்படித்தான் இறைவனை விட்டு அகன்றோடும் ஆடவனையும் கடவுளின் கருணை — அவனது பாதம் — ஆம்! வேட்டை நாயுருவில்தான் தொடர்ந்து வந்து அருள்புரிகிறது என்பது கவிஞனின் கற்பனை. ஆம்! சமய உணர்ச்சி அருகியிருக்கும் மேலை நாட்டுக் கவிஞனுக்கு இறைவனது அளப்பரிய கருணையைத் தொடரும் வேட்டை நாயாகத்தான் கற்பனைபண்ண முடிகிறது. அதற்கு மேல் எண்ணவோ, சிந்திக்கவோ, கற்பனை பண்ணவோ, அவனால் முடியவில்லை. அவன் வாழ்கின்ற பிரதேசத்தின் பகைப்புலம், சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை.

ஆனால் இப்படித் தொடரும் கடவுளின் கருணையை நமது அப்பர் அடிகள் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பே அறிந்திருக்கிறார். அவனது அருளை வியந்து பாடி யிருக்கிறார். அவர் கற்பனை பண்ணும் கருணை,

நில்லாத நீர் சடைமேல்
நிற்பித்தானை
நினையா என் நெஞ்சை
நினைப்பித்தானை
கல்லாதன எல்லாம்
கற்பித்தானை
காணாதன எல்லாம்
காட்டினானை
சொல்லாதன எல்லாம்
சொல்லி, என்னைத்
தொடர்ந்து இங்கு அடியேனை
ஆளக் கொண்டு
பொல்லா என் நோய்
தீர்த்த புனிதன் தன்னை
புண்ணியனைப் பூந்துருத்தி
கண்டேன் நானே.



தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்



என்று அற்புதமான பாட்டாக அல்லவா உருவாகியிருக்கிறது! நில்லாத நெஞ்சை நிலைப்பித்து, கல்லாதவற்றைக் கற்பித்து, காணாதவைகளைக் காட்டி, சொல்ல இயலாதவைகளையும் சொல்லித் தன்னைத் தொடர்ந்து வந்து அருள் செய்யும் அருள் வேட்டையை அல்லவா அப்பர் நமக்கு அறிவுறுத்துகிறார். ஆம்! தொடரும் கருணையைத் துரத்தி வரும் வேட்டை நாய்க்கு உவமிக்கும் பிரான்சிஸ் தாம்சன் எங்கே, அடியவரையும் ஆளாக்கும் ஆண்டவனது அருளைப் பொல்லா நோய் தீர்த்தருளும் புண்ணியனுக் கற்பிக்கும் அப்பர் எங்கே? ஏதோ சின்னஞ் சிறிய குன்றை பொன்னம் பெரிய மேருவுடன் உவமிப்பது போலல்லவா இருக்கிறது.

* * *

இப்படியெல்லாம் கற்பனை கற்பிக்கும் கடவுளின் கருணையைக் கல்லிலும் செம்பிலும் வடித்தெடுத்து நிறுத்தத் தமிழ்நாட்டுக் கலைஞர்களும் மறக்கவில்லை. சிவபெருமானுடைய மூர்த்தங்கள் அறுபத்திநாலு. இந்த அஷ்டாங்க மூர்த்தத்தில் ஒன்றுதான் **பிக்ஷாடன மூர்த்தம்.**

தாருகாவனத்திலிருந்த முனிவர்கள், வேள்வியே முக்தி பயக்க வல்ல நற்கருமம் என நினைக்கின்றனர். வேதங்களை ஓதி வியக்கத்தக்க அறிவையெல்லாம் பெறுகின்றனர். எண்ணிலாத யாகங்கள் இயற்றி அவற்றில் அவிசினைச் சொரிந்து தாம் நினைத்ததையெல்லாம் முட்டின்றி முடிக்கின்றனர். அறிவும் ஆற்றலும் வளர வளர, ஆணவமும் வளர்கிறது, அவர்கள் உள்ளத்தில். இப்படி இவர்கள் எல்லாம் அழிந்து ஒழிந்து போவதைத் தவிர்த்து அவர்களைத் தடுத்து ஆட்கொள்ளப் புறப்படுகிறான் சிவபெருமான். தன்னுருவை மறைத்துப் பிச்சைக்காரன் வடிவத்திலே கையில் கபாலம் ஏந்தி, இல்லங்கள்தோறும் பிச்சை எடுக்க விரைகிறார். இவருடன் அந்த அழகன் மகாவிஷ்ணுவும் மோகினியாகத் திரு அவதாரம் எடுத்துத் தாருகாவனத்துக்கே வருகிறார். பிக்ஷாடனனுக்கு அன்னமிட வந்த ரிஷிபத்தினிகளோ அவனது அழகில் மயங்கி நிறை அழிகின்றனர். வளை கழலுகிறது பலருக்கு. கலை நெகிழ்கிறது சிலருக்கு. மோகினியின் மோகன உருவமோ ஆணவம் மிகுந்த அந்த முனிவர்களையெல்லாம் வசீகரிக்கிறது. அவர்கள் தங்கள் யாகங்களையும் யோகங்களையும் மறக்கின்றனர். மோகினியையே பின்தொடருகின்றனர். இறைவனது எண்ண

மூம் நிறைவேறி விடுகிறது. பிக்ஷாடனனான சிவபெருமான் முனிவரிடம் கேட்ட பிச்சை அவர்களது அன்பையும் ஆணவத்தையுமே—ஆம்! இறைவனை மறந்து தாங்களே தெய்வம் என்று தருக்கித் திரியும் பக்தர்களையும் விடாது தொடர்ந்து அருள் புரியும் மூர்த்தமே இந்த பிக்ஷாடன மூர்த்தம்—புராணக் கதையை விட அந்தப் புராணக் கதைக்குப் பின்னுல் நின்று சுடர்விட்டுக் கொண்டிருக்கும் அரிய தத்துவம் இந்தத் தொடரும் கருணையின் உண்மையைத் தானே விளக்கி விடுகிறது.

* * *

இந்தப் பிக்ஷாடன கோலத்தையும், ஏதோ புராண வரலாற்றுக்கேற்ப வெறும் பிச்சைக்கார வடிவமாக மட்டும் தமிழ் நாட்டுச் சிற்பிகள் உருவாக்கவில்லை. தம்மை விட்டு விலகி ஓடும் மக்களைக் கூவியழைக்க இறைவன் தன் கையில் உள்ள துடியையே முழக்கியிருக்கிறான். துடி முழக்கங்களின் மூலம் போதிய அளவு ஒலி எழுப்பி உயிர்களைத் தன் பக்கம் இழுக்க இயலாதது கண்டு, கொம்பொன்று கொண்டு துடியினை அடித்துப் பெரியதொலியையே எழுப்பியிருக்கிறான். ஆழ்ந்த மயக்கமும், அதனால் நீண்ட தூக்கமும் நிகழும் வேளையிலே இந்தத் துடியில் ஒலியெல்லாம் அவர்களைத் தட்டி எழுப்ப உதவவில்லை. 'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்கும்' மக்கள் இனத்தை இப்படி தன்பக்கம் இழுப்பதில் வெற்றி காணாத இறைவன், பின்னரும் சும்மா இருக்கவில்லை. இந்த உலகில் உள்ள உயிர்களெல்லாம் கட்டுண்டு கிடப்பது அமுத கீத வலை என்பதை உணர்ந்திருக்கிறான். சிறு பறை முழக்கியோ, பெரு ஒலி எழுப்பியோ உசுப்ப முடியாதவர்களை, அவர்களது செவிகளில் இன்னமுதையே பொழிந்து அதனால் அவர்களது உள்ளுணர்வைத் தட்டி எழுப்பக்கூடுமா என்று நினைத்திருக்கிறான். ஆதலால் துடியை எறிந்துவிட்டு வீணை ஒன்றையே ஏந்தியிருக்கிறான் தன் கைகளில். பண்ணுர்ந்த வீணையில் இனிய கீதத்தை இசைப்பது மூலமாக, உயிர்களையே தன் பக்கம் இசைவிக்கும் காரியம் சாத்தியமாகுமா என்று முயன்றிருக்கிறான். அப்போதும் இந்த உயிர்கள் அவன் பக்கம் திரும்பாதது கண்டு திரும்பவும் சோர்ந்திருக்கிறான். இத்தனை சோர்வுக்குப் பின்னும் அவன் உள்ளத்தில் உயிர்களிடத்துக் காட்ட விரும்பும் கருணை மட்டும் சோர்ந்து விடவில்லை, அவனது கருணை உயிர்களைத் தொடர்ந்தே




செல்கிறது இன்னும். துடி முழக்கத்தினும், வீணையின் இன்னிசையாலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, தன் உருவை மறைத்து, கையில் கபாலம் ஏந்தி உயிர்களைத் தொடர்ந்தே சென்று, அவர்களது அன்பையும் ஆணவத்தையும் பிச்சை கேட்டுப் பெறுவதன் மூலமாகவாவது அவர்களை ஆட்கொள்ள முடியுமா வென்று பார்த்திருக்கிறான். அதற்காகவே பிக்ஷாடனக் கோலம் தாங்கி உயிர்களை நோக்கி விரைந்திருக்கிறான். முன் இரண்டு முறையிலும் வெற்றி காணாத இறைவன்—இந்த மூன்றுவது முறையில் பூரண வெற்றியே பெற்று விடுகிறான். உயிர்களும் எத்தனை காலந்தான் அவனிடமிருந்து விலகி விலகி ஓட முடியும்? தொடர்ந்தே வந்து மடிபிடித்து, அன்பையும் ஆணவத்தையும் பிச்சை கேட்கிறபோது இல்லை என்று சொல்ல முடியுமா?

கேட்டதை அவனது பிச்சைப் பாத்திரத்திலே போட்டுவிட்டு அதனால் தங்கள் துயரம், பாவம் எல்லாம் நீங்கப் பெற்றவராய், பேரானந்த நித்யமுக்தி பெற்று விடுகிறார்கள் இந்த உயிர்கள்.

இப்படி இறைவன் உயிர்களைத் தொடர்ந்தே வருகிறான். துடி முழக்குபவனாக, வீணை ஒலி எழுப்புபவனாக, கபாலம் ஏந்திப் பிச்சை எடுப்பவனாக என்றெல்லாம் கூறுவதற்குப் பல புராணக் கதைகள் இல்லாமல் இருக்கலாம். என்றாலும் இவை எல்லாம், என்னுல் தான்-தோன்றித்தனமாகக் கற்பனை செய்யப்பட்டவை அல்லதான். இறைவனது எண்ணற்ற திரு உருவங்களை வடித்தெடுத்திருக்கும் தமிழ் நாட்டுச் சிற்பிகளே, இந்த அற்புதக் கற்பனைகளைக் கண்டிருக்கிறார்கள். அந்தக் கற்பனை வடிவங்களையே செப்புச் சிலைகளாக ஆக்கி நம் முன் நிறுத்தியிருக்கிறார்கள். துடி முழக்கி உயிர்களைத் தொடர்ந்து அவர்கள் அன்பைப் பெற விரும்பும் மூர்த்தத்தின் சிறந்த திருவுருவம் ஒன்று இன்றும் இருக்கிறது. **திருச்சி மலைக் கோட்டை**யிலே **தாயுமானுர்** கோயிலிலே, இம் மூர்த்தியைக் காண மலைக்கோட்டைப் படிகளிலே, கொஞ்சம் கால் கடுக்க நடந்து ஏற வேண்டியதுதான். ஏறிக் கடந்து தாயுமானுர் சந்நிதி வந்து அந்தத் திருக்கோயிலின் உட்பிராகாரத்தை வலமாகச் சுற்றினுல் தெற்கே நோக்கியவராக இந்த மூர்த்தி காட்சி கொடுப்பார்—செப்புச் சிலை வடிவில். ஏதோ நிரம்பவும் அவசரமாக நடக்க விரும்புவார் போன்று இடது காலை முன் வைத்து நம்மை நோக்கியே வருவார். வலது கையில் தாங்கிய துடியை இடது கைக்கு மாற்றி வலது கையில் கொம்பொன்று தாங்கித் துடி முழக்குவதையெல்லாம் பார்க்கலாம் நாம். உயிராகிய மானுக்கும் புல்லருத்தும் திருக்கரம் தாழ்ந்து குழைய, மழு ஏந்தும் வலக்கரம் தோள் வரை உயருகிறது. நல்ல அணிகளும், பணிகளும் பூண்டவராய், நீண்டுயர்ந்த மணி

கும்பகோணத்திலிருந்து வந்தவர்!




"Bentex"
உங்களுக்கு உத்தரவாதமளிப்பது பெண்டக்ஸ் என்ற பெயரே

மகுடம் தலையை அலங்கரிக்கக் கம்பீர மான தோற்றத்திலே உயர்ந்து நிற்கிறார்.

அடியிற் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும், இசையிடறும்
வடிவில் சிறப்ப நடந்தருளி
மூழை ஏந்தி மருங்க ணைந்த
தொடியில் பொலிதோள் முனிமகளிர்
சரமங்கையரை மயல் பூட்டி
படியிட்டு எழுதப் பேரழகோடு

விளங்கும் இந்தத் திருக்கோலம், கற்பனை கற்பித்த கருணையின் முதல்படியாகும்.

வீணை ஏந்தி, அதில் இன்னிசை எழுப்பி, அதன் மூலம் உயிர்களைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சியில் முனைந்துள்ள மூர்த்தம் ஒன்றைக் காணக் கொஞ்சம் கால் கடுக்க நடக்கத்தான் வேண்டும். தஞ்சை ஜில்லாவிலே மாயூரம் ஜங்ஷனில் இறங்கி நேர் கிழக்கு நோக்கித் திருக்கடையூர்வரை சென்று அதன் பின் வடக்கே திரும்பித் திருவெண்காடு செல்லும் வழியில், நடந்தோ அல்லது வண்டிபிடித்தோ சென்றால் வலம்புரம் என்ற ஊர் சென்று சேரலாம். இன்று அந்த ஊரின் பெயர் மேலப் பெரும்பள்ளம். ஊருக்குள்ளே செல்லும் பாதைகளோ குண்டும் குழியுமாக வலமும் இடமுமாக வளைந்து வளைந்தே செல்லும். இப்படி யெல்லாம் வலம் வந்தும், இடம் சுற்றியும் போனால் அங்குள்ள வலம்புரநாதர் கோயிலுக்கு வந்து சேரலாம். அந்தக் கோயிலின் வெளிப் பிராகாரத்திலே செப்புச் சிலை வடிவில் இருக்கிறது இந்த மூர்த்தம். இந்த மூர்த்தி திருக்குளத்துக்குள்ளேயே கிடந்ததாகவும், சமீபத்தில்தான் குளம் தூர்வை எடுக்கும்போது வெளி வந்ததாகவும் சொல்லுகிறார்கள். இந்த மூர்த்தியைத்தான்,

பட்டு உடுத்து பவளம்போல்
மேனி எல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து
பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி
இங்கே வந்தார் என்கிறார் அப்பர்.


நல்ல சோழர் காலத்து செப்புச் சிலை. வீணை ஏந்துவதற்கேற்ற திருக்கரங்களோடு - பிக்ஷாடனக் கோலம் உருவாகி யிருப்பது நானறிந்த மட்டில் இது ஒன்று தான். துடி முழக்கும் பிக்ஷாடனர் திருவுருவத்தைக் கல்லில் பல கோயில்களிலும், செம்பில் சிலகோயில்களிலும் காணலாம். வீணை ஏந்தும் கையழகு, அத்துடன் மானுயிருக்கு அருத்தும் நிலையில் எழில் ஓவியக் காட்சி கொடுக்கும் இறைவன் இந்த வலம்புரம் என்ற சிறிய ஊரில் மட்டுந்தான் இருக்கிறான். ஒளிந்து கொள்ள விரையும் உயிர்களைத் தேடி ஓடும் அழகனும், இங்கே வந்து ஒளிந்து கொண்டிருப்பானேன்? இவனைத் தொடர்ந்து கண்டுபிடிக்கும் பேராவலை எனக்கு அளித்து என்னையும் ஆட்கொள் ளத்தானோ என்னவோ? யார் அறிவார்கள் அவனது தொடரும் கருணையை.

இப்படி துடி முழக்கியும், வீணை இசைத்தும் உயிர்களைத் தன் பக்கம் இழுக்க இயலாமை கண்டு, இறைவன் இனித் தன் உருவையே மறைத்துக் கொண்டு கையில் கபாலம் ஏந்தி உயிர்களிடத்து அன்பையும், ஆணவத்தையுமே பிச்சை கேட்கப் புறப்பட்டு வருகிறான். எடுக்கும் பிச்சையில் கபாலம் கொள்ளாமல் போகும் மிச்சத்தை யெல்லாம் ஏந்திச் செல்வதற்குப் பெரிய தாலம் ஒன்றையே ஏந்திக் கொண்டு தொடர்கிறது ஒரு பூத கணம். உயிராகிய மான் - ஆம்! அன்று அந்த இறைவனின் திருக்கரத்தில் இருந்தது தான் இன்று இறங்கி, அவன் அருத்தும் புல்லுக்காகத் தலைநீட்டி நிமிர்ந்து நிற்கும் நிலை, நிறைந்த அழகோடு மிளிர்கிறது. நல்ல வாட்ட சாட்டமான திருமேனி. நீண்டுயர்ந்த மகுடமிருந்த இடத்தில் சடாமகுடம் ஜோதி மயமாகக் காட்சி அளிக்கிறது. துடி ஒலிக்கிறது, ஒரு கையில். அனலேந்தும் கையோ இன்று மூழை ஏந்தும் நிலையில் லாகவமாக உயர்ந்திருக்கிறது. கழுத்திலே கனகாபரணமும், இடையிலே பன்னகாபரணமும் சுற்றிக் கிடக்கிறது. காலிலே பாதுகை-யிரக்கழல் எல்லாம் வேறே. இத்தனை கோலாகலமாகப் பிச்சைப் பாத்திரம் ஏந்திப்பிச்சை எடுக்க இறைவன் புறப்பட்டால், யார்தான் பிச்சையிடத் தயங்குவார்கள்? முனிமகளிர் மயங்கியதில் வியப்பென்ன? உலகுயிர் அனைத்தும் அல்லவா இத்திருக் கோலப் பொலிவிலே தன் வயமிழந்து நிற்கிறது. இந்த பிக்ஷாடனத் திருவுருவம் அநேகமாக எல்லாப் பெரிய சிவன் கோயிலிலும் இருக்கும். என்றாலும் பல கோயில்களில் கட்டுக் குட்டென்று மேனியழகு ஒன்றும் இல்லாமல், ஒரு கேலிக் கூத்தாகவே இருக்கும். இந்த மூர்த்தியின் சிறந்த திரு உருவம் இருப்பது மாயூரத்துக்குத் தெற்கே ஏழு எட்டு மைல் தூரத்தில் உள்ள வழுவூர் என்ற சின்னஞ் சிறிய ஊரில்தான். 'ஊன்பாதம் முடை தலைக் கொண்டு ஊர் ஊராய்ப் பலிக்குழலும்' இந்த அற்புத மூர்த்தியைக் கண்டு, நம் அன்பையும் ஆணவத்தையும் அவனது கபாலத்தில் போட்டு விட்டு, அருள் நிறைந்தவர்களாய் ஊர் திரும்புபவர்கள் அதிர்ஷ்டசாலிகளே.

இப்படியெல்லாம் சிற்ப வடிவில் உருவாகி யிருக்கும் மூன்று மூர்த்திகளின் திருக்கோலங்களைத்தான் பக்கத்தில் பார்க்கிறீர்கள்-புகைப்பட உருவுகளாக. இந்தத் திருவுருவங்களைக் கண்டு களிக்க அறிவையோ ஆற்றலையோ பெறுதவர்கள் வானவர்கள். ஆனால் இந்த அரிய உண்மைகளை எல்லாம், மனிதனது சிந்தனையில் உருவாகும் திருக்கோலங்களாகக் காணும் வாய்ப்பு மக்களாகிய நமக்குத்தான் கிட்டியிருக்கிறது.

முக்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பலபல நெறிகளும் காட்டி
கற்பனை கற்பித்த கடவுளாய் -

காணும் பேறு பெற்றவர்கள் மக்களே. ஆம்! **கற்பனை கற்பிக்கும் கருணையைத்** தானே எல்லாம் வல்ல கடவுள் உருவில் காண்கிறோம் நாம்.






பணக்காரர்கள், ஏழைகள், சிறுவர்கள், வயோதிகர்கள் என்ற பேதமின்றி வருஷ முழுவதும் ரயில் பிரயாணம் செய்யும் ஆயிரக்கணக்கான உங்கள் எல்லாருக்கும் இந்தத் தீபாவளி மகிழ்ச்சியை அளிக்கட்டும்; இன்பத்தைப் பெருக்கட்டும். உல்லாசப் பயணமாகவேனும், தொழில் சம்பந்தமாகவேனும் செல்லும் உங்களுக்கு தாமதமேற்படாமலும் சிக்கனமாகவும் சௌகரியமாகவும் இருக்க இந்திய ரயில்வேக்கள் எல்லாவிதத்திலும் சேவை செய்யவே முயற்சி செய்கிறது. மகிழ்ச்சி ததும்பும் இந்த நன்னாளில் எங்கள் பிரயாணிகளுக்கு நாங்கள் செய்யும் சேவை நலன் பெறவும், ரயில் பெட்டிகளையும், ஸ்டேஷன் பிளாட்பாரங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் உங்கள் ஒத்தாசையைக் கோருகிறோம். உங்களுடைய கனமான சாமான்களையெல்லாம் பிரயாணிகள் செல்லும் பெட்டிகளில் எடுத்துச் செல்லாமல் 'லக்கேஜ்' பெட்டியில் அனுப்பி வைக்கும்படி மிகவும் கேட்டுக்கொள்கிறோம்.










வெளியிடுபவர்கள்

சென்ட்ரல் ரயில்வே






இந்த கோமள விலாஸ் ஓட்டலில், வீட்டில் இருப்பதுபோல் எல்லா வசதியும் இருக்கு!
நன்றாச் சொன்னேன்! இவ்வளவு வசதி எந்த வீட்டிலே கிடைக்கும்!
கோமள விலாஸ்
73, ராஷ் பிஹாரி அவின்யு
GRAM-SOUTHTEL
கல்கத்தா
PHONE: 46-1960



Quality Cotton Spinners
MANUFACTURERS OF:
20 x 40s carded 60s, 80s and 100s carded and combed in hanks and cones Speciality in staple fibres 40s and 2/40s
Ring spindles 28,420
Doubling 648
PHONE: 766
GRAMS: "KADRIMILLS" COIMBATORE
KADRI Mills (CBE) Ltd.,
ODDARPALAYAM.
SINGANALLUR .... COIMBATORE.
MANAGING PARTNER:
V. RAMASWAMY NAIDU.
MANAGING AGENTS & SECRETARIES:
G. KRISHNA & CO.



இப்பொழுது
TWA
JETSTREAM*
டிடபிள்யூஏ வின் உலகமெங்குமுள்ள மார்க்கங்களில்
இந்தியாவிலிருந்து போவதற்கும் வருவதற்கும்
சிறந்ததில் பறந்து செல்லுங்கள்... Fly
TWA
TRANS WORLD AIRLINES
TWA/G/141


உயிர்பெற்றால்...

எனக்கு வந்த அவமானம் என்னோடு போகுது. நீ பேசாமல் வேலுவைக் கண்ணாலம் கட்டிக்கிடு என்று சொன்னான் காத்தபெருமான்.

"அந்தக் கண்ணாலம் எனக்கு வேண்டாம்" என்றாள் மகள்.

கரையில் பிடித்துப் போட்ட மீனைப் போல் தவித்துக் கொண்டிருந்தாள் மயில்நாச்சி. அவள் கிராமத்திலிருந்து பட்டணக்கரைக்கு வந்து ஒரு வருஷம் ஓடி விட்டது. அவள் தகப்பன் காத்த பெருமான் கிராமத்து வயல் வரப்புக்களையும் பயிர் பச்சைகளையும் நினைத்துப் புலம்பியவண்ணமாக இருந்தான். அத்தான் வேலாயுதமோ இப்போது கொத்து வேலை செய்து காக சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். மயில்நாச்சி அவனுடன் அதிகமாகப் பேசுவது கூட இல்லை. பேச்சு என்ன வேண்டிக் கிடக்கிறது? ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று காலம் ஓடிப்போய்விட்டால், பிறகு எல்லாமே மறந்து போய்விடும்! மயில்நாச்சி மனசுக்குள்ளேயே புழுங்கி உயிரை விட வேண்டியதுதான். அவர்கள் ஊரை விட்டு ஓடிவரக் காரணமாக இருந்தவன் சாதாரண மனிதனா? பெரிய ஜமீன்தார். கூலி வேலை செய்து பிழைக்கிற வேலாயுதம், அந்தக் கொடியவனிடம் எப்படி வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியும்? ஜமீன்தார் செய்த கொடுமைக்குப் பழிக்குப் பழி வாங்கும்வரை, அத்தான் வேலாயுதத்துக்குக் கழுத்தை நீட்டுவதில்லை என்று நிச்சயமாகச் சபதம் போட்டிருந்தாள் மயில்நாச்சி. நாள் ஒவ்வொன்றாகப் போய்க்கொண்டிருந்தது. அத்தான் வேலாயுதம் ஒன்றும் செய்வதாகக் காணோம். மயில்நாச்சிக்கு மூச்சு முட்டியது. திமுதிமுவென்று ஓடுகிற மோட்டாருக்கு அடியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வோமா என்று கூடச் சில சமயம் எண்ணமிடுவாள். வேலாயுதத்தை நினைக்கும்போது, அவளுக்குக் கண்ணீர் பெருகிவிடும். அவனுடைய வாழ்வும் தன்னால் கசங் கெட்டுப் பாழாகி விட்டதோ என்று வருந்துவாள்.

"மயிலு! இன்னைக்கு ஜமீன்தாரை என் கண்ணாலே பார்த்தேன். பட்டணத்துக்கு வந்திருக்கிறான் போலிருக்குது. அந்தக் கேஸ் விஷயமாத்தான் இருக்கும்" என்றான் வேலாயுதம் ஒரு நாள்.

குரம்பாளையம் ஜமீன்தாருக்கும் அவருடைய பங்காளி ஒருவருக்கும் ஜமீன் வாரிசு உரிமை சம்பந்தமாக ஹைகோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருந்தது.

மயில் நாச்சிக்கு ஒரு ஆவேசம். "கண்ணாலே பார்த்திட்டு, சும்மாவா வந்தீங்க? நடுத் தெருவிலே நாலு அறை அறைந்திட்டு வந்திருந்தால் இதுக்குள்ளே என் மனசு குளுந்திருக்கும்" என்றாள்.

கிழவன் காத்தபெருமான் இதைக் கேட்டுக் கொண்டிருந்தான். "அப்படியெல்லாம் தப்புத் தண்டாவிலே இறங்கிடாதே, வேலு. இந்தப் புள்ளே புத்திக் கெட்டுச் சொல்லுது. வீணாப் போலீஸிலே மாட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போகவேண்டியதுதான். அந்த அவமானத்தை விடக் கேடு என்ன இருக்குது?" என்று கூறினான்.

மயில்நாச்சி ஏறிட்டுத் தகப்பனை ஒரு பார்வை பார்த்தாள். அவள் கண்களில் அவமானக் கனல் புகைந்து எழுந்தது.

"ஜமீன்தாரை அறைந்திட்டு இவரு ஜெயிலுக்குப் போனால், அதனால் ஒண்ணும் குடி முழுகிப் போயிடாது. ஐயா! இவரைக் கட்டிக்கிடப் போறவ நான்தான். ஜெயிலு வாசலுக்கே போய் அழைச்சுக் கிட்டு வருவேன். கொட்டு மேளத்தோடே!" என்றாள்.


கிழவன் வாயை இறுக மூடிக்கொண்டான்.

மயில்நாச்சியின் வாழைத் தண்டு போன்ற உடலுக்குள், எப்பேர்ப்பட்ட நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது என்பதை வேலாயுதம் உணர்ந்து கொண்டான்.

காலம் செல்லச் செல்ல, ஆண்பிள்ளை தான் பட்ட அவமானத்தைச் சிறிது சிறிதாக மறக்கக் கற்றுக் கொள்கிறான். ஆனால் பெண்ணுக்கோ, அவள் கோபக் கனலைக் காலம் ஊதி ஊதிக் கொழுந்து விடும் பெருந் தீயாக்கி விடுகிறது.

இத்தனை கொடுமை செய்த ஜமீன்தாரைக் கூட வெறுக்க முடியவில்லை வேலாயுதத்துக்கு! தன்னை யாரென்று தெரிந்துகொள்ளாமல் போய் விட்டாரே என்ற கோபம்தான் அவன் நெஞ்சில் மேலோங்கி நின்றது.

குரம்பாளையம் ஜமீன்தார் சொக்கநாதர் என்றால் ரயத்துக்களுக்குச் சிம்ம சொப்பனம். வரிவசூல் மூன்று மாதங்கள் நடைபெறும்





மயில்நாச்சியின் வஞ்சம்

துறைவன்

அந்த மூன்று மாதங்களும், ஜமீன் மக்கள் ஊரெல்லாம் காலரா, பிளேக்கு நடப்பது போல் கதிகலங்கிப் போவார்கள். அடுத்த வரி வசூலே மூன்று வருஷங்கள் கழித்துத் தான் நடத்துவார் சொக்கநாதர். வரி வசூல் செய்யும் சிப்பந்திகளின் சம்பளம் மிச்சப்படும் அல்லவா? இவ்வாறு குரம் பாளையத்தின் ஏக சக்ராதி பதியாக அரசு செய்து வந்த ஜமீன்தார் சொக்கநாதருடைய பரிவாரச் சேவையில் பணியாற்றிய அடியாள் கூட்டத்தில் ஒருவன்தான் வேலாயுதம். மயில்நாச்சிக்கு அத்தான்.

பட்டணத்தைக் காட்டிப்புடு!'' என்பான். மயில்நாச்சி கடைக்கண்ணால் வேலாயுதத்தைப் பார்த்து, தலையைக் குனிந்துகொள்வாள். அப்பொழுது வேலாயுதம் செக்கச் சிவந்த செந்தாமரை மொட்டு மாலைக் காற்றில் அசைந்து குளத்துத் தண்ணீரை முத்தமிடப் போகும் காட்சியை நினைத்துக் கொள்வான். அந்தப் புளகாங்கித நேரத்தில் அவன் தன்னை, குரம்பாளையத்துக்கு என்ன, இந்தப் பரந்த உலகத்துக்கே ஒரு ஜமீன்தாராகக் கற்பனை செய்து சந்தோஷத்தில் திளைப்பான்.

வேலாயுதத்துக்குத் தாய் தகப்பன் இல்லே. அரண்மனைச் சோற்றிலேயே வளர்ந்த அடங்காக் காளை. வாரம் ஒரு தடவை, மாமன் வீட்டுக்குப் போய் வருவான். தலையில் முண்டாசும் கையில் பூண் கட்டிய கம்புமாக அவன் வருகிற தோரணையைப் பார்த்துப் பூரித்துப் போவாள் மாமன் மகள் மயில்நாச்சியாள். ஜமீன்தாருடைய புதிய 'பிளஷர்' காரில் தான் பட்டணம் வரை போய்விட்டு வந்த பெருமையை வேலாயுதம் கதை கதையாய் வர்ணிப்பான். காத்தபெருமாளுக்கு எல்லாம் தேவலோகக் கதை போலிருக்கும். ''மயில்நாச்சியைக் கண்ணாலம் கட்டிக்கிட்டு ஒரு தடவை அவளையும் அழைக்கக்கிட்டுப் போய்

அந்த வருஷம் வரி வசூல் ஆரம்பமாகிவிட்டது என்பதைத் தண்டோரா அறிவித்தது. காத்தபெருமாள் திடுக்கிட்டான். அவனுடைய வயல் இரண்டு வருஷங்களாகத் தீய்வு. இந்த வருஷத்தில் தான் கொஞ்சம் மகசூலைப் பார்க்க முடிந்தது. அதை முழுவதும் விற்றால் கூடத் தீர்வைக்குப் பற்றாது. முக்கால்வாசி குடியானவர்களின் பாடும் இதே பாடாகத்தான் இருந்தது. வரிவசூல்காரர்கள் சில வீடுகளிலிருந்து கதவுகளைக் கழற்றிச் சென்றார்கள். சட்டி பெட்டிகளை எடுத்துத் தெருவில் வீசி யெறிந்தார்கள். வைக்கோல் படப்புகளைப் பறிமுதல் செய்தார்கள். மாதம் ஒன்று ஆகியும் கால்வாசி கூட வசூல் ஆகவில்லை.

ஜமீன்தாருக்குக் கோபம் பொங்கியது. ''பெண்டுபிள்ளைகள் மேல் நகை நட்டுகள் இல்லாமலா போச்சு? பணம் இல்லாவிட்டால், நகைகளைக் கழற்றுங்கடா'' என்று உத்தரவு போட்டார்.

காத்தபெருமாள் மூன்று முறை தட்டிக் கழித்து விட்டான். நாலாம் தடவை வரி வசூல் சிப்பந்திகள் வந்தால் நிச்சயம் அடிதடிதான் நடக்கும் என்பது அவனுக்குத் தெரியும். வேலுவிடம் சொல்லி ஜமீன்தாரிடம் கொஞ்சம் சிபாரிசு செய்யும்படிச் சொன்னான் காத்தபெருமாள்.

ஆனால் வேலாயுதமோ, "இதெல்லாம் மகாராஜாவோட சொந்த விவகாரம். இதிலே நான் போய் என்னத்தைச் சொல்ல முடியும்?" என்று கையை விரித்து விட்டான்.

வேலாயுதம் ஜமீன்தாருடைய விசுவாசத்துக்குப் பாத்திரமான வேலையாளாக இருந்தான். வரி வசூல் விஷயத்தில் ஜமீன்தார் எவ்வளவு கண்டிப்பு என்பது அவனுக்குத் தெரியும். மேலும் ஹைகோர்ட்டில் நடந்துகொண்டிருந்த வாரிசு வழக்கில் ஜமீன்தாரின் பணம் தண்ணீராகச் செலவழிந்து கொண்டிருந்தது.

"ஏய்யா, காத்தபெருமாள்! இன்னைக்கும் தட்டிக் கழிச்சிடாதே. பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விடு" என்றான் வரி வசூல்காரன்.

"பணம் இல்லே. அடுத்த மாசம் வந்துதான் பணம்" என்றான் இழவன்.

"நகை நட்டு இருந்தால் கொடுக்கலாம். உன் மகன் கண்ணாலத்துக்கு நகை நட்டு செய்து போடாமலா இருந்திருப்பாய்?" என்று வரிவசூல்காரன் அதட்டினான்.



காத்தபெருமாளுக்குக் கோபம் வந்து விட்டது. "ஏனய்யா இப்படி ஊர்ப் பெண்டுக பாவத்திலே விழறீங்க? மகராசன் சீமையிலே மழைத் தண்ணி எப்படிப் பெய்யும்? வரியுமில்லே ஒண்ணுமில்லே. போய் எங்காச்சும் கொள்ளை யடிக்கப் போங்க. அப்போதான் பட்டணத்துக்காரனுக்குக் கொண்டு வாரி இறைக்கலாம், ஏழை பாழை பணத்தை யெல்லாம்!"

வரி வசூல்காரனுக்கு மீசை துடித்தது. இழவனை ஓங்கி அறைந்து விட்டான்.

"ஐயோ பாவி, எங்கப்பனை அடிக்கிறியே! அவன் ஒண்ணுமத்துப் போக. அவன் தலையிலே இடி விழ!" என்று திட்டிக் கொண்டே வெளியே வேகமாகப் பாய்ந்து வந்தாள் மயில்நாச்சி, சிறுத்தைப் புலியைப் போல.

"ஏ, புள்ளே! மரியாதையா கம்மலேயும் வளையலேயும் கழற்றிக் கீழே வைச்சிரு! இல்லாட்டி, ஒங்கப்பனை இப்படியே காலைப் பிடிச்சுக் 'கரகர'ன்னு இழுத்துக் கிட்டுப் போயிடுவோம், ஆமா!"

"எங்கப்பனைத் தொட்டியானா, ஒங் கையிலே பாம்பு கொத்தும்" என்று வசவுமாரி பொழிந்து கொண்டே, வளையலேயும் கம்மலேயும் கழற்றி முற்றத்தில் வீசியெறிந்தாள் மயில்நாச்சி.

வரி வசூல்காரன் சிரித்துக் கொண்டே நகைகளைப் பொறுக்கினான்.

"அப்பனுக்கு அடி விழுந்ததும், மகளுக்கு வந்த ரோசத்தைப் பார்த்தியா!" என்று சொல்லிக் கொண்டே தன் கூட்டாளிகளோடு நகர்ந்தான்.

அக்கம்பக்கத்து வீடுகளில் ஆண்பிள்ளைகள் இல்லை. பெண்கள் மாத்திரம் இந்தக் கொடுமையைக் கண் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விஷயம் அத்தோடு முடிந்து விட்டது என்றுதான் எண்ணினாள் மயில்நாச்சி. ஆனால் அன்று சாயங்காலம் விளக்கேற்றுகிற நேரத்தில், நாலைந்து முரடர்கள் வந்து காத்தபெருமாளைக் கைப்பிடியாக அழைத்துப் போனார்கள். மயில் நாச்சி விளக்கு முன்னால் 'ஓ'வென்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

ஜமீன்தார் முகத்தில் தீப்பொறி தெறித்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் நாலைந்து பேர்கள் கைகட்டி வாய் பொத்தி நின்றார்கள். அவர்களில் ஒருவன் வேலாயுதம். அவன் முகம் பேயறைந்தது போல் இருந்தது.

"ஏண்டா, இழவா!" என்று உறுமினார் ஜமீன்தார் சொக்கநாதர்.

"மகாராஜா!"

"மூணு வருஷத்துக்குச் சும்மா இருந்துட்டு அப்புறம் வரி வசூலுக்கு வருகிறோம். இது கொள்ளையா?"

"ரெண்டு வருஷம் மழையே இல்லீங்க, துரையே!" என்று முனகினான் இழவன்.

"நம்ம ஜமீனுக்கு மட்டுமா பெய்யலே? தென்னிந்தியா பூராவும் மழை பற்றாக்குறைதான். என்ன செய்யறது? ஜமீன் காரியம் நடக்கணுமே ஐயா!"

"பணத்தை வெச்சுக்கிட்டு வஞ்சகம் செய்யலே, மகராஜா! சேவகமாரு, எம் பொண்ணு காதிலே, கையிலே போட்டிருந்த நகைகளைக் கேட்டாங்க. அவ கண்ணால நகையுங்க. எனக்கு வயிறு பத்தி எரிஞ்சது."

ஜமீன்தார் ஒரு சிரிப்புச் சிரித்தார்.

"இந்த வருசம் இல்லாட்டி ரெண்டு வருசம் கழிச்சு, கண்ணாலத்தைப் பண்ணினா என்னய்யா கேடு? ஓடிக் கிடப் போயிட மாட்டாளே?"

இழவன் நிமிர்ந்தான்.

"மகாராஜா, ஒங்களைப்போல் துரைங்களை விட்டு ஓடுகிற காலம் வந்தாலும் வரும். ஆனால் எம்பொண்ணு வீட்டை விட்டு ஓடாதுங்க!"

"டேய், வேலாயுதம்!" என்று கர்ஜித்தார். வேலு முன்னால் வந்து நின்றான்.

"இந்தச் சவுக்காலே, இந்த அதிகப் பிரசங்கிக்குச் சரியான பாடம் கத்துக் குடு!" என்றார்.

"மகாராஜா, இவரு, என் மாமனுங்க!" என்றான் வேலாயுதம்.

ஜமீன்தார் தம் கழுகுக் கண்களால் வேலுவைப் பார்த்தார்.

"தெரியும்! நீ தின்ன உப்புக்கு இன்னைக்குச் சோதனை. உன் விசுவாசத்தை இப்பத்தான் பார்க்கப் போறேன்!"

வேலாயுதம் தீச்சுட்டதுபோல் வெடுக்கென்று எழுந்தான். சவுக்கை ஓங்கி மாமன் காத்தபெருமாளைத் தன் பலங்கொண்ட மட்டும் சடார் சடாரென்று மாறி மாறி அடித்தான். இழவன் கோழிக்குஞ்சாகச் சுருண்டு விழுந்தும், வேலு சவுக்கை நிறுத்தவில்லை.

"...ம்...நிறுத்து" என்றார் ஜமீன்தார்.

அவ்வளவுதான். சவுக்கைத்தூர எறிந்து விட்டு, மூர்ச்சையாகிப் போன மாமனைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டு வீட்டைப் பார்க்க நடந்தான் வேலாயுதம்.

தகப்பனின் தோல் உரிந்த முதுகைப் பார்த்தாள் மயில்நாச்சி. துயரமும் கோபமும் அவளைப் பேசவொட்டாமல் அமுக்கி விட்டன.

வேலாயுதம் புண்களுக்குக் குப்பைமல்லிப் பச்சிலையைப் பிழிந்து தடவினான். இழவன், காந்தல் பொறுக்க மாட்டாமல் 'அம்மா ஐயா' என்று முனகினான்.

மயில்நாச்சி இசக்கியம்மன் போலக் கண்களை உருட்டி விழித்தாள்.

"என்ன, மயிலு?" என்றான் வேலு.

"அந்தச் சொக்கநாதனை இதேமாதிரி ரத்தங்கக்க அடிக்கணும். அதற்குப் பிறகுதான், நீ மனுஷன்" என்றாள்.

வேலு தலை குனிந்தான். அன்றிரவே மூவரும் குரம்பாளையத்தை விட்டுப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

புன்னிரவு ஏழு மணி இருக்கும். சோர்ந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான் வேலாயுதம். நல்ல இருட்டு. யாரோ தன் வீட்டிலிருந்து அவசரமாக வெளியே வருவது கண்ணில் பட்டது. யாராவது களவாளிப் பயலாக இருக்குமோ என்று ஒரு சந்தேகம் உண்டாயிற்று. ஒரு பாய்ச்சல் பாய்ந்து நழுவிக் கொண்டிருந்த அந்த மனிதனைப் போய்ப் பிடித்துக் கொண்டான் வேலாயுதம்.

"யாரடா நீ?"

பிடிபட்டவன் திமிரவில்லை.

"நான்தான் அண்ணே, காசிமுத்து! நீ செய்ய வேண்டிய காரியத்தை நானே 'குளோஸ்' பண்ணிட்டேன். ஒம் மாமன் மவளைக் கேளு, விவரமாச் சொல்லுவா."

வேலாயுதத்தின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, ஒரே ஓட்டமாக இருட்டுக்குள் மறைந்தான் காசிமுத்து.

காசிமுத்து, குரம்பாளையம் ஜமீன்தாரின் பங்காளி தர்மநாத துரையின் கையாள். பழி பாவத்துக்கு அஞ்சாத கொலைகாரப் பேர்வழி.

வேலுவுக்கு உடல் நடுக்கம் எடுத்தது. "என்ன பாதகம் செய்து விட்டானோ, தெரியவில்லையே?" என்று திகைத்தான்.

சாப்பாட்டுக்குப் பிறகு, மயில் நாச்சியிடம் தந்திரமாகப் பேச்சுக் கொடுத்தான் வேலாயுதம்.

"ஜமீன்தாருக்கு நல்லா வேணும். கருமம் சும்மா விடுமா? காசிமுத்து எல்லா விவரமும் சொன்னான்."

மயில் நாச்சியின் பரந்த கண்களில் ஒரு சந்தேக மின்னல் பளிச்சிட்டு மறைந்தது. பிறகு ரகசியக் குரலில் பேசினாள்:

"ஜமீன்தாருக்கு இருந்தது ஒரே மகன். அவனையும் கடத்திக்கிட்டுப் போயிட்டாரு தர்மநாத துரை. இந்நேரம் பையனுக்கு என்ன ஆச்சோ தெரியாது!"

வேலுவுக்கு உடம்பு பதற்றமெடுத்தது. குழந்தைப்பருவம் முதற்கொண்டு ஜமீன்தாரின் மகனைத் தோளில் தூக்கிவைத்துக்

கொஞ்சி விளையாடிய நாட்கள் அவனுக்கு நினைவு வந்தன. பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்த பையனை எதிரிகள் கடத்திக்கொண்டு போய் விட்டார்கள் என்ற செய்தி கேட்டு, ஜமீன்தாரிணி அம்மாள் வானம் இடியக் கதறியிருப்பாளே! கிராம பாளையம் அரண்மனையே இடி விழுந்தது போலல்லவா அதிர்ச்சி அடைந்திருக்கும்!

"என்ன யோசிக்கிறீங்க, அத்தான்?" என்றாள் மயில் நாச்சி. அவன் இதயச் சுமை எவ்வளவு தூரம் இறங்கியிருந்தது என்பதை, 'அத்தான்' என்று தன்னை அழைத்ததிலேயே நன்றாகத் தெரிந்து கொண்டான் வேலு.

"ஒன்றுமில்லே. போலீஸ்காரர்களுக்குப் பையனைப்பற்றித் தகவல் தெரிஞ்சிட்டால், ஆபத்து. காசிமுத்து வேறே, நம்ம வீட்டுக்கு வந்து போயிருக்கிறான்."

"மேலக்காட்டு நெல்லுக் களஞ்சியத்தைத் தேடிப் போயிடுவார்களாக்கும் போலீசு? ஒற்றையடிப்பாதை கூட ஒழுங்கா இல்லே அந்த இடத்துக்கு" என்று காசிமுத்து வெளியிட்ட விவரத்தைச் சொல்லிவிட்டாள் மயில்நாச்சி.

"அட பாவிகளா!" என்று தர்ம நாதரின் கையாட்களை மனத்துக்குள் திட்டினான் வேலாயுதம்.

"எங்கப்பனை அநியாயமா அடிச்சான். இப்ப அநுபவிக்கிறான். தெய்வம் இல்லாமலா போச்சு" என்று களிப்போடு பேசினாள் மயில்நாச்சி.

வேலுவுக்கு அன்று தூக்கம் வரவில்லை. ஜமீன்தாரின் ஈவிரக்கமற்ற கொடுமை, மயில் நாச்சியின் நெஞ்சிலே கொந்தளித்த சூறாவளி, தான் சீராட்டி வளர்த்த சிறுவனின் பால் வடியும் முகம், மாமன் காத்த பெருமாளின் முதுகில் சவுக்கால் இழுத்த இரத்தக் கோடுகள். எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் அவன் மனக்கண் முன் தோன்றி அலைக்கழித்தன.

பொழுது விடிந்தது. ஆனால் வேலாயுதத்தை வீட்டில் காணவில்லை. "வந்து விடுவான். நீ ஏன் பதறுகிறே?" என்றான் கிழவன் சாவதானமாக.

மயில்நாச்சிக்கு மாத்திரம் மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

இரவு ஒன்பது மணி அடித்துவிட்டது.

"இவ்வளவு நேரமாகிப் போச்சு, இன்னும் வேலுவைக் காணலியே! போய்ப் போலீஸிலேயெழுதிவைச்சிட்டுவரட்டுமா?" என்றான் கிழவன் காத்த பெருமாள்.

தெருவில் ஏதோ கார் வந்து நிற்கிற சத்தம் கேட்டது.

காரிலிருந்து மூன்று பேர்கள் இறங்கினார்கள். அதில் ஒன்று வேலாயுதம்தான். மயில்நாச்சிக்குத் தூக்கி வாரிப் போட்டது. இன்னும் இரண்டு பேர்கள் ஆணும் பெண்ணும் இறங்கி வருகிறார்களே? அவர்கள் யாராக இருக்கும்?

மங்கலாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன்விளக்கைத்தூண்டினான் கிழவன்.

"ஐயோ மகாராஜா...! இந்தக் குடிசைக்குளெங்கே வந்தீங்க?" தடபுடவென்று எழுந்து கும்பிடு போட்டான் கிழவன்.

ஜமீன்தார் பேசாமல் ஒரு புறமாக நின்றார். அவர் கூட வந்த பெண்மணி—அது ஜமீந்தாரிணி அம்மாள்தான்—பக்கத்தில் போய் நின்றாள்.

ஜமீன்தாரையும் ஜமீன்தாரிணியையும் நேரில் பார்த்த அதிர்ச்சியில் மயில்நாச்சி அசைவற்றுப் போனாள்.

ஜமீன்தாரிணி அம்மாள் அழுதாள்.

காத்தபெருமாள் வேலாயுதத்தைப் பெருமையோடு திரும்பிப் பார்த்தான். அவனோ மயில்நாச்சியைக் கவனித்தான்.

ஜமீன்தார் மெதுவாகச் சட்டைப்பையிலிருந்து ஒரு சவுக்கை வெளியேஎடுத்தார்.

"என் குழந்தை உயிரோடு திரும்பி வந்தால் காணிக்கை செய்கிறதாகத் தெய்வத்துக்கு நேர்ந்து கொண்டோம், நானும் ராணியும். தெய்வம் வேலாயுதம் உருவத்திலே வந்து பிள்ளையைக் காப்பாற்றித் தந்தது. நானும் காணிக்கையைச் செலுத்தத் தயாராயிட்டேன்" என்று சொல்லி, சவுக்கை வேலாயுதத்தினிடம் நீட்டினார் ஜமீன்தார்.

"நான் ஒன்னும் மனசுலே வைச்சுக்கிடலே. நீங்க போய் வாருங்க" என்றாள் மயில் நாச்சி. வேலாயுதத்துக்கு ஒரு பெரிய சுமை இறங்கிவிட்டது.

ஜமீன்தாரிணி அம்மாள் தன் வைரத் தோடுகளையும்கைவளையல்களையும் கழற்றி மயில்நாச்சியிடம் ஒப்படைத்தாள்.

"ஒங் கண்ணாலம், நம்ம கிராம்பாளையம் அரண்மனையிலேதான் நடக்கவேணும். நீ மறுத்துச் சொல்லக் கூடாது. மூத்த பெண் நீதான்" என்றாள் ஜமீன்தாரிணி.

மயில்நாச்சி கடைக்கண்ணால் வேலாயுதத்தைப் பார்த்தாள். அவன் முகம் 'உலகத்துக்கே' ஜமீன்தார் ஆகி விட்ட மாதிரி சுடர்விட்டுப் பிரகாசித்தது.

ஜமீன்தார் அடங்கிய குரலில் பேசினார்: "காத்த பெருமாள், ஐம்பது ரூபாய்க்காகக்காக உன்னைக் கொடுமைப்படுத்தி விட்டேன். நீங்க மூன்றுபேரும் ஊரை விட்டே ஓடும்படி செய்து விட்டேன். ஆனால் தெய்வம் என்னைச் சரியானபடி சோதிச்சிட்டுது. கொலைகாரப் பாதகர்கள் கையிலிருந்து என் மகன் தப்பிப் பிழைத்திருக்கிறான் இன்றைக்கு. இந்த வேலாயுதம் உதவியினாலே! சரியான சமயத்திலே வந்து, பையனை அடைச்சுப் போட்டிருக்கிற இடத்தைத் தெரிவிச்சான். கொஞ்சம் தப்பியிருந்தால், என் ஜமீன், சொத்து, சுகம், என் வாழ்வு எல்லாமே தவிடுபொடியாயிருக்கும்......"

ஜமீன்தாருக்கு அதற்கு மேலே பேச முடியவில்லை. குரல் தழதழத்தது.

ஒரு கணம் தயங்கி விட்டுச் சவுக்கைக் கையில் வாங்கினான் வேலாயுதம்.

ராணி பிரார்த்தனை செய்வது போல் கண்களை மூடிக் கொண்டாள்.

"டேய் வேலாயுதம்? என் உத்தரவு காதிலே விழல்லியா?" என்று இரைந்தார் ஜமீன்தார்.

வேலாயுதம் சவுக்கை ஓங்கினான், ஜமீன்தாரை நோக்கி.

"அத்தான்!" என்று கூவினாள் மயில் நாச்சி! ஓங்கிய சவுக்கு தளர்ந்தது!

வேலாயுதத்தின் கையிலிருந்த சவுக்கைப் பற்றிக் கீழே எறிந்தாள்.

அவள் எதிரே இப்பொழுது ஜமீன்தாரும் இல்லை; ஜமீன்தாரிணியும் இல்லை! ஒரு அருமைக் குழந்தையைப் பெற்ற தாயும் தகப்பனும் காட்சி அளித்தனர்.



பரிசு

அநுத்தமா

இந்திரா நீரோடையின் ஓரத்தில் தாழ்ந்து வளர்ந்திருந்த மாங் கிளையில் ஒய்யாரமாகப் பாடிக்கொண்டே பாதிக் கால் மீது பதிந்ததும் பதியாதது மாக அமர்ந்திருந்தாள். ஓடையிலிருந்து பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு போவோரும் வருவோர்களு மாகப் பேச்சும் கலகலப்புமாக இருந்தது. இந்திரா ஒரு சினிமாப் பாட்டை முனகிய படியே வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தாள். மாந்தளிர்கள் அவள் அழகு மேனியை ஸ்பரிசித்தன. தம்மைவிடக் கோமளமாக இருக்கின்றதா அது என்று பார்த்தனவோ? கருவண்டு ஒன்று அவள் கண்கள் அருகில் வட்ட மிட்டது.

சிரிப்பொலி கேட்டு இந்திரா திரும்பி னாள். சுபத்திரா தன் தோழிகள் சில ருடன் வந்து கொண்டிருந்தாள். இந்திரா அவளைக் கூர்ந்து கவனித்தாள்.

சுபத்திரா நல்ல கட்டழகி என்று சொல்லிவிட முடியாது. ஆனால் பார்க்கும்போதே கவர்ச்சி கரமாக இருந்தது அவள் முகம். பெரிய அகண்ட கருவிழிகள், அரிசி போன்ற பல் வரிசை, சிரித்துப் பேசும் சுபாவம் — யாவும் கண்ட வுடனே மனிதர்களைக் கவரும் தன்மைவாய்ந்தனவாக இருந்தன.

இந்திராவைப் பார்த்தவுடனே சுபத்திரா அவள் அருகில் வந்து விட்டாள். தன் வசீகரச் சிரிப்பை அள்ளி வீசினாள்.

"நீதானே இந்திரா? நேற்று சபாவில் சங்கீதப் போட்டியில் பரிசு பெற்றவள்?" என்று கேட் டாள் சுபத்திரா.

இந்திரா மாக்கிளையிலிருந்து இறங்கி னாள். சுபத்திராவின் கேள்விக்குப் புன் முறுவலுடன் பதில் சொன்னாள்:

"ஆமாம், நான்தான்!"

"நான்......"

"தெரியும். சுபத்திரா இல்லையா நீ?"

"ஆமாம். எப்படித் தெரியும்? நான் இந்த ஊருக்கு வந்தே ஐந்து, ஆறு வரு ஷங்கள் ஆகின்றனவே? இப்பொழுது தான் என்னுடைய அத்தை வீட்டுக்கு வந்திருக்கிறேன்."

"நீ எங்கள் வீட்டுக்கு வரவேண்டும். என் அம்மாகூட வந்திருக்கிறாள். பாட் டுக் கேட்க ஆசைப்படுவாள்!"

"ஆகட்டும், வருகிறேன். இப்பொழுது நீ என் வீட்டுக்கு வாயேன்!" என்று அழைத்தாள் இந்திரா.

"ஆகா! இப்பொழுதே போகலாமா?" என்று கிளம்பி விட்டாள் சுபத்திரா.

இந்திரா மௌனமாக வழிகாட்டிக் கொண்டே சென்றாள். அவர்கள் தெரு வைத் தாண்டிச் செல்லும்போது எதிரே மிராசுதார் வீட்டுப் பிள்ளை ரங்கநாதன் எதிர்ப்பட்டான். அவன் சென்ற பிறகு சுபத்திராவின் தோழிகள் மத்தியில் குசு குசுவென்று பேச்சும், கலகலவென்று சிரிப்பும் ஏற்பட்டன.

"என்ன ? எனக்குச் சொல்லலாமா?" என்று கேட்டாள் இந்திரா.

"சொல்லாமல் என்ன ரகசியம்? நம் சுபத்திரா வந்திருக்கிறாளோ இல்லையோ? அவள் அத்தை மகனுக்கு அவசர காரியம் வந்து விடுகிறது. அவள் போகிற இடங் களுக்குக் குறுக்கும் நெடுக்கும் வருகிறார். இவளும் கடைக்கண் வீசுகிறாள்!" என்று விவரித்தார்கள், தோழிகள்.

இந்திரா சுபத்திராவின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். சுபத்திராவின் முகம் சிவந்து விட்டது. நாணம் அவள் கருவிழிகளுக்கு மெருகேற்றியது. "இவர் களுக்கு என்ன வேலை? அத்தைக்கு மகனும், மாமனுக்கு மகளும் இருந்தால் உடனே மணக்க வேண்டியதுதானாக் கும்?" என்று கேட்டாள் அவள்.

இந்திரா அதற்குப் பதில் சொல்லவில்லை. தன் அறைக்குச் செல்லும் கதவைத் திறப்பதில் அவள் முனைந்து விட்டாள். எல் லோரும் அவள் அறைக்குள் நுழைந்தனர். அறை மிக மிகச் சிறியது. ஆறடிக்கு எட்டடி இருக்கும். ஐந்து பெண்களும் நெருக்கமாக உட்கார்ந்தனர். இந்திரா ஒரு பாத்திரத்தை



எடுத்து அவர்களுக்கு மோரைக் கொட்டிக் கொடுத்தாள்.

எல்லோரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர். சுபத்திரா பாடினாள். இந்திராவும் பாடினாள்.

அதன் பிறகு சுபத்திரா அடிக்கடி இந்திராவிடம் வந்தாள். இருவரும் நெருங்கிய தோழிகள் ஆகிவிட்டனர்.

மற்றொரு நாள், சுபத்திரா மிகவும் வாட்டமான முகத்துடன் வந்தாள். இந்திரா அவளைத் துருவித் துருவி விசாரித்ததும், அவள் விஷயத்தை மெதுவாக வெளியிட்டாள்.

"நிலைமை அப்படி யிருக்கையில் நீ மட்டும் அவரை மணந்துகொண்டு என்ன செய்வாய்?"

"என் அப்பா சொத்தை மீட்பதற்காகப் பணம் தருகிறாராம்."

"உன்னை மணக்க அவருக்கு இஷ்டம் தானே?" என்று கேட்டாள் இந்திரா.

"இல்லையாமே? ஒவ்வொருத்தர் ஒவ்வொன்று சொல்கிறார்கள்."

இந்திராவின் நெஞ்சு உலர்ந்துவிட்டது போலும். அவள் கரகரத்த குரலில், "என்ன சொல்கிறார்கள்?" என்று வியப்புடன் வினவினாள்.

"யாரோ ஒரு பெண்ணாம். அநாதையாம். அவளைத்தான் மணப்பாராம். வீட்டில் இருக்கும் அநாதைகள் அவர் கருத்துக்கு எட்டவில்லை. ஊர் அநாதைகளை உத்தாரணம் செய்யப் போகிறாராம்! அந்தப் பெண்ணைப் பற்றி நினைக்கவே எனக்குப் பரிதாபமாக இருக்கிறது."

"ஏனோ?"

"அத்தானைச் சின்ன வயது முதல் பார்த்திருக்கிறேனே! அவர் ஒரு நிலையாக நிற்க மாட்டார். காற்றடிக்கும் பக்கமெல்லாம் சாய்வார். ஒரு நிலையைச் சமாளித்து, எதிர்த்துப் போராடும் திறமை யற்றவர். ஓர் ஏழைப் பெண் அவரை மணந்து என்ன காண முடியும்? அதிலும் இவர் பிராகதார் என்ற மோகத்தில் மணப்பாளாயின்...அவள் கதி என்ன?"

"அவரை அவருக்காகவே காதலிப்பதாயின்...?" என்று கேட்டாள் இந்திரா.

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஆதரவோடு இருக்கும் பெண்களே சில சமயம் கஷ்டப்பட நேர்ந்து விடுகிறது. இந்த உலகில், பணமுடையுடன், மனிதர் ஆதரவுமற்ற பெண் இவரைப் போன்றவரைக் கைப்பிடித்து என்ன சுகம் காண்பாள்? ஆற்று வெள்ளத்தில் மிதந்து செல்பவர் ஒரு துரும்பைப் பிடித்துக் கொண்டு கரையேற முயல்வதுபோலத்தான்."

"அந்தத் துரும்பும் அவளுடன் மாய்ந்து விடும் என்கிறாயா?"

"அது மாய்ந்தாலும் மாயும், அவள் விரல் சந்தில் தப்பி ஓடினாலும் ஓடிவிடும். அவளுக்கு விமோசனம் இல்லை."



"இந்திரா! நாங்கள் இப்பொழுது வந்திருக்கிறது எதற்குத் தெரியுமா? என் அத்தான் இருக்கிறாரே, ரங்கநாதன் அவருக்கு என்னைக் காண்பிப்பதற்காகத்தான். அவருக்கு ஒரு அண்ணா இருந்தார். அவருக்கு என் அக்காவைத்தான் கொடுத்திருந்தது. அவர் மூன்று குழந்தைகளையும் என் அக்காவையும் தவிக்க விட்டுப் போய்விட்டார். அத்தையின் புருஷனோ நடக்கமாட்டாமல் கிடக்கிறார். பிராக காரியங்களைக் கவனித்துப் பார்க்கப் பொறுப்பான ஆளே இல்லை. அத்தானோ கொஞ்சம் கூடக் கவலையின்றிச் சுற்றி வருகிறார்......"

இந்திராவின் முகமும் உறைந்து விட்டது. அவள் கை கால்கள் ஜில்லென்று ஆகிவிட்டன.

"என்னை அவருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் குழந்தைகளுக்கும், பெரியவருக்கும், ஏன், ஆஸ்திக்கும் ஒரு பாதுகாப்பாக இருக்குமே என்று பார்க்கிறார்கள். சொத்துமீது கடன் அதிகமாக இருக்கிறதாம். இன்னும் ஒரு வாரத்தில் கடன் கட்டாவிட்டால் ஏலத்தில் போய் விடுமாம்......"

இந்திரா மௌனமாகத் தரையைப் பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

''என் கதையைச் சொல்லி உன் மனதைக் கலைத்து விட்டேனா, இந்திரா?'' என்று கேட்டாள் சுபத்திரா.

''அது ஒன்றுமில்லை...''

''நீதான் எனக்கு உற்ற தோழியாக இருக்கிறாய். என் மனப் பளுவை இறக்க எண்ணிக் கொட்டி விட்டேன். என் அம்மாவுக்கோ அத்தானுக்குஎன்னைக்கொடுக்கவிருப்பமில்லை. அக்காவோ என்னை நிர்ப்பந்திக்கிறாள். கடல்போலுள்ள சொத்து வீணாகி விடுமே என்று அவள் தவியாய்த் தவிக்கிறாள்.''

''அவள் குழந்தைகளுக்காகவும், அவள் சுகத்துக்காகவும் உன்னைப் பலியிடலாமா, சுபத்திரா?''

''நான் அதைப் பலி என்று கருதவில்லை, இந்திரா! ஒருவர் தியாகத்தினால்தான் பலர் சுகப்பட முடியும். எந்த நாட்டின் வரலாற்றை வேண்டுமானாலும் பார். நீயே யோசித்துப் பார். அவரை மணந்து கொண்டால், அவர் எப்படி இருந்தாலும் நான் என் தகப்பனாரின் உதவியைக் கொண்டு தரிசாகிப் பாழாகிப் போகும் நிலத்தை யாவது செப்பனிட்டு உருவாக்கலாம் அல்லவா? கணவனில்லாத அக்காவின் பேச்சைவிட மிராசின் சின்ன எஜமானியான என் பேச்சுக்கு அதிக மதிப்பு இருக்குமல்லவா? அத்தான்தான் ஆகட்டும், நாளடைவில் என்மீது பிரியமாக இருக்க மாட்டாரா?'' என்றாள்.

''அத்தானை மணக்க நீ என்ன உபாயம் செய்வாய்?'' என்று நிதானமாகக் கேட்டாள் இந்திரா.

''அந்தப் பெண் யார் என்று நான் அறிந்தால்...'' சுபத்திராவின் குரல் சிந்தனையில் குழைந்து நின்றது.

''தெரிந்தால் என்ன செய்வாய்? அவள் மீது அவர் அழியா அன்பு வைத்திருப்பாரானால் நீ அவரை மணப்பதில் என்ன பயன்?''

''அது விஷயம் உனக்குத் தெரியாதே? அவர் ஒரு மகா கோழை. அந்தப் பெண் கண் மறைவாகப் போய் விட்டால் அவரை நொடியில் என் பக்கம் திருப்பிவிடுவேன். முன்பு ஒரு தரம்கூட...''

''முன்பு ஒரு தரம்...''

''ஒன்றுமில்லை. அதுதான் சொல்கிறேனே— அந்தப் பெண் மட்டும் எதிரே இல்லாமல் இருக்கட்டும் சில நாட்கள். அவர் எனக்கே அடிமை ஆகி விடுவார். அவர் சுபாவம் அப்படி. எந்தப் பக்கம் அவர் உடல் நலுங்காமல் இருக்குமோ அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்'' என்றாள் சுபத்திரா.

''நீ சித்திரிப்பதைப் பார்த்தால் உன் அத்தான் அப்படி யொன்றும் விரும்பத் தகுந்த மனிதனாகத்





தோன்றவில்லையே? ஏன் உயிரை விட்டுக் கொள்கிறாய்? மேலும் அவரும் மனம் விரும்பாத மணத்தினால் உள்ளம் உடைந்து போய்விடமாட்டாரா?"

"என் அத்தானை எனக்குத் தெரியாதா? அவர் எங்கள் ஊருக்கு வரும் போதெல்லாம் என்னிடம் எவ்வளவு உயிராகப் பழகுவார், தெரியுமா?"

"ஊம்......"

"இருந்தாலும் இந்தத் தடவை எனக்கு நம்பிக்கை இல்லைதான், இந்திரா! உன்னிடம் சொல்வதில் என்ன தயக்கம்? இந்தப் பெண்ணிடம் அவருக்கு என்னவோ அப்படி ஒரு மோகம் இருக்கிறது? ஆற்றங் கரையில் சந்திக்கிறார் என்று யூகமாகச் சொல்கிறார்கள். அதற்காகவே நான் அன்று ஜாடையாக வந்தேன். தினமும் போகிறேன்..."

"அவள் யார் தெரியுமா?"

"யாருக்கும் தெரியவில்லையே! அவளுக்கு யாரும் நாதியில்லைதான். ஆயினும் கண்ணியமான பெண் என்று நினைக்கிறேன். இவ்வளவு சின்ன ஊரிலும் அவள் யார் என்று யாருக்கும் தெரியவில்லையே?" என்றாள் சுபத்திரா.

"நீ அவளைப் பார்த்து என்ன சொல்வாய்?" என்று கேட்டாள் இந்திரா.

"'அம்மா, தாயே! ஒரு குடும்பத்தைக் காப்பாற்று. அவரை எனக்குக் கொடு. அவரை மணந்தால் உனக்கும் சுகம் இல்லை. அவருக்கும் சௌக்கியம் இல்லை' என்று கெஞ்சுவேன்" என்றாள் சுபத்திரா.

"ஏன்? அவள்தான் அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? நீ நினைக்கும்படியெல்லாம் அவள் செய்ய மாட்டாளா?"

"பணம்! பணம்தானே முக்கியமாக இருக்கிறது? என் அப்பா அதைக் கொடுத்து உதவுகிறேன் என்கிறார். அவளுக்கு யார் இருக்கிறார்கள்?"

"உண்மைதான். ஓர் அனாதை என்ன செய்ய முடியும்? அன்பு ஒன்றுதான் அவள் அளிக்கக்கூடிய உதவி; சீலம் ஒன்றுதான் அவள் கொண்டு வரக் கூடிய சீதனம்."

"நான் வருகிறேன், இந்திரா! நான் சொன்னதெல்லாம் நீ யாரிடமும் வெளியிடாதே. கொஞ்ச நாட்கள்தாம் பழகினோம் என்றாலும் என்னவோ உன்னிடம் என் இதயத்தையே திறந்து பேசுமளவு பிடித்து விட்டது."

இந்திரா முறுவலித்தாள். சுபத்திரா விடைபெற்றுக் கொண்டு போனாள். தெருவை எட்டியவள் மீண்டும் திரும்பி வந்தாள். அவள் கண்களில் நீர் மல்கியது; தொண்டை உணர்ச்சியுடன் கனத்தது. இந்திராவின் இரு கைகளையும் தன் கரங்களில் எடுத்துக் கொண்டாள்.

"இந்திரா! நம் நட்பு என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். என் கதையெல்லாம் சொன்னேனே தவிர, உன் விஷயம் ஒன்றுமே அறிந்து கொள்ளவில்லை நான். என்ன சுயநலம் பார்த்தாயா!"


"என் வாழ்க்கையில் என்ன இருக்கிறது, சுபத்திரா? ஒருகால் தியாகம் செய்ய ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கலாம். அதற்கு ஏற்ற துணிவு வேண்டும் எனக்கு. எனக்காக நீதான் ஆண்டவனிடம் இறைஞ்சிக் கேட்க வேண்டும்."

"என் நல்லெண்ணமும், உன் நலனுக்காக என் வேண்டுகோளும் என்றும் இருக்கும்" என்று கூறி விட்டுத் தோழியின் கையை வாத்ஸல்யத்துடன் அழுத்தினாள் சுபத்திரா. பிறகு விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.

இந்திரா தன் அறையில் ஒரு மூலையில் தொப்பென்று விழுந்து கிடந்தாள். வெகுநேரம் கழித்து அவள் தன் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினாள். அவள் கால்கள் இராவண்டி மாடுகள்போல் தேய்ந்த பாதையில் அவளை இழுத்துச் சென்றன. அவள் தலை கனத்தது போலும். ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டு மிகவும் களைப்புடன் ஊர்ந்து சென்றாள் அவள்.

இந்திரா கோவில் நந்தவனத்துக்குள் நுழைந்துவேகமாகநடந்தாள். நீரோடையின் சலசலப்பு கேட்கும் தூரத்தில் ஒரு மல்லிகைப் புதர் பின்னால் சென்றாள். அங்கு இருந்த பெரிய பாறை ஒன்றில் அமர்ந்து கொண்டாள். வழக்கமான காலடி ஓசை கேட்டதும் நிமிர்ந்தாள்.

"இந்திரா!" என்று அழைத்துக் கொண்டே வந்தான் ரங்கநாதன். இந்திரா சட்டென்று விலகி நின்றாள்.



"என் இந்திராவுக்கு என்ன கோபமோ?" என்று அன்பு கனியக் கேட்டான் ரங்கநாதன்.

"'என்' என்பதை விட்டு விடும்படி கேட்டுக் கொள்கிறேன்."

"ஓகோ, ஊரார் வதந்தியை நம்பிக் கொண்டு பேசுகிறாயா? அல்லது சுபத்திரா தான் கட்டும் மனக் கோட்டையைச் சொல்லி உன்னுடைய மனதைக் கலைத்து விட்டாளா?"

"அவள் ஒன்றுமே சொல்லவில்லை. எனக்குத்தான் இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை."

"என்ன!" என்று திடுக்கிட்டான் ரங்கநாதன்.

"ஆமாம். என் கை வேறு ஒருவருக்குத் தோழமையாகி விட்டது. அந்தத் தோழமைக்கு நான் துரோகம் செய்ய நினைக்கவில்லை."

"எனக்கு மட்டும் துரோகம் செய்யலாமா?"

"துரோகம் செய்யவில்லை. உங்களுக்கு நன்மைதான் செய்கிறேன். என் ஆசையை உங்களிடமிருந்து நீக்குங்கள். உங்கள் பிறந்த பூமியில் கொஞ்சம் பற்று வையுங்கள். உங்கள் குடும்பம் இருக்கும் நிலையைப் பாருங்கள். உங்கள் நிலங்கள் இப்படித் தரிசாக நிற்கலாமா?" என்று கேட்டு விட்டுத் தரையிலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து அவன் கையில் கொடுத்தாள் இந்திரா.

"இதுதான் உங்கள் முதல் கடமை. என் பிரார்த்தனை உங்களுக்கு என்றும் துணை புரியும்" என்றாள் அவள்.

"என் கடமை உன் கடமையல்லவா?"

"இல்லை, என் கடமை என் கை கொடுத்த தோழமைக்குத்தான்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு இந்திரா அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

ரங்கநாதனின் முகம் சினத்தினால் சிவந்து போய்க் கிடந்தது. அவள் தன்னை ஏமாற்றி விட்டதாக அவன் மனம் இடித்துக் காட்டியது. நம்பி, உயிரையே அவள்மீது வைத்திருப்பதாக எண்ணியிருக்கும்போது அவள் விசுவாசமின்றி ஓடிவிட்டது தன் ஆண்மைக்கே இழுக்கு நேர்ந்ததாக அவன் கருதினான்.

இந்திரா சென்ற திக்கையே நோக்கிக் கொண்டு நின்றான் ரங்கநாதன். அவன் கையில் அவள் போட்டு விட்டுச் சென்ற மண் அரித்தது. வெறுப்புடன் அதை வீசி எறிந்து விட்டு அவன் கையைக் கழுவிக் கொண்டான். "என் கை வேறு ஒருவருக்குத் தோழமையாகி விட்டது" என்று அவள் கூறியது அவன் செவிகளில் 'கணீர்' என்று ஒலித்தது.

அவன் மெதுவாகத் தன் வீடு திரும்பினான். வாசலில் சுபத்திரா நின்று பூப் பறித்துக் கொண்டிருந்தாள். மல்லிகைக் கொடி அவளுக்கு எட்டவில்லை. அருகில் இருந்த ஒரு கல்லின் மீது ஏறி எம்பினாள்.

"இறங்கு. விழப் போகிறாய். நான் பறித்துக் கொடுக்கிறேன்" என்றான் ரங்கநாதன்.

அவள் இறங்கும்போது இருவர் கண்களும் சந்தித்தன. சுபத்திரா அழகாக ஒரு சிரிப்புச் சிரித்தாள். அவன் முக மண்டலத்திலும் அந்தக் களிப்பு தொற்றிக் கொண்டது போலும். அவன் புன்னகை புரிந்தான். அவளுக்குப் பூவைப் பறித்துக் கொடுக்கும்போது அவள் முகம் பாசம் மிகுந்த கனிவுடன் விகசித்தது.

அன்று மாலை ஒரு முறை ரங்கநாதன் இந்திராவின் அறைப் பக்கமாக நடந்து பார்த்தான். கதவு பூட்டிக் கிடந்தது. அவன் இதயமும் உறைந்து கொண்டது. "தோழமை கொண்டாடப் போய் விட்டாளோ?" என்று கேட்டுக்கொண்டு பல்லை நறநறவென்று கடித்தான்.

சுபத்திரா ஓடைக்கரைக்குப் போனாள். இந்திரா மரக்கிளையில் இருந்தாள். முதல் நாள் சந்தித்த இடத்தில் அதே நிலையில் அமர்ந்திருந்தாள் தோழி. சுபத்திராவைக் கண்டதும் வெளிறிக் கிடந்த அவள் முகத்தில் சோபை உண்டாகியது.

"இந்திரா! உனக்கு நல்ல சேதி சொல்லத்தான் ஓடோடி வந்தேன். இன்று என் அத்தான் என்னிடமே நேரிடையாகக் கேட்டு விட்டார். எங்கள் கல்யாணம் அடுத்த மாதம் நடக்கலாம். நீதான் கூட இருக்க வேண்டும்" என்றாள் சுபத்திரா.

இந்திரா தன் மகிழ்ச்சியைத் தெரியப் படுத்த அப்படியே தன் தோழியை மார்புறத் தழுவிக் கொண்டாள்.

ஸூபர் ஒயிட் கோலினூஸ்

டூத்பேஸ்ட் கொண்டு அன்றாடம் ஒரு தடவை பல் விளக்கினால், சொத்தைப் பற்களுக்கும், வாய்நாற்றத்திற்கும் காரணமான கிருமிகள் ஒழிகின்றன.



"குடும்பத்தில் யாவரும் ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' டூத்பேஸ்டின் குளுமையானதும், விறுவிறுப்பூட்டுவதுமான இனிய சுவையை விரும்புவார்கள்"


ஒவ்வொரு தடவையும் சாப்பாட்டிற்கு பிறகு பற்களை சுத்தம் செய்ய முடியாதவர்களுக்கு ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' டூத்பேஸ்ட் கொண்டு அன்றாடம் பற்களை ஒரு தரம் விளக்கினாலும், அது உங்கள் பற்களை அதி வெண்மையாக வைப்பதன் மூலம் அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

சொத்தையிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' டூத்பேஸ்ட் கொண்டு அன்றாடம் ஒரு தரம் பல் விளக்கினாலும், அது சொத்தை மற்றும் பற்களில் குழிகளுக்குக் காரணமான கிருமிகளை பெரும்பான்மையாக ஒழிக்கிறது என்பதை பரிசோதனைகள் நிரூபிக்கின்றன.

வாய் நாற்றத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது: ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' டூத்பேஸ்ட் வாய் நாற்றத்தை உடனேயே அகற்றி, உங்கள் சுவாசத்தை காலையிலிருந்து இரவு வரை நறுமணத்துடனும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.


அதிசுத்தமான பற்கள்! வாய்க்கு விறுவிறுப்பு. ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' டூத்பேஸ்ட் உங்கள் பற்களை எவ்வளவு விரைவில் பிரகாசமாயும் அதி வெண்மையுடனும் வைத்து வாயையும் சுத்திகரிக்கிறது என்பதைப் பாருங்கள்.

முற்றிலும் நிரூபிக்கப்பட்டது!



விஞ்ஞான சோதனைகள் ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' கொண்டு ஒரு தரம் பல் விளக்கினாலும், அது சொத்தைப் பல் மற்றும் வாய் நாற்றத்திற்குக் காரணமான கிருமிகளைப் பெரும்பான்மையாக முற்றிலும் அழிக்கிறது

எப்பொழுதும் ஸூப்பர் ஒயிட் 'கோலினூஸ்' வேண்டுமென்றே கேளுங்கள்



Registered User
Geoffrey Manners & Company Private Limited


வைடெக்ஸ்
நீண்ட
கூந்தலை
வளர்க்கிறது.
PEARLINE-PARIS PRIVATE LTD.
P. O. Box 493, BOMBAY 1.

"இந்திரா! நானும் அம்மாவும் இன்றைக்கே ஊருக்குப் போகிறோம்."

"அப்படியானால் என்னுடன் என் அறைக்கு வாயேன்" என்று தோழியை அன்புடன் அழைத்துச் சென்றாள் இந்திரா. அங்கு சென்றதும் தன் பெட்டியிலிருந்து சந்தனப் பெட்டி ஒன்றை எடுத்துத் தன் சிநேகிதியின் கையில் வைத்தாள்.

"சுபத்திரா! இதை என் அடையாளமாக வைத்துக் கொள்" என்று வற்புறுத்தினாள் இந்திரா.

"இப்பொழுது எதற்கு? கல்யாணத்தன்று நீயே கொண்டு வந்து கொடு" என்றாள் சுபத்திரா.

"அதுவும் நல்ல யோசனைதான்" என்று மீண்டும் அதைப் பெட்டியில் வைத்து விட்டாள் இந்திரா. பிறகு சற்றுத் தயங்கிவிட்டு, "எந்தப் பள்ளிக்கூடத்தில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேனோ, அந்த இடத்துக்குப் பழைய ஆளே வருகிறாளாம். நான் சீக்கிரமே இந்த ஊரை விட்டுப் போய் விடுவேன்" என்றாள் இந்திரா.

"நீ ஊரை விட்டுப் போகக்கூடாது. என்னுடன்தான் இருக்க வேண்டும். வா, இந்திரா!" என்றாள் சுபத்திரா.

"நீயும் அழைத்துப் போவாய், நானும் வருவேன். ஆனால் நான் பள்ளிக்குச் செலுத்த வேண்டிய கடமை ஒன்று இருக்கிறதே? பதிலுக்கு ஆள் வரும் வரையில் இருக்க வேண்டுமே."

"அவர்கள் வேலையிலிருந்து நீக்கும் வரை இருக்க வேணுமோ?" என்று கடிந்தாள் சுபத்திரா.

"ஆமாம். அது என் வாக்கு. என் வாக்கைக் காப்பாற்றுவது ஒன்று தான் என் லட்சியம்."

"பெரிய வாக்கு!"

"உன்னிடம் நேசம் கொண்டதும் ஓர் உடன்படிக்கைதானே? அதையும் தவற மாட்டேன். என்னை நம்பு."


சுபத்திரா நிம்மதியுடன் விடு சென்றாள். அவர்கள் ஊருக்குச் சென்ற சேதியை விசாரித்து அறிந்து கொண்டாள் இந்திரா. மறுநாளே தன் வேலையை ராஜிநாமா கொடுத்து விட்டு அவள் கிளம்பி விட்டாள். பள்ளித் தலைவி, "ஏன் போகிறாய், இந்திரா? நீ இங்கேயே நிரந்தரமாக இருப்பாய் என்று எதிர்பார்த்தேனே?" என்று மிகுந்த பரிவுடன் கூறினாள்.

"எனக்கு மிகவும் வேண்டிய இருவருடைய வாழ்க்கை சிக்கலாக இருக்கிறது. அதைக் காப்பாற்ற நான் போய்த்தான் உதவ வேண்டும். நிலைமை சமாளித்த பிறகு மீண்டும் இடம் இருந்தால் வந்து சேவை செய்கிறேன்" என்றாள் இந்திரா.

"என்றைக்கும் உன் இடம் இருக்கும், அம்மா!" என்றாள் தலைவி, கனிவுடன்.

இந்திரா வேறு யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. இதுவரை தன் செய்கைக்கெல்லாம் சாட்சியாக இருந்த பிள்ளையாரையும் நந்தவனத்தையும் தரிசித்து விட்டுச் சென்றாள்.

"கடவுளே! எனக்கு மனவுறுதியைக் கொடு" என்று வேண்டிக் கொண்டு



"மாப்பிள்ளை! ஒவ்வொரு வீட்டிலேயும் மாமனார்கள், தங்கள் மாப்பிள்ளைமார்கள், ரயிலிலேயும், பிளேனிலேயும் தீபாவளிக்கு வரப் போவதைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்களே! நானும் அதைப் போலச் சொல்லிக்கொள்ள வேண்டாமா? தயவுசெய்து கொஞ்ச நாளைக்குக் கண் மறைவாக இருந்து, தீபாவளி அன்று காலையில் 'டாக்ஸி'யில் வந்து இறங்குங்களேன்!"

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

அவள் கிளம்பி விட்டாள். அவள் சென்ற இடம் ஒருவருக்கும் தெரியவில்லை.

மிராசுதார் வீட்டில் கல்யாண முஸ்தீபுகள் வேகமாக நடந்தன. திருமண தினத்தன்று சுபத்திரா தன் தோழிக்காக வழி பார்த்துப் பார்த்து விழியும் சோர்ந்தது.

நாட்கள் பறந்து சென்றன. இந்திரா தன்னை மறந்து விட்டாள் என்றே சுபத்திரா எண்ணினாள்.

சுபத்திரா தன் புருஷன் வீட்டில் பழங்குடியாகி விட்டாள். அவள் எதிர்பார்த்தபடியே ரங்கநாதன் பழைய காதலியைப் பற்றி நினைத்ததாகத் தெரியவில்லை. வீட்டைக் கவனித்தான். வீட்டினரைக் கவனித்தான், அவனுடைய நிலத்தைக் கவனித்தான். ஆவன செய்து செப்ப விட்டான். எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

சுபத்திராவின் மனத்தில் மட்டும் தோழியைப் பற்றி நினைவும் ஏமாற்றமுமாக இருந்தது.

"நீ கல்யாணத்துக்கு வராமல் இருந்து விட மாட்டாயே?" என்று அவள் கேட்டதும், அதற்கு இந்திரா "இருப்பேனா?" என்று பதில் கூறியதும் நினைவுக்கு வந்தன.

மூன்று வருடங்கள் உருண்டு ஓடி விட்டன. குடும்ப வாழ்க்கை, இன்பகரமாக அமையப் பெற்று வாழ்வதைத் தன் தோழி இந்திரா பார்த்து மகிழவில்லையே என்று நினைப்பாள் சுபத்திரா.

தீபாவளிப் பண்டிகை வந்தது. அவள் தன் உறவினர்களுக்கும் ஆட்களுக்கும் பரிசுகள் வழங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். தபாலில் சுபத்திரா பெயருக்கு வெகுமதி ஒன்று வந்தது. அவள் அதைப் பிரித்துப் பார்க்கும்போது இந்திராவின் சந்தனப் பேழை இருந்தது. "கையில் கனக்கிறதே" என்று கூறிக் கொண்டே திறந்தாள் சுபத்திரா. அது நிறைய மண் இருந்தது. மண்ணின் மீது ஒரு துண்டுக் கடிதம் வைக்கப்பட்டிருந்தது.— "நம் தோழமையின் சின்னமாகப் பெற்றுக் கொள்ளவும்" என்று எழுதியிருந்தது.

"சே, என்ன சிநேகிதி. அவள்மீது நான் எவ்வளவு பாசம் வைத்திருந்தேன். மண்ணை அள்ளிப் போடுவதா தோழமைக்கு அடையாளம்?" என்று தன் ஆத்திரத்தில் வாய் விட்டே கூறிவிட்டாள் சுபத்திரா.

ரங்கநாதன் அவள் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தான். அவளுடைய மனக்கசப்பைக் கண்டு, "பெட்டி உனக்கு வெகுமதி. மண் எனக்கு. குடும்பத்தை மணம் கமழ நடத்தும்படி உனக்கு உபதேசமும், பிறந்த மண்ணைச் செப்பனிட்டுப் பயன் பெறும்படி எனக்கு உபதேசமும்" என்றான் அவன் சாவதானமாக. பிறகு எங்கோ பார்த்தான்.

"ஆ! என்ன சொன்னீர்கள்? இந்திராவை உங்களுக்குத் தெரியுமா? அப்படியானால் அந்தப்......"

"ஆமாம்" என்றான் ரங்கநாதன். அவன் கண் கடையில் நீர் முத்து ஒன்று நின்று பிரகாசித்தது.

"ஐயோ, என்ன அறியாமை என்னுடையது? என்ன என்ன சொல்லி விட்டேன்! எனக்காக அவள்......அவள் அல்லவா தியாகி! நான் என்னவோ பேசினேனே? அவள் பேசிய ஒவ்வொரு பேச்சும் இப்பொழுதுதான் பொருள் தெரிகிறது" என்று புலம்பினாள் சுபத்திரா.

"பரவாயில்லை, சுபத்திரா! ஒருவர் தியாகத்தினால்தானே பலர் சுகமடைய முடியும்? அவள் என் மனைவியாக இருந்து செய்வதைவிட நீங்கி நின்று சாதித்து விட்டாள். நான்தான் அவளைத் தவறாக எண்ணிய பாவத்துக்குள்ளாகி விட்டேன். 'என் கை வேறு ஒருவர் தோழமைக்குச் சொந்தமாகிவிட்டது' என்றாள் அவள். அது நீதான் என்று அறிந்து கொள்ளத் தெரியாமல், அந்தத் தோழர் ஓர் ஆண் என்று நினைத்து விட்டேன்" என்றான் ரங்கநாதன்.

"அவள்தான் நமக்கு இனி குல தெய்வம்" என்றாள் சுபத்திரா. இந்திராவின் நினைவு சதிபதிகள் இருவரையும் மேலும் ஒன்று படுத்திவிட்டது.

"அவள் என்ன சொன்னாள் தெரியுமா?" என்று கேட்டாள் சுபத்திரா கண்டம் அடைக்க.

"என்ன சொன்னாள்?"

"'ஓர் அநாதை என்ன செய்யமுடியும்? அன்புதான் அவள் அளிக்கக்கூடிய உதவி. சீலம் ஒன்றுதான் அவள் சீதனம்' என்றாள். அதைவிட ஒரு பெண்ணுக்கு அணிகலன் என்ன வேண்டும்?"

ரங்கநாதன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. ஜன்னல் வழியாகத் தொலை தூரத்தில் தெரியும் பிள்ளையார் கோவிலையே அவன் கண்கள் நோக்கி நின்றன.


புத்தர் வாழ்க்கைக் காட்சி
கல்கி தீபாவளி மலர்-1958


புத்தர் வாழ்க்கைக் காட்சி ௨
கல்கி தீபாவளி மலர்-1958


புத்தர் வாழ்க்கைக் காட்சி
கல்கி தீபாவளி மலர் · 1958


புத்தர் வாழ்க்கைக் காட்சி ④
கல்கி தீபாவளி மலர்-1958



குப்பன் சாமி

பெ. தூரன்

கடவுளோடு குப்பன் பேசிக் கொண்டிருந்தான். மேட்டுக் குப்பத்துக்கு அருகிலே சற்றுத் தாழ்ந்த பகுதியாகவுள்ள சிறியமணல் வெளியை மூடிக்கொண்டு அடர்ந்து வளர்ந்திருந்த தாழம்புதர்க்குள் நடந்த சம்பவம்.

மேட்டுக்குப்பம் கடற்கரை மணலிலே ஏற்பட்டிருந்த சிற்றூர். மீன் பிடித்து வயிறு வளர்க்கிற பரதவர்களின் உறைவிடம். உயர்ந்த மணல் இட்டையிலே அந்த ஊர் அமைந்திருப்பதால் அதற்கு மேட்டுக்குப்பம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள் போலும்!

அதிகாலையில் எழுந்திருந்து ஆண்கள் கட்டுமரங்களில் ஏறி மீன் பிடிக்கக் கடலின் மேற்செல்லுவார்கள். அவர்கள் கொண்டு வருகின்ற மீன்களை விற்பது பெண்களின் பொறுப்பு. சென்னை நகரில் மீன்கூடைகளோடு அவர்கள்கூட்டமும் நடையுமாகச் செல்லுவதை நாள்தோறும் பார்க்கலாம்.

காலை எட்டு அல்லது ஒன்பது மணிக்குப் பார்த்தால் மேட்டுக்குப்பம் விரிச்சென்றிருக்கும். கடல் மேல் சென்ற ஆண்கள் கரைக்கு அப்பொழுதுதான் இருவர் மூவராகத் தனித் தனி கட்டுமரங்களில் திரும்பி வந்து இறங்கிக் கொண்டிருப்பார்கள். பெண்கள் மீன்களை எடுத்துச் செல்லக் கடலோரத்திலே கூடையோடு ஆவலாகக் காத்திருப்பார்கள். கிழவர்கள் மணற்பரப்பிலே வலைகளை விரித்துப் போட்டுப் பழுது பார்த்துக்கொண் டிருப்பார்கள்.

அந்தச் சமயம் பார்த்துக் குப்பன் தாழம்புதருக்கு வந்து விடுவான். அவனுக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கும். சின்னஞ்சிறு பருவம்தான்.

குப்பத்துக்குப் பக்கத்திலேயே அந்தப் புதர் இருந்தாலும் சாதாரணமாக அங்கு யாரும் வர மாட்டார்கள். ஆண்டுக் கணக்காக வளர்ந்த தாழை மரங்கள் அங்கே இருளண்டிய கூடாரம் போலக் கவிந்திருந்தன. அவற்றின் மத்தியிலே பேய்கள் வாசம் செய்வதாகக் குப்பத்து மக்கள் கூறுவார்கள். இரவிலே சில நாட்களில் காற்று வேகமாக வீசும் போதும், கடல் அலைகள் கொந்தளித்துக் குமுறும் போதும் தாழம்புதரிலிருந்து பயங்கரமான ஒலிகள் எழுவதுண்டு. 'ஹோ!' வென்று அலறுவது போலவும், 'ஊ! ஊ!' என்று ஊளையிடுவது போலவும் பலவிதமான ஓசைகள்



கேட்கும். பேய்க ளடிக்கிற கும்மா ளம் அது என்று குப்பத்தில் இருக்கும் வயது முதிர்ந்த கிழவிகள் பேசிக் கொள்வார்கள்.

ஆனால் பேயை யாரும் கண்ணால் பார்த்ததில்லை. அநேகமாகத் தினமும் அந்தப் புதருக்கு வருகிற குப்பனும் பார்த்ததில்லை. அவன் அரும்பாடுபட்டுத் தேடி எடுத்து வந்த கல் வடிவத்திலே கடவுளைத்தான் கண்டான்.

குப்பனுக்கு எப்படியோ அந்தச் சிறு வயதிலேயே கடவுளிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அவனுடைய தாயை மகளாகப் பெற்றுத் தந்த துரைக்கண்ணன் பூசாரியாக வாழ்க்கை நடத்தினான். பக்கத்துக் குப்பத்திலே இருக்கும் கடலம்மன் கோயிலிலே அவன் தான் பூசை செய்பவன். அவனுடைய சாயலாகப் பிறந்திருந்த குப்பனுக்குக் கடவுளிடத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

ஆனால் கடவுளைப் பற்றி அவனுக்கு ஒன் றும் தெரியாது. கடவுள் எதை வேண்டு மானாலும் செய்யக்கூடியவர் என்று பலர் சொல்லக் கேட்டு அந்த எண்ணம் மட்டும் அவனுடைய இளம் உள்ளத்திலே உறுதி யாகப் பதிந்திருந்தது.

தாழம்புதருக்குள் நுழைந்ததும் அவன் உலகத்தை மறந்து விடுவான். புதருக் குள்ளே ஓரிடத்திலே சுற்றி வளர்ந்திருந்த மரங்களின் அடியில் சிறிய மணல் இடை வெளி உண்டு. அங்கே ஒரு கல்லை நட்டு வைத்திருந்தான் குப்பன். அதுதான் அவனுடைய கடவுள். அதனிடத்திலே அவன் பேசிக் கொண்டிருப்பான்.

''சாமி! அப்பாவுக்கு இன்றைக்கு மீன் நிறையக் கொடுக்க வேணும்'' என்று வாய்விட்டுக் கூறி அவன் பிரார்த்தனை செய்வான். தாழம் புதருக்கு வரமுடிந்த நாட்களிலெல்லாம் இப்படி அவன் கேட்பான்.

அவனுடைய வேண்டுகோளுக்கு இரங் கிக் கடவுள் கொடுக்கிறாரோ என்னவோ, அந்த நாட்களிலெல்லாம் மீன் வேட்டை மிகத் திருப்தியாகவே நடந்தது. குப்ப னுடைய நம்பிக்கையும் நாள்தோறும் வளர்ந்துகொண்டே இருந்தது.

வழக்கம்போல் அந்த நாளும் அவன் கடவுளிடம் தனது பிரார்த்தனையைச் சொல்லிக் கொண்டிருந்தான். என்றும் நடைபெறாத அற்புதம் ஒன்று அன்று நடைபெற்றது. இது நாள் வரையிலும் கடவுள் மீன் நிறையக் கொடுத்ததே யல்லாமல் ஒருநாளும் அவனுடன் பேசிய தில்லை. அன்று பேசலாயிற்று.

''குப்பா! இன்றைக்குப் பெரிய கரு மீன் நாலு கொடுக்கிறேன். கவலைப் படாதே!'' என்றது கடவுள்.

மறுநாள் குப்பன் தாழம்புதருக்குச் சோர்ந்த முகத்தோடு வந்தான். கடவு ளிடத்திலே ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது அவனுக்கு.

''சாமி! நேற்றுப் பொய் சொல்லி விட்டாயே? தினமும் பேசாமல் நான் கேட்டபடி மீன் நிறையக் கொடுத்தாய். நேற்று நீயே கருமீன் நாலு கொடுப்ப தாகப் பேசிவிட்டு ஏமாத்தி விட்டாயே? இது திருட்டுத்தனந்தானே?'' என்று குப்பன் சற்று வெடுக்கென்று கேட்டான்.

இதைச் செவியுற்றுக் கடவுள் திடுக் கிட்டாரோ என்னவோ, நிச்சயமாகத் தெரியாது. ஆனால் தாழம்புதருக்குள் மறைந்திருந்த மாரிமுத்து நிச்சயமாகத் திடுக்கிட்டான். அவன் உள்ளத்திலே ஆயிரம் ஆயிரம் ஐயங்களும் கேள்விகளும் கொந்தளித்தன. ''குப்பன் சொல்லுவது மெய்யா? அவன் கேட்டதுபோலத் [illegible]









மும் கடவுள் மீன் கொடுத்தாரா? நான் நேற்று மறைந்திருந்து வேடிக்கையாகச் கருமீனைப் பற்றிச் சொன்னதுதான் பொய்த்து விட்டதா? இந்தக் கடவுள் கேட்டதையெல்லாம் கொடுப்பாரா? என்னை நல்லவனாக்கி விடுவாரா? எனக்குக் கன்னியம்மாள் கிடைப்பாளா? குப்பனை ஏமாற்றிய என்னைக் கடவுள் மன்னிப்பாரா?'' இப்படிக் கேள்விகள் குமுறியிட்டன.

குமுறும் உள்ளத்தோடு மாரிமுத்து தன் மறைவிடத்தை விட்டுக் குப்பனை நாடி வந்தான்.

''மாமா! இங்கே எதற்கு வந்தாய்? அக்காளைப் பார்க்கத் தானே? இருட்டுத்தனமாக வந்தாயா?'' என்று கேட்டான் குப்பன்.

அதை மாரிமுத்து காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவனுக்குத் தான் நல்லவனாக வேண்டுமென்று இப்பொழுது ஒரே ஆசை.

''குப்பா! இந்தச் சாமி நீ கேட்டதையெல்லாம் கொடுக்குமா?''

''நேற்று மட்டுந்தான் ஏமாற்றி விட்டது.''

''நிசமா கொடுக்குமா?'' மாரிமுத்துவுக்கு இன்னும் சந்தேகம்.

''தினமும் மீன் நிறையக் கொடுக்கச் சொல்லிக் கேட்பேன். சாமி அப்படியே கொடுத்தது. ஒரே ஒரு நாள் விசிறிமீன் வேணுமென்று நானே கேட்டேன். அன்றைக்கு அப்பாவுக்குப் பத்தெட்டு விசிறிமீன் கிடைச்சதாம். இப்படி நேற்று வரையிலும் கொடுத்தது.''

மாரிமுத்துவுக்குச் சந்தேகம் தீர்ந்துவிட்டது. பரம்பரையாக வந்து அவன் உள்ளத்திலே எங்கோ மறைந்து கிடந்த கடவுள் நம்பிக்கை கிளர்ந்து வலிமையோடு மேலெழுந்தது.

''என்னை இந்தச் சாமி நல்லவனாகச் செய்யுமா?'' தயங்கித் தயங்கிக் கேட்டான் அவன்.

சட்டென்று பதில் வந்தது. ''ஓ நிச்சயமாய் நான் சொன்னால் செய்யும். ஆனால் நீயும் என்னைப் போலக் கும்பிட வேணும்.''

மாரிமுத்து ஆழ்ந்த பக்தியோடு குப்பன் சாமிக்கு முன்னால் சாஷ்டாங்கமாகத் தாழம்புதருக்குள் விழுந்து வணங்கினான்.

''சாமி! மாமாவை நல்லவனாகப் பண்ணு'' என்று சொல்லிக் கொண்டே குப்பனும் அடி சாய்ந்தான்.

அப்பொழுதே நல்லவனாகி விட்டதாக உணர்ச்சி மேலிட்டது மாரிமுத்துவுக்கு. பட்டணத்தில் நடத்திய ஜேப்படி வாழ்க்கை யெல்லாம் கனவுபோல மறையலாயிற்று. கன்னியம்மாளுக்கும் குப்பனுக்கும் தந்தையான ஏழுமலை தன்னைத் திருடனென்று இகழ்ந்து வாய்க்கு வந்தபடி அன்று காலையில் கூறிய சொற்களும் அவனைத் தகித்துத் தாய்மைப்படுத்திக் கொண்டிருந்தன. மக்களை ஏமாற்றிப் பறிப்பதையே அதுநாள் வரையிலும் தொழிலாகக் கொண்ட அவனுக்கு மற்றொரு சிறிய சந்தேகமும் இடையிலே கிளம்பியது. ஜேப்படி வித்தைக்காரனுடைய மனம் மிக மிகப் பொல்லாதது.

இந்தக் கடவுள் அவனை நல்லவனாக்கும் என்பதற்கு என்ன அத்தாட்சி? கையிலே வைத்துப் பார்ப்பதற்குத் தகுதியாக ஒரு அத்தாட்சி கிடைத்தால் அதை நிச்சயமாக நம்பி விடலாம்.

''குப்பா! உன் சாமி இன்னொன்றும் எனக்குக் கொடுக்குமா? அதைக் கொடுத்தால்தான் உன் சாமியை நம்புவேன்.''

''கேள், மாமா! சாமி கட்டாயம் கொடுக்கும். எத்தனை கேட்டாலும் கொடுக்கும்.'' குப்பனுக்குச் சந்தேகமே கிடையாது.

''தங்க வளையல் ஒரு ஜதை எனக்கு வேணும். நாளைக்குக் காலையிலே இங்கே நான் வருவேன். சாமி கொடுக்க வேணும். அப்படிக் கொடுத்தால் இனி மேல் நான் ஒரு தப்பு வழிக்கும் போக மாட்டேன்'' என்ருன் மாரிமுத்து.

''நாளைக்கு வா மாமா. சாமி கொடுக்கும். ஆமாம், தங்கவளையல் எதற்கு? அக்காளுக்குக் கொடுக்கவா?'' குப்பன் கேலி செய்ய நினைக்கவில்லை; குழந்தை உள்ளத்தோடு கேட்டான்.

மறுநாள் காலையில் குப்பன் வருவதற்கு முன்பே மாரிமுத்து தாழம் புதருக்குள் நுழைந்தான். குப்பன் நட்டிருந்த கல்லுக்கு முன்னுல் ஒரு சிறு பெட்டியிலே புதிதாக ஒரு ஜோடி தங்கவளையல்கள் மின்னின. அவன் கல்லாகச் சமைந்து நின்று விட்டான். அவனுடைய கண்களையே அவனுல் நம்ப முடியவில்லை. மறுகணம் கண்ணீர் தாரை தாரையாக வடிய அவன் அடியற்ற மரம்போல் சாமியின் முன் விழுந்து பக்தி வெள்ளத்திலே மூழ்கித் திளைத்தான்.

சுமார் ஒரு மணி நேரம் அவன் அங்கு தனியாக அமர்ந்திருந்தான். அவன் புது மனிதனுகி விட்டான். சொந்தத் தாய் மாமனை ஏழுமலை அவனை இதுவரையிலும் இகழ்ச்சியாகப் பேசினுன்; இனி அப்படிப் பேச முடியாது. அவன் பழைய ஜேப்படி வித்தைக்காரனல்ல. அவன் எல்லோரும் மதிக்கப் புது வாழ்க்கை தொடங்கப் போகிருன். அவன் கண்களிலே ஒரு புதிய ஒளி பளிச்சிட்டது. பக்தியென்னும் சாணையிலே மாசு நீங்கும் மணி போல் மாரிமுத்து ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டிருந்தான்.

கடவுளைத் தொழுதுவிட்டு, வளையல் பெட்டியை எடுத்துக் கொண்டு அவன் வேகமாகப் புறப்பட்டான். எதிரிலே வந்த குப்பனைக்கூட அவன் கவனிக்கவே இல்லை.

''சாமி கொடுத்ததா?'' - இது குப்பனுடைய கேள்வி.

அந்தக் கேள்வியும் மாரிமுத்து காதுகளில் விழவில்லை.

ஏழுமலை இதற்குள் வீட்டுக்குத் திரும்பியிருப்பான். அவனைப்பார்த்துப்பேசவேண்டுமென்ற ஒரே ஆசையால் அவன் நிறைந்திருந்தான்.

எதிர்பாராத விதமாக அன்று ஏழுமலை சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்துவிட்டான். அவனைக் கண்டதும் மாரிமுத்து மிகுந்த உறுதியோடு பேச்செடுத்தான்.

''மாமா! நான் இன்றைக்குச் சொல்லப்போவது சத்தியம். இனிமேல் நான் புது மனிதன். ஒரு கட்டுமரம் விலை பேசி விட்டு வந்திருக்கிறேன். நாளைக்கே கடலின்மேல் புறப்படப் போகிறேன். இப்போது நான் பழைய சோம்பேறியல்ல.''

அவன் பேச்சிலிருந்த நிச்சயத்தையும் வலிமையையும் உணர்ந்து ஏழுமலை உள்ளூற மகிழ்ச்சி யடைந்தான். எல்லோரையும்போல மாரிமுத்துவும் பரம்பரைத் தொழிலைச் செய்து நாணயமாக வாழ வேண்டும் என்பதே அவன் விருப்பம்.

''அதுதான் எனக்கும் ஆசை. நீ நல்லாப் பிழைக்க வேணும். என் தங்கச்சி பையன் நாலுபேர்கள் மதிக்க நடக்கிறன் என்று நான் கேட்க வேணும்.''

''மாமா! இனி நான் உங்களைவிட்டு எங்கே போகப் போகிறேன்? கன்னியம்மாளை நீங்கள் எனக்குக் கொடுக்க வேணும். அம்மா உயிரோடிருந்தால் அவள் வந்து கேட்டிருப்பாள். அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. நானே உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். இதோ கன்னியம்மாளுக்கு வளையல் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று உணர்ச்சியோடு அவன் கூறிக்கொண்டே பெட்டியை எடுத்து மாமனிடம் நீட்டினுன்.

பெட்டியைப் பார்த்ததும் ஏழுமலைக்குப் பகீரென்றது. அவன் சட்டென்று அதை வாங்கித் திறந்து பார்த்தான். கோபம் அளவையும் மீறி வெடித்தது.

''என்டா, அயோக்கியப் பயலே! என் வீட்டிலேயே இந்த வளையல்களைத் திருடி விட்டு என்னிடமே கொண்டுவந்து கொடுக்கிறயா? உனக்கு எத்தனை திமிர் இருக்க வேணும்? இதுதானு நீ புதிய மனுசன் ஆனது?'' என்று கர்ஜித்துக் கொண்டே பக்கத்தில் கிடந்த படகுத் துடுப்பை எடுத்து ஓங்கினுன். ''ஒரே அடியில் மூளையைச் சிதற அடிக்கிறேன் பார்! என்னிடமா உன்னுடைய கைவரிசையைக் காண்பிக்கிறய்?''

இந்தக் கோபப் பேச்சை வீட்டுக்குள் ளிருந்தே பதைபதைத்த நெஞ்சத்தோடு கன்னியம்மாள் கேட்டாள். கதவருகே



ஓடி வந்தாள். ஓங்கிய துடுப்பையும், நெருப்புப் பறக்கும் கண்களையும் கண்டாள். எதிரிலே செயலற்று மரம்போல் மாரிமுத்து நின்றிருந்தான். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. குப்பன் சாமி பொய்த்துப் போக முடியாது என்று மட்டும் அவன் மனத்தில் உறுதி நிலைத்திருந்தது. அந்தச் சாமி பொய்யானுல் துடுப்படியை ஏற்று உயிர் விடவும் அவன் தயாரா யிருந்தான்.

அடுத்த கணத்திலே துடுப்பு அவன் தலையில் விழுந்திருக்கும். ''அப்பா!'' என்று கன்னியம்மாள் அலறினுள். ஏழுமலை கையை நிறுத்திச் சட்டென்று மகளைத் திரும்பிப் பார்த்தான்.

''நீங்கள் வாங்கி வந்த வளையல் இதோ என்னிடம் இங்கிருக்கிறது'' என்று உரத்துக் கூவினுள் மகள்.

ஏழுமலை துடுப்பைப் போட்டுவிட்டு வீட்டுக்குள் வரக் காலெடுத்து வைத்தான். அவனுக்குச் சந்தேகம் தீரவில்லை. ஆனுல் மகளிடத்திலே அவனுக்கு அளவு கடந்த அன்பும், மட்டற்ற நம்பிக்கையும் உண்டு. அவள் கூறுவதை யெல்லாம் ஏற்றுக்கொண்டு உண்மையை அறிந்து கொள்வதற்கு முனைந்தான்.

''அத்தான்! குப்பன் தாழம்புதரிலே இருப்பான். சாமியைக் கும்பிட்டு விட்டு அவனையும் அழைத்து வாருங்கள்'' என்ருள் கன்னியம்மாள். மாரிமுத்துவை வெளியே அனுப்ப வேண்டும் என்பது அவளுடைய நோக்கம்.

கனவிலே நடப்பவன்போல் மாரிமுத்து நடந்தான். உயிரைக் காத்தது குப்பன் சாமிதான்; அதற்குக் கும்பிடு போட வேண்டுமென்று அவன் விரைந்தான்.

அவன் தலை மறைந்ததும், ''அப்பா! உங்களிடம் நான் இதுவரையிலும் பொய் சொன்னதே இல்லை. இப்பொழுது சொல்லி விட்டேன். என்னை மன்னிக்க வேணும்'' என்று கூறி விட்டுக் கண்ணீர் வடித்தாள் கன்னியம்மாள்.

ஏழுமலை திகைத்துப் போனுன். இருந்தாலும் மகள் கண்ணீர் விடுவதை அவனுல் சகிக்க முடியவில்லை. ''என்னம்மா விசயம்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை'' என்று பரிவோடு கேட்டான்.

கன்னியம்மாள் விளக்கினுள். தாழம் புதருக்குள் குப்பன் வைத்து வணங்கும் சாமியிடத்திலே அத்தான் வளையல் வேண்டியதை அவள் மறைந்திருந்து கேட்டுக் கொண்டாள். சாமியிடத்திலே நம்பிக்கை ஏற்பட்டாவது அவன் திருந்தவேண்டுமென்று அவள் தன் தகப்பன் தனக்காக முதல் நாளில் வாங்கி வந்திருந்த ஒரு ஜோடி வளையல்களைப் பெட்டியோடு எடுத்து வந்து சாமியின் முன்னுல் வைத்து விட்டாள். மாரிமுத்து வளையற் பெட்டியை எடுத்தவுடன் தன்னிடமே கொடுக்க வருவான் என்றும், யாருக்கும் தெரியாமல் காரியம் முடிந்து போகும் என்றும் அவள் எதிர்பார்த்திருந்தாள். கன்னியம்மாள் எதையும் மறைக்கவில்லை; வழக்கம்போலத் தந்தையிடம் எல்லாம் கூறி விட்டாள்.


''நீ எதற்குத் தாழம்புதருக்குப் போனுய்?'' என்று கேட்டான் ஏழுமலை.

''அதுவா......அது......ம்'' தகப்பனிடமிருந்து அந்தக் கேள்வியை அவள் உடனே எதிர்பார்க்கவில்லை. அதனுல் தடுமாறிப் போய் விட்டாள். மேலும் அவள் எதையுமே அவனிடமிருந்து மறைத்ததில்லை. ஆனுல் தாழம்புதருக்குப் போன காரணத்தைக் கூற நாணம் குறுக்கிட்டது. ''அப்பா! வளையல் விஷயம் அத்தானுக்குத் தெரியப்படாது. அவருக்கு உண்டாகிற கடவுள் நம்பிக்கை கெட்டுப் போகக் கூடாது'' என்ருள்.

''சரி, கன்னியம்மா! உன் இஷ்டப்படியே எல்லாம் நடக்கும். கவலைப் படாதே'' என்ருன் ஏழுமலை. மகளைஅவன் புரிந்து கொண்டான்; மாரிமுத்து புது மனிதனுனதையும் புரிந்து கொண்டான்.

குப்பன்சாமிக்கு முன்னுல் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்தான் மாரிமுத்து.

''மாமா! இன்றைக்குச் சாமியிடத்திலே நான் மீன் கேட்கவில்லை. அக்காளுக்குச் சீக்கிரம் கலியாணம் ஆகவேணும், மேளங் கொட்டுவதை நம்ம வீட்டிலேயே பார்க்க வேணும் என்று கேட்டேன்.'' இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தான் குப்பன்.


அவசியம் தேவை
இது போல் தெருவில் நடக்கும் பெண்களுக்கு...
இது போல் பக்க வாத்யம் தேவை.
இதுபோல் புஸ்தகங்கள் சுமக்க...
இதுபோல் பயில்வான் தேவை.
இவர் போன்ற கட வித்வானுக்கு
இது போன்ற சட்டை தேவை
மணி







அகத்தியர்

வை. மு. நரசிம்மன்

பொது

அகத்தியரென்றவுடன் தமிழ் மொழியையும் அதன் இலக்கணங்களின் சீரிய அமைப்பையும் நமக்குத் தந்தருளிய பெருத்த வயிறு, நீண்ட தாடி, சடைமுடி, ஒரு கையில் கமண்டலம் அல்லது கவடி, மற்றொரு கையில் ஜபமாலை இவைகளைத் தரித்த ஓர் முதிய முனிவரின் குறுகிய வடிவம் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

சிவபிரானது ஆணையினால், அப்பிரானின் சேவையை விட்டுத் தென்னாட்டுக்குப் போந்து இனிய பைந்தமிழையும், பரமசிவனுடைய பல திருக்கோயில்களையும் நிறுவி என்றும் சிரஞ்சீவியாகப் பொதிய மலையில் இன்னும் வசிக்கிறார் அகத்திய முனிவர் என்பர் பலர்.

தமது தவ வலிமையால் கடல் கடந்து சுமத்ரா, ஜாவா, பாலி, மலேயா, கம்போடியா முதலிய போர்னியோயன் தீவுகளையடைந்து, அவ்விடங்களிலும் பல சிவாலயங்களையும், தமது கோத்திரத்தவர்களையும் நிலைநிறுத்தி, அங்கு இன்றைக்கும் முதற் கடவுளாக விளங்குகிறார். மூர்த்தியில் சிறியரேனும் கீர்த்தியில் பெரியவரும், காலத்தையும் இடத்தையும் கடந்தவருமான மாமுனிவென உணர்கிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ருக்கு வேதத்தை இயற்றிய மகரிஷிகளில் ஒருவரென அறிகின்றோம். இவர் இயற்றிய ருக்குகள் இன்றைய வழக்கிலும் இருந்து வருகின்றன. பாண்டிய நாட்டிலே முதலில் தமிழ்ச் சங்கம் நிறுவி அதற்குத் தலைமை தாங்கி, தமிழுக்குச் சிறந்ததோர் இலக்கணம் அருளிய பெரியவர் என்று இவரைப் போற்றுகிறோம்; இம்மகானைப் பற்றி இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், காஞ்சி புராணம், மற்றும் பலப்பல தல புராணங்கள், சுமத்ரா, ஜாவா, மலேயா முதலிய கீழ்நாட்டு நூல்கள் இவைகளில் காணலாம்.

வேத காலத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே (பூலோக உறுப்பிலக்கண விஞ்ஞானிகள் கூறும் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்த காலம்) சிவபிரானால் இரு திசைகளும் ஒருநிகர் செய்யத் தென்னாட்டுக்கு ஏவப்பட்டார் போலும். இவர் வடமொழி தென்மொழிகளில் மிக்க வல்லுநர். சிவபிரானையே குருவாகக் கொண்டு தமிழின் இலக்கணத்தைக் கற்ற பெருமையையுடையவர். சப்த ரிஷிகளுடன் ஒருசேர வைத்துச் சேர்த்து எண்மராகக் கருதப்படுபவர். நக்ஷத்திரவடிவாக வானில் விளங்குபவர். இந்திரன் வேண்டுகோளால் கடல் நீரை ஒரு கையால் முகந்து உண்டு கடலில் ஒளிந்திருந்த அரக்கர்கள் அழிக்கப்பட்டவுடன் மறுபடியும் கடல் நீரை உமிழ்ந்தவர். அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் பொய்யாத வாக்கு வன்மையுடையவர்.

பெயர்க் காரணம்:- அகம்: (சலியாதது என மலைக்குப்பெயர்) (விந்திய) மலையை, ஸ்தா: (அடங்கி) இருக்கச் செய்தவர்.

இவர் பிறப்பு பற்றிப் பலவிதமாகக் கூறப்படுகிறது. மித்ரா வருணர்களுக்கு ஊர்வசியின்மீது ஏற்பட்ட காதலால் கும்பத்தினின்றும் பிறந்தவர் என்பது ஒன்று. இதைக் கொண்டுதான் இவருக்கு மித்ரா - வருண புத்ரன், கலசஜர், கலசிஷ்டர், கும்பயோனி, கும்பசம்பவர், கடோத்பவர், குடமுனி முதலிய பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. குறுமுனி, தமிழ்முனி, சர்வஞர், பீதசாகரர் என்று பல காரணப் பெயர்களும் இவருக்கு உண்டு.

சித்த ஆசிருகு அகத்தியர்

ஆதிசித்தர் பதினெண்மருக்கும் அகத்தியர் உபதேச குருவாகவும் தலைவராகவும் கருதப்படுகிறார். சித்தர் எனப்படுபவர்கள் நம் அறிவுக்கும் எட்டாத சக்தியுடைய மகான்களாவர். "உருவா முடலினை அழியாவகையில் நிறுவிய பெரியோர்கள்." அவர்கள் உடலைத யொளிக்கச் செய்யவும், சாவா மருந்துண்டு திடகாத்திரத்தோடு ஞான முக்தியை யடையவும், வாதம் (இரசவாதம்), வைத்தியம், (பிணியகற்றுதல்), ஞானம் (ஆன்ம அறிவை வளர்த்தல்), யோகம் (பரம்பொருளோடு ஒன்றுபடுதல்) என நான்கு வகைகளைக் கையாண்டனர். வேத, ஆகமங்களில் உட்பொதிந்து மறைந்து கிடக்கும் பல அரிய பொருள்களைச் சித்தர் தங்கள் சாதனங்களான திறவுகோலால் வெளிப்படுத்தியுள்ளனர் எனலாம். சரீரத்தைப் பிணி, பசி மூப்புக்களால் தளர்வடையாமல் காயசித்தி முறையைக் கையாண்டு திடமாக்கி, பன்னிரண்டு பிராணாயாமத்தினால் மூச்சுக் காற்றின் நடையைக் கட்டுப்படுத்தினால் ஆனந்தத்தை யடையலாம் என்று போதித்துப் பல்லாயிரக்கணக்கான சித்தர் கூட்டங்களை, தென்னாடு, கீழ்த்திசை நாடுகள், மேல்நாடுகள் முதலிய இடங்களில் நிறுவி, அவர்களுக்குப் பல மடங்களும் ஆசிரமங்களும் அமைத்தவர். இத்தகைய மடங்களையும் அவைகளிலுள்ள சித்தர் குழாங்களையும் தாமே நேரில் சென்று கவனித்து வந்தார் என்றும் கூறுவர் பலர். காயசித்திக் குளிகை (மாத்திரை) களைச் செய்து தம் சீடர்களுக்குக்

1. அகத்தியன் பள்ளியிலுள்ள உற்சவ விக்கிரகம். 2. அகத்தியன் பள்ளி மூல மூர்த்தி. 3. தெற்கு ஜாவாவிலுள்ள பிரசித்திபெற்ற அகத்தியர் சிலை.

கொடுத்தார் என்றும், அவைகளுக்குப் பூசை முதலியன செய்து அவைகளைக் கொண்டு பல்வேறு வகைப்பட்ட நோய்களைப் போக்கினர் அச்சிட்டர்கள் என்றும் சொல்லப்படுகிறது. சப - அனுக்கிரக குளிகைகள் பன்னிரண்டினை மட்டும் அகத்தியர் தன் வசங்கொண்டு செயற்கரிய செயல் பலவற்றைச் செய்து, சிரஞ்சீவியாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்தக் குளிகைகளின் சக்தி நவீன ரசாயன ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது போலும்!

அகத்தியரும் தமிழும்

அகத்தியருக்கு முன் தென்னாட்டில் தமிழின் பெருமையை அறிய முடியவில்லை. அகத்தியரால்தான் தமிழ் சிறப்படைந்தது. அதனாலன்றோ 'அகத்தியர் என்றால் தமிழ், தமிழ் என்றால் அகத்தியர்' என்று இன்று வழங்கப்படுகிறது. "ஆகஸ்த்யமும் அநாதி" என்றார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும். கவேர அரசன் மகளை மணந்து, கங்கையாறுழைச் சென்று காவிரியாறைவாங்கிக் கமண்டலத்தில் கொண்டு தென்னாட்டில் பெரு நதியாகப் பெருக விட்டவர்.

அகத்தியம், வைத்திய நூல்கள், பெருந்திரட்டு, ஆயுள்வேத பாஷியம், விதி நூல் மூவகைக் காண்டம், வைத்திய சிந்தாமணி, செந்தூரம் 300, மணி 4000, சிவசாலம், சத்திசாலம், சண்முக சாலம், வைத்தியக் கண்ணாடி, வைத்திய ரத்நாகரம், வைத்தியம் 1500, 1600, கர்ம வியாபகம், கரிசில், பஸ்மம் 200, தண்டகம், பக்ஷிணி, நாடி என்பதாம். இவைகளில் அகத்தியம் என்னும் தமிழ் இலக்கண நூல் பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னும் இரு பிரிவினதாய்ப் பன்னீராயிரம் சூத்திரங்கள் கொண்டதான ஐந்திலக்கணங்கள் அடங்கிய நூல். அது இயல், இசை, நாடகம் என்னும் முப்பகுதி இலக்கணங்களைக் கொண்டு முச்சங்கத்தாருக்கும் இலக்கணமா யமைந்து, பல புலவர்களாலும் முதல் நூலாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் எக்காரணத்தாலோ இந்நூல் அழிந்து போயிற்று. அகத்திய சகலாதிகாரம் என்னும் பிம்ப வகைகளைப் பற்றிக் கூறும் நூலை இவர் இயற்றியதாகவும் கூறப்படுகிறது.

இவரிடம் வைத்திய நூல் கற்று உணர்ந்த தேரையர் போன்ற மாணவர்கள் பலராயினும், தமிழ் இலக்கணம் கற்ற மாணவர்களில் சிறந்தவர்கள் — தொல்காப்பியர் முதலிய பன்னிருவர் என்பது தெற்றெனப் புலப்படுகிறது.

வட இந்தியாவில் அகத்தியர்

காசியில் இவர் சிவபிரானை வெகு காலம் பூசித்து வந்தாரென்பதை அங்கு இன்றைக்கும் அகஸ்தியகுண்டாவிலுள்ள அகஸ்தீஸ்வர லிங்கம் தெரிவிக்கிறது. "விந்திய மடக்கிய வித்தகர்" என்ற பெயருடன் தண்டகத்தின் வட எல்லையாகிய சத்தியபுரி என வழங்கும் "பஞ்சவடியில்" (நாசிக்கின் அருகிலுள்ளது.) அகத்தியாசிரமம் என்று வழங்கும் இடத்தில் தங்கி விதர்ப்பன் மகளான உலோபா முத்திரையை மணந்தார். இவ்விடத்தில்தான் இராமபிரான் அகத்தியரைத் தரிசித்தாரென்று வால்மீகி ராமாயணம் கூறும். இங்கிருந்தபோது தான் ஆட்டுருவில் வந்த வாதாபியைப் புசித்துச் சீரணம் செய்தார் என்று கூறப்படுகிறது. பாதாமிக்கு மூன்று மைல்கள் கிழக்கிலுள்ள மலகூடா என்னும் இடத்தில் ஆசிரமம் அமைத்துச் சில காலம் இருந்ததாகச் சான்றுகள் இருக்கின்றன.

தென்னிந்தியாவில் அகத்தியர்

இவர் தெற்கேயுள்ள பல சிவ தலங்களைத் தரிசித்து, ஆங்காங்கு பல கோயில்களையும், கோத்திரக்காரர்களையும் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. தஞ்சை, பழநி, மதுரை முதலிய பெரிய சிவாலயங்கள் சித்தர்களால் நடத்தப்பட்டு வந்ததாகவும் தெரிகின்றன. வேதாரண்யத்துக்கு (திருமறைக்காடு) அருகில் பல்லாயிரக்கணக்கான சித்தர் குழாங்களை நிறுவி, ஓர் சிவாலயமும் எடுத்து ஒரு ஆசிரமமும் வகுத்தனர். அதற்கு அகத்தியம் பள்ளி என்று பெயர். அகத்தியர் வட கைலாயத்திலிருந்து தெற்கு வந்ததும் அங்கேயே தங்கி விட்டதாகவும் புராணங்கள் கூறுகின்றன. அதனால்தான் யாத்திரை சென்று திரும்பாமல் இருப்பதை "அகத்திய யாத்திரை" என்று சொல்வது மரபு. இவர் தென்னிந்தியாவில் பல காடுகளை நகரங்களாக்கிய சரித்திரத்தை இராமாயணத்தில் பல இடங்களில் காணலாம். தென்னிந்தியாவில் தம் கலாசாரத்தைப் பரப்பி வெற்றி கொண்டது எல்லோரும் அறிந்த விஷயம். இராமபிரான் இராவணனை வென்று சீதையை மீட்டதற்கு, அகத்தியர் தென் தேசங்களைச் சீர்படுத்தியமை ஒப்பிடப்படுகிறது. இவருக்குக்கராம்பி, கௌசால்யர், க்ஷகதர், சுமேதர், மாபு, காந்தராயணர், இந்தரவாகு, த்ருதஸ்வர் என்ற குமாரர்கள் இருந்ததாக மச்சபுராணம் கூறும். இவருக்குத் தென்னிந்தியாவில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் நாராயண வனத்திலும் வேதாரண்யத்திலும் உள்ளவை மிகப் பிரசித்தமானவை. ஒரு கையில் ஜப மாலையும் மற்றொரு கையில் கமண்டலமும் இவருடைய அடையாளம் எனலாம். சின்னமனூர் செப்புப் பட்டயத்தில் அகத்தியர் பல பாண்டிய மன்னர்களுக்குக் குலகுருவாக இருந்ததாகவும், சுந்தர பாண்டியன் என்ற பிரசித்தி பெற்ற மன்னன் இவருடைய சீடன் என்றும் கூறப்பட்டுள்ளது. இவரால் சிவபெருமானுக்குச் சமைக்கப்பட்ட கோயில்களில் முக்கியமானவையும், தேவாரத்தலங்களுமாக விளங்குபவை அகத்தியன்பள்ளி, இன்னம்பர், திருவெண்மிமலை, கீழ்வேளூர், குற்றாலம், திருக்குவளை, திருச்சிற்றேமம், தியாகவல்லி, திருநல்லூர், திருநெல்வேலி, திருப்பனங்காடு, திருமாகரல், திருமங்கலக்குடி, திருவாட்போக்கி, திருவேற்காடு என்பன.

கீழ்க் கிழக்கு நாடுகளும், அகத்தியரும்

இம் மகான் இந்து மகாசமுத்திரத்திலுள்ள போர்னியோ தீவு, குசுத்தீவு,

---

4. ஆந்திர ராஜ்யத்திலுள்ள கருட்டம் பள்ளி சிவாலயத்தில் இருக்கும் அகத்தியர் மூலமூர்த்தி. 5. ஜாவாவிலுள்ள அகத்தியரின் முதல் சீடரான தொல்காப்பியர் சிலை. தற்பொழுது படேவியா மியூஸியத்திலுள்ளது. 6. தஞ்சைக் கோயில் மண்டபங்கள் ஒன்றில் காணப்படும் சிலை.


4


5


6

வராகத் தீவு, சாங்கியத தீவு, மலய தீபகற்பம், ஜராத் தீவு முதலியவைகளில் வசித்ததாகவும், மலயத்தீவிலுள்ள மகாமலய பருவதத்தில் இருந்ததாகவும் வாயு புராணத்தில் கூறப்பட்டுள்ளது. பொதிய மலைக்கும் மலயபருவதம் எனப் பெயர் இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. இந்தோசீனாவிலுள்ள பழைய கல்வெட்டுக்கள், பௌத்த மதம் பரவுவதற்கு முன்னரேயே வேத, புராண சம்பந்தமான கடவுள் வழிபாடுகள் அங்கு வேரூன்றியிருந்ததாகத் தெரிவிக்கின்றன. கி. பி. 137 லேயே சம்பாவில் இந்து சாம்ராஜ்யம் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பல கல்வெட்டுக்கள் (கி. பி. 400) சிவபிரானுடைய பல கோயில்களின் திருப்பணிகளைக் குறிக்கின்றன. டாக்டர் கார்ன், - மஜூன்கல், கி. பி. 732 ஆம் ஆண்டு ஜாவாவிலுள்ள தெற்கு கேடோ என்ற இடத்திலுள்ள ஓர் சம்ஸ்கிருதக் கல்வெட்டை விளக்கியிருக்கிறார். அதிலிருந்து நாம் ஜாவாவில் இருக்கும் சிவபிரான் கோயில் அகத்தியருடைய பரம்பரையினரைச் சார்ந்ததாக இருக்கலாமென்று சொல்ல முடிகிறது.

மற்றொரு கல்வெட்டு, அகத்தியரே தமது மரபினர் உய்யுமாறு – 'வத்துரலோகா' என்னும் ஓர் கோயிலைச் சிவபிரானுக்குக் கட்டியதாகப் பறைசாற்றுகிறது. இம்மாதிரி இன்னும் பல கல்வெட்டுக்கள் அகத்தியருடைய பெருமைகளைப் பலவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆச்வலாயன கிருஹ்ய சூத்திரத்தில் அகத்திய கோத்திரத்தை 49 கோத்திரங்களுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. பிரசித்தி பெற்ற மாமூலர் என்ற சங்கப் புலவரும் தம்மை அகத்திய கோத்திரக்காரராகச் சொல்லியிருக்கிறார்.

கி. பி. 760 ஆம் ஆண்டு கல்வெட்டுக்கள் **தேவசிங்கன்**, அவன் மகன் **கஜயன்** முதலானோர் ஜாவாவின் கீழ்த் திசையிலுள்ள **தினயா** என்னுமிடத்தில் அகத்திய உருவத்தைச் சந்தன மரத்தால் செய்து வழிபட்டனர் என்றும், பின்னர் அந்நாட்டு மன்னனும் ஓர் விசித்திரமான கருங்கல்லில் அகத்தியர் உருவத்தைச் செய்து மரப்பிம்பத்துக்குப் பதிலாக வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கின்றன. இன்றைக்கும் ஜாவா, பாலித் தீவுகளில் இவருடைய பெயர், பிராமணங்கள் செய்யும் பொழுது கூறப்படுகின்றனவாம். அந்நாட்டு மொழியிலேயே உள்ள '' அகத்திய பர்வ '' என்ற நூலே அகத்தியர் மகனை ''**த்ரித்தாச்யுவுக்கு**'' உலக சிருஷ்டியைப் பற்றிப் புராண முறையில் சொல்லியிருப்பதாக இருக்கிறதாம். பல கல்வெட்டுக்களிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் அகத்தியர் வழிபாடு ஜாவாவில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே தென் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கொள்ள முடிகிறது.


ஜாவாவில் இவருடைய சிலைகள் தென்னிந்தியாவில் உள்ளவை போல், சடாமகுடம், அக்ஷமாலை, கமண்டலம், முன் தள்ளிய வயிறு முதலியவற்றுடன் காட்சி அளிக்கின்றன. இன்னும், இவர் பரமசிவனிடம் கொண்டுள்ள பக்தியின் மகிமையால் ஸாரூப்யம் அடைந்து மகாயோகியாக இருப்பது போலவும் காட்டப்பட்டுள்ளார். ஆதலால் சிவனைக் குருவாக உடையவர், பட்டாகுரு எனவும் அகத்தியரை ஜாவாவில் மிகச் சாதாரணமாகக் குறிக்கின்றனர். **சர் ஸ்டாம்போர்டு ராபின்ஸ்** (கி. பி. 1817-ல்) பாலித் தீவில் வணங்கப்படும் கடவுள்களின் வரிசைக் கிரமத்தை ஆராயும்பொழுது பட்டாகுருவே (அகத்தியர்) முதற் கடவுளாகக் கருதப்பட்டதாகச் சொல்லுகிறார். ஆகவே அகத்தியர் பாலி, ஜாவாத் தீவுகளில் முதற் கடவுளாக இன்றைக்கும் இருப்பதாகக் கொள்ளலாம். ஜாவாவின் பண்டைக்காலச் சரித்திரங்களின் வாயிலாக, பட்டாக் குருவின் உதவியால் தென்னிந்தியாவிலிருந்து வந்த அரசர்களால் அங்கு அரசாங்கம் நடத்தப்பட்டதாகவும், '**அஜீஜயபாயா**' என்னும் அரசன் பட்டாகுருவின் உத்தரவின் பேரில் மகாபாரதத்தைப் பாடியதாகவும் அறிகிறோம். கம்போடியாவில் அகத்தியர் வாழ்ந்ததாகவும் தெரிகிறது. **அங்கோர்வட்** என்ற இடத்தில் பிருகதீச்வரரை அகத்தியர் வழிபட்டதாக ஓர் கல்வெட்டு குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டு மிகப் பிரபலமான யசோவர்மமன்னனின் மூதாதை அகத்தியனெனவும், கம்போடியாவிலுள்ள பெரிய சிவாலயம் இவர் தூண்டுதலாலேயே கட்டப்பட்டது எனவும் குறிக்கின்றது.

கிழக்கு நாடுகளில் அரசகுடும்பங்களும், குருமார்களும், திருமணங்கள் மூலம் பந்துக்களாய் வாழ்ந்து வந்தார்கள். அகத்தியர் காம்போஜ அரசனை இராசேந்திர வர்மன் மகள் இராசலக்ஷ்மியைப் பிராமண குருவாகிய **திவாகரபட்ட**னுக்கு மணம் செய்வித்ததாகக் கல்வெட்டுக்களில் காணலாம். கி. பி. 400 ஆவது ஆண்டில் போர்னியோவில் **மௌரா – காமன்** என்ற இடத்தில் தோலன் நதிக்கரையின் பள்ளத்தாக்கிலிருந்த விஷ்ணு, சிவன், அகத்தியர் முதலிய ஆலய பிம்பங்களைக் **கோம்பங்கு** குகைக்குள் மறைத்து வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஜாவாவில் பகவான் த்ரணவிந்து அகத்தியருடைய முதல் சீடராகக் கருதப்பட்டு வருகிறார். மேலும் புத்தருடைய பின்னோராகவும் ஜமதக்னி முனிகுமாரனாகவும் இவரைக் கூறுகிறார்கள். அகத்தியரால் ஆட்கொள்ளப்பட்டு அவருடன் தெற்கே வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தென்னிந்தியாவில் இவர் த்ரணதூமாக்னி, தொல்காப்பியர் என அழைக்கப்படுவர். இவருக்கு ஜாவாவில் அநேக சிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றின் மேல் ''**பகவான் த்ருணவிந்து மகரிஷி**'' என நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. ஜாவாவில் அகத்தியருடைய இரண்டாவது சீடரான **மரீசியின்** சிலைகளும் உள.

இப்படியாகச் சிவபிரான் தந்த தமிழை அகத்திய மாமுனி கடல் கடந்த நாடுகளிலும் தமிழரின் நாகரிகங்களை நன்கு வேரூன்றிச் செழித்து வளரச் செய்தார். அம் மகானைத் தமிழ் மக்கள் என்றும் வணங்கக் கடமைப்பட்டவராவர்.

7. சிவனைக் குருவாகக்கொண்டவர் போல ஜாவாவில் அநேக இடங்களில் அகத்தியரைக் காட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு சிற்பம். திருசூலமும், தாடியுமே அகத்தியர் எனக் கூற அடையாளங்கள். 8. சிதம்பரத்திலுள்ள ஓர் முக்கிய சிற்பக் காட்சி. அகத்தியர் அவருடைய சீடர் பன்னிருவருள் முக்கியரான தொல்காப்பியர், அவிநயனார், காக்கைபாடினி, நற்றத்தனார் என்ற நால்வருக்கு உபதேசிக்கும் நிலை. அகத்திய முனிவருக்குப் பக்கத்தில் கமண்டலமும், சபமாலையும், வைக்கப்பட்டுள்ளன. 9. ஜாவாவில் சாதாரணமாகக் காணப்படும் அகத்தியர் விக்கிரகம். தற்பொழுது இது லண்டன் மியூஸியத்திலுள்ளது.


7


8


9



வழுக்குமரம்

அந்தப் பெண் சிரித்தாள்!

வெற்றிலைபோட்டுக்கொண்ட வெளிர்ச் சிவப்புப் படிந்த அழகான, அளவான பல்வரிசையில் நெஞ்சின் களிப்பெல்லாம் ஒருகணம் நிழலாடி மறைந்தன.

அவளுக்கும் எனக்கும் இடையே நாலரை அடி அகலமும் இரண்டு மூன்று அடி நீளமுமுள்ள ஒரு மேஜை கிடக்கிறது. மேஜைக்கு அப்பால் எதிரே மற்றொரு நாற்காலியில் அவள் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

வெளியே காம்பவுண்டுச் சுவருக்கு அருகில் புழுதி நிறைந்து மேடும் பள்ளமுமாகத் தூய்மையற்று விளங்கும் கிராமத்துச் சாலையில் அவள் வந்து இறங்கிய அழகான கார் நிற்கிறது. பலாப்பழத்தை மொய்த்துக் கொள்ளும் ஈக்களைப் போல் காரை அதிகம் பார்த்திராத கிராமத்துச் சிறுவர்கள் அருகில் வர அஞ்சி, எட்டி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள்.

அது ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடம்! சிறுவர் சிறுமிகளின் குரல்கள், ஆசிரியர்களின் அதட்டல், பிரம்படி ஓசை, இவ்வளவும் நிறைந்த சூழ்நிலையின் நடுவே நாங்கள் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டிருந்தோம்.

அவள் அமைதியைக் கலைத்துப் பேசினாள்.

"இரயில் பாதைக்கு முப்பது மைலுக்கு இப்பாலும், கார்கள் செல்லும் சாலைக்கு எட்டு மைல் அப்பாலும் உள்ள இந்தப் பட்டிக்காட்டு குக்கிராமத்தில் இருந்து கொண்டு உங்களால் எப்படிப் பத்திரிகைகளுக்கு எழுத முடிகிறது?"

"அப்படி இருப்பதனால்தான் நிறைய எழுத முடிகிறது" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னேன்.

நாங்கள் அமர்ந்திருந்த அறையைச் சுற்றிலும் கச முசவென்று பேச்சுக் குரல்கள் கேட்டன. பக்கத்தில் ஆசிரியர்கள் ஓய்வு நேரத்தில் தங்கும் அறை. அதற்கும் நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்துக்கும் நடுவே இடையிடையே கிழிந்த ஒரு மூங்கில் தட்டியை மறைப்பாக வைத்திருந்தார்கள். தட்டியின் இடுக்குகள் வழியே எத்தனை கண்கள் எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன? எத்தனை சிறுவர்கள் அந்தப் பெண் என்னோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை ஒரு அதிசயமாக எண்ணி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள்?

தரையில் புரளுவதுபோல் அணிந்த வாயில் புடைவையும், குதிகால் உயர்ந்த, வெள்ளை நாகரிகத்தை வெளிக்காட்டும் பூட்சும், முழங்கைவரை இறுக்கிப் பிடித்த சோளியுமாக ஒரு அழகிய இளம்பெண் தானே காரை ஓட்டிக்கொண்டு வந்து இறங்கினால் அது ஆச்சரியம்தானே?

"யாரோ ஒரு அம்மா உங்களைத் தேடிக்கொண்டு காரில் வந்து காத்திருக்கிறார்கள்" என்று படிப்பு நடத்திக் கொண்டிருந்த என்னிடம் பள்ளிக்கூடத்துச் சேவகன் வந்து சொன்னபோதே எனக்கு வியப்புத் தாங்கவில்லை.

துள்ளி எழுந்து வரும் மான் குட்டி போல் காரின் முன்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு அவள் இறங்கினாள்; வணங்கினாள். பதிலுக்கு வணங்கி வைத்தேன். 'வாருங்கள்' என்று கூற நினைத்தேன். சொற்கள் வரவில்லை. 'யார்?' என்று கேட்க எண்ணியும் கேள்வி வரவில்லை. "சகுந்தலை! உங்கள் வாசகர்களில் ஒருத்தி. உங்களை நேரில் பார்த்துவிட வேண்டுமென்று ஆசை. காரை எடுத்துக் கொண்டு வந்தேன்." அவளே முந்திக்கொண்டு சொல்லி விட்டாள்.

"ஓ! நீங்களா? அடிக்கடி கடிதங்கள் எழுதியிருக்கிறீர்களே?"


"கடிதங்கள் எழுதியதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வரி பதில் போடுவதற்கு மட்டும் உங்களுக்கு நினைவில்லை போலிருக்கிறது!"—குறும்பு கொப்புளிக்கும் குமிழ் சிரிப்பு—அதோடு குத்தலாக ஒரு கேள்வி.

"எங்கே பதில் எழுத முடிகிறது?" இந்தப் பதிலில் மட்டுமன்று, இதைச் சொல்லிவிட்டு நான் சிரித்த சிரிப்பிலும் அசடு வழிந்திருக்க வேண்டும். இதற்





நா. பார்த்தசாரதி



குள்ளேயே காரைச் சுற்றிலும் பள்ளிக்கூடத்து வாசலில் கூட்டம் கூடிவிட்டது.

"சகுந்தலே! வாருங்கள்; உள்ளே உட்கார்ந்து பேசலாம்."

அங்கே அப்படிப் பல பேர்கள் கூடிய கூட்டத்துக்கு நடுவில் தெருவில் நின்று அவளோடு பேசுவது என்னவோ போலிருந்தது எனக்கு. ஆகவேதான் அவளை உள்ளே அழைத்துச் சென்றேன். இதுதான் சகுந்தலை என்ற அந்த அழகி என்னைத் தேடி வந்த விவரம்.

உள்ளே அழைத்துச் சென்று எதிரே உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருந்தேன். நான் எழுத்தாளன். அவள் ரசிகை. அது மற்றவர்களுக்குப் புரிந்தால்தானே? கூடிக் கூடிப் பேசுவதும், குறிப்பாக வந்து எட்டிப் பார்ப்பதும் அநாகரிகமாகப் பட்டது எனக்கு.

பள்ளியில் விடுமுறை பெற்றுக் கொண்டு, "வாருங்கள். வீட்டுக்குப் போகலாம்" என்று அவளையும் அழைத்துக் கொண்டு அவள் காரிலேயே வீட்டுக்குப் புறப்பட்டேன். வழியில், வாசலில், தெருவில், எங்கும் ஏதோ நடக்கக் கூடாதது நடந்து அதைப் பார்ப்பதுபோல் ஒரு பார்வை. வீட்டு வாசலில் கார் வந்து நின்ற ஓசையைக் கேட்டு உள்ளே கைவேலையாக இருந்த தாய் கதவைத் திறந்தாள். அவளுக்கே ஆச்சரியம், பயம், பிரமிப்பு எல்லாம் ஏற்பட்டிருக்க வேண்டும். நானும், சகுந்தலையும் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் நுழைந்தபோது அம்மாவின் கண்களிலும், முகத்திலும் ஓடி மறைந்த உணர்வின் சாயல்களைக் கண்டு அதை நான் புரிந்துகொண்டேன்.

"ஏன் இப்படிக் காணாததைக் கண்டு விட்டது போல் வெறித்துப் பார்க்கிறார்கள்? இந்த ஊர் மக்களின் கண்களுக்கு இலக்கான முதல் மோட்டார் கார் இதுதானா?" வீட்டுக்குள் நுழையும்போது சகுந்தலை சிரித்துக் கொண்டே என்னிடம் இப்படிக் கேட்டாள்.

"சகுந்தலே! இது கிராமம். இங்கே அறிவைவிட உணர்ச்சிக்குத்தான் அதிக மதிப்பு. நல்லதை நினைக்க எவ்வளவோ நேரமாகும். தீயதை உடனே நினைப்பார்கள்; செய்வார்கள்."

"கதைகளில் எழுதுவது போலவே அழகாகப் பேசுகிறீர்கள்!"

"பேச்சுக்குச் சொல்லவில்லை. உண்மையே அதுதான்."

அவள் சிரித்துக் கொண்டே என்னைத் தன் மலர்விழிகளால் பார்த்தாள்.

வரிசை வரிசையாகப் புத்தகங்கள் அடுக்கிய கண்ணாடி பீரோக்களும், மூலைக்கு மூலை குவிந்து கிடக்கும் வாரப் பத்திரிகைகளும், மாத இதழ்களும், கடிதங்களும் நிறைந்த என் எழுத்தறைக்குள் அவளை அழைத்துச் சென்று உட்காரச் சொன்னேன். சந்தேகமும், பீதியும், பரபரப்பும் கொண்ட அம்மாவின் முகம் அறைக்குள் அப்போது எட்டிப் பார்த்துவிட்டுச் சென்றதைக் கவனித்தேன். சகுந்தலையும் கவனித்தாள் போலும்! "உங்கள் தாயாரா?"

"ஆமாம்! இங்கே உட்கார்ந்து ஏதாவது படித்துக் கொண்டிருங்கள். இதோ வந்து விடுகிறேன்."

அவளை அங்கே உட்காரச் செய்துவிட்டு வீட்டின் உட்புறம் சென்றேன். தேன் நாடிப் பறித்துத் திரியும் அழகும், துறுதுறுப்பும் மிக்க வண்டு ஒன்றைத் தேன் ததும்பும் மலர்கள் ஏராளமாகப் பூத்துக் கிடக்கும் ஒரு சோலைக்குள் விட்டு விட்டு வந்தது போன்ற உணர்ச்சி அப்போது என் மனத்தில் நிறைந்திருந்தது. எல்லைக்கு அடங்காத பெருமித உணர்ச்சி ஒன்று என் மனம் நிறையத் ததும்பி வழிந்து கொண்டிருந்தது.

"ஏன்டா! இதெல்லாம் உனக்கே நன்றாயிருக்கிறதா? யாரோ, ஊர் பேர் தெரியாத வயதுப் பெண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து இப்படி வீட்டுக்குள் உட்கார்த்திப் பேசுகிறாய்! இதெல்லாம் வீண் பழியாகப் பேச்சுக்களை உண்டாக்கும்! நாலுபேர்கள் நாலுவிதமாகநாக்கில் நரம்பின்றிப் பேசுவார்கள். ஊர் வாயில் விழுந்து கெட்ட பெயரைக் கட்டிக் கொள்ளாதே!" என் நெஞ்சத்துப் பெருமிதங்கள் சுக்குநூறாக உடைந்து தகர்ந்து சிதறின. முகத்தைச் சுளித்துக் கனல் பொங்கும் பார்வையால் அம்மாவைப் பார்த்தேன். படபடப்பாகப் பேசி முடித்த சாயலோடு தாயார் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

நல்லவேளை! அம்மா கூறிய இந்த வார்த்தைகள் சகுந்தலையின் செவிகளில் விழுந்திருக்க முடியாது. உள் வீட்டின் அடுக்களையின் ஒரு மூலையில் ஒடுங்கிய குரலில் என்னை நோக்கிக் கூறப்பட்ட சொற்கள் முன்புற அறையிலிருக்கும் அவளுக்குக் கேட்டிருக்க நியாயமில்லை.

"அம்மா! இரையாதே. அந்தப் பெண்ணின் காதில் விழுந்தால் ஏதாவது நினைத்துக் கொள்வாள். பாவம்! என்னைப் பார்த்துப் பேசிவிட்டுப் போக வேண்டுமென்று வெகு தூரத்திலிருந்து தேடி வந்திருக்கிறாள். காப்பி, பலகாரம் தயார் செய், அம்மா!"

என் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் மறுபடியும் ஆத்திரப்பட்டுப் பேசினாள் அம்மா. கோபம் குமுறிக் கொண்டு வந்தும் தாயாரிடம் அதை வெளிக் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தேன். நீண்ட நேரத் தர்க்க விவாதத்துக்குப்பின் தாயாரிடம் நயந்து பேசி ஒரு வழியாகக் காப்பி, பலகாரத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டு மீண்டும் முன் புறத்து அறைக்குத் திரும்பினேன்.

"சகுந்தலே!......நீங்கள்......" அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்த நான் திகைத்துப் போய்ப் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தி விட்டேன். தாயாரிடம் சாப்பிட மாட்டேனென்று முரண்டு பிடிக்கும் சிறு குழந்தை போல் முகத்தை 'உம்மென்று' வைத்துக் கொண்டிருந்தாள் அவள். அவள் கையில் தூசி படிந்து சுருண்டுமடிந்த காகிதம் ஒன்று இருந்தது.

எனக்குப் புரிந்து விட்டது. சில வாரங்களுக்கு முன் வெளிவந்த என்னுடைய சிறுகதை ஒன்றை அவள் மனம் திறந்து பாராட்டி எழுதிய விரிவான கடிதம் அது. கடிதங்களைப் பத்திரப்படுத்தி அழகாக மடித்துப் 'பைல்' செய்து வைக்கும் 'கெட்ட வழக்கம்' என்னிடம் கிடையாது. அறைக்குள் மூலைக்கு மூலை கவனிப்பாரற்றுச் சிதறித் தூசி படிந்து கிடக்கும் அவை! எப்போதாவது இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் கழித்து அம்மா அறையைப் பெருக்கி மெழுக வரும்போது அவைகளுக்கு விமோசனம் பிறக்கும்.

குழந்தைத்தனமான அவள் இரசிகத் தன்மை; குழந்தைத்தனமான அவள் கோபம்; இரண்டையும் எப்படிச் சமாளிப்பதென்றே எனக்கு விளங்கவில்லை.

''சகுந்தலை !... வந்து ..வந்து...நீங்கள் தப்பாக நினைத்துக்கொள்ளக் கூடாது.'' நான் சிரித்து மழுப்பிப் பேசி அவள் கோபத்தைத் தணிக்க முயன்றேன்.

''நீங்களெல்லாம் பெரியவர்கள். இலட்சிய எழுத்தாளர்கள். என்னைப் போல் ஒரு அசட்டுப் பெண் பாராட்டித்தான் உங்கள் எழுத்து வளர வேண்டுமா? ஏதோ தத்துப் பித்தென்று எழுதித் தொலைத்திருக்கிறேனே என்று கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடாத குறையாக வாங்கி மூலையில் போட்டு வைத்திருக்கிறீர்கள்!''

சரியான சவுக்கடி! சகுந்தலை என் உள்ளத்தின் மிக மிருதுவான பாகத்தில் அடித்து விட்டாள். சற்றுமுன் அவள் தேடி வந்தபோது என் மனத்தில் எத்தனை ஆயிரம் பெருமிதக் கனவுகளை அவள் எழுப்பினாள். தற்செயலாக நேர்ந்த ஒரு சிறிய தவற்றினால் அவள் மனத்தை வருத்த நேர்ந்து விட்டதே?'' எனக்கே நான் தவறு செய்துவிட்டேனென்று தோன்றியது.

பலகாரம் வந்தது. காப்பி வந்தது. சகுந்தலையின் வயிறு நிறைந்திருக்கலாம்! ஆனால் மனம்?.. அவள் அந்தக் கடிதத்தைப்பார்ப்பதற்கு முன்பிருந்த மலர்ச்சி, சிரிப்பு, குறும்புப் பேச்சு — எல்லாம் பார்த்த பின்பு எங்கோ போய் ஒளிந்து கொண்டன. சாயங்காலம் ஐந்து மணி வரை இருந்தாள். பின்பு விடைபெற்றுக் கொண்டு போய்விட்டாள். மனத்தில் குறையோடு — சடைவோடுதான் அவள் போனாள். எனக்கும், புழுதியில் நடந்து வந்த காலால் பூவை மிதித்து விட்டது போல் — தெரியாமல் மிதித்து விட்டுத் தெரிந்த பின் அருவருப்பும் தன்னை நொந்து கொள்ளுதலும் அடைவது போல் ஒருகுறை உள்ளத்தில் நிலைத்துவிட்டது.

அன்றிரவு முழுவதும் தூக்கமில்லை. வட்ட முழுமதியும் அதில் கரு வண்டுகளாய்ச் சுழலும் கண்களும், அழகும், அளவும் பொருந்திய அந்தச் செம்பவழ வாய்ச் சிறு முறுவலும் நினைவில் வந்து வந்து நோகச் செய்தன.

அமைதியும், மந்தமும் உள்ள கிராமத்தில் நாட்கள் ஆமைகளாய் நகர்ந்தன. திரும்பத் திரும்பக் குசேலர் கதையையும், நளன் கதையையும் அறிவுக் கூர்மையற்ற கிராமத்துச் சிறுவர்களுக்குக் கற்பித்து அலுத்த பள்ளிக்கூட வேலையின் போக்கிலும், எழுத்தின் முனைப்பிலும் அதை மறந்துவிட முயன்றேன்.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் கடுமையான டைபாய்டு ஜுரத்தினால் ஒரு மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். அந்தச் செய்தி எப்படியோ சகுந்தலையின் காதுவரையில்—நூற்றைம்பது மைல்களைக் கடந்து சென்று எட்டியது போலும்.

''செய்தி கேள்விப்பட்டேன்! தைரியமாக இருங்கள்! மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்களைப் பார்க்க வேண்டும்போலிருக்கிறது. இரண்டு நாட்களில் புறப்பட்டு வருகிறேன்'' என்று அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

..அந்தக் கடிதம் கைக்குக் கிடைத்தவுடன் முன்யோசனையாக மனோதத்துவ ரீதியில் சிந்தித்து ஒரு தந்திரமான காரியம் செய்து வைத்தேன் நான்.

முன்பு எப்போதோ அவள் எழுதியிருந்த பழைய கடிதம் ஒன்றை எடுத்துப் படக் கடையில் கொடுத்துக் கண்ணாடி சட்டம் போட்டுக் கொண்டு வரச் செய்தேன். முத்து முத்தான அவள் எழுத்துக்களுக்கு மேலே. ''என் எழுத்து ஏற்றுக் கொண்ட ஈடு இணையற்ற சன்மானம்'' என்று தலைப்பு எழுதி அறையில் பார்வையில் படும்படியான இடத்தில் தொங்க விட்டேன். மறுநாளைக்கு மறுநாள் சகுந்தலை வந்தாள். தொண்ணூறு நாட்களுக்குப்பின் மறுபடியும் அந்தக் கார் என் வீட்டு வாசலில் வந்து நின்றது.



அந்த முறை சகுந்தலை நான்கு நாட்கள் என் வீட்டில் தங்கினாள். அப்போது அவளுக்குக் கல்லூரியும் விடுமுறையாக இருந்தது. பி. ஏ. இறுதியாண்டும் எழுதி விட்டாள். அந்த நான்கு நாட்களும் அவள் ஓடியாடி எனக்குச் செய்த பணி விடைகளைக் கண்டபோது என் தாய் கூட மனம் மாறிவிட்டாள். சகுந்தலையை, ''கள்ளங்கபடமில்லாத பெண். தங்கமான குணம். படித்ததற்குக் கொஞ்சமாவது கர்வம் இருக்கிறதோ?'' என்று என்னிடமே புகழத் தொடங்கி விட்டாள்.


நான் நினைத்தபடி சகுந்தலை அவள் கடிதத்துக்குக் கிடைத்திருக்கும் மரியாதையையும் பார்த்துக் கொண்டாள். என்னிடம் அவள் அதைப் பற்றிக் கேட்கவில்லையானாலும் மழை பெய்த சில நாட்களுக்கெல்லாம் புல்வெளிகளில் தென்படும் பசுமையைப் போல் அவள் அதை என் அறையில் கண்டபின் அவளிடம் நிலவிய மகிழ்ச்சியை நானே பார்த்தும் சிந்தித்தும் அறிந்துகொண்டேன்.

ஐந்தாவது நாள் மாலை அந்தப் பச்சை நிறக் காருக்குள் இந்தப் பச்சைக் கிளி பறந்து போய்விட்டது. அதன் பின் 'சகுந்தலை' என்ற கந்தர்வ உலகத்துக்

கனவை நான் ஏறக்குறைய மறந்தே போக வேண்டிய சூழ்நிலைகள் என் வாழ்வில் ஏற்பட்டு விட்டன.

மறு வருடமே நான் நகரவாசியாக மாறி விட்டேன். கிராமத்துப் பள்ளிக்கூட வேலையை உதறிவிட நேர்ந்தது. வேகமும், நின்று நினைக்க அவகாசமும் இல்லாத நகரத்தில் எத்தனையோ புதிய சிநேகிதர்கள், சிநேகிதிகள் எல்லோரும் கிடைத்தார்கள். தை மாதத்தில் எனக்குத் திருமணமும் முடிந்து விட்டது.

குடும்ப வாழ்வில் இறங்கினேன். பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் எழுதும் வழக்கம் மட்டும் என்றும் போல் அப்படியே இருந்தது. எப்போதாவது ஏதாவதொரு வாசகரிட (பெண் வாசகர்) மிருந்து கடிதம் வந்தால் அப்போது சில விநாடிகள் சகுந்தலை நினைவுக்கு வருவாள். அடுத்த கணமே அந்த நினைவும் மறைந்து விடும். வயதும், குடும்பப் பொறுப்பும், குழந்தை குட்டிகளும் அதிகமாக, தனிமையான நினைவுகளை, உல்லாசமான சிந்தனைகளை, எழுதும் ஆற்றல் என்னிடமிருந்து குறைந்து வருவதாக எனக்குத் தோன்றியது. அது என்னுடைய தனிப்பட்ட தாழ்வு மனப்பான்மையோ என்று நினைக்கவும் முடியவில்லை. வரவரப் பெண் வாசகர்களின் பாராட்டே குன்றி வந்ததுபோல் எனக்கு ஒரு பிரமை உண்டாயிற்று.



கணவர் :—போதும்டாப்பா! போதும்! இனிமேல் நம்மாலே மிச்சப்படுத்த முடியாது!

* * *

ஐம்பத்தெட்டு ஆண்டுகள். அரை நூற்றாண்டுக்கும் அதிகம். வெளுத்து நரைத்த தலையும், வரி வரியாய்ச் சுருங்கிய நெற்றியும் பொறுப்பை நினைவு படுத்தும் வயது.

பதினெட்டு வயதில் எனக்கு ஒரு பெண். அவளுக்கு வரன் தேடி ஊரூராய் அலைந்து கொண்டிருக்கிறேன். எழுத்தாளன் பெற்ற பெண் என்றால் மாப்பிள்ளைகள் போட்டி போட்டுக்கொண்டா வருகிறார்கள்? புகழ் வேறு! பணம் வேறு ஐயா. இரண்டும் இரு வேறு உலகத்து இயற்கை.

கும்பகோணத்தில் ஒரு வரம் குதிரும் போலிருந்தது. பார்த்துப் பேசிவிட்டு ஊர் திரும்பினேன். இரவு ரயிலில் கூட்டமில்லை. திருமணச் செலவுகள் பற்றி யோசித்துக் கொண்டே ரயிலில் அலுப்பு மிகுதியால் கண்ணயர்ந்து விட்டேன். அந்தக் 'கம்பார்ட்மெண்டு' முழுதும் அநேகமாகக் காலியாகத்தான் இருந்தது. வண்டி புறப்பட்ட பின் அடுத்தடுத்து வரும் ஸ்டேஷன்களில் யார் யாரோ ஏறினார்கள் போலிருக்கிறது. எனக்குத் தூக்கக் கலக்கம். பேச்சுக் குரல்கள், குழந்தையின் அழுகை, எல்லாம் எழவே தூக்கம் கலைந்து கம்மா கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தேன்.

"ஏண்டி தடிக் கழுதை! எப்போ இருந்து சொல்லிக் கொண்டு வருகிறேன் நான்? கண்டவன், எழுதின குப்பைப் புத்தகத்தை யெல்லாம் படித்து ரயிலில் கண்ணைக் கெடுத்துக் கொள்ளாதே! தலையைச் சுற்றி வெளியில் எறிந்து விட்டுத் தூங்கு." வயதான பெண் குரல் ஒன்று ரயில் ஓடும் 'கடக், கடக்' ஓசையையும் மீறிக் கூப்பாடுபோட்டு இரைந்தது. மெல்லக் கண்களைத் திறந்து எதிர் வரிசைப் 'பெஞ்சை'ப் பார்த்தேன்.


என் நெஞ்சில் யாரோ ஓங்கி அடிக்கிற மாதிரி இருந்தது. காரணம் அந்த யுவதி கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தது நான் இளம் வயதில் எழுதிய நாவல். காதற் கலையைச் சித்திரிப்பதில் இணையற்ற நவீனமென்று பத்திரிகைகளில் மதிப்புரை பெற்று ஆறேழு பதிப்பு விற்ற புத்தகம் அது! ஆ! இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது இப்போது. இந்தப் புத்தகத்தைப் படித்து விட்டுத்தான் சகுந்தலை என்ற பெண் முதன் முதலாக எனக்குக் கடிதம் எழுதினாள். என்னைத் தேடிக் கொண்டு நான் பள்ளி ஆசிரியனாக வேலை பார்த்து வந்த சின்னஞ்சிறு கிராமத்துக்கு வந்தாள். என்னைத் தேடி ஒரு நாகரிகமான பெண் வந்ததைப் பார்த்து அந்தக் காலத்தில் சினிமாவும், தினப்பத்திரிகையும் நுழையமுடியாத அந்தக் கிராமத்து மக்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

ஏன்? நானே அவளையும் அவள் வந்திருக்கிற விஷயத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன். என்னைத் தேடி வந்திருக்கும் ரசிகைதான் எவ்வளவு அழகானவள்? எத்தகைய இலக்கியப் பண்பு நிறைந்த நவீனமான உள்ளம்படைத்தவள். புத்தம் புதிய காரில் தானே சவாரி செய்து கொண்டல்லவா என்னைத் தேடி வந்திருக்கிறாள். இந்த பாலப் பருவத்துக் குமரிக்குத்தான் எவ்வளவு துணிச்சல்! நான் பாக்கியசாலி! உலகத்திலேயே பெரியவன். காளிதாசனுக்கு சகுந்தலை என்ற பெயரில் ஒரு கதாபாத்திரம்தான் கிடைத்தாள். எனக்கோ ஒரு ரசிகையே கிடைத்திருக்கிறாள்! என்றெல்லாம் எண்ணி எண்ணி வியந்து போனேன். அதன் பின் அவள் என்னிடம் எவ்வளவு நெருங்கிப் பழகினாள்?

அவ்வளவு அருமையான நாவலை இழித்துப் பேசிய அந்த மூதாட்டியின் முகம் எப்படி இருக்கிறது பார்க்கலாம் என்று நன்றாக எழுந்து உட்கார்ந்து திரும்பிப்பார்த்தேன். பார்த்த கண்கள் பார்த்துக் கொண்டே இருந்தன! அடுத்த கணம் என் நெஞ்சைக் கிழித்துக் கொண்டு, "சகுந்தலை நீயா? நீயா இப்படிச் சொன்னாய்!" என்ற அலறல் கிளம்ப இருந்தது! அதிகம் சிரமப்பட்டு என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டேன். "கண்ட கண்ட புத்தகத்தைப் படித்துக் கெட்டுப் போகாதே" என்று தன் மகளை அக்கறையோடு கடிந்து கொண்ட அந்தத் தாய் யார் தெரியுமா?

வேறு யாருமில்லை! சகுந்தலையேதான்! ஒருகாலத்தில் படிப்பும், அழகும், முற்போக்கும் கொண்ட புதுமைப் பெண்ணாக விளங்கிய சகுந்தலை இன்று எல்லாவிதத்திலும் உருமாறிப் போய்விட்டாள். பெற்று, பட்டு, வாழ்ந்து, தாயாகிப் பாட்டியாவதற்கு இருந்த அவள் கோலம் என் நெஞ்சைக் குத்தியது. இத்தனை வருடங்களாக என் புகழ்க் கொடி எந்தக் கம்பத்தை ஆதாரமாகக் கொண்டு யாருடைய தூண்டுதலால் பறப்பதாக நான் கனவு கண்டுகொண்டிருந்தேனோ அந்தக் கம்பம் கொடிமரமாக இல்லை; வெறும் வழுக்கு மரமாகிவிட்டது. தாபத்தோடு நான் மறுபடியும் அவள் கிழடு தட்டின முகத்தைப் பார்த்தேன்.

அந்த மூதாட்டி என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை! என்னை யாரென்று அவளால் இனங் கண்டுகொள்ளவும் முடியவில்லை. ரயிலில் இப்படி மூன்றாவது மனிதன் அநாகரிகமாகப் பார்க்கிறானே என்று எண்ணி, முகத்தைச் சுளித்தாள்!



Pioneer Cotton Spinners
WE SPIN
40s, 60s, 80s & 2/60s
CARDED
80s & 100s
COMBED
No. of Spindles
27226
Estd: 1935
AN OUTSTANDING OPINION
"A visit to this Mill is a revealing experience. For excellence of maintenance and efficiency of Management it is second to none."
(Sd.) D. S. JOSHI
Textile Commissioner
to Govt. of India
THE COIMBATORE
PIONEER MILLS LTD
PEELAMEDU • COIMBATORE 4.
PHONE 160 & 361
GRAMS PIONEER


நரையின்றி நாசூக்காக முதுமை அடையலாம்
Loma
லோமா
REGD
அகில உலகும் வியந்து போற்றிட கேசத்திற்கு இயற்கைக் கருமையூட்டும் தைலம்
லோமா இப்பொழுது விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட பாட்டில்களில் மோசடி செய்ய முடியாத மூடியுடன் கிடைக்கிறது.
லோமாவினலும் கருமையாக்க முடியாத நரை மயிரே இருக்க முடியாது!
லோமா என்பது வெறும் சாயம் அல்ல, கேசத்திற்கு இயற்கையான கருமையூட்டும் தைலம். அதே சமயம் கேசத்திற்குச் செழிப்பும் உரனும் ஊட்டும் உன்னதமான அருமருந்துங்கூட!
ஏஜெண்டுகள்:
வி. நரோத்தம் அண்ட் கோ.
மங்கள்தாஸ் ரோடு, பம்பாய்-2
போன்: 30576
ஏகபோக ஏஜெண்டுகள்:
எம். எம். கம்பாட்வாலா
அஹமதாபாத்-1

MPS



தரத்தில் தலைசிறந்தது!
சிக்கனத்திற்கும், உயர்ந்த ரகத்திற்கும், நீடித்த உழைப்பிற்கும் பட்டு போன்ற மிக மிருதுவான தன்மையுள்ள எமது டி. எஸ். டி. பிராண்ட் நூல்களுக்கு ஈடு இணை வேறு இல்லை. முற்றிலும் நம்பகம் வாய்ந்தது. இன்று கடைகளிலேயே மிகச் சிறந்த பண்டமாக நீங்கள் வாங்கக்கூடியது.
TST
தி சதர்ன் டெக்ஸ்டைல்ஸ் லிட்.,
சூலூர் (P.O.) கோயமுத்தூர்
PHONE-1373 GRAMS-SOUTHERN
Managing Agents:
A.G.DAMODARASWAMY NAIDU BROS.&CO.



அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!
ராதா போரிங் பவர் மெஷின் தயாரிப்பவர்கள்
மேற்படி மெஷின்களை விற்பனைக்கோ அல்லது வாடகைக்கோ தரப்படும்
தேவையுள்ளவர்கள் விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்
RADHA FOUNDRY
OFFICE-4/10.BLACKSTONE ROAD,RED FIELDS. .... WORKS- TRICHY ROAD.
PHONE-49. COIMBATORE GRAMS-DRILLER
SUNDARAM

அருவிக்கரை அழகி



அகிலன்

முன்னுரை :

சிங்காரவேலு என்ற வாசகர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதைக் கடிதம் என்று சொல்வதை விடச் சிறுகதை என்றே சொல்ல வேண்டும். அவருடைய சொந்த அநுபவக் கதை அது. ஆனால், முழுமையான சிறுகதையல்ல; முக்காலே மூணுவீசம் சிறுகதை. அதன் முடிவை அவரிடம் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்போல் இருந்தது. கடிதம் எழுதி அவரை வரவழைத்தேன்.

சிங்காரவேலுவுக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கும். நல்ல சிவப்பு; நடுத்தரமான உயரம்; பெண்மை கலந்த முகச்சாயல். மிகவும் வெட்கப்பட்டுக் கொண்டே என் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். இரண்டாவது உலகப் போரில் கலந்து கொண்டவர். பர்மா எல்லையில் ஒரு மலைக்காட்டுப் பிரதேசத்தில் நடந்த காதல் நிகழ்ச்சியை அவர் எழுதியிருந்தார். மலைச்சாதிப் பெண் லியோ என்ற அழகிக்கும் அவருக்கும் ஏற்பட்ட அன்பின் தொடர்பு அப்படி அவரை எனக்குக் கதை சொல்லத் தூண்டி விட்டதாம்.

''ஆமாம், லியோவை நீங்கள் கடைசியாகச் சந்தித்த பிறகு அவளுக்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டேன்.

''அதுதான் எனக்கும் தெரியவில்லை'' என்றார் சிங்காரம். ''என்னை அந்தக் கிராமத்திலிருந்து இழுத்துக்கொண்டு வந்து விட்டார்கள். சரியாக ஒரு வருஷத்துக்குப் பிறகு ராணுவத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைத்தது. திரும்பவும் நான் இனிமேல்தான் அங்கே புறப்படப் போகிறேன். தந்தி, தபால் முதலிய எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளமுடியாத பயங்கரமான காட்டுப்பிரதேசம் அது. ஆனால், அங்கே போய் லியோவின் நிலைமையைத் தெரிந்துகொள்ளாதவரை எனக்குத் தூக்கம் வராது.''

அந்த இளைஞரின் பிடிவாதம் எனக்கு வியப்பைத் தந்தது. எங்கோ ஓர் இடத்தில், அடர்ந்த கானகத்துக்குள்ளே, மலர்ந்த மலரின் நறுமணம் அவரை இடைவிடாமல் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறதே! திரும்பவும் தமிழ் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களைத் தாண்டிப் பர்மாவின் எல்லைக்குப் போகப் போகிறாரா?

''நீங்கள் அங்கே போவது உண்மையானால், போய் வந்தபிறகு எனக்குக் கடிதம் எழுதுங்கள். அல்லது நேரில் வந்து பாருங்கள்'' என்றேன். கதை படிக்கும் வாசகர்களுக்கு எப்படி அதன் முடிவைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் உண்டோ அத்தனை ஆர்வம் எனக்கும் உண்டல்லவா?

சிங்காரவேலுவின் கடிதப் பகுதியை அவர் நேரடியாகச் சொல்வதையே—என் எழுத்துக்களில் தருகிறேன். முதலில் அந்த முக்காலே மூன்று வீசம் கதைப் பகுதியைக் கொடுத்து விட்டால் அவர் திரும்பி வந்தவுடன் அவரது முழுக் கதையையும் கூறிவிடலாம் அல்லவா?

சிங்காரவேலு கூறுகிறார் :

என்னால் சும்மாயிருக்க முடியவில்லை. சண்டையில் சேர்ந்தேன். பலனைகள் சுற்றிப் பலதண்ணீர் குடித்து, பல வீரதீரச் செயல்கள் செய்ய வேண்டுமென்று எனக்கொரு ஆசை. திரைப் படங்களில் 'ஸ்டண்டு'களைப் பார்த்துப் பார்த்து எனக்கும் பல 'ஸ்டண்டு'கள் நடத்த வேண்டுமென்ற துடிப்பு. பட்டாளத்தில் புகுந்தால் இதற்கெல்லாம் இடம் கிடைக்குமல்லவா? சேர்ந்து விட்டேன். துப்பாக்கி பிடிக்காத கையும் ஒரு கையா? சண்டை போடாத மனிதனும் ஒரு மனிதனா?

நான் ஓரளவு படித்துத் தொலைத்திருந்ததால் பட்டாளத்தில் சேர்ந்ததும் எனக்குக் குமாஸ்தா வேலைதான் கொடுத்தார்கள். என்றாலும் பிரேடுகள், பயிற்சிகள், துப்பாக்கி பிடித்தல், ஓடுதல், ஒளிதல், முன்னேறுதல், பின்வாங்குதல் முதலிய எல்லா விவகாரங்களும் அங்கே உண்டு. 1941ல் இந்தியாவில் பயிற்சிகளை முடித்தபின் 1942ல் பர்மா போர் முனைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

நாங்கள் இந்தியாவிலிருந்து பர்மாவை நோக்கி முன்னேறும்போது, பர்மாவில் இருந்த எங்கள் துருப்புக்கள் பர்மாவை ஜப்பானியரிடம் கோட்டை விட்டுவிட்டுப் பின்வாங்கத் தொடங்கின! எதிரிகளை எதிர்ப்பதற்குப் பதிலாக நாங்கள் எங்களைச் சேர்ந்த வீரர்களையே எதிர்கொண்டழைத்தோம். ஆகவே நாங்கள் முன்னேற்றத்தை நிறுத்திக் கொண்டு இந்திய எல்லைக்குள் பத்திரமாக இருந்தோம்.

எங்களுக்கு அதே இடத்தில் தங்கி எல்லையைப் பாதுகாக்கும்படி மேலிடத்து உத்தரவு வந்தது. ஜப்பானியரைத் தடுத்து நிறுத்துவதாகப் பெயர் பண்ணிக்கொண்டு நாங்கள் வேளா வேளைக்கு எங்கள் சாப்பாட்டையும் பயிற்சிகளையும் கவனித்து வந்தோம். ஜப்பானியரைத் தடுத்து நிறுத்த வேண்டிய தேவையே எங்களுக்கு வரவில்லை. விவரம் தெரியாமல் மலையாளிலும்



பர்மாவிலும் அகலக் கால் வைத்துவிட்ட அந்தக் குட்டை மனிதர்கள், தாங்கள் பிடித்த நாடுகளையே கட்டிக் காக்கத் தெரியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால், அவர்களது அடுத்த இலக்கு இந்தியா என்பதாக, அவ்வப்போது சின்னஞ்சிறு சலசலப்பையும் எதிரிகள் ஏற்படுத்தாமல் இல்லை. கண்ணாமூச்சி விளையாட்டைப் போல் பறந்து வந்து குண்டுகளை வீசினார்கள். காடுகளில் ஒளிந்து கொண்டு கொரில்லா மிரட்டு மிரட்டினார்கள்.

தளவாடச் சாமான்களும் உணவுப் பொருள்களும் கல்கத்தாவிலிருந்து லாரிகளில் வந்து இறங்கிக் கொண்டிருந்தன. அவற்றைச் சேமித்துக் கொண்டு எல்லைப் பிராந்தியத்தில் காவல் காத்த படைகளுக்குத் தேவையானவற்றை அனுப்பிக் கொண்டிருந்தோம். காவல் படைகளுக்கு அப்போது போர்க் கருவிகள் தேவைப்படவில்லை. சாப்பாட்டுச் சாமான்கள் மட்டுமே தினசரி ஒழுங்காகக் காலியாகிக் கொண்டிருந்தன!

சுறுசுறுப்பை நாடிச் சென்று, சோம்பலை வளர்த்துக் கொண்டிருந்த இந்தச் சமயத்தில்தான், எனக்குச் சுறுசுறுப்பூட்ட வந்தாள் பேரழகி, லியோ. இயந்திரம்போல் உப்புச் சப்பில்லாமல் ஓடிக்கொண்டிருந்த நாட்கள் திடீரென்று எனக்கு ஒளி வீசி மகிழ்வூட்டத் தொடங்கின.

* * *

நாங்கள் தங்கியிருந்தது நான்கு புறங்களிலும் மலைகளால் சூழப்பெற்ற அழகியதொரு பள்ளத்தாக்கு. ஐந்தாறு மைல்களில் ஒரு சில கிராமங்கள் சிதறிக் கிடப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். மலைச்சாதி மக்கள் அங்கே இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்தார்களாம். அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

சாமான்களை லாரிகளில் ஏற்றி இறக்குவதற்காக அடுத்த கிராமத்திலிருந்து வேலையாட்கள் வரவழைக்கப் பட்டார்கள். சுமார் இருபது வீடுகள் உள்ள அந்தக் கிராமம் முழுவதுமே எங்களுக்காக உழைக்க முன்வந்தது.

கிராமத்தின் தலைவன் லியானுக்கு அரைகுறையாக ஆங்கிலம் பேசத் தெரியும். மணிபூரில் சில ஆண்டுகள் ஏதோ ஒரு வெள்ளைக்காரன் வீட்டில் காவலாளியாக இருந்தவனாம். இப்போது நாற்பதுக்குமேல் வயதாகிவிட்டது. அவனுடைய உதவியால் அந்தக் கூட்டத்தை ஒருவகையாகச் சமாளிக்கத் தொடங்கினோம். கிராமவாசிகள் எல்லோரும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். செம்பொன் மேனி படைத்தவர்கள். தலைவன் லியானைத் தங்களது தந்தையாகப் பாவித்து நடந்து கொண்டார்கள்.

முதல் நாளின் முதற்பார்வையிலேயே அத்தனை பேர்களிலும் லியோ தனித் தன்மை வாய்ந்த பெண்ணாகத் தோன்றினாள். ஒரு முறை எதேச்சையாகப் பார்த்துவிட்ட எனது கண்கள் ஒன்பது முறை அவளைப் பார்க்கத் தூண்டின.


வயது பதினெட்டு இருக்கும். தளதளவென்று பளிச்சிடும் பசலைக் கொழுந்து போன்ற தேகம். இடுப்பில் பச்சை நிற லுங்கி கட்டிக்கொண்டு, மேலே கேரள நாட்டுக் கிராமப் பெண்களைப்போல் ஓர் தாவணியைப் போட்டுக் கொண்டிருந்தாள். கைகளில் தந்தத்தால் செய்த வளையல்கள். தலை முடியை வாரி விட்டு இரு கூறாகப் பிரித்துத் தலையைச் சுற்றிலும் வட்டமாகக் கட்டிக் கொண்டிருந்தாள். இடது காதின் அருகே ஏதோ ஒரு காட்டு மலர் இரண்டு இலைகளுடன் சிரித்துக் குலுங்கியது. அவளைப் பார்த்தால் உடலை வளைத்துக் கூலி வேலை செய்யக்கூடிய பெண்ணாகத் தோன்றவில்லை.

வேலையாட்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த என் மேலதிகாரி, "ஏன் அந்தப் பெண் அங்கே விளையாடிக்கொண்டிருக்கிறாள்?" என்று என்னிடம் சற்றுக் கோபமாய்க் கேட்டார்.


நானும் உடனே கோபத்தை வரவழைத்துக் கொண்டு, அந்தக் கிராமத் தலைவன் லியானிடம், "அவள் இங்கே வேலை செய்ய வந்திருக்கிறாளா? இல்லை, விளையாட வந்திருக்கிறாளா?" என்று கடுமையான குரலில் கத்தினேன்.

"விளையாட வந்திருக்கிறாள்" என்று அமைதியாகப் பதிலளித்தான் லியான். இதைக் கேட்டதும் என் மேலதிகாரிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அவள் என்னுடைய செல்ல மகள், சாஹேப்!" என்று சிரித்துக் கொண்டே கூறினான் லியான். "நீங்கள் வேண்டுமானால் தலைகளை எண்ணிப் பாருங்கள். எத்தனை பேருக்குக் கூலி







உண்டோ அத்தனை பேரும் வேலை செய்கிறோம். நானும் என் மகனும் வேலைக்கு வந்து விட்டதால், வீட்டில் இருக்கப் பிடிக்காமல் லியோவும் எங்களுடன் வந்திருக்கிறாள். அவளுக்கும் "அவள் தாயாருக்கும் ஒத்துக் கொள்ளாது. லியோ பெரிய சண்டைக்காரி.''

அதிகாரி அவனைத் தட்டிக் கொடுத்து விட்டு மேலே சென்றார். நான் லியோவிடம் பேச்சுக்கொடுத்து அவன் வாயைக் கிளறினேன். தன்னுடைய மகளின் அருமை பெருமைகளை அடுக்கிக் கொண்டே போனான் அவன். அவள் தான் அந்தக் கிராமத்துக்கே முடிசூடாத ராணியாம். மணிப்புரியில் பெரிய சந்தைகள் கூடும்போது அவளையும் அழைத்துக் கொண்டு போய் வேடிக்கைகள் காட்டுவானாம். பெண்கள் அந்த நகரத்தில் நடனமாடுவதைப் பார்த்து விட்டால், அதே நடனத்தை, வீட்டில் வந்து ஆடிக் காண்பிப்பாளாம் லியோ. அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை அந்தச் சுற்று வட்டாரத்தில் எங்குமே கிடையாதாம். கிராமத்தில் எல்லாருமே அவளைச் 'சின்னப் பெண்ணே!'' என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவார்களாம்.

* * *

மாலை நான்கு மணிக்கெல்லாம் அன்றைய வேலை முடிந்தது. மலைச் சாதியினரை உற்சாகப் படுத்துவதற்காக அவர்களுக்குச் சிறிதளவு உணவுப் பொருளைத் தினமும் வழங்கும்படி கூறியிருந்தார் என்னுடைய மேல் அதிகாரி.

தேயிலைத் தூள், சர்க்கரை, பால் பொடி இவற்றை முதல் நாள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தனுப்பினேன். கடைசியாக, ''லியோ'' என்று அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டவுடன் அவள் திகைத்து விட்டாள். ஒருகணம் என்னை வெறித்துப் பார்த்துவிட்டு, ஒரு கரத்தை இடுப்பில் மடித்து வைத்தபடி, மறு கையை ஆட்டி அவள் நடந்து வரும் அழகைக் கண்டபோது, எனக்கு மணிப்புரி நாட்டிய மங்கையரின் நினைவு வந்தது. எல்லோருக்கும் கொடுத்ததைப் போல் இரு மடங்கு சர்க்கரையையும் தேயிலையையும் அவளிடம் நீட்டினேன்.

உதட்டைப் பிதுக்கிக் கொண்டே, வேண்டாம் என்று கையசைத்து விட்டு, அவள் அப்பாவிடம் எதையோ சொல்லிக் கல கல வென்று நகைத்தாள். அவள் பேசிய மொழி எனக்குப் புரியவில்லை. ''வேலை செய்யாமல் கூலி வாங்கக் கூடாது'' என்று கூறினாளாம் அவள். ''அதனால்தான் உனக்கு இரண்டு பங்கு'' என்று நான் சொல்லியும் அவள் கேட்கவில்லை. 'சட்'டென்று தன் தகப்பனின் கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டே வந்த வழியில் திரும்பினாள்

மறுநாள் அவள் வருவாளோ, வரமாட்டாளோ என்ற கவலை எனக்கு. ஆனால் தவறாது வந்து சேர்ந்தாள். அவளுடைய தகப்பன் நேரே என்னிடம் வந்து, ''லியோவையும் இன்றிலிருந்து வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினான். எனக்கு வியப்பு தாங்க முடியவில்லை. ''பாவம்! வீணாகப் பெண்ணை ஏன் தொந்தரவு செய்கிறாய்?'' என்றேன்.

''நானா தொந்தரவு செய்கிறேன்? வீட்டுக்குப் போனதிலிருந்து இவள் தொந்தரவைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. பிடிவாதம் பிடித்து ரகளை செய்து விட்டாள்.''

லியோவின் பெயரையும் பட்டியலில் எழுதிக் கொண்டேன். அவள் வேலை செய்வதைப் பார்த்து அத்தனை கிராமவாசிகளும் ஆச்சரியப்பட்டார்கள்.

அன்றைக்குச் சாயங்காலம் எல்லோருக்கும் ரொட்டித் துண்டுகள் கொடுத்தனுப்பிய நான் அவளுக்கு மட்டும் கொடுக்கவில்லை. முதல் நாள் என்னை அலட்சியம் செய்தவளை, மறுநாள் சீண்டி விட்டு வேடிக்கை பார்க்க நினைத்தேன். எல்லோருக்கும் கொடுத்து முடிக்கும்வரையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தவள், கடைசியாக வந்து என் எதிரில் நின்றாள். மொழி தெரியாத படியினால், 'உனக்கு இன்றைக்குக் கிடையாது' என்பது போல் குறும்புச் சிரிப்புச் சிரித்தேன். ஏக்கத்துடன் ஒரு கணம் என்னைப் பார்த்து விட்டு, வேகமாகத் திரும்பி நடந்தாள்.

''லியோ!.........ஏ, லியோ! ஏ, லியோ!''

திரும்பிப் பார்த்தாள். வரச் சொல்லித் தலையசைத்தேன். தலையைக் குனிந்து கொண்டே என்னிடம் வந்தாள்.

''இந்தா!''-ஒரு முழு ரொட்டியை நான் அவளிடம் நீட்டியபோது அவள் கரங்களும் நீண்டன. வாங்கிக் கொண்டு நிதானமாகத், தன் முகத்தை உயர்த்தி என்னை நோக்கினாள். முதல் நாள் சிரித்த ஏளனச் சிரிப்பு இப்போது அவளிடம் இல்லை. கண்களின் ஓரங்களில் இருந்த





துளிகள் எட்டிப் பார்த்தன. 'இந்த அன்புக்காகத்தானே நான் உங்களிடம் கூலி வேலை செய்ய வந்தேன்?' என்று அவள் தன் கண்களால் கூறுகிறாளா?

காட்டுப் புதர்களின் மத்தியில் அவள் உருவம் மறையப் போகும் சமயத்தில் என்னை ஒரு முறை நின்று பார்த்துவிட்டு வேகமாகத் திரும்பியது.

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் ஒரு இன்ப நாளாக இருந்தது எனக்கு.

ஆறுமாதங்கள் சென்றன. எங்கள் பட்டாளம் முன்னேறவும் இல்லை; பின் வாங்கவும் இல்லை. இன்னும் ஓரிரண்டு வருடங்களுக்கு நாங்கள் அதே இடத்தில் தங்கியிருக்க நேரிடும் என்று படைத் தலைவர்கள் பேசிக் கொண்டார்கள். நானும் லியோவும் பழகிய விதத்திலும் முன்னேற்றமும் இல்லை; பின்வாங்குதலும் இல்லை. எப்போதாவது என்னைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை உதிர்ப்பாள். ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவாள். அன்றைக்குப் பொழுது அபூர்வப் பொழுதாகக் கழிந்ததாக நான் நினைத்துக் கொள்வேன். சரியாக ஓராண்டு முடிவதற்குள், 'லியோ' ஓரளவு ஆங்கிலமும் இந்தியும் பேசக் கற்றுக் கொண்டாள். பட்டாளத்தில் இந்த இரு மொழிகளும் மணிப் பிரவாளத்தில் அடிபட்டன.

ஒரு நாள் லியோவும் அவள் தகப்பன் ஷியானும் வேலைக்கு வரவில்லை. ஷியானுக்கு உடல் நலமில்லையாம். மறுநாளும், அதற்கு மறுநாளும் கூட அவர்கள் வரவில்லை. ஒரு வாரமாகியும் ஷியானுக்கு உடம்பு தேற வில்லையாம். லியோவின் தம்பியைத் தனியாக அழைத்து, "உன் அக்காள் ஏன் வருவதில்லை?" என்று கேட்டேன். தகப்பனுக்கு உதவி செய்வதற்காக அவள் வீட்டில் தங்கிவிட்டாளாம். அந்தப் பையனிடம் அவர்களுக்காக உயர்தரமான தேயிலையும் பால் பொடியும் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினேன்.



எங்கள் முகாமிலிருந்து நான்கு மைல் தூரத்தில் அவர்கள் கிராமம் இருந்தது. எப்படியாவது அங்கே போய் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவல். ஆனால் அந்தப் பகுதியின் கிராமங்களைப் பற்றிப் பட்டாளத்தார்களிடையே பயங்கரமான பல கதைகள் உலவின. அந்த மலைச்சாதியார்கள் தங்கள் மத்தியில் அன்னியர்கள் யாரும் நடமாடுவதை விரும்புவதில்லையாம். அந்த மலைச் சாதியார் ஆண் – பெண் விகற்பமின்றி மிகவும் சரளமாகப் பழகக் கூடியவர்களாதலால், அதைத் தவறாகப் புரிந்து கொண்ட சில அன்னியர்கள் தங்கள் உயிரையே அவர்கள் மத்தியில் பலி கொடுத்திருக்கிறார்களாம். "வழக்கமாக வெளியாட்கள் அங்கே போவதில்லை; அப்படிப் போனவர்கள் உயிருடன் திரும்பி வந்ததில்லை" என்று கூறிப் புரளியைக் கிளப்பி விட்டார்கள்.

'என்ன வந்தாலும் சரி; போயே தீருவது' என்ற முடிவுக்கு வந்த நான், லியோவின் தம்பியிடம் என் எண்ணத்தைக் கூறினேன். "நாளைக்கு மறுநாள் எங்கள் முகாமை விட்டு வெளியில் செல்வதற்கு அனுமதி பெற்றிருக்கிறேன். வேலையும் கிடையாது. உங்கள் கிராமத்துக்கு வரலாமா? உன் அப்பாவைக் கேட்டு வா" என்று சொல்லி அனுப்பினேன்.

லியோவின் தம்பியின் பெயர் லம்குப்பா. குறித்த நாளில் அவனே என்னை அழைத்துக் கொண்டு போக வந்து விட்டான். எதற்கும் முன் யோசனையுடன் தற்காப்புக்காக என் கைத்துப்பாக்கியோடு கிளம்பினேன்.

* * *

இறக்கமும், ஏற்றமும், வளைவுகளும் கொண்ட மலைக்காட்டுப் பாதை. சில இடங்களில் விசாலமாகவும், சில இடங்களில் குறுகலாகவும், சில இடங்களில் குன்றுகளின் வழியாகவும் புதர்களுக்குள்ளும் நாங்கள் நடந்து சென்றோம்.

மூன்று மைல்கள் கடந்த பின்னர் ஓர் பெரிய அருவிக்கரை யோரத்துக்கு நாங்கள் வந்தோம். குன்றின் உச்சியைப் பிளந்து கொண்டு குதித்தோடிப் பாய்ந்தது அருவி. அதிலிருந்து புகை மண்டலம் போல் எழுந்த நீர்த்துளிகளில் சூரியனின் கதிர் ஏழு வர்ணங்களில் வானவில்லாய்ப் பிரதிபலித்தது. மெய்ம்மறந்து நின்று விட்டேன். முரட்டுப் பட்டாளத்தானாகிய என்னைக்கூட அந்த இடம் கவிஞனாக மாற்றி விடும்போல் தோன்றியது.

"அதோ!" என்று மலையடிவாரத்தை நோக்கிச் சுட்டிக் காட்டினான் லம்குப்பா. அங்கே கூரைக் குடிசைகளின் சிறு கூட்டம் ஒன்று தெரிந்தது. வட்டக் குடைகளை நட்டு வைத்தாற்போல் சுமார் இருபது வீடுகள். தரையிலிருந்து வீடுகள் எழும்பாமல், பரண்களைப்போல் மரக் கால்களின் மேல் குத்துக் குத்தாக நின்றன. பையனிடம் விசாரித்தேன். காட்டு மிருகங்கள் இரவு வேளைகளில் நடமாடக் கூடுமாதலால், உயரத்தில் மரத்தூண்கள் போட்டு, குடிசைகள் கட்டி வசிப்பது அவர்கள் வழக்கமாம்.

" ஓஹோ!...ஓஹோ!..." என்று ஓர் தேன் குரல் மலைச் சரிவிலிருந்து அபூர்வ ராகம்போல் ஒலிக்கத் தொடங்கியது.

உற்றுப் பார்த்தேன். கோவேறு கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு உல்லாசமாக ஆடி அசைந்த வண்ணம் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள் லியோ. அவளுடைய தம்பி கைகொட்டிச் சிரித்தான். "பாருங்கள், அந்தச் சின்னப் பெண் உங்களைப் புது மாப்பிள்ளையாக்கி விட்டாள்!" என்று கேலி செய்தான். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இதற்குள் லியோ எங்கள் அருகில் நெருங்கி, தான் கழுதையிலிருந்து இறங்கிக் கொண்டு, என்னை ஏறிக் கொள்ளச் செய்தாள்.

"பார்த்தீர்களா! பார்த்தீர்களா! புது மாப்பிள்ளையை வரவேற்பதற்குத்தான் நாங்கள் கழுதையுடன் ஊர் எல்லைக்கு வருவோம்" என்று கூறினான் லம்குப்பா. எனக்குப் பெருமை தாங்கவில்லை. "உண்மையா லியோ?" என்று கேட்டேன். அவள் முகம் நாணத்தால் சிவந்தது. ஓரக் கண்களால் என்னை நோக்கி விட்டுக் கழுதையைப் பிடித்துக் கொண்டு வேகமாய் நடந்தாள்.

லியோவின் வீட்டு மரப் படிகளில் அவள் தகப்பனும், தாயாரும் என்னை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். "சாஹேப்! உங்களுக்கு என்மீது இத்தனை பிரியமா?" என்று கேட்டு வைத்தான் ஷியான். அவன் மனைவி, "நீங்கள் வருவதாய்க் கேள்விப்பட்டவுடனேயே இவருக்கு உடம்பு குணமாகிவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

விருந்து மிகவும் பலமாக இருந்தது. அரிசியிலிருந்து இறக்கிய ஒருவகைப் பானத்தைக் கிண்ணத்தில் ஊற்றிக் கொடுத்தார்கள். பச்சை மூங்கில் குழாயில் வேக வைத்த ஒரு வகை சர்க்கரைப் பொங்கலைப் பரிமாறினார்கள். அதற்குப் பெயர் மூங்கில் சோறும். இன்னும் பலவகை உணவுகள் என் எதிரில் வந்தன. முடிந்தவரையில் ஒரு கை பார்த்தேன். லியோவின் வீட்டு முதல் விருந்தல்லவா?

சாப்பாட்டுக்குப் பிறகு சிறிது நேரம் ஷியானுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டேன். "இரண்டு நாட்கள் கழித்து வழக்கம்போல் நானும் லியோவும் வேலைக்கு வருகிறோம்" என்று என்னிடம் கூறி, "அம்மா! சின்னப் பெண்ணே! விருந்தாளியை வழியனுப்பி விட்டு வா" என்றான் லியோவிடம்.

தன்னை நன்றாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டு என்னுடன் கிளம்பினாள் லியோ. தலையைச் சுற்றியிருந்த பின்னல் முழுவதும் ஒரே மலர் மயமாக விளங்கியது. இளம் பச்சை 'சில்க்'கில் மார்புத் துண்டும், பச்சை லுங்கியுமாக வெளியில் வந்தாள். மணிப்பூரிக் கடைகளில் அவள் அப்பா வாங்கிக் கொடுத்த கழுத்தணி


ஆடவர் அல்லது
பெண்மணி
கடவுளால் பிராணிகளுக்கு அளிக்கப்பட்ட மிக்க சேர்த்தியான நிறங்களைப் பார்த்து மனிதன் நிரந்தரமாக பொறுமை கொண்டிருந்தான். இப்பொழுது ரோஹித் மில்கள் கலைக்கற்றவைகளும் பிரமிக்கத்தக்கவைகளுமான அத்தகைய நிறங்களைத் திரட்டி அவைகளால் செய்யப்படும் இந்திய ஆடைகளில் நேர்மையாக அச்சடித்து வெளியிட்டிருக்கின்றன.
ரோஹித் துணிகள்—பெண்மணிகளுக்கான வாயில் புடவைகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட பருத்தி ஆடைகள். ஆடவர்களுக்கான ஷர்ட் துணிகள்—எல்லாம் கண்ணியமிக்க தோற்றமுள்ளவை, ஆனால் விலை அதிகமில்லை. காலப் போக்குக்கு (நாகரீகத்திற்கு) ஏற்றவாறு ரோஹித் துணிகள் தயாரிக்கப்படுகின்றன.
வசீகர நிறம்...
ஆனந்தமயமான வாழ்வு..
ரோஹித் மில்ஸ் லிட்.
ஆமதாபாத் 8
நிறங்கள் மங்குவதில்லை. தரத்திற்கு பங்கம் ஏற்படாது
அது ரோஹித் மில்களால் தயாரிக்கப்பட்டது
மானேஜிங் ஏஜண்ட்: ஸ்ரீ வாடிலால் லல்லுபாய்


தீபாவளி
வாழ்த்துக்கள்

நாகரீகமாக அணியுங்கள்

சௌகரியமாக நடந்து செல்லுங்கள்

C.S.C.
QUALITY SHOES





EVEREST

கரோனு சாஹு கம்பெனி பிரைவேட் லிமிடெட்
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு - - - - - - பம்பாய்-1

சென்னை, கேரள ராஜ்யத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஜெய் ஹிந்த் ஏஜென்ஸிஸ், 2/5, பந்தர் தெரு, சென்னை-1

களும், வளையல்களும் அவள் அழகுக்கு அழகு செய்தன. கிராமத்தின் எல்லை வரையில் என்னைக் கழுதை மீதேற்றி விட்டு, தான் மட்டும் நடந்து வந்தவள், பிறகு எனக்கு முன்னால் ஜம்மென்று ஏறி உட்கார்ந்து கொண்டாள். அருவிக் கரை அருகில் நெருங்க–நெருங்க அவள் உள்ளமும் நெகிழ்ந்து கொடுத்து உருகத் தொடங்கிவிட்டதோ என்னவோ! மிக மெல்லிய இனிய குரலில் உல்லாசமாகப் பாட்டிசைக்க முற்பட்டாள்.

என் மனம் அதற்கு முன்பாகவே பாகாய்க் கசிந்து சொட்டத் தொடங்கியது. கழுதையின்மேல் எனக்கு முன்னால் அவள் உட்கார்ந்தவுடனேயே அது என்வசம் இல்லை. கோவேறு கழுதை அப்பொழுது செங்குத்தான ஏற்றத்தைக் கடந்து கொண்டிருந்ததால், அவளை யறியாது அவள் என்னுடைய மார்பின் மீது சாய்ந்து வர வேண்டியிருந்தது. இதை யெல்லாம் அவள் சிறிதேனும் விகற்பமாக நினைத்ததாய்த் தெரிய வில்லை. மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தவள் சிறுகச்சிறுகக் குரலை உயர்த்தி வானத்தின் உச்சிக்கு எட்ட விட்டாள். நான் என்னை மறந்தேன். ஏதோ ஒரு இனம்புரியாத உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக எனக்கு எண்ணம்.

அதே நிமிஷத்தில் அவளிடம் என் உள்ளத்தைத் திறந்து காட்டிவிட வேண்டுமென்று தோன்றியது. ஆயிரம் ஆயிரம் சொற்கள் என் தொண்டை வரையிலும் அலைமோதி விட்டுப் பின்னால் சென்றன. 'லியோ! என் உயிருக்குயிரான லியோ! நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது! உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு உங்கள் கூட்டத்தாருடன் கலந்து விடுகிறேன். அல்லது நீ என் மனைவியாகி, என்னருமைத் தமிழ் நாட்டுக்கு என்னுடன் வந்து விடு! இரண்டில் நீ எதைச் செய்கிறாய்? முடிவு உன்னுடையது. என்னை மணந்து கொள்வதற்கு உனக்குப் பரிபூரண சம்மதமா?'

லியோவின் பாட்டு 'டக்'கென்று நின்றவுடன், "லியோ!" என்று பதற்றத்துடன் அவளது தோளைப் பற்றினேன். சட்டென்று திரும்பி என் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய பார்வையில் இத்தனை கொடூரமா? நான் சொல்ல நினைத்த வார்த்தைகள் எனக்குச் சதி செய்து விட்டன. தோளின் பிடியைப் பயந்துபோய் இறுக்கமாக்கிக் கொண்டே "லியோ!...லியோ!..." என்று தடுமாறினேன், தடுமாறிக் கொண்டே இருந்தேன்.

அவள் என்ன நினைத்தாளோ? கழுதை மேலிருந்தவள் கீழே குதித்துக் காளிதேவியாக மாறி விட்டாள். கண்களை உருட்டி விழித்துக் கொண்டு, தலையில் சுற்றியிருந்த மலர் மாலையைப் பிய்த்து என் முகத்தில் வீசினாள். "நாட்டு மனிதர்கள் கேவலமானவர்கள்; சுயநலக்காரர்கள்; மரியாதை கெட்டவர்கள்" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டினாள்.

என்னுடைய வாய் அடைத்துக் கொண்டது. 'தப்பாக நினைக்காதே! என்னை மணக்க உனக்குச் சம்மதமா என்றுதான் கேட்கிறேன். பிறகு ஏன் எனக்குப் புது மாப்பிள்ளைக்குச் செய்யும் உபசாரமெல்லாம் செய்கிறீர்கள்?' என்று கேட்கவேண்டுமென்று என் மனம் துடித்தது. ஆனால் மனத்தின் துடிப்புக்கு வாய் ஒத்துழைக்கவில்லை. பயத்தால் ஏதேதோ உளறினேன்.

நடந்தது அவ்வளவுதான். கழுதையின் மேலிருந்த என்னைத் தன் கரங்களால் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, அதைத் திருப்பிக் கொண்டு வந்தவழியே நடந்தாள் லியோ. சோர்ந்து போய்க் கைத் துப்பாக்கியை இடுப்பிலிருந்து எடுத்துக் கொண்டு முகாமை நோக்கி நடந்தேன்.

* * *

இரண்டு நாட்கள் கழித்து அவள் தந்தையும் தம்பியும் மாத்திரமே வேலைக்கு வந்தார்கள். லியோ என்னை ஏமாற்றி விட்டாள். 'நாளை வருவாள், மறுநாள் வருவாள்' என்று மேலும் ஒரு வாரம் பொறுத்திருந்தேன். வரவில்லை. மெல்ல அவளுடைய தம்பியை அழைத்து, லியோவிடம் தனியாகக் காரணம் கேட்டு வரச்சொன்னேன். அடுத்த நாள் காலையில் அவன் என்னிடம் வந்து, "அவளுக்கு உங்கள்மேல் கோபமாம்; அதனால்தான் வரவில்லையாம்" என்றான். ஆனால் தினந்



தோறும் அவள் என்னைப் பற்றி அவனிடம் கேட்கத் தவறுவதில்லையாம்.

அந்தக் காலத்துக் கதைத் தலைவனுக்குத் தூது சொல்லத் தோழி கிடைத்தது போல், எனக்கு அவள் தம்பியான தோழன் கிடைத்தான். அவனிடம் என் அந்தஸ்தையும் வெட்கத்தையும் விட்டு என் மன நிலையை விளக்கினேன்.

மாலை வேளைகளில் நான் காட்டருவிக்குக் குளிக்கப் போவதாகவும், மறுநாளும் போகக் கூடுமென்றும் அந்தப் பையனிடம் சொல்லி வைத்தேன். என் ஆவல் வீண் போகவில்லை. மறுநாள் மாலை அங்கே லியோ வந்திருந்தாள். இருவரும் பேசிக் கொள்ளாமலே பாறைகளில் உட்கார்ந்தோம். பிறகு, நானே எனக்குள் பேசிக் கொள்வதுபோல், அன்றைக்கு அவளிடம் சொல்லத் தயங்கிய விஷயங்களை யெல்லாம் சொன்னேன்.

லியோவின் அகன்ற கண்களில் தண்ணீர் துளும்பியது.

"நான்தான் தப்பாக நினைத்துக்கொண்டேன். எங்களை மனிதர்களாக மதிக்காமல் விளையாட்டுப் பொம்மைகளாக நகரத்து மனிதர்கள் சிலர் நினைப்பதுண்டாம். நீங்கள்கூட அப்படித்தானோ என்று நினைத்துவிட்டேன். அதனால்தான் உங்கள்மீது வெறுப்பு ஏற்பட்டது."

அன்றிலிருந்து வாரம் ஒரு முறையாவது நாங்கள் அந்த அருவிக்கரையில் சந்திப்பது வழக்கம். வாரந்தவறாமல் மனக்கோட்டைகள் பெரிதாகி வளர்ந்து கொண்டே வந்தன.

லியோவும் நானும் சண்டை முடிந்தவுடன் திருமணம் செய்துகொண்டு தமிழ் நாட்டுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று எங்களுக்குள் முடிவுசெய்து கொண்டோம். தகப்பனும் தாயாரும் தன்னை முழு மனத்தோடு என்னுடன் அனுப்புவார்கள் என்று அவள் கூறினாள். இடையிலிருந்த மற்றத் தொல்லைகளை நாங்கள் அவ்வளவாகப் பொருட் படுத்தவில்லை. ஒருவரை யொருவர் கண்டு விட்டால் போதும், பயங்கரமான உலகப் போர் என்ற ஒன்று நடந்து கொண்டிருப்பதையே, நாங்கள் மறந்து விடுவோம்.

ஆனால் உலகப்போர் எங்களை மறக்கவில்லை. எந்த யுத்தம் எங்களை ஒன்று சேர்த்ததோ, அதே யுத்தம் திடீரென்று எங்களைப் பிரிக்கவும் சதி செய்தது. நெடு நாட்கள் எங்களுக்கெதிராகப் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்த ஜப்பானியர்கள், பெரும்படையுடன் உக்கிரமாக எங்களை இருபுறமும் வளைத்துக் கொண்டு தாக்கினார்கள். கோஹிமா, மணிபுரி முதலிய இடங்களில் பயமான சண்டை. மேலிடத்திலிருந்து எங்களை மணிபுரிக்குப் பின்வாங்கச் சொல்லி உத்தரவு வந்து விட்டது. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எங்களோடு நெருங்கிப் பழகிய மலைச்சாதியினர் எங்கள் நிலை கண்டு தேம்பித் தேம்பி அழுதனர். எங்களைச் சுற்றியிருந்த கூட்டத்தில் லியோவை மட்டிலும் காணோம். வியானுக்கும் லியோவின் தம்பிக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு, அருவிக்கரையை நோக்கி, கண் மண் தெரியாமல் ஓடினேன்.

நாங்கள் வழக்கமாகச் சந்திக்கும் மறைவிடத்தில் சோகமே உருவாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் லியோ. வீட்டிலிருந்து எனக்காகத் தேநீர் தயாரித்துக்கொண்டு வந்திருந்தாள். சுள்ளிக் குச்சிகளைப் பொறுக்கிவைத்து நெருப்புப் பற்ற வைத்து அதைச் சூடாக்கினாள். முதலில் தான் ஒரு வாய் குடித்துவிட்டு, என்னிடம் கிண்ணத்தை நீட்டினாள். ஒன்றுமே பேசாமல் நான் அதை மறுத்துத் தலையாட்டினேன். லியோவின் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது. "இதை வேண்டாமென்று சொல்லாதீர்கள்; எங்கள் சாதியில் கணவனுக்கு மனைவி செய்யும் பணிவிடை இது" என்று கூறி, கிண்ணத்தை என் வாயருகில் கொண்டு வந்தாள். பிறகு என்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்து என்னிடம் நீட்டினாள். "உங்களை வழியனுப்பியவுடன் நான் இந்த அருவியில் குதிக்கப் போகிறேன்" என்று அவள் கூறியதைக் கேட்டவுடன் ஒருகணம் தவித்தேன். எனக்குக் கிலி பிடித்துக் கொண்டது.

"எப்படியும் திரும்பி வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன். எனக்காகக் காத்திரு" என்று பலமுறைகள்

சொல்லி அவளிடம் கெஞ்சிய பிறகுதான் அவளுடைய மனத்தை ஒருவாறு என்னால் மாற்றுவதற்கு முடிந்தது.

"கட்டாயம் வருவீர்களா?" என்று பன்னிப் பன்னிக் கேட்டாள்.

"கட்டாயம் வருவேன்."

* * *

ஆறு மாதங்கள் சென்றன. கால் நடையாகவே மணிபுரிக்குப் பின்வாங்கிய நாங்கள், பிறகு சண்டை செய்து ஜப்பானியரைப் பர்மாவுக்குள் விரட்டிக் கொண்டே முன்னேறினோம். டிடிம் என்ற இடத்தில்தான் எங்கள் பழைய முகாம் இருந்தது. அதற்கு அடுத்தாற் போல் தான் லியோ வசித்த கிராமம்.

டிடிமுக்கு வந்தவுடன் நான் எதிரே இரண்டிருந்த அபாயத்தைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. மூர்க்கத்தனமாக என்னோடிருந்த வீரர்களையும் சேர்த்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடினேன். ஜப்பானியர் சிலர் அங்கே பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அருவிக் கரையிலிருந்து கிராமத்தை நோக்கினோம். பகீரென்று எங்கள் அனைவருக்கும் நெஞ்சு பற்றி எரிந்தது. வீடுகள் யாவும் தீக்கிரையாகி வெந்து கொண்டிருந்தன. ஓரே அழுகையும், ஓலமும், கூக்குரலும் கலந்தபமாக ஒலித்தன. மனிதர்கள் அங்குமிங்கும்சிதறிஓடுவதைக் கண்டேன்.

என் கால்களுக்கு வெறி பிடித்து விட்டது. எனக்குப் பின்னால் என் நண்பர்கள் ஓடிவந்தார்கள். ஜப்பானியர்கள் சிலர் தலைதெறிக்க ஓடுவதைக் கண்டேன். கண்களில் பட்டவர்களைச் சுட்டு வீழ்த்திக் கொண்டே பறந்தார்கள். லியோவின் வீடும் அதையடுத்த இரு வீடுகளும் இன்னும் நெருப்புக்கு இரையாகாமல் தப்பி நின்றன. லியோவின் வீட்டிலிருந்து பயங்கரக் கூக்குரல். பலகைக் கதவை ஒரே உதையில் நொறுக்கிக் கொண்டு உள்ளே பாய்ந்தேன். லியோவின் தந்தை லியான் உயிரற்ற சவமாக ஒருபுறம் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். தாயாருக்கு எதிரில் ஒரு ஜப்பானியச் சிப்பாய் துப்பாக்கியும் கையுமாக நின்று கொண்டிருந்தான். ஆளுக்கொரு புறமாக இரண்டு ஜப்பானிய வெறியர்கள் என்னருமை லியோவைப் பற்றி இழுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கண்களில் மிருக வெறியும், உடலில் குடிவெறியும் ஏறியிருந்தன. முகத்தில் கத்தி முனையால் குத்தி அவள் கூக்குரலை அடக்கப் பார்த்தனர். என்னைக் கவனிக்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை.

நான் எப்படி அந்த மூன்று குள்ளர்களையும் ஒருவனாக நின்று கொன்று தீர்த்தேனென்று எனக்குத் தெரியாது. எனக்குள்ளே இருந்த லியோவின் உணர்ச்சி அவர்களை அப்படிப் பழி தீர்த்துக் கொண்டது. ஒரு மரத் தூணுக்குப் பின்புறம் என்னை மறைத்துக் கொண்டு துப்பாக்கியில் குண்டுகள் தீருமட்டும் அவர்களைச் சுட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் செத்து விழுந்த பிறகும் சுட்டேன்.

"சிங்கா பாபு! சிங்கா பாபு!" என்று அலறிக் கொண்டே என் கால்களில் விழுந்து கட்டிக் கொண்டாள் லியோ. முகமெல்லாம் ஒரே ரத்தக் கறை. கத்தி முனைகள் இரண்டு மூன்று இடங்களில் ஆழமாகக் கீறியிருந்தன. பயத்தால் அவளால் எதுவுமே பேச முடியவில்லை. என்னைக் கண்ட ஆனந்தம்கூட அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

அவள் தாயாரும் நானுமாக அவளுக்கு முதற்சிகிச்சைகள் செய்தோம். "வந்து விட்டீர்கள், பாபு! வந்து விட்டீர்கள்! நீங்கள் என் தெய்வம்! என் தெய்வம்!" என்று அவள் மெலிந்த குரலில் முணுமுணுத்தாள். என்னைக் கண்டு புன்முறுவல் பூக்க முயற்சி செய்தாள். என் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

இந்த இன்பமெல்லாம் கால் மணி நேரமே நீடித்திருந்தது. எங்கள் படைத் தலைவரும் சிப்பாய்களும் அந்த வீட்டருகே வந்தவர்கள் என்னைக் கண்டு விட்டார்கள். "இது என்ன கூத்து? புறப்படு, சிங்காரம்!" என்று அலறினார் தலைவர். எனக்கு அவரிடம் என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. லியோ மெல்லத் தன்னுடைய தலையை வேறு பக்கமாக நகர்த்திக் கொண்டாள்.

"இதோ, அரை மணி நேரத்தில் வந்து விடுகிறேன். முன்னால் போய்க் கொண்டிருங்கள்!" — நான் கெஞ்சினேன்.

"டேய்!" என்று அடுத்த சிப்பாய்ப் பக்கம் திரும்பினார் அவர். "அவன் வருகிறானா என்று கேள். இல்லாவிட்டால் இதே இடத்தில் அவனைச் சுட்டுத் தள்ளி விட்டுப் புறப்படு!" என்று உத்தரவு போட்டார். லியோ நடுநடுங்கிப் போய் என்னைக் கையெடுத்துக் கும்பிட்டாள். "போய் வாருங்கள், பாபு! என்னை மட்டும் மறந்து விடாதீர்கள். திரும்பி வந்து என்னை அழைத்துப் போங்கள்!"

படுகளத்தில் ஓலமிட்டழுவதற்கு நேரமேது? லியோவின் கண்ணீரும் ரத்தமும் படிந்திருந்தன என் விரல்களில். உயிருக்கு அபாயம் ஏற்படும் நிலையில் அவள் இல்லை. என்றாலும் அக்கம் பக்கத்துக் காடுகளில் எதிரிகள் ஒளிந்திருந்தால் திரும்பவும் அங்கே வந்து என் அருமை லியோவை......

என்னுடைய பட்டாளத்து நண்பன் ஒருவன் என் கையைப் பிடித்து வெடுக்கென்று இழுத்து வெளியே தள்ளினான். இன்னும் ஒரு நிமிஷம் என்னால் அவர்களுக்குத் தாமதமானால், என்னையே படைத் தலைவரின் உத்தரவுக்கு அஞ்சிச் சுட்டு வீழ்த்தி விடுப்பார்கள். நான் அவர்களுடன் நடைப்பிணம் போல் உணர்விழந்து நடந்தேன்.

சண்டை ஓய்ந்த பின்னர் சரியாக ஓராண்டு சென்றவுடன் எனக்குப் பட்டாளத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு அநுமதி தந்து விட்டார்கள்.

இனி நான் இந்திய-பர்மா எல்லைக்குச் செல்ல வேண்டும். போவதற்கு முன்பு எனக்குப் பிடித்த கதாசிரியரிடம் என்னுடைய கதையைச் சொல்லி விட்டுப் போகவேண்டுமென்பதற்காகவே இதை உங்களுக்கு எழுதுகிறேன்.

முடிவுரை :

சிங்காரவேலுவின் முதல் கடிதத்திலிருந்த முக்காலே மூன்று வீசம் கதையும் இவ்வளவுதான். இவ்வளவு நாட்களாக இதை வெளியிடாமலிருந்ததற்குக் காரணம், சிங்காரவேலு லியோவைத் தேடிச் சென்ற, முயற்சியின் பலன் என்ன என்று எனக்குத் தெரியாமல் இருந்ததே.

நான்கு தினங்களுக்கு முன்பு அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தச் சிறு கடிதத்தை இங்கே தருகிறேன் :

அன்புள்ள ஐயா,

மணிபுரி வரையிலும் சென்று, அங்கிருந்து டிடிமுக்கு வாரச் சந்தை கூடுவதற்காகச் செல்லும் வியாபாரிகள் கூட்டத்தோடு லியோவின் கிராமத்துக்குப் போனேன். குதிரைகளிலும் மாடுகளிலும் கோவேறு கழுதைகளிலும் சாமான்களை ஏற்றிச் செல்லும் நாடோடி வியாபாரிகளின் கூட்டம் அது. அங்கே நான் போய்ச் சேர்வதற்குப் பட்ட கஷ்டங்களை விவரித்துத் தங்களுக்குத் துன்பம் கொடுக்க விரும்பவில்லை. அவ்வளவு கஷ்டங்களும் அவள் முகத்தை நான் ஒருமுறை கண்களால் கண்டிருந்தால் பஞ்சாகப் பறந்திருக்கும்.

ஆனால் என்னுடைய லியோ இப்போது அங்கே இல்லை. தினந்தோறும் என் வரவை எதிர்பார்த்து அருவிக் கரைக்கு வந்து கொண்டிருந்தாளாம். வேறு யாரையும் மணந்து கொள்வதற்கு அவள் மறுத்து விட்டாளாம்.

கடைசியில் என்னைத் தேடிக்கொண்டு அவள் தமிழ் நாட்டுக்கே புறப்பட்டு விட்டாளாம். அவளுக்கு மொழி தெரியாது; அவளிடம் பணமில்லை; நம் நாட்டு மனிதர்களின் பழக்க வழக்கத்துக்கும் அவள் வாழ்க்கைக்கும் வெகுதூரம். மனிதர்களை எளிதில் நம்பி விடுவாள்.

என்னைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்ட லியோவை நான் எங்கே எப்படித் தேடிக் கண்டு பிடிப்பது? நல்ல அழகி; நல்ல இளமை; புறப்படும்போது மஞ்சள் பட்டு மேல் துணியும், பச்சைநிற லுங்கியும் உடுத்திக் கொண்டிருந்தாளாம். தலையிலே காட்டு மலர்கள், கைகளில் தந்த வளையல்கள்.—அவள் என்னிடம் வந்து சேர்வாளா? நாங்கள் இந்தப் பிறவியில் கணவனும் மனைவியுமாக ஒன்றாய் வாழ்வோமா?


எனக்குப் பதில் தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள். உங்களன்புள்ள,

சிங்காரவேலு.



தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன



- வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.
- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடலையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

EEC

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட் லைன் பீச், மதராஸ்.

மற்றும்

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக் கோபுர வீதி, மதுரை



கண்ணன் கண்ட தீபாவளி

எஸ். ரங்கநாயகி

ஸந்தியா தேவி மெள்ள ஆகாயத்தினின்று இறங்கி வந்தனள். பூமகள் அவளுடைய மென்பாதங்களைக் கழுவி விட நீர் முத்துக்களைத் தயாராக வைத்திருந்தாள். ஸந்தியா தேவி படர்ந்து நின்ற அழகை, மெள்ளச் சந்திரன் ஆகாயத்தின் அடியில் வந்து எட்டிப் பார்த்தான். மீறங்கிய தேவி தன் மடியினில் பக, பக்ஷிகளைத் தட்டித் தூங்கச் செய்து கொண்டிருந்தாள். தென்றல் காற்று அவளுடைய சிசுக்களுக்குத் தாலாட்டு பாடின.

அந் நேரத்தில் துவாரகா பட்டணத்தில் கிருஷ்ண பரமாத்மா சத்தியபாமையுடன் தடாக தீரத்தில் சல்லாபம் செய்து கொண்டிருந்தார்.

"ப்ரியே! உன் முகத்தை நோக்கியதும் தடாகத்தில் இவ்வளவு நேரம் கர்வத்துடன் இருந்த செங்கமலம் தன் அழகுக் கடையை மலர்த் திரையினால் மூடி விட்டனள். பார்த்தாயா?" சத்தியபாமையின் தோளில் கைகளைப் போட்டபடி கூறினார் துவாரகாதீசன்.

"இல்லை... நாயகன் தன்னை விட்டு விலகினால் நாயகியின் நிலை எவ்விதம் இருக்கும் என்பதைக் காட்டுகிறாள் அவள். விரஹதாபம் அவள் முகத்தை எவ்வளவு சோர்வடையச் செய்து விட்டது, பார்த்தீர்களா?" சத்தியபாமா இளம் வதனத்தில் புன்னகை மிளிரக் கூறினாள். அடிக்கடி நாயகன் அவளை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவதைக் குறிப்பாகக் காட்டி, அதன் காரணமாகத் தன் மனம் எவ்விதம் கிலேசமடைந்து விடுகிறது என்பதையும் காட்டி விட்டாள்.

கண்ணன் வாய் நிரம்பச் சிரித்தார். "ஆனால் பாமா, இந்தப் பெண்களே..."

"ஸ்வாமி!" — வெளியே ஒரு குரல் கேட்டது.

அதற்குள் யார் அழைக்க வந்து விட்டார்களோ!

சத்தியபாமைக்குக் கோபமாக வந்தது. "யார் அங்கே?"

"மன்னிக்க வேண்டும். நான்தான் இந்திரன்."—குரலொலி வந்தது.

துவாரகாநாதன் இந்திரனை வரவேற்க எழுந்தார். அதற்குள் சத்தியபாமை அவரைத் தடுத்தாள்.

"சற்றுப் பொறுங்கள். தங்களை இப்பொழுது பார்க்க நேரமில்லை என்று சொல்லி விடுங்கள்!"

"பாமா! நீயா இவ்விதம் கூறுகிறாய்?"

"ஆமாம். இந்திரன் உங்களைத் தேடி வருவதென்றால் அதற்குக் காரணமில்லாமல் போகாது. ஆபத்துக் காலத்தில் தான் அவருக்கு உங்கள் நினைவு வரும். எவர்களையாவது அழிக்க உங்களை இழுத்துச் சென்று விடுவார். பிறகு உங்களுக்கு மனைவியைப் பற்றின சிந்தனையே இருக்காது."

"ஆபத்தில் சிக்கியவர்களைக் காப்பது என் கடமை ஆயிற்றே! எந் நேரத்திலும் எந்த இடத்திலும் எவர் கூப்பிட்டாலும் நான் தயாராக இருக்க வேண்டியது என் பொறுப்பல்லவா!..."

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள்."

"என்ன?"

"ஒன்றுமில்லை. தாங்கள் போருமிடத்துக்கெல்லாம் என்னையும் நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டும்..."

"நன்றாகத்தான் கூறுகிறாய் போ! யுத்த பூமிக்கு உன்னை அழைத்துச் செல்ல முடியுமா? தளிர் மேனியுடையவள் ரத்தப் பிரவாகத்தைக் கண்டு மயக்கமடைந்து விடுவாளே! பிறகு மனைவியைக் கவனிப்பதா? அல்லது போரில் புத்தி செலுத்துவதா?"

"உங்களுக்குப் பெண்களைப் பற்றி இன்னும் நன்றாகத் தெரியவில்லை. கோமளமான இருதயத்தைக் கொண்ட பெண்கள் சமயம் நேரிடும் போது மனத்தைத் தளரவிடாமல் பாதுகாத்துக் கொள்ளவும் முற்படுவார்கள். இந்தத் தடவை நான் கண்டிப்பாக உங்களுடன் வந்தே தீருவேன்." கண்டிப்பாகக் கூறி விட்டாள் சத்தியபாமா.

"பாமா! அதற்குள் ஏன் அவசரப்படுகிறாய்? இந்திரன் எதற்காக வந்திருக்கிறான் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுவோம்..."

"ஸ்வாமி!" என்று மீண்டும் வெளியிலிருந்து குரல் வந்துவிட்டது. ஸ்ரீருத்ர வேகவதி பின்தொடர அச்சுதன் வெளியே வந்தார்.

"ஆபத்பாந்தவா! தாங்கள்தான் என்னை ரக்ஷிக்க வேண்டும்." கோவிந்தனின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டான் இந்திரன்.

கிருஷ்ணன் முகத்தில் புன்னகை அரும்பியது. ஆபத்துக் காலத்தில் ஆபத்பாந்தவனை அணுகுவது இந்திரனின் வழக்கம் என்பதை அவர் நன்றாக அறிந்தவர்.

"தேவர்களுக்கு அரசனான நீ, இவ்விதம் என் பாதங்களில் விழுவது நன்றாக இல்லையப்பா! என்ன வந்து விட்டது, உனக்கு?" கபட சூத்ரதாரி கேட்டார்.

"ஹே, ஹ்ருஷிகேசா! இனி என்னை அரசன் என்று கூற முடியாத பதித நிலையை அடைந்து விட்டேன். என்னை ரக்ஷிப்பது தங்கள் பொறுப்பு" என்று துயரக் குரலில் கூறினான் இந்திரன்.

"தேவேந்திரா! ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள்? சட்டென்று விஷயத்தைக் கூறக்கூடாதா?"— பாமா குறுக்கிட்டுக் கேட்டாள். கணவனுடன் போர்க்களத்துக்குச் செல்ல வேண்டுமென்ற ஆர்வம் அவளுக்கு மேலிட்டது.

"பிராக்ஜோதிஷபுரத்தில் நரகாசுரன் இருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமே? அவன் என்னுடைய குடையையும், குண்டலங்களையும், இருப்பிடத்தையும் அபகரித்துக் கொண்டு என்னை விரட்டி விட்டான். அவனைத் தோற்கடிக்க நான் அசக்தனாக இருக்கிறேன். தாங்களே என்னைக் காத்தருள வேண்டும். தீனபந்து! தயாசிந்து! தங்களைத் தவிர எனக்கு யார் கதி..?"

"போதும் போதும், என் நாதன், தாங்கள் ஒரு முறை கூப்பிட்டாலே வந்து விடுவார். இனி நீங்கள் கவலையற்று இருக்கலாம்..." அபயப் பிரதானம் செய்து விட்டனள் பாமா.

இந்திரன் அவ்விடத்தை விட்டுச் சென்ற பிறகு, "சத்தியபாமா! இதென்ன, ஒரே நிமிடத்தில் அபயப் பிரதானம் கொடுத்து விட்டாயே! அந்த நரகாசுரன் எப்படிப்பட்டவன் என்பதை நீ அறிவாயா?" என்று கேட்டார்.

"அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. 'அபயம்' என்று ஒருமுறை கூறி ஒருவன் வந்து விட்டால் அவனை ரக்ஷிப்பது உங்கள் பொறுப்பு என்று கூறி விட்டீர்களே... ஹும்! சீக்கிரம் கிளம்புங்கள். அஸ்திரங்களை நான் எடுத்து வருகிறேன்."— சத்தியபாமா இவ்விதம் கூறியபடியே உள்ளே சென்றாள். போருக்குத் தயாராகத் திரும்பியும் வந்து விட்டாள்.

கோபாலன் சத்தியபாமையைப் பல விதமாகக் கூறித் தடுத்துப் பார்த்தார். அவள் கலங்கவில்லை. வீரவனிதையாகக் கணவரைப் பின்பற்றினாள்.

பிராக்ஜோதிஷ நகரத்தில் முதலில் முருகரனை எதிர்த்து அவன் வதம் முடித்த பின்னர் அவனுடைய ஏழு புத்திரர்களையும் கொன்றனர். இதனால் கோபம் கொண்ட நரகாசுரன் தானே நேரில் சண்டையிட ஆரம்பித்தான்.

இறக்கும் நேரத்தில் அவன் மனத்தில் அஞ்ஞானம் நீங்கி ஞான ஒளி பரவியது. கண்ணனை மனத்தில் தியானித்தான். தான் இறக்கும் அந்நாளை மக்கள் நினைவு படுத்தி, அஞ்ஞானம் அழிந்த காரணத்தால் அந்தினத்தைப் புத்தாடை உடுத்தி, புதுமணம் கமழக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான் நரகாசுரன். கண்ணன் அவன் விருப்பத்தை ஈடேற்றுவதாக வாக்களித்தார்.

சத்தியபாமாவின் இருதயம் ஆனந்தத்தில் மெய்மறந்து நிற்க, அவளை அணைத்தபடியே துவாரகைக்குத் திரும்பினார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

* * *

“பாமா, சத்தியபாமா!”

சத்தியபாமை நிமிர்ந்து நோக்கினாள். யார் இவ்வளவு அன்புடன் கூப்பிடுவது? அந்தப்புரத்தின் வெளிப் புறத்திலிருந்து குரல் வந்தது.

“சத்தியபாமா! குழந்தை!” வாத்சல்ய அமிருதம் பெருக மீண்டும் குரல் வந்தது. சத்தியபாமா வெளியே சென்று பார்த்தாள்.

“மாமா!” என்று குதூகலத்துடன் ஓடிச் சென்று வந்தவரின் அடிபணிந்து வணங்கினாள்.

“பார்த்தாயா, நான் கூறியிருந்ததை மறந்துவிட்டு 'மாமா' என்று கூப்பிடுகிறாயே! என்னைஉன் தந்தை போல் நினைத்து 'அப்பா' என்று அழைக்கச்சொல்லியிருந்தேனே! இதோ பார், பாமா! உனக்கும் தந்தையில்லை. எனக்கும் மகள் இல்லை. நீயும் நானும் உன் தந்தை இருந்த போதே தந்தையும் மகளுமாகவே பழகினோம். இப்பொழுது 'அப்பா' என்று கூப்பிட்டு என்னை ஆனந்திக்கச் செய்வதில் ஏன் அம்மா தயங்குகிறாய்?” அவ்வயோதிகரான ஸர்வாநந்தர் கூறினார்.

சத்தியபாமாவை, ஸ்யமந்தகமணியை ஜாம்பவானிடமிருந்து மீட்டுக் கொடுத்த கிருஷ்ணருக்கு விவாகம் செய்து கொடுத்ததும் அதன் காரணமாகக் கோபம் கொண்ட சததன்வன் சத்தியபாமாவின் தந்தை சத்ராஜித்தைக் கொன்று விட்டான். அப்பொழுது கதறித் துடித்த சத்தியபாமாவைத் தேற்றியவர் ஸர்வாநந்தர். சத்ராஜித்தின் நெருங்கிய நண்பர். சத்தியபாமா அவர் கையிலேயே வளர்ந்தவள்.

தன் தந்தையின் பெயரைக் கேட்டதும் சத்யபாமாவின் கண்களில் நீர் துளித்தது. பிறகு தன்னைத் தேற்றிக் கொண்டு, “தங்கள் விருப்பம்போல் இனி தங்களையே தந்தையாகப் பாவித்து 'அப்பா' என்று கூப்பிடப் போகிறேன். நான் தந்தையற்றவளாக இருக்க வேண்டிய அவசியமுமில்லை. அப்பா! உள்ளே வாருங்கள். உங்கள் மகள் வீட்டில் உங்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு” என்று கூறி அவரை உள்ளே அழைத்துச் சென்றாள்.

பாதங்களைக் கழுவி திவ்ய பட்டாடைகள் அணிவித்தாள். ருசியான பழங்களைச் சாப்பிடக் கொடுத்தாள்.

“அப்பா! இவ்வயோதிக வயதில் என்னைத் தேடி வரும் சிரமத்தை எடுத்துக் கொண்டதன் காரணம்?” இராட்சை ரஸத்தை சுவர்ண பாத்திரத்தில் நிரப்பியபடி கேட்டாள் மகள்.

“ஒரு தந்தை தன் மகளை எதற்காக அம்மா தேடி வருவார்? பிறந்த வீட்டை விட்டு வந்ததும் நீ எங்கள் எல்லாரையும் மறந்து விட்டாய்! மகளைக் காணத் துடித்தது என் உள்ளம். உடனே ஓடி வந்து விட்டேன். உன்னைக் காண வரும் துடிப்பில் வரும் போது சிரமம் தெரியவில்லை. ஆயினும், போகும் போதுதான் பிரயாணக் கஷ்டம் இருக்கும் போலிருக்கிறது” என்று பாமாவின் தலையை வாத்ஸல்யத்துடன் கோதியபடி அம்முதியவர் கூறினார்.



“அப்பா! தாங்கள் அங்கு தனியாக இருந்து கொண்டு நேரத்தைக் கழிப்பது எனக்கு மனவேதனையை அளிக்கிறது. தாங்கள் இங்கு வந்து என்னுடன் இருந்து விடுங்கள். உங்களுக்குப் பணிவிடை செய்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்” என்று கூறினாள்.

“நன்றாகத்தான் இருக்கிறது. மாப்பிள்ளை வீட்டில் வந்து இருக்க முடியுமா? கூழ் குடித்தாலும் தனியாக இருப்பதில் உள்ள சுகம் அமிருதத்தை ஊட்டும் மாப்பிள்ளை வீட்டில் கிடைக்காது, அம்மா!” என்று கண்டிப்பாக மறுத்து விட்டார் வளர்ப்புத் தந்தை.

பிறகு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றுக் கொண்டார் ஸர்வாநந்தர்.

மகள் கண்களில் நீர் மல்கப் பிரியா விடை கொடுத்தாள்.

போகும் நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்துச் சென்றார் அவர். “அம்மா, குழந்தே! மாப்பிள்ளை ஒரு நாளாவது நம் வீட்டுக்கு வந்து தங்கினால்தான் என் மனம் நிம்மதியடையும். பிறந்த வீட்டுத் தொடர்பும் கொஞ்சம் வைத்திருக்க வேண்டுமல்லவா? நானே பிள்ளையை நேரில் அழைக்கலாமென்று வந்தேன். ஆயினும் இதுசமயம் அவர் இங்கு இல்லாதது என் துர்ப்பாக்கியம். நீயே கூறி விடுகிறாயா, அம்மா?”

சத்தியபாமா சம்மதம் தெரிவித்தாள்.

* * *

நாதனின் பாத கமலங்களை வருடிக் கொண்டிருந்தாள் சத்தியபாமா. கண்ணன் ஆனந்தமாக சயனித்துக் கொண்டிருந்தார்.

“சத்தியபாமா! இன்று இந்த அறையில் இவ்வளவு வெகுமான வஸ்துக்கள் இருப்பதன் காரணம் என்ன? யாரேனும் இங்கே வந்தனரா?” என்று கோபாலன் கேட்டார்.

“ஆமாம், இந்திரன் வந்து விட்டுச் சென்றார்.”

“இந்திரனா? ஏதேனும் ஆபத்து வந்து விட்டதோ? முன்னதாகவே ஆபத்பாந்தவனுக்குக் காணிக்கை செலுத்தி விட்டானோ?” என்று மந்தகாசம் மிளிரக் கேட்டார் பாமாகாந்தன்.

“அதெல்லாம் இல்லை. ஆபத்திலிருந்து மீட்டதற்கான காணிக்கைகள் இவை. நரகாசுரனை வென்று குடையும், குண்டலமும் நாடும் நகரமும் மீட்டுக் கொடுத்ததற்குத் தம் ஆனந்தத்தைத் தெரிவிக்க வந்தார். அக்காணிக்கைகள் இவை!”

“அவன் வந்தது எனக்குத் தெரியாமல் போய் விட்டதே? வீரப் போர் புரிந்த உன்னைப் பற்றி அவனிடம் கூற வேண்டுமென்றிருந்தேனே!” என்று எழுந்து உட்கார்ந்தபடியே கண்ணன் கூறினார்.

“அவர் எல்லாவிஷயங்களையும் அறிந்து, என்னை நேரில் சந்தித்துத் தம் நன்றியைத் தெரிவிக்கவே வந்தார். ஹூம், என்ன இருந்து என்ன? இது வரையில் உங்கள் வாயினால் ஒரு புகழுரை வெளிவரவில்லை. [illegible] புகழ்ந்தாலும் உரியவர் புகழுவது

போல் ஆகுமா?'' என்று பாமா குரல் அடைக்கக் கூறினாள்.

கண்ணன் அவள் தோளைப் பற்றினார். ''பாமா! வருத்தப்படாதே! உன் வீரச் செயலினால் என் உள்ளம் எவ்வளவு குதூகலம் அடைந்தது என்பதை நீ அறிய மாட்டாய். அதற்குப் பிரதி உபகாரமாக உனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வஸ்து ஏதாவது பரிசளிக்க வேண்டுமென்பது என் விருப்பம். உனக்குப் பிடித்தது என்ன வென்று கூறு! உடனே நிறைவேற்றுகிறேன்.''

மின்னல் போல் ஒரு எண்ணம் தோன்றியது, பாமாவின் மனத்தில். கணவரின் அருகில் நகர்ந்து கொண்ட அவள், அவர் பீதாம்பரத்தைக் கையில் முறுக்கியபடி, ''உங்கள் விருப்பத்தைத் தடுக்க நான் விரும்ப வில்லை. சில நாட்களாக என் மனத்தில் ஒரு சிறிய விருப்பம். அதை ஈடேற்றிக் கொடுத்து விட்டால் போதும்'' என்று கூறினாள்.

'' அச்சிறிய விருப்பம் என்னவோ?''

''ஒன்றுமில்லை. எனக்கு வெகு நாட்களாக நானும் நீங்களும் சேர்ந்து ஒரு நாளாவது என் பிறந்த வீட்டில் கழிக்க வேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது. என் தந்தை ஸ்தானத்தில் இருக்கும் ஸர்வாநந்தர் வீட்டுக்குச் சென்று நாமிருவரும் ஆனந்தமாக இருக்க வேண்டும். சம்மதம் கொடுப்பீர்களா?'' ஓரக் கண்களால் நாயகனை நோக்கியபடி கேட்டாள் சத்தியபாமா.

மாயவன் புன்முறுவலுடன் கூறினார். ''உனக்குச் சிறிய விருப்பமாகத் தோன்றும் இவ்விஷயம் என் வரையில் பெரியதாகத் தோன்றுகிறது. மாமன் வீட்டில் ஒரு நாள் முழுவதும் தங்குவது சற்றுச் சிரமமான காரியம்தான். போகட்டும், உன்னுடைய விருப்பத்தை ஈடேற்றுவதாகக் கூறி விட்டேன். என்றாவது ஒரு நாள் போகலாம்''

சத்தியபாமாவின் உள்ளம் ஆனந்தத் தாண்டவம் ஆடியது. என்றைக்குப் போக வேண்டுமென்பதை அப்பொழுதே நிச்சயித்து விட்டாள் அவள். ''நரகாசுரன் இறந்த நாளையதினம் ஒரு வருடம் ஆகிறதல்லவா? அவன் வேண்டுகோளின்படி நாளை பண்டிகையைப் பெருநாளாகக் கொண்டாட வேண்டுமே! இங்கு நாம் தனித்து ஆனந்தமாகக் கொண்டாட முடியாது. ஆகையால் நாளையதினமே எங்கள் வீடு செல்வோம். நாளை முழுவதும் ஆனந்தமாகக் காலம் கழித்து விட்டுத் திரும்புவோம்'' என்றாள்.

தேவகிசுதன் தமது பிரியநாயகியின் விருப்பத்தை ஈடேற்றுவதாக ஒப்புக் கொண்டார். சத்தியபாமாவின் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பி வழிந்தது.

* * *

''அப்பா! ஓ, அப்பா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே மான் போல் துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினாள் சத்தியபாமா.





ஸர்வானந்தர் திரும்பி நோக்கினார். செல்வ மகள் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும், ஆனந்தப் பிரவாகத்தில் திக்குமுக்காடினார். மகளை இறுக்க அணைத்துக் கொண்டார்.

"மகளைக் கண்ட ஆனந்தத்தில் நின்று விடாதீர்கள். அங்கு வாசலில் உங்கள் மருமகன் வந்திருக்கிறார். மாப்பிள்ளையை அழைத்து வாருங்கள்" என்று சத்தியபாமா கூறினாள்.

"என்ன? மாப்பிள்ளையா! இங்கேயா வந்திருக்கிறார்! எங்கே அவர்?" விழுந்தடித்துக்கொண்டு ஓடினார் ஸர்வானந்தர்.



"வாருங்கள், மாப்பிள்ளை! இன்றுதான் நான் கிருதார்த்தனானேன். என் இல்லம் பாக்கியமடைந்து விட்டது. இனி எனக்கு ஒரு குறைவுமில்லை" என்று பல விதமாக உபசரித்து அழைத்தார் கோபாலனை.

கண்ணன் மாமனைப் பின் தொடர்ந்து சென்றார். மாப்பிள்ளைக்குக் கால்கழுவ ஜலம் கொடுத்து விட்டு, ஆசனம் தந்தார் ஸர்வானந்தர். பிறகு மாப்பிள்ளைக்கு விருந்து படைக்க ஏற்பாடுசெய்வதில் முனைந்து விட்டார்.

சத்தியபாமாவோ பிறந்த வீட்டு மகிழ்ச்சியில் தன்னையே மறந்திருந்தாள். ஒரு சமயம் பசுவைக் கட்டி அணைத்தாள்; ஒரு சமயம் கிளியுடன் கொஞ்சினாள். தன் தோழிகளை யெல்லாம் கண்டு வந்தாள்.

கர்...சர்...கர்..சர்...

கண்ணன் சப்தத்தை உற்றுக் கேட்டார். அடடா! நாக்கில் ஜலம் சொட்டுகிறதே! இருந்த இடத்திலிருந்தே ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தார். ஸர்வானந்தர் கட்டளையிட்டபடி நின்று கொண்டிருந்த பணிப்பெண் ஒருத்தி தயிர் கடைந்து கொண்டிருந்தாள். நுரை அலைகள் போல் வெண்ணெய் மோதி மோதி வந்தது.

கண்ணன் முன்பு ஒரு அபூர்வமான இனிய காட்சி தோன்றியது..

...யசோதை கடைந்தெடுத்த வெண்ணெயை உறியில் வைத்து விட்டுக் குளக் கரைக்குச் செல்லுகிறாள். குழந்தைகளின் கூட்டம் சந்தடி செய்யாமல் உள்ளே நுழைகிறது. அதற்குத் தலைவன் ஒரு பாலகன் நெற்றியில் சுருண்ட மயிர் குழல்கள் அசைந்து ஆட, அதன் மத்தியில் கஸ்தூரி திலகம் ஒளிவீச, கையில் குழலுடன் நிற்கிறான். அவன் கட்டளைப் படி குழந்தைகள் ஒருவர்மீது ஒருவர் மண்டியிட்டு நிற்க, தலைவன் அவர்கள் மீது ஏறி வெண்ணெய்ப் பானையை எடுத்து விடுகிறான். அனைவரும் வெண்ணெய் விருந்து உண்ணும் வேளையில் வந்து விடுகிறாள் யசோதை. தலைவன் அகப்பட்டு விடுகிறான். யசோதை அவனை அடிக்கக் கை ஓங்கும் நேரத்தில் அப்பாலகனின் முகத்தில் புன்னகை மலர்ந்துவிட யசோதை மெய்மறந்து நின்று விடுகிறாள். பிறகு ...

வாய்விட்டுச் சிரித்து விட்டார் கிருஷ்ணர். 'பாவம், யசோதை! தாய்...நின்ற இடத்தில் நின்று விடுவாள்.'

அட நாராயணா...நாக்கில் இன்னமும் ஜலம் ஊறிக் கொண்டிருக்கிறதே! வெண்ணெய் வேண்டுமாமே இந்த நாக்குக்கு...சே, சே, மாமனிடம் போய் வெண்ணெய் வேண்டும் என்று கேட்க முடியுமா? பிறகு மாப்பிள்ளைக் கௌரவம் போய்விடுமே!

யசோதை மைந்தன் சுற்றும் முற்றும் பார்த்தார். ஸர்வானந்தர் உள்ளே இருந்தார். சத்தியபாமா பின்கட்டு முற்றத்தில் தன் தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள்...இவர்கள் இருக்கும் நிதானத்தைப் பார்த்தால், விருந்தும் சீக்கிரத்தில் தயாராகாது போலிருக்கிறது. விருந்தின்போது இலையில் வெண்ணெய் விழும் வரை இந்த நாக்கும் சொன்னதைக் கேட்காது போலிருக்கிறது.

உடனே கண்ணனின் பாத கமலங்கள் அவரை யசோதையின் கிருஹத்துக்கு அழைத்துச் சென்றன.

யசோதை இந்நேரம் வெளியே போயிருப்பாள். எவ்விதமாவது அவளுக்குத் தெரியாமல் உறியிலிருந்து வெண்ணெயை எடுத்துவிட வேண்டும்.

மெள்ள மெள்ள அடிமேலடி வைத்து உள்ளே நுழைந்தார் கோகுலநந்தனன்.

"அடேடே, யார் அது, கண்ணனா? வாடாப்பா வா. இப்பொழுதாவது எங்கள் நினைவு வந்ததா?"

மாயவன் திரும்பி நோக்கினார். யசோதையார் நின்றுகொண்டிருந்தாள். தம் செய்கைக்காக அவள் கோபிக்கப் போகிறாளே என்று கண்ணன் முதலிலேயே மாயச்சிரிப்பைவீசினார். ஆனால் யசோதை தன் கோபத்தை மறந்தே விட்டாளே!

"கண்ணா! ஏன்டா நிற்கிறாய்? உனக்காகத்தான் வெண்ணெயை நாள்தோறும் சேர்த்து வைக்கிறேன். எடுத்துக் கொள்ளடா, குழந்தை!"

"குழந்தையா? எனக்குக் குழந்தைகள் பிறந்த விட்டபோதும் குழந்தைதானா?"

"ஆமாமடா, மகனே! உனக்குப் பல குழந்தைகள் இருக்கலாம். ஆனால் உனக்கு ஒரு தாய்தான் இருக்க முடியும். அத்தாய்க்கு நீ என்றுமே குழந்தைதான். தேவகி மைந்தனாகப் பிறப்பினும் உண்மையில் நீ என் மகன்தான்.. அதுபோகட்டும். நீ ஏன் இன்னும் நிற்கிறாய்? வெண்ணெயை எடுத்துக்கொள்." யசோதை ஒரு கிண்ணம் நிறைய வெண்ணெயைக் கொடுத்தாள்.

கிருஷ்ணருக்கு அந்த நிமிடத்தில் உற்சாகம் குறைந்தது. தாயின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு துளிதான் வாயில் போட முடிந்தது. 'ஐயே, சப்பென்றிருக்கிறதே... திருடித் தின்ற வெண்ணெயில் இருந்த ருசி இல்லையே... இந்த அம்மாதானாகட்டும், 'குழந்தை, குழந்தை' என்கிறாளே...குழந்தை வெண்ணெயைத்திருடித், தின்ன உள்ளே நுழைந்தால் இப்படியா இழுத்து வைத்துக் கொஞ்சுவாள்.. சே, சே! வெண்ணெயிலிருந்த ருசியே மறைந்து போய் விட்டதே...

யசோதை, மைந்தனுடைய மனோபாவத்தை அறியவில்லை. பலப் பல உபசாரங்கள் செய்தாள். இனிய தின்பண்டம் கொடுத்தாள்.

"அடியே கோபி, எங்கள் அருமைக் கண்ணன் வந்திருக்கிறானடி, வந்து பார்."

"ஏ, கௌமுகா, உன் அம்மாவிடம் எங்கள் வீட்டுக் குழந்தை வந்திருக்கிறான் என்று சொல்லு."

"ஓ நந்தினி! உன் தோழன் வந்திருக்கிறான், வந்துபார்த்துவிட்டுப்போ."

என்ன அம்மாவோ இவள்! இங்குதான் வெண்ணெயைத் திருடித் தின்ன முடியவில்லை. அண்டை அயலிலாவது நம் கைவரிசையைக் காட்டுவோம் என்றால் அதற்கும் வழி இல்லாமல் செய்கிறாளே... இருக்கட்டும். அவர்கள் எல்லோரும் இங்கு வந்து விடட்டும். ஏதாவது சாக்குப்போக்கு கூறி எப்படியாவது வெளியே சென்று அவர்கள் வீட்டிலிருந்து திருடித் தின்று விடுகிறேன்.

அட ஆண்டவனே, அனைவரும் மண் கலசத்தில் வெண்ணெயை நிரப்பிக் கொண்டு வந்து விட்டார்களே!

"கண்ணா! உனக்கு வெண்ணெய் என்றால் பிடிக்குமே. எடுத்துக்கொள்ளப்பா!"

"கண்ணா! சீனி கலந்த வெண்ணெய் பிடிக்குமே உனக்கு என்று சீனி கலந்து எடுத்து வந்தேன்."

"ஆடைத் தயிர், வெண்ணெய் இரண்டுமே கொண்டு வந்து விட்டேன், கண்ணா!" என்று ஒருத்தி மிகுந்த பெருமையாகக் கூறினாள்.

கண்ணனைச் சுற்றிலும் வெண்ணெய் பிரவாகமாக இருந்தபோதும், அவருக்கு அந்த வெண்ணெய் ருசிக்கவில்லை. அவர்கள் கண்ணனின் ருசியை அறிந்து கொள்ள வில்லை. வெண்ணெய்க் கலசங்களை எடுத்து வந்து, அவர் தம்முடைய கைவரிசைகளையெல்லாம் காட்ட முடியாதபடி செய்து விட்டனர்.

பல சாக்குப் போக்குகள் கூறிப் புறப்பட்டார் கண்ணன் சத்தியபாமையின் இல்லத்துக்கு.

கண்ணன் தன் வளர்ப்புத் தாயின் வீட்டில் தவித்த நேரத்தில்... சத்தியபாமா தன் வளர்ப்புத் தந்தையின் வீட்டில் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா, மாப்பிள்ளையை நீங்கள் ஏதாவது கூறி விட்டீர்களா? அவர் கோபித்

துக் கொண்டு போய் விட்டாரா?'' தொண்டை அடைக்கக் கேட்டாள் மகள்.

''இல்லையே, அம்மா! உங்களுக்குள் ஏதாவது பூசல் ஏற்பட்டு விட்டதோ என்று தான் நான் பயந்தேன்... அவர் எங்குதான் போயிருப்பார்?...பாமா, மாப்பிள்ளை வந்திருக்கும் போது உன் தோழிகளுடன் ஏனம்மா பேசிக் கொண்டிருந்தாய்? அதனால் அவர் வருத்தமடைந்து விட்டாரோ!''

''இல்லை. இல்லை...விட்டுக்கு வந்திருக்கும் மாப்பிள்ளையுடன் நீங்கள் பேசிக் கொண்டிருக்கவில்லை என்று தான் அவருக்கு வருத்தமாக இருந்திருக்கும்...''

மகளும், தந்தையும் தாங்கள் செய்த குற்றம் தெரியாமல் விழித்தனர். மாப்பிள்ளை மறைந்ததின் காரணமே புரியவில்லை. பல இடங்களில் தேடி விட்டனர். அந்த மாயாவி மாப்பிள்ளை எங்கும் அகப்படவில்லை.

துயரத்துடன் இருவரும் வாசலில் உட்கார்ந்திருந்தபோது...

சடக்...சட்...கட...கட.

''ஐயோ, அப்பா! உள்ளே ஏதோ சத்தம் கேட்கிறதே!'' சத்தியபாமா வெருண்டு கூறினள்.


''ஆமாம், பாமா! சாமான் அறையில் சத்தம் கேட்கிறது. எவனோ உள்ளே நுழைந்து விட்டான் போலிருக்கிறது.''

இருவரும் மெதுவாக உள்ளே நுழைந்தனர். இன்று என்னென்ன கஷ்டங்கள் வந்து விட்டன. மாப்பிள்ளையைக் காணவில்லை; வீட்டுக்குள் திருடன் புகுந்து விட்டான்.

சாமான் அறைக் கதவு மூடியிருந்தமையால் ஸர்வாநந்தர் வெளியே தாள் போட்டுவிட்டார். ''பாமா! நீ இங்கேயே இரு. நான் உலக்கையை எடுத்து வருகிறேன். பிறகு கதவைத் திறந்து திருடனைப் பிடிக்க வேண்டும்'' என்று கூறி உலக்கையை எடுத்துவரச் சென்றார் அவர்.

பாமா மெதுவாகக் காற்றுப் போக்கி வழியாக உள்ளே எட்டிப் பார்த்தாள்... 'ஆ...இவ்வளவு நேரம் காணாத மாப்பிள்ளை, திருடனாக நிற்கிறாரே! இது என்ன அநியாயம்?'

கோகுலத்திலிருந்து திரும்பிய மாயவன் மாமன் வீட்டில் வெண்ணெய் அறையில் ஒருவரும் இல்லாதிருப்பதை அறிந்ததும் அங்கு நுழைந்து விட்டார். தந்தையும் மகளும் மாப்பிள்ளை உள்ளே நுழைந்ததை அறியாமல் தேடிக் கொண்டிருந்தனர்.



ஜோஸ்யர்:—இந்த ஜாதகத்துக்குப் பணம் வந்து குவியும், சார்!
வந்தவர்:—அப்படியானால், இந்த ஜாதகத்தை அடமானம் வைத்துக் கொண்டு ஒரு நூறு ரூபாய் கடன் கொடுங்கள்!

சத்தியபாமாவுக்குப் பெருங்கஷ்டமாகி விட்டது. அப்பாவுக்கு என்ன பதில் சொல்வது? கௌரவமாக இந்த மாப்பிள்ளை நடந்து கொள்ளக் கூடாதா? வெண்ணெய் வேண்டுமென்றால் தரமாட்டார்களா? இந்தத் திருட்டுப் புத்தி இன்னும் போகவில்லையே!

தாளைத் திறந்து பரபரவென உள்ளே நுழைந்தாள் பாமா. வாய் முழுவதும் வெண்ணெய் உருக, பீதாம்பரத்தில் வெண்ணெய்த் துளிகள் மின்ன, முழங்கை வரை வெண்ணெயுடன் பரமாத்மா நின்று கொண்டிருந்தார். பாமா உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் அவர் பயந்து விட்டார். அணிந்திருந்த பீதாம்பரத்திலேயே வெண்ணெயைத் துடைக்க முயன்றார். 'ஆஹா! என்ன ருசியாக இருந்தது வெண்ணெய்! அதற்குள் வந்து விட்டாளே இவள்..!'

''என்ன கூத்து இது? மாப்பிள்ளையின் கௌரவத்தைப் போக்கடித்துக் கொண்டு விட்டீர்களே! இது என்ன சபலம்...?'' பாமா கோபித்தபடியே கணவன் மீது இருந்த வெண்ணெய்த் துளிகளைத் துடைத்து விட்டுப் பீதாம்பரத்தையும் மறைத்து வைத்து விட்டாள்.

இதற்குள் உலக்கையுடன் தந்தை வந்து விட்டார். மாப்பிள்ளையைப் பார்த்து அதிசயித்து நின்று விட்டார். பாமா செயற்கைச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''அப்பா, பூனை உருட்டி விட்ட சத்தத்தைக் கேட்டுத் திருடன் என்று நினைத்து விட்டோம்'' என்றாள்.

''ஓகோ! ஆனால் மாப்பிள்ளை!''

ஏது, இந்த அப்பா விடமாட்டார் போலிருக்கிறதே! ''அதை ஏன் கேட்கிறீர்கள்? மாப்பிள்ளை மாடியில் இருந்திருக்கிறார். நாம் அது அறியாமல் தேடினோம். திருடன் என்று நான் பயந்ததற்கும் இவர் மாடியிலிருந்து இறங்கி வந்ததற்கும் சரியாயிருந்தது'' என்று பாமா கணவரைக் காப்பாற்றுங் கதை ஜோடித்தாள். ஸர்வாநந்தர் எல்லாம் அறிந்தும், அந்நிமிடம் ஒன்றும் அறியாதவர் போல் சென்றார்.

பிறந்த வீட்டிலிருந்து பாமா தன் கணவன் வீட்டுக்குக் கிளம்பி விட்டாள். தேவகி மைந்தனும் கிளம்பி விட்டார்.

''ஓய், மாப்பிள்ளை! இங்கே வாரும்'' என்று ஸர்வாநந்தர் கட்டளை இட்டார். தந்தையின் கட்டளையில் பாமாகூடப் பயந்து போய் விட்டாள்.

''நீங்கள் செய்த திருட்டுக் குற்றத்துக்குத் தண்டனை கொடுக்கப் போகிறேன்'' என்றார் ஸர்வாநந்தர்.

''திருட்டுக் குற்றமா?'' பாமாதான் திகைப்புடன் கேட்டாள்.


''நீ சும்மா இரு, அம்மா குழந்தை. எனக்கு எல்லா விஷயங்களும் தெரியும். மாப்பிள்ளை மறைந்து எடுத்துத் தின்னும் பொருள் என்றால் அது உயர்வான பொருளாகத்தானே இருக்க வேண்டும். அப்பொருள் என் இல்லத்தில் அவருக்குக் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியே...இதற்குத் தண்டனை என்ன தெரியுமா? ஒவ்வொரு நரக சதுர்த்தசி தினத்திலும் நீங்கள் இந்த இல்லத்துக்கு வந்து பண்டிகை கொண்டாட வேண்டும்!'' என்றார் கண்களில் அன்பு பெருக.

மாயவனும், சத்தியபாமாவும் உள்ளம் மகிழ்ந்து அக் கட்டளையை ஏற்றனர்.

கண்ணன் ஏற்ற கட்டளையின் காரணமாகத்தான் இன்றும் பெண்கள் தங்கள் கணவரை அழைத்துக் கொண்டு தீபாவளித் திருநாளைக் கொண்டாடப் பிறந்தகம் சென்று விடுகின்றனரோ!




உங்கள் வதனம்
பிரகாசமடைய...
ரெமி
ஸ்னோ
&
பவுடர்
ஜி.சகுந்தலா


BABY GRIPE
ரமணீஸ்
பேபி கிரைப்
குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு
சிறந்தது
CYBOL
சைபால்
வெட்டுக்காயம்
சொறிசிரங்கு, வேனல்கட்டி
முகப்பரு, சேற்றுப்புண்
முதலிய வியாதிகளுக்கு
சிறந்தது
தயாரிப்பவர்கள்:
தி ஹெல்த் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை.



கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாந் தாமறப்பார் ;
வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார் ;
'ஏனடா, நீ நேற்றைக் கிங்குவர வில்லை' யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்த தென்பார் ;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார் ;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டா நாளென்பார் ;
ஓயாமற் பொய்யுரைப்பார் : ஒன்றுரைக்க வேறு செய்வார் ;
தாயாதியோடு தனி யிடத்தே பேசிடுவார் ;
உள் வீட்டுச் செய்தியெலாம் ஊரம் பலத்துரைப்பார் ;
என் வீட்டி லில்லை யென்றால் எங்கு முரசறைவார்
சேவகராற் பட்ட சிரம மிக வுண்டு. கண்டீர் ;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர் மிகுந்து வாடுகையில்,
எங்கிருந்தோ வந்தான், 'இடைச்சாதி நான்' என்றான் ;
மாடு கன்று மேய்த்திடுவேன், மக்களைநான் காத்திடுவேன் ;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன் ;




சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காட்டுவழி யானாலும், கள்ளர்பய மானாலும்
இரவிற் பகலிலே யெந்நேர மானாலும்,
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறாமற் காப்பேன்;
கற்ற வித்தை யேதுமில்லை; காட்டு மனிதன்; ஐயே!
ஆன பொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ்சனை புரியேன்"
என்று பல சொல்லி நின்றான். "ஏது பெயர்? சொல்" என்றேன்.
"ஒன்றுமில்லை; கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை" என்றான்.

கட்டுறுதியுள்ள வுடல் கண்ணிலே நல்ல குணம்,
ஒட்டுறவே நன்றா வுரைத்திடுஞ்சொல் – ஈங்கிவற்றால்,
தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,





"மிக்கவுரை பல சொல்லி விருது பல சாற்றுகிறாய்;
கூலியென்ன கேட்கின்றாய்? கூறு" கென்றேன். "ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை;
நானோர் தனியாள்; நரை திரைதோன் றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை" யென்றான்.
பண்டைக் காலத்துப் பயித்தியத்தி லொன்றெனவே
கண்டு, மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன். அன்று முதற்கொண்டு
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்றுமிகுந்து வரல் பார்க்கின்றேன்; கண்ணனால்
பெற்றுவரு நன்மையெலாம் பேசி முடியாது.
கண்ணை யிமையிரண்டும் காப்பது போல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான், வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீதி பெருக்குகின்றான்; வீடுசுத்த மாக்குகிறான்.
தாதியர் செய் குற்றமெலாந் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்,
ஒக்க நயங் காட்டுகிறான்; ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால் வாங்கி மோர்
வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்,
எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி யென்று சொன்னான்.
இங்கிவனை யான்பெறவே என்ன தவஞ் செய்துவிட்டேன்



கண்ணன் எனதகத்தே
  கால்வைத்த நாள் முதலாய்

எண்ணம் விசாரம்
  எதுவு மவன் பொறுப்பாய்ச்

செல்வம், இளமாண்பு,
  சீர், சிறப்பு, நற்கீர்த்தி,

கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,

தெளிவே வடிவாஞ் சிவஞானம், என்றும்

ஒளிசேர் நலமனைத்தும்
  ஓங்கி வருகின்றனகாண்!

கண்ணனை நான் ஆட்கொண்டேன்!
  கண்கொண்டேன்! கண்கொண்டேன்!

கண்ணனை யாட்கொள்ளக்
  காரணமு முள்ளனவே!




திருமணத்தில் நறுமணம்
"வந்தவர்கள் நம் வீட்டுத் திருமணத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே!"
"அதனாலென்ன, நாம் கொடுத்த நரசுஸ் காபியின் இனிய நறுமணத்தைப் பற்றிப் பேசினார்களே! அது போதாதா!"
நரசுஸ் காபி
நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி பிரைவேட் லி-ட்
மதராஸ் 6 சேலம்

நீலகிரி தொதுவர்

பிலோ இருதயநாத்

நீலகிரி என்றதும் நம் மனக் கண்முன் தொதுவர்களும், கோத்தர்களும், படகர்களும் வராமல் இல்லை. நீலகிரி—கடல் மட்டத்துக்கு மேல் 7758 அடி உயரத்தில் உள்ளது. அதன் தலைநகரம் உதகை.

இங்கு தொதுவர்கள் என்ற ஆதிவாசிகள் நீலகிரியைச் சுற்றிலும் சுமார் எண்பது மந்துகளில் குடியிருக்கின்றனர். மந்து என்பது அவர்கள் வாழும் இடங்களுக்கும், குடிசைக்கும் பெயர். ஒவ்வொரு மந்திலும் சுமார் நான்கு, ஐந்து குடிசைகள்தான் இருக்கின்றன. சுமார் இருபது மந்துகளுக்குமேல் பிரயாணம் செய்தேன். சில இடங்களில் மலைச் சரிவுகளின் மூலமாகச் செல்லும் ஒடுக்கமான, ஒற்றையடிப் பாதைகளும், ஒடுங்கிக் கிடந்த பள்ளத்தாக்குகளும், நாங்கள் ஆகாயத்தில் இருப்பது போலத் தோன்றியது. நல்ல குளிர் காற்று, 'சில்லென்று' ஆளை அடித்துத் தள்ளுவது போல் வீசியது. அப்பொழுது கடல் மட்டத்துக்கு 7758 அடி உயரத்துக்கு மேலுள்ள மற்றொரு மலையின்மீது இருந்தோம். நான் மிகவும் நிதானமாகத்தான் ஏறினேன். இருந்தாலும் இரண்டு இடங்களில், புளி மூட்டையைப் போல் விழுந்தேன். விழும்போதெல்லாம், என் காமராவை மார்போடு அணைத்துக் கொண்டு விழுவதைக் கண்டு வழிகாட்டி 'கொல்'லென்று சிரித்தான்.

தூரத்திலிருந்து இவர்களின் மந்துகளைக் கண்டால் பாறைகளைப் போல் தோன்றும். ஒரு மந்துக்கும், மற்றொரு மந்துக்கும் இடையே சுமார் எட்டு அல்லது பத்து மைல்கள் இருக்கின்றன. இதைப் போல் நீலகிரி முழுவதும் குண்டு தூன் மந்து, கொம்பு










தூக்கி மந்து, கக்கூடி மந்து, தாடி கோர மந்து, கன்னேக்கி மந்து, நீர்காசி மந்து என்று இருக்கின்றன. அந்த எண்பது மந்துகளையும் எழுத இயலாது.

■ உதகையில் தங்கி மகிழ வேண்டுமானால், மார்ச்சு மாதம் முதல் மே மாதம் வரையில்தான் ஏற்ற காலம். நீலகிரியைச் சுற்றி அதன் அதிசயமான எழிலைக் காண்பதற்கு, பஸ் மார்க்கமே சிறந்தது.

குடிசைகளின் தோற்றமும், சாமான்களும்

தொதுவர்களின் குடிசைகள் வளைவாகக் கட்டி இருப்பதற்கும் நுழையுமிடம் சிறியதாக இருப்பதற்கும் காரணம், "கடவுள் வானவில்லை வளைவாகவும், வளைவான பெரிய மலைகளில் மக்கள் பண்டையில் வாழ, சிறிய குகைகளையும் உண்டாக்கியதால் நாங்களும் அதைக் கண்டு, இங்ஙனம் கட்டிக் கொண்டோம்" என்று கூறினார்கள். குடிசைக்குள் குழந்தைகளைப் போல் தவழ்ந்து போகவும், வரவும் அவர்களால் முடியும். குடிசைக்குள் பொருள்களை ஒழுங்காகவும், ஒவ்வொன்றுக்கும் காரணங்களுடன், பாத்திரங்களை அழகாகவும், பளபளப்பாகவும் வெண்கலக்கடை போல் வைத்திருப்பதையும் காணலாம். குடிசைகள் யாவும் கிழக்கு நோக்கியே கட்டியிருக்கின்றன. சில குடிசைக் கதவுகளுக்குப் பதிலாகப் பாறையை

1. பூத்துக்குளி அணியில் பூ தைத்தல். 2. குடிசையின் உள் பக்கம் திண்ணையும், சாமான்கள் வைத்திருப்பதும், உறிகள் தொங்குவதும் காண்க. 3. வெண்ணெய் தடவிய கூந்தல். தோளில் பச்சை குத்தியிருப்பது தெரிகிறதா? 4. "கால்மேல் புருத்தி" அதாவது கால் வைத்து ஆசிர்வதித்தல்.





வைப்பதும் உண்டு. குடிசைக்குள் பெரிய திண்ணை ஒன்று சுமார் மூன்றடி உயரத்தில் கட்டியிருக்கிறார்கள். குடும்பத்திலுள்ளவர்கள் திண்ணையின் அகலத்தில் படுக்கும்போது, பெட்டிகளையும், பயிர்த்தொழிலுக்கு வேண்டிய சாமான்களையும் தலைப் பக்கத்தில் வரிசையாக வைத்துக் கொள்ளுகின்றனர். திண்ணையின் மேல் ஓலைப்பாயும், அதன் மேல் கம்பளமும் விரித்திருக்கின்றனர். திண்ணைக்கு எதிர்ப் பக்கத்தில் வரிசையாகவும், தொடர்புள்ளதாகவும் மூன்று நிலை அடுப்புகள் இருக்கின்றன. அடுப்புக்கு மேல், உறி உறியாகக் காட்டு விறகுகளைப் பிளந்து, சுமை சுமையாகத் தொங்க விட்டிருக்கிறார்கள். குடிசையின் எதிர்ப் பக்கத்தில் ஐந்து பரணைகள் கட்டி, அதன் மேல் வரிசைவரிசையாகவும் அழகாகவும் தங்களுடைய வெண்கலப் பாத்திரங்களை அடுக்கி வைத்திருக்கின்றனர். அதற்கு முன் பக்கத்தில் சுமார் ஏழு எட்டு உறிகள் தனித்தனியாகக் கட்டி, அதில் ஒவ்வொருவருடைய உண்கலத்தை வைத்திருக்கின்றனர். உண்கலத்தை பூமா தேவியின் மேல் வைப்பதில்லை. கோரைப் புல்லையும், பிரம்புகளையும், மூங்கிலையும், பலகைகளையும் கொண்டு, இன்று பலகணி வைத்துக் கட்டுவதால், குடிசைக்குள் வெளிச்சமாக இருக்கின்றன. அன்னியரை உபசரிக்கக் குடிசையின் வெளியில் இரு பக்கங்களிலும் இரு திண்ணைகள் இருக்கின்றன. குடிசையின் உள், பல மூங்கில் கொம்புகளின் நுனியில், எருமைக் கொம்புகளைப் போல், கம்பியை வளைத்து, சுமார் ஐம்பதுக்கு மேல், ஒவ்வொரு குடிசையின் வாரையிலும் செருகி வைத்திருக்கின்றனர். "இது இறந்த எருமைகளின் ஞாபகச் சின்னங்கள்" என்று கூறினார்கள். குடிசைக்குள் தரையோடு ஒரு கல் உரலைப் புதைத்திருக்கிறார்கள். அதில் குழந்தைகளும் கால் வைக்கக் கூடாது. வீட்டைச் சாணத்தால் மெழுகி, வாரம் ஒருமுறை நன்றாகச் சுத்தம் செய்கிறார்கள்.

ஆடையாபரணங்கள்

தோதுவ ஆண்கள் சுமார் ஐந்தடி முதல், ஆறடி வரையில் உயரமாக வளர்ந்திருக்கின்றனர். தாடியும் அடர்ந்த 'தலை மயிரும்', மீசையும் ரோமங்கள் வளர்ந்த மார்பும் உடையவர்கள். பெண்கள் ஐந்தடி முதல், ஐந்தரையடி வரையில் வளர்ந்திருக்கிறார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும், நீண்ட முகமும், எடுப்பான மூக்கும் இருக்கின்றன. இவர்களைக் காலைக் கதிரவனின் உதயத்தில் கண்டால், அவர்களின் முகம் பொன் மேனியாக இருப்பதைக் காணலாம். ஆனால் பெண்கள் கையிலும் காலிலும் அடர்த்தியான ரோமம் உடையவர்கள்.

ஒரு மந்திலிருந்து, மற்றொரு மந்துக்குச் செல்லும்போதும் முக்கியமான நாட்களிலும், "பூத்துக் குளி"யை ஆண்களும், பெண்களும் அணிந்து செல்லுகின்றனர். நம்மவர் பாவாடை கட்டுவதைப்போல், இந்தப் பெண்மணிகளும், "தார் பை" என்ற ஒரு துண்டை மார்பை மறைக்கும்படி, அக்குள் வரையில் கட்டி அதன்மேல் பூத்துக் குளியைப் பாதம் மறைக்கும்படி போர்த்திக் கொள்வார்கள்.

தோதுவ மங்கையர்கள் எல்லோரும் வெண்ணெயைத் தலையில் தடவித் தங்களுடைய கூந்தலை விரல் பருமனுக்கு அழகாகச் சுருட்டிச் சுருட்டித் தொங்கவிட்டிருக்கின்றனர். அதைக் காணும்போது ரம்மியமாக இருக்கின்றது. இப்பழக்கம், இக் குடும்பத்தார்களுக்குத் தொன்று தொட்டு இருந்து வருகிறதாம்.

மங்கையர்களின் உடலில் முதலில் பச்சிலையைத் தடவிப் பிறகு அதன்மேல் தங்களுக்கு வேண்டிய வடிவத்தைத் தோள் முழுவதும், கை, கால், முதுகின் பாதி அளவுக்குப் பச்சை குத்திக் கொள்ளுகின்றனர். இம் மங்கையர்கள் தங்கள் கணவன்மார்களை, "என் ஆள்" என்று அழைக்கின்றனர்.

பழக்கவழக்கங்கள்

இவர்களின் சம்பிரதாயப்படி தங்களுக்கு மகவு பிறந்ததும், உடனே தரையிலோ அல்லது கோணிப்



1. தோதுவர் வீடு. வெளித் திண்ணையும் வாயிலும். 2. தோதுவர் கோவில். இதுவே பெரிய கோவில். 3. தோதுவப் பெண்கள் பூத்துக் குளி உடுக்கும் முறை. பாதங்களைச் சேர்த்து வைத்து நிற்பது இவர்கள் வழக்கம்.

பையின் மேலோ படுக்க வைக்கின்றனர். குழந்தை பிறந்து மூன்று அமாவாசைகள் கழிந்தபின், முதலில் மேற்கில் தோன்றும் பிறையைக் கண்ட மறுநாள் காலையில் குழந்தையை நீராடச் செய்து, கோவிலுக்கு எடுத்துச் சென்று, பிறகு வீட்டுக்கு வந்தபின் கிழக்குப்பக்கம் உட்கார்ந்த தாத்தா மடியில் குழந்தையைக் கிழக்குப் பக்கமாகப் படுக்க வைத்து, முதன் முதலாகத் தாத்தாவின் வாயால் பெயரைச் சொல்லி, பெயரின் கடைசியில் 'தோடா' என்று நாமகரணம் செய்வார்கள். குழந்தைகளுக்குத் தொட்டிலோ, ஏணையோ கட்டுவதில்லை. குழந்தைகளே இல்லாவிட்டால், மற்ற மந்திலிருந்தோ அல்லது உறவினர்களிடமிருந்தோ குழந்தைகளை எடுத்து வளர்ப்பதுண்டு.

ருதுவான பெண்களைத் தனிக் குடிசை கட்டி, சற்றுத் தூரத்தில் வைப்பார்கள். இரவில் தனிமையில் குடிசையிலிருக்க பயப்படும் பெண்களுக்கு, துணைக்கு யாராவது படுப்பதுண்டு. தனிக் குடிசையிலிருக்கும் நாட்கள் வரையில், அவள் தரையில்தான் படுத்து உறங்கவேண்டும். பெண் ருதுவான நாளிலிருந்து தொடர்ந்து அமாவாசைக்குப் பின் முதல் வளர்பிறையன்று அவளைக் குளிக்கச் செய்து கற்பூரத்தை மட்டும் சுற்றித் தீட்டுக் கழித்து, விருந்துடன் பெண்ணை அழைத்துக் கொள்வார்கள்.

சாதாரணக் காலங்களில் மங்கையர்கள் வீட்டு விலக்கானால் தங்கள் குடிசையின் வெளித் திண்ணையில் ஒதுங்கி இருப்பார்கள். உதகையின் வெளியில் குளிராக இருப்பதால், இரவில் மட்டும் குடிசைக்குள் கதவின் அருகில் படுத்து உறங்க வேண்டும். பண்டைக் காலத்தில், ''கேஞ்ஸ் மரம்'' என்ற காட்டு மரத்தைக் கொண்டு நெருப்பு உண்டாக்கி வந்தனர். இன்றும் பூசை செய்வதற்கும் வீட்டு விசேஷங்களுக்கும் இத்தீயைத் தான் உபயோகப்படுத்துகிறார்கள். இன்றும் இரவில் நெய் விளக்கைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆண்களும் பெண்களும் நெற்றியில் சந்தனப்பொட்டு இடுவதுண்டு. வயதில் மூத்த ஆண்பிள்ளைகளைக் கண்டால், பெண்கள் அவர்களிடம் வந்து முட்டியிட்டு வணங்க, அவர்கள் தங்கள் காலைத் தூக்கி, வணங்கிய மங்கையின் நெற்றியில் வைப்பார்கள். இது அவர்களுடைய வணக்கம்.

திருமணச் சடங்கும் சட்டமும்

பெண்கள் ருதுவாவதற்கு முன்னும் பின்னும் திருமணம் செய்யும் பழக்கமுண்டு. பதினைந்து வயதுக்கு மேல்தான் திருமணம் செய்கின்றனர். பௌர்ணமி எந்த நாட்களில் வந்தாலும் சரி, அன்று திருமணம் செய்கின்றனர். வசதி உள்ள ஆண்கள் இரண்டு மூன்று திருமணங்களும் செய்துகொள்ளுவதுண்டு.

'முதல் தாலி கட்டும் சடங்கு' என்பது பையன் பஞ்சாயத்தார் முன்னிலையில், 'கேஞ்ஸ்செடி'யைப் பெண்ணிடம் கொடுப்பதுதான் தாலி கட்டுவதைப் போலாம். இச்செடியை அவள் கையில் ஏந்திக் கொண்டு, தாங்கள் வாழப் போகும் குடிசைக்கு முன்னால் வருவாள். பெரியவர்கள் ஒரு வெண்கலச் செம்பில் தண்ணீரும் பூவும் வைத்திருப்பார்கள். அதை மணமகள் வணக்கமாக எடுத்துக் கொண்டு முதலில் குடிசைக்குள் நுழைய வேண்டும். இத்துடன் முதல் அரைக் கல்யாணம் முடிந்தது. இக்கல்யாணம் முடிந்தபின், அவள் மறுபடியும் கர்ப்பம் தரித்து ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருக்கும் போது, அவளை நாக மரத்தடியில் நெய்விளக்கு வைத்து, அம்மரத்தை மும்முறை வலம் வரச் செய்து மறுபடியும் அவள் மரத்தடியில் உட்கார்ந்ததும் பூசை செய்வார்கள். பிறகு கர்ப்பவதிக்குக் கணவன், 'புவுதூர்' என்ற செடியின் குச்சியை வளைத்துக் கர்ப்பவதியின் கையில் கொடுத்து அக் கொம்புடன் நாகமரத்தடியிலிருக்கும் விளக்கைத் தரிசனம் செய்து விளக்கின் அருகில் சுமார் ஒரு மணி நேரம் உட்கார வேண்டும். பிறகு பூசாரியால் பூசை சடங்குகள் முடிந்ததும் அவள் வீட்டுக்கு வந்து தங்கள் மந்திலிருக்கும் எல்லாருக்கும் விருந்து நடைபெறும். இத்துடன் முழுத் திருமணம் முடிந்தது. இச்சடங்குகளுக்குப் பின் முதல் பிரசவத்துக்கென்று பெண் தாயகம் செல்வதில்லை.

விதவைகள் விரும்பினால், தாங்கள் விரும்பும் வாலிபனை, மணந்து கொள்ளலாம். விதவைகளுக்கும் எல்லோரைப் போலவேதான் திருமணம் நடைபெறும். விவாகரத்து செய்து, தாயகம் செல்லும் போது மட்டும் தாயின்ற மகவுகள் தந்தையிடமே இருக்க வேண்டும். மனைவியைத் திட்டுவதோ அடிப்பதோ கூடாது. கணவனே தன் மனைவியைத் தன் தாயிடம் அனுப்புவான்.

மயானச் சடங்கு

மரிக்கும் தறுவாயிலிருக்கும் போது அவர்களின் வாயில் பொன் துண்டு ஒன்றும், பாலும் ஊற்றுவார்கள். இறந்தவர்கள் உபயோகப்படுத்திய துணி, சாமான்கள் எல்லாவற்றையும் பிணத்தின் அருகில் வைப்பார்கள். மட்டமான மரத்தால் கட்டில் செய்து அதில் சத்தம் செய்து பிரேதத்தைப் படுக்க வைப்பார்கள். கடைசியில் எல்லாவற்றையும் தீக்கு இரையாக்கி விடுகின்றனர்.

மரணமடைந்தவன் செல்வந்தனாக இருந்தால், மயானத்தில் சுமார் நான்கு எருமைகளைப் பிணத்தின் தலைப் பக்கத்தில் நிற்க வைத்து, அதன் நெற்றியில் கோடரியால் அடித்துப் படுக்க வைத்துச் சடங்கு செய்வர்.

பின்பு பிணத்தைச் சுற்றி மயான நடனமாடி, நாக மரத்தின் விறகை மட்டும் பிணத்தின் மேல் அடுக்கி, அத்துடன் ஒரு சிறு சந்தனக் கட்டையையும் வைத்துத் தீக்கடைக் கோலால் தீமூட்டி எரிப்பார்கள். மறுநாள் சாம்பலைக் குழி தோண்டித் தண்ணீரை அதில் ஊற்றிய பின் சாம்பலை அதில் கொட்டி மூடுவார்கள். மூடியபின் குழிக்கு மேல் ஒரு கல்லை நாட்டி ''நடுகல்'' என்று சொல்லி ஒரு புதிய மண்பானையை அதன் மேல் உடைத்து அக்கல்லை எல்லோரும் வணங்குவார்கள். மரணமடைந்தவர்களுக்கு ஒரு அமாவாசை கழித்து, 'கேடர் விந்திழ்' செய்வதுண்டு.

உழைப்பும் தெய்வவழிபாடும்

ஒவ்வொரு மந்துக்கும் தனித் தனித் தலைவன் உண்டு. தலைவனை ''பியின் இட்டா'' என்று அழைக்கின்றனர். ஆண்களும் பெண்களும் நாளொன்றுக்குச் சுமார் முப்பது மைல்கள் சலிப்பின்றி நடக்கும் ஆற்றல் உடையவர்கள். ஆயிரக் கணக்கான எருமைகள்தான் தோதுவர்களின் சொத்து. பால், தயிர், நெய் முதலியவைகளை விற்பனை செய்வார்கள்.

பெண்கள் அன்று முதல் இன்று வரையில் பால் பாத்திரங்கள் துலக்குவதும், குடும்பத்தைக் கவனிப்பதும், ஓய்வு நேரத்தில், 'பூத்துக் குளி'க்குக் கரை பின்னுதலும் ஆகிய வேலைகளைக் கவனிக்கின்றனர்.

ஆண்களும் பெண்களும் காலையில் எழுந்ததும் கை, கால், முகம் கழுவிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, 'சூரிய வணக்கம்'' செய்கிறார்கள்.

பண்டைக் காலத்தில் ஒரு கல் வைத்து வணங்கி, ''ஒத்தைக் கல் மந்து'' என்பதாலும், அப் பழக்கமே இன்றும் இவர்களின் பெரிய கோவிலுக்குள் ஒரு கல்லும், கோவிலின் உச்சியில் ஒரு பெரிய கல்லை வைத்திருப்பதையும் காணலாம். இவர்கள் பூசைக்கும், பாலில் கலப்பதற்கும் தண்ணீர் எடுக்கும் இடத்துக்கு ''பாலி நீபா'' என்று பெயர். அங்கு மற்றவர்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது. ''அர்ஸ் நீபா'' என்பது குடும்பத்துக்குத் தண்ணீர் எடுக்குமிடம். எருமைகளைத் தெய்வமாக வழிபடுவதால், எருமைகள் போகும் பாதையில், பெண்கள் போகக் கூடாது. பால் சேகரிக்கும் பெண்கள் மட்டும் அப் பாதையில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் போகலாம். அப் பாதையை, ''காவ்வல்'' என்று அழைக்கின்றனர். எக்காரணங்களைக் கொண்டும், மங்கையர்கள் கோவிலின் எல்லைக்குள் போகக் கூடாது.

விசேஷமான நாட்களில் பூசை செய்து விருந்தும் நடனமும் நடைபெறும். அப்பொழுது சிலருக்கு ஆவேசம் வந்து, நடக்கப் போகும் சில விஷயங்களைக் கூறி, அதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் புரியாத பாஷையில் பேசுவார்கள். ஆனால் ஆவேசத்தில் இருக்கும்போதே, அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார்கள். கோவில் சடங்குகளுக்கென்று, கோவில் உண்டியில் காணிக்கை செலுத்துகிறார்கள்.

இவர்கள் பேசும் பாஷைக்குத் ''தோதவ பாஸ்'' என்று பெயர். அப் பாஷைக்கு இலக்கணமும், இலக்கியமும் கிடையா. அவர்களின் பாஷையை அவர்கள் உச்சரிப்பது போல், சில வார்த்தைகளைக்கூட எழுத முடியாது.

சிலர் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதவும், வாசிக்கவும் பழகியிருக்கிறார்கள்.

பண்டைக் காலத்தில் தோதுவர்களுக்கும், கோத்தர்களுக்கும் நீலகிரி சொந்தமாக இருந்த ஒரு காரணத்தால், அரசாங்கம் இவர்களிடமிருந்து, எவ்வித வரியும் இன்றுவரை வாங்குவதில்லை. இன்று படிப்படியாக இவர்களுக்குப் பல வசதிகள் செய்து வருகிறார்கள்.

தோதுவர்களைப் பார்க்கும் போது, இவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும்போது வேறு உலகில் இருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. வாழ்க்கைக்கு நாம் எதிர்பார்க்கும் பல நவீன பொருள்கள் இல்லாமலே அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து நமக்கு வியப்பாக இருக்கிறது.

பாண்டிய நாட்டுக்கும் பல்லவ நாட்டுக்கும் இடையே உள்ள அடர்ந்த கானகத்தின் நடுவில் கம்பீரமாக நெடிதுயர்ந்து நின்று கொண்டிருந்தது சித்தன்னமலை.

அப்பொழுதுதான் உதயமாகிக் கொண்டிருந்த காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் மலையின் முகட்டில் பட்டுத் தேஜோமயமாகப் பிரகாசித்தன. அங்கங்கே திட்டுத் திட்டாகச் சுழன்று கொண்டிருந்த பனிமூட்டங்கள் மெள்ளக் கரைய ஆரம்பித்தன. இலேசாக இழையோடிய இளந்தென்றலில் 'சரத்' காலத் தாமரை மலர்களின் இனிய மணம் குழைந்து வெகு தூரத்துக்கு வெகுதூரம் பரவிக் கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட அதிகாலைப் பொழுதில் மலைக்குத் தெற்கே சிறிது தொலைவில் இருந்த ஒரு பெரிய தாமரைச் சுனையில் ஒரு பேரழகி அவசரம் அவசரமாகக் குளித்துக் கொண்டிருந்தாள்.

குளியல் முடிந்ததும் நீர் தெரியாமல் பூத்துக் கிடந்த தாமரை மலர்களைத் தண்டோடு கொய்து தன்னால் சுமக்க முடிந்த அளவு இடது தோளில் சாத்திக் கொண்டாள். பிறகு சுனையிலிருந்து கரையேறி மலையை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

கொன்றை மரங்கள் செறிந்த அந்தக் கொடி வழியில் சிறிது தூரம்தான் நடந்திருப்பாள். அதற்குள் "தாமரைக்குமரி! தாமரைக்குமரி! உன்னை எங்கே யெல்லாம் தேடுவது? " என்ற பழக்கப்பட்ட குரலைக் கேட்டதும் சட்டென்று நின்றாள். கிழக்குப் பக்கத்திலிருந்து ஒரு குதிரை வீரன் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் தாமரைக் குமரியின் முகத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் மாறி மாறித் தோன்றின.

"அத்தான்! இதென்ன திடீர் வருகை? ஊரிலிருந்து எப்பொழுது வந்தீர்கள்? வீட்டுக்குப் போனீர்களா?" என்றாள்.

"நேற்று மாலை ஊரை விட்டுப் புறப்பட்டேன். சற்று நேரத்துக்கு முன்புதான் இங்கு வந்து சேர்ந்தேன். நீ வீட்டில் இல்லை. குகைக் கோவிலுக்கு மலர் எடுப்பதற்காகச் சுனைக்குப் போயிருக்கிறாய் என்று அத்தை சொன்னார்கள். உடனே உன்னைத் தேடிக் கொண்டு கிளம்பினேன். ஆனால் உன்னைக் கண்டுபிடிப்பதற்குள் எவ்வளவு சிரமப்பட்டு விட்டேன் தெரியுமா?" என்றான் அந்த வீர வாலிபன்.

"உண்மைதான், அத்தான்! நன்கு பழக்கப்பட்டவர்கள் கூடச் சமயத்தில் ஏமாந்து விடுவார்கள். அது போகட்டும். நம்முடைய திருமணத்துக்கு இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கின்றன? ஆக வேண்டியதைக் கவனிக்காமல் இங்கே வந்துவிட்டீர்களே? என்ன முகாந்திரம்? என்னைப் பார்க்க வேண்டும் என்பதா?"



"ஆமாம், தாமரைக் குமரி! ஒரு மாதத்துக்கு முன்பு நம் திருமண ஓலை எழுதப்பட்ட அன்று தானே நான் உன்னைக் கடைசியாகப் பார்த்தது? இதுவரையில் எப்படியோ உன்னைப் பார்க்க வேண்டும் என்று எழுந்த ஆவலைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். ஆனால் இந்தக் கடைசி இரண்டு நாட்களை என்னால் தாங்க முடியவில்லை. அதனால் தான் உன்னைக் காண்பதற்காக ஓடோடியும் வந்தேன். அதோடு இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. இந்தச் சித்தன்னவாசல் மலையில் எழுதப் பட்டம் என்று ஒரு ரகசியமான இடம் இருக்கிறது. அங்கே பெரிய பெரிய மகான்கள் வசிக்கிறார்கள். அவர்களை ஒருமுறை பார்த்தாலே நாம் செய்த பாவமெல்லாம் பறந்து போய் விடும். அப்படிப்பட்ட புண்ணிய புருஷர்களை எட்டி இருந்தாவது தரிசிக்க வேண்டுமென்று வெகு நாட்களாகவே முயற்சி செய்துவருகிறேன். ஆனால் அங்கு செல்லும் ரகசிய வழியை என்ன முயன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. யாரைக் கேட்டாலும் 'அப்படி ஒரு இடம் இருப்பது நீங்கள் சொல்லித்தான் தெரியும்' என்கிறார்கள். ஆனால் இங்கே உள்ள ஒரு மனிதருக்கு அந்த இடமும் அந்த இடத்துக்குச் செல்லும் வழியும் நன்றாகத் தெரியும்."

தாமரைக்குமரி அளவுக்கு மீறிய அதிசயத்தோடு, "அந்த மனிதர் யார், அத்தான்?" என்றாள்.

"சித்திரக்குகையில் தீர்த்தங்கரருக்குச் சேவை செய்து வருகிறாரே கவர்ணநந்தி என்ற சமண முனிவர் அவர்தான். அவருக்கு எழுதப்பட்டமும் அங்கே செல்லும் மார்க்கமும் நன்றாகப் புரியும். அவரிடம் உன் திறமையையெல்லாம் பிரயோகித்து எப்படியாவது அந்த ரகசிய வழியை அறிந்து கொண்டு வந்து சேர். என் மேல் உனக்கு உண்மையான அன்பு இருக்குமானால், உனக்கும் நிர்மானமான திருமணம் நடைபெறவேண்டுமானால் வெற்றியோடு திரும்பி வா. இல்லாவிட்டால் இன்றோடு என்னைமறந்துவிட வேண்டியது தான். நீ திரும்புகிறவரையில் இங்கேயே காத்திருப்பேன்."

பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அத்தான்! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். எழுதப்பட்டத்துக்குச் செல்லும் ரகசிய வழியை அறிந்து கொண்டு இன்னும் சிறிது நேரத்தில் வந்து சேருகிறேன். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறிவிட்டு 'விடுவிடு' வென்று மலையின் மேற்குப் பக்கத்திலிருந்த சித்திரக் குகைக் கோவிலை நோக்கி விரைந்து சென்றாள்.

கோவிலை நெருங்க நெருங்க அகில் புகையின் நறுமணம் மனத்தைக் கிறங்க வைத்தது. கோவிலின் உள் ஆலயின் நடுவே இருந்த தர்மச் சக்கரத்தின் மீது சாந்த உருவான தீர்த்தங்கரரின் சிலை என்றும் அழியாத வண்ணக் கலவை பூசப் பட்டு ஜகஜ்ஜோதியாய்த் திகழ்ந்தது.

சமணத் துறவி கவர்ணநந்தி ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி இருந்தார். தாமரைக்குமரி தான் கொண்டு வந்திருந்த கமல மலர்களைத் தீர்த்தங்கரரின் திருப்பாதங்களில் பணிவோடு சமர்ப்பித்து விட்டு, கவர்ணநந்திக்கு எதிரே போய் பயபக்தியோடு மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டாள்.

துறவி வெகு நேரத்துக்குப் பிறகு தியானம் கலைந்து கண் விழித்துப் பார்த்தார். எதிரே தாமரைக்குமரி அவரையே





தாமரைக்குமரி

சேத்தூர்க்கூத்தன்

பார்த்தபடி [illegible] விட்டு அமர்ந்திருப்பது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. உடனே "குழந்தாய்! என்றுமில்லாதபடி இன்று இவ்வளவு நேரம் தங்கியிருக்கிறாயே! காரணம் என்ன? உன்னுடைய முகம் ஏன் வாட்டமுற்று இருக்கிறது?" என்று கேட்டார்.

தாமரைக் குமரி அவரைப் பக்தியோடு சேவித்து விட்டு, "சுவாமி! தங்களிடம் வெகு நாட்களாகவே ஒன்று கேட்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்கு இன்றுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சொல்லட்டுமா, சுவாமி?" என்றாள்.

"குழந்தாய்? என்னிடம் சொல்வதற்குக் கூடவா தயக்கம்? தாராளமாகச் சொல். எதுவாயிருந்தாலும் பயப்படாமல் 'சொல்'" என்றார் சுவர்ணநந்தி.

"சுவாமி!" என் அன்னை 'சொற்படி' எனக்கு விவரம் தெரிந்தது முதற்கொண்டு இன்றுவரை மலர் சேவை புரிந்து வந்திருக்கிறேன். அந்தப் பணி நாளையோடு முற்றுப் பெறப்போகிறது. ஆம், சுவாமி! பாண்டிய நாட்டின் உதவிப் படைத் தலைவனாக இருக்கும் எனது மாமன் மகனுக்கும் எனக்கும் நாளை மறுநாள் திருமணம் நடக்கப் போகிறது. மண ஓலை எல்லாம் எழுதியாகி விட்டது. நாளை மாலை என்னைப் பெண் அழைக்க வந்து விடுவார்கள். அதற்குள் ..சுவாமி! இந்த பிரும்மாண்டமான மலையில் எங்கோ ஒரு மூலையில் ஏழடிப்பட்டமென்று ஒரு இடம் இருக்கிறதாம். அங்கே பெரிய பெரிய மகான்களும் ஞானிகளும் வாசம் புரிகிறார்களாம். இதை எனது அன்னை ஒரு நாள் கூறி மனத்திலேயே வைத்துக் கொள்ளும்படி எச்சரித்தார்கள். அப்படிப்பட்ட புனிதமான ஏழடிப்பட்டத்தையும், அங்கே உறையும் உத்தமர்களையும் ஒரு முறை- ஒரே ஒரு முறை-தரிசிக்க விரும்புகிறேன்."

"குழந்தாய்! ஏழடிப் பட்டத்தைப் பற்றி உன் அன்னை சொன்னார்கள் என்பதை நினைக்கும்பொழுது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. யாருக்குமே தெரியாத ரகசியம், என்று கருதப் பட்ட விஷயம் எவ்வளவு தூரம் பரவி இருக்கிறது! பரவாயில்லை. ஏழடிப் பட்டத்தைப்பற்றி அறிந்திருந்தாலும் அங்கு செல்லும் வழியை எவராலுமே அறிய முடியாது. அப்படிப்பட்ட வழியின் மூலமாக நீ ஏழடிப்பட்டத்தைத் தரிசிக்க ஆசைப்படுகிறாய். உன் ஆசையை நிறைவேற்றுவதைப் பற்றி எனக்கு ஆட்சே-பணை ஏதும் இல்லை. இருந்தாலும் இன்றைய தமிழகத்தின் நிலைமை உத்தேசித்துத்தான் யோசிக்க வேண்டி இருக்கிறது. சில காலமாகவே தமிழ் நாட்டு அரசியல் வானத்தில் போர் மேகங்கள் குமுறிக் கொண்டிருக்கின்றன. இத்தனை அமர்க்களத்திலும் எவ்விதத் தொல்லையும் இல்லாமல் ஏழடிப் பட்டத்தில் சிலர் வாழ்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுடைய எண்ணமும் நோக்கமும் உத்தமமானவை. அதை அறியாத அத்தனை பேர்களும் அவர்களைப் 'பரம' வைரிகளாகக் கருதுகிறார்கள். குறிப்பாக, பாண்டிய மன்னர் அவர்களை அடியோடு ஒழித்துக் கட்டத் தீவிரமாக முனைந்துள்ளதாகத் தெரிகிறது. அவர்களை ஒற்றர்கள் என்றும் பல்லவர்களின் கையாட்கள் என்றும் தவறாகக் கருதிக் கொண்டு எண்ணிறந்த துன்பங்களை அளித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் பாண்டிய நாட்டுக்குச் செல்லும் ஒரு பெண்ணிடம், அதுவும் பாண்டிய நாட்டு உதவிப் படைத் தலைவன் ஒருவனையே மணக்கப் போகும் ஒரு பெண்ணிடம் ஏழடிப் பட்டத்தையோ, அங்கு செல்லும் ரகசிய வழியையோ காண்பிப்பது தகுமா என்றுதான் சிந்திக்கிறேன். ஒரு பாவமும் அறியாத அந்த உத்தமர்களுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டால் அந்த நீங்காத பழி என்னை அல்லவா சேரும்?"

* * *

சுவர்ணநந்தி கூறியதைக் கேட்டதும் தாமரைக் குமரி வேண்டுமென்றே 'கலீர்' என்று சிரித்தாள். பிறகு "சுவாமி! என்னை உங்களுக்கு ஒரு மாதத்துக் குழந்தையிலிருந்தே தெரியுமென்று எனது அருமைத் தாயார் அடிக்கடி கூறுவார்கள். சுவாமி, என்னை நம்புங்கள்!" தன்னைக் கைப்பிடிக்கப் போகிறவனால் ஏதும் துன்பம் நேராது என்ற துணிவினாலேயே அவள் அத்தனை உறுதியாகக் கூறினாள். அவள் பேச்சு துறவியின் உள்ளத்தைத் தொட்டு விட்டது.

"குழந்தாய்! நான் இவ்வளவு மறுத்துக் கூறியும் நீ உன் விருப்பத்தைக் கைவிடவில்லை என்பதை எண்ணும் பொழுது உண்மையிலேயே பெருமைப் படுகிறேன். அந்த உத்தமர்களிடம் உனக்குள்ள பக்தியையும் ஈடுபாட்டையும் கண்டு பூரிப்படைகிறேன். ஆனால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது

எவ்வளவு அவசியமானது என்பதையும் நினைவூட்டுகிறேன். சரி; இப்பொழுதே என்னைக் கவனத்தோடு பின்தொடர்ந்து வா. தூரத்திலிருந்தே அந்த ஞாதாக்களின் முக விலாசங்களைத் தரிசித்துவிட்டு உடன் திரும்பி விடலாம்!''

துறவி இவ்வாறு கூறிவிட்டுச் சிற்பக் குகைக்குப் பக்கத்தில் வானளாவ அடர்ந்து படர்ந்து தழைத்துக் கிடந்த காட்டுக்குள் ஒரு கொடி வழியைப் பற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். தாமரைக்குமரி சிறிதும் சளைக்காமல் துறவியைப் பின்பற்றினாள்.

சுமார் கால் நாழிகை நேரத்துக்குப் பிறகு துறவி நின்றார். அங்கே மிக மிக இலேசான வெளிச்சம் பரவியிருந்தது. எதிரே எட்டியவரைக்கும் பாறைச் சுவர் ஓங்கி நின்றது. பக்கங்களில் கரியநிறப் பாறைகள் பல முறையற்று உருண்டு கிடந்தன. அவற்றில் நடுத்தரமான பாறை ஒன்றைத் தமது மென்மையான கரங்களால் மகா அலட்சியமாகப் புரட்டித் தள்ளினார் துறவி. அப்பொழுது எதிரே இருந்த மலைச்சுவரில் ஒரு அதிசயம் நடைபெற்றது.

சுவர்போல் உயர்ந்திருந்த அந்த மலையில் ஒரு ஆள் நுழையும்படியான பிளவு உண்டாயிற்று. அதற்குள் தண்ணீர் அருவியைப் போல் கொட்டிக் கொண்டிருந்தது. சுவர்ண நந்தி உள்ளே நுழைந்து மேல் சுவரில் இருந்த ஒரு கற்பலகையைத் தம் கைகளால் தள்ளினார். அடுத்த கணம் அருவியைப் போல் கொட்டிக்கொண்டிருந்த நீர் சட்டென்று நின்றது. எதிரே உயரே ஏறுவதற்கான படிகள் தென்பட்டன. அதில் வழுக்கலான பாசி நிறைந்திருந்தது. துறவி நிதானமாக அந்தப் படிகளில் காலை ஊன்றி நடக்க ஆரம்பித்தார். தாமரைக் குமரியும் எல்லாவற்றையும் கவனமாக மனத்தில் பதிய வைத்துக் கொண்டு அவரைத் தொடர்ந்தாள்.

''குழந்தாய்! அதோ பார்!'' என்று இடதுபுறத்தைநோக்கிக் கையைக் காட்டினார். அவர் காட்டிய திக்கில் சுமார் நூறு அடி தூரத்தில் விநோதமான குகை போன்ற ஒரு இடம் தெரிந்தது. அங்கே செல்வதற்கு அவர்கள் நின்ற இடத்திலிருந்து ஒருகால் வைக்கக்கூடப் போதாத அளவில் 'குறடு' போன்ற ஒரு பாதை சென்றது. உயிரை மறந்தவர்கள்தான் அதில் நடந்து செல்ல முடியும்.

தாமரைக்குமரி விநோதமான அந்த இடத்தைக் கூர்ந்து கவனித்தாள். பதினறு கல் படுக்கைகளில் பதினறு சமண முனிவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முகத்தில் அறிவொளி சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தெய்வீகக் களை பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவர் கையிலும் ஒரு ஏட்டுச் சுவடிக் கட்டும், ஒரு எழுத்தாணியும் இருந்தன.

இருவரும் சற்று நேரத்தில் வந்த சுவடு தெரியாமல் திரும்பி நடந்தனர். இவர்கள் வந்ததோ போனதோ சமணத் துறவிகளுக்குத் தெரியாது.

குகைக் கோவிலை அவர்கள் நெருங்கியதும் துறவி சொன்னார்:

''குழந்தாய்! நான் அவசரமாக இப்பொழுது காஞ்சிபுரம் வரைக்கும் போய் வர வேண்டும்.

''நீ நேராக வீட்டுக்குப் போ. ஏழடிப் பட்டத்துக்குச் சென்று வந்ததைப் பற்றி உன் அன்னையிடமும், யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. உன்னைக் கைப்பிடிக்கப் போகும் கணவனிடமும் இந்த ஒரு விஷயத்தில் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்றார்.

தாமரைக் குமரி 'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். சுவர்ண நந்தி காஞ்சிபுரம் செல்லும் வழியில் நடக்க ஆரம்பித்தார். அவர் செல்வதையே சற்று நேரம் பார்த்திருந்து விட்டு, சுனையை நோக்கி விரைந்தாள் தாமரைக் குமரி.

அவள் வருவதைத் தூரத்திலேயே பார்த்து விட்ட வீரப்பதேவன் ஓடோடியும் சென்று அவளை எதிர்கொண்டு அழைத்தான். ''காயா? பழமா?'' என்று ஆவலோடு வினவினான்.

தாமரைக் குமரி பொறுமையோடு ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு, ''அத்தான்! காரியம் பழம்தான். ஆனால் அங்கு செல்லும் வழியை யாரிடமும் சொல்வதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறேன்.''

''ப்பூ......இவ்வளவுதானே? நான் என்னவோ என்று நினைத்து விட்டேன். சரி சரி. முன்னே நட. அரை நாழிகையில் அந்த அதிசயப் பிறவிகளைத் தரிசித்து விட்டுத் திரும்பி விடலாம்.''

தாமரைக்குமரி இயந்திரம் போல் வழி காட்டிக் கொண்டு சுரங்கப் பாதையை நோக்கி நடந்தாள்.

ஏழடிப் பட்டத்தை அடைந்ததும் வீரப்பதேவன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான். நல்லவேளையாக அந்த வெற்றிச் சிரிப்பு அவன் வாய்க்குள்ளேயே அடங்கி விட்டது. ஆனாலும் அவன் முகத்தில் தோன்றிய பயங்கர மாறுதலைக் கண்டு தாமரைக்குமரி துணுக்குற்றாள். மா பெரும் பாதகத்தைச் செய்துவிட்டதைப் போல் அவள் இருதயம் துடித்தது.

சுரங்கப் பாதையைக் கடந்து வெளியே வந்ததும் வீரப்ப தேவன் பாறையைப் புரட்டினான். சுரங்கப் பாதை மூடிக் கொண்டது. தாமரைக் குமரி இருண்டு கிடந்த கொடி வழியில் நடப்பதற்காகக் காலை எடுத்து வைக்கப் போனாள். அப்பொழுது.....

யாரோ வேகமாக நடந்து வருவதைப் போல் தோன்றியது. வீரப்பதேவன் நொடி நேரத்தில் பாய்ந்து சென்று கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டான். தாமரைக்குமரியோ செய்வதறியாது திகைப்பூண்டை மிதித்தவளைப் போல் அப்படியே நின்று விட்டாள்.

சிறிது நேரத்தில் வந்தது யார் என்று விளங்கியது. துறவி சுவர்ணநந்திதான் வந்து கொண்டிருந்தார். அவர் முகம் பேயறைந்ததைப் போல் இருந்தது. உடலில் கூட ஒருவிதப் பதற்றம் தோன்றியது. இந்த நிலையில் சுரங்க வாசலில் தாமரைக் குமரியைப் பார்த்ததும், ''யார் தாமரைக் குமரியா?'' என்று உரக்கக் கத்தி விட்டார்.

''ஆம் சுவாமி! தாமரைக் குமரியே தான். பிரம்புப் பூக்குடலையை எங்கோ தவற விட்டு விட்டேன். இடம் தெரியாமல் தேடிக் கொண்டிருக்கிறேன்.'' தாமரைக்குமரி சமாளித்து விட்டாள். ''சுவாமி! காஞ்சிபுரம் செல்வதாகச் சொன்னீர்களே? அதற்குள்ளாகவா திரும்பி விட்டீர்கள்?''

''குழந்தாய்! காஞ்சிபுரம் செல்வதாகத்தான் புறப்பட்டேன். ஆனால் காலன் குறுக்கிட்டு என்னைத் தடுத்து விட்டான். பாண்டிய நாட்டிலிருந்து ஒரு சிறு குதிரைப் படையே இங்கு வந்து பல நாட்களாகத் தங்கி இருக்கிறதாம். அந்தப் படைக்குத் தலைமை தாங்கி வந்திருப்பவன் உனது மாமன் மகன் வீரப்ப தேவன்தான். கடமையிலிருந்து கடுகளவும் வழுவாதவன். அரசனின் ஆணையை இன்று இரவுக்குள் எப்படியும் அவன் செய்து முடித்துவிடுவான். அப்புறம்...''

தாமரைக் குமரியின் சித்தம் தடுமாறியது. சிந்தை குழம்பியது. வீரப்பதேவன் தன்னைச் சரியாக ஏமாற்றி விட்டான் என்பதை உணர்ந்தாள். துறவி மேலும் தொடர்ந்தார்:

''மகளே! எண்ணற்ற இலக்கியங்களைப் படைத்து வரும் இந்த மாசற்ற சமணர்களின் வாழ்வும், அவர்கள் வாழ்ந்து வரும் ஏழடிப்பட்டமும், எதிர்



TWO REASONS WHY

MAX FACTOR'S DUAL PURPOSE FACE POWDER

MAKES ALL OTHERS OLD-FASHIONED!

1

When you need but a sheer transparent veil of flattery for your complexion, in your true skin tone, puff on Max Factor DUAL PURPOSE Face Powder extra lightly, brush away the excess, and you will have a more natural-looking complexion loveliness than you've ever known before.

2

When you need a light cover-up for those pesky blotches, freckles or aging shadows ...puff on Max Factor DUAL PURPOSE Face Powder more freely. You can be confident your complexion will be perfectly flawless because DUAL PURPOSE Face Powder goes on better, adheres better, covers better.







Max Factor DUAL Purpose Face Powder is the modern face powder, scientifically compounded to give your skin that satin-smooth matte finish that is every woman's desire, either way you use it. Comes in shades carefully blended for every type of complexion coloring. Fluffy-light, it never looks heavy or "masky."

P.S. Pleasantly fragrant ... economical, too!

Dual-Purpose
Face Powder

MAX FACTOR
HOLLYWOOD

Sole Agents in India: ORIENT COSMETICS PRIVATE LTD., Madras - Bombay - Calcutta

காலத் தமிழகத்துக்கே தனிப் பெருமை அளிக்கப் போகிற சித்திரக்குகையும் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால் வீரப்பதேவனின் மனத்தை எப்படியாவது மாற்றி அவனைத் திருப்பி ஊருக்கு அனுப்பிவிட வேண்டும். அந்த மகத்தான பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். எப்படியாவது இந்த ஜீவ மரணப் போராட்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்று. எதிர்காலக் கலைச் செல்வங்களைக் காப்பாற்று.''

தாமரைக்குமரி பதில் ஏதும் பேசவில்லை. ஆனால் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவளைப் போல் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாள்.

* * *

சித்தன்னுமலைக்கு மேற்கே அரைக்கல் தொலைவிலிருந்த ஒரு அடர்ந்த பிரதேசத்தில் இரண்டு தீவர்த்திகள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. அந்தத் தீவர்த்திகளின் நடுவில் கவசம் அணிந்த வீரப்ப தேவன் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு எதிரே தாமரைக் குமரி. அவர்களுக்கு எதிரே ஆயுதம் தாங்கிய நூற்றைம்பது குதிரை வீரர்கள் அணிவகுத்து நின்றிருந்தனர்.

''எனது அருமை வீரர்களே! நாம் போட்ட திட்டத்தை அந்த வேஷதாரி ஆண்டிகள் எப்படியோ அறிந்துகொண்டு உச்சிப் பொழுதிலேயே தங்கள் இடத்தை மாற்றி விட்டார்களாம். ஏழடிப் பட்டத்திலிருந்தே வேறொரு சுரங்கப் பாதை செல்கிறதாம். அதன் வழியாக இன்னொரு இடத்துக்கு எல்லா ஆண்டிகளும் ஓடிவிட்டார்களாம். சற்று நேரத்துக்கு முன்புதான் நாளை மறுநாள் நான் மணக்கப் போகிற எனது அன்புக்குரிய அத்தை மகள், இதோ என் பக்கத்திலிருக்கும் இந்தப் பெண்—அந்தச் செய்தியைக் கொண்டு வந்தாள். ஆகவே நாம் நம் திட்டப்படி மலையை நோக்கி முன்னேறுவதில் பயன் இல்லை. நான் தாமரைக் குமரியுடன் சென்று அந்தப் புதிய வழியை அறிந்து வருகிறேன். அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள்.''

இப்படிக் கூறிவிட்டு வீரப்ப தேவன், மகா அலட்சியமாக மலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். தாமரைக்குமரி முகத்தில் மலர்ச்சியும் அகத்தில் கிளர்ச்சியும் கொப்புளிக்க அவனைப் பின் தொடர்ந்தாள்.

சுரங்கப் பாதையில் புகுந்து ஏழடிப் பட்டத்தின் விளிம்புக்கு வந்து சேர்ந்தார்கள். கீழே கிடுகிடு பள்ளம். அங்கே நிலவிய பயங்கர அமைதி தாரகைகளின் கண் சிமிட்டலால் மேலும் பயங்கரமாகத் தோன்றியது.

வீரப்பதேவன் அதையெல்லாம் கவனிக்காமல் சமண முனிவர்களின் இருப்பிடத்தைக் கூர்ந்து நோக்கினான். அங்கே பிரகாசமான பச்சிலைச் சாற்றின் விளக்கொளியில் பதினாறு சமண முனிவர்களும் ஏட்டுச் சுவடியும் எழுத்தாணியும் ஏந்திய கையினராய் அமர்ந்திருந்தனர்.

வீரப்ப தேவனின் முகம் விகாரமாக மாறியது. சந்தேகக் கண்களோடு தாமரைக் குமரியை ஏறிட்டுப் பார்த்தான். அடுத்த விநாடி யாரும் கற்பனை கூடச் செய்திருக்க முடியாத ஒரு சம்பவம் நடந்தது. அவலமான ஒரு ஓசை ஆழமான கிணற்றுக்குள்ளிருந்து வெளிப்படுவதைப் போல் அந்த அந்தகாரம் சூழ்ந்த மலைப் பிரதேசத்தில் 'ஆவ் ஆவ்' என்று எதிரொலித்தது.

அந்த ஓசைகூடத் தாமரைக் குமரியின் காதுகளில் விழவில்லை. மனவேகம், மான் வேகம் என்ற ரீதியில் கண்மண் தெரியாமல் ஓடிச் சுரங்கப் பாதையைக் கடந்து சித்திரக் குகைக் கோவிலை அடைந்து, தீர்த்தங்கரரின் பாதங்களிலே போய் நிலைகுப்புற விழுந்தாள். பதினாறு உயிர்களையும் பல கலைச் செல்வங்களையும் காப்பதற்காகத் தன் வாழ்வையே அனர்த்தமாக்கிக் கொண்ட அந்த உத்தமப் பெண் அன்று இரவு முழுதும் வடித்த கண்ணீ



ரால் அந்தக் கானகமே வெள்ளக் காடாய்க் காட்சி அளித்தது.

* * *

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் வைகறை நேரம். இளம் துறவியான தாமரைக்குமரி காலை வேளைக்குரிய பூஜை முதலியவற்றை முடித்துவிட்டுச் சித்திரக்குகைக் கோவிலிலிருந்து வெளியே வந்தாள். எதிரே ஏழடிப்பட்டம் இருந்த திசையிலிருந்து இரண்டு சமணத் துறவிகள் கோவிலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் சுவர்ண நந்தி. இன்னொருவர் யாரென்று தெரியவில்லை. ஆனால் எப்பொழுதோ பார்த்த முகமாக இருந்தது. அவருக்கு வலது காலும் இடது கையும் காணப் படவில்லை. கட்டைகளின் உதவியாலேயே வெகு சாமர்த்தியமாக நடந்து வந்தார்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தப் புதிய நொண்டித் துறவி யாரென்று தாமரைக் குமரிக்கு விளங்கி விட்டது. தன் நிலை மறந்து ''அத்தான்!'' என வீறிட்டு விட்டாள். கண்கள் தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. உடலும் உள்ளமும் ஒருங்கே துடித்தன.

சுவர்ண நந்தி அர்த்தத்தோடு ஒரு சிரிப்பைச் சிதற விட்டுவிட்டு அவள் சந்தேகத்தை நிவர்த்திக்க ஆரம்பித்தார்:

''குழந்தாய்! கடந்துபோன நிகழ்ச்சிகளை எண்ணித் துக்கப்படுவதில் பயன் இல்லை. பதினாறு இலக்கியச் செல்வங்களையும் இணையற்ற இந்தக் கலைப் பொக்கிஷங்களையும் காப்பாற்றுவதற்காக உன் அத்தானைப் பலியிடத் துணிந்து உன் வாழ்வையே பாழாக்கிக் கொண்ட பெரும் தியாகி நீ.

''அவன் உடல் கவசமணிந்து கல்லைப் போன்று இருந்ததால் இந்த வரைக்குமாவது சமணர்களின் சிறந்த வைத்திய முறைகளால் உயிர் தப்ப முடிந்தது. நான்தான் அவனை மலையடிவாரத்திலிருந்து குற்றுயிரும் குலை உயிருமாகத் தூக்கி வந்தேன்.

''மூன்று மாத சிகிச்சைக்குப் பிறகுதான் வீரப்பதேவனுக்குச் சுய நினைவு வந்தது. நடந்த எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி நான் கூறினேன். என்ன ஆச்சரியம்! அவன் உன்மேல் கொஞ்சம் கூட ஆத்திரம் கொள்ளவில்லை. மாறாக உனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று கூறினான். அதோடு சமணர்களின் கோட்பாடுகளையும் புரிந்து கொண்டு தமிழ் வளர்க்கவும் தீர்மானித்து விட்டான். இப்பொழுது அவன் பெயர் வீரப்பதேவன் இல்லை. 'வீரப்ப தேவர்!'


''தாமரைக்குமரி! அன்று நீ செய்த தியாகச் செயலால் வீரப்பதேவர் திரும்பி வராமல் போகவே அவருடைய குதிரை வீரர்கள் செய்வதறியாது திரும்பிப் போய் விட்டார்கள். பாண்டியனும் பல்லவர்களின் படையெழுச்சியால் சமணர்களை முற்றும் மறந்து விட்டான். இனி கவலை இல்லாமல் நாங்கள் கலை வளர்ச்சியில் ஈடுபடலாம். நீயும் இல்வாழ்வில் ஈடுபடலாம்......''

''சுவாமி! என்ன சொல்கிறீர்கள்?...'' விம்மலுக்கிடையே கேட்டாள் அவள்.

''குழந்தாய்! இல்வாழ்வில் இருந்து கொண்டே தீர்த்தங்கரருக்கு நீ சேவை செய்யலாம். அவர் சம்மதம் கிடைத்து விட்டது. உன் சம்மதம்தான் தேவை.''

தாமரைக்குமரி வீரப்ப தேவரின் இடது காலைக் கண்ணீரால் கழுவினாள்.

சுவர்ண நந்தி முனிவர் என்றுமில்லாத உள்ள நிறைவோடு நீண்டுகிடந்த ஏழடிப் பட்டத்தின் கொடி வழியில் மெல்ல நடைபோட்டார். அவர் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த வீரப்பதேவர் பிறகு கீழே குனிந்து வஜ்ரம் போன்றிருந்த தனது வலது கையால் தாமரைக் குமரியைத் தூக்கி நிறுத்தினார். தூரத்திலிருந்த பொய்கையிலிருந்து இரண்டு சக்ரவாகப் பறவைகள் ஆனந்தமாகக் கெக்கலி கொட்டின.



ரிலீவிங் மாப்பிள்ளை

சியாமா

1

[தபாலைப் பிரித்துப் படித்த விருத்தகிரீச்வர சர்மா பேயறைந்தவர் போல் ஈஸிசேரில் சாய்கிறார். அருகில் நின்று கொண்டிருக்கும் அவர் மனைவி அபிராமி லாண்டம் பதற்றத்துடன் கணவனின் கவனத்தைக் கவருவதற்கு முயற்சி செய்கிறாள்.]

அபி : என்னன்னு? என்ன சமாசாரம்? சம்பந்திகிட்டேயிருந்து தானே கடிதாச வந்திருக்கு?

சர் : தீபாவளி சமயத்திலே வேறு யாரு நமக்குக் கடிதம் எழுதப் போறா? சாக்ஷாத் சம்பந்திவேதான்.

அபி : அதற்கு இத்தனை பதற்றப்படுவானேன்? தீபாவளிக்கு மாப்பிள்ளை வருவார்னுதானே எழுதியிருக்கார்? அதிலே தகராறு ஒன்னுமில்லையே?

சர் : மாப்பிள்ளை கோபு பம்பாயிலிருந்து நேரே தீபாவளிக்கு முதல் நாள் இங்கேயே வரானும்.

அபி : முக்குறுணிப் பிள்ளையாரே! என் வயிற்றிலே பாலை வார்த்ததற்கு உனக்கு வேண்டிண்ட ஆயிரத்தெட்டு கொழுக்கட்டைகளையும் மோதகங்களையும் வர வெள்ளிக்கிழமை அன்றே பண்ணிவிட்டுத்தான் மறு வேலை.

சர் : ஆயிரத்தெட்டு என்ன? லட்சத்தெட்டு பண்ணு. பணம் எப்படி, எங்கிருந்து வருகிறது என்ற கவலை உனக்குக் கொஞ்சமாவது இருந்தால்தானே?

அபி : கல்யாணம்னு தொடர்ந்து தீபாவளியை எதிர்பார்க்க வேண்டியது தானே? நம்மகிட்டே பணம் இல்லாத குறை உடன் பிறந்ததுதானே? நீங்க கோபமாப் பேசறது குழந்தை காதிலே விழுந்து வைத்தால் அவள் வேறு வீணு கண்ணைக்கசக்குவாள்.

சர் : நான் ரத்தக் கண்ணீராக விடறேனே, அது உன் கண்களிலேபடவில்லே? உன் பெண் கண்களைக் கசக்குறதுதான் உனக்குப் பெரிய விஷயமாக இருக்கு? தீபாவளிக்கு மாப்பிள்ளை மட்டும் வந்தால் நான் ஏன் வாயைத் திறக்கிறேன்? கூட அதிகமாப் போனால் ஒரு தம்பி தங்கை யாரையாவது அழைச்சிண்டு வருவது சம்பிரதாயம்.

அபி: மாப்பிள்ளை மட்டும் வருகிறதாகத்தானே நீங்க இப்போ சொன்னேள்?

சர்: சொல்ல ஆரம்பித்தேன், அதற்குள்ளே நீ பிள்ளையாரைக் கூப்பிட்டே, பேச்சு திசை மாறிடுத்து...பம்பாயிலிருந்து நேரே இங்கே வர்றது மாப்பிள்ளை ஒருத்தர்தான். ஆனால் கிராமத்திலேயிருந்து, அவர் அம்மா, தங்கை, தம்பி, சம்பந்தி அம்மாவோட அண்ணா எல்லோரும் வருகிறார்களாம். ரேடியோவிலே சொல்றாப்பிலே தவிர்க்கமுடியாத காரணத்தினாலே தாமும் வர முடியல்லே, மன்னிக்கணும்னு சம்பந்திப் பிராமணன் கடிதத்தை முடிச்சிருக்கார்.

அகி: அட கஷ்டமே! நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? கல்யாணம் ஆவணியில் முடிஞ்சுது. இன்னும் நாம் தலை நிமிர்ந்த பாடில்லே. ஜவுளிக் கடை பாக்கி, மளிகைக்கடை பாக்கி எல்லாம் அப்படியே இருக்கு! இப்போ இன்னும் பட்டுப்புடவை பட்டுப் பாவாடை, ஜரிகை வேஷ்டி இதெல்லாம் நாம் எங்கே போறது?



சர்: ஏன் உன் மூக்குறுணிப் பிள்ளையாருக்கு வேண்டிக்கொண்டு தான் பாரேன்.

அகி: இதானே வேண்டாங்கறேன். கல்யாண சமயத்திலே சம்பந்திகள் கசமுசன்னு நடந்துகொண்டதிலேயே மாப்பிள்ளை குழந்தையோடு சரியாகப் பேசிப் பழகாமல் ஊருக்குப் போய் விட்டார். அவர் தீபாவளிக்கு வந்து அந்தக் குறை தீர்க்கணும்னு நான் தான் வேண்டிண்டேன். இப்படிச் சம்பந்திப்படை திரும்பி முற்றுகையிடணும்னு வேண்டிக்கல்லே.

சர்: கல்யாணத்தின் போது நடந்த குழப்பத்துக்கெல்லாம் யாரு முக்கிய காரணமோ, அந்த மாமாவே இப்போதும் படைக்குத் தலைமை தாங்கி வருகிறார்னு சம்பந்தியோட அறிக்கை கூறுகிறது.

அகி: சுவாமி, ஆண்டவனே! அதுவா மறுபடியும் வர்றது! நீங்கள் ஏதோ மாமான்னு சொன்னது காதிலே விழுந்ததே ஒழிய அதுன்னு என் மனத்திலே படல்லே. அப்பவே அந்தாளை அட்டகாசம் பண்ணித்தே அது. பாயசத்திலே சர்க்கரை இல்லே, பச்சடிக்கு உப்பு போதாதுன்னு, அதை மறுபடியும் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்?

சர்: அதற்காகத்தான் ஆவணி மாசத்திலே கல்யாணம் பண்ணவேண்டாம்னு நான் அடிச்சுண்டேன். தையிலே பண்ணியிருந்தால் இந்தப் பண்டிகைகள் வருவதற்குள் நமக்கு மூச்சு விடவாவது அவகாசம் இருக்கும், பார்.

அகி: யார் இதையெல்லாம் எதிர்பார்த்தது? இந்தக் காலத்திலே கல்யாணம் முடிஞ்சு கையோடு பெண்ணையும் அழைச்சுண்டு போறதுதான் உலகத்திலே சாதாரணமாக நடக்கறதாக இருக்கு. பையன் பம்பாயிலே தூர தேசத்திலே தனியாகக் கிளப்பிலே சாப்பிட்டுண்டிருக்கான். கட்டாயம் குழந்தையைக் கையோடு அழைச்சுப் போவான்னு நாம் எதிர்பார்த்தோம். மாப்பிள்ளை ரயில் உத்தியோகத்திலே இருக்கறதினாலே அடிக்கடி வர்ற, போகிற செலவும் நம்ம கையைக் கடிக்காதுன்னு எண்ணினேன்.

சர்: எண்ணினே - எண்ணினோம். இப்போ கையை மட்டுமில்லாமல் தலையையும் சேர்த்துக் கடிக்கிறார்களே, என்ன என்ன பண்ணச் சொல்றே?

அகி: ருக்குவுக்காக வேணும் எப்படியோ சமாளிக்கத்தான் ஆகணும். அதுதானே கடைசி, இனிமேலும் இந்த உபத்திரவம் இல்லே, பாருங்கள்!

சர்: ஏன் உனக்கு அது வேறு குறையா? சரி பேசிப் பயனில்லே. பிச்சை உபநயனத்துக்கு பிரஸெண்ட் வந்த வெள்ளிப் பாத்திரங்களை ஜாடாவாக எடுத்து வா. பாங்கிலே வைச்சு எவ்வளவு பணம் பெறட்டலாம்னு பார்க்கிறேன். ஜவுளியைக் கடனிலே தான் எடுத்தாகணும். போய் அந்த வாடிக்கைக்காரன்கிட்டேயே பல்லைக் காட்டிப் பார்க்கிறேன். என்ன செய்யறது? பெண்ணைன்னு பெத்து வைச்சிருக்கேன்.

அகி: ஊம், இரையாதீங்கோ, நம்ம கஷ்டம் நம்மோட போகட்டும். அதுவும் சேர்ந்து கண் கலங்குவானேன்? சரி, நான் வெள்ளிப் பாத்திரங்களைப் பார்த்து எடுத்து வரேன். ஆனால் அதிலே ஒண்ணும் பிரமாதமாகக் கிடைக்கப்டாது. வெள்ளிதானே? என் இரண்டு வடம் சங்கிலியையும் தரேன். அதையும் எடுத்துக்கொண்டு போங்கோ.

சர்: உன் கழுத்திலே அது ஒண்ணுதானே மிச்சம் இருக்கு!

அகி: ஏன், நீங்க கட்டின மஞ்சக் கயிறு இருக்கே, அது இருக்கிறவரை எனக்கு என்ன குறை?

[இப்பொழுது உள்ளே வந்த அவர்கள் பத்து வயதுப் பையன் பிச்சை, அப்பாவின் கையில் கடிதமொன்றைத் தருகிறான்.]

பிச்: அப்பா! இது உனக்கு வந்ததாம். பக்கத்து வீட்டுத் தபால்காரன் தவறாகக் கொடுத்து விட்டானாம். அந்த மாமா உங்ககிட்டே இதைக் கொடுக்கச் சொன்னார்.

சர்: (கடிதத்தை வாங்கிக் கொண்டே): பெரியமாப்பிள்ளை பிராணநாத்தின் கையெழுத்து மாதிரின்னா இருக்கு! தீபாவளி சமயத்தில் அவன் என்ன எழுதியிருக்கப் போறான்?



[படித்து முடித்தவரிடமிருந்து பேச்சொன்றும் கிளம்பாததைக் கண்டு அகிலாண்டத்தின் கலக்கம் மேலும் அதிகரிக்கிறது]

அகி: (அழாத குரலில்) இப்போ என்னவாம்?

சர்: பூனாவிலிருந்து பெரிய மாப்பிள்ளைதான் எழுதியிருக்கிறார். அவரும், கோமதியும், உன் பேரனோடு புறப்பட்டுத் தீபாவளிக்கு வருகிறார்களாம்!

பிச்: (மகிழ்ச்சியுடன்) அச்சா.

சர்: (கோபமாக) என்னடா அச்சாவாவது, குச்சாவாவது? பெரியவர்கள் பேசுகிற இடத்திலே உனக்கென்ன வேலே? போய்ப் படி.

அகி: குழந்தை, அவன் கிட்டே ஏன் எரிந்து விழறேள்? நம்ம கஷ்டத்தை அவன் என்ன கண்டான்? அக்காவும், அத்திம்பேரும் தீபாவளிக்கு வருகிறான்னதும் அவன் சந்தோஷப்படறது சகஜந்தானே?

சர்: நம்ம தரித்திரமும் சகஜமாகத்தான் போச்சு. அப்போ இன்னொரு பட்டுப் புடவை, வேஷ்டி இதெல்லாம் வாங்கியாகணும். சரி, கொண்டா. வெள்ளிப் பாத்திரங்களையும், சங்கிலியையும்; கொடுப்பறேன். (பெருமூச்சு விட்டு) இனிமேல் நீ உன் சங்கிலியைத் திரும்பக் கண்டாப்பிலே தான்.

அபி: எல்லாம் நல்லபடியாக முடிஞ்சு, நாம்ப மானமாக மீண்டால் போதும். இந்தச் சங்கிலி இல்லேன்னு யாரு குறைப் பட்டுக்கொண்டிருக்கிறு?

(போகிறான்.)

2

[புது ரயில்வே காலனியில் ஒரு மாலை. கோமதியும் அவள் கணவன் பிரணதார்த்தியும் பேசிக் கொண்டிருக்கிருக்கள்.]

பிர: (குஷியாக) இன்றைக்குப் பத்தாவது நாள் சரியாக இந்நேரம் ரயிலில் போய்க்கொண்டிருப்போம். அப்பப்பா, இந்தத் தடவை ஆரம்பத்திலேயே விழிச்சிண்டிருந்தேனே, பிழைச்சேனே! இல்லாட்டா லீவு கிடைச்சிருக்கும்னு நினைக்கிறயா நீ, அதுவும் பாழாய்ப் போன இந்த ரயில் உத்தியோகத்திலே.

கோ: கல்யாணத்தின்போது லீவு கிடைக்காமற் போனதில் எனக்கு உண்மையிலேயே வருத்தந்தான். ஆனால் இப்போ தீபாவளிக்கு அத்தனை தூரம் லீவு எடுத்துக்கொண்டு போகணுமான்னு தான் எனக்குத் தோன்றுகிறது.

பிர: உன்னைப் போல் விசித்திரப் பிராணியை இந்த உலகத்திலே காணவே முடியாது! சொந்தத் தங்கைக்குக் கல்யாணம் நடந்தது. நம்மாலே போக முடியவில்லே. எப்படியோ திண்டாடித் தெருவிலே நின்று தீபாவளிக்கேனும் போகலாம்னு லீவு எடுத்திருக்கேன். அதைச் சந்தோஷமாக வரவேற்காமல் எதையோ பறி கொடுத்தவள் போல், மூஞ்சியை வைத்துக் கொண்டிருக்கிறயே!

கோ: கல்யாணத்தின் போது போயிருந்தால் அப்பா, அம்மாவுக்கு உதவியாகவாவது இருந்திருக்கும்.

பிர: அதற்கு நான் என்ன செய்ய? லீவு கேட்டேன், கொடுக்கவும் கொடுத்தான்; ஆனால் கடைசி நிமிஷத்திலே அதை ரத்து செய்து விட்டான்.

கோ: நான் அதை யெல்லாம் மறுக்கவில்லேயே. அதற்காக இப்போது நாம் தீபாவளிக்குப் போகணுமா?

பிர: ஊர்ப் பக்கம் போய் மூணு வருஷமாகப் போறது. நீ உன் அப்பா, அம்மா, தங்கை எல்லோரையும் பார்க்கலாம். நானும் ஷட்டகரை நேரடியாகத் தெரிந்து கொள்ளலாம்.


கோ: உங்க ஷட்டகரைத் தெரிஞ்சுக்கறது ஒரு பிரமாத விஷயமா? டிரெயினில் முடிஞ்சு அவரை இங்கே பக்கத்திலே பம்பாயிலேதான் ரிலீவிங் டியூட்டியிலே போட்டிருக்கிறதாக ருக்கு எழுதி யிருக்கிறள். தீபாவளிக்கப்புறம் ஊருக்குப் போய் வரப்போ கூட ருக்குவையும் நாம் அழைத்துக் கொண்டு வந்தால் மாப்பிள்ளை தம்மாலே நம்ம வீட்டைத்தேடிக் கொண்டு வருகிறார். கல்யாணத்தின் போதே சம்பந்திகள் அப்பாவைப் படாத பாடு படுத்திவிட்டார்களாம். அப்பாவின் திட்டத்துக்கு மேலே செலவு ரொம்ப ஓடித்தாம். அப்படியும் ஒரே சண்டையும், பூசலுமாக இருந்ததாம். இப்போ தலை தீபாவளிக்கு வேறு அரை டஜன் பேர் வரப்போவதாகக் கடிதாக வந்திருக்காம். இதெல்லாம்பத்தி ருக்கு பாவம் ரொம்ப வருத்தப்பட்டுக் கடிதம் எழுதியிருக்கிறள்.

பிர: இதுக்கும், நாம போறதுக்கும் என்ன சம்பந்தம்?

கோ: கல்யாணத்துக்கே நாம் போகவில்லே. இப்போ தீபாவளி சமயத்திலே போனால் எனக்குப் புடவையும் உங்களுக்கு வேஷ்டியும் வாங்க வேண்டாமா?

பிர: வேண்டாம்னு, வேண்டாம்.

கோ: பார்த்தேளா, அதுக்குள்ளேயே உங்களுக்குக் கோபம் வந்திடுத்தே. நீங்களும் நானும் வேண்டாம்னு சொன்னாலும் கூட வாங்காமல் இருக்க அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மனசு கேட்குமா? உங்களிடம் நான் மறைப்பானேன்? அப்பாவை ரொம்ப நொடிச்சுப் போயிருக்கு இப்போ. அதையெல்லாம் உத்தேசித்துத் தான் நாம் லீவு எடுத்துண்டு தற்சமயம் போக வேண்டாம்னு தடுக்கறேன்.



பிர: சரி, நேர உங்க ஊருக்கு வேணுமானால் போக வேண்டாம். பட்டணத்திலே என் தம்பி வீட்டிலே தங்கியிருந்து விட்டுத் தீபாவளி முடிஞ்சு, உங்க வீட்டுக்குப் போகலாம்.

கோ: நீங்களே யோசனை பண்ணிச் சொல்லுங்கள். இத்தனை தூரத்திலே யிருந்து பட்டணம் போய்ப் பக்கத்தில் நடக்கிற தலை தீபாவளிக்கு நாம் போகல்லேன்னு நன்றாக இருக்குமா? அது அப்பாவோட கையாலாகாத நிலைமையைக் காட்டிக் காட்டுகிற மாதிரி இருக்காது?

பிர: அப்போ, நம்ம லீவுகளை நாமே எடுத்துண்டு போகிறதைத் தவிர வேறு வழியில்லே. வேணுமானால் நானே உங்கப்பாவுக்கு எழுதி விடறேன்.

கோ: வேண்டவே வேண்டாம். அப்பா கோபக்காரர். நான் ஏதோ சொல்லித்தான் நீங்கள் எழுதியிருக்கணும்னு, என்னை மன்னிக்கவேமாட்டார்!

பிர: அப்போ, என்னை என்னதான் பண்ணச் சொல்லறே?

கோ: நாம இந்த லீவை இப்போ எடுத்துண்டு போவானேன்? ஒரு மாசம், இரண்டு மாசம் தள்ளிப் போறது.

பிர: ரயில், ஏதோ உங்கப்பா வீட்டுச் சொத்து மாதிரின்னு பேசறே!

கோ: உங்கள் சிரமம் எனக்குப் புரிகிறது. ஆனால் நான் சொல்றதும் தகுந்த காரணங்களுக்காகத்தான்னு உங்களுக்குப் படவில்லேயா?

பிர: (கோபத்துடன்) தகுந்த காரணங்களா? வெட்கங்கெட்ட காரணங்கள். உலகத்திலே எந்த மாமனாராவது தீபாவளிக்கு வரேங்கற மாப்பிள்ளையை வரவேண்டாம்னு சொல்லுவாரா?

கோ: எங்க அப்பா நீங்க வர்றதை வேண்டாம்னு சொல்லல்லேயே.

பிர: நீ சொல்லறே. எதற்காகச் சொல்றே, உங்கப்பாவோட மானம் கப்பலேறிப் போயிடுமேங்கற பயத்திலே சொல்லறே. இரண்டும் ஒண்ணுதானே.

கோ: என்னை என்ன வேணுமானாலும் திட்டிக்கோங்கோ. ஆனால் என்னைப் பெற்ற குற்றத்துக்காக எங்கப்பாவைத் தூஷிக்க வேண்டாம். அவர் கையிலே இருக்கோ, இல்லேயோ, தீபாவளிக்கு நாம் இரண்டு பேரும் போனால் கட்டாயம் உள்ளத்திலே உவகையோடு நம்மை வரவேற்பார்.

பிர: இப்பவாவது உனக்குத் தெரிஞ்சுதே? சந்தோஷம்.

(கோபத்துடன் வெளியேறுகிறான்)

3

[தீபாவளிக்கு மூன்று நாட்களுக்கு முன் புது ரயில்வேஸ்டேஷனில் சென்னை செல்லும் எக்ஸ்பிரஸை எதிர்பார்த்துப் பெரிய கூட்டமொன்று கூடியிருக்கிறது. பிளாட்பாரத்தில் பிரணதார்த்தியும், கோமதியும் காணப்படுகிருர்கள்.]

பிர: கடைசியில் நீதான் ஜெயித்தாய். உன் மனம்போல் நம் பிரயாணம் தடைப்பட்டு விட்டது!

கோ: (குஷியாக). அதில் உங்களுக்கும் சந்தோஷம் என்று எனக்குத் தெரியும் அன்று என் வாயைக் கிண்டுவதற்காக அந்த நாடகம் ஆடினீர்கள்.

பிர: இதோ பார், நான் உண்மையைச் சொல்கிறேன். என்னுடைய உடம்பிலே நீ நினைக்கிற அத்தனை நல்லதனம் கிடையாது. லீவு என்னையும் மீறித்தான் ரத்தாகி விட்டது.

கோ: நான் நல்லவன் இல்லேன்னு — அதுவும் சொந்த மனைவியிடம் ஒப்புக் கொள்வதே நல்லதனந்தானே?

பிர: இதோ பார், இது ரயில்வே பிளாட்பாரம். நீ இப்படி என் புகழ் பாட ஆரம்பித்தால்...

கோ: ஏன், இன்னும் ரயிலைக் காணும்?

பிர: அது வரவேண்டிய வேளையே வரவில்லேயே? ஆமாம் உன் தங்கை கணவனை நீ எப்படி அடையாளம் கண்டு பிடிக்கப் போகிறாய்?

கோ: போட்டோவில் ஏற்கெனவே பார்த்திருக்கிறேம். பண்ட் ஜோசில் வருகிறார். இன்று பிரமாதமாக அவர் வயதிலும், அடையாளத்திலும், எத்தனை பேர்கள் பண்ட் ஜோசில் வந்து விடப் போகிறார்கள்? அவரும் வேறு நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரே?

பிர: மாமா மட்டும் கண்டிப்பாக எழுதியிராவிட்டால் நான் இன்று


உங்கள் வீடுகளில்
மங்கள திருவிளக்குச் சுடர்
வருஷம்
முழுவதும் மங்காத
ஒளி தருக!
வினைப்பயன்களின்
வேதனைகள் குறைக. நோவு,
தலைவலி, ஜலதோஷம் மற்றும்
ஜுரத்திலிருந்து 'அனஸின்' அபாய
மின்றியும், துரிதமாயும், நிச்சய
மாயும் நிவாரணம் அளிக்கும்
என்பது நினைவிலிருக்கட்டும்
'அனஸின்'
வில்லைகள்
வலியிலிருந்து விடுதலை பெற
இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜ்யாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ. பிரைவேட் லிட்.
மாக்னெட ஹவுஸ். டக்கல் ரோடு, பம்பாய்-1
டிரேட் மார்க் உரிமையாளர்கள்: ஒயிட்ஹால் பார்மகல் கோ. நியூயார்க், யு. எஸ். ஏ.



" ஹிஹி...சஷ்டியப்தபூர்த்தி கல்யாணத்துக்குத் தலைதீபாவளியா ?"

ஸ்டேஷனுக்கு வந்திருக்கவே மாட்டேன். அதை எதிர்பார்த்துத் தானோ என்னவோ அவர் எனக்குத் தனியாக வேறு, சாப்பாடு எல்லாம் எடுத்துக் கொண்டு புது மாப்பிள்ளையைச் சந்தித்து, தம் சார்பிலே தீபாவளிக்கும் கூப்பிட வேண்டுமென்று எழுதி விட்டார் போல் இருக்கிறது. என்ன இருந்தாலும் புது மாப்பிள்ளை புது மாப்பிள்ளைதானே?

கோ : உங்களுக்கு மாப்பிள்ளை வந்தாச்சே. இன்னமும் புது மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்ற குறை வேறா?

பிர : குறை இல்லே. ஆனால் என்ன இருந்தாலும் பக்கத்திலே பம்பாயிலே இருந்து கொண்டு அவன் இன்று வரை நம் வீட்டுக்கு வராமல் இருந்தது மரியாதையா? உங்கப்பாவுக்கு வேணுமானால் அவன் மாப்பிள்ளை. எனக்கு என்ன? ருக்கு எழுதித்தானே அவன் பம்பாய்க்கு வந்ததே நமக்குத் தெரிய வந்தது?

கோ : ஆச்சு, ரயில் வந்ததும் வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுகிற மாதிரி நாசுக்காக உங்கள் மனத்திலே உள்ள குறையைச் சொல்லி விடுங்களேன்.

பிர : ரயில் வருகிறது......

[ரயிலில் வந்த கோபுவை அறிமுகம் செய்து கொண்டு மூவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

கோபு *(சாப்பாட்டைக் காட்டி)*: தீபாவளிக்கும் வராமல் என்னை ஏமாற்றிய தற்காக இதெல்லாம் காணிக்கையா?

கோம *(அவசரமாக)*: எத்தனையோ ஆசைதான். ஆனால் ஆபீஸிலே இப்போ இவருக்குக் கெடுபிடியான சமயம். லீவு கேட்கும்படியாகவே இல்லே.

கோபு: ஆமாம். என்னைச் சந்திப்பதற்கு முன்பே நான் சாப்பாட்டுராமன் என்று எப்படி முடிவு கட்டினீர்கள்?

பிர *(சிரித்துக் கொண்டே)*: இதெல்லாம் மாமாவின் கட்டளை. ஆகையால் நீங்கள் அவரைத்தான் கேட்கணும்!

கோ: திரும்பும் போது கட்டாயம் அவரை ருக்குவுடன் இங்கே இறங்க வேண்டும் என்று சொல்லுங்கள்.

கோபு *(சிரித்துக் கொண்டு)*: தாராளமாக இறங்குகிறேன். ஆனால் இந்த 'அவரை, துவரை'யெல்லாம் வேண்டுமா என்றுதான் தோன்றுகிறது. அருகில் பம்பாயில் இருக்கப் போகும் எனக்கும், ருக்குவுக்கும் இனிமேல் நீங்கள் இருவரும் தானே, அப்பா, அம்மா எல்லாம்?

கோம: போகிறது. ருக்கு அதிர்ஷ்டசாலிதான். இத்தனை சீக்கிரம் அவளையும் உங்களோடு பேச்சில் சேர்த்துக் கொண்டு விட்டீர்களே? *(சிரிக்கிறாள்)*

கோபு: பேச்சில் மட்டுந்தானா?

(கூடச் சிரிக்கிறான்)

[ரயில் ஊதுகிறது]

கோபு: இன்று இந்த ரயிலில் நான் தீபாவளிக்குப் போவதே கடைசி நிமிஷம் வரையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. யாரோ பூனாவிலிருந்துதான் லீவு கேட்டிருந்தார்களாம். என்னை ரிலீவிங் ட்யூட்டியில் போகும்படி உத்தரவு வந்து விட்டது. கடைசி நிமிஷத்தில் நான் ஆபீசுக்குச் சென்று விஷயத்தை விளக்கி லீவு வாங்கப்பட்ட பாடு—

பிரண: அப்படியா!

கோபு *(உற்சாகத்துடன்)*: எனக்கு இது முதல் அனுபவமில்லே. என் கல்யாணத்துக்குச் சில நாட்கள் முன்பு தான் நான் பம்பாய் வந்தேன். கல்யாணத்துக்காகக் கொடுத்த லீவை ரத்து செய்து அப்பொழுதும் பூனாவுக்குப் போவென்று உத்தரவு வந்தது. ஆபீஸிலே ஒவ்வொரு படியாக ஏறிக் கல்யாணம் எனக்குன்னு சொல்லிக்கொண்டு அந்த உத்தரவை ரத்துச் செய்யும்படியாக ஆயிடுத்து.

பிர: ஆபீசுக்குப் பக்கத்திலே இருந்ததினாலே அதெல்லாம் சாத்தியமாயிற்று.

கோபு: உண்மை. ஆனால் என்னும் ஒரு அப்பாவி கஷ்டத்துக்குள்ளாகி இருப்பானே?

[ரயில் கிளம்பப் போய் விடுகிறது. பிரணதார்த்தியும் கோமதியும் வீட்டை நோக்கிச் செல்கிறார்கள்.]

கோம: போறது. அப்பாவும், அம்மாவும் பட்ட கஷ்டத்துக்கு மாப்பிள்ளை நல்லவராகக் காணப்படுகிறார்.

பிர *(திடுக்கிட்டு)*: ம்? என்ன? என்ன? இப்ப என்ன சொன்னே?

கோ: மாப்பிள்ளையை நல்லவர்னு சொன்னேன்.

பிர: ஓ...ஆமாம், ஆமாம். வாஸ்தவம் நல்ல பையன்.

கோ: வீட்டுக்குப் போனதும் முதல் காரியமாக ருக்குவுக்கு லெட்டர் எழுதப் போறேன். உங்க அத்திம்பேர் மாத்திரம் பூனாவிலே ரிலீவிங் ட்யூட்டி செய்யல்லைன்னு உன்னுடைய கல்யாணமே நடந்திருக்காதுன்னு.

பிர: உனக்கும் தெரிஞ்சு போச்சா?


கோ: தெரியாமல்? ஆனால் அவர் உங்களை அப்பாவின்னு சொன்னதிலே தான் எனக்குக் கோபம். இரண்டு தரம் அவர் செய்ய வேண்டிய ரிலீவிங் ட்யூட்டியை நீங்க செஞ்சிருக்கிறது தெரியாமல் அப்படிச் சொல்லிவிட்டாரே! ஆமாம்! உங்களை ஏன் ரிலீவிங் மாப்பிள்ளைன்னு கூப்பிடக் கூடாது?

[சிரிக்கிறாள். சற்றுத் தயங்கி விட்டுப் பிரணதார்த்தியும் அவள் சிரிப்பில் கலந்து கொள்கிறான்.]


திரை



அழகை மேன்மைப்படுத்த அவசியமான சாதனங்கள்
"ஐடெக்ஸ்" கண்மை
அரவிந்த் பிந்தி குங்கும சாந்து
"ஐடெக்ஸ்" கண்மை கண்களின் உஷ்ணத்தைத் தணிந்து, குளுமையையும் அளிக்கிறது. ரசாயன முறைப்படி தயார் செய்யப்பட்டது. "அரவிந்த் பிந்தி" குங்கும வாசனை சாந்து ஆறு கலர்களில் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
EYETEX
GP.
அரவிந்த் லாபரட்டரீஸ்., P. B. 1415. மதராஸ்-17



தீபாவளி வாழ்த்துக்கள்!
யாவரும் சுலபமாக சேமித்து
பயனடைய வசதி யளிக்கும்
பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிட்.
'பாலுஸேரி பில்டிங்ஸ்' 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்-5.
கிளை ஆபீஸ்கள்:
'ஜெனகத் பில்டிங்ஸ்' ஸில்வர் ஜுபிலி பார்க் ரோட், பெங்களூர்-2.
'விஜயவிஹார்' 17-A, ஸயான்-மாதுங்கா எஸ்டேட், பம்பாய்-22.
B-6 பிளாக் III, ஆஸப் அலி ரோட், புது டெல்லி-1.
10197, அஜ்மால்கான் ரோட், கரோல் பாக், புது டெல்லி-5.
BCF-570


காலிக்ளாத்
காலிகோ மில் பாப்ரிக்ஸ்
calicloth


உங்கள் குழந்தைக்கு
இங்கிலே ஏற்பட்டால்
MANNERS
GRIPE MIXTURE
மானேர்ஸ்
கிரைப் மிக்சர் கொடுத்து,
அது சிரித்து
மகிழ்வதைக் கண்டு
அனுபவியுங்கள்.
உன்னத தரத்தின் இந்த சின்னத்தைக்
கவனியுங்கள்.
இது ஒரு மானேர்ஸ் தயாரிப்பு
GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD., BOMBAY · CALCUTTA · DELHI · MADRAS.



கண்மணியே கண்வளராய்...

திருவிழா முடிந்துவிட்டது. கார் பறந்து செல்லுகிறது. அவ்வளவு வேகத்திலும் ஆடாமல் அசையாமல் போகிறது. பின் சீட்டில் ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருக் கிறது. அதன் தூக்கத்திற்குப் பங்கம் வரக்கூடாதென்று காருக்குக் கூடத் தெரியும் போலும்!


விசைச் சக்கரத்தைப் பிடித்து, தந்தை வண்டியை ஓட்டிச் செல்லுகிறார். அவருடைய நோக்கங்களை யெல்லாம் ஏற்கெனவே எதிர்பார்த்ததுபோல வண்டியின் சக்கரங்கள் லாகவமாகச் சுழன்று செல்லுகின்றன. அவர் அப்படியே ஆச்சரியத்தில் மூழ்குகிறார். "எனக்குக் கல்யாணமான வருஷம் இந்த மோட்டாரை வாங்கினேன். ஆமாம்! ஏழு வருஷங்களுக்கு முன்! மேல் பளபளப்பு போய்விட்டது. வண்டியின் தோற்றமும் நவீனமாக இல்லை. இருந்தாலும் புது வருஷத்திய 'மாடல்' ஒன்றுக்கு இதை மாற்றிக் கொள்ளுங்கள் என்று யார் சொன்னாலும் நான் அதற்குத் தயாராக இல்லை" என்று அவர் மனம் பெருமிதத்துடன் எண்ணிப் பூரிப்படைகிறது.

அவர் எண்ணியது முற்றிலும் சரியே. மோட்டார் என்பது அழகான ஒரு வாகனம் மட்டுமல்ல. அத்துடன் இன்பகர மான பல நினைவுகளும் இணைந்திருக்கின்றன. அதனால்தான் எங்களிடம் மோட்டார் வாங்குபவர்கள், அதற்காக நாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரத்தையைக் கண்டு, மற்ற மோட்டார்கள் எல்லாம் மெலிந்து காயலான் கடைக்குச் சென்றாலும் எங்களிடம் வாங்கிய வண்டி மட்டும் தொந்தரவு எதுவுமின்றி ஆனந்தமாக ஓடிக்கொண்டிருக் கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். வாடிக்கைக் காரர்களின் இந்த நம்பிக்கைதான் எங்களுடைய வளர்ச்சி யைப் போஷித்து வந்திருக்கிறது.

பெருகி வரும் தென்னிந்திய மோட்டார்த் தொழிலின் பல்வேறு தேவைகளை டி. வி. எஸ். ஸ்தாபனம் தன் பல கிளைகள் மூலம் இன்று பூர்த்தி செய்து வருகின்றது.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்: டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர் ★ மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ், பெங்களூர் ★ ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை ★ சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் ★ சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், புதுக்கோட்டை, மதராஸ் ★ மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ் ★ சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் ★ இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸெஸரீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் ★ சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிட்., மதுரை


இந்தத் தொட்டி முதலில் கனம் இல்லாமல் இருந்தது இப்ப ஏன் தூக்க முடியாமல் கனக்கிறது புரியவில்லையே!
நீங்க தானே என் காரை நிறுத்தினீங்க...உம்..தள்ளிவிடுங்க!
நான் போயிட்டு வரேன் சார்!
போ!
ஓட்டப் பந்தயம் கிளம்பும் இடம்
மாப்பிள்ளை இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போகலாம்! இன்றைக்கே ஏன் கிளம்புகிறீர்?
லட்டு
மாப்பிள்ளையின் பெட்டி
எனக்கும் யானை மேலே ஏறணும்..ம்..உம் ஊ

சீனவில்



"பொழுது விடிந்தால் தீபாவளி! படுத்துத் தூங்கடா" என்றாள் சுந்தரின் தாயார். வெடிகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே படுத்தான் சுந்தர். வெடிகளையெல்லாம் கொளுத்தப் போகும் ஆர்வத்தில் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. "ஆமாம்! சீன வெடி என்று இதற்கு ஏன் பெயர் வந்தது? நம் தேசத்தில் நரகாசுரனை வதம் செய்து அதைக் கொண்டாடவே பட்டாடை உடுத்தி வெடிகளை வெடிக்கிறோம்; சீன தேசத்துக்கென்று ஏதேனும் கதை இருக்குமோ?" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டே தூங்கப் போனான் சுந்தர்.

"கதை இல்லா விட்டால் என்ன? ஒன்று கற்பனை செய்தால் போச்சு!" என்றது ஒரு சீன வெடி சாவதானமாக. அக்கற்பனைதான் இக்கதை:

சாம்காங் என்ற ஒரு அரசர் சீன தேசத்தை ஆண்டு வந்தார். அவர் பட்டத்துக்கு வந்த காலத்தில் நற்குணங்களுடன் தான் தேசத்தை ஆண்டு வந்தார். போகப் போக அவரிடம் தூர்க்குணம் குடி கொண்டது. தற்பெருமையும், அற்ப ஆசைகளும், தாட்சிண்யமின்மையும் அவரைப் பிடித்துக் கொண்டன. இரக்கமற்ற கடின இதயத்தை வைத்தே ஆட்சியைச் சூதாடினார். இவருடைய அந்தரங்க அமைச்சர் மியோடான் என்பவர் நல்ல குணசீலர். அரசரின் துஷ்ட நடவடிக்கைகள் எதுவும் அவருக்குப் பிடிப்பதில்லை. அதற்காக அரசரிடம் அவருக்கு வெறுப்பு கிடையாது. அரசர் திருந்த வேண்டும். நாட்டு மக்களுக்கு அரசரிடம் அன்பும் நம்பிக்கையும் இருக்க வேண்டும் என்பதே அவரது ஆசை. அரசரின் மனம் கோணாது நடப்பவர்போல் நடந்து நாட்டு மக்களின் நலனையும் பேணத் தீர்மானித்தார்.


அரசருக்கு ஒரு புதல்வி இருந்தாள். அவள் பதினொரு வயது நிரம்பிய சிறுமி. அவள் பெயர் லியோலி. மியோடான் அந்த அழகு வடிவத்தின் பேரில் உயிரையே வைத்திருந்தார். லியோலியும் மியோடான் வார்த்தைகளை ஒருநாளும் தட்ட மாட்டாள். கடமையில்லாமல் எதையும் பனிச் சென்று கேட்டு விடுவாள்.

கிம்ஹிங் என்பவன் மற்றொரு மந்திரி. அவன் அரசர் மீதும், மியோடான் மீதும் தீராத பகை உணர்ச்சியுடனே காலம் தள்ளினான். தருந்த சமயம் வரும் போது மியோடானுக்கு ஆபத்தை உண்டுபண்ணக் காத்திருந்தான்.

பின்னர் சாம்காங்கின் பிறந்த நாள் கொண்டாட்டம் வந்தது. மந்திரி



தீபாவளி



சபையினரும், மற்றவர்களும் ஏராளமான பரிசுகளைக் கொண்டு வந்து குவித்தார்கள். பரிசு அளிப்பு விழாவில் மியோடானின் பரிசுதான் பாராட்டப்பட்டது. அரசரைப் போலவே ஒரு தங்கமயமான பதுமையை அவர் செய்து கம்பீரமாக அரச சபையில் கொண்டு வந்து நிறுத்தினர். மற்ற மந்திரிகளுக்குப் பொறுமை பெரிதாயிற்று. மன்னர் மியோடானின் அன்பை வெகுவாகப் பாராட்டிப் பேசினர்.

சபை கலைந்தது. கிம்ஹங் என்ற மந்திரிக்கு மட்டும் அந்தப் பதுமை நிஜமான தங்கத்தில் செய்தது இல்லை என்று தோன்றியது. ஒரு இரும்புத் துண்டை எடுத்துப் பதுமையின் மேலே உரைத்தான். தங்க மேல் பூச்சு, கையுடன் வந்தது. உள்ளே ஈயம் தெரிந்தது. ஓடினன் மன்னரிடம். விஷயத்தைத் தெரிவித்தான். அதைக் கேட்டதும் அரசருக்கு அடக்க முடியாத ஆவேசம் வந்துவிட்டது.



"என்ன அவமானம்? ஈயத்தில் செய்து அதற்குத் தங்க முலாம் பூசி என்னை ஏமாற்றி அவமானப்படுத்திய அந்தத் துரோகியைக் கட்டி இழுத்து வாருங்கள்!" என்று கடுமையாக உத்தரவிட்டார்.

மியோடான் இழுத்து வரப்பட்டார். கூடவே லியோலியும் ஓடி வந்தாள். "அப்பா! அவரை ஒன்றும் செய்யாதீர்கள். பொறுங்கள்" என்றாள் லியோலி. மன்னர் அவளை லட்சியமே செய்யவில்லை. ஆவேசமாகச் சீறினர். சீன தேசத்து ராட்சஸ 'டிராகன்' போல் மிருகமாக மாறினர்.

"இழுத்துப் போங்கள். இவனைச் சிறைக்கு. இன்றைக்கு எட்டாவது நாள் மியோடான் இந்த உலகில் நடமாட மாட்டான்" என்று சொல்லி விட்டுத் தம் அறைக்கு விரைந்து சென்றார்.

மறுநாள்காலைமன்னர் தம் அறையில் வீற்றிருந்தார். லியோலி அறைக்குள் சென்று பேசாமல் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். "லியோலி! வா இப்படி என் எதிரே. நேற்றிரவு ஈயத்தில் செய்து தங்கமுலாம் பூசி அசல் தங்கம் என்று என்னை நம்பும்படி செய்த அரக்கனுக்கு நீ ஏன் அந்தப் பரிவு காண்பித்தாய்?" என்று கேட்டார்.


"அப்பா! தங்கள் இதயத்தைத் தேடித் திறந்து பாருங்கள். எவ்வளவு உயிர்கள் உங்களால் மடிந்திருக்கின்றன? நீங்கள் அரக்களு? இல்லை, மியோடான் அரக்களு?" என்றாள் லியோலி.

"ஆ! என்ன சொன்னய்! என்னையா அரக்கன் என்று சொன்னய்?" — பற்களை நறநறவென்று கடித்தார் மன்னர்.

"மற்றவர்கள் எல்லோரும் உங்களிடம் நேரில் சொல்லப் பயப்படுகிறார்கள்! உயிருக்கு அஞ்சாத மியோடானே தம் வாயால் கூருமல் செய்தே காண்பித்து விட்டார்" என்றாள் லியோலி.

"அப்படி யென்றால் என்ன அர்த்தம்?"

"அப்படி யென்றால் உள்ளே கடின இதயம்



கொண்ட ராட்சஸ சுபாவம். வெளியே ராஜ அலங்காரம். அதை வெளிப்படுத்த உள்ளே ஈயமும் வெளியே தூய்மையான தங்கப் பூச்சும் கொண்ட உங்கள் உருவத்தைச் செய்தார் அந்தத் தந்திரியான மந்திரி. அப்பா! ஒன்று சொல்கிறேன். மியோடான் உயிரைவிடத் துணிந்தே இப்படிச் செய்திருக்கிறார். உங்கள் கோபத்தில் நீங்கள் அவரை இழக்கலாம். பிரயோசனம்? நஷ்டம் உங்களுக்குத்தான். ஒரு அந்தரங்கத் தோழரைத் தாங்கள் இழக்க நேரிடும். உங்களுக்கு நல்ல பெயர் ஏற்படவே அவர் பாடு பட்டார். ஆனால் நீங்களோ அதற்கு அதிக விளம்பரம் கொடுத்து உங்களையே நீங்கள் அவமானப் படுத்திக் கொண்டீர்கள்!" என்றாள் லியோலி.

"சரி, லியோலி! கொஞ்ச நேரம் என்னை அமைதியாக இருக்க விடு. நீ என்ன சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்" என்றார் மன்னர்.

"இந்தச் சிலையை அப்புறப்படுத்தி விட்டு அசல் தங்கத்திலேயே அதே போல் ஒரு சிலை செய்து இங்கு உடனே கொண்டு வந்து வைத்து விடுங்கள். நான் சொல்வது போலச் செய்தால் எல்லாம் தானாகச் சரியாகப் போய் விடும்" என்றாள் லியோலி.

"அப்படிச் செய்தால் கிம்ஹிங்கும் மற்றவரும் என்ன நினைப்பார்கள்?" என்றார் மன்னர் ஆவலாக.

"என்ன நினைப்பார்கள்? உங்கள் மந்திரி கிம்ஹிங் அவசரப் புத்தியுள்ளவர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சரியான ஆராய்ச்சி இல்லாமல் அவர் ஈயம் என்று சொல்லி விட்டதாக இங்குள்ளவர்கள் நிச்சயம் செய்து விடுவார்கள். கவலைப்படாதீர்கள், அப்பா!" என்றாள் லியோலி.

மகளின் பரிசுத்த உள்ளத்தையும் புத்தி சாதுர்யத்தையும் எண்ணி மகிழ்ந்தார் மன்னர். உடனே தங்கச் சிலையை இரகசியமாகச் செய்யச் சொன்னார் மன்னர். மியோடான் விடுதலை அடைந்தார். காரணம் அவருக்கே தெரியாது. தங்கச் சிலை எப்படி அங்கு வந்தது என்பது மர்மமாக வைக்கப்பட்டது. அவர் தெரிந்து கொள்ள ஆசைப்படவும் இல்லை. அந்தச் சிலை அரசரைத் தங்க மயமாக ஆக்கியதை எண்ணி எண்ணிப் பூரித்துப் போனார்.

தங்கச் சிலையையும், மன்னனையும் நாடெல்லாம் போற்றியது. மன்னர் லியோலியைக் கூப்பிட்டு, "என்னுள் குடிகொண்டிருந்த அரக்கனை ஒழித்த இந்த நன்னாளை நாம் வெடிகள் வெடித்து, வாணங்கள் கொளுத்தி மகிழ்வோம்" என்றார்.


* * *

பக்கத்து வீட்டில், "டம் டமார்!" என்று சீனப் பட்டாசு வெடித்துச் சுந்தரைப் படுக்கையை விட்டு எழுப்பியது.


சுந்தர் சீன வெடிகளை ஏராளமாக வெடித்துத் தீபாவளியைக் குதூகலமாகக் கொண்டாடினான்.









தேய்ந்த டயர்களை டி. வி. எஸ். புதுப்பிக்கிறது





பழைய டயரைப் புதுப்பிக்கும் முறையில் அனுபவம் முதிர்ந்தவர்கள் டி. வி. எஸ். பழைய டயர்கள் டி. வி. எஸ்ஸில் விரிவாகப் பரிசோதிக்கப்படுவதுடன் ஆணி, கண்ணாடி முதலிய வேண்டாப் பொருட்கள் நீக்கப்படுகின்றன. பலவீனமான இடங்கள் சீர் செய்யப்பட்டு, புதிய ரப்பர் பழைய டயர் வட்டத்தின் மேல் பரப்பப்படுகிறது. பிறகு உரிய உஷ்ண நிலையில் இப்புதிய ரப்பர் டயர்மேல் ஒன்றாக இணைகிறது. இவ்வாறு உருவாகும் டயர்கள் புதியனவை போலவே சேவை புரிகின்றன. சதர்ன் ரோட்வேஸ் லாரிகள் மூலம் 201 இடங்களிலிருந்து பழைய டயர்களைத் தருவித்து, புதுப்பித்த டயரைத் திரும்பவும் அனுப்ப டி. வி. எஸ். ஏற்பாடு செய்துள்ளது. இந்த சேவை உங்களுக்கு முற்றிலும் இலவசம்.

நன்றாக புதுப்பிக்கப்படாத டயர்



டி. வி. எஸ். புதுப்பித்த டயர்



சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

(டி.வி.எஸ். ஸ்தாபனம்) புதுக்கோட்டை & மதராஸ்

TVS/SI 246

ஆண்டாள்

கதைச் சித்திரம்

தமிழ் அறிந்தவர்களெல்லாம் ஆண்டாள் அருளிச் செய்த பிரபந்தங்களான திருப்பாவையையும், நாச்சியார் திருமொழியையும் அறியாமல் இருக்க முடியாது. 'இறைவனைக் காண வேண்டும்; கண்டு அவன் உவந்த அடிமை செய்ய வேண்டும்' என்ற ஆர்வத்தில் உள்ளடங்காமல் பொங்கிப் பெருகிய தீந்தமிழ்ப் பாக்களே திருப்பாவையாகும். இறைவனை இப்பொழுதே அடைய வேண்டும் என்று எழுந்த காதல், இதயத்தை உடைத்துக் கொண்டு வெள்ளமாக,—காதல் வெள்ளமாக வந்த தித்திக்கும் திருக்கவை அமுதமே நாச்சியார் திருமொழி.

தமிழ்கூறும் நல்லுலகில் வைணவர்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையையும், நாச்சியார் திருமொழியையும் உடன் எடுத்துச் சென்று பக்தியுடன் படித்து வருகிறார்கள்.

துளசிவனத்தில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டு வளர்ந்து வந்ததால் 'ஆழ்வார் திருமகளார்' என்றும், தாம் சூடிக் களைந்த மாலைகளை இறைவனுக்கு அணிவித்து வந்ததால் 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள்' என்றும், பிரபந்தங்கள் மூலமாக உலக மக்களை உய்வித்து அரசை கொண்டதால், 'ஆண்டாள்' என்றும் போற்றுகிறார்கள்.

** ** **

ஆண்டாளைப் பற்றிய வரலாற்றையெல்லாம் தொகுத்து வண்ணச் சித்திரக் காட்சிகளாக அடுத்த பக்கங்களில் வெளியிட்டிருக்கிறோம்.

ஆண்டாள் கதைச் சித்திரப் பகுதிகளில் வெளியாகியிருக்கும் நமது ஓவியர் 'லதா'வின் சித்திரங்களை நேயர்கள் பார்த்து அனுபவித்து ரசிப்பதற்கு இயலுமாறு ஆண்டாளின் கதைச் சுருக்கத்தைச் சித்திரங்களை ஒட்டியவாறு தந்திருக்கிறோம்.

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் புண்ணிய ஸ்தலத்தில் பெரியாழ்வார் என்னும் பெரியார் துளசி வனத்தைக் கொத்திக் கொண்டிருக்கும் போது தங்க விக்கிரகம் போன்ற குழந்தையைப் பார்க்கிறார். உடனே வாரி எடுத்து அணைத்துக் கொண்டு வீடு சென்று கோதை என்று நாமகரணம் சூட்டிச் சீரும் சிறப்புடனும் வளர்த்து வருகிறார்.

ஒரு நாள், கோதை கிருஷ்ணனைத் தன்னுடன் விளையாட வரும்படி அழைத்து அவனிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டிருக்கும் அற்புதக் காட்சியைப் பார்த்துப் பெரியாழ்வார் மெய்சிலிர்த்துப் போய் விடுகிறார்.

கண்ணன் கோதையுடன் வந்து விளையாடுகிறான். ஊஞ்சல் ஆடுகிறான். கோதை கண்ணன்மீது சாய்ந்து பரவசமாகி விடுகிறாள். இப்படி விளையாட்டுத் தோழனாக அமைந்த கண்ணன்மீது நாள் ஆக ஆகக் கோதைக்குக் காதலே பிறந்து விடுகிறது.

கன்னிப் பருவம் அடைந்த கோதை எல்லாக் கலைகளிலும் வல்லவளானாள். இறைவனிடத்தில் தீராத பிரேமை கொண்டுவிட்டாள். தந்தையாருடன் சேர்ந்து தானும் திருமாலுக்குப் பூத்தொடுத்துக் கொடுத்தாள். ஒரு நாள் தன் ஆசை அத்தனையையும் கொட்டிக் கலை அழகு மிளிரும் வைஜயந்தி மாலை கட்டினாள். கட்டிய மாலையைப் பார்த்ததும் அதைத் தானே சூடிப் பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. உடனே அதைச் சூடிக் கொண்டு கண்ணாடியின் முன்னால் நின்று தன் அழகைப்பார்த்தாள். தான் திருமாலுக்கு ஏற்றவள்தான் என்ற உள்ள நிறைவுடன் மாலையைக் கழற்றிப் பெரியாழ்வாரின் பூக்கூடையில் வைத்தாள்.

அன்று முதல் இதேமாதிரி நடந்து வந்தது.

ஒரு நாள் பெரியாழ்வார் திருமாலுக்கு மலர் மாலையைச் சாத்தியபோது அதில் இருந்த ஒரு தலைமயிரைப் பார்த்து நடுங்கி விட்டார். அவருக்குக் கோதையின் மீது சந்தேகம் வந்து விட்டது. ஒளிந்து நின்று அவளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

வழக்கம்போல் கோதை மாலையைச் சூடிக்கொண்டு கண்ணாடிக்கு முன்னால் நின்று பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியாழ்வாருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. என்றும் இல்லாதபடி கோதையைக் கடிந்து கொண்டார்.

"மறுபடியும் புது மலர் கொய்து மாலை கட்டித் திருமாலின் திருமேனிக்குச் சூட்டும் வரையில் நான் உண்ணேன்; உறங்கேன்!" என்றார் உறுதியுடன்.

மறுநாள் கோதை மலர் மாலையைப் பக்தியுடன் கட்டினாள். தான் சூடிப் பார்க்காமலே பெரியாழ்வாரின் பூக் கூடையில் வைத்தாள்.

வழக்கம் போல் பெரியாழ்வார் மலர் மாலையுடன் கோயிலுக்குச் சென்று அதைத் திருமாலுக்குச் சூட்டினார். என்ன ஆச்சரியம்! மாலையைச் சூட்டச் சூட்ட அது திருமாலின் மார்பில் தங்காமல் விழுந்து கொண்டே இருந்தது. ஆழ்வார் நடுநடுங்கிப் போனார்.

"ஆண்டவனே! நான் என்ன அபசாரம் செய்து விட்டேன்?" என்று கண்ணீர் மல்க வேண்டினார்.

"கோதை என் செல்வம். அவள் சூடிக் கொடுத்த மாலைதான் எனக்கு வேண்டும். அந்த மாலையைத் தான் நான் சூடிக் கொள்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார் பகவான்.


பெரியாழ்வார் அடுத்தகணம் மாலையை எடுத்துக் கொண்டு கோதையிடம் ஓடி, திருக்கோயிலில் நடைபெற்றதையெல்லாம் கூறினார். கோதை ஆனந்தத்துடன் ஆழ்வாரிடமிருந்த மாலையை வாங்கிச் சூடிக் கொடுத்தாள். திருமாலும் அந்த மாலையை ஆனந்தத்துடன் ஏற்றுக் கொண்டார்.

அன்றுமுதல் கோதை சூடிக் கொடுத்த மாலையைத்தான் ஆழ்வார் திருமாலுக்குச் சாத்தினார். திருமாலும் அதை ஏற்றுக்கொண்டு திவ்யமாகக் காட்சி தந்தார்.

பிறகு ஒரு நாள் வாரணமாயிரம் சூழ வலம் செய்து நாரணன் நம்பி நடக்கின்றான். பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும் தோரணம் நாட்டியிருக்கிறார்கள். மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தலிற் கைத்தலன் நம்பி மதுசூதன் வந்து கைத்தலம் பற்றக் கனவு காண்கிறாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. அந்தக் கனவைத் தன் தோழிகளிடம் எல்லாம் சொல்லி மகிழ்கிறாள்.

அதே நேரத்தில் பெரியாழ்வார் கனவில் திருமால் தோன்றுகிறார். "கோதையைப் பரிவாரங்களுடன் மணக்கோலமாகத் திருவரங்கப் பெருநகருக்கு அழைத்து வா" என்று கட்டளை இடுகிறார்.

அங்கு அழகிய மணவாளன் ஆண்டாளின் கரம் பற்றி ஏற்றுக் கொள்கிறார்.




லதா
ஆண்டாள்
கதைச் சித்தி ம்
கல்கி தீபாவளிமலர் 1958







கல்கி தீபாவளி மலர் 1958
லதா


மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர் உல்லன், காட்டன் &
ஸில்க் மில்ஸ் கம்பெனி லிட்.
மானேஜிங் ஏஜெண்டுகள்:
பின்னி & கோ (மதராஸ்) லிமிடெட், சென்னை.
BY 438.



தி
மைசூர்
கிர்லோஸ்கர்
லிமிடெட்
யந்த்ரபூர் P. O.
ஹரிஹர்



சித்திரை மாதத்துக் கோடையை அனுபவித்துக் கொண்டு ஆந்திர மாகாணத்தில் ஒரு ஊரில் நாங்கள் மூவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். இருவர் அரசாங்கப் பணியாளர். ஒருவர் உயர்பள்ளி உபாத்தியாயர்.

"இவ்வூரில் அன்னத்தைக் குளிர வைப்பதற்கு ஒரே வழி..." என்றேன்.

"அதென்ன?" என்றார் வாத்தியார் வரதராஜன்.

"அடுப்பிலேயே வைக்க வேண்டும். கீழே வைத்தால் சூடு அதிகமாகி விடும்."

இருவரும் நகைத்தனர். அப்பொழுது ஈஸ்டர் விடுமுறை. ஒரு வாரத்துக்கு ஒழிவு. வாத்தியாருக்குக் கோடை சுதந்திரம். நாங்கள் வசித்து வந்த ஊரிலே பகலில் வெய்யிலில் வாடுவோம்; பத்து மணிக்கு மேல் தலையை வெளியில் காட்டினால் தலை மயிர் பொசுங்கிப் போகும். நா வறண்டு நீரைப் பருகினால் தாகம் அதிகமாகும். படுத்தால் முதுகில் வேர்க்கும்; மின்சாரப் பங்கா சூட்டைச் சுழற்றும்; காலை மட்டும் பூமியில் ஊன்றிக் கொண்டு நடுவிலே நிற்பதைத் தவிர வேறு எப்படி இருந்தாலும் சூட்டுடன் உறவாட வேண்டும். மாலையில் மேற்கேயிருந்து புழுதியுடன் கூடி ஒரு வறண்ட காற்று அடிக்கும். இரவில் ஊரைச் சுற்றியிருக்கும் மலைகள் வெப்பத்தைக் கக்கித் தங்கள் தாபத்தைத் தீர்த்துக் கொள்ளும். அவ்வூர் வாசிகள் இதை யெல்லாம் பொருட்படுத்துவதில்லை. பகல் பன்னிரண்டு மணிக்கு ஆவக்காயுடன் விருந்தளிப்பார்கள். அவ்வூரார் ஒரு மூட்டை அரிசி, ஒரு மூட்டை மிளகாய் இரண்டும் சேர்த்துவாங்குவது வழக்கம். மாலையில் மணமகனும் மணமகளும் ஊர்வலம் வருவார்கள். நள்ளிரவில் ஒலிபெருக்கியைத் தோற்கடிக்கும் தொனியுடன் நாடகத்தில் "பத்யங்கள்" பாடுவார்கள். அவர்கள் அவலம்பிப்பது பெரும்பாலும் சோக ரஸம்தான். பாடி உயிர் விடுவதற்கு அரை மணியாகும்!

"எங்கேயாவது போய்த் தொலைய வேண்டும்" என்றான் நாராயணன்.

"காஷ்மீர் தேவலையா? வைகுண்டம் தேவலையா என்பதைப் போல் இருக்கிறது. நம் ஊர் சூட்டைவிட மற்ற ஊர் சூட்டுக்கு என்ன பெருமை" என்றார் வாத்தியார்.

ஆண்டுதோறும் பள்ளியில் பையன்களுக்குச் சொல்லும் வேடிக்கைகளில் இதுவும் ஒன்று என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

"கடற்கரையருகில் மாலையிலாவது நல்ல கடற்காற்று அடிக்கும்" என்றேன்.

"எங்கள் நாட்டுக் கடற்கரைக்கு நாங்கள் கையில் விசிறி எடுத்துக்கொண்டு தான் போவோம்" என்றார் வாத்தியார்.

ஏதோ எண்ணிக் கொண்டிருந்த நாங்கள் இருவரும் நகைக்க மறந்து விட்டோம். வாத்தியார் விடவில்லை. சொன்னதைத் திரும்பவும் சொன்னார். இருவரும் மரியாதையுடன் நகைத்தோம்.



"ஜகந்நாதம் போவோம்" என்றேன்.

"எப்படிப் போவது?" என்று வினவினார் வாத்தியார்.

"நாராயணனுடைய வாகனம் இருக்கிறதே!" என்றேன் நான். வாத்தியார் ஒன்றும் பதில் அளிக்கவில்லை. நாராயணன் திடுக்கிட்டுப் போனான்.

இரண்டு மாதங்களுக்கு முன் நாராயணன் ஒரு மோட்டார் வண்டி வாங்கியிருந்தான். இந்தச் சம்பவங்கள் நடைபெற்றது 1930-ம் ஆண்டு. 1922-ம் ஆண்டில் நாராயணனுடைய மோட்டார் பார்க்கப் புதிதாக இருந்தது என்று ஒரு வதந்தி. நாங்கள் பார்க்கும்பொழுது அது சதாபிஷேகத்துக்குச் சித்தமாயிருந்தது. ஆனால் கடுகு செத்தாலும் காரம் குறையுமா? செவர்லட் என்றைக்கும் செவர்லட்தான். அந்த மோட்டாரைக் காயலான் கடைக்குப் போகாமல் காப்பாற்றி வீட்டுக்குக் கொண்டு வந்தோம். வண்டியின் விலை ரூபாய் அறுநூறு. வண்டியை விற்றவன் தீர்க்கதரிசி. "இந்த வண்டிக்கு வேண்டிய உதிரி உறுப்புகள் உங்களுக்குக் கிடையாது" என்றான்.

"என்ன செய்வது?" என்றோம்.

"என்னிடம் இதே போல் இன்னொரு வண்டி இருக்கிறது. அதற்கு விலை முந்நூறு ரூபாய்தான். அதிலிருந்து சாமான்களைக் கழற்றி அவ்வப்போது உங்கள் வண்டியில் மாட்டிக் கொள்ளலாம்" என்று கூறினான்.

இந்த ஆலோசனையை நாங்கள் அங்கீகரித்தோம். வயது முதிர்ந்த வண்டி இரண்டையும் வீட்டுக்குக் கொண்டு வந்தோம். ஆனால் என்ன ஆச்சரியம்! எங்கள்வண்டியின் இஞ்சினில் பழுதே இல்லை. எண்ணெயை விட்டுக் கைப்பிடியால் சுற்றினதும் இஞ்சின் அலற ஆரம்பித்து விட்டது. வண்டிக்குப் பின்னால் வீடு பற்றிக் கொண்டது போல் புகை. ஆவேசம் வந்த பூசாரியைப்போல் வண்டி உதறிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் டமாரென்று ஒரு சத்தம் கேட்டது. வண்டியின் முன்னிருக்கும் நீர்க் குழாயின் மூடி ஆகாய மார்க்கமாகக் கிளம்பி நூறு கஜத்துக்கு அப்பால் போய் விழுந்தது. நீர்க் குழாயில் நின்று நீராவி பொங்கியது.

வாத்தியாருக்கு ஹாஸ்ய ரஸத்தை அடக்க முடியவில்லை.

"இது ஒருவேளை ரயில் எஞ்சினாக இருக்குமோ?" என்றார்.

நாங்கள் மூவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். நாராயணன் சாரதி. வண்டியை ஓட்டும் சக்கரம் அவன் கையில் சுழன்று கொண்டே இருந்தது. இரண்டு மூன்று சுற்றுக்குப் பிறகுதான் அது மோட்டார் வண்டியுடன் தொடர்பை அடைந்தது.

"ஸுதர்சனம்!" என்று முணுமுணுத்தார் வரதராஜன்.

இடீரென்று வண்டி முன் பாய்ந்தது. நாங்கள் இருவரும் முன் "ஸீட்"டில் முட்டிக் கொண்டோம். ஆனால் வண்டி ரஸ்தாவில் வேகமாகப் போக ஆரம்பித்தது.

"இவ்விடத்தில் அரிசி மிஷின் இருக்கிறதா?" என்றேன். இந்த அசந்தர்ப்ப ஹாஸ்யம் நாராயணனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கண்ணுக்குச் செவர்லட் பொன் குஞ்சாகத் தோன்றியது.

அந்த வண்டியில்தான் ஜகந்நாதம் போக வேண்டுமென்று எங்கள் தீர்மானம். வண்டிக்கு "டிரைவர்" இல்லை. உடனே "டிரைவரை"த் தேடும் வேலையில் ஈடுபட்டோம். எங்களுக்கு ஏற்ற டிரைவர் அகப்படுவது கஷ்டமாக இருந்தது. ஏனென்றால் நாங்கள் ஓட்டுவதற்கு

ஆள் தேடவில்லை. வண்டியைத் தள்ளுவதற்குத் தகுதியான ஆள் தேடினோம். முடிவில் சுப்பா ராயுடு என்று ஒருவன் கிடைத்தான்.



வண்டியில், மூன்று படுக்கைகள், மூன்று பெட்டிகள், கூஜா, பித்தளை "டிபன் காரியர்", பழக் கூடை, சோப்பு, சீப்பு, க்ஷவரச் சாமான்கள் கொண்ட சிறிய பெட்டிகள், சுப்பாராயுடுவின் துணி மூட்டை, ஐந்தாவது சக்கரம், ஒரு சிறிய வாளி, தாம்புக் கயிறு — இத்தனை சாமான்களையும் அடுக்கி வைத்தோம். அதுவரையில் நாங்கள் நால்வரும் வெளியே நின்று கொண்டிருந்தோம். எங்களுக்கு உள்ளே ஏறுவதற்கே இடமில்லை. சாமான்களைத் திரும்பவும் வெளியே எடுத்து ஒரு புது ஆலோசனை செய்தோம். இரண்டு படுக்கைகளை இருந்துறுடைய இரு பக்கத்தில் நிறுத்திவைத்தோம். பின் சீட்டை எடுத்துக் கீழே வைத்து அவ்விடத்தில் ஒரு பரந்த சமதளத்தை நிர்மாணம் செய்தோம். மூன்றாவது படுக்கையை அதன் மேல் விரித்துக் கொண்டோம். கூடையில் இருந்த பழங்களை ஆளுக்குக் கொஞ்சமாகத் தின்று கூடையைக் காலி செய்தோம். பெரிய பெட்டிகளைத் திறந்து சோப்பு, சீப்பு, கண்ணாடிகளை உள்ளே அடைத்தோம். முதலில் நாங்கள் உட்கார்ந்து கொண்டு, அதன் பிறகு சாமான்களை இடைவெளிகளில் வைத்தோம். முன் சீட்டில் சாரதி சுப்பாராயுடுவும் நாராயணனும் அமர்ந்து கொண்டனர்.

அதிகாலையில் புறப்பட்டோம். விடியும் முன் ஐம்பது அறுபது மைலாவது போய்விட வேண்டுமென்பது எங்கள் எண்ணம். போகும் வழியில் தமிழ் நாட்டைப் போல் ஓட்டல்கள் கிடையாது என்பதை ஓரளவு நாங்கள் மறந்தது உண்மையே; ஆனால் அடியோடு ஒன்றுமே இருக்காது என்று நாங்கள் கருதவில்லை. பிஸ்கட்டும் வாழைப் பழமும் பப்பிருமுண்டும்தான் வழியிலிருந்த கடைகளில்கிடைத்தன. மழைக் காலத்து ஆற்றுவெள்ளம்போல் காஷாய வர்ணத்தில் ஓரிடத்தில் தேத்தண்ணீர் மட்டும் கிடைத்தது. அதில் வாசனைக்காகப் புகை ஏற்றப்பட்டிருந்தது. வரதராஜன், நியோ கோமளவிலாஸ், ஆர்யபவன் முதலிய சென்னை நகரத்து ஹோட்டல்களைப்பற்றிப் பேசிக் கொண்டே வந்தார்.

"கும்பகோணத்தில் 'டிக்ரீ காப்பி' கிடைக்கும். அரை மைல் தூரம் 'கம்'மென்று மணக்கும்" என்றேன் நான்.

"என்ன கும்பகோணம் காப்பி : சாப்பிட்டால் சென்னையில் "காஸ்மோ பாலிடன்" காப்பி சாப்பிட வேண்டும்" என்றார் வரதராஜன். நாராயணனுக்கு ஒரே தலைவலி.

சுமார் பதினொரு மணிக்கெல்லாம் ஸ்ரீகாளம் என்ற நகரத்தை அடைந்தோம். அங்கே ஒரு உள்ளூர் ஹோட்டல் இருந்தது. "அவ்விடத்தில் சாப்பாடு அமிருதம் போல் இருக்கும்" என்றான் சுப்பாராயுடு. எங்களுக்கு அப்பொழுது இருந்த பசியில் இரண்டு உப்புக்கல் இருந்தால் வைக்கோலைக் கூடத் தின்று திருப்போம். ஹோட்டலில் புகுந்ததும், அழுக்கேறிய சிவப்புப் பட்டைக் கட்டிக் கொண்டு ஒருவர் எங்களை வரவேற்றார்.

எங்கள் மூவருக்கும் சுமாராகத்தான் தெலுங்கு பேசவரும். சுப்பாராயுடு அவரிடம் சரமாரியாக ஐந்து நிமிஷங்கள் உபன்யாசம் செய்தான். அதன் பொதுக் கருத்தாவது: "இம் மூவரும் தென்னாட்டு அரசர்கள் என்றே கூறலாம். பச்சை நோட்டைப் பந்தாடுபவர்கள். ஆகையால் நளனும் பீமனும் ஒருங்கே சேர்ந்து செய்த ஒரு விருந்தை இவருக்கு அளிக்க வேண்டும்" என்பது. இதைக் கேட்ட ஸ்ரீ காளுஸ்தர் உள்ளே ஓடினார். திரும்பவும்வந்து, "ஐந்து நிமிஷத்தில் எல்லாம் தயாராகிவிடும்., அமருங்கள்" என்று உபசரித்து விட்டுப் புகையாயிலே காது வழி மணக்கும் மூன்று 'லங்கா' சுருட்டுக்களை நீட்டினார். சுப்பாராயுடு அவைகளை அவனுடன் பார்ப்பதைக் கண்டு, வரதராஜன் ஒரு சுருட்டை வாங்கி அவனிடம் கொடுத்தார். அவனும் அதை மரியாதையுடன் ஏற்றுக் கொண்டு தாலுகா குமாஸ்தா பேனாவை வைப்பது போல் காதுக்கு மேல் வைத்துக் கொண்டான்.

மணி பதினொன்றாயிற்று, பன்னிரண்டு அடித்தது : பன்னிரண்டரை யாயிற்று. ஸ்ரீ காளுஸ்தர் மடப்பள்ளியில் மறைந்தவர்தான், ஆளையே காணவில்லை. உட்கார்ந்தவாறே நான் உறங்கினேன். நாராயணன் தன் வண்டியின் மூன் குடுதளித்ததா என்று பார்ப்பதற்கு வெளியே போய் விட்டான். சுமார் ஒரு மணிக்கு ஸ்ரீ காளுஸ்தர் வெளியே வந்தார். நான்கு "தையல்" இலைகளை வரிசையாகத் தரையில் போட்டு விட்டு எங்களை விருந்துக்கு அழைத்தார். நாங்களும் இலைக்கு முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டோம்.

ஒரு வட்டியில் அன்னம் எடுத்து வந்து, தம் வலது கையால் இலையில் தள்ளினார்.

"அநாகரிகம்" என்றான் நாராயணன் ஆங்கிலத்தில்.

"தேசாசாரம்" என்றேன், நானும், ஆங்கிலத்தில்.

"ஸ்ரீரங்கத்தில் காலால் புளியோதரை செய்வார்கள்" என்றார் வரதராஜன், முற்றிலும் அனுவசியமாக.

பிறகு நெய் தோன்றியது. கெட்டி நெய் ஆனதினால், ஸ்ரீ காளுஸ்தர் அதைத் தம் கையால் உருட்டிப் போட்டார். மிஞ்சியதை விரல்களில் நின்று வழித்துத் திரும்பவும் பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டார். நெய்யின் நறுமணம் 'கும்'மென்று கிளம்பியது.

"இவ்வூரில் காண்டாமிருகமுண்டா?" என்று கேட்டார் வரதராஜன்.

ஒருவரும் பதில் அளிக்கவில்லை. அன்னம் ஒன்றோடொன்று வெறுப்புடன் பார்த்துக் கொண்டு குண்டூசிக் கூட்டம் போல் இருந்தது. திரும்பவும் ஸ்ரீ காளுஸ்தர் தோற்றம் அளித்தார்.

இந்தச்சமயம் தம் கையால் ஒரு தவிட்டு நிறம் வாய்ந்த சட்னியை இலையில் தள்ளினார்.

நாங்கள் மௌனமாக இருந்தோம்.



"ஏன் சாப்பிடலாமே" என்றார் அவர். அப்பொழுது நாங்கள் சுப்பாராயுடுவைப் பார்த்தோம். அவன் சட்னியைச் சோற்றில் பிசைந்து கொண்டு மலைப் பாம்பைப் போல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

விதியின்றி நாங்களும் ஒரு சிறிது அன்னத்தை உட்கொண்டோம். அதன்பிறகு மோர் வந்தது. நான்கு பேர்கள் இடரென்று வந்தால் அவர்தான் என்ன செய்வார்? ஆனால் மோர் வேறு, அன்னம் வேறு என்ற ஒத்துழையா இயக்கத்தில் தையல் இலையின் பிளவுகளும், இலை தைத்திருக்கும் ஈர்க்கும் கூடவே கலந்து கையில் வந்தன.

"மோர் நீரானாலும் புளிப்பில்லை" என்று மெச்சினேன்

வரதராஜன். வண்டியில் திரும்பவும் ஏறிக் கொண்டோம்.

"கடன் வாங்கியும் பட்டினி என்பது போல் நமக்கு உண்டும் பசி ஏப்பம்தான்" என்றான் வரதராஜன். பிற்பகல் வெய்யிலில் ஒரு துளி கூட வீணாகாமல் விரைந்து ஜகந்நாதரைத் தரிசனம் செய்யப்போய்க் கொண்டிருந்தோம். மாலையிலும் தேயிலை நீர்தான் அருந்தினோம்.

நாங்கள் பூரியை அடைந்தபொழுது இரவு மணி ஒன்பது இருக்கும். அவ்வூர் "முசாபரி பங்களா" எங்கே என்று பல பேரைக் கேட்டோம். "முசாபரி பங்களா"வைக் குறித்து அவ்வூரில் அநேகம் கட்சிகள் இருந்தன. அப்படி ஒன்றுமே இல்லை என்று சிலர். 'கட்டாக்கில் இருக்கிறது; இவ்வூரில் இல்லை' என்று வேறு சிலர். கடற்கரையில் ஒரு பெரிய வீடு இருக்கிறது. அதுவாக இருக்கலாம் என்று மூன்றாவது கட்சி. நாங்கள் மூன்றாவது கட்சியில் சேர்ந்துகொண்டு, கடற்கரைப் பக்கம் சென்றோம். அங்கே உண்மையாகவே ஒரு முசாபரி பங்களா இருந்தது. ஆனால் அது எங்களுக்குப் பயன்படவில்லை. அவ்வூர் கலெக்டர் குடும்பத்துடன் அங்கே "முகாம்" செய்து கொண்டிருந்தார். சேவகர்கள் எங்களை உள்ளேயே விட மாட்டோம் என்று தடுத்து விட்டார்கள்.

"தடுப்பவர் முதல் ஜன்மம் 'பியூன்'கவும், அடுத்த ஜன்மம் நாயாகவும், மூன்றாவது ஜன்மம் திரும்பவும் இரவில் கண் விழித்து வாயில்காப்போனாகவும் பிறப்பார்கள்" என்றார் வரதராஜன்.

வண்டியைத் திருப்பிக் கோவிலை அடைந்தோம். அங்கே ஒரு கடையருகில் காரை நிறுத்தினோம். அப்பொழுது தான் எங்களுக்கும் விஷ்ணுவுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு. விஷ்ணுவுக்கு வயது இருபத்தைந்திருக்கும். தலை மயிர் ஒரு பக்கமாகக் கடுகெண்ணெய் தேய்த்து வாரிவிடப்பட்டிருந்தது. அதிகமான எண்ணெய் கன்னத்தில் கசிந்து நின்றது. "காராமினி" நிறைந்த வாய். முட்டளவு மூல கச்சம். அழுக்கு ஜிப்பா. ஆனால் அதற்கு வெள்ளிச் சங்கிலியில் கோர்த்த பொத்தான். எங்களைக் கண்டதும் ஓடோடியும் வந்தான். பல்லையும் காட்டிச் சலாமும் செய்து ஒரு மூன்று நிமிஷம் விடாமல் பேசினான்.

"நகரத்தார் 'சார்பில் நல்வரவு வார்த்தை" என்றார் வரதராஜன்.

விஷ்ணு பேசிய ஒரியா பாஷை எங்கள் ஒருவருக்கும் புரியவில்லை. ஆனால் சப்பாராயுடு பசி என்றும், படுக்க இடம் வேண்டும் என்றும் கை முத்திரைகள் காண்பித்தான். விஷ்ணு "என்ன எண்ணிக் கொண்டானோ தெரியவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குத் 'திரு திரு' என்று விழித்தான்.

"இந்த ஒரியா தேசத் தலைவர்கள் சுத்த முட்டாள்கள்" என்றான் சப்பாராயுடு. அப்பொழுது நாராயணன் கோவிலை நோக்கி ஒரு கும்பிடு போட்டான். திடீரென்று எல்லாம் தெளிந்து விட்டது, விஷ்ணுவுக்கு. "தோர்சன் போண்டி" என்று சில வார்த்தைகளைச் சொல்லி விட்டு எங்களைத் தன்னுடன் வரும்படி அழைத்தான். அவனைப் பின் தொடர்ந்து ஒரு இருள் சூழ்ந்த, "மூவர் நிற்கலாம்" என்று ஆழ்வார் பாடிய அளவுக்கு இருந்த சந்து வழியாகச் சென்றோம். ஆனால், என்ன விந்தை! அந்தச் சந்தில் மூன்று மாடிகள் வைத்து அரண்மனை போல் ஒரு பெரிய மாளிகையைக் கண்டோம். அதனுள் எங்களை விஷ்ணு அழைத்துச் சென்றான். நாங்கள் ஒரு பெரிய கூடத்தை அடைந்தோம். மினுமினுவென்று ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. தரையில் ஒரு மெத்தையின் மீது ஒரு மகான் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரைச் சுற்றி மூன்று நான்கு சேவகர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஒருவன் அவர் காலை 'மாலீச்' செய்து கொண்டிருந்தான். அதற்கு இதமாக அவர் அவ்வப்பொழுது தம் கால்களை நீட்டியும் குறுக்கியும் திருப்பியும் கொடுத்துக் கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் விஷ்ணு சம்பெனக் கீழே விழுந்து வணங்கினான். சேவகருடன் சேவகனும் நின்று கொண்டு மரியாதையாக ஏதோ முணுமுணுத்தான். உடனே அவர் எங்களைக் கண்ணுற்றார். சேவகருள் ஒருவனிடம் ஏதோ கூறினார். அவன் எங்களிடம் தெலுங்கில் பேசினான்.



"சுவாமிகள் உங்களை ஜகந்நாதனுடைய புண்ணிய க்ஷேத்திரத்துக்கு வரவேற்கிறார். நீங்கள் இங்கேயே தங்கலாம். ஆகாரங்கள் இங்கேயே கொடுக்கும்படி உத்தரவு ஆகியிருக்கிறது" என்றான். இவன் பேசும் பொழுது ஆமோதித்துக் கொண்டு சுவாமிகள் தலையை அசைத்துக் கொண்டிருந்தார்.

"ஸ்வாமிகளுக்கு எங்கள் நன்றி" என்றார் வரதராஜன்.

இதைக் கேட்ட சுவாமிகள் விஷ்ணுவினிடம் எங்கள் பெட்டி படுக்கையை எடுத்து வரும்படி உத்தரவு இட்டார்.

"தங்கும் இடம் எங்கே?" என்றான் சப்பா ராயுடு.

"இங்கேதான்" என்றான் சேவகன். சப்பாராயுடுவுக்கு இது முதலில் புரியவில்லை. பிறகு நாங்கள் இருந்த கூடத்திலேயே இரவு தங்க வேண்டும் என்று தெரிந்தது.

"இவ்வூரிலேயே இவர்தான் பெரிய மடாதிபதி" என்றான் சேவகன்.

சுவாமிகள் சிறிது சிரித்தார். அப்போது திடீரென்று மூன்று சிறுவர்கள் ஓடி வந்து சுவாமிகள் மேலே விழுந்தார்கள். பெரிய யானையிடம் குட்டி யானைகள் விளையாடுவதைப் போல் இருந்தது.

"இவர்கள் யார்?" என்று கேட்டார் வரதராஜன்.

"சுவாமிகளுடைய குழந்தைகள்" என்றான் சேவகன்.

"மடத்துக்கு வாரிசு வேண்டுமென்று சுவீகாரம் செய்துகொண்டிருக்கிறாரோ?" என்று கேட்டார் வரதராஜன்.

"இல்லை, இல்லை. சுவாமிகளுக்கு இரண்டு மனைவிமார்! ஆண் குழந்தைகள் முதல் மனைவிக்குப் பிறந்தவை. பெண் குழந்தை 'ஸிலோயம் பிரபோ!' இரண்டாவது மனைவிக்குப் பிறந்தது. அவளிடம் தான் சுவாமிகளுக்கு அளவுகடந்த அன்பு. பாருங்கள், எப்படி விளையாடுகிறார்கள்" என்றான்.

குழந்தைகள் ஆச்சரியமாகத் தான் விளையாடினார்கள்; அதாவது தம் தந்தை உடலில் இருக்கும் அவயவங்களை, தலைமயிர் முதலியவைகளைத் தனியாக எடுக்க முடியுமா, இல்லை, உடம்புடனேயே இருப்பவையா என்று பரீட்சை பார்த்தார்கள். இதை மடாதிபதி அபரிமிதமாக அனுபவித்தார்.

"நாய்ப் போர்" என்றார் வரதராஜன், ஆங்கிலத்தில்.

இதனிடையே முண்டாசு கட்டி, மத்தளம், ஜால்ரா, சுருதிப் பெட்டி முதலிய ஆயுதங்களுடன் ஒரு கூட்டம் அங்கு வந்து சுவாமியை வணங்கியது. அவர்களிடம் ஏதோ பேசினார். அவர்களும், "சரி" என்று தலையை அசைத்தார்கள்.

"இவர்கள் 'ராதா கல்யாணம்' கூத்து நடிப்பவர். உங்களுக்காக நேர்த்தியாக ஆடிப் பாட வேண்டும் என்கிறார் சுவாமிகள்" என்றான் விஷ்ணு.

"எவ்வளவு நேரம்?" என்றார் வரதராஜன்.

"விடியும் வரை" என்றான் விஷ்ணு.

"ஓடிப் போகவும் வழியில்லை" என்றேன் நான்.

அப்பொழுது சென்னையில் பிராட்வே மூலையில் டிராம் வண்டி திரும்பினாற் போலவும், விலங்குகளால் துரத்தப்பட்டுப் பயந்தோடும் நரிக் கூட்டத்தின் கூச்சல் போலவும், மேல் குரலும், கீழ்க் குரலும் ஒன்றோடொன்று போராடிக் கொண்டு, மத்தளம் இடிமுழங்க, ஜால்ரா கருமான் அடிக்கும் இரும்பெனச் சத்தமிட, ஆர்மோனியம் அலற, கண்ணனுக்கும், ராதைக்கும் கல்யாண மகோத்சவம் ஆரம்பமாயிற்று. "கண்ணனுக்குக் கல்யாணம், நமக்குச் சிவராத்திரி" என்றார் வரதராஜன்.

முதல் அச்சேறிய தமிழ் நூல்கள்

கலைக்களஞ்சியம் 'அச்சடித்தல்' என்னும் தலைப்பில் "பதினாறும் நூற்றாண்டில் மேல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட மர எழுத்துக்களைக் கொண்டு சில கிறிஸ்துவ நூல்கள் தமிழ்நாட்டில் அச்சடிக்கப்பட்டன" என்று கூறியிருக்கின்றது. அந்நூல்களைப் பற்றிய விரிந்த குறிப்புக்களைத் தருவதே இந்தக் கட்டுரையின் கருத்தாகும்.

ஐரோப்பாவுக்குப் பன்முறை சென்றதன் பயனாகவும், நேரம் கிடைத்தபொழுது நூற்கூடங்களில் பண்டு அச்சிடப் பெற்ற தமிழ் நூல்களைத் தேடியதன் பயனாகவும் பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளில் அச்சேறிய சில நூல்களை அல்லது அவற்றின் விவரங்களைக் கண்டறிய நேரிட்டது. பண்டு அச்சுக் கண்ட தமிழ் நூல்கள், இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக மறைந்திருந்து இத்தமிழ் மறுமலர்ச்சியின் காலத்தில் மீண்டும் தோன்றியது நமக்கு ஆராய்ச்சி இன்பத்தைத் தரும் செய்தியாகும். பதினாறும் நூற்றாண்டில் கொல்லத்திலும், கொச்சியிலும் புன்னைக்காயலிலும் நிறுவிய அச்சகங்களிலிருந்து பல நூல்கள் தோன்றின என்பதற்கு அந்நூற்றாண்டில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கக் குருக்களின் கடிதங்களே சான்றுகின்றன.

பதினாறும் நூற்றாண்டில் தமிழ் நாடு போந்த மேல்நாட்டுக் கத்தோலிக்கக் குருக்கள், பள்ளிக்கூடங்களை நிறுவுவதும், அச்சிட்ட நூல்களைப் பரப்புவதும் தம் இரு பெரும் மறை பரப்பும் முறைகளாகக் கையாண்டனர்.



Frontispício da Cartilha de leitura e doutrina em língua Tamul e Portuguêsa, admirável specimen de aplicação das artes gráficas ao ensino das línguas

தமிழ் நாடு வந்ததும் ஏட்டுச் சுவடிகளைக்கண்டு மகிழ்ந்து அவற்றின் படிகளை மேல்நாடுகளுக்கு அனுப்பினர். தம் வழிபாட்டு முறை மந்திரங்களைத் தமிழ் வல்லுநர் துணைகொண்டு தமிழ் மொழியில் பெயர்த்தனர். தமிழைத் தமிழ் நாட்டிலுள்ள பண்டிதர்களைக் கொண்டு கற்றுத் தம்மாலியன்றவாறு தமிழ் நூல்களை இயற்றினர். இம்முதல் நூல்கள், தமிழ் இலக்கியச் சுவையும், நடைச் செறிவும் அற்றவையாயினும், தமிழ் இலக்கிய வரலாற்றையும், தென்னாட்டுச் சமூகத்தின் வரலாற்றையும் தெளிவாக்கும் சில குறிப்புக்களைக் கொண்டுள்ளன. இக்குருக்களின் இடைவிடாத தொண்டால் தமிழ் மொழியின் உரைநடை புது வழிகளைக் கண்டுள்ளது. இந்திய மொழிகளில் முதல் அச்சுக் கண்ட மொழியாகும் பெருமையையும் தமிழ் மொழி பெற்றுள்ளது.


இக்குருக்கள் ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் சிறந்த கல்வி கற்றவர்கள். ஆதலின் அந்நாட்டின் கல்வித் துறைமுறைகளைத் தமிழ் நாட்டிலும் கையாண்டு வந்தனர். அன்னார், கல்வித் துறையிலும், மொழி ஒப்பியல் துறையிலும், இலக்கண இலக்கிய அகராதித் துறைகளிலும் ஆற்றிய அரிய தொண்டுகளை நாம் இதுகாறும் ஆராய்ந்தோமல்லோம். அச்சுப் பொறிகளையும், அச்சு முறைகளையும் இந்திய நாட்டுக்கு நல்கியது பெருந்தொண்டாயிருக்க, அவர்கள் தமிழில் நூல்களை அச்சிட்டது தமிழுக்குத் தனிப் பெருமையை அளித்தது. இப்பெருமையைப் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களே உணர்ந்தனர். இந்த அச்சகங்களை நிறுவவும், அவற்றை நடத்தவும் கத்தோலிக்கரல்லாத இந்து சமயத்தவரும் பொருளுதவி நல்கினர். முதன் முதல் அச்சேறிய நூல்களைப் பெற்றுப் பேணியும் வந்தனர். 1579-ம் ஆண்டு, கொச்சியில் அச்சிடப் பெற்ற "கிரீசித்தியானி வணக்கம்" என்னும் நூலின் முகவுரையில், தமிழ் மொழி அச்சு கண்டதால், தமிழ் இனத்தவருக்கு உலகிலே பெரும் புகழ் உண்டாயிற்று என்பதைக் குருக்கள் கூறியிருக்கின்றனர்.

" முதல் செலவளித்து அச்சுண்டாக்குவித்ததினாலே சங்கையும்கீர்த்தியும் உலோகமுன்பாகப்பெற்றீர்களே!"

நாமறிந்த வரையில் முதன் முதல் அச்சேறிய தமிழ் போர்த்துக்கல்லின் தலைநகராகிய லிஸ்பன் மாநகரில் 1554-ம் ஆண்டு அச்சிடப் பெற்றது. (படம்-1) இந்நூல் தமிழ் ஒலி வடிவைக் குறிப்பதற்குத் தமிழ் வரி வடிவைக் கையாளாது உரோம எழுத்துக்களையே கையாண்டது. அந்நூலில் ஒரே ஒரு படி லிஸ்பனுக்கு அண்மையில் உள்ள மக்களியற் பொருட்காட்சிச் சாலையில் காப்பாற்றப்பட்டு வருகின்றது. இந்நூலின் வரலாற்றை அறியும்பொழுது, அரிய நூல்கள் எங்ஙனம் தப்பித் தவறி நூற்கூடங்களிலும் அரிய நூல் பேணுவாரிடமும் கைமாறிச் செல்கின்றன என்பதை அறியலாம். இந்நூல், மூன்றாவது சுவாம் என்னும் போர்த்துக்கல்

மன்னனின் ஆணையின்படி அச்சிடப் பெற்றது. இதி லிருக்கும் செபங்களையும் மந்திரங்களையும் தமிழ்மொழி யில் பெயர்த்தவர்கள், லிஸ்பனில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த மூன்று தமிழர்கள். அவர்களின் பெயர் களை முகவுரையே கூறும் :


வின்சென்தே டி நசரேத், போட்ரு காவல்கோ, தோமஸ் தே குருசு இவர்கள் பெரும்பாலும் முத்துக் குளித் துறையிலிருந்து போர்த்துக்கல் நாட்டுக்கு அழைக்கப் பெற்ற தமிழ் மக்களாக இருக்க வேண்டும். இந்நூலை மேற்பார்த்துத் திருத்தியவர், ஈழ நாட்டிலும் தென் இந்தியாவிலும் கத்தோலிக்க மறையைப் போதித்து வந்த 'சுவாம் டே வில்லா கொண்டே' **(Joam de villa conde)** என்பவர். இவர் தமிழ் இலக்கியத்தைப் பொதுவாய் அறிந்தவர் என்பதற்குக் கோட்டையில் (இலங்கை) புவனேகவாகு என்னும் மன்னன் முன்னிலையில் நிகழ்த்திய சொற்பொழிவொன் றில் திருக்குறளை மேற்கோளாகக் காட்டித் திருவள்ளுவ ரின் வரலாற்றைச் சிறிது கூறியிருப்பதே சான்றாகும். லிஸ்பன் மாநகரில் அச்சிடப்பெற்ற இந்நூல் ஐரோப்பா விலும் புகழ் பெறுதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இந்நூலில் இருநிறங்களைக் கையாண்டிருக்கின்றனர். சிறிந்துவ செபங்களையும் கொள்கைகளையும் தமிழ் மொழியில் பருத்த எழுத்துக்களில் அச்சிட்டு, அவற்றி னிடையே போர்த்துக்கீச மொழியிலும் அதே செபங் களையும் பிறவற்றையும் அச்சிட்டிருக்கின்றனர். மேலும் தமிழ்ச் செபங்களின் மொழிபெயர்ப்பை ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே போர்த்துக்கீச மொழியில் செந் நிறத்தில் அச்சிட்டிருக்கின்றனர் (படம்-2). இவ்வாறு கற்பிக்கும் புது முறைகளையும், இரு நிறங்களையும், திறமையான எழுத்துக்களையும் கொண்ட நூலை ஐரோப்பிய அச்சக வரலாற்றிலேயே காண்பது அரிது. லிஸ்பனுக்கு அண்மையிலுள்ள பொருட்காட்சி நிலையத் தில் காப்பாற்றி வரப்பெறும் இத்தனிப்படி, 'ஏவோர' **(Evora)** என்னும் ஊரின் சந்நியாச மடமொன்றில் காப்பாற்றப் பெற்று, அதன்பின் லிஸ்பன் மாநகர் நூற் கூடமொன்றின் தலைவரிடம் சேர்ந்தது. 1909-ம் ஆண்டு எவ்வாறோ எழுத்தறிவற்ற ஒருவரிடம் இதைக் கண்டதும் பொருட்காட்சி நிலையத் தலைவர் இதனை விலைக்கு வாங்கித் தம் நிலையத்தில் வைத்தார். 1948-ம் ஆண்டு போர்த்துக்கல்லின் அச்சுக் கலை பற்றி நூலெழுத விரும்பிய அறிஞர் ஒருவர், இத்தகைய நூல் ஒன்று போர்த்துக்கல்லில் அச்சிடப் பெற்றதாயினும் அதனை எவரும் கண்டிலர் எனத் தேடும் வேளையில், அரிய நூல் ஒன்று பொருட்காட்சிச் சாலையில் இருப்பதாக அறிந்து அதனைக் கண்டதும் பண்டை வரலாற்று அறிஞர் கூறியது இந்நூலேயாகும் என்றுதுணிபு கொண்டார். 1954-ம் ஆண்டு லிஸ்ப னுக்குச் சென்றபொழுது அதனைப் பார்வையிடச் சென்றேன். அப் பொழுது நிழற் படம் எதுவும் அந் நூலின் திறமை யைக் காட்டும் வன்மையற்றதுஎன் பதையும் உணர்ந் தேன். மிகவும் அழ காக அச்சிடப் பெற்ற இந்நூல் 38 பக்கங்கள் அடங் கியதாகக் கத்தோ லிக்க சமயத்தின் செபங்களையும் கோட்பாடுகளையும் கற்பனைகளையும் கொண்டுள்ளது. மேலும் நான்காம் பக்கத்தில் தமிழ் மொழியை உரோ மைய எழுத்துக்கள் மூலமாக உச்சரிக் கும் பான்மையைத் தெளிவாக எடுத் துக் கூறியுள்ளது.



படம் 2. உரோமைய எழுத்துக்களில் தமிழ் ஒலிவடிவைக் காட்டும் படம்.

இந்திய நாட்டில் முதல் அச்சக்கண்ட தமிழ் நூல் 1577-ம் ஆண்டு கொல்லத் தில் அச்சிடப் பெற் றுள்ளது. இந்நூல் 16 பக்கங்கள் அடங்கிய "தம்பி ரான் வணக்கம்" என்னும் தலைப்புப் பெற்றதாகும். இந்நூலொன்று 1579-ம் ஆண்டு உரோமை மாநகருக்கு அனுப்பப் பெற்றது. அதன்பின் 18-ம் நூற்றாண்டில் ஆஸ்திரியா நாட்டின் நூற்கூட மொன்றில் அப் படி காணப்பட்டது. அந் நூற்கூடத் தின் நூல்கள் விற்கப் பெற்றதும், ஆங்கில நாட்டி லும் அமெரிக்காவிலும் அரிய நூல் விற்பனையாள ரிடம் காணப் பெற்றது. இது 1951-ம் ஆண்டு அமெரிக்காவின் **(Harvard)** ஹாவட் பல்கலைக் கழக நூற்கூடத்தாரால் விலைக்கு வாங்கி, அந் நூற்கூடத் தில் காப்பாற்றப்பெற்று வருகின்றது. 1952-ம் ஆண்டு என்னிடமிருந்த அரிய நூலொன்றை ஹாவட் பல்கலைக் கழகத்தார் நிழற்படம் எடுக்க விரும்பியபோது, கைம் மாறாக இந்நூலின் நிழற்படங்களை எனக்கு அனுப்பு மாறு கேட்டேன். அவர்கள் அனுப்பிய நிழற்படத்தி லிருந்து இந்நூல் 16 பக்கங்கள் அடங்கியதென்றும், கத்தோலிக்க மறையின் செபங்களைக் கொண்டதென்றும் உணர்ந்தேன். இந்நூலை இயற்றியவர்கள், போர்த்துக் கல் நாட்டைச் சேர்ந்த சுவாமி என் றிக்கஸ் என்பவரும், தமிழ் நாட்டைச் சேர்ந்த சுவாமி மனுவேல் என்பவரு மாவர். இந்நூல் பிரான்சிஸ் சவேரி யார் தமிழில் மொழிபெயர்த்த செபங்





படம் 3. 1579 ஆம் ஆண்டு கொச்சியில் அச்சிடப் பெற்ற நூலின் ஒரு பக்கம்

களின் அடிப்படையாக எழுந்த நூல் என்று கூறுவதற்குச் சான்றுகள் பல உள.

இந்நூலில் உள்ள செபங்களையும் கோட்பாடுகளையும் இன்னும் விரிவாக எழுதி 112 பக்கங்கள் அடங்கிய நூலாக **"கிரீசித்தியானி வணக்கம்"** என்னும் பெயருடன் கொச்சியில் 1579-ம் ஆண்டு அச்சிட்டனர். இந்நூலின் ஒரு படி 1928-ம் ஆண்டு பாரிஸ் மாநகர்ப் பல்கலைக் கழகத்தில் காணப் பெற்றது. ஆனால் இப்பொழுது அந்நூல் அங்கு இல்லை. பெரும்பாலும் இரண்டாம் பெரும் போர் நிகழ்ந்த காலை இந்நூல் தவறியிருக்க வேண்டுமென்று நினைப்பதற்கு இடமுண்டு. ஆயினும் 1929-ம் ஆண்டின்முன் எடுத்த நிழற்படத்தின் பிரதி என்னிடமிருந்ததால் இந்நூல் காப்பாற்றப் பெற்றதெனலாம். இப்பிரதியைத் தூத்துக்குடி மேற்றிராணியாராகிய ரோச் ஆண்டவர் எனக்குக் கொடுத்திருந்தனர். இப் படியிலிருந்து பல நிழற்படப் பிரதிகளை அறிஞர்கள் எடுத்துக் கொண்டார்கள். இந்நூலின் இரு பிரதிகளைப் பாதிரியார் ஒருவர் 1732-ம் ஆண்டில் புலிக்காட்டிலும், தரங்கம்பாடியிலும் கண்டதாகக் கூறியிருக்கின்றனர். இந்நூல் மிக அழகாகவும் தெளிவாகவும் அச்சிடப் பெற்றுள்ளது. (படம் 3)

1954-ம் ஆண்டு உரோமை மாநகரில் தங்கிய சில நாட்களில் வத்திக்கான் நூற்கூடத்துக்குச் சென்று அங்குள்ள சில பழைய நூல்களைத் தேடினேன். வத்திக்கான் நூற்கூடத் துணைத் தலைவர், நூற்கூடத்திலுள்ள சில ஏட்டுச்சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் நான் கேட்டதன்படி எனக்குக் காட்டினார். அவற்றைப் பார்வையிடும்பொழுது இஸ்பானிய மொழியில் கையால் எழுதிய முகவுரையுள்ள பருத்த தமிழ் நூலொன்றும் தோன்றியது. இதுவே பலரால் போற்றப் பெற்ற "பிலசந்தோரும்" (Flos sanctorum) எனும் நூலென்று உணர்ந்தேன். அதன் பிரதியை அறிஞர் எவராயினும் சென்ற நூறு இருநூறு ஆண்டுகளில் கண்டதாகக் குறிப்பிட்டிலர். இதனைப் பற்றி வெவ்வேறு முரண்தரும் கூற்றுக்கள் பண்டை நூல்களில் இருந்தன. இப் பிரதியில் இருந்து 1586-ம் ஆண்டு இந்நூலை அச்சிட்டனர் என்றும், இதன் நூலாசிரியர் என்றி என்றிக்கஸ் பாதிரியார் என்றும் புலனாகியது. இந்நூல் 666 பக்கங்கள் கொண்டது. (படம் 4) தென்னிந்திய தமிழ் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது. ஒவ்வொரு திங்களும் கத்தோலிக்க வழிபாட்டில் போற்றப் பெறும் திருத்தொண்டர் வரலாறும், கிறிஸ்துநாதரின் வரலாறும் இந்நூலில் கூறப் பெற்றுள்ளன. அக்காலத்தில் 666 பக்கங்கள் அடங்கிய நூலொன்றினைப் பதிப்பிப்பது எத்துணை பெரும் வேலையாக இருந்திருக்க வேண்டும்! இந்நூலைப் பெரும்பாலும் புன்னைக் காயலில் அச்சிட்டிருக்க வேண்டும். இப்பிரதியில் தமிழ் முகவுரையைக் கொண்ட பக்கங்கள் இல்லாததால் இதனை எங்கு அச்சிட்டனர் என்று வரையறுத்துக் கூறுதற்கும் போதிய சான்றுகள் இல்லாமற் போய்விட்டது.


பதினாறும் நூற்றாண்டில் அச்சிடப் பெற்ற தமிழ் நூல்கள் இவை நான்கையும் பற்றி நாம் இன்று அறிந்துள்ளோம். இன்னும் பல நூல்களும் மேலே குறிப்பிட்ட நூல்களின் பிறபதிப்புக்களும் பதினாறும் நூற்றாண்டிலேயே அச்சிடப்பெற்றன என்பதற்குச் சான்றுகளுள. அப்பிரதிகள் எதிர்பாராத காலத்திலும் எதிர்பாராத இடங்களிலும் எதிர்காலத்தில் தோன்றில் அதைப் பார்த்து நாம் வியக்க வேண்டியதில்லை.

சமய இலக்கியத்தை வளம்படச் செய்ய வேண்டுமென்று இந்நூற்றாண்டில் உழைத்த பெரியார் என்றி என்றிக்கஸ் போர்த்துக்கல் நாட்டில் பிறந்து, குயிம்பிரு பல்கலைக் கழகத்தில் சட்டத் துறையில் கல்வி பயின்று 1554இல் தமிழ் நாட்டுக்கு வந்தவர். இரவும் பகலும் தாம் தமிழைக் கற்று வந்ததாகத் தம் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் கூறி யிருக்கிறார். பரந்த மனப்

படம் 4. 666 பக்கங்கள் கொண்ட நூலின் ஒரு பக்கம்



பான்மை உடையவராதலால் ஏனைய சமய மக்களுடனும் நல்லுறவு பூண்டு தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்தார். இந்து சமய யோகிகளுடனும் பிராமணக் குருக்களுடனும் பல வேளைகளில் உரையாடினர். இவருடைய தமிழ்க் கல்விக்கு உறுதுணையாய் இருந்தவர் பேதுருதுரையில் எனப் புதுப்பெயர் பூண்ட அந்தணராவார். பேதுரு துரையிசே முதற் கத்தோலிக்க குருவாகிய பிராமணக் குலத்தவராவர். என்றிக்கஸ் பாதிரியார் தமிழைக் கற்கும் பொழுது தாமறிந்த இலத்தீன் மொழி இலக்கணத்தைத் தழுவியே கற்று வந்தார். தம்முடைய நூல்களில் இந்தியக் கலைகளுக்கு ஒப்பக் கிறிஸ்துவ சமயத்தை விளக்க ஒருவாறு முயன்றார். கல்வியில் ஈடுபாடு உடையவராதலால் **தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றினை நிறுவ வேண்டுமென்று பல முயற்சிகளை எடுத்தார்.** புன்னைக் காயலில் இத்தகைய பல்கலைக் கழகம் சில ஆண்டுகளாக நிறுவப் பெற்றிருந்ததற்குச் சான்றுகள் உண்டு.



கோவையில் வார்த்த எழுத்துக்களும் கொல்லத்தில் வார்த்த எழுத்துக்களும்.

இவர் ஈழ நாட்டிலுள்ள மன்னாரிலும் சில ஆண்டுகளாக வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் வடுகரால் பாதிக்கப்பெற்ற பரதகுலமக்கள் பலர் இவர் தலைமையில் மன்னார்த் தீவில் குடியேறினர். இவர் எழுதிய நூல்களில் சில கையெழுத்துப் பிரதிகளாக ஐரோப்பிய நூற்கூடங்களிலுள. தமிழ் இலக்கணத்தைப் போர்த்துக்கீச மொழியிலும், போர்த்துக்கீச தமிழ் அகரவரிசை ஒன்றையும் தாம் திருத்தி அமைப்பதாகக் கடிதங்களில் கூறுகின்றார். இவருடைய தமிழ் இலக்கண நூலின் கையெழுத்துப் பிரதிகளை நான் லிஸ்பனிலும், லண்டனிலும் கண்டிருக்கிறேன்.


இந்த நூல்களை அச்சிடுவதற்கு அச்சு வார்த்து, அச்சுக்கூடத்தை நிறுவியவரும் இயேசு சபையைச் சேர்ந்த துறவி ஒருவரே. இவர் போர்த்துக்கல்லில் இருக்கும் பொழுதே அச்சுப் பொறிகளைப் பற்றி அறிந்தவரென்றும், இங்கு தமிழ்நாடு போந்ததும் தம் அநுபவத்தைப் பயன்படுத்தி அச்சகத்தை நிறுவினரென்றும் அச்சிடப்பெற்ற நூலொன்றின் முகவுரையிலிருந்து அறியக் கிடக்கின்றது. இந்நூல்கள் கொல்லத்திலும், கொச்சியிலும், புன்னைக் காயலிலும் அச்சிடப் பெற்றதாகக் கூறுகின்றன. இவ்விடங்களில் வெவ்வேறு அச்சகங்கள் இருந்தனவோ அல்லது ஒரே அச்சகத்தை முதலில் கொல்லத்திலும் பின்னர் கொச்சியிலும் அதன் பி.ப புன்னைக்காயலிலும் அமைத்தனரோ நாம் அறியேடம். ஆயினும் தமிழ் அச்சுக்களை முதலில் கோவையில் 1576-ம் ஆண்டு வார்த்தனர். அதன்பின் அடுத்த ஆண்டில் கொல்லத்தில் அச்சுக்களை வார்த்தனர். இவ்விரு அச்சு வகைகளின் வடிவங்களைப் படத்தில் காண்க. கோவையில் செய்த தமிழ் அச்சுக்கள் அத்துணை சிறந்தவையாய் இராததால் புதிதாகக் கொல்லத்தில் அவற்றை அமைத்தனர். இந்நூல்களின் அச்சுக்களை ஆராயும் பொழுது, தமிழ் அச்சுக்களின் வரிவடிவு அக்காலத்தில் எப்பான்மையதாய் இருந்திருக்க வேண்டுமென்று அறிகிறோம். அக்காலக் கல்வெட்டுகளுடனும், செப்புத் தகடுகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இவற்றின் வடிவம் உறுதியாகவும் அழகாகவும் இருப்பதைக் காண்கிறோம். இரட்டைக் கொம்பும், காலும், முற்றுப் புள்ளியும் இல்லாத அக்காலத்தில் "அ" "இ" "ற" முதலிய எழுத்துக்களும் இக்கால வரிவடிவங்களை அடைந்திருக்கவில்லை.



"என்ன பின்னவாள்! நரகாசுரனை வதம் பண்ணினாக்களோ என்னவோ எனக்குத் தெரியாது. எல்லோரும் என்னை வதம் பண்ணித் தீபாவளியை நன்றாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறேங்க!"


வைப்புக் கோட்டையில் அச்சிடப்பெற்ற ஒரு நூல் ஒன்றை நான் பார்த்திருக்கிறேன். 1679-ம் ஆண்டு இன்னசி ஆச்சிமணி என்னும் சேரநாட்டவருடைய மேற்பார்வையில் தமிழ் - போர்த்துக்கீஸ், போர்த்துக்கீஸ்—தமிழ் அகரவரிசை ஒன்றினை புரோயென்சா என்னும் குருக்கள் யாத்து அச்சிட்டனர். இதன் கையெழுத்துப் பிரதிகள் பல பாரீஸ் தேசிய நூற்கூடத்தில் உள. ஆனால் அச்சிடப் பெற்ற பிரதியொன்று வத்திக்கான் நகர் நூற்கூடத்திலுண்டு.

பதினாறும் நூற்றாண்டில் இங்கு கூறிய நூல்கள் தவிர, இன்னும் சில நூல்கள் அச்சிடப் பெற்றன. நம் ஆராய்ச்சியாளர் மேல் நாடுகளுக்குச் செல்லும்பொழுது இத்தகைய பண்டை நூல்கள் இருக்கின்றனவோ என்று தேடி ஆராய்வாராயின், இன்னும் சில தமிழ் நூல்களைப் பற்றியும் நாம் அறிய வருதல் கூடும்.



Modern Motorists.....
FOR YOUR REQUIREMENTS IN SPARE PARTS
PLEASE CONTACT
THE MODERN AUTOMOBILES
4/17-A, MOUNT ROAD, MADRAS - 2
Telephone : 86765 - Post Box 322 - Telegrams : MOBILE
★
Direct Importers of Spares and Accessories for all
POPULAR CARS AND TRUCKS
Also for TATA MERCEDES BENZ TRUCKS
Major stockists of FORD GENUINE SPARES


கன்னிமாரம்மன்
ரா. ஆறுமுகம்



"என்னப்பா, பூவுலிங்கம்! இப்ப வரவர நீ ஏன் நம்ம தோட்டங்களைக் கவனிக்கிறதில்லை?" என்று கேட்டுக் கொண்டே முன்னால் நடந்து சென்றான் சங்கரமூர்த்தி.

"என்னங்க சாமி! இப்படிச் சொல்றீங்க? அதைவிட எனக்கு என்ன வேலே? தினமும் விடியற் காலையிலே வீட்டைவிட்டு வர்றவன், சாயங்காலம் தானே திரும்புவேன். பகல் முழுக்கத் தோட்டத்திலேயேதான் குடியாயிருக்கேன்" என்று பணிவாகச் சொன்னான் அவன் பின்னால் மிகுந்த பணிவுடன் வந்து கொண்டிருந்த பூவுலிங்கம்.

"அதெல்லாம் சரிதானப்பா. போன மாதமெல்லாம் ஒரு நாளைக்குப் பத்துக் கூடை பூ ரயிலிலே அனுப்பினோம். இந்த மாதம் ஒரு நாளைக்கு ஆறு கூடை புஷ்பம் கூட அனுப்பலே முடியலே. இதற்குக் காரணம்?" என்று மேலும் கேட்டான் சங்கரமூர்த்தி.

"எப்பவுமே, வருஷத்திலே ஐப்பசி முதல் தை வரைக்கும் தான் நிறையப் பூக்குங்க. ஏன்னு அந்த மாசங்களிலே நல்ல மழையும் பனியும் இருக்கும். வெய்யில் அவ்வளவு கடுமையாக இருக்காது. தண்ணீரும் அதிகமாக இறைக்கவிட வேண்டாம். அது மட்டுமில்லீங்க. செடிகளிலே முதல்லே பூக்கும் காலமும் அதுதானுங்களே?" என்று விளக்கினான் தோட்டக்காரப் பூவுலிங்கம்.

"அது எனக்கும் தெரியுமப்பா. நீ இதை உன் அனுபவத்திலேயிருந்து சொல்றே. நானோ இதுக்காக எவ்வளவோ படித்திருக்கிறேன். இந்த அந்த வருஷத்திலே அனுபவ' மூலமாகவும் பார்த்து வர்றேன். மேலும் நம் தோட்டங்களுக்கு எப்பவாவது தண்ணீர்த் தட்டு ஏற்பட்டதுண்டா? வெளத்திலே சமுத்திரம் போல் கிடக்கு. இறைக்க வேண்டிய கஷ்டமும் உனக்கில்லே. ஒரு பித்தானே அழுத்தினால் தண்ணி 'குபுகுபு'ன்னு கொட்டுது."

"அப்படின்னு நான்தான் கவனிக்க வேண்டுன்னு சொல்றீங்களா ஐயா? இதுவரை என் மனசு அறிஞ்சு நான் பூச்செடிகளை வாட விட்டதில்லீங்க" என்று மறுபடியும் அடக்கமாகவே பதில் சொன்னான் தோட்டக்காரப் பூவுலிங்கம்.

அவர்கள் இருவரும் தோட்டத்தின் எல்லைக்கு வந்து விட்டார்கள். தோட்டம் மலையடிவாரத்திலிருந்தது. சுமார் பத்து ஏக்கர் பரப்புள்ள அதில் பலவிதப் பூக்களும் பயிர் செய்யப்பட்டிருந்தன. செவந்தி, மல்லி, அடுக்குமல்லி, வாடாமல்லி, ரோஜா, சம்பங்கி முதலிய நறுமணம் கமழும் மலர்களும், நந்தியாவட்டை, அரளி, தங்கஅரளி, கொன்றை, சரக் கொன்றை ஆகிய சாதாரண வாசமற்ற மலர்களும்; மருக்கு, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியனவும் பாத்தி பாத்தியாகக் காட்சியளித்தன. மலையடிவாரத்தையொட்டி மரங்கள் அடர்த்தியாக இருந்த இடத்தில் இரண்டொரு மனோரஞ்சித மரங்களும் ஓங்கி வளர்ந்து நின்றன. பாத்திகளில் தண்ணீர் பதனில்லாமல் காய்ந்திருப்பதைச் சுட்டிக் காட்டிய சங்கரமூர்த்தி, "இப்படி என்றைக்காவது நீ காய விட்டதுண்டா? கேற்று தண்ணீர் பாய்ச்சியிருந்தால் இவ்விதமிருக்குமா? தண்ணீரைக் கண்டு நாளாகி நாட்களாவது இருக்கும் போலிருக்கிறதே! இதுக்கு என்னப்பா சொல்லுறே, பூவுலிங்கம்?" என்று கேட்டான்.

வேலைக்காரன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவர்கள் இருவரும் ஒவ்வொரு வரப்பாகத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார்கள். தன் மேல் குற்றம் இருப்பதை ஒப்புக் கொள்ளும் பாவனையில் பூவுலிங்கம் மௌனமாகவே எஜமானனின் பின்சென்றான். பத்து ஏக்கரையும் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு மரநிழலுக்கு வந்து மேல் துண்டைப் புல்தரையில் விரித்து உட்கார்ந்தான் சங்கரமூர்த்தி.

வழக்கமாக அதிகாலையில் பூப்பறிக்க வரும் பெண்கள் சுமார் இருபது பேர்கள் சுற்று வட்டாரக் கிராமங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள். எப்போதுமே பூவுலிங்கம்தான் காலை நேரத்தில் அங்கு இருப்பான். ஆனால் அன்று தோட்டத்து எஜமானரும் வந்திருப்பதைக் கண்ட கிராமப் பெண்கள் மரியாதையாக ஒரு புறம் ஒதுங்கி நின்றார்கள். சங்கரமூர்த்தி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். ஒரு பெண் மெதுவாகப் பூவுலிங்கத்திடம் வந்து, "என்னப்பா, நீயும் வாய் பேசாமல் நிக்குறே? நாங்க போய் வேலையை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டாள்.

"இரு. இரு. ஐயா என்ன சொல்றாங்களோ, கேட்டுக்கிட்டுச் செய்வோம்" என்றான் பூவுலிங்கம்.


அவர்கள் பேசிக் கொண்டது இலேசாகச் சங்கரமூர்த்தியின் காதில் விழுந்தது. "இந்தாப்பா பூவுலிங்கம், செடிகளிலே மலர்ந்திருக்கிற பூக்கள் அத்தனையும் ஒண்ணுவிடாம பறிக்கச் சொல்லு. இன்றைக்கு எப்படியும் எட்டுக் கூடை பூக்களாவது அனுப்பியாகணும். தஞ்சாவூரிலே நாளைக்குப் பூப்பல்லக்காம். அதுக்கே நாலு கூடை வேணுமின்னு கடிதம் வந்திருக்கு. அப்புறம் சென்னைக்கு வேறே அனுப்பியாகணும்" என்று கட்டளையிட்டான் சங்கரமூர்த்தி.

உடனே பூவுலிங்கமும் அந்தப் பெண்களைப் பார்த்துக் கைஜாடை காட்டினான். அவர்களனைவரும் பக்கத்துக் குடிசையில் வைக்கப்பட்டிருந்த கூடைகளை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு தோட்டத்துக்குள் இறங்கினார்கள். பூப்பறிப்பதையே தொழிலாகக் கொண்ட அப்பெண்களின் கைகள் மளமளவென்று இயந்திரம் போல் வேலையில் ஈடுபட்டன. நிரம்பிய கூடைகளை மரத்து நிழலில் கொண்டு போய் வைத்து விட்டுப் புதுக் கூடைகளை எடுத்துக் கொண்டார்கள்.

சங்கரமூர்த்தி மரத்து நிழலில் உட்கார்ந்தபடியே அவர்கள் செய்யும் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான். பூவுலிங்கம் பூப்பறிக்கும் அப்பெண்களைச் சுற்றிச் சுற்றி வந்து செடியின் தண்டுகளை ஒடித்து விடாதபடியும் பூக்களைக் காம்பு விட்டுக் கிள்ளும்படியும் எச்சரித்து மேற்பார்வை செய்து வந்தான்.

* * *

சங்கரமூர்த்திக்குச் சொந்தமான அந்தத் தோட்டங்கள், ஐந்து வருடங்களுக்கு முன்பு நெல்விளையும் வயல்களாக இருந்தன. அப்போதெல்லாம் அவனுடைய தந்தை அவைகளைமேற்பார்வை பார்த்து வந்தார். அவன் விவசாயக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். படிப்பு முடிந்து பட்டம் பெற்று வந்ததும் அவனுக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டு



மென்று அவன் தந்தை முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் திடீரென்று அவர் காலமாகி விட்டார். கல்யாணமும் நின்று விட்டது. விவசாயக் கல்லூரியில் அவன் படித்துக் கொண்டிருந்தபோதே, தன் தகப்பனாரிடம் சொல்லி அவரது நிலங்களில் ஒரு சிறு பகுதியிலாவது பூக்களைப் பயிர் செய்து பரீட்சை பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. பூக்களின் பேரில் அவனுக்கு அவ்வளவு பிரியம். அதற்குக் காரணம் அவைகளின் பல வர்ணங்கள்தான்.

விவசாயப் படிப்புப் பகுதியில் புஷ்பங்களைப் பற்றித் தனியாக உள்ள பல ஆராய்ச்சிகளையும் அவன் செய்து வெற்றி கண்டிருந்தான். எனவே அவன் படிப்பு முடிந்து வந்ததும், அவன் தகப்பனார் இறந்ததும், அவன் எண்ணத்தை நிறைவேற்ற ஒரு நல்ல வாய்ப்பையளித்தது. பழனியை அடுத்துள்ள மேற்குத்தொடர் மலையடிவாரத்தில்தான் அவனுடைய நிலங்கள் இருந்தன. நெல் வயல்களையெல்லாம் உடனே பூந்தோட்டமாக மாற்ற ஏற்பாடு செய்துவிட்டான். பல இடங்களிலிருந்தும் பற்பல விதமான பூ விதைகளையும், செடிகளையும், கொடிகளையும் வரவழைத்தான். தன் வீட்டிலேயே பல வருடங்களாகப் பயிர்த் தொழில் செய்து வந்த பூவுலிங்கத்துக்கும் உற்சாகமூட்டி அவன் சம்பளத்தையும் உயர்த்தி, பூச்செடிகளில் அவனுக்கும் பிரியம் ஏற்படப் போதித்தான். அவனும் தன் எஜமானன் பிரியப்படி செய்து காட்ட ஒப்புக் கொண்டான். ஒரு வருஷத்தில் பத்து ஏக்கர் நெல் வயல்களும் பூந்தோட்டங்களாக மாறி விட்டன.

விதம் விதமான, புது தினுசான பூக்கள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்ட பூ வியாபாரிகள் பல ஊர்களிலிருந்து அவனைத் தேடி வந்து முன்பணம் கொடுத்துத் தங்களுக்குத் தேவையான அளவை அன்றாடம் ரயிலில் அனுப்பி வைக்கும்படி சொல்லிச் சென்றார்கள். அதன்படியே அவனும் நாள் தவறாமல் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், சென்னை ஆகிய இடங்களுக்குக் கூடை கூடையாக அனுப்பி வந்தான். முதல் வருஷம் கணக்குப் பார்த்ததில் நெல் விளைச்சலில் வரும் வரும்படியைவிட நான்கு மடங்கு அதிகமாக இருந்தது.

பூவுலிங்கமும் இளைஞன். கல்யாணமாகாதவன். வீட்டில் வயது சென்ற தாயார் மட்டும் இருந்தாள். அவன் மாதா மாதம் கொண்டு போய்க் கொடுக்கும் சம்பளத்தை வைத்துக் கொண்டு அவர்கள் இருவரும் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அதிகாலையில் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே ஒரு பாத்திரத்தில் பழைய சாதம் எடுத்துக் கொண்டு புறப்படுகிறவன் இரவில்தான் வீடு திரும்புவான். பொதுவாக அந்தப் பூந்தோட்டமிருந்த சுற்று வட்டாரக் கிராமங்களில் இருந்த ஜனங்கள் அதைப் பூவுலிங்கம் பூந்தோட்டம் என்றுதான் சொல்லி வந்தார்கள். ஏனென்றால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் பூ வேண்டியவர்கள் நேரே அந்த இடத்துக்குப் போய் வாங்கி வருவார்கள். அப்போதெல்லாம் அவர்கள் அங்கே பூவுலிங்கத்தைத்தான் பார்த்தார்கள். எஜமானன் சங்கரமூர்த்தியைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? அவன் வாரத்துக்கு ஒரு முறை வந்து தோட்டங்களைச் சுற்றிப் பார்த்து விட்டுப் போய் விடுவான்.

தோட்டத்தில் பெண்கள் எடுத்துக் குவிக்கும் பூக்களையெல்லாம் ரகம் வாரியாகப் பிரித்துக் கூடைகளில் போட்டுக் கட்டி மாட்டு வண்டியில் ஏற்றி அனுப்பும் வேலை பூவுலிங்கத்தைச் சேர்ந்தது. மாட்டு வண்டி ரயில்வே ஸ்டேஷன் வந்ததும் வேலையாட்கள் கூடைகளை இறக்கி வைப்பார்கள். எந்தெந்த ஊருக்கு எத்தனை கூடைகள் செல்ல வேண்டும் என்று பிரித்து விலாசமிட்டு ரயிலில் ஏற்றி அனுப்புவது சங்கரமூர்த்தியைச் சேர்ந்தது. ஐந்து வருஷங்களாக இப்படியே நடந்து வந்தது. பூவைப் பெற்றுக் கொண்ட வியாபாரிகளும் அது வரையில் குறை ஏதும் சொல்லவில்லை. ஆனால் சமீபத்தில் சில வியாபாரிகள் பூவின் தரம் முன் போல இல்லை யென்றும், வாசமும் குறைந்து விட்டது என்றும் அவர்களுக்குத் தேவையான அளவு வருவதில்லை யென்றும் கடிதம் எழுதியிருந்தார்கள். அதற்குப் பின்தான் சங்கரமூர்த்தி அதைப் பற்றிச் சற்றுத் தீவிரமாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

* * *

ரயிலுக்கு அனுப்ப வேண்டிய கூடைகளில் பூக்களைக் கொட்டி மர நிழலில் வரிசையாக வைத்தான் பூவுலிங்கம். சங்கரமூர்த்தி அவைகளை எண்ணிப்பார்த்தான். பத்துக் கூடைகள் இருந்தன. அதற்குள் மாட்டு வண்டியும் வந்து விட்டது. மள மளவென்று கூடைகளுக்கு மேல்மூடி போட்டுத் தைத்துக் கட்டி வண்டியில் ஏற்றி விட்டான் பூவுலிங்கம். அந்த வண்டியிலேயே சங்கரமூர்த்தியின் வீட்டிலிருந்து அவனுக்கு வேண்டிய காலை ஆகாரம் வந்திருந்தது.

''பூவுலிங்கம்! ரயிலுக்கு நேரமாகி விட்டது. நான் இந்த வண்டியிலேயே போய் விடுகிறேன். நீ அந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொள். இன்றைக்கு எல்லா இடமும் தண்ணீர் பாயவேணும். இந்தப் பெண்களையும் உன் உதவிக்கு வைத்துக்கொண்டு, தண்ணீர் பாயும் போதே ஒவ்வொரு செடியின் தூரிலும் நன்றாய் மண்ணை அணைக்கச் சொல்லு. மேலும், தோட்டத்துக்கு உரம்போட்டு ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. நாளை முதல், தினமும் நாலு வண்டி உரம் அனுப்புகிறேன். அதைத் தினமும், இப்பெண்களைக் கொண்டே ஒவ்வொரு தோட்டத்துக்கும் பரப்பிவிடச் செய்யணும். இந்த வேலைகளுக்கெல்லாம் அவுங்களுக்குத் தனியாகப் பணம் கொடுத்திடலாம். கவனமாய்ப் பார்...'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டான் சங்கரமூர்த்தி.

பெண்களெல்லாம் பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த சிறு ஓடையில் இறங்கிக் கை கால்களைச் சுத்தம் செய்து விட்டு அன்றையக் கூலியைப் பெறுவதற்காக வந்து நின்றார்கள்.

''இன்றைக்கு நீங்க சீக்கிரம் வீட்டுக்குப் போக முடியாது. நான் பம்பு விசையைப் போடப் போறேன். தண்ணி பாத்திகளிலே பாயும்போது, நீங்க அங்கங்கே நின்னு ஒவ்வொரு செடியின் தூரிலும் மண்ணை அணைக்கணும், தெரிஞ்சுதா? நாளை முதல் பத்து நாட்களுக்கு தினமும் நாலு வண்டி குப்பை உரம்

வரும். அதையும் கூடைகளிலே அள்ளித் தோட்டம் பூராவும் பரப்பணும். இதுக்கெல்லாம் சேர்த்து உங்களுக்குத் தனியா கூலி கிடைக்கும். இப்பத்தான் எங்க எஜமானர் சொல்லிவிட்டுப் போனாரு...'' என்றான் பூவுலிங்கம்.

''அப்படின்னா சரிதான்! என்னவேலைன்னாலும் செய்யிறோம்!'' என்று சந்தோஷமாகச் சொன்னார்கள் அந்தப் பெண்கள்.

''பாவம்! நீங்க காலையிலிருந்து சாப்பிடவே இல்லே போலிருக்கே? தண்ணி விசையைப் போட்டுட்டுச் சாப்பிடுங்க. நாங்க மற்ற வேலையைப் பார்க்கிறோம்'' என்றாள் இன்னொருத்தி.

''அடியம்மா! அவர் சாப்பிடலேன்னு இந்தக் குட்டி பார்வதிக்கு என்ன கவலை பாத்தியா?'' என்று நடுத்தர வயதுள்ள ஒருத்தி கேலியாகக் கேட்டாள்.

''அவர் சாப்பிடலேங்கிறது இவளுக்கு எப்படித் தெரிஞ்சுது? முகத்தைப் பார்த்தே தெரிஞ்சுக்கிட்டாளோ?'' — இது வேறொருத்தியின் நையாண்டி.

''சரி, சரி. சும்மா பேச்சை வளர்க்காதீங்க. நான் போய் விசையைப் போடுறேன்'' என்று சொல்லிவிட்டுப் பூவுலிங்கம் கிணற்றுப் பக்கமிருந்த மின்சார விசை அறைக்குள் சென்றான்.

''வாங்க, நாமபோய் நம்ம வேலையைப் பார்க்கலாம்'' என்று அந்தப் பெண்களும் உடனே தோட்டத்துக்குள் இறங்கி விட்டார்கள். கேலி செய்யப்பட்ட பார்வதியும் அவர்களோடேயே வேலையில் ஈடுபட்டாள். குழாயிலிருந்து 'குபு குபு'வென்று தண்ணீர் கொட்ட ஆரம்பித்துப் பாத்திகளில் பாய்ந்தது.

''நான் இன்னைக்குச் சொல்றேன் கேளுங்க எல்லாரும். இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே இதே பூவுலிங்கத்தை இந்தப் பார்வதி கட்டிக்கிட்டு நம்மை அதிகாரம் பண்ணி வேலை வாங்குவா பாருங்க. அப்படி நடக்கலேன்னு நான் இந்தக் காதை அறுத்துக்கிறேன்!'' என்று ஒரு பெண் சவால் விட்டாள்.

அதற்கும் பார்வதி அவர்களைத் திரும்பிக்கூடப் பாராமல் வேலையிலேயே கவனமாக இருந்தாள்.

அவர்கள் பேசியதை யெல்லாம் கேட்டுக் கொண்டே, சாப்பிட்டு விட்டு வெளியே வந்த பூவுலிங்கம், ''என்ன! பேச்சுத்தான் மும்முரமாயிருக்கு. வேலை முடியக் காணுமே?'' என்றான்.

''எல்லாம் உங்க விசயமாத்தான், தோட்டக்காரரே, பேசறோம்! பாவம், பார்வதியை ரொம்ப நாள் காக்கவைக்காதீங்க. சட்டுப்புட்டுனு கண்ணாலத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. ஏன்னு, அவளும் தாய் இல்லாதவ. சின்னம்மாகிட்டே சிக்கிக்கிட்டுப் படாதபாடு படுறா...'' என்றாள் மாரியம்மாள், விஷமச் சிரிப்போடு.

''ஏய், மாரி, வாயை மூடுறியா- இல்லையா? நானும் எவ்வளவு நேரமாப் பார்த்துக் கிட்டிருக்கேன்; என்னமோ ஒரேயடியா பேசிக்கிட்டிருக்கயே! உனக்குப் பிரியமாயிருந்தா, நீ வேணுமின்னு இந்தத் தோட்டக்காரரைக் கட்டிக்க. கருகமணி வாங்கக் காசில்லேன்னாலும் நான் தர்றேன்!'' என்றாள் ஆவேசம் வந்தவள் போல பார்வதி.

''அடியம்மால்! ஊமைமாதிரி இருந்த இவள், இப்படிக் காளி மாதிரி ஆகி விட்டாளே?'' என்றாள் மாரி.

''ஆமாமடி, நான் காளிதான்! நீ மாரி! வா, வெளியே, பேசிக்கலாம்'' என்று சவால் விட்டாள் பார்வதி.

''சரி சரி. சண்டை போட்டுக்காதீங்க. வேலையைப் பாருங்க'' என்று மறுபடியும் அதட்டினாள் வயதானவள்.

பார்வதிக்குப் பொறுக்க முடியவில்லை. சட்டென்று தோட்டத்தை விட்டு வெளியேறி, வாய்க்காலில் கை கால்களைக் கழுவிக் கொண்டு 'விர்'ரென்று தன் கிராமத்தை நோக்கி நடந்தாள், ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல்.

பார்வதி சென்ற சற்று நேரம் கழித்து மற்ற பெண்களும் வேலையை முடித்து விட்டு, பூவுலிங்கத்திடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள். அவனும் தோட்டத்தை யெல்லாம் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு, தண்ணீர் நன்றாய்ப் பாய்ந்து விட்டதை அறிந்து 'ஸ்விட்சை' நிறுத்திவிட்டு மனோரஞ்சித மரங்களின் நிழலில் துண்டை விரித்துப் போட்டுப் படுத்தான்.

எவ்வளவு நேரம் தூங்கினானென்று அவனுக்கே தெரியவில்லை. கையில் ஏதோ எறும்பு ஊறுவதுபோல் உணர்ந்தான். கண்களை மூடியபடியே அதைத் துடைத்து விட்டுக் கொண்டான். மறுபடியும் அதே ஊறல்; துடைப்பு. வேறு இடத்தில் போய்ப் படுத்துக் கொள்ளலாமென்று எண்ணிக் கண்களை விழித்துப் பார்த்தான். அவன் கையில் ஊறியது எறும்பு அல்ல. பார்வதி தன் கொண்டையிலிருந்து ஒரு செவந்திப்பூவை எடுத்து அவன் கையில் மேலும் கீழுமாக மெதுவாகத் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்தவன் போல வாரிச்சுருட்டி எழுந்த பூவுலிங்கம், உட்கார்ந்தபடியே, ''பார்வதி! நீ வீட்டுக்குப் போகலையா?'' என்று கேட்டான்.

''உங்ககிட்டே சொல்லாமல் போயிடுவேனா? இவ்வளவு நாள் பழகியிருந்தும் என்னோட குணம் தெரியலையே?''

''அப்படின்னா, அந்தப் பெண்களோடே கோவிச்சுக்கிட்டு 'விர்'ன்னு எங்கே பறந்து போனே?''

''சும்மா, வீட்டுக்குப் போனமாதிரி ஒரு போக்குக் காட்டிட்டு, அப்படியே மலைச்சரிவிலே ஏறி, அந்த ஆற்றிலே குளிச்சிட்டு அப்படியே வர்றேன்.''

''ரொம்ப நல்லதாப் போச்சு...சரி, எழுந்திருக்க வா. மத்ததெல்லாம் அப்புறம் பேசிக்குவோம். முதல்லே நீ வந்து சாப்பிடு!'' என்றான் பூவுலிங்கம்.

''சாப்பிடவா? எனக்கு என்ன விருந்து பண்ணி வைச்சிருக்கீங்களா?'' என்று விளையாட்டாகக் கேட்டுக் கொண்டே அவன் பின்னால் ஒய்யாரமாக எழுந்து சென்றாள் குடிசைக்கு.

''எஜமானருக்கு வந்த பலகாரம், நாம இரண்டு பேரும் தின்னக் கொடுத்து வைச்சிருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே அவளுக்கு எடுத்துக் கொடுத்தான்.

''இதென்ன பாத்திரம் நிறைய அப்படியே இருக்கே! நீங்க சாப்பிடவே இல்லையா? எனக்காக, நீங்களும் பட்டினியா?'' என்று சற்று வருத்தத்தோடு கேட்டாள் பார்வதி.

''இல்லே, பார்வதி! நான் கொண்டு வந்திருந்த பழைய சாதத்தைச் சாப்பிட்டேன். நீ



இந்தமாதிரி உப்புமாவைச் சாப்பிட்டிருக்க மாட்டே. நான் பல தடவைகள் என் எஜமானர் வீட்டில் சாப்பிட்டிருக்கேன். அதனாலே, இதைப் பூராவும் நீயேதான் சாப்பிட வேணும்."

"முடியாது; நீங்களும் நானும் சேர்ந்து சாப்பிடுவோம்! ஏதாவது ஒரு இலை கிள்ளிட்டு வாங்க."

அவள் விருப்பப்படியே அவன் வெளியில் ஓடி வந்து சற்றுத் தூரத்தில் நின்ற வாதா மரத்தில் தாவி இரண்டு மூன்று இலைகளைப் பறித்து வந்தான்.

"ஆமாம், இந்தப் பெண்களுக்கெல்லாம் நம்ம ரகசியம் எப்படி வெளியாச்சு?" என்று சாப்பிட்டுக் கொண்டே கேட்டான் பூவுலிங்கம்.

"பாம்பின்கால் பாம்பறியும். கிராமத்திலே உள்ள பெண்களுக்குச் சொல்லியா கொடுக்கணும்? நீங்க என்னோட இந்த இரண்டு வருஷமாப் பேசி வரும் முறையிலேயிருந்தே யூகிச்சுக்கிட்டாங்க."

"நம்ம கண்ணாலம் நடக்கிறபோது, நடக்கட்டும். அதுவரைக்கும் நீ என்னை விட்டுப் பிரிய மாட்டேன் என்கிறதுக்கு அடையாளமா இப்பொழுது......"

"என்ன செய்யணும்?"

"அதோ மலையடிவாரத்திலே கன்னிமார் கோயிலிருக்கு. அங்கே போய் அந்த அம்மன் முன்னாலே நாம ரெண்டு பேரும் சத்தியம் பண்ணிக்கிட்டு வந்திடுவோம்!"

"ஏன், நான் உங்களை விட்டுட்டு என் அப்பா சொல்றபடி வேறே யாரையும் கட்டிக்கிடுவேனென்னு சந்தேகம் வந்திட்டதோ?"

"ஆமாம். யார் கண்டது? பெண்கள் மனம் அடிக்கடி மாறுமின்னு பெரியவங்க சொல்லுவாங்க. ஒருவேளை நல்ல பணவசதி உள்ள இடம் உனக்குக் கிடைச்சா இந்தத் தோட்டக்காரனை நினைப்பியோ?"

"அப்படி உங்களுக்குச் சந்தேகமாயிருந்தா, இப்பவே புறப்படுங்க கோயிலுக்கு!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து விட்டாள், ஆகாரத்தையும் அவசரமாக முடித்துக் கொண்டு.

"கொஞ்சம் பொறு, பார்வதி! நானும் குளிச்சிட்டு வந்திடறேன். கோயிலுக்குச் சுத்தமாப் போக வேண்டாமா?" என்று கிணற்றை நோக்கி ஓடினான்.

ஈர வேஷ்டியோடு அவன் முன்னால் நடக்க, பார்வதியும் அவன் பின்னால் வேகமாகச் சென்றாள். சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்த கன்னிமார் கோயிலையடைந்த அவர்கள், மூன்று முறை சுற்றி வந்து, அம்மன் முன்னால் நின்றார்கள். பூவுலிங்கம் சுற்றிலும் பார்த்தான். அந்த வனாந்தரப் பகுதியில் யார் வரப் போகிறார்கள்?

"சரி பார்வதி! அம்மன் முன்னாலே நான் சொல்றபடி நீயும் சொல்லு" என்றான். அவளும் தலையசைத்தாள், புன்முறுவல் பொங்கி வழிய.

"கன்னிமாரம்மனே! உன் சந்நிதியிலே இன்றைக்கு நான் சத்தியம் செய்யறேன். இவரைத் தவிர வேறே யாரையும் நான் கண்ணாலம் செய்துக்கிட மாட்டேன்..."

என்று அவன் சொன்னதை அவள் ஒரு முறை திருப்பிச் சொன்னாள்.

அடுத்ததாக, அவளும் அவனைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவனும் "வனதேவதையே! நானும் இவளைத் தவிர வேறே யாரையும் கட்டிக்கிட மாட்டேன்" என்று சத்தியம் செய்தான்.

இருவரும் விழுந்து கும்பிட்டார்கள். எழுந்ததும் அவனது பார்வை, கன்னிமாரம்மனின் பாதத்தில் யாரோ காணிக்கையாகப் போட்டு விட்டுச் சென்றிருந்த ஒரு சரம் **கருகமணியின்**மேல் விழுந்தது! சட்டென்று அதை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, பார்வதியின் வலது கையைப் பிடித்து, முழங்கைக்கு மேல் கட்டி, "பார்வதி! இதுதான் நம்ம சத்தியத்துக்கு அம்மன் குடுத்த அடையாளம். இந்தக் கருகமணியோட, நம்ம கண்ணா



லத்தன்னைக்கு வரும் கருகமணியையும் சேர்த்து உன் கழுத்திலே கட்டிடுவேன். கவலைப்படாதே!" என்று அவள் கன்னத்தில் அன்பாகத் தட்டினான்.

பிறகு பிரிய மனமில்லாமல் பார்வதிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு அவனும், குடிசைப் படலை மூடிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான். இருவரும் பிரியா விடைபெற்றுச் சென்றனர்.

"அப்பா, பூவு, ஒரு நல்ல சேதி?" என்றாள் அவனுடைய தாயார்; அவன் வீட்டினுள் வந்ததுமே.

"என்னம்மா அது?" என்று கேட்டான் மிகுந்த ஆவலோடு.

அவள் பதில் சொல்லாமல் ஒரு தட்டை அவன் முன் கொண்டு வந்து வைத்தாள். அதில் வெற்றிலை பாக்கு, பழம், பூ, மஞ்சள், குங்குமம், கருகமணி முதலியவை இருந்தன.

"இதெல்லாம் என்னம்மா?"

"உன் எஜமானர் யோசனைப்படி, உன் தோட்டத்திலே வேலை பார்க்கிற பார்வதி என்ற பொண்ணோட அப்பனும், சின்னம்மாளும் இங்கே வந்தாங்க. உனக்கு அந்தப் பொண்ணைக் குடுக்க நிச்சயம் பண்ணிட்டாங்களாம். எல்லாம் உன் எஜமானர் வேலைதானாம். கண்ணாலமும் இந்த மாசமே வைச்சுக்கிடணுமின்னு சொல்லிவிட்டுப் போயிருக்கிறாங்க!"

ஆனந்த மிகுதியால் அவனுக்குப் பேச முடியவில்லை. தாயாரிடம் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் நேரே எஜமானர் வீட்டுக்கு ஓடினான்.

"எங்கேப்பா! பூவுலிங்கம் இந்த நேரத்திலே வந்தே? இப்பத்தான் தோட்டத்திலிருந்து வர்றியோ? அங்கே இன்றைக்கு ரொம்ப வேலையோ?" என்று கேட்டான் சங்கரமூர்த்தி தன்னுள் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு.

"ஐயா! என் மனசைத் தெரிஞ்சு, கேட்காமலேயே எல்லாம் செய்து முடிச்சிட்டீங்க. இதுக்கு நான் உங்களுக்கு என்ன செய்யப் போறேன்?" என்று மனம் விட்டுக் கேட்டான்.

"பூவுலிங்கம்! எனக்கு நீ ஒன்னும் செய்ய வேண்டாம், தோட்ட வேலையில் உனக்கு ஏற்பட்ட அசிரத்தைக்குக் காரணத்தைத் தெரிஞ்சு என் கடமையைச் செய்திட்டேன். உன் மனசைக் கொள்ளை கொண்டு எட்ட இருந்த அந்தப் பார்வதியை உன் பக்கத்திலேயே கொண்டாந்து வைக்க ஏற்பாடு பண்ணிட்டேன். இனி, நீயும் அவளும் என் தோட்டங்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து வந்தால் அதுவே போதும். இந்தா, நான் உன் கல்யாணத்துக்குக் கொடுப்பதாகச் சொன்ன பணம்!" என்று ஒரு பையை அவனிடம் கொடுத்தான்.

அதை மகிழ்ச்சியுடன் பூவுலிங்கம் வாங்கிக் கொண்டான். பிறகு தன் கண்களில் ஒற்றிக்கொண்டு, எஜமானருக்குக் கும்பிடு போட்டு விட்டு வீட்டுக்கு விரைந்தான்.

மறுநாள் அதிகாலை பூவுலிங்கம் மலையடிவாரப் பூந்தோட்டத்துக்கு வந்தபோது அவனுக்கு முன்பே பார்வதி வந்து அவனுக்காகக் காத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவனைக் கண்டதும் அவள் ஓடிவந்து தன் முல்லைப் பற்களைக் காட்டி, "இனி என்னை யார் கேலி பண்ண முடியும்? உங்க எஜமானர் ரொம்பக் கெட்டிக்காரர்தான்! அந்தக் குட்டி மாரியம்மாளிடம் ஒரு மாசமா நம்மைப்பற்றி, ரகசியமா எல்லாத்தையும் கேட்டு வந்தாராம். எங்க வீட்டுக்கும் ஆள் அனுப்பி நேத்துத்தான் எல்லாம் பேசி முடிச்சாங்களாம்" என்று குதூகலத்துடன் விளக்கினாள் பார்வதி.


அருகில் மலர்ந்திருந்த ஒரு பெரிய செவ்வந்திப் பூவைச் சட்டெனப் பறித்து அவளுக்குத் தெரியாமல் அவள் கொண்டையில் செருகி மகிழ்ந்தான் பூவுலிங்கம்!


TYRESOLES succeed
again in the International
MONTE CARLO RALLY
1958
MONTE CARLO RALLY
1958-SUCCESS
VOLD JOHANSEN Wins 1st place for Production and modified touring cars upto 1000 c. c. in 1958 Monte carlo Rally in DKW car fitted with
TYRESOLES
Previous TyresoleS successes in Monte carlo Rally :
1953-1st-M. Gatsonides (Ford fitted with TyresoleS)
1955-1st-Captain P. Malling (Sunbeam fitted with TyresoleS)
1956-2nd-W. Schock (Mercedes Benz fitted with TyresoleS)
STANES MOTORS (SOUTH INDIA) LIMITED
TyresoleS Factories at
COIMBATORE, CALCUTTA, VIJAYAWADA, MADRAS, TIRUCHIRAPALLI, KOTTAYAM
AND ASSOCIATE FACTORY AT BANGALORE

ஹம்பி கலைக்கூடம்—5

விஜயநகர சாம்ராஜ்யம் செழிப்புற்று இருந்த காலம். அந்தக் காலத்தில் விஜயநகர மக்கள் எல்லோரும் கோலாகலமாகத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவார்கள். இப்படியெல்லாம் தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் போது அரண்மனையில் மட்டும் கொண்டாடாமல் இருப்பார்களா? அதிலும் அந்தப்புரத்தில் கேட்கவும் வேண்டுமா? அருணோதயத்துக்கு முன்னாலேயே அந்தப்புரத்திலுள்ள பட்டமகிஷிகளும் இளவரசிகளும் தோழிகள் புடைசூழ நீராடும் மண்டபத்துக்கு வந்து குதூகலத்துடன் நீராடும் காட்சியைத்தான் ஓவியர் மணியம் கற்பனைக் கண் கொண்டு பார்த்து எழுதியிருக்கிறார். ராணிகள் குளிக்கும் இந்த அறை இன்றும் ஹம்பியில் இருக்கிறது. அடாடா! எப்பேர்ப்பட்ட இன்ஜினியரிங் சாதனை! துங்கபத்திரா நதியையே இந்தக் குளிக்கும் அறைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். தென்னகம் அந்தக் காலத்திலேயே எல்லாக் கலைகளிலும் ஓங்கிநின்றது என்பதற்கு இது போல் இன்னும் எவ்வளவோ கலைகள் சாட்சி சொல்கின்றன. ராணிகள் அரண்மனையை விட்டு வெளியில் செல்லாமலே துங்கபத்திரா நதியில் மங்கள ஸ்நானம் செய்யும் அற்புதக் காட்சி கண் கொள்ளாக் காட்சிதான்!

கல்கி தீபாவளி மலர்-1958





ராணிகள் தங்குவதற்கென்று அமைக்கப்பட்டுள்ள கமல மண்டபம். இந்த மண்டபத்தின் அமைப்பும், அதைக் கட்டி முடித்திருக்கும் பாணியும் தாமரை மலரைப் போலவே இருக்கின்றன. மண்டபத்தின் உள்பூச்சுகூடத் தாமரை இதழின் நிறத்தைப்போல் இளம் சிவப்புடன் காட்சி தருகிறது. இந்த மண்டபத்துக்கு வலதுபுறத்தில் இருப்பது காவல் மண்டபம். இதில் அமர்ந்து இரவு பகல் இருபத்து நான்குமணி நேரமும் வீரர்கள் காவல் புரிந்து வருவார்கள். அந்தப்புர மண்டபத்திலிருந்து ராணி அரண்மனைக்குச் செல்லும் காட்சியை ஓவியர் மணியம் தம் கற்பனைக் கண்கொண்டு சித்திரித்திருக்கிறார்.

கல்கி தீபாவளி மலர்-1958



விஜயநகர மன்னர்கள் படை பலத்தில் சிறந்தவர்களாக விளங்கினார்கள். அவர்கள் யானைப்படையைக் கண்டு மற்ற மன்னர்கள் எல்லாம் வியந்துபோனார்கள். யானையைப் போர்த்தொழிலுக்கு மட்டும் அவர்கள் உபயோகப்படுத்தவில்லை. வேட்டைக்கு, வேலை செய்வதற்கு, பவனிக்கு, உற்சவத்துக்கு இப்படிப் பல காரியங்களுக்கு யானைகளை உபயோகப்படுத்தி வந்தனர். அதற்காகக் கட்டியிருக்கும் லாயங்கள் கணக்கில் அடங்காது. லாயத்தில் யானைகள் கட்டப்பட்டிருப்பதையும், ராஜபவனிக்குச் செல்லும் யானைகளுக்கு அலங்காரங்கள் செய்வதையும் பார்க்கும்போது விஜயநகர சாம்ராஜ்யமே கண்முன் நிற்கிறதல்லவா.

கல்கி தீபாவளி மலர் - 1958



விஜயநகர மன்னர்கள் விசேஷ தினங்களில் தங்களுடைய எடைக்குச் சமமான செல்வத்தைத் தராசில் எடை போட்டுக் கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் ஏழைகளுக்கும் தர்மம் செய்து வந்தார்கள். அப்படித் தர்மம் செய்த இடம் இது என்று ஹம்பியில் இருக்கும் இந்த இடத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்த இடத்தையும் இதைச் சுற்றிலும் இருக்கும் சிற்பங்களின் அமைப்பையும் பார்த்தால் இது தராசு தொங்கிய இடம் அல்ல; மகாராஜாக்களும், மகாராணிகளும் அமர்ந்து உல்லாசமாகப் பொழுது போக்கும் ஊஞ்சல் இருந்த இடம் என்று ஹம்பியில் தங்கி அங்குள்ள சிற்ப சித்திரங்களையும் சிதைவுற்ற கட்டடங்களையும் ஆராய்ந்த நமது ஓவியர் மணியம் நம்புகிறார். கலைஞர்கள் பார்க்கும் பார்வையே தனி தானே! ஊஞ்சலில் இளவரசிகள் அமர்ந்து ஊஞ்சலாடுவதையும் விஜயநகர சாம்ராஜ்யத்துக்கே உரித்தான கும்மியும் கோலாட்டமும் சுற்றிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்சியையும் பார்க்கும்போது இது சித்திரக்காரர் கற்பனை என்றே எண்ண முடியவில்லை! விஜயநகர அரண்மனை அந்தப்புரப் பளிங்குமாளிகைக்குள்ளேயே சென்றுவிடுகிறோம்.

கல்கி தீபாவளி மலர்-1958





THE INDIA ELECTRIC WORKS LIMITED
CHATNATH BUILDINGS - MOUNT ROAD - MADRAS-2

"சாந்தா! இன்று பிற்பகல் பஸ்ஸில் கும்பகோணம் போகிறேன். அங்கு ஒரு பெரிய ஜவுளிக்கடையில் ஏலம் நடக்கிறதாம். இரு பங்குதாரர்கள் சேர்ந்து நடத்தி வியாபாரம் முறிந்து விட்டது. அதனால் சரக்குகள் மலிவாகக் கிடைக்கும். உனக்கும், குழந்தைகளுக்கும் வேண்டியதைச் சொல்லு. வாங்கிக் கொண்டு வருகிறேன்.''

"எனக்கு யானை வர்ணத்தில் மஞ்சள் கரை போட்ட புடவை வேண்டும். குழந்தை பத்மாவுக்கு அள்ளிச் சொரிந்தது போல் பூக்கள் போட்ட பச்சை சீட்டிப் பாவாடை!''

எல்லாவற்றையும் குறித்துக் கொண்டேன். எனக்குக் கும்பகோணம் கல்லூரியில் சரித்திர ஆசிரியர் வேலை. கும்பகோணத்துக்கு ஆறாவது மைலிலுள்ள வலங்கைமான்தான் சொந்த ஊர். அந்த ஊரில் பெரியவர்கள் வைத்துப் போன வீடு ஒன்று இருந்தது. தினம் டவுனுக்கு பஸ்ஸிலோ, சைக்கிளிலோ போவது வழக்கம். எனக்குச் சின்ன வயதிலேயே கதைகள் எழுதுவதில் விருப்பம் அதிகம். ஆனால் என்னுடைய பெற்றோர்கள் அதையே வயிற்றுப் பிழைப்பாக வைத்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. அது காலை வாரிவிடும் என்று நினைத்தார்கள். என் முதல் கதை சுவரில் அடிக்கப்பட்ட கால் பந்தைப் போல் திரும்பி வராமல் பத்திரிகையில் பிரசுரமாயிற்று. அதனால் உத்சாகமடைந்து அவ்வப்பொழுது சிறந்த கதைகளை எழுதிக் கொண்டிருந்தேன். வாசகர்களிடையே அமோகமான வரவேற்பு இருந்தது. வலங்கைமான் குடமுருட்டி ஆற்று நீரை அள்ளிக் குடித்து வளர்ந்தவர்கள், பிற்காலத்தில் பெரிய மேதைகளாக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையும் உறுதியாக இருந்தது. கப்பூரத்தினம் என்ற என் பெயரைக் கதை வாயிலாக அனைவரும் அறிந்திருந்தனர்.

கும்பகோணத்தில் தேவையான ஜவுளிகளை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டேன். என்னைப் போன்ற சில நண்பர்களும் வாங்கினார்கள். இரவு மணி பத்தாகி விட்டது. கடைத் தெருவில் நிற்கும் கடைசி பஸ் புறப்படத் தயாராக இருந்தது. பஸ்ஸில் மூட்டையுடன் ஏறிக்கொண்டேன். பஸ் இரண்டு தெருக்களைத் தாண்டிக் காவேரிப் பக்கம் திரும்பியது. திடீரென்று பட்டாசு வெடிப்பது போன்ற சத்தம். பஸ் டயர் வெடித்து விட்டது. கண்டக்டர் எல்லோரையும் கீழே இறங்கச் சொன்னார். பிரயாணிகள் பஸ்ஸைச் சுற்றிக் குனிந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் டிரைவர், "விசிறியில் பட்டை போய் விட்டது. பஸ் ரிப்பேராக இன்னும் ஒரு மணிக்கு மேல் ஆகும். சாமான்கள் வண்டியிலேயே இருக்கட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் வேறு வேலை இருந்தால் முடித்துக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

நான் என் ஜவுளிகளையும் மற்ற மூட்டைகளுடன் வைத்துவிட்டுக் காலாறக் கொஞ்ச தூரம் நடக்கலாம் என்று போனேன். ஆற்றுப் பக்கம் வந்தேன். காவேரி இரு கரையும் புரண்டு ஓடினாள். ஆங்காங்கு சுழிகள். நொப்பும், நுரையுமாக ஓடும் ஜலத்தைப் பார்க்க ஆனந்தமாக இருந்தது. கரையோரமாயுள்ள அரச மரத்தில் சலசல வென்று காற்று அடித்துக் கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்குக் கூடச் சில பையன்கள் படகு ஓட்டிக் கொண்டு, தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தார்கள். ஆற்றின் ஓரமாய் உள்ள ஒரு மண்டபத்தில் நுழைந்து போய் உட்கார்ந்தேன். சுவரின் நடுவே சித்திரிக்கப்பட்ட அழகிய மாடம். அதில் ஒரு யௌவன மங்கையின் சிலை. சிற்பி அந்தச் சிலையில் அழகுகளை வெல்லாம் ஒன்றாகத் திரட்டி வைத்திருந்தான். ஒடிந்து விடுவது போன்ற மெல்லிய இடை. மார்பகத்தின் பாரம் தாங்காத உடல் வளைவு. காதளவு நீண்ட சிரிக்கும் கண்கள். நீண்ட கூர்மையான அழகிய மூக்கு. புன்னகையை நெளியவிட்ட உதடுகள். யாழை இசைக்கும் நீண்ட விரல்கள். உடம்பு குலுங்கும் நகைகள். சிற்பத்தை உற்றுப் பார்த்தேன். கலைஞனான என் மனத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் தோன்றின. இதென்ன, இந்தச் சிலை அசைகிறதே! உதடுகள் குவிந்து பேச முயற்சி செய்கிறதே! ஆகா! இந்தச் சிலையிலிருந்து ஒரு பெரழகி அல்லவா தோன்றுகிறாள்! ராஜகுமாரியைப் போல இருக்கிறாளே என்றெல்லாம் வியப்புக் கடலில் மூழ்கினேன்.


"தங்களுக்காகத்தான் இவ்வளவு வருடங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் அவள்.

என் உடம்பு புல்லரித்தது. சாதாரண மனிதனுகிய எனக்காக இந்த எழிலரசி காத்திருக்கிறாளாமே? என்னுடைய அதிர்ஷ்டம்தான் என்ன? அளவு கடந்த சந்தோஷத்தினால் என்னால் வாய் திறந்து பேச முடியவில்லை.

"ஐயா! தாங்கள் என்ன செவிடா? நான் சொல்வது காதில் விழவில்லையா?''

"நான் செவிடல்ல. யாழின் இசை போன்ற சொற்களைப் பருகிக் கொண்டிருக்கிறேன்.''

"மறுபடியும் சொல்கிறேன். நான் தங்களுக்காகவே காத்திருக்கிறேன். என்றைக்காவது நீங்கள் இந்த ஆற்றங்கரைக்கு வருவீர்கள் என்று தெரியும்.''



நான் பூரித்துப் போனேன். என் உடுப்புகள் ராஜ உடைகளாக மாறியது போலவும் என் மேல் முத்தாபரணங்கள் நிறைந்திருப்பது போலவும் தோன்றின.

“இந்தச் சிலையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா?”

“ஆமாம். கொண்டாபுரம் ஜமீன்தாருடைய] பெண்ணின் சிலை. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் அவள் திருமணத்துக்கு முதல்நாள் காவிரி அம்மனைப் பூஜை செய்ய வந்தாள். படிக்கட்டில் வைத்த கால் வழுக்கி ஆற்றில் விழுந்து விட்டாள். வேகமாகச் சுழன்று ஓடிய காவேரி பெண்ணை ஏந்திக்கொண்டு ஓடிவிட்டாள். ஜமீன்தார் அகால மரணமடைந்த தம் மகள் நினைவுக்காக அவளைப் போல் சிலை செய்து வைத்தார். கல்யாண மண்டபமும் எழுப்பினார். இந்தக் கதை எல்லோருக்கும் தெரியுமே! வருஷா வருஷம் கன்னிப் பெண்ணான சிலைக்கு இந்தப் பக்கம் உள்ளவர்கள் படைத்துப் பூஜை செய்வதையும் பார்த்திருக்கிறேனே” என்றேன்.

உடனே அந்தப் பேரழகி ஏளனமாகச் சிரித்துக் கொண்டு, “எல்லாரும் சொல்லும் இந்தப் பைத்தியக்காரக் கதையை நீங்களும் நம்புகிறீர்களா?” என்று மிகுந்த சோர்வுடன் கேட்டாள். அவள் கண்களில் இலேசாகக் கண்ணீர் துளித்தது.


எனக்கு அவள் வருந்துவது பொறுக்க முடியவில்லை. என் கைக்குட்டையால் அவள் கண்களைத் துடைத்து அன்புமொழி சொல்ல வேண்டும் என்று ஆவலாக இருந்தது. அந்தப் பெண் இதை அறிந்து கொண்டு சற்றுப் பின்னால் நகர்ந்தாள்! “ஐயா! உங்களிடம் என் கதையைச் சொல்ல வேணுமென்று காத்திருந்தேன். பெரிய எழுத்தாளர், உத்தமர் என்றெல்லாம் நம்பினேன். நீங்கள் என்னிடம் காதல் பேச்சு பேசக் கிளம்பிவிட்டீர்கள். அவ்வளவு தான். நான் இன்னும் எத்தனை காலம் சிலையாக நிற்க வேண்டுமோ?” என்று சொல்லி விட்டுத் திரும்பினாள்.

எனக்குத் தவறு தெரிந்தது. ‘எனக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்’ என்று அந்தப் பெண் சொன்னதை வேறுவிதமாக நினைத்து விட்டேன். அவள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டுமென்று தீர்மானம் செய்தேன்.

“பெண்ணே! கோபிக்காதே. என் தவற்றை மன்னித்துவிடு. நீ சொல்ல விரும்புவதைச் சொல். நீ வருந்தினால் என் மனம் துன்புறுகிறது” என்றேன். அவள் சந்தோஷத்துடன் என் பக்கம் திரும்பினாள்.

“ஐயா! நீங்கள் நான் சொல்வதைக் கேட்டு, உலகத்துக்கு உண்மையை அறிவிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். இதற்கு முன் எத்தனையோ செய்திப் பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள். என்னைப் பற்றிப் பொய்யும் கற்பனையுமாக எழுதி



யிருக்கிறார்கள். எத்தனை எத்தனையோ வெள்ளைக்காரர்கள் என்னைப் படம் எடுத்திருக்கிறார்கள். என் அழகில் ஈடுபட்டு என்னை விலை பேசி என் குடும்பத்தாரிடம் போயிருக்கிறார்கள். ஆனால் என்னைத் தொடக்கூட என் குடும்பத்தாருக்குப் பயம். உங்களிடம்தான் உண்மையைச் சொல்லப் போகிறேன்'' என்று சொல்லிப் பேச்சை நிறுத்தினாள். எனக்கு உச்சி குளிர்ந்தது. அவளுடைய கதையைக் கேட்பதற்குத் தயாரானேன்.

*

நாற்பது ஆண்டுகளுக்கு முன் என் தாய் வெகாமிக்கும்,* தந்தை சோமசுந்தரத்துக்கும் அருமைப் பெண்ணாகப் பிறந்தேன். அதற்கு முன் எங்கள் குடும்பத்தில் மூன்று தலைமுறையாகச் சொந்தக் குழந்தைகள் கிடையாது. சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேல் எங்கள் மாளிகையில் தொட்டில் தொங்கியதில்லை. மூன்று தலைமுறைகளும் சுவீகாரம்தான். என் தந்தை திருவிடைமருதூர் கோவில் திருப்பணிகளை ஏராளமாகச் செய்தார். அதன் பலனாக நான் பிறந்ததாக அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். எனக்குக் குஞ்சம்மாள் என்று அழகாகப் பெயரையும் வைத்தார்கள். நான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தேன். எனக்குப் பாட்டும், படிப்பும் கற்றுக் கொடுப்பதற்காக இந்தக் கும்பகோணத்தில் எக்ஸ்டென்ஷனில் பெரிய பங்களா கட்டினார்கள். நான் பருவ மங்கையாக வளரும்பொழுது என் அழகும் போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்தது. அந்தக் காலத்தில் திருவிடைமருதூரிலும் திருவாரூரிலும் தேர் உத்சவம் நடக்கும். திருவிடைமருதூர் தேர் ஒருவிதத்தில் அழகு என்றால் திருவாரூர் தேர் இன்னொரு விதத்தில் அழகு. தேர் நிலையை விட்டு நாலு வீதியையும் சுற்றி விட்டு நிலைக்கு வருவது என்றால் சாதாரண விஷயம் அல்ல. பல்லாயிரக்கணக்கான மக்கள் தேர் இழுப்பார்கள். தஞ்சை ஜில்லாவில் உள்ள எல்லா ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து கூடுவார்கள். ஜமீன்தார்களும் மிராசுதார்களும் வருவார்கள். ஒருசமயம் நாங்கள் திருவாரூர் தேர் உத்சவத்துக்குப் போனோம். அங்கே ஆத்தூர் இளைய ஜமீன்தார் வந்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். அவரைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருந்தேன். அவருக்கு மலைநாட்டில் பங்களா இருக்கிறது. நன்றாக வேட்டையாடுவார். வெளிநாடுகளுக்குப் போய் வந்திருக்கிறார். வீரர், தீரர், கண்டோர் மயங்கும் அழகுள்ளவர் என்றெல்லாம் பேசுவார்கள். இவைகளைக் கேட்டுக் கேட்டு, கண்ணால் பார்க்காத அவரிடம் எனக்குக் காதல் பிறந்துவிட்டது.

நான் செல்வமாக வளர்ந்ததால் துடுக்காக இருப்பேன். இளம் கன்றைப் போல் துள்ளி விளையாடுவேன். என் தோழியிடம் ஆத்தூர் ஜமீன்தாரை எனக்குக் காட்டு என்றேன். தேர் வடம் பிடித்து இழுக்கும் சமயம். அதிர்வேட்டுகள் வெடித்தன. கற்பூரப் புகை கமழ்ந்தது. பக்தர்களுடைய கோஷம் வானளாவியது. தேரில் கட்டியிருக்கும் தொம்பைகள் ஆடின. ஈச்சங் குலைகளும், பனங் குலைகளும் அசைந்தன. மேள வாத்தியங்கள் முழங்கின. அனைவரும் தியாகராஜருடைய வைபவத்தை நினைத்துத் துதி பாடிக் கொண்டிருந்தார்கள். நான் என் தாயாரின் அருகில் நின்று கொண்டிருந்தேன். சுற்றுப்புறத்திலுள்ள கிராமத்தில் பண்ணையாட்கள் தேர் வடத்தை எவ்வளவோ தூரத்துக்கப்பால் வரை பிடித்துக் கொண்டு நின்றார்கள். ஜனம் சமுத்திரமாக இருந்தது. தேர்வடங்களுக்கு இடையே என் தந்தையும் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது வர்ணிக்க முடியாத அழகுடன் ஒரு வாலிபன் அப்பாவுக்கருகில் வந்தார். 'இவர் யார்?' என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது. இந்திரனே, தியாகராஜனுடைய தேரை இழுக்க வந்து விட்டானோ என்று நினைத்தேன். கம்பீரமான பார்வை. நிமிர்ந்த நடை. ராஜ லக்ஷணம் பொருந்திய உருவம். எங்கள் கண்கள் ஒரு நிமிஷம் சந்தித்தன. அவருக்கு அருகில் இன்னொரு வாலிபர் இருந்தார். அவரும் அழகாகத்தான் இருந்தார். அவருடைய கண்களில் குறும்புப் பார்வை தெறித்தது. இருவரும் [illegible] கொண்டு தேர் வடத்தைப் பிடித்தார்கள். என் தோழி பங்கஜாவிடம், ''இவர் யார் என்று



அறிந்து வா'' [illegible]. ஆத்தூர் ஜமீன்தாராக இருப்பாரோ என்ற சந்தேகம் தோன்றியது. சற்று நேரத்துக்கெல்லாம் பங்கஜா என்னிடம் வந்தாள். ''கொஞ்சம் குறும்புப் பார்வையாகவும், சற்றுக் குட்டையாகவும் மஞ்சள்பட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறாரே, அவர்தான் ஆத்தூர் ஜமீன்தாராம். அவருக்குப் பக்கத்தில் ராஜகம்பீரமாக வெண்பட்டு உடுத்திக் கொண்டு இருப்பவர் ஜமீன்தாரின் உற்ற தோழராம்!'' என்றாள்.


''பங்கஜா! நீ யாரைக் கேட்டாய்?''

''எனக்கென்ன பயமா? அவரையே நேருக்கு நேராகப் போய்க் கேட்டு விட்டேன்'' என்றாள் பங்கஜா.

நான் ஊருக்குத் திரும்பும் பொழுது, ஜமீன்தாரின் தோழரான என் இதய ராஜாவிடம் மனத்தைப் பறி கொடுத்து விட்டேன் என்பதை உணர்ந்தேன்.

வஸந்த ருது ஆரம்பம். புஷ்பங்களின் நறுமணம் ஆகாயவாணிக்குத் தூபமாகக் கமழ்ந்தது. இயற்கையரசி மணக்கோலம் பூண்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தாள். மன்மதன் வஸந்தனைத் துணை கொண்டு வில்லுடன் கிளம்பி விட்டான்.

ஒருநாள் எங்கள் மாளிகை அமர்க்களப் பட்டது. புதுப்புது விளக்குகள் பொருத்தினார்கள். தோரணங்கள் கட்டினார்கள். நடுக் கூடத்தில் காஷ்மீரக் கம்பளம்




பம்பாய் ராஜ்யத்தில்


சிறப்பு வாய்ந்த இடங்கள்

பம்பாய் ராஜ்யத்தில் நிறைந்து கிடக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த, சரித்திரப் புகழ் பெற்ற இடங்களும் பல நவீன ஆக்கத் திட்டங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. ஆரோக்கியமளிக்கும் சீதோஷ்ண நிலை; வசீகரமான இயற்கைக் காட்சிகள்—இவை நிறைந்த அற்புதமான பல மலை வாசஸ்தலங்கள் அந்த ராஜ்யத்தில் இருக்கின்றன. மற்றும் எலிபெண்டா கன்ஹேரி, அஜந்தா, எல்லோரா போன்ற மகத்தான சித்திரக்கலைச் சிறப்பு வாய்ந்த புராதன மலைக் குகைகளும் மகாபலேசுவரம், பஞ்ச்கனி, மாதரான் போன்ற சுக மலைவாசஸ்தலங்களும் இருக்கின்றன. காடுகள், காட்டு மிருக வகைகள், கிர்காடும் அங்குள்ள சிங்கங்களும், காய்னு, காக்ரபாரா வைதர்னு அணைக்கட்டுகளும், அபிவிருத்தித் திட்டங்களும், ஆரே பால் பண்ணை பிம்ப்ரி பெனிஸிலின் உற்பத்திசாலை பூனு தேசீய ரசாயன ஆராய்ச்சி சாலை-இவை யெல்லாம் பம்பாய் ராஜ்யத்துக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கும் அம்சங்கள்.









பம்பாய் ராஜ்யம் முழுதும் கோவில்களும் புராதன சின்னங்களும் இருக்கின்றன. அந்த ராஜ்யமெங்கும் சிறந்த ஹோட்டல்களும் சகலவிதமான பிரயாண வசதிகளும் உள்ளன

பம்பாய் சர்க்கார் விளம்பர டைரக்டர் காரியாலய வெளியீடு

விரிக்கப்பட்டது. ஆத்தூர் ஜமீன்தார் என்னைப் பார்க்க வரப் போவதாக அறிந்தேன். என் மனத்தில் சந்தேகம் தோன்றியது. ஜமீன்தாரின் நண்பர் வருவாரோ வரமாட்டாரோ என்று கவலைப் பட்டேன். அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரியவே மாட்டார்களாம். அதனால் நிச்சயமாக வருவார் என்று பங்கஜா உறுதியாகச் சொன்னாள். பிறகு தான் எனக்கு உற்சாகம் பிறந்தது. ஆடினேன்; பாடினேன். பீரோவிலுள்ள எல்லாப் புடவைகளையும் எடுத்துக் கீழே போட்டேன். திருப்பி எல்லாவற்றையும் அடுக்கினேன். பங்கஜா என்னைக் கேலி செய்துகொண்டே இருந்தாள். அவள் சொன்னது எதையும் நான் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. என்னிடமிருந்த நகைகள் எல்லாவற்றையும் எடுத்து வெளியில் போட்டேன். ஒவ்வொன்றாக அலங்காரம் செய்து பார்த்தேன். ஒன்றும் என் மனத்துக்குத் திருப்தி அளிக்கவில்லை. இந்த என் மனநிலையை உணர்ந்த என் தோழி புன்முறுவல் செய்து கொண்டே என்னிடம் வந்தாள். தன் திறமை எல்லாவற்றையும் உபயோகப்



படுத்தி அழகாக எனக்கு அலங்காரம் செய்து விட்டாள் பங்கஜா.

நான் மாடி ஜன்னல் வழியாகப் பார்த்தேன். முதலில் ஜமீன்தார் இறங்கினார். என் உள்ளம் வாடியது. பங்கஜா என் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தாள். அடுத்தது காரின் கதவுகளுக்கு வெளியே மலர்ப் பாதங்கள் தெரிந்தன. என் மனத்தைக் கவர்ந்த மனோகரர் இறங்கினார். நான் சந்தோஷத்தினால் குதித்தேன். அம்மா வந்து என்னை அழைத்துக் கொண்டு கீழே போனாள்.

அப்புறம் நடந்ததைச் சொல்ல வேண்டுமா? யாழ் இசைத்து, கீதம் பாடினேன். ஜமீன்தாரின் நண்பரான என் காதலரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஜமீன்தார் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தார். பங்கஜா கார் ஓட்டியிடம் அவர்கள் பெயரைத் தெரிந்து கொண்டு வந்து சொன்னாள். ஜமீன்தாரின் பெயர் இளங்கோவனும். அவருடைய நண்பர் பெயர் மனோகரனும்.

நான் அம்மாவிடம் என் உள்ளத்து ஆசையை வெளியிட்டேன். முதலில் அம்மா என் அறியாமைக்கு அனுதாபப் பட்டாள். "ராஜா மாதிரி இருக்கும் ஜமீன்தாருக்கு வாழ்க்கைப் படாமல், கூட இருக்கும் நண்பனுக்கா மாலையிட ஆசைப்படுகிறாய்? மணமுள்ள மலர் இருக்கும்போது அதை விட்டு அரளிப் பூவைச் சூடிக் கொள்வார்களா?" என்றாள். நான் அழுதேன்; சிரித்தேன்; கெஞ்சினேன். ஆனால் அம்மா கண்டிப்பாகவே இருந்து விட்டாள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. பட்டு மெத்தை யெல்லாம் முள்ளாகக் குத்தியது! பகலெல்லாம் அவரைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பேன். இரவெல்லாம் அவரைப்பற்றியே கனவு காண்பேன். கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்தேன். நானும், பங்கஜாவும் கூடி யோசனை செய்தோம். பருவ மங்கைகளான எங்களுக்கு ஜமீன்தாரைச் சந்திப்பது சுலபமாக இல்லை.


கல்யாணதினமும் நெருங்கியது. பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து இறங்கி விட்டார்கள். பங்கஜா மாப்பிள்ளை வீட்டுக்குப் போய் ரகசியமாக ஜமீன்தாரிடம் என் மன நிலையைச் சொல்லி விட்டு வருவதாகப் போனாள். அத்துடன் அவள் ஜமீன்தாரைக் காதலிப்பதையும் நான் அறிந்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் பங்கஜா குதூகலத்துடன் ஓடி வந்தாள். "குஞ்சு! ஜமீன்தாரையே நான் நேரில் பார்த்து நீ அவரைக் காதலிக்க வில்லை என்றும், அவருடைய நண்பரைத்தான் விரும்புகிறாய் என்றும், அதனால் இந்தத்திருமணத்தை மாற்றி நடத்த வேண்டும் என்றும் சொன்னேன். அவர் குறும்புச் சிரிப்புடன் 'உன் தோழி குஞ்சு நாளை தன் காதலனுக்கே மாலையிடுவாள். அதற்கு ஏற்பாடு செய்து விட்டேன்' என்றார். 'நீங்கள் சொல்வது நிச்சயம்தானா?' என்று கேட்டேன். அவர் சத்தியம் கூடச் செய்து விட்டார். கவலைப் படாதே" என்றாள்.

நானும், பங்கஜாவும் மணமகன் மறுநாள் மாறுவதைப்பற்றி வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தோம். நாளைக்கும் மணவறையில் மாப்பிள்ளையைப் பார்த்து அம்மாவும், அப்பாவும் கோபப் படுவார்கள். ஆனாலும் என்ன? தம்பதிகளாகப் போகும் எங்களுடைய விருப்பம் தானே முக்கியம்? இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்து விட்டுக் கல்யாணத்தை நிறுத்துவது அவமானம் என்று நினைத்து நடத்தி விடுவார்கள். பின்னால் எல்லாம் சரியாகிவிடும். அம்மாவோ, 'நான் சிறியவள். முதலில் தெரியாத்தனமாகப் பேசி விட்டேன். இப்பொழுது சமர்த்தாக ஜமீன்தாரை மணக்க ஒத்துக் கொண்டேன்' என்று நினைத்துச் சந்தோஷப்பட்டாள்.

மாப்பிள்ளை அழைப்புக்கு எல்லோரும் காவேரி ஆற்றுக்குப் போய் விட்டார்கள். நான் தனியாக உட்கார்ந்து இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தேன். பங்கஜா வியர்க்க, விறுவிறுக்க ஓடி வந்தாள். "குஞ்சு! ஏமாந்துவிட்டோம். ஜமீன்தார் தான் மாப்பிள்ளைக் கோலத்துடன் காரில் ஏறியிருக்கிறாராம்."

"என்ன சொன்னாய்? நீயே பார்த்தாயா?" என்று வியப்புடன் கேட்டேன்.

"நான் பார்ப்பதென்ன? எல்லோருமே சொன்னார்கள். 'ஜமீன்தாருக்கு மாப்பிள்ளைக் கோலம் எவ்வளவு அழகாக



இருக்கிறது?'' என்று பேசிக் கொள்கிறார்கள். அவருடைய நண்பரைக் கூடக் காணவில்லை'' என்று சொன்னாள்.

என் இதயம் பிளந்துவிடும் போல் இருந்தது. அழுத்திப் பிடித்துக் கொண்டேன். கீழே விழாமல் இருக்க என்னைப் பங்கஜா தாங்கிக் கொண்டாள். காவேரியின் அருகிலுள்ள அம்மன் கோவிலில் அன்று மணப்பெண் வந்து வணங்குவது எங்கள் வழக்கம். அதற்காகச் சில பெண்கள் வந்து என்னை அழைத்துப் போனார்கள். நான் உணர்ச்சியின்றி அவர்களுடன் போனேன். ஆற்று மண்டபத்தைத் தாண்டி அலங்கரித்த காரில் மாப்பிள்ளையின் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. கூட்டம் நெரிந்தது. பொன்னையா பிள்ளை சகோதரர்கள் நாதஸ்வரத்தில் சங்கீத ரசத்தைப் பிழிந்து கொண்டிருந்தார்கள். கணக்கற்ற விளக்குகளும், மத்தாப்புக்களும் கண்களைப் பறித்தன. நான் மாப்பிள்ளை முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. மாலைகளும், பூக்களும் மறைத்தன. எனக்கும் கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது. ஆனால் ஜமீன்தார்தான் ஜோடித்த வண்டியில் உட்கார்ந்திருக்கிறார் என்பதைப் பெண்களுடைய பேச்சிலிருந்து அறிந்து கொண்டேன். ஊர்வலம் எங்களைத் தாண்டிச் சென்று விட்டது. கோவிலுக்குள் போவதற்கு முன் கால் கழுவக் காவேரி நதியின் படியில் இறங்கினேன். எனக்குத் துக்கம் பொங்கியது. பெண்ணாகப் பிறப்பதே பாபம். மனத்தால் வரித்த கணவனை மாலையிடாமல் ஜமீன்தார் பணக்காரர், அவரை மணக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்கள் மேல் கோபம் கோபமாக வந்தது. அவர்களைப் பழி வாங்கும் அசட்டுத் துணிவும் தோன்றியது. ஒரே ஒரு கணம்தான். மனத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் மாறி மாறி வந்தன. என் இதயம் கவர்ந்த மனோகர் என் மனக்கண் முன்னால் தோன்றினார். அவர் முகத்தில் தவழ்ந்த புன்னகை என் மனத்தை என்னவெல்லாமோ செய்துவிட்டது! விதி தன் நீண்ட கைகளை விரித்து என்னை அழைத்தது. பொங்கிப் பெருகி ஓடும் பொன்னி நதியின் பிரவாகத்தில் குதித்து விட்டேன்.

இதைச் சொல்லிவிட்டுக் குஞ்சம்மாள் மௌனமாய் நின்றாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பிரவாகமாக ஓடியது.

எனக்கு மறுபடியும் கண்ணைத் துடைக்க வேண்டும் போல் இருந்தது.

''எழிலரசியே! நீங்கள் இப்படி உயிரை மாய்த்துக் கொள்ளலாமா? உங்கள் சோகக்கதை என் மனதை உருக்குகிறது.''

''ஐயா! இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. அதையும் சொல்லி விடுகிறேன். பிரவாகத்தில் விழுந்த வெகு நேரத்துக்குப் பிறகு உணர்வு பெற்று விழித்தேன். என் காதலர் கைகளில் இருந்தேன். அவர் அன்புடன் என் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். 'குஞ்சு! இப்படியா தண்ணீரில் விழுவது? நான்தான் உனக்கு மணாளனாக வந்து கொண்டிருக்கிறேனே!' என்று அன்பொழுகக் கேட்டார்.

'நீங்கள் என்னை அப்படி நம்ப வைத்து விட்டு, ஜமீன்தாரை ஊர்வலத்தில் மணக்கோலமாக உட்கார வைத்து விட்டீர்களே, நான் எப்படி நம்புவது? ஜமீன்தார் நாளைக்கு என் கழுத்தில் மூன்று முடிகளையும் போட்டு விட்டால் என் கதி என்ன?'

'குஞ்சு! என் நண்பனின் குறும்பு இவ்வளவு விபரீதத்துக்குக் கொண்டுவிட்டது. அவன் உன் தோழியிடம் வேடிக்கையாகத் தான் ஜமீன்தார் என்றும், என்னை அவன் நண்பன் என்றும் சொல்லி இருக்கிறான். இந்த நாடகத்தை அவன் நேற்று வரை நடத்தி விட்டான். திருமண சமயத்தில் நீ உண்மையான ஜமீன்தாரையே காதலித்து மணந்தாய் என்பதை அறிந்து அதிக சந்தோஷப்பட வேண்டும் என்று இந்தத் தமாஷ் செய்தானாம். நேற்று நீ வெள்ளத்தில் விழுந்ததைக் கேட்டு நான் ஓடி வந்து ஜலத்தில் குதிக்கும் பொழுதுதான் சொன்னான். நீ பணத்துக்காகக் காதல் கொள்ளவில்லை. பணத்தை விடக் காதலையே பெரிதாக மதித்தாய் என்பதை அறிந்ததும் உனது உயர்தரக் காதலுக்குத் தலைவணங்கினேன். உனது உயர்தரக் காதலுக்கு உலைவைத்ததைக் கண்டு வருந்தினேன்.''

''பிறகு உங்கள் திருமணம் நடந்ததா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''சற்றுப் பொறுங்கள். இன்னும் கொஞ்சம் கதை பாக்கி இருக்கிறது. நான் சந்தோஷத்துடன் 'அன்பரே! இனி ஏன் தாமதம்? உங்கள் குறும்புக்கார நண்பர் எங்கே? பங்கஜா எங்கே? திருமணம் நடக்கட்டும்' என்றேன்.

'கண்ணே! பூவுலகில் நமக்கு இனி கல்யாணம் நடக்க முடியாது. ஆற்று வெள்ளத்தில் நாம் இருவரும் கைகோத்துக் கொண்டு உயிரை விட்டு விட்டோம். இப்பொழுது ஆகாயத்தில் சந்திரனுடன் பவனி செல்கிறோம். நமக்குச் சொர்க்கத்தில்தான் கல்யாணம்' என்று சொல்லி என்னை அணைத்துக் கொண்டார்.

பெற்றோரும், மற்றோரும் நான் கால் தவறி நதியில் விழுந்து விட்டேன் என்று அழுது புரண்டார்கள். என்னைச் சிலையாகச் செய்து கும்பிட்டார்கள். என் காதலருடைய சிலை இந்த ஆற்றுக்கு அக்கரையில் இருக்கிறது. நாங்கள் இருவரும் பேசுவோம்; பாடுவோம்; ஆடுவோம். பௌர்ணமியில் வெண்மணலில் வீடுகட்டி விளையாடுவோம்'' என்று பெருமையுடன் சொன்னாள் அந்தத் தெய்வப் பெண்.

''உன் காதலருக்கும், அவருடைய பெற்றோர்கள் சிலை செய்து வைத்திருக்கிறார்கள் போலும்'' என்றேன்.


''இல்லை! காவேரி வண்டல் மணலை எடுத்து என் இதய ஓவியத்தை என் கையாலேயே சிலை செய்து விட்டேன். நாங்கள் இருவரும் உங்களை எதிர்பார்த்து முப்பது ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இனிமேல் இருவரும் காவேரியாற்றில் ஒன்றாக மிதந்து சொர்க்கத்துக்குப் போய்விடுவோம். நீங்கள் கதாசிரியர். உண்மையைத்தான் எழுதுவீர்கள் அல்லவா? இன்றாவது உலகம் உண்மையை அறியட்டும்'' என்று சொல்லிவிட்டு, குஞ்சு காவிரியின் பக்கம் திரும்பினாள்.

மனோரஞ்சிதம், பவழமல்லி, மகிழம்பூ, தாழம்பூ முதலிய நறுமலர்களின் மணம் வீசியது. பட்டாடைகள் சலசலத்தன. கால் கொலுசு ஒலித்தது.

''வாத்தியார் சார்! உங்களை எவ்வளவு நேரமாக எழுப்புவது? பஸ் ரிப்பேராகி விட்டது. புறப்படுங்கள்'' என்று கண்டக்டருடைய குரல் கர்ணகடூரமாகக் காதில் விழுந்தது. வீட்டுக்கு வரும் பொழுது இரவு பன்னிரண்டு மணி ஆகி விட்டது. சாந்தாவிடம் ஜவுளியைக் கொடுத்துவிட்டு எழுத உட்கார்ந்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தினசரியில் ஒரு செய்திவந்திருந்தது. 'கொண்டாபுரம் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் அழகிய சிலை காவேரி மண்டபத்தில் முப்பது வருடங்களாக இருந்தது. நேற்று பெய்த பெரு மழையினாலும், ஆற்றின் வெள்ளப் போக்கினாலும் மண்டபத்தின் மாடம் இடிந்து விட்டது. அதில் இருந்த அழகிய சிலையும் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கிறது' — இதைப் படித்துத் திகைத்தேன். எது கனவு, எது நினைவு என்று புரியாமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன்.

வெடி எப்படி......!




வாழ்த்துச்
செல்வம்
இவ்வாண்டு தீபாவளி நன்னாளன்று
மீண்டும் ஒரு முறை உங்களுக்கு வாழ்த்துச்
செல்வங்களை வழங்குகிறோம். உங்கள்
தேக ஆரோக்கியத்துக்காகவும், சந்தோஷத்
துக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இந்த
ஆண்டு முழுவதும் நாங்கள் பிரார்த்திக்கிறோம்
ஆர்யன் பிரஷ் கம்பெனி லிமிடெட்
வெலிங்டன் சேம்பர்ஸ் - தலால் தெரு - பம்பாய்-1
ஆர்யன்
டூத் பிரஷ்
Aryan
Regd.
The correctly shaped
TOOTH BRUSH
Cleans far Better - Lasts far longer!


தேர்ந்தெடுத்த வர்ஜீனியா புகையிலை
விசேஷக் கலவை
பக்குவப்படுத்தப்பட்ட சுவை
லேசான நறுமணம்
ரஞ்சகமான புகைபிடிக்கும் இன்பம்
Panama
20
CIGARETTES
பனாமா இறுதிவரை
இன்பமூட்டுபவை
GTC
Green' Advtg.



Carelessness Costs Lives
CINEMA FILM
PETROL
ரயில் பெட்டியில் நெருப்புடன் கூடிய சிகரெட் துண்டுகளைத் தயவு செய்து எறியாதீர்கள்.
வண்டியினுள் 'ஸ்டவ்' அடுப்பு வைத்துத் தயவுசெய்து பற்ற விடாதீர்கள்.
வெடிச் சாமான்களையும் அபாயகரமான, எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் பொருள்களையும் ரயிலில் எடுத்துச் செல்லாதீர்கள்.
※ ஒரு சிறிய அஜாக்கிரதையினால் பெரிய விபத்து நேர்ந்து பொருள் சேதத்தோடு சில சமயம் உயிருக்கே அபாயத்தையும் விளைவிக்கும்
WESTERN RAILWAY

தென்னிந்தியாவின் தொழில் வளத்தில்
பெரும் பங்கு

ஸ்டாண்டர்ட்

மோட்டார் தொழிற்சாலைக் குரியது

சிக்கனத்திற்கும், நம்பகமான சிறந்த சேவைக்கும் பெயர் பெற்ற ஸ்டாண்டர்ட் (வான்கார்டு III, டென்) கார்கள் இன்றைக்கு மக்களால் மிகவும் விரும்பப் படுகின்றன. உற்பத்திக்குமேல் கிராக்கி இருப்பதால், அநேகம் பேர்களுக்கு விரும்பிய பொழுது கார் கொடுக்கப்பட முடிய வில்லை. இருந்தாலும் கூடிய சீக்கிரம் எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செயவோம்.




ஸ்டாண்டர்ட்

திருப்தியளிக்கும் கார்

ஆறுமாத உத்தரவாதத்துடன விற்கப்படுகின்றன. எங்கும் எப்பொழுதும் அவைகளுககு வேண்டிய ஸ்பேர் பார்ட்டுகள் ஸ்டான்பார்ட் ஸர்வீஸ் மூலம் எளிதில் கிடைக்கும்.

தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிட்.,
சென்னை — பெங்களூர் — உதகமண்டலம்



அவர் அதிருஷ்டம்

ஸ்ரீ ஹரி

"அடே அம்பி! என்னடா விசேஷம்?" என்றார் சர்மா. அம்பி ஒன்றும் புரியாமல் திருதிரு வென்று விழித்துக் கொண்டிருந்தான். சர்மா ஏதோ சத்தம் போட்டுப் பேசுவதைக் கேட்டு ஸ்ரீமதி சர்மா அடுக்களையின் கதவின் ஓரமாக வந்து தலையை மட்டும் சிறிது வெளியே நீட்டினாள். ஸ்ரீமதி சர்மாவைப் பார்க்காதவர் போல் சர்மா தொடர்ந்து பேசினார்:

"என்னடா முழிக்கிறே! அடுக்களையில் பாத்திரங்களெல்லாம் சண்டை போட்டு மண்டை உருளுகிறதே...ஏ...ஏ...! என்னன்னு கேட்கிறேன்" என்று அம்பியைக் கேட்டார் சர்மா.

"பாத்திரங்கள் ஒன்னும் சண்டை பிடிக்கவில்லே... ப்...ப்... ஸல்லாபத்தான் பண்ணிக் கொண்டிருந்தன என்று சொல்லுடா அம்பி...!" என்றாள் ஸ்ரீமதி சர்மா.

'வறுமையிற் செம்மை' என்றால் என்ன என்று கேட்டால் சர்மாவின் இல்லற வாழ்க்கை என்று பதில் சொல்லி விடலாம். ஸ்ரீமான் அல்லது திருவாளர் சர்மா ஒரு நாட்டு வைத்தியர். படிப்போ ஒரு பிரமாதமான அவியல். பல சாஸ்திரங்களையும் சிறிது சிறிது அறிந்தவர். பல கலைகளிலும் சிறிது சிறிது பயிற்சி பெற்றவர். பல மொழிகளிலும் கொஞ்சம் கொஞ்சம் பரிச்சயமுண்டு. இவர் படிப்பை அவியல் என்பது பொருத்தமானதுதானே!

"வைத்தியர்வாள்!" என்று தெருவிலிருந்தே எழும்பிய கூப்பாட்டுடன் நண்பர் நல்லசிவம் அவர்கள் உள்ளே வந்து சேர்ந்தார்.

"வாங்கோ, வாங்கோ! என்ன விசேஷம்?" என்று சர்மாவும் வந்தவரை வரவேற்றார்.

"நம்ம ஜமீன்தார் வீட்டில் உங்களை அழைத்து வரும்படி சொன்னார்கள்" என்றார் நல்லசிவம்.

"ஏன்? என்ன விசேஷம்?" என்று வியப்புடன் கேட்டார் சர்மா.

"இல்லே, நம்ம ஜமீன்தாருக்குத்தான் உடம்பு கொஞ்ச நாட்களாகச் சரியா யில்லே. 'அது'ன்னும் 'இது'ன்னும் என்னென்னவோ நிமிஷத்துக்கொரு வியாதியாய் இருந்து வருகிறது. வியாதி இன்னதென்று புரியவில்லே. ராஜாங்கத்து விஷயம், ராஜ வைத்தியம். மருந்து, மாத்திரை, சூர்ணம் என்று எத்தனையோ கொடுத்தாச்சு. ஊசி கூடப் போட்டுப் பார்த்தாச்சு. 'ஏதோ மனசில் கவலை இருக்க வேணும். அதனால்தான் மருந்துக்குப் பிடிபடாமல் இருக்கிறது. சூழ்நிலையைச் சற்று மாற்றியமைக்க வேணும்' என்கிறார் டாக்டர். அவர்தான் என்ன பண்ணுவார்? பாவம்!"

சர்மா: இதெல்லாம் எத்தனை நாட்களாக இப்படி?...

நல்லசிவம்: அப்படியும் இப்படியுமா நாலு மாசமாக இப்படி...

சர்மா: இப்போதைய நிலைமை என்ன?

நல்லசிவம்: படுத்த படுக்கை. உட்காரவும் முடியாத பலஹீனம். பசி என்ற பேச்சே இல்லே. ருசி கிடையாது. எப்போதும் நெஞ்சில் ஏதோ ஒரு பாறாங்கல்லைச் சுமந்து கொண்டிருப்பது போன்ற அனுபவம். உடம்பினுள்ளே செங்கற் சூளை போல் ஒரு கொதிப்பு. தர்மா மீட்டரை வைத்துப் பார்த்தால்...காலையில் 98 டிகிரி. சாயங்காலம் நேரமாக ஆக இரவு எட்டு மணிக்குள் 101 டிகிரி வரையில் ஏறி விடுகிறது. ராத்திரி 10-11 மணிக்கப்புறம் குறையத் தொடங்குகிறது. இப்படி ஜுரம் இருக்கும் நேரத்தில்— வாய் ஓயாத ஒற்றை இருமல்.

சர்மா: உடம்பில் வலி, வேதனை, நோவு என்று இப்படி ஏதாவது அவருக்கு இருக்கிறதா?


நல்லசிவம்: உடம்பெல்லாம் பச்சைப் புண்போல் வலிக்கிறதாம். அதிலும் மார்பு, தோள்புறம், முதுகுப் பிரதேசங்களில் உள்ள வலியை அவரால் சகிக்கவே முடியவில்லையாம்.


சர்மா: மல ஜலங்கள் எப்படி?

ஸ்ரீமதி சர்மா காமராவுள்ளிலிருந்து தலையை மட்டும் சிறிது வெளியே நீட்டி, குரலைச் சற்றுத் தாழ்த்தி, 'உங்களைத்தானே!' என்றாள். சர்மா இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

நல்லசிவம்: என்னங்கம்மா சொல்ல வந்தீங்க?

நல்லசிவம் மூர்ச்சையான சமயம்......





செங்கல் சூளைபோல் கொதிப்பு!

ஸ்ரீமதி சர்மா: (சிறிது நாணிக்கோணிக் கொண்டு) சங்கோசமென்ன ! அரமனைவி வேருந்து வரச் சொல்லி அனுப்பினு... சர்ன்னு போய் வருவாளா? என்று ஏதானுமிப்படிக்கேட்டுண்டிருப்பாளா? நீங்களே அவருக்குச் சொல்லுங்கோ.

நல்லசிவம்: ஹி...ஹி...ஹி..

சர்மா: (திருப்தி நிறைந்த முறுவலுடன்) உம். அதுவும் நியாயந்தானே ! சாயங்காலமா நான் வருகிறேன்.

நல்லசிவம்: (இடைமறித்து) ஆமாம்; நீங்க எல்லா விஷயத்தையும் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே! சாயங்காலம் வண்டியை அனுப்பட்டுமா?

சர்மா: வேண்டாம், வேண்டாம். பக்கத்துத் தெருவுக்குப் போவதற்கு வண்டியாவது, காடியாவது? நான் புறப்பட்டு வருகிறேன்.

"நல்லது. வணக்கம்" என்று தெரிவித்துவிட்டு எழுந்த நல்லசிவத்தை வாசல்வரைவந்து வழியனுப்பினார்சர்மா.

★

அன்று சாயங்காலம் சர்மா ஜமீன்தார் வீட்டுக்குப் புறப்பட்டார். தெருக்கோடியைத் தாண்டிப் பக்கத்துத் தெருவுக்குத் திரும்பும்போது எதிரே 'மேல்நாட்டுப் பாணியில்' உடை தரித்திருந்த 'துரை' ஒருவர் புகைப்படலத்தினுள்ளே புகுந்தவராய் எதிரே வந்து கொண்டிருந்தார். இரண்டு பேரும் ஒருவரையொருவர் தாண்டிச் செல்லும்போது சர்மா துரையையும், துரை சர்மாவையும் கூர்ந்து பார்த்தனர். தாண்டின பிறகும் ஒருவரையொருவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அவரவர் வழியே நடந்தனர். சர்மா சற்று நின்று அந்தத் 'துரை' போய்க் கொண்டிருந்த பக்கம் திரும்பி, "எங்கேயோ பார்த்த மாதிரியா இருக்கே...!" என்று மெதுவாகத் தமக்குத்தாமே சொல்லிக் கொண்டிருந்தார்.

'துரை'யும் ஏதோ அதேபோல் நினைத்தவராகச் சர்மா நின்ற இடத்துக்குத் திரும்பி வந்து, "...உம்...உம்...மிஸ்டர் ஷர்மா?" என்றார்.

சர்மா: ஆமாம் ஆமாம்.ஷர்மா இல்லே, சர்மா.

துரை: ஹல்லோ! தட்ஸ்ஸா(ல்) ரைட். ஹௌ ட்டூ டு?

[கைகுலுக்குவதற்காக வலது கையை நீட்டினார்.]

சர்மா: பரவாயில்லே.......

[ஒரு அடி பின்னால் நகர்ந்து]

தாங்கள் யாரோ, எனக்கு நினைவு வரவில்லையே?

துரை: மை டியர்! அப்படியா? நா தெரிலே உன்கு. சின்னப்போ—ஒன்னு நாம்ப சேந்து படிக்கலே. என்ன பேஷ்! வேலாயுதன் உன்கு நெனவு இல்லே.

சர்மா: வேலாயுதனா! ஓஹோ! வேலாயுதனா? (ஆச்சரியத்துடன்) அட பாவீ! அப்படிச் சொல்லு! ஆமாம்! இதென்னடா இந்த வேஷமெல்லாம்?

வே: வகுர் ஷர்மா, வகுர். வகுத்துக்காக வேஷம்.

சர்மா: வகுரா? ஓஹோ! வயிற்றுக்காக இந்த வேஷமா? சரி நீ இப்போ என்ன செய்யறே? எங்கே இருக்கறே? பழைய மாதிரியே பேசு.

வே: நான் இப்போ என்னமோ டாக்டர்னு தொழில் செய்கிறேன். இந்த ஊரில் இதே தெருவில் எதிர் வரிசையில் கடைசி வீடு! வந்து ஆறு மாசமாச்சு.

சர்மா: கடைசி வீடா? அங்கே யாரோ 'தன்' என்று ஐரோப்பியன் பேரல்லவா பலகையில் எழுதியிருந்தது?

வே: (கலகலவென்று சிரித்துக் கொண்டே) நான்தான் அது.


சர்மா: எப்படா வேறு பேரை மாத்திக்கிட்டே?

வே: மாத்தவுமில்லே மறக்கவுமில்லே. என் பேயர் டாக்டர் வேஏஏலா-ஆ-ஆ-ஆ-யு-தன் என்பது ரொம்ப நீளமாகப் போச்சு பாரு. அதைக் குறுக்கிடலாம்னு தோணித்து. டாக்டர் **தன்** என்று வைத்துக் கொண்டேன். எப்படி?

சர்மா: ஜமீன்தார் வீட்டுக்கு நீதான் வைத்தியனா?

வே: ஜமீன்தார் வீட்டுக்கு எதற்கடா வைத்தியம்? ஜமீன்தாருக்குத்தான்!

என்ன பேஷ்! வேலாயுதன் உன்கு நெனவு இல்லே?



சர்மா: அதுசரி! ஜமீன்தாருக்கு என்ன உடம்புக்கு?

வே: உடம்பிலே என்னடா சிக்கு! எல்லாம் பணக்காரர்களுக்கு வரும் சிக்கு தெரியாதா? சும்மா 'அதா இதா'ன்னு எதையாவது 24 மணி நேரமும் சொல்லிக் கிட்டே இருப்பார்கள். உண்மையில் ஒன்றுமே இராது. நம்ம தொழில் 'உங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லே' யென்றால் போதுமா? எதையாவது ஒரு மருந்தைக் கொடுத்துத்தானே ஆகவேணும்?

சர்மா: ஆமாம், ஆமாம். நோயாளியைப் பற்றிக் கவலையில்லே!

வே: வேறே என்ன செய்வது? ஒரு நாளைக்கு நாலு தரம் சொல்லியனுப்புவான். நாம் ஓடணும். எதற்கு? ஒன்றுமே இருக்காது. 'இந்த ரவைப் பொங்கலில் முந்திரிப் பருப்பு இருக்கிறதே. இதைச் சாப்பிடலாமா?' என்பான். 'முந்திரிப்பருப்பைத் தள்ளிவிட்டுச் சாப்பிடுங்கள்' என்றால், 'எதற்கும் கேட்டுவிட்டுச் செய்யலாமென்றுதான் சொல்லியனுப்பினேன், ஸாரி' என்பான். நாம் மலர்ந்த முகத்தை வரவழைத்துக் கொண்டு 'அதற்காக என்ன? ஒன்றும் பரவாயில்லே' என்று சொல்லித் தொலைய வேண்டும். அப்போது அவர் 'ஒய்ப்' வந்து, 'அதுக்கெல்லாம் அவரு கணக்க மாட்டாருங்க. தங்கமான குணம்' என்று ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பாள். இந்தப் 'போரெ'ல்லாம் தாங்க மாட்டாமே உங்களைக் கவனித்துக்கொள்ள ஒரு 'நர்ஸ்' வேணும் என்று சொல்லி ஏற்பாடு செய்தேன். 'ஒருத்தர் என்னங்க? ரெண்டு பேர் வேணுமானாலும் போட்டுடுங்க' என்றான். அதை யும் செய்தேன். ஆனாலும் நம்மைப் பிடுங்கித் தின்கறது குறையவில்லே. காசில்லா விட்டாலும் போகட்டும் என்று எனக்கு அலுத்துப் போச்சு.

சர்மா: அடாடா!

வே: ஆனால் ஒரு வகையில் நல்லதும் உண்டு. பணத்தை மட்டும் பில் அனுப்பினவும் கொடுத்து விடுவான்.

சர்மா: அட! அப்படி இருக்கும்போது வெறுப்புத் தட்டலாமா?

வே: அட! அந்தப் பணம் இல்லாமலிருந்தால் போகும், சர்மா...!

சர்மா: ரொம்ப சரி. உன் வாயால் 'போதும்' என்ற சொல் வந்ததே, அதுவரையில் எனக்கு சந்தோஷம். சரி, பிறகு பார்க்கலாம். நான் வருகிறேன்.

வே: உன் க்ஷேம லாபங்களைப் பற்றிக் கேட்கவே இல்லையே!

சர்மா: அதற்கென்னடா அவசரம்! நான் வருகிறேன்.

★

ஜமீன்தார் வீட்டுக்குச் சென்ற சர்மாவை "வாங்கோ! வாங்கோ!" என்று ஜமீன்தாரின் தாயார் வரவேற்றாள். பிறகு ஜமீன்தார் படுத்துக் கொண்டிருந்த அறைக்கு அழைத்துப் போனாள். "இதோ பாருங்கோ இவனை. இந்தப் படுக்கை தான் இவனுக்கு. என் மகனுக்குப் பேறு காலம்னு நான் பெங்களூருக்குப் போயிருந்த நேரம். இந்தக் குடித்தனத் திலே பெரியவா பெருந்தலை இல்லாமற் போகவே, எல்லாம் தாறுமாறாகத் தலையை விரிச்சிண்டு ஆடத் தொடங்கிடுத்து. இரண்டே மாசத்திலே இவன் உடம்

புக்கு முடியாமே படுத்துவிட்டான். அது என்னடா ஏதுடான்னு நின்னு நெதானிச்சுப் பாக்காமே என்னென்னமோ வைத்தியம் செய்திருக்காங்க. இந்த அறையிலே குவிஞ்சுகிடந்த புட்டி ஒரு கப்பல் கொள்ளாதுங்க. எவ்வளவு மருந்து, என்னென்ன போங்க! டாக்டரு ஒரு நாளைக்கு 3-4 தரம் வந்து போவாரு. பலன்? அப்படியாகி இப்படியாகி இவன் படுத்த படுக்கையாகிவிட்டான். இவனைக் கவனிக்கக்க ரெண்டு நர்ஸுங்க. அவுங்களே கண்டாலே எனக்கு வேம்பா இருக்குதுங்க. என்னுங்க நீங்க ஒண்ணு! நம்ம வீட்டுப் பொம்பளைங்க சட்டக்காரிச்சி மாதிரி உடுத்திக்கின்டு ரெண்டாங்கட்டு வரையிலும் பூட்சு காலோடே வருகிறது நல்லாயிருக்குமா? உட்கார வேணுமானால் ஒரு நாற்காலி, மேஜை, மடிப்பு நாற்காலி அப்படி இப்படீன்னு அவுங்களுக்கு உபசாரம் பண்ண மூணு ஆட்கள் போடவேணும்னு பாருங்களேன்...''

சர்மா: அதனாலே....

அம்மா: அதனாலே மொதல் வேலையாக அவுங்களே நின்னுக்கிடுங்க என்றுசொல்லி விட்டேன். அது போகட்டும். இந்தப் பிள்ளையோடே கையைப் பிடிச்சு நாடியைப் பாருங்க. மொதல்லே அவனுக்கு நாக்கிலே ருசி வந்து ஒரு கவளஞ் சோறு திங்கறத்துக்கு என்ன செய்ய வேணுமோ, அதைச் செய்யுங்க.....

சர்மா: ஆகட்டும், அம்மா...ஆனால்...

அம்மா: ஆனால் என்ன? நாலு மாசமா பணத்தைத் தண்ணி கணக்கா செலவு செய்துட்டாங்களே, இப்போ நம் வைத்தியத்துக்குப் பணம் கொடுப்பாங்களோ மாட்டாங்களோன்னு நீங்க யோசிக்கறீங்களா?

சர்மா: இல்லவே இல்லே, அம்மா! இந்தக் கலையைக் கற்றுத் தொழிலே ஏற்றுக் கொண்டதினால் வைத்தியம் செய்ய வேண்டியது என் கடமை.

[இவ்வாறு கூறிக்கொண்டே நாட்டு வைத்தியர் ஜமீன்தாரை அணுகி, உடற்சோதனை செய்ய ஆரம்பித்தார்.]

★

“**வை**த்தியர்வாள்!......” என்று தெருவிலிருந்தே கூப்பிட்டுக் கொண்டு நல்லசிவம் உள்ளே வந்தார்.

“வாங்கோ — வாங்கோ, கணக்குப் பிள்ளைவாள்!” என்று வந்தவரை வரவேற்றார் சர்மா.

கணக்குப்பிள்ளை வந்து சர்மாவின் அருகில் அமர்ந்தார். ஏதோ முக்கியமான விஷயம் தெரிவிக்கப்படுமென்பதற்கான அறிகுறிகள் ஏற்படவே ஸ்ரீமதி சர்மா காமரா உள்ளின் கதவோரத்தில் வந்து நின்றுகொண்டு, அம்பியின் குடுமியைச் சீவிப் பின்னல் போடுபவள் போல், கண்ணையும் கவனத்தையும் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த சர்மாவிடமும் கணக்குப்பிள்ளையிடமும் நிலைத்திருக்கச் செய்தாள்.

சர்மா: பிள்ளைவாள்! உங்க ஜமீன்தாரின் உடல் நிலை இன்று எப்படி இருக்கிறது? பெரியம்மா என்னதான் சொன்னாங்க?

நல்லசிவம்: அதெல்லாம் சுகந்தானுங்க. என்னமோ 'வாய்க்குப் பிடிக்க இருக்குது' என்று சொல்லிக்கொஞ்சமாகவாவது இப்போது ஜமீன்தார் சாப்பிடுகிறார். இரவு நேரத்தில் கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கவும் செய்கிறார். பெரியம்மாளுக்கும் — ஜமீன்தாரிணிக்கும் ரொம்ப சந்தோஷம். உங்களைப் பற்றித்தான் எப்பொழுதும் பேச்சு. மாமியாரும் மருமகளும் பேசிக்கிறதைப் பார்த்தால் உங்களுக்குக் கனகாபிஷேகம் செய்து விடுவாங்க போலத்தான் இருக்கிறது. ஆனால்......

சர்மா: என்னங்க?...

நல்லசிவம்: பெரியம்மா சொன்னாங்க...

சர்மா: அவர்கள் எதை வேணுமானாலும் சொல்லட்டும்....

நல்லசிவம்: வைத்தியம் செய்தால் அதற்கு ஏதாவது பிரதிபலன் என்பதும்!

சர்மா: அந்தக் கவலையை அவுங்களுக்கு வைக்கவில்லே; எனக்கும் வைக்கவில்லே. ஒருவருக்கும் அந்தக் கவலையே வேண்டாம். வைத்தியத்தைச் செய்ய வேண்டியது நமது கடமை என்று தெளிந்து, அதைச் செய்து வந்தால் போதும். பலன் — பிரதி பலன் இவை எல்லாம்....

ஸ்ரீமதி சர்மா: (இடைமறித்து) அவுங்க யாராவது ஏதாவது கொடுத்தாலுங்கூட இவர் வேண்டாமென்று சொல்லிவிடுவார் போலிருக்கிறதே!

சர்மா: அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன். அவர்கள் கொடுத்ததைக் கொண்டு வந்து நேரிட உன் கையிலேயே கொடுத்து விடுகிறேன்!

நல்லசிவம்: நியாயம், நியாயம்! ஆனால் ஜமீன்தாருக்கு இதுவரையில் மருந்து ஒன்றுமே கொடுக்கவில்லையே...

சர்மா: ஏன் இல்லே? மருந்து கொடுக்காமலா இவ்வளவு தூரம் சுகம் ஏற்பட்டது? இதுவரையில் மருந்துகளை ஜமீன்தாரின் தாயார் செய்து கொடுத்து வந்தார்கள்.

நல்ல: ஒரு நிமிஷம் மன்னித்துக் கொள்ளுங்கள். அது என்ன மருந்துங்க?

சர்மா: மருந்து ஒன்றும் பெரிய விஷயமில்லே. ஆகாரத்தில் ருசி இல்லே. ஆகவே, சாப்பிடுவதில்லே. ருசியான ஆகாரத்தைச் செய்து கொடுத்தால் போதாதா? என்று தோன்றியது. கவலையைத் தெளியும் 'ரஸனே' என்ற பொறிக்குச் சிறிது ஊக்கத்தை அளித்தால் இதைச் சாதிக்கலாமென்று தோன்றியது. நமது ஜமீன்தாரின் அன்னையிடம் தெரிவித்தேன். ஆகாரத்தில் ருசிக்குறைவு இருக்குமானாலும் அல்லது அரோசகமே இருக்குமானாலும் அதற்காகக் கொடுக்கும் மருந்து ஆகார ரூபத்திலேயே இருப்பதுதான் நல்லது. ஆகவே,

“மாவின் நாரியோடிஞ்சி மாதுளைப்
பூவின்சாலி படப்புட்பகங்களை
ஆவின்மோர் தயிரிலப்பு உப்புடன்
சோறில்கூட்ட நற்சுவை வருமன்னே!”

என்றபடி மாங்காயிஞ்சி, மாதுளைப்பூ, மூக்கரட்டை வேர் இவற்றை உப்பு நீரில் சிறிது வேகவிட்டு, பசுவின் தயிரில் பச்சடியாகவோ, அல்லது மோர்க் குழம்பாகவோ சேர்த்துத் தயாரித்த தயிர்ப் பச்சடி அல்லது மோர்க் குழம்பைச் சேர்த்து, 'சாலி' என்னும் அறுபதாம் நாள் சம்பா அரிசியின் சோற்றுடன் சேர்த்து உண்டால் அரோசகம் தீரும், நல்ல ருசியுண்டாகும். ஆகாரத்தை விரும்பிச் சாப்பிட முடியும். கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடச் சாப்பிடப் பசி தானே வளரும்.


நல்ல: இவ்விதம் ஒரு தயிர்ப் பச்சடியைச் செய்து அதில் ஆகாரத்தைக் கொடுக்கும்படிதான் பெரிய அம்மாவிடம் தெரிவித்திர்களோ?

சர்மா: ஆமாம். அதில் அலுப்புத் தட்டாமலிருக்க இந்தத் தயிர்ப் பச்சடியில் அல்லது மோர்க்குழம்பில் சிறிது வித்தியாசத்தைச் செய்யும்படியும் ஏற்பாடு செய்தேன்.

நல்ல: அதாவது...?

சர்மா: முன் சொன்னவற்றையே உப்பு நீரில் வேகவிட்டு, சுக்கு, சீரகம், அல்லது சிறிது வெல்லம் சேர்த்துச் சாப்பாட்டில் கண்டாங்கியாகக் கூட்டியும் ருசித்துச் சாப்பிடுவார்கள். அவர்களுக்குப் பசித் தீயும் வளரும்.

அவுங்களுக்கு உபசாரம் பண்ண மூணு ஆட்கள் வேணும்!





உங்களுக்குக் கனகாபிஷேகம்

நல்ல : இதற்காக?

சர்மா: இதற்காக நெற்பொரியின் கஞ்சியைத் தயாரித்துச் கண்டாங்கியாக மேற்சொன்னவற்றுள் ஒன்றைச் சேர்த்து உண்ணச் செய்தால், இரண்டு மூன்று வேளை சாப்பிடும் முன்பு, சிறிதுசிறிதாகப் பசித் தீ வளரும். ருசியோ மிகவும் பெருகும். 'கொண்டா, கொண்டா' என்று கேட்டுச் சாப்பிடத் தொடங்குவார். கொஞ்சம் கொஞ்சமாக ருசித்துச் சாப்பிடச் சாப்பிடப் பசித் தீ மேலும் மேலும் வளரும். பிறகு ஆகாரம் ஏற்க ஏற்க, பலமும் ஊக்கமும் உண்டாகும்.

நல்ல : நல்ல ஏற்பாடுங்க! உண்மையாகவே இப்போதெல்லாம் ஜமீன்தார் ஏதோ ஆகாரத்தை ஓரளவு விரும்பிச் சாப்பிடுவதாகவே பெரியம்மா சொன்னாங்க. இப்படியே குணமாகிட்டு வந்தால் இன்னும் ஒரு மாசத்திலே ஜமீன்தார் கொஞ்சங் கொஞ்சமாக ஜமீன் வேலைகளைக் கவனிக்கக்கூடத் தொடங்க முடியும் என்று சொன்னாங்க.

சர்மா: அது மட்டும் போதாது. ஜமீன்தாரின் மனத்துக்குச் சிறிது ஊக்கத்தை ஊட்ட வேணும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு வேணும்.

★

அன்று வைத்தியர் ஜமீன்தார் வீட்டுக்குச் சென்றார். ''வாங்க, வாங்க, வைத்தியரே!'' என்று வரவேற்றார் ஜமீன்தாரின் தாயார்.

''ஹி, ஹி, ஹி'' என்ற அசட்டுச் சிரிப்புடன் சர்மா சென்று நாற்காலியில் உட்கார்ந்தார்.

சுற்றுமுற்றும்சிறிது கண்ணோட்டத்தால் நிலவரத்தை ஒருமாதிரி அறிந்தவர்போல் சர்மா ஜமீன்தாரைப் பார்த்து ''ஜமீன்தாரய்யா எங்கே?'' என்றதும், ஜமீன்தாரின் அன்னை ''உள்ளே போயிருக்கிறான். இப்போ வந்து விடுவான். சற்றே உட்காருங்க!'' என்றாள்.

சர்மா : பரவாயில்லே. உடம்பு சற்று தேறி வந்தால் சரிதான். நான் போய் வருகிறேன்.

அன்னை : இல்லேங்க, வாது போக்க சுத்தி வந்தது. 'டும் டும்' என்ற கணக்கா இப்போ புதிசா ஒரு......

சர்மா : என்னம்மா அது?

அன்னை : ஏதோ ருசி வந்திருக்குது. பசி வந்திருக்குது. ஒரு பிடி சாப்பாடும் பிடிக்குது. சாப்பிடவுஞ் செய்கிறான், ஆனால்....

சர்மா : ஆனால் என்னம்மா? ஏதாவது அவருக்குப் புதிய கவனம் ஏற்பட்டிருக்கிறதா, என்ன?

அன்னை : அது புதிய கவலையோ, பழையதின் திருப்பமோ, தெரியாது.

சர்மா : இப்போது என்ன கவலை?

அன்னை : ஏதோ கொஞ்சமாவது சாப்பிடுகிறான். வீட்டுனுள்ளேயே சிறிது நடமாட முடிகிறது. ஆனால்...

சர்மா : ஆனால்...?

அன்னை : எப்பப் பார்த்தாலும் ஒரே சோர்வு; ஓய்ச்சலென்று வேணுமானாலும் சொல்லுங்கள். கொஞ்சம் பேசினாலும் ஒரு இளைப்பு—இருமித் துப்புகிறான். ஒரு வித குமட்டல்—சில நேரம் வாந்தியும் ஏற்படுகிறது...!

சர்மா: அப்படியா, அம்மா! சரி, இருக்கட்டும். இதற்கு நான் ஒரு மருந்தைத் தயார் செய்து அனுப்புகிறேன். கணக்குப் பிள்ளையை என் வீட்டுப் பக்கம் அனுப்பி வையுங்க.


அன்னை : என்னமோ ஒரு வழியா எழுந்து உட்கார்ந்த பின்னே படிப்படியாக உடம்பு தேறிக் கொள்ளாதோ?

சர்மா : அம்மா! இப்பவும் உடம்பில் ஒன்றும் நலக் குறைவு இல்லையம்மா. பலஹீனப்பட்ட சரீரம். தன்னிலே பெறச் சிறிது தாமதமாவதும்—அதன் இடையில் ஏதாவது இப்படியொரு குட்டி எடாகூடம் ஏற்படுவதும் சகஜந்தான், அம்மா. இதையும் விரைவில் சரிக்கட்டி விடலாம். ஆனால் ஒன்று...

அன்னை : என்னங்க அது?

சர்மா : தம்மையும் தம் உடல் நிலையும் பற்றியே சதா நினைத்துக் கொண்டிருக்கும் ஜமீன்தாருக்குச் சிறிது மனத்தை வேறு துறையில் திருப்ப வேணும்.

அன்னை : போதும், போதும். அப்படி ஏதாவது திரும்பிடப் போவதென்று



'கொண்டா, கொண்டா!' என்று கேட்டுச் சாப்பிடத் தொடங்குவார்!

தான் நான் ஊரிலிருந்து வந்த சமயம் பயந்து போயிருந்தேன். நல்லபடி...

சர்மா : நான் அப்படிச் சொல்லவில்லே, அம்மா! கணக்குப் பிள்ளை வந்ததும் என் வீட்டுப் பக்கம் வரச் சொல்லுங்க, அம்மா. மருந்து கொடுத்தனுப்புகிறேன்—ஜமீன்தாரின் கவனத்தை வேறு துறையில் திருப்பவும் வகை செய்கிறேன்.

அன்னை : கறுவேப்பிலைக் கொத்து மாதிரி எனக்கு அந்தப் பிள்ளே.

சர்மா : கவலைப்படாதீங்க, அம்மா! கொஞ்சம் கொள்ளு, கொஞ்சம் பார்லி (முழு பார்லி அரிசி) இவ்விரண்டையும் நன்றாய் வேக விடுங்க. அதிலேயே ஓரளவு தொலுக்கி இடித்த வெள்ளாட்டின் எலும்பில் ஒரு அரை சேர் கூட்டிக் காய்ச்சுங்க.

அன்னை : எலும்பு ஸூப்பு வைக்கச் சொல்றீங்களா? இது பெரிய விஷயமா?

சர்மா : இந்த ஸூப்பை மட்டும் ஒரு கோப்பையளவு பிரதி தினம் மாலே நாலு மணிக்குக் கொடுத்து வாருங்கள். ஒரு சிட்டிகை வறுத்துப் பொடித்த இந்துப்புவும்—அவசியமானால் ருசிக்குத் தக்கபடி சிறிது சீரகத்தையும் வெங்காயத்தையும் வாசனைக்காகத் தாளிதம் செய்யலாம். நெல்லி முள்ளியின் புளிப்பையோ அல்லது புளிப்பு மாதுளையின் ரஸத்தையோ—இலந்தைப் பழத்தின் புளிப்பையோ அவசியமான அளவுக்குச் சேர்த்துக் கொள்ளலாம்.

அன்னை : சரி, புரிஞ்சு போச்சுங்க. அதேமாதிரி தினம் சாயங்காலம் நாலு மணி சுமாருக்கு ஒவ்வொரு கோப்பை இந்த ஸூப்பைக் கொடுத்து வருகிறேன்.

சர்மா : முதலில் சிறிது நீர்க்க இருந்தாலும் போகப் போக இந்த ஸூப்பு கொழுப்புள்ளதா யிருக்குமாறு—எலும்பைக் கூடுதலாக்கி அதிகம் ஜலத்தைச் சேர்த்து அதிகமாகவும் குறுகக் காய்ச்சி...

அன்னை : கொஞ்சம் கொஞ்சமா ஸூப் ''திக்''காகிறபடி—செய்து கொடுத்து வரவேணும்? அவ்வளவுதானே?

சர்மா : ஆமாம், அம்மா. நான் வருகிறேன். கணக்குப் பிள்ளை வந்தால் வீட்டுப் பக்கம் அனுப்பி வையுங்கள்.

★

ஏதோ ஒரு ஓலைச்சுவடி. காலத்தால் நலிந்த அதன் ஏடுகளில் கரையான், செல்லுப்பூச்சி, வண்டு ஆகியவை தின்றது போக எஞ்சியதில் உள்ள எழுத்துக்களைப் புரிந்துகொண்டு படிக்கும் முயற்சியில் மூர்த்தண்யமாய் முனைந்திருந்த சர்மா...

''அல்லும் பகலும் அறுபது நாழியுஞ்
சொல்லுந் தரமில் சோர்வு மிளைப்புங்
கொல்லுங் கோழை குமட்டல்-
வாந்தியை
வெல்லும் மருந்தை விளம்பக் கேண்
மின்......''

நல்லசிவம்: சரி சொல்லுங்க! கேட்கிறேன்!

சர்மா : வாங்கோ, பிள்ளைவாள்!

நல்ல: ''வெல்லும் மருந்தை விளம்பக் கேண்மின்'' என்று படித்தீர்கள். மேலே படியுங்கள்.


சர்மா : படிக்கத் தொடங்கினார்.

''கள்ளி நெற்றிலில் மர்க்கடிவித்தும்
எள்ளுடன் முஸலீ இலவின் பசையும்
பற்பல மூலி பசுநெய் மாஷம்
சர்க்கரையோடு சமைத்தது
கொள்ளு.''

கள்ளி—நீர்முள்ளி (வேர்). மர்க்கடி வித்து—பூனைக் காஞ்சியின் வித்து. முஸலீ—நிலப்பனை (கிழங்கு) மாஷம்—உளுந்து — குறிப்பிட்ட சரக்குகளைக் கொண்டு சர்க்கரையும் பசுவின் நெய்யும் சேர்த்து முறைப்படி தயாரித்த லேஹியம் என்று பொருள்...எப்படி?

நல்ல : பேஷாயிருக்கிறது. 'இது நம் ஜமீன்தாருக்காகவே எழுதியதுபோல் தோனுகிறது.

சர்மா : ஏன்? ஏழைகளும் சாப்பிடலாம். ஜமீன்தார் வெள்ளாட்டின் எலும்பு ஸூப் ஒருவாரமாகச் சாப்பிட்டு வருகிறார். புலால் வகை சரக்குகள் அவருக்குப் பழகிப் போனவை. ஆகவே அவை அதிக பலனைக் கொடுக்கவில்லை. சைவ சாப்பாடு சாப்பிட்டுச் சீவித்தவ


DODGE
DIESEL TRUCKS & BUSES
FARGO
Diwali Greetings
FROM
THE
PREMIER
AUTOMOBILES
LIMITED
BOMBAY

ருக்கு இந்த ஸைப் விரைவில் நல்ல பலனைத் தரும். ஜமீன்தாரைப் போன்றவர்களுக்கு மூலிகைகள்தான் விரைவில் பலனைத் தரக்கூடியவை. ஆகவே...

நல்ல: ரொம்ப நல்லதாய்ப் போச்சுங்க. உங்க கைராசியோ – அல்லது கேஸை எடுத்துக் கொண்ட வேளையின் குணமோ – இப்போது ஜமீன்தாருக்கு உடம்பு முக்கால் பாகம் குணமாகி விட்டது என்றே சொல்லலாம். வீட்டில் பெரியம்மா, சின்னம்மா எல்லாரும் உங்களைப்பற்றியேதான் சதா பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமதி: அவர் கைராசி யாருக்கு எப்படியோ... இந்த வீட்டு...

நல்ல சிவம்: சிறிது பொறுத்துப் பாருங்கள், அம்மா. ஒரு அதிர்ஷ்டம் அடிக்கப் போவதை...

ஸ்ரீமதி சர்மா: போதுமே! அவர் அதிர்ஷ்டம் தெரிஞ்ச சங்கதிதானே!

சர்மா: போதும் என்கிற சொல்லே ஒரு யோகம் பெறும். அந்தப் போதுமென்ற மனம்.....

["டக்" என்று ஒரு சப்தம்....இதற்கு விளக்கம் தேவையில்லை யல்லவா?]

★

ஜமீன்தாரின் அரண்மனை. அதன் எதிர் வீடுதான் ஜமீனின் அலுவலகம். ஜமீன்தார் கவனம் மாறி, இரண்டு தினங்களாக அலுவலகத்துக்கு வந்து நிர்வாகத்தின் போக்கு நீக்குகளைக் கவனித்து வருகிறார்.

சர்மா ஜமீன்தாரைக் காணச்சென்றார். சற்று நேரம் 'கச்சேரி' (ஜமீனின் அலுவலகம்) யின் முன் நின்று பார்த்தார். ஜமீன்தார் தமது வேலையைக் கவனிக்கும் மும்முரத்தில் சர்மா நிற்பதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. 'சரி' என்று சொல்லிக் கொண்டே எதிர் வீடான 'அரண்மனை'க்குச் சென்றார். ஜமீன்தாரின் அன்னை ஏதோ கை வேலையா யிருப்பதாக வேலைக்காரன் சொன்னான். ஜமீன்தாரிணியோ அதற்கு முதல் நாள் தொடங்கி (க்ஷத்ரிய குலாங்கனைகளுள்ள) படுதாவை ஏற்றுக் கொண்டு விட்டதால் சர்மாவைப் பார்க்கச் சௌகர்யப்படாதென்று அதே வேலைக்காரன் வந்து தெரிவித்தான்.

ஆனால் சர்மா அவ்வீட்டிலிருந்த ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்து விட்டார். 'உம்மை இங்கு யாரும் முகமன் சொல்லி வரவேற்க மாட்டார். நீர் போகலாம், ஐயா' என்பதை மறைமுகமாக வேலைக்காரன் சொல்லியும் சர்மா நகரவில்லை. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஜமீன்தாரின் தாயார் "எதடா சனியன் தொலையாது போலிருக்கிறதே!" என்று சொல்லாமலே தெரிவிக்கும் முக பாவத்துடன் வெளியே வந்து, 'ரொம்ப நேரமாகக் காத்துக்கிட்டு இருக்கிறீங்களே! பிள்ளையிடம் சொல்லி இருக்கிறேன். நாளை தினம் வாருங்கள்!" என்றாள்.

சர்மா: அம்மா! நான் தாங்கள் நினைப்பதுபோல் தங்கள் சன்மானத்துக்காக வரவில்லை. உங்களுக்குப் பிறக்கப்போவது பேரனல்ல, பேத்திதான் என்று சொல்லி விட்டுப் போகலாமென்று தான் காத்திருந்தேன். வருகிறேன், அம்மா!

அன்னை: அதற்காக நீங்க வராவிட்டாலும் வைத்தியர் கடனே வைத்துக் கொள்ளலாமா? இதுகூடவா எங்களுக்குத் தெரியாது?

சர்மா: அதென்னமோ தெரியாது. என்னைப் பற்றிய வரையில் தாங்கள் தெரிவிப்பது போன்ற எண்ணம் ஒரு நாளும் என்னுள் எழுந்ததே இல்லை. நான் வருகிறேன்.

இவ்வாறு சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வெளியே வந்தார். ஜமீன் அலுவலகத்தில் இப்போதுங் கூட ஜனங்கள் கூட்டமாகத்தான் நின்று கொண்டிருந்தனர். சர்மாவும் ஒரு ஓரமாக வந்து நின்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் சர்மாவைக் கண்ட நல்லசிவம்–முகபாவனையால் வரவேற்பைத் தெரிவித்துவிட்டு, ஜமீன்தாரின் அருகில் சென்று குரலைத்தாழ்த்தி, சிறிது வாயையும் பொத்திக்கொண்டு உடலை வில்லுக்குறி போல் வளைத்துக் கொண்டு "வைத்தியர் ஐயா வந்திருக்கிறார்" என்றார்.



ஜமீன்தாரின் கவனத்தை வேறு துறையில் திருப்பி......

"அப்படியா? ஒரு மாலையைக் கொண்டு போய் கழுத்தில் போட்டு வரவேற்கப் படாதோ? வந்திருக்கிறாராம்! வரும் வேளையைப் பாரு! ஆறு மாசமா ஜமீன் நிலவரமே தெரியாது. இதற்குள்ளே என்னென்னமோ ஆகிவிட்டது. எந்த விஷயத்தைத் தொட்டாலும் சிக்கல். சிக்கலை விடுவிப்போம் என்றாலோ அது தூக்கணாங் குருவியின் கூடுபோலிருக்கு. நான் கிடந்து தவிக்கிறேன். இந்த நேரத்திலே இவர் வைத்தியக் கூலியை வசூலிக்க வந்து விட்டாரோ? பேஷ்....

"ஐயா! கணக்குப்பிள்ளே! நாளைக்கு உம்ம கையிலேயே கொடுத்து அனுப்புகிறேன். நீரே கொண்டுபோய் அவரிடம் கொடும். ஒருவேலையைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது இப்படி இன்னொரு வேலையைக் கொண்டு வந்து புகுத்தாதீர், ஐயா!" என்று சொல்லி விட்டுவேறுபக்கம் திரும்பிக்கொண்டார்.

★

"வைத்தியர்வாள்" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தார் நல்லசிவம். "வாருங்கோ பிள்ளைவாள்" என்று வரவேற்றார் சர்மா.

நல்லசிவம்: நேற்றையதினம் ஜமீன்தார் தங்களிடம் நடந்துகொண்ட முறை எனக்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை.

சர்மா: உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நீங்கள் அதை ஏற்க வேண்டாம். நான் எதிர்பார்த்ததற்குச் சிறிதும் குறைவில்லாத பலன் எனக்குக் கிடைத்துவிட்டது. இதில் எனக்கு ஏமாற்றமில்லை.

நல்லசிவம்: நீங்கள் ஏதோ புதிர் போடுவதுபோல் பேசுகிறீர்கள். எனக்குப் புரியவில்லை. நேற்று நீங்கள் புறப்பட்டு வந்த பிறகு நான் சென்று பெரியம்மாவிடம் விஷயத்தைத் தெரிவித்தேன். தாம் இவ்விஷயத்தைக் கவனிப்பதாக வாக்களித்திருந்தார். இன்று காலையில் அலுவலகத்துக்குச் சென்றதும் ஜமீன்தார் என்னைக் கூப்பிட்டு, 'இதைக் கொண்டுபோய் வைத்தியரிடம்கொடுத்துவிட்டு வாரும். ஐயா! அவர் அதிருஷ்டம் இதில் அடங்கி இருக்கிறது. அவருக்கு நல்ல யோக ஜாதகமானும் யோக காலமும் வந்திருந்தால் இதுவே ஒரு பொன் சுரங்கம் மாதிரியாகத் தோண்டத் தோண்டத் தங்கம் தங்கமாய்க் கிடைக்கும். இவரும் குவிக்கலாம். அதிர்ஷ்டக் கட்டையானால்....? யார் என்ன செய்ய முடியும்?' என்று இந்தக் கவரை ஒட்டியபடி கொடுத்தார். உடனே எடுத்துக் கொண்டு உங்களைக் காண ஓடி வந்தேன். இந்தாருங்கள்!

சர்மா கையை நீட்டிக் கவரை வாங்கவில்லை. கம்மா இருந்தார்.

தனது கேந்திர ஸ்தானத்திலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி சர்மா, "அதை வாங்கித்தான் உள்ளே என்ன இருக்கிறதென்று பாருங்களேன். ஏதாவது 'செக்கு கிக்கு' இருக்கலாமே!" என்றாள்.

சர்மா: நீ போய் ஒரு செம்பில் கொஞ்சம் சுத்த ஜலம் கொண்டு வா.


ஸ்ரீமதி சர்மா குதியும் துள்ளலுமாகச் சென்று தண்ணீரைக் கொண்டுவந்தாள். சர்மா அதை வாங்கித் தம் பக்கத்தில் வைத்துக் கொண்டார். பிறகு நல்லசிவத்தைப் பார்த்துப் பேசினார்: "பிள்ளைவாள்! நீங்கள் தான் கவரைத் திறந்து என்ன இருக்கிறதென்று பாருங்கள்!"


நல்லசிவம் தயங்கித் தயங்கி கவரைத் திறந்தார். உள்ளே யிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. நல்லசிவம் குனிந்து அதை எடுத்துப் பிரித்தார். கண்கள் காணியகலம் விரிந்தன.

"இவ்வூர் வைத்தியர் சர்மா அவர்களின் 'கஸ்தூரி நெறிஞ்சிலாதி லேஹிய'த்தை நான் உபயோகித்திருக்கிறேன். சாப்பிடுவதற்கு மிகவும் இனிப்பானது. தொடர்ந்து உபயோகித்தால் சரீரத்துக்குப் பலமும் புஷ்டியும் வரக்கூடுமென்பது எனது நம்பகம்"-ஜமீன்தார்.

நல்லசிவம் வெட்டிய பனை போல் மூர்ச்சை போட்டு விழப் போன சமயம், இதை எதிர்பார்த்திருந்த சர்மா அவரைக் கையில் ஏந்திப் பிடித்துக் கொண்டே செம்பிலிருந்த தண்ணீரை முகத்தில் தெளித்தார். திடுக்கிட்டு நின்றுகொண்டிருந்த மனைவியிடம் "விபூதியைக் கொஞ்சம் கொண்டு வாயேன்!" என்றார்.

"டக்" என்ற பழைய சப்தம்..... "அவர் அதிருஷ்டம் தெரிஞ்சதுதானே!" மறுபடியும் ஒரு 'டக்' ஒலி எழுந்தது.


Contact
LUCKY
ELECTRICALS
for all kinds of
ELECTRICAL
SUPPLIES
All Makes of CABLES
எல்லோருக்கும் எங்கள்
மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்
லக்கி எலக்ட்ரிகல்ஸ்
182, சைனா பஜார் ரோடு சென்னை—1
LUCKY
ELECTRICALS
Wholesale and Retail
182, China Bazaar Rd. Madras—1
CHARI


Pioneer
20s to 40s
IN
HANKS & CONES
No. of Spindles
12,000
Phone: 150
THE COIMBATORE PIONEER 'B' MILLS.
COIMBATORE.
60s to 100s
CARDED
No. of Spindles
12,000
THE CHANDRA TEYTILES PRIVATE LTD.
20s to 80s
CARDED
No. of Spindles
18,000
THE BALARAMAVARMA TEXTILES LTD.
40s
COTTON YARN
No. of Spindles
12,000
THE PIONEER TEXTILES
Spinners


சொர்க்க மார்க்கம்
கோவி. மணிசேகரன்
காதலி: முகிலணையில்...!
மேகப் படகில் மிதந்திடுவோம்–இந்த
மேதினி வாழ்வை மறந்திடுவோம்!
சோகப் புயலைக் கடந்திடுவோம்–நல்ல
சொர்க்கத்தில் வாழ்வினைக்
கண்டிடுவோம்!
காதலன்: மழை நடுவில்...!
மாமழை பெய்திடும் இந்தநேரம்–
சொர்க்க
மார்க்கத்தைக் காட்டிடும் பாதையோரம்!
வையயுலகில் காதல் உண்டோ?–இதை
உணர்ந்ததில் கண்டது சாதல்நன்றே!
காதலன்: மலை முனையில்...!
நீண்ட மலையினைத் தாண்டிடுவோம்–
வானில்
சித்திரை செய்திடத் சாவிடுவோம்!
தூண்டும் துயரம் தொலைந்துவிடும்–நம்
துன்பக் கனவும் கலைந்து விடும்!
காதலி: மணல் வெளியில்...!
வானம் அழுவதை மழையென்பார்–பகல்
வானம் குளிப்பதை மழையென்பார்
நாணம் உடையவள் பெண்ணென்பார்–
அதன்
நல்லுரை கேட்டிடில் என்னென்பார்!
(காற்று சுழன்று அடிக்கிறது. பக்க வாட்டில் வளர்ந்திருந்த நாணல்கள் பிய்த்துக் கொண்டு பறக்கின்றன. காட்சி முடிவடைகிறது.)
விஜயா




கோசலை

கவிச் சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய ராமாயணத்திலிருந்து ஓர் அற்புதக் காட்சியை மேலே காண்கிறோம். "ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப் போகிறது!" என்று உள்ளத்தில் ஆனந்தம் பொங்க இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டு அமர்ந்திருக்கிறாள் கோசலை. அச்சமயத்தில் ராமன் அவள் முன்னிலையில் தோன்றினான்.

எப்படி? பட்டாபிஷேக அலங்காரங்கள் ஒன்றுமில்லாமல் தோன்றினான்! குழைக்கின்ற கவரியைக் காணோம். வெண்கொற்றக் குடையையும் காணோம்.


குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையுமின்றி
இழைக்கின்ற விதிமுன்செல்ல தருமம்பின் இரங்கிஏங்க
மழைக்குன்றம் அனையான்மௌலி கவித்தனன் வரும்என்(று)என்ற
தழைக்கின்ற உள்ளத்தன்னாள் முன்ஒருதமியன் சென்றான்

தாயின் ஏமாற்றம் அப்படியே பாடலில் பிரதிபலிக்கிறது. கவிக்கேற்ற சித்திரம்!





காகிதக் கப்பல்



மகாகவி ரவீந்திரநாத் தாகூர் சின்னஞ் சிறு குழந்தையின் மனோபாவங்களோடு ஒன்றி, குழந்தை தாயினிடம் பேசுவது போலவும், மரப்பாச்சியினிடம் பேசுவது போலவும், தனக்குத்தானே பேசிக்கொள்வது போலவும் அவர் ''பிறைச்சந்திரன்'' என்ற தலைப்பில் செய்துள்ளவை அற்புத சிருஷ்டி. அதில் ஒரு பாடல்:

''ஒவ்வொரு நாளும் எனது காகிதக் கப்பல்களை ஒன்றன்பின் ஒன்றாக அந்த ஓடையில் விடுகிறேன். அந்தக் கப்பலில் பெரிய கறுப்பு எழுத்துக்களில் நான் வசிக்கும் ஊர், என் பெயர் யாவும் எழுதி ஓடையில் விடுகிறேன். எங்கேயோ கண்காணாத தேசத்திலிருக்கும் ஒருவன் இவற்றைப் பார்த்து நான் யார் என்று தெரிந்துகொள்வான். என் படகில் என் தோட்டத்தில் பறித்த புஷ்பங்களை வேறு ஏற்றி அனுப்புகிறேன். காலையில் மலர்ந்த இந்த புஷ்பங்கள் அந்தக் கண்காணாத தேசத்துக்கு இரவில் பழுதில்லாமல் போய்ச் சேரும் என்று நினைக்கிறேன்.

இரவு வந்ததும், முகத்தை என் கைகளில் அணைத்துக்கொண்டு என் படகுகள் மேலேமேலே போய்க் கொண்டிருப்பதாகக் கனவு காண்கிறேன். நித்திராதேவியின் தோழிகள் அவற்றில் யாத்திரை செய்துகொண்டே, தங்கள் கூடைகள் நிறையக் கனவுப்பூக்களை நிரப்பிக் கொள்கின்றனர்.''



சகுந்தலை

உலக இலக்கியங்களில் எத்தனையோ காதல் கட்டங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் காளிதாஸன் சித்திரித்திருப்பது போன்ற பாரதப் பண்பாட்டை உயர்ந்த முறையில் பிரதிபலிக்கும் அற்புத காதல் கட்டம் வேறு எங்கும் காண முடியாது. துஷ்யந்தனும் சகுந்தலையும் காதலர்கள்தான். ஒருவரை யொருவர் நினைத்து நினைத்து ஏங்குவதற்கு ஓர் அளவில்லை. ஆனால் அவர்கள் நேரில் சந்தித்துக் காதல் மொழிகளைப் பரிமாறிக் கொள்ளுவது வெகு சொற்ப நேரம்தான். அந்தச் சொற்ப நேரத்தை ஓவியர் வினு சித்திரித்துக் காட்டுகிறார். துஷ்யந்தனும் சகுந்தலையும் தனியே இருக்க நேரிடுகிறது. அப்போதும் சகுந்தலைக்கு அச்சமும் நாணமும் விட்டபாடில்லை. ''சகுந்தலை: இப்பொழுது என்னை விட்டுவிடுங்கள்.

அரசன்: சரி, விட்டுவிடுகிறேன். சகுந்தலை: எப்பொழுது? அரசன்: புண்படாத புதிய மென்மலரை விரும்பும் வரிவண்டு இன்புறுவது போல உன் அதரத்தைப் பருகப் பேராவல் கொண்ட யான் அதன் சுவையை நோகாமல் நுகர்ந்தபின். (அவன் முகத்தைக் கையால் மேலே தூக்க முயல்கிறான். சகுந்தலை பரபரப்புடன் தடுக்க முயல்கிறாள்)''

கல்கி தீபாவளி மலர் 1958





ரோமியோ—ஜூலியட்

காதலர்கள் என்றும் லைலா-மஜ்னு, துஷ்யந்தன்-சகுந்தலை, நள-தமயந்தி என்று அடுக்கும் குழுவில் ஆங்கில நாடகக் கவிஞன் ஷேக்ஸ்பியர் சிருஷ்டித்த ரோமியோவும்-ஜூலியட்டும் நிச்சயம் சேர்க்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் காதல் பத்தரை மாற்றுக் காதல்.

ரோமியோ: அன்பே! அதோ தெரியும் அந்தச் சந்திரன், அவன் இந்தப் பழ மரங்களின் இலைகளையெல்லாம் வெள்ளியில் தோய்த்தாற்போல் அழகுபடுத்துகிறான். அந்தப் புனித சந்திரன் மீது ஆணையாக...

ஜூலியட்: ஓ, சந்திரன் மீது ஆணையிடாதீர்கள். அவனுக்கு ஒரு நிர்ணயமான புத்தி கிடையாது. மாதந்தோறும் தனது வட்ட உடையில் மாறி மாறி வருகிறான். தங்களுடைய காதலும் அம்மாதிரி மாறி மாறி வரக்கூடாது என்பதற்குத்தான் நிலவின் மேல் ஆணையிடாதீர்கள் என்கிறேன்.

ரோமியோ: பின் எதன் மீது ஆணையிடுவது? ஜூலியட்: ஆணையேயிட வேண்டாமே! ஆணையிட்டே தீரவேண்டும் என்று விரும்பினால் உங்கள் மேலேயே ஆணையிடுங்கள். ஏனெனில் நீங்கள்தான் நான்வணங்கும்தெய்வம். உங்களிடம் எனக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறது.





அழகுடன் தோன்றுங்கள்

அழகுடன் தோற்றமளிக்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இயற்கையாகவே உண்டு. அதிலும் பண்டிகை காலங்களில் இந்த ஆசை அதிகமாக இருப்பது சகஜமே. சால்கெமிகோ அழகு சாதனங்கள் எல்லாம் சுத்தத்துக்கும், உயர்ந்த தரத்துக்கும், உபயோகத்துக்கும் பெயர் பெற்றவை. உண்மையிலேயே அழகு சாதனத்திற்கு இவைகள் ஏற்றவை.

* **லா-போனி** ஸ்னோவும் க்ரீமும்
* **மலாயா** சந்தனச் சோப்பு
* **காஸ்டோரால்** வாசனையுள்ள விளக்கெண்ணெய் கூந்தல் தைலம்
* **காந்தா** கமழ்மணம் வீசும் வாசனைத் திரவியம்
* **ரேணுகா** முகப் பவுடர், டால்கம் பவுடர்




தயாரிப்பாளர்கள் :

தி கல்கத்தா
கெமிகல் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா-29




பண்டிகை
திருவிழாக் காலங்
களுக்கு உகந்தது
மதுபாலா
11.95
மக்காஸின்
3.25 - 3.95
6.75-10.75
தீபாவளிப் பண்டிகைக்கு
சிறந்ததையே வாங்குங்கள்
அனுராதா
8.95
Bata
10.95
13.95


கரம்சந்த் ஸ்வீட்சந்த்
மிட்டாய்க்கடை
சாமா



அதோ வந்துவிட்டது ஆகாரம்...

மழையில்லாமலோ அல்லது வெள்ளத்தினாலோ, எந்தக் காரணத்தினாலாவதும், பஞ்சம் என்று வந்துவிட்டால் நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுவதற்கிருக்கிறார்கள். அந்த மாதிரி சமயங்களில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொருள்கள் மிக வேகமாக அனுப்பப்பட வேண்டும். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக உதவி செய்யும் அரிய பணியை ஐ.ஏ.ஸி. மிகப் பெருமையுடன் ஏற்று நடத்துகிறது.

உலகத்திலேயே பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்களிலொன்றான ஐ.ஏ.ஸி. யின் விமானங்கள் வருஷந்தோறும் சுமார் 20,000,000 மைல்கள் பறக்கின்றன; 5½ லக்ஷத்திற்கு மேற்பட்ட ஜனங்களுக்கு துரிதமானதும், சுகமானதுமான பிரயாண வசதியை அளிக்கின்றன. 55,000 டன்களுக்கு மேல் தபாலையும், சரக்குகளையும் தேசத்தின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு ஒரு சில மணி நேரங்களில் கொண்டு சேர்க்கின்றன.

பாரத நாட்டின் அன்றாட வாழ்க்கையில் குறுக்கிடும் எதிர்பாராத சங்கடங்களிலிருந்து தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதுகாக்க ஐ.ஏ.ஸி. உதவியாயிருக்கிறது.

1957-58-ல் ஐ.ஏ.ஸி.யைப் பற்றிய சில குறிப்புகள்:-

18,318,552	மைல்கள் பறந்தது
599,573	பிரயாணிகளை ஏற்றிச்சென்றது
44,208	டன் சரக்கு சுமந்தது
5,168	டன் தபால் தூக்கிச் சென்றது

ஐ.ஏ.ஸி. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பணியாற்றுகிறது

இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன்



ஒரே நினைவு

கோமதி சுப்பிரமணியம்

கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு, ராதை புறப்பட்டாள். ஜன்னல் அருகே நின்ற என்னைப் பார்த்தவள் "நின்று பேச நேரமில்லை" என்று சொல்வதைப் போல் ஒரு பார்வையை 'வீசி' விட்டு நடையைக் கட்டினாள்.

"எங்கே ராதை இத்தனை அவசரம்?" என்று கேட்டேன்.

"ராமாயணத்துக்கு!" என்றாள் அவள் மெதுவாக.

"ஓ, சினிமாவுக்கா? என்னிடம் சொல்லவே யில்லையே! நானும் உன்னுடன் வந்திருப்பேனே!"

"சினிமாவுக்கு இல்லை. தினமும் செல்வேனே, ராமாயண உபந்நியாசம் கேட்க, அங்கேதான் செல்கிறேன்" என்றாள்.

அன்றைக்கென்னவோ எனக்கு மனமும் சரியாக இல்லை. அன்றென்ன, என் கணவரைப் பிரிந்து வந்து இந்த ஒரு மாதத்தில் என்றுதான் அமைதியாக இருந்தேன்?

என் மனம் அமைதியை நாடியது.

"நானும் வரட்டுமா?" என்றதும் ராதை வியப்போடு நோக்கினாள்.

"ஏது இன்று அபூர்வம் என்று நினைக்கிறாயோ? ராமகாதை எத்தனை முறைகள் கேட்டால்தான் என்ன, பன்முறை படமாகப் பார்த்தால்தான் என்ன? அலுக்கவா போகிறது?" என்று சொல்லிக் கொண்டே அம்மாவின் அனுமதிபெற்றுக் கிளம்பி விட்டேன். நான் வாசற்படியைத் தாண்டியபோது அம்மாவிடமிருந்து எழுந்த பெருமூச்சு என் செவியைத் தாக்கியது.

'முரட்டுப் பெண்!' என்று அம்மா நினைத்திருக்கலாம். 'அப்பாவி அம்மா!' என்று நானும் நினைத்திருக்கலாம்.

ராதையுடன் மேலே நடந்தேன். வழிநெடுக, நாலு மாதங்களாக நடந்து வரும் ராமாயணத்தின் சாராம்சத்தைச் சுருக்கமாக விளக்கி வந்தாள் ராதை. கேட்கக் கேட்கத் தேனாய்த் தித்தித்தது.

கேட்க மட்டும்தான் தித்திக்கிறதா? அதன்படி நடக்க முயல வேண்டாமா? என் மனம் சுரீரென்றது. ஒரு கதையைக் கேட்டால், படித்தால் நாம் அதிலுள்ள நல்ல கருத்துக்களை அறிந்து அதன்படி நடக்க முயல வேண்டும். இல்லாத வரையில் 'விடிய விடிய இராமாயணம்' கேட்டவன் கதைதான்.

நானும் அப்படித்தானே?

என் மனம் பின்னோக்கிப் பறந்தது.

புரட்டாசி மாதத்தில் ஒரு நாள் மாலை. கையில் போனஸ் பணத்துடனும் மனத்தில் இன்ப நினைவுகளுடனும் வதனத்தில் சிரிப்பை வழியவிட்டு வீடு வந்து சேர்ந்தார் என் கணவர்.

"ஏது இன்றைக்கு இத்தனை குஷி? என்றைக்கும் காணும் அலுப்பின் முத்திரைகூடக் காணவில்லையே உங்களிடம்" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"மடியிலே கனமிருந்தால் முகத்திலே ஏது அலுப்பு!" என்று சிரித்தபடியே பர்சை என்னிடம் நீட்டினார்.

"உம்! ஹாம்! போனஸ் பணம் கொடுத்து விட்டார்களா? அப்படியானால் நிச்சயம் எனக்கு நான் நினைத்தது கிடைத்து விடும்..."

நான் இதைச் சொன்னதும் அவர் முகம் ஏனோ சுருங்கியது.

"இந்தா, மாலதி! செலவுக்கு ஏதாவது வழி வகைகள் வகுத்து வைத்திருந்தால் தயவுசெய்து அதை நிறுத்திவிடு. இந்தப் பணம் நம்மதல்ல."

"வாஸ்தவம்தான். அது உங்களுது அல்ல. இனி அது என் பணம். என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் விரும்புவதை வாங்கிக் கொள்ளும் அனுமதியையும் சேர்த்துக் கொடுத்து விடுங்கள்" என்றேன்.

"பணம் உன்னுடையதாகவே இருக்கட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இந்த முறை அதை நீ பிறருக்காக விட்டுக் கொடுத்து விடு."

"புதிர் போடுகிறீர்களே?"

"புதிரில்லை, மாலா! இதோ இதைப் பார்" என்று என்னிடம் ஒரு கவரை நீட்டினார். படித்துப் பார்த்தேன். அவர் தம்பி எழுதிய கடிதம். அன்றைக்குப் போனவன் வரும் என்பதைக் 'கழுதைக்கு மூக்கில் வேர்த்தாற்' போல் மோப்பம் பிடித்து, வரப் போகும் பணத்தைத் தமக்குச் சைக்கிள் வாங்குவதற்காகத் தரும்படி எழுதிக் கேட்டிருந்தார். அவர் எழுதியிருந்த காரண காரியங்கள் அத்தனையும் உண்மை. பட்டணத்து வீதியிலே பதைபதைக்கும் வெய்யிலிலே ஆபீஸ் நேரத்திலே பஸ்ஸுக்காகத் தவம் இருந்து அனுபவிக்கும் வேதனை அத்தனையும் வடித்துக் கொட்டி எழுதியிருந்தார்.

கொடுக்க வேண்டியதுதான். ஆனால் என் விருப்பம்....?

என் உள்ளத்தில் எழுந்தது வெறுப்பா, ஆத்திரமா, ஆக்ரோஷமா என்பது தெரியாது. ஆனால் அதன் முடிவு மட்டும் நிச்சயமாகத் தெரியும். அது தான் வைராக்கியம். நான் விரும்பிய பொருளை வாங்கியே தீருவதென்ற விருப்பு என் மனத்துள் முடிச்சிட்டது.

"உங்கள் தம்பியின் இந்தப் புலம்பலுக்கெல்லாம் உங்கள் உள்ளம் இளகலாம். ஆனால் நான் மசிய மாட்டேன். எனக்கு இந்தப் பணம் வேண்டும். தர விருப்பமா இல்லையா? அதை மட்டும் எனக்குச் சொல்லி விடுங்கள்" என்றேன்.

"இல்லை, மாலா! நீ விரும்பும் எந்தச் செலவுக்காகவும் தர முடியாது. அவனுக்கு அனுப்பப் போவதாக வாக்குக் கொடுத்து விட்டேன்."

அந்த சத்தியசந்தர் தம் வாக்கைக் காப்பாற்றிக் கொண்டிருக்கட்டும். நானும் என் விருப்பை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின் விளைவுதான் பிறந்த வீடு வந்து ஒரு மாதமாகப் போகிறது. ஒரு வகையாக நான் வந்த விவரத்தை அறிந்து கொண்ட அம்மா ஜாடைமாடையாக என்னைக் கண்டித்தாள். என் மனத்தை மாற்றுவதற்கும் என் போக்கைத் திருத்துவதற்கும் சிறு சிறு தந்திரங்களைக் கையாண்டாள்.

பிடிவாதத்தில் ஊறிப் போன என் மனம் எதற்கும் அசையவில்லை. என் முரட்டுத்தனமான வாதத்தைக் கேட்கும் போதெல்லாம், அம்மாவின் மனம் வேதனையுறும். என் விருப்பின் முன் அம்மாவின் வேதனை கரைந்து மறைந்தது.

நான் என் போக்கில் சென்று கொண்டிருந்தேன். காலம் தன் போக்கில் கரைந்து கொண்டிருந்தது.

இப்பொழுது நான் இராமாயணம் கேட்கச் சென்று கொண்டிருக்கிறேன்.

என் மனம் எண்ணியது:

'கணவன் தன் தம்பிக்காக இராஜ்யத்தைக் கொடுத்த போது கணவனைப் பின் தொடர்ந்து காட்டுக்கு ஏகினள் சீதை. ஆனால் நான் அற்பப் பணம் கொடுப்பதைச் சகியாமல் அவரைப் பிரிந்து வந்திருக்கிறேன். நான் இராமாயணம் கேட்கத் தகுதியுள்ளவள்தானா? அந்தப் புண்ணிய கதையைக் கேட்கும் தகுதி எனக்கு இருக்கிறதா?'

ஒரு கணம்தான். மறு கணம் மாறியது. அது கதை. இது வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற என் நினைவுக்கு அப்பால் எல்லையே இல்லை என்று நான் முடிவுக்கு வந்த சமயம்



ராதை சொன்னாள், "கதை நடக்கும் வீடு வந்து விட்டது" என்று!

வீடா அது? இல்லை, பிரும்மாண்டமான பங்களாவின் முன் வந்து நின்றோம். வாசல் முகப்பிலிருந்து இராமாயணம் நடக்கும் நேர் எதிர்வரை கொட்டகைப் பந்தல். பந்தல் நிரம்ப ஒரே ஜனத்திரள். ஜன சமுத்திரம் என்று கூடச் சொல்லலாம். காவியம் பாடும் அம்மையாருக்குள்ள திறமையை அங்கே கூடியிருந்த கூட்டத்தைக் கொண்டே மதிப்பிட்டு விடலாம்.

பெண்களின் முன்னேற்றம் இப்படி ஒரு நல்ல பாதையில் திரும்பி விருப்பதை நினைத்து எனக்கே பூரிப்பாக இருந்தது.

கூட்டத்தை முண்டியடித்துக் கொண்டு முன் வரிசைக்கே சென்று விட்டோம். இத்தனை பெருந்திரளைத் தன் காவியத்தால் இறங்க வைக்கும் திறன் வாய்ந்த அம்மையாரைக் காண என் கண்ணும் மனமும் ஒருங்கே துடித்தன.

சிறிது நேரத்துக்கெல்லாம் கண்டேன். என்ன தேஜஸ்! என்ன கம்பீரம்! என்ன சாந்தம்! 'பால்வடியும் வதனம்!' அந்த அழகு முகத்தைக் கண்டேன். வயது நிறைந்த அம்மையாரின் முகத்தில் இலங்கும் தேஜஸ் அவர் பெற்றுள்ள அருளா, அல்லது அவர் செய்து வரும் அரிய தொண்டின் பலனா என்றெல்லாம் எண்ணினேன். மேடையில் முழங்கிய ஜாலரா என் எண்ணத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது. அதையடுத்துத் தம்புரா சுருதிக்குப் பின்னால் வயலின் மெல்லிசை எழுந்தது. அந்த நாதத்தில் ஏன் அத்தனை சோகவெள்ளம் தேங்கி நிற்கிறது!

ராதை சொன்னாள்: "இன்று விளக்கம் தருவது சீதையைப் பிரிந்து ராமர் படும் துயரை விளக்கும் பாடல்கள்...."

'அடா ராமா!.........பிரிவுத் துயரை அணு அணுவாய் நான் அனுபவிப்பது போதாதா? இங்கேயும் அதைத்தானா கேட்க வேண்டும்?' என்று என் உள்ளம் சோர்வுற்றது.

எழுந்த சோர்வைத் தட்டியெழுப்புவது போல் கணீரென்று எழுந்தது பாட்டின் குரல். கூட்டம் கட்டுண்டது. பின்னும் சிறிது நேரத்தில் மெய்மறந்தது. பாட்டும் விளக்கமும் தவிர வேறு எந்தச் சிறு சத்தமும் கூட்டத்தில் எழும்பவில்லை.

ராமன் படும் அவதியை, கம்பன் பாடலின் ரசத்தால் அணு அணுவாய் ஊட்டிக்கொண்டிருந்தார், சபையோருக்கு. எத்தனை நேரம் அப்படி இருந்தோமோ, தம்புராவின் சுருதிச் சத்தம் ஓடுங்கியபோது ஒருவரையொருவர் அறியாமல் தம் கண்களில் துளித்த நீரைத் துடைத்துக் கொண்டனர். நான் கண்களை மட்டும் துடைக்கவில்லை. மனத்தையும் துடைத்துத் துப்புரவாக்கினேன். 'என்னைப் பிரிந்து என் கணவரும் இப்படித்தானே வேதனையுறுவார்?' என்ற எண்ணம் எழுந்தபோது என் இதயத்தை யாரோ முறுக்கிப் பிழிவதைப் போல் உணர்ந்தேன்.

உள்ளத்திலே உணர்ச்சி அலைகள் கொந்தளிக்க வெளியே நடந்தபோது, "யாரது, மாலாவா?" என்று எனக்குப் பரிச்சயமான குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். இராமாயணம் நடந்த நாலாவது வீட்டின் வாசலில் எனது பள்ளித் தோழி பார்வதம் நின்று கொண்டிருந்தாள். அவள் வீடு அங்கே இருப்பதை அதுவரையில் மறந்திருந்தேன்.

"நீ கூட இராமாயணம் கேட்கக் கிளம்பி விட்டாயா?" என்று அவள் சொன்ன சொல் முள்ளாய் உறுத்தியது, என் நெஞ்சில். ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு, "நாலாவது வீட்டிலிருக்கிறவள் நீ ஏன் வராதிருந்து விட்டாய்? இராமாயணத்தின் விளக்கம் எத்தனை உயர்வாக இருந்தது, தெரியுமா?" என்றேன்.

"வரவேண்டியதுதான். ஆனால்..."

"என்ன பார்வதம்?"

"உனக்கு அவசரமில்லையானால் இப்படிச் சற்று வந்துவிட்டுப் போயேன்!" என்று கூறினாள்.

வீட்டினுள்ளே சென்றதும் ஆசனம் கொடுத்து உட்காரச் சொன்னாள்.

"இராமாயணம் கேட்க வேண்டியது அவசியம்தான். கேட்பவர்கள் அதன்படி நடக்க வேண்டுமல்லவா?"

நான் தடுமாறினேன். என் விஷயம் இவளுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? நான் அவரோடு கோபித்துக்கொண்டு வந்திருப்பது என்வரைக்கும் ரகசியமாக இருக்கிறது என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறேன்?

''ஆமாம்!'' என்று தடுமாறியபடி, சொன்னேன்.

''கேட்பவர்களுக்கே அப்படியென்றால் கதை சொல்பவர்கள் எப்படி நடக்க வேண்டும்?''

மீண்டும் எனக்கு அதிர்ச்சி. பர்வதம் பேசியது என்னைப் பற்றியல்ல. என் விஷயத்தைப் பற்றியதுமல்ல. அப்படியானால் அவள் கூறிய ரகசியம்...

''என்ன சொல்கிறாய், பர்வதம்?''

''ரசிகர்கள் உள்ளத்தை உருக்கும்படியாக ராமனின் பிரிவுத் துயரை வர்ணிக்கும் அந்த அம்மாள் தம் வீட்டில் மனைவியைப் பிரிந்து வாழும் மகனைப் பற்றிச் சற்றாவது சிந்திக்கிறார்களா? அல்லது அந்தப் பிரிவுக்குக் காரணமாக நிற்கும் தம் தவறை எப்பொழுதாவது உணர்ந்திருக்கிறார்களா? இராமாயணம் படித்தால் மட்டும் போதாது; பைபிள் படித்தால் மட்டும் போதாது; குர் ஆன், புத்தரது பொன்மொழிகள் இவைகளெல்லாம் படித்தால் மட்டும் போதாது. படிப்பவர்கள் அதனதன் வழியைப் பின்பற்றி நடக்காதவரை படித்ததனாலாய பயன் ஒன்றும் கிடையாது'' என்று படபடவென்று கூறி முடித்தாள்.

எனக்கு ஓரே அதிர்ச்சி.

''சொல்வதைச் சற்று விளக்கிச் சொல்ல முடியுமா?'' என்றேன். அவள் அதை விவரித்தாள்.

''ராமாயண உபந்நியாசம் செய்யும் சரசுவதி அம்மாளின் மகனுக்குப் பெண் கொடுத்தவர் ஒரு எழுத்தாளர். அவர் தமக்கு ஒரு படத்தில் ஒப்பந்தமாகியிருந்த பணத்தைக் கணக்கு வைத்துக் கொண்டு இந்தப் பெரிய இடத்துச் சம்பந்தத்துக்கு இசைந்து விட்டார். விவாகம் குறிக்கப் பட்டது. தேதி நெருங்கியது. அவர் எதிர்பார்த்த பணம் இன்னும் வந்துசேரவில்லை. அதற்காக நிச்சயித்த நாளைத் தள்ளவும் முடியாது; நிச்சயித்த வரனை மாற்றவும் முடியாது. தவியாய்த் தவித்தார். பிள்ளையைப் பெற்றவள் ஓடோடத் துரத்தினாள். ஊரார் தீர்ப்புக் கூறினர், குறிப்பிட்ட நாளில் முகூர்த்தம் நடக்கட்டும், பணம் வந்ததும் கொடுத்து விட்டுமென்று. .

'' சரசுவதி அம்மாளின் தீர்ப்பு வேறு விதமாக இருந்தது. எப்பொழுது பணம் கொடுக்க முடியுமோ, அப்பொழுது பெண் தம் வீட்டுக்கு வந்தால் போதும் என்று கூறி விட்டார்.



''டேய்! நான்தான் மாப்பிள்ளையாம்! எங்கே, எல்லாரும் வீட்டிலேந்து பட்சணமெல்லாம் கொண்டாங்க, பார்க்கலாம்!''

''மணவறையில் சந்தித்த தம்பதிகள் அதன்பின் இன்னும் சந்திக்கவில்லை. தீபாவளியும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த இரு இளம் உள்ளங்களின் தவிப்பை உணரத் தெரியாத அம்மாள் ராமர் - சீதை பிரிவையும் அவர்கள் துயரையும் வர்ணிக்கிறார். அதைத் திறந்த வாய் மூடாது மக்கள் ரசிக்கின்றனர். இப்பொழுது சொல், நான் வராதது தவறு என்பதை...''

நான் ஏன் பேசப் போகிறேன்? என் மனம்தான் என்னையே குற்றவாளியாக்கி இடித்துக் கொண்டிருக்கிறதே!

மறுநாள் காலையில் பர்வதம் என் வீட்டைத் தேடி வந்து விட்டாள்.

'' என்ன பர்வதம்! இவ்வளவு காலையில் எங்கே புறப்பட்டாய்? காரியமில்லாமல் நீ புறப்பட்டதில்லையே!'' என்றேன்.

'' அது சரி! உனது கேள்வியெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். உன்னையும் அழைத்துக் கொண்டு போகலாமென்று...''

'' விஷயத்தைச் சொல்லாமலே இப்படி மூடு மந்திரமாகப் பேசினால்...''

'' சரசுவதி அம்மாளின் வீட்டுக்கு நாம் போகப் போகிறோம்!''

''அந்த அம்மாள் வீட்டுக்கா? அவசியம் நானும் வருகிறேன். அவர்கள் உபன்யாசத்தில் மனத்தைப் பறி கொடுத்து விட்டேன். அவர்களை நேரில் பார்த்து எனது பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும்...''

'' சரி, வா, போகலாம்!'' என்று பர்வதம் என்னை அழைத்துக் கொண்டு சென்றாள்.

பர்வதமும் நானுமாக இராமாயணம் நடத்தும் இல்லத்துக்குச் சென்றோம். விளக்கம் நடக்கும் நேரத்தில் அல்ல; பகல் நேரத்தில். எங்களைக் கண்டதும் யாரோ எவரோ என்று வரவேற்றாள் சரசுவதியம்மாள்.

''நேற்று உங்கள் காவியத்தைக் கேட்டு மகிழ்ந்தவர்களுள் நானும் ஒருத்தி. நீங்கள் ராமனின் துயரை எடுத்துக்கூறிய போது அத்தனை உள்ளங்களும் கண்ணீரைக் கொட்டி விட்டனவே...''

''புதிதாக நான் என்ன சொல்லி விட்டேன்? காவியத்தில் உள்ளதை விளக்கிச் சொன்னேன்.''

''அதை உணரும் உள்ளம் உங்களுக்கு இருப்பதால்தான் அத்தனை உணர்ச்சியுடன் விளக்கம் கொடுக்க முடிகிறது...''

''வெளியே விருந்து யாரோ வருவது போலிருந்தது. எங்களுடைய பேச்சு அறுந்தது. வந்தவர் வேறு யாருமல்ல; சரசுவதி அம்மாளின் பிள்ளைதான்.

இவ்வளவு நேரமும் மலர்ந்த முகத்துடன் இருந்த சரசுவதியம்மாளின் முகத்தில் கோபம் சுடர் விட்டது. '' உனக்காக எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது? சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே செல்லக் கூடாதோ?'' என்று அலுப்பாகக் கூறியதை அவர் பிள்ளை காதில் வாங்காதவரைப் போல் மாடிக்குப் போய்விட்டார்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான்'' என்று முணுமுணுத்தார் சரசுவதி அம்மாள்.

''இதற்குத்தான் வயது வந்த பிள்ளைகளை அதனதன் உரியவளைத் தேடி ஒப்படைத்து விடவேண்டும்'' என்று பர்வதம் சற்றுச் சூடேறிய குரலில் பேசினாள். சரசுவதி அம்மாள் முகத்தில் சற்று வெறுப்பான பார்வை வீசியது.

''உங்கள் பிள்ளைக்குக் கல்யாணம் ஆகி விட்டதோ?'' என்று ஒன்றும் தெரியாதவளைப் போல் கேட்டேன்.





இதற்குள் பர்வதம் இடைமறித்துப் பேசினாள். "பெரியம்மா! நான் சொல்கிறேனென்று கோபித்துக் கொள்ள வேண்டாம். உங்கள் கலை ஞானத்துக்குப் பழுது சொல்ல வந்ததாகவும் எடுத்துக் கொள்ள வேண்டாம். சீதையைப் பிரிந்த ராமரின் துயரை உணரும் சக்தி வாய்ந்த தங்கள் உள்ளம் ஒரு கணம், மனைவியைப் பிரிந்து வாடும் உங்கள் மகனின் உள்ளத்தை உணரமுடியுமானால் இரு இளம் உள்ளங்களின் வாழ்வு மலரும். இதைச் சொல்லத்தான் உங்களைக் காண வந்தேன். உங்களுக்கு யோசனை சொல்லும் வயது எனக்கில்லை. ஆனால் எண்ணம் இருந்ததால் சொல்ல வந்தேன். மன்னிக்கவும். தங்கள் மருமகள் என் மாமாவின் பெண் என்பதைச் சொல்லிக் கொள்வதால் தவறு ஒன்றுமில்லை என்று எண்ணுகிறேன். நான் வருகிறேன்" என்று கூறி எழுந்தாள் பர்வதம்.

அடுத்த கணம் அங்கே ஒரு பூகம்பத்தையோ அல்லது எரிமலையின் வெடிப்புச் சிதறலையோ எதிர்பார்த்தேன். ஆனால் என்ன ஏமாற்றம்! சரசுவதி அம்மாளின் கண் கலங்கியது. மறுகணம் முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு அழலானார்.

"அனாவசியமாக உங்களைப் புண்படுத்தி விட்டாள், இவள். இதற்கு என்று தெரிந்திருந்தால் நான் அவளுடன் வந்திருக்க மாட்டேன். உங்கள் மேதையைப் புகழ்ந்து உங்களைப் பாராட்டவே வந்தேன். வந்த இடத்தில் இப்படி ஒரு அசந்தர்ப்பம் நிகழ்ந்ததற்காக வருந்துகிறேன்" என்று கூறி நான் எழுந்த போது சரசுவதி அம்மாள் எங்களைத் தடுத்தார்.

"அறிவாளிகளாக இருப்பவர்களிடமும் அவர்கள் அறியாமலே சிறு குறைகள் ஏற்பட்டு விடுவதுண்டு. அதை எடுத்துச் சொல்லப் பலர் தயங்குவார்கள். நல்லதைச் சொல்வதில் தவறில்லையென்று துணிந்த உங்களைப் பாராட்டுகிறேன். நீங்கள் எனக்குப் பெற்ற பெண்மாதிரி. ஒருவேளை எனக்கும் பெண் இருந்திருந்தால் அவளும் இதைச் சொல்லியிருப்பாள். பெண் இல்லாத குறைதான் இந்தத் தவறுக்குக் காரணமாக நேர்ந்து விட்டதோ, என்னவோ? எதுவானாலும் என்ன; நாளை இதே நேரம் வந்தீர்களானால் என் வீட்டு ஞானஒளியை நீங்கள் காணலாம்" என்று கூறியபோது எங்கள் உச்சி குளிர்ந்தது; உள்ளம் மகிழ்ந்தது.

இனி எங்களுக்கு அங்கு வேலையில்லை. நிறைந்த மனத்துடன் வெளியே வந்தபோது பர்வதம் சொன்னாள்: "பெரிய மனிதர்கள் என்பதற்காக அவர்கள் செய்யும் தவறைச் சொல்லப் பயந்திருந்தால் அவர்கள் தவறு மேலும் மேலும் வளர்ந்து கொண்டு தானிருக்கும். செய்பவர் யார் என்பதைக் கவனியாமல் செய்கின்ற காரியம் எது என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்."


"பர்வதம்! நீ சரசுவதி அம்மாளை மட்டும் மாற்றி விட்டதாக எண்ணிக் கொள்ளாதே! என்னையும் திருத்தி விட்டாய்" என்றேன்.

ஒன்றும் புரியாது விழித்தாள் பர்வதம். விஷயத்தை விளக்கிச் சொன்னேன். "நல்லவர்களும், நல்ல விஷயமும் என்றும் எவர்க்கும் நலத்தையே கொடுக்கும். உலகம் புகழும் மகா காவியத்தால் திருந்தியது நானும் சரசுவதி அம்மாளும் மட்டுமல்ல. எங்களைப் போல இன்னும் எத்தனை எத்தனையோ மக்களும் சீர்திருந்துவார்கள்" என்று கூறி விட்டு அன்றே என் கணவர் இருக்குமிடம் செல்லப் போவதையும் நான் அவளிடம் சொன்னேன்.

** ** **

தீபாவளித் திருநாளின் சிறப்புக்காக என் கணவரைத் தேடிச் சென்று கொண்டிருந்தேன் நான். அதே காரணத்துக்காகத் தம் மருமகளைத் தேடிச் சென்று கொண்டிருந்த சரசுவதி அம்மாளும் அதே வண்டியில் வந்து சேர்ந்தார்.

ஓடும் ரயிலில் ஒரே திண்ணையோடு எதிர் எதிராக அமர்ந்து இருவரும் சென்று கொண்டிருந்தோம்.


எல்லோருக்கும் "ரைட்ஷார்ப்"பின் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
RITESHARP
Pens
Smart
STURDY
Smooth writing
MANUFACTURED BY:-
RITESHARP PEN MFG. CO. GHORUPDEV, BOMBAY 10
Representatives: GEETHA AGENCIES, 9, Kasi Chetty Street, Madras-1
Sold and Serviced by: GEM & CO., 325-326, Netaji Subhas Chandra Bose Road, Madras-1


தீபாவளி வாழ்த்துக்கள்!
அனைவருக்கும் ஏற்றவண்ணம் சௌகர்யமான கால வரம்பினுள்ளும், சந்தா தொகைகளிலும், பல ஆண்டுகளாக சீட்டுகள் நடத்தி சேவை புரிந்து வருகிறோம். யாவரும் இவற்றில் சேர்ந்து நலனடையும்படி கோருகின்றனம்.
மதராஸ் கிளை:
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்-5.
கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
333, தளி ரோடு, கோழிக்கோடு-2
போன்: 563
தந்தி: "MAMBILA"

KF-569


எல்லோ
லேபிள்
டீ
LIPTON'S
YELLOW LABEL TEA
LIPTON (INDIA) LIMITED (Incorporated in England)
LYC-22 TM


• எழில் மிகுந்தது எல்லோரா சிற்பங்கள்...
• எங்கும் புகழ் பெற்றது
M.S
பட்டணம் பொடி
NO.1
MADRAS SNUFF
POST BOX. NO.
தயாரிப்பவர்:
மோகன் கம்பெனி,
P.B.No.1161, சென்னை-21.



ஸீராங்கினி

ஆனந்தி



இலங்கைத் தமிழர்களின் பண்பாடு மிக உயர்ந்ததென்றும், விருந்தோம்பலில் அவர்களுக்கு இணையே ' ஈடையாது என்றும் பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் கதை சொல்லும் திறனில் அவர்கள் சளைத்தவர்களல்ல என்பதைத் திரு சத்தியலிங்கம் ஒருநாள் நிரூபித்துவிட்டார்.

சத்தியலிங்கம் அடிக்கடி தமிழ் நாட்டுக்கு வந்து போவது வழக்கம். இலங்கைத் திலைத் தாயகமாகப் போற்றும் பண்பை உடையவரானாலும், தமது முன்னோர்கள் வாழ்ந்த தமிழ் நாட்டின்மீதும் அவருக்கு பக்தி இருந்தது

எப்போது சென்னைக்கு வந்தாலும் என்னை வந்து பார்த்து விட்டுப் போவார். குழந்தைகளுக்கு அழகான விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கிக் கொண்டு வருவார். அவருக்கு நன்றி தெரிவித்துச் சாத்தியமில்லாதபடியால் நான் அந்த வழக்கத்தையே விட்டுவிட்டேன்.

சில மாதங்களுக்கு முன்னால் இலங்கைத் தீவில் நடந்த கலவரங்களையெல்லாம் பற்றிப் பத்திரிகைகளில் படித்தபோது எனக்குத் திரு சத்தியலிங்கத்தின் ஞாபகம்தான் முக்கியமாக வந்தது. சிங்களவர்களைத் தமது உடன்பிறந்தாரைப் போல் பாவிப்பவர் அவர். இப்படிச் சிங்களவர்கள், தமிழர்களைத் தாக்கியும், அடித்தும், வீட்டுக்கு நெருப்பு வைத்தும், சொத்துக்களைக் கொள்ளையடித்தும் அட்டூழியங்கள் செய்வதை எப்படிச் சகிப்பார் என்று வருந்தினேன்.

இப்படிச் சில நாட்கள் செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஒரு நாள் இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தபோது திடீரென்று திரு சத்தியலிங்கம் வந்து சேர்ந்தார்.

" அடடா ! இப்போதுதான் உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்களே. இந்த அட்டூழியங்களையெல்லாம் எண்ணமாய்த் தான் நீங்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்களோ என்று வருந்திக் கொண்டே இருந்தேன். ஆமாம்! இந்தப் பொறுமைத் தீவில் வீராத சிங்களவர்கள் யாருமே இல்லையா ?" என்றேன்.

"இல்லாமலிருப்பார்களா ? எத்தனையோபேர் பொறுமையால் வெந்து கருகினாலும், நல்ல இதய முடையவர்களும் இல்லாமல் போகவில்லை. தமிழர்களிடம் உள்ளன்போடு பழகும் சிங்களவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்."

" அங்கு நடந்தவைகளையெல்லாம் விவரமாகச் சொல்லுங்களேன்" என்றேன்.

" சொல்லத்தானே வந்திருக்கிறேன். நான் சொல்வது கதை மாதிரிதான் இருக்கும். நிஜமாக நடந்தது என்றே தோன்றாது. அதனால் உண்மையான பெயர்களைச் சொல்லாமல் கதை மாதிரியே சொல்கிறேன். அப்போதுதான் தயக்கமில்லாமல் சொல்ல முடியும்" என்றார் சத்தியலிங்கம்.

" சரி! கதையைச் சொல்லுங்கள் " என்று கூறி விட்டுக் காதுகளைத் தீட்டிக் கொண்டேன்.

* * *

நான் ஒரு முக்கிய காரியமாகக் கொழும்புவுக்குச் சென்று விட்டு அங்கிருந்து, பொலன்னருவாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன்.

ரயிலில்' அதிகக் கூட்டமில்லை. நான் ஏறிய பெட்டியில் இன்னும் மூன்று பேர்கள் இருந்தார்கள்.

அவர்களுள் முத்துக் குமாரஸ்வாமி என்ற இளைஞனை எனக்கு முன்னமேயே தெரியும். எனக்கு ரொம்ப நெருங்கிய நண்பரான தம்பிப்பிள்ளையின் மகன் அவன். அவனுடன் பிரயாணம் செய்த மற்ற இருவரும் இளம் பெண்கள். ஒரு பெண்ணைப் பார்த்ததுமே அவள் முத்துக்குமாரசாமியின் தங்கையாக இருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிந்தது. மற்றொருத்தி சிங்களப் பெண்.

' அப்பா அம்மா எல்லாரும் சுகமா?" என்று விசாரித்தேன்.

" எல்லோரும் சுகம் தான். உங்கள் வீட்டில் சுகம்தானே ?.... குணவதி ! இவரை உனக்குத் தெரியவில்லையா ? அப்பாவைப் பார்க்க முன்பெல்லாம் அடிக்கடி வருவார் " என்றான் முத்துக் குமாரசாமி.



"ஞாபகம்இருக்கிறது" என்றாள்அவள்.

பிறகு முத்துக்குமாரசாமி சிறிது தயக்கத்துடன், "இவள் என் தங்கையுடன் படிக்கிறாள். லோராங்கினி என்று பெயர்" என்று அறிமுகப்படுத்தி வைத்தான்.

லோராங்கினி தன் அழகுபடுத்தப்பட்ட தளிர்க் கரங்களால கைகூப்பிக் கொண்டே, "வணக்கம்" என்றாள். அவளுடைய பொன் நிற வதனத்தில் புன்னகை மிளிர்ந்தது.

வண்டி வேகமாகச் செல்லத் தொடங்கியது. முதல் நாளிரவு பல வேலைத் தொந்தரவுகளால் நான் மூன்று மணி வரை தூங்கவில்லை. ஆகவே சற்றுக் கண்ணயரலாம் என்று சாய்ந்து கொண்டேன். அப்படியே தூங்கிப் போனேன்.

தூக்கத்தில் ஒரு விநோதமான கனவு கண்டேன்.

நான் முத்துக்குமாரசாமியின் வீட்டுக்குப் போகிறேன். அவன் என்னை வரவேற்று உபசரிக்கிறான். 'லோராங்கினி! தேநீர் கொண்டு வருகிறாயா?' என்று கேட்கிறான்.

'இதோ வருகிறேன்' என்று உள்ளே இருந்து குரல் கேட்கிறது. இரண்டு நிமிடங்களில் அவள் வருகிறாள்.



'இவள்தான் என் மனைவி' என்கிறான் முத்துக்குமாரசாமி.

நான் ரயிலில் பார்த்த அதே பெண் தான், என் கனவிலும் காட்சியளித்தாள். ஒரே ஒரு வித்தியாசம். ரயிலில் பார்த்த போது லோராங்கினி, சிங்களவர்களைப் போல உடையணிந்து கொண்டிருந்தாள். கனவில் தமிழர்களைப் போலச் சேலை உடுத்திக் கொண்டிருந்தாள்.

நான் கண் விழித்தேன். முத்துக்குமாரசாமியும் தூங்கிக் கொண்டிருந்தான். லோராங்கினியும், குணவதியும் ஒரு மூலையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

நான் என் விசித்திரக் கனவைப் பற்றி எண்ணமிட்டேன். என்ன ஒரு பைத்தியக்கார மனம்? சே! நமக்கு இதெல்லாம் என்ன வம்பு? வயதாகிவிட்டபோதிலும், சிறுபிள்ளைத்தனமான எண்ணங்களுக்கு இடம் கொடுக்கிறோமே என்று என்னையே கண்டித்துக் கொண்டேன்.

பொலன்னறுவையில் இறங்கியபோது விடைபெற்றுக் கொண்டான் முத்துக்குமாரசாமி.

"ஒருநாள் அவசியம் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும். அப்பா ரொம்ப மகிழ்ச்சியடைவார்" என்று சொல்லி விட்டு வாடகைக் கார் கொண்டு வரச் சென்றான்.

நான் என்னுடைய காரில் ஏறச் சென்றேன். என் காருக்குப் பின்னால் ஒரு சிவப்புக் கார் நின்று கொண்டிருந்தது. காருடைய எண் பலகையில் 'சிங்கள ஸ்ரீ' போடப் பட்டிருப்பதைக் கவனித்தேன். அதில் ஒரு சிங்கள இளைஞன் கையில்சிகரெட்டுடன் உட்கார்ந்து கொண்டு தலையை வெளியே நீட்டி எதையோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பார்த்த திக்கை நானும் திரும்பிப் பார்த்தேன். லோராங்கினியும், குணவதியும் கைகோத்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். வாடகைக் கார் கொண்டு வந்த முத்துக்குமாரசாமி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். மூன்று பேரும் அரை நிமிஷம் நின்றார்கள். குணவதியைப் பார்த்து முத்துக்குமாரசாமி ஏதோ சொன்னான். லோராங்கினி தலையை ஆட்டினாள். மூவரும் சிரித்தார்கள். பிறகு சென்று வாடகைக் காரில் ஏறிக் கொண்டார்கள்.

இதையெல்லாம் அந்தச் சிவப்புக் காரில் இருந்த இளைஞன் பார்த்துக் கொண்டிருந்தான். டாக்ஸி கிளம்பியதும் சிகரெட்டை வீசி எறிந்துவிட்டுக் காரை ஓட்டத் தொடங்கினான்.

நானும் உடனே காரில் ஏறிக் கொண்டேன். "அந்தச் சிவப்பு வண்டிக்குப் பின்னாலேயே போ" என்று டிரைவரிடம் சொல்லி விட்டுப் பின்னால் சாய்ந்து கொண்டேன். அந்தக் கார் டாக்ஸியைப் பின்தொடர்ந்து செல்லுமென்று எதிர்பார்த்தேன். சிவப்புக் காரில் செல்லும் இளைஞன் அந்த டாக்ஸிமீது காரை வேண்டுமென்று மோதி நிறுத்துவானோ என்றெல்லாம் கூட நினைத்தேன். ஆனால் என்ன ஏமாற்றம்! அந்த டாக்ஸி வேகமாகப் போய்விட்டது. ஒரு மைல் தூரம் போவதற்குள் அவர்களை அவன் பின் தொடரவில்லை என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. அதனால் ஒரு நிம்மதி ஏற்பட்டபோதிலும், ஒருவித ஏமாற்றமும் உண்டாயிற்று என்பதை ஒப்புக் கொள்கிறேன். சீக்கிரமாகவே முத்துக்குமாரசாமியைச் சந்தித்து இந்த இளைஞனைப் பற்றி எச்சரிக்கை செய்து வைக்க வேண்டும் என்று நிர்மானித்துக் கொண்டேன். டிரைவரை வீட்டுக்குப் போகும்படி கூறினேன்.

மறுநாளே தம்பிப் பிள்ளையின் வீட்டுக்குச் சென்றேன். அவர் என்னை அளவில்லாத ஆர்வத்துடன் வரவேற்றார்.

"நேற்று முத்து சொன்னான். ஆனால் இன்றே வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ரொம்ப மகிழ்ச்சி" என்று சொல்லி விட்டு முத்துக்குமாரசாமியைக் கூப்பிட்டார். அவன் மாடியிலிருந்து இறங்கி வந்தான். எங்கேயோ கிளம்புவதற்குத் தயாராக இருந்தது போலத் தோன்றியது.

"நீ எங்கேயாவது போவதாக இருந்தால் கிளம்பு, எனக்காகத் தயங்க வேண்டாம், நானும் உடனே போக வேண்டும்" என்றேன்.

"சினிமாவுக்குப் போகலாமென்று தான் புறப்பட்டேன். வேறொன்றுமில்லை" என்றான் முத்துக்குமாரசாமி.

குணவதி அதற்குள் தேநீரும் பலகாரங்களும் எடுத்துக் கொண்டுவந்தாள். நான் தேநீர் பருகியதும் கிளம்பினேன்.

"மறுபடியும் எங்களை மறந்துவிடக் கூடாது. அடிக்கடி நீங்கள் வர வேண்டும்" என்று கூறி விடை கொடுத்தார் தம்பிப்பிள்ளை.

நான் முத்துக்குமாரசாமியைப் பார்த்து, "என்னுடன் வாயேன். உன்னை சினிமா தியேட்டரிலே இறக்கி விட்டுப் போகிறேன்" என்றேன்.

கொஞ்சதூரம் சென்றதும், முத்துவிடம் நான், "முத்து! காலம் கெட்டுக் கிடக்கிறது. நான் சொல்வதை நீ வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே. நீ நேற்று குணவதியையும், லோராங்கினியையும் அழைத்துக் கொண்டு டாக்ஸியில் சென்றதை ஒருவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் நல்லவனாகத் தோன்றவில்லை. இதைப் பற்றி உன்னை எச்சரிக்கை செய்யவே இன்று வந்தேன். உன் தந்தை எதிரில் சொல்வதை நீ விரும்பாமலிருக்கலாம் என்று தான் உன்னை என்னுடன் வரச் சொல்லிக் கூப்பிட்டேன்" என்றேன்.



முத்து ஒரு கணம் பேசாமலிருந்தான்.

"அவன் வெப்புநிறக் காரில் வந்தானா?" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்றேன்.

"நான் ஒன்றும் தவறான காரியம் செய்யவில்லை."

"நான் அப்படிச் சொல்லவில்லையே? உன்னிடம் எனக்கு ஒருவித பிரியம் ஏற்பட்டு விட்டது. உன்னுடைய பேச்சும் குணமும் ரொம்பப் பிடித்திருக்கின்றன. அதனால்தான் இதை உன்னிடம் கூறுவதற்காக வந்தேன்.

"இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் என்ன நடக்குமென்று சொல்ல முடியாது. ஆகவே நீ இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இன்று நீ ஸாராங்கினியைப் பார்த்தால், 'இன்னும் சில நாட்களுக்கு ஒருவரையொருவர் சந்திக்காமல் இருப்பது நல்லது' என்று சொல்லிவிடு. அதுதான் புத்திசாலித்தனம் என்று எனக்குப் படுகிறது" என்றேன்.

அதற்குள் தியேட்டர் வந்து விட்டது.

"உங்கள் உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். உங்களுடைய நட்பு கிடைத்ததை நான் ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்" என்று கூறிவிட்டு இறங்கினான் முத்துக்குமாரசாமி.

நான் காரைத் திருப்பச் சொன்னேன். தியேட்டர் வாசலில் ஒரு பக்கமாகப் பல கார்கள் வரிசையாக நின்றன. அதில் ஒரு வெப்பு நிறக் கார் என் கண்ணில் பட்டது. நான் உடனே டிரைவரிடம் காரை நிறுத்தச் சொல்லி இறங்கினேன். ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டு தியேட்டரில் நுழைந்தேன். நான் எதிர்பார்த்தபடியே ஸாராங்கினியும் வந்திருந்தாள். நான் உட்கார வேண்டிய இடம் அவர்களுக்குப் பின்னால் நாலு வரிசைகள் தள்ளி இருந்தது. சுற்று முற்றும் பார்த்தேன். நான் நினைத்த மாதிரியே எனக்கு முன்னால் இரண்டு வரிசைகள் தள்ளி வலது பக்கக் கோடியில் அந்தச் வெப்புக் கார் வாலிபன் உட்கார்ந்திருந்தான்.

விளக்குகள் அணைந்து விட்டன.

இடை நேரத்தில் அவன் அங்கே இல்லை என்பதைப் பார்த்தேன். வெளியே சென்று பார்த்தபோது வெப்புக் காரும் இருக்கவில்லை.

'நாமும் போய்விடலாம்' என்று முதலில் நினைத்தேன். ஆனால் அவன் திரும்பி வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்? மேலும் சினிமாவின் கதை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. காதலர்கள் இருவரும் சொல்லி முடியாத கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இடைவேளையின் போது பிரிந்துவிட்டிருந்தார்கள். அவர்கள் முடிவு என்ன ஆகிறது என்று தெரியாமல் வீட்டுக்குப் போக மனம் வரவில்லை.

படம் சுபமாக முடிந்து வெளியே வந்தபோது ஸாராங்கினியையும், முத்துவையும் அவரவர்கள் வீட்டில் பத்திரமாகச் சேர்த்து விட்டுப் போகலாமே என்று தோன்றியது. நான் அவர்கள் வரும் வழியைப் பார்த்துக் கொண்டே நின்றேன். அவர்கள் விஷயத்தில் எனக்குத் திடீரென்று இவ்வளவு அக்கறை உண்டானது எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

நான் அவர்களைப் பார்த்து என் எண்ணத்தைச் சொன்னதும், இருவரும் சந்தோஷமாக என்னுடைய காரில் ஏறிக் கொண்டார்கள்.

"நீங்கள் சொன்னதை ஸாராங்கினியும் ஆமோதிக்கிறாள். சில நாட்கள் சந்திப்பதில்லை என்று நிர்மானித்திருக்கிறோம்" என்றான் முத்து.

"அதுதான் சரி! தமிழர்கள்மீது உள்ள பகையில் இன்று என்ன நடக்குமென்று சொல்ல முடியாமல் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் கடையடைப்பும், 'கர்ப்யூவு'மாக இருக்கிறது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சொந்த விரோதங்களை யெல்லாம்கூட இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யும் வஞ்சகர்களும் இருக்கிறார்கள்" என்று சொல்லி விட்டு, "அந்த மனிதன் யார் ஸாராங்கினி?" என்று கேட்டேன்.

"அவன் பெயர் தஹநாயகா. அவன் எங்களுக்கு உறவினன். என்மீது அவனுக்குக் காதலாம். ஏதேதோ பிதற்றிக் கொண்டிருப்பான். மகா அயோக்கியன்" என்றாள் ஸாராங்கினி.

ஸாராங்கினியிடம் எனக்கு எத்தனையோ கேள்விகள் கேட்க வேண்டு மென்று தோன்றியது. ஆனால் கேட்க மனம் வரவில்லை. ஒரு இளம் பெண்ணிடம் ரொம்ப அறிமுகமில்லாத நான் எப்படிச் சொந்த விஷயங்களைப் பற்றிக் கேட்பது?


"உங்களுக்கு எங்கள் விஷயத்தில் ஏன் இவ்வளவு சிரத்தை?" என்று கேட்டான் முத்துக்குமாரசாமி.

"இளங் காதலர்களுக்கு உதவி செய்வதில் ஒரு இன்பம் இருக்கிறதல்லவா? சினிமாவில் காதலர்கள் கஷ்டப்பட்டாலே பொறுக்கவில்லையே! அவர்கள் ஒன்று சேரவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறோமே. நிஜமான வாழ்க்கையில் காதலர்களுக்கு இடையூறுகள் வந்தால் அவர்களுக்குக் கொஞ்சம் உதவி செய்யக் கூடாதா?"

"ஆமாம்! உங்களுக்கு எப்படி எங்களைப் பற்றித் தெரிந்தது?"

நான் ரயிலில் கண்ட கனவை அவர்களிடம் சொன்னேன்.

முத்து நெடிய பெருமூச்சுடன், "அந்த மாதிரி நான் சொல்லும் காலம் எப்போது வரப்போகிறதோ தெரியவில்லை.





உங்கள் கனவு. என்னுடைய பகற் கனவாகி விடாமல் பலிக்க வேண்டுமே என்று கவலையாக இருக்கிறது'' என்றான்.

''ஆமாம்! உங்களுடைய திருமணத்துக்கு உன்னுடைய பெற்றோர்கள் சம்மதித்து விட்டார்களா?''

''அவர்களைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. என் தந்தை விசாலமான இதயம் உடையவர். ஒருநாளும் எங்களுக்குக் குறுக்கே நிற்க மாட்டார். ஆனால் இவளுடைய குடும்பத்தினர்தான் குறுக்கே நிற்கிறார்கள்.''

''அது நான் எதிர்பார்த்ததுதான்!''

''இதில் என்ன வேடிக்கை என்றும் அவர்கள் வீட்டில் இவளுக்கு எல்லா விதசுதந்திரங்களும் அளித்திருக்கிறார்கள். பேச்சில் சுதந்திரம், படிப்பில் சுதந்திரம், வெளியே போகச் சுதந்திரம், அலங்காரத்தில் சுதந்திரம் என்று அவளுக்குச் சகல சுதந்திரங்களும் அளித்திருக்கிறார்கள். திருமணத்திலகூட அவளுக்குச் சுதந்திரம் அளித்து விடுவார்கள். நான் சிங்களவனாக இருந்தால் ஒருகாலும் தடை சொல்ல மாட்டார்கள். நான் அந்நியன் என்று நினைக்கிறார்களே, அதுதான் துயரமாக இருக்கிறது'' என்றான் முத்து.

''பொறாமை தனி மனிதர்களையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிடும். அதிலும் ஒரு இனத்தாருடைய உள்ளத்தில் பொறாமைத் தீ புகுந்து விட்டால் அதன் சக்தி பலகோடி மடங்கு அதிகமாகி விடுகிறது. தீய சக்திகளின் வேகம் மிகவும் அதிகம், முத்து! அது மனிதர்களை மிருகமாக்கிவிடுகிறது. கோபத்தை எடுத்துக் கொள். கோபம் வந்தால் என்ன செய்கிறோம் என்று தெரிகிறதா? நாம் பின்னால் அவமானப்படக்கூடிய விஷயங்களைக் கோபத்தில் சில சமயம் செய்து விடுகிறோம். கோபமாவது வெளிப்பட்ட உடனே மறந்து போகிறது. பச்சாத்தாப உணர்ச்சி உண்டாகிறது. பொறாமை அப்படி அல்ல. அது சிறிது சிறிதாக மனத்தை விஷ மயமாக்கி விடுகிறது. அதன் கொடுமை சொல்ல முடியாதது.''

''நம்மை ஏன் இப்படி வெறுத்து ஒதுக்குகிறார்கள்?'' என்று கேட்டான் முத்து பரிதாபமாக.

''இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவே முடியாது முத்து. உலகத்தில் மனிதன் நாகரிகமடைந்து, சுகவாழ்வு வாழ ஆரம்பித்த பிறகுதான் இந்த மாதிரி இன வேற்றுமைக் கொடுமைகளெல்லாம் தோன்றியிருக்கின்றன. முதலில் அது நிற வேற்றுமையாக இருந்தது. பிறகு, மத வேற்றுமை, மதத்துக்குள் ஜாதி வேற்றுமை, ஜாதிக்குள் மொழி வேற்றுமை, மொழிக்குள் இசை வேற்றுமை என்று வேர் விட்டுக் கிளை விட்டுத் தழைத்து வளர்ந்திருக்கிறது. பிரளய காலம் வரும் வரை இதற்கு விமோசனமில்லை என்று தோன்றுகிறது. நம்மைப்போன்ற அப்பாவிகள் என்றும் சங்கடப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்'' என்றேன்.

* * *

ஒரு வாரம் கழித்து முத்துக்குமாரசாமி என்னைத் தேடிக்கொண்டு வந்தான்.

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன்'' என்றான்.

''என்ன விஷயம்? சொல்லு!''

''நாங்கள் கல்யாணம் செய்து கொண்டு விடுவதாக நிச்சயித்து விட்டோம்'' என்றான் முத்து.

''என்ன?''

''ஸூராங்கினியால் இனி பொறுக்க முடியாதாம். வீட்டில் ரொம்பப் படுத்தி வைக்கிறார்களாம். என்னைக் கொன்று விடப் போவதாகச் சொன்னார்களாம். கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் இந்தப் பயமுறுத்தல்களையெல்லாம் கேட்க வேண்டாம் அல்லவா? பிறகு என்னதான் இருந்தாலும் பெண்ணுடைய வாழ்வைக் குலைக்க அவள் தந்



தைக்கு மனம் வராது. நீங்கள்தான் சாட்சிக்கையெழுத்து போடவேண்டும்.''

''கொஞ்சம் பொறு. அப்பனே! இன்று ஊர் நிலைமை எப்படி இருக்கிறதென்று தெரியுமா? இன்றிரவு பொலன்னருவா ஒரே அமர்க்களப்படப் போகிறது. நாளைக் காலை வரை நீயும் நானும் உயிரோடு இருந்தால் கல்யாணமும் செய்து கொள்ளலாம், கையெழுத்தும் போடலாம். அதுவரையில் பேசாமல் ஸூராங்கினியை மறந்துவிடு.''

எந்த வேளையில் நான் அப்படிச் சொன்னேனோ தெரியவில்லை.

''நீங்கள் ஏன் இன்று இப்படி வெறுப்புடன் பேசுகிறீர்கள்? நீங்கள் ஒருவர்தான் துணிந்து கையெழுத்துப் போடுவீர்கள் என்று நம்பி வந்தேனே!''

''கையெழுத்து போடுவது என்ன பிரமாதம், முத்து? ஆனால் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளைச் சிறிதாவது சிந்தனை செய்தாயா?''

''நன்றாகச் சிந்தித்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.''

''நன்றாக என்றால் என்ன பொருள்? ஸூராங்கினி தன் பெற்றோர், தனக்குரிய சொத்து, தாய்நாடு எல்லாவற்றையும் உனக்காகத் துறக்கத் தயாராக இருக்கிறாளா?'' என்றேன்.

''இருப்பதனால்தான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம்.''

''சொல்வது சுலபம். செய்வது மிகக் கடினம். சேலை உடுத்திக் கொள்ளவும், தமிழ் பேசவும் கற்றுக் கொள்வது எளிது. நீ உனது நாட்டைத் துறப்பது கஷ்டம். பிரஜா உரிமை உனக்குக் கிடைக்காவிட்டால் என்ன செய்வாய்? இனிமேல் வறுமைக்கும் தயாராக இருக்க வேண்டும். சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்து விட்டால் சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்?''

''அப்படிக் கஷ்டம் நேர்ந்தால் இந்தியாவுக்குச் சென்று பிழைத்துக் கொள்கிறேன். அவள் எல்லாவற்றுக்கும் துணிந்துதான் இருக்கிறாள்.''

''உனக்கு அவள்மீது ஏதோ காதல் என்கிறாயே. இத்தனை கஷ்டங்களுக்கும் அவளை உள்ளாக்க உனக்குச் சம்மதமா?''

''உங்களுக்கு எப்படி விளக்குவது? அவளிடம் ஆயிரந் தடவைகள் சொல்லிவிட்டேன். எனக்குப் பிரஜா உரிமை கிடைத்தால் மணந்து கொள்கிறேன். இல்லாவிட்டால் என்னை மறந்து விடு என்று சொல்லியாகி விட்டது. அவள்தான் ஒற்றைக் காலில் நிற்கிறாள். நாளைக்கே ரிஜிஸ்தர் செய்து விடவேண்டுமாம். உடனே ஏற்பாடு செய்யாவிட்டால், 'விஷம் சாப்பிட்டு விடுவேன்' என்று பயமுறுத்துகிறாள்.'' முத்துக்குமாரசாமி அழுது விடுவான்போலிருந்தது.

''நிஜமாகவே ஸூராங்கினி உன்னை மணப்பதற்குச் சிறிதளவும் தயங்கவில்லையா? கோபித்துக் கொள்ளாதே. சாட்சியாகக் கையெழுத்து போடச் சொல்கிறாய் அல்லவா? அதனால்தான் கேட்கிறேன்.''

''ஆரம்பத்தில் அவளுக்குச் சிரமமாகத்தான் இருந்தது. நாங்கள் சந்தித்து இரண்டு வருடங்களாகின்றன. ஒருவரையொருவர் மறந்துவிடுவதென்று இதோடு எத்தனையோ தடவைகள் சபதம் செய்து விட்டோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் தோல்விதான். ஸூராங்கினிக்கு ஆரம்பத்தில் என்னை மணந்து கொள்ளும் எண்ணமே இருக்கவில்லை.

''நாங்கள் சந்தித்த வேளை என்ன வேளையோ தெரியவில்லை. எவ்வளவு உறுதி செய்து கொண்டாலும் எங்கேயாவது சந்தித்து விடுவோம். மறுபடியும் மனம் கேட்காது. ஒரு சந்திப்பிலிருந்து இன்னொரு சந்திப்பு தொடர்ந்தது. ஒவ்வொரு தடவையும் இதுதான் கடைசித் தடவை என்று சொல்லிக் கொள்வோம். 'என் வீட்டில் நான் எப்படி உங்களைக் காதலிப்பதாகக் கூறுவேன்? ஒருநாளும் சம்மதிக்க மாட்டார்கள்' என்பாள்.

''நான் எப்படி உங்களை மணந்து கொள்ள முடியும்? நமது பழக்க வழக்


Sewing
Becomes
a Pleasure
Country-Wide Sales & Service
உஷா
தையல் மெஷின்
தி ஜே இன்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா
ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் ஏஜண்ட்ஸ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிட்.
120, அரமனைக்காரத் தெரு, சென்னை - 1
மெஸர்ஸ் பி. எல். மல்ஹோத்ரா, 1, மிலோனி ரோடு, சென்னை-17

கங்கள் எதுவுமே கொஞ்சங்கூடப் பொருந்த முடியாதே' என்பாள்.

''ஒருதடவை, 'உங்களை மறந்துவிட்டு, தஹநாயகாவை மணந்துகொண்டு விடுகிறேன். எல்லோருக்குமே திருப்தியாக இருக்கும்' என்றாள்.

'அதுதான் சரி' என்றேன்.

'ஏன் அந்த அயோக்கியனை நான் கல்யாணம் செய்து கொள்வதில் உங்களுக்கு என்ன திருப்தி?' என்று கோபமாகச் சொன்னாள்.

'எல்லோருக்குமே திருப்தியாக இருக்கும் காரியம் எனக்குத் திருப்தியளிக்காவிட்டால் என்ன?' என்றேன்.

'எனக்கும் திருப்தியாக இருக்காதே' என்றாள். இப்படி எத்தனையோ தடவைகள் பேசியிருக்கிறோம். என்ன பயன்? எங்களால் சந்திக்காமல் இருக்க முடியவில்லை.

''ஒரு தடவை தஹநாயகா நாங்கள் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு அவளுடைய அப்பாவிடம் போய்ச் சொல்லி விட்டான் போலிருக்கிறது. லீராங்கினியை அவளுடைய தந்தை கோபித்துக் கொண்டாராம். ஒரு தமிழனுடன் சுற்றுவது அவமானம் என்று சொன்னாராம்.

''அந்த நிமிடம் வரையில் லீராங்கினிக்கு ஒரு சிறிதளவு தயக்கம் இருந்து வந்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவளுடைய தைரியம் அதிகமாயிற்று. 'நான் பயந்து கொண்டே இருந்த காரியத்தைத் தஹநாயகா செய்து விட்டான். அதனால் அவனுக்கு நான் நன்றி செலுத்தத்தான் வேண்டும்' என்பாள்.

''மறுபடியும் அவளுடைய தந்தை அவளைக் கூப்பிட்டு எச்சரித்தார். அதை என்னிடம் வருத்தத்துடன் சொன்னாள் லீராங்கினி. 'அப்பா என்னைக் கோபித்துக் கொள்கிறார். இனிமேல் வெளியே போய்ச் சுற்றக்கூடாது என்கிறார். உங்களுடன் மறுபடியும் என்னைப் பார்த்தால் என்ன செய்வாரென்று அவருக்கே தெரியாதாம்' என்று சொல்லிப் புன்னகை புரிந்தாள்.

'எதற்குச் சிரிக்கிறாய்? உனக்குப் பயமாக இல்லையா?' என்றேன்.

'அவர் என்ன செய்வாரென்றுதான் அவருக்கே தெரியாதே. அதை எண்ணி நாம் இப்போதே பயப்படுவானேன்? அவர் ஒரு முடிவுக்கு வந்த பிறகு கவலைப் படலாம்' என்றாள்.

''இன்னொரு நாள் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்தாள். 'நீங்கள் இனிமேல் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அந்த அயோக்கியன் உங்களை ஏதாவது செய்துவிடுவான்' என்றாள். நான் 'அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. உன்னை அப்படித்தான் பயமுறுத்துவான்' என்றேன். 'ஐயோ! உங்களுக்கு எப்படித் தெரியும்? அவன் முகத்தில் இருந்த வெறுப்பை நினைத்தாலே என்னை என்னவோ செய்கிறது. உங்கள் வீட்டையே அவன் கொளுத்திவிடப் போகிறானாம். சுத்த முட்டாள். உங்கள் வீடு எரிந்துவிட்டால் என் இதயக் கனவும் அழிந்து விடும் என்று நினைக்கிறான்' என்றாள்.

''ஒருமாதிரி தைரியம் சொல்லி வைத்தேன். ஆனால் அவர்கள் முட்டுக்கட்டை போடப் போட அவளுடைய துணிவு அதிகமாகி வந்தது. நானும் என் தங்கை



மாமா : **இது குளிர் காலமா, வெய்யில் காலமா? சொல்லுடா! ஏண்டா முழிக்கறே?**

குணவதியும் கொழும்புவுக்குச் சென்ற போது, தன் பெற்றோர்களிடம், கல்லூரிப் பெண்களுடன் ஒரு வாரம் 'எக்ஸ்கர்ஷன்' போவதாகச் சொல்லிவிட்டு வந்து விட்டாள். நான் தடுப்பேனென்று பயந்து கொண்டு முதலில் வேறு பெட்டியில் ஏறி விட்டு, இரண்டு ஸ்டேஷன் தாண்டிய பிறகு எங்கள் பெட்டியில் வந்து ஏறினாள். நான் என்ன சொல்வது? ஒரு வாரம் கொழும்பில் சுற்றிவிட்டு வந்து சேர்ந்தோம். அப்போதுதான் அந்தப் பாவி தஹநாயகா பார்த்து விட்டுப் போய், அவள் தகப்பனாரிடம் சொல்லி விட்டான்'' என்று கூறி முடித்தான் மூர்த்தி.

''இதெல்லாம் சரிதான். கல்யாணமாகி விட்டால் அவர்கள் உங்களுக்கு ஒரு தொந்தரவும் கொடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறாயா?''

''நான் நினைக்கவில்லை. அவள்தான் சொல்கிறாள்.''

''சரி, நான் நாளைக் காலை ஒன்பது மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருகிறேன்.''

அவன் சென்று ஐந்து நிமிடங்கள் ஆயிற்று. வீட்டு வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. உடனே எழுந்து அதைப் பார்த்ததும் எனக்குக் கலவரம் அதிகமாகிவிட்டது. எட்டிப் பார்த்தேன், சிவப்புக் கார்.

ஒரு நிமிடத்துக்கெல்லாம் தஹநாயகா உள்ளே வந்தான். கையில் வைத்துக் கொண்டிருந்த சிறிய ரிவால்வரை என் எதிரே நீட்டினான். ''நீங்கள் நாளை மாலை வரை இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது. நகர்ந்தால் அதன் பலனை அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

என் மனம் எப்படி இருந்திருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா? அவனை அப்படியே முறுக்கிப் பிழிந்து விடவேண்டும் போலிருந்தது. முத்துவை எச்சரிக்க எனக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. பதைபதைக்கும் உள்ளத்துடன் என் அறையிலேயே நடந்துகொண்டிருந்தேன். வெளியே செல்ல இரண்டு தடவை முயற்சி செய்தேன். யாரோ இருவர் தொடர்ந்து வருவது போல இருந்தது. ஆகவே திரும்பி வந்து விட்டேன். அன்று போலன்னுவா அல்லோலகல்லோலப் பட்டது. கடைகளுக்கெல்லாம் தீ வைத்தார்கள். வீடுகளில் புகுந்து கொள்ளையடித்த பின்னர், பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தினார்கள். இவற்றையெல்லாம் என் டிரைவர் வந்து சொன்னான். ஒன்பது மணி வரை பார்த்தேன். அதற்குமேல் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. என்ன நேர்ந்தாலும் சரி, முத்துவைத் தேடிச் செல்வது என்று நிர்மானித்தேன்.

நல்லவேளையாக என்னுடைய டிரைவர் சிங்கள ஜாதியைச் சேர்ந்தவன். என்னிடம் மிகவும் அன்புடையவன். அவனைப் பக்கபலமாக நம்பிக்கொண்டு புறப்பட்டேன். என்னுடைய பயமெல்லாம் முத்து ஸாரங்கினியைச் சந்திக்கப் போகாமல் இருக்க வேண்டுமே என்பது தான். தம்பிப்பிள்ளையின் வீட்டுக்குப் போகும்போதே அவர் வீடு பற்றி எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

வீட்டின் அருகில் வந்துவிட்டோம். என் கண்கள் முத்துவைத் தேடின. கூட்டமாக இருந்தபடியால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எரியும் நெருப்பின் அசையும் ஜ்வாலையில் தேடுவது சிரமமாக இருந்தது. கடைசியில் ஒரு பக்கத்தில் தம்பதிகள் இருவரும் துயரே வடிவமாக நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தேன்.

"முத்து எங்கே, காணவில்லை?"

"மாலையிலிருந்தே வரவில்லை. எங்கே போயிருக்கிறானோ தெரியவில்லை" என்றார் தம்பிப்பிள்ளை.

என் இதயம் இன்னும் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. உடனே புறப்பட்டேன். தேடிக் கொண்டே சென்ற போது நடு வழியில் இரண்டு உடல்கள் கிடப்பது தெரிந்தது. பதைபதைக்கும் நெஞ்சுடன் இறங்கி ஓடிச் சென்றேன். நான் நினைத்த மாதிரியே ஆயிற்று: முத்து அங்கே குற்றுயிராகக் கிடந்தான். பக்கத்தில் இருந்தது நல்ல வேளையாக ஸாரங்கினி அல்ல. நானும் டிரைவருமாக முத்துவைத் தூக்கிக் கொண்டு வந்து காரில் போட்டோம். இன்னொருவரையும் தூக்க அருகில் சென்ற சமயத்தில், யாரோ ஓடி வருவது தெரிந்தது. உருவம் அருகில் நெருங்க நெருங்க அது ஒரு ஸ்திரீ என்று தெரிந்தது. 'ஆ! இத்தனை துன்பங்களுக்கும் காரணமான ஸாரங்கினி வருகிறாள்!'

"என்னைப் பார்த்ததும் ஸாரங்கினி துடித்துக் கொண்டே, "அவர் எங்கே?" என்று கேட்டாள். எனக்குப் பதிலே சொல்ல முடியவில்லை. அதற்குள் டிரைவர் காரைக் காட்டினான்.

"முத்து!" என்று அலறிக் கொண்டே காரை நோக்கி ஓடினாள் ஸாரங்கினி. முத்துவின் கரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

நான் இன்னொருவனையும் கொண்டு காரில் ஏற்றி விட்டு, "ஸாரங்கினி உடனே அழுகையை நிறுத்து. காரில் ஏறிக்கொள். ஆஸ்பத்திரிக்குப் போகலாம்" என்று அதட்டினேன். நல்லவேளையாக என் கார் பெரியது. பின் பக்கம் ஸீட்டில் முத்துவும், இமே அந்த வாலிபனும் கிடந்ததைப் பார்க்க எனக்கே வேதனையாக இருந்தது.

முன்னால் நானும் ஸாரங்கினியும் ஏறிக் கொண்டோம். அவள் விசிப்பதை நிறுத்தி விட்டாள். முத்துக்குமாரசாமியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

"முத்துவுக்கு ஒன்றுமில்லை. நாளைக்கே எழுந்து விடுவான். கவலைப்படாதே, அம்மா!" என்றேன்.

"நான் விஷம் வாங்கி வைத்திருக்கிறேன், தெரியுமா?" என்றாள் ஸாரங்கினி.

"நீ அதை உபயோகிக்கும்படி நேராது. அவன் பிழைத்து விடுவான்" என்றேன்.

அவளுக்கு மனம் சாந்தமடையவில்லை: "அவருக்கு ஏதாவது நேர்ந்தால் தறுதாயகாவுக்கு விஷம் கொடுத்து விடுவேன்!" என்று மெல்லக் கூறினாள்.



"உன் வாயிலிருந்து இத்தனை கொடுமையான வார்த்தைகள் வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றேன்.

"கொடுமை? எது கொடுமை? முத்துவுக்கு இந்தக் கதி வந்தது கொடுமை இல்லையா? இதை நான் பார்த்தும் உயிரோடு இருக்கிறேனே! அது கொடுமை இல்லையா?" என்று புலம்பினாள்.

அந்தச் சமயத்தில் முத்து முனகவே அவளுடைய பேச்சு நின்றது.

ஆஸ்பத்திரியில் முத்துவையும் இன்னொருவனையும் சேர்த்துவிட்டு நான் போய் அவளுடைய பெற்றோர்களை அழைத்து வந்தேன். வீடு எரிந்து சாம்பலான பிறகு அவர்கள் அதன் எதிரில் இருந்துதான் என்ன பயன்?

நாங்கள் ஆஸ்பத்திரியை அடையும் பொழுது முத்து கண்களைத் திறந்து கொண்டிருந்தான். ஸாரங்கினி அவன் அருகில் உட்கார்ந்து அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

எனக்கு மூச்சு வந்தது. அவனுக்கு அபாயமில்லை என்று டாக்டர் சொன்னதாக ஸாரங்கினி கூறினாள்.

"அப்பா! இப்போது உத்தரவு கேட்கிறேன், ஸாரங்கினியை நான் என் மனைவியாக ஏற்றுக் கொள்ள நீங்கள் அனுமதி தரவேண்டும்" என்றான் முத்து.

"உன்னை மணந்து கொண்டால் அவளுக்கு உன்னைத் தவிர ஏதும் கிடைக்காது" என்றார் தம்பிப்பிள்ளை.

முத்து திடுக்கிட்டான். "என்னப்பா சொல்கிறீர்கள்?" என்றான் திகைப்புடன்.

நான் குறுக்கிட்டு, "உங்கள் வீடும், உடைமைகளும் நீக்கிரையாகி விட்டன. குட்டிச்சுவர்தான் மிச்சம். அதைத்தான் அப்பா சொல்கிறார்" என்றேன்.

அவன் சிரித்தான். "உங்களுக்கு இன்னும் எங்கள் அன்பில் நம்பிக்கை வரவில்லையா?" என்று கேட்டான்.

"வந்து விட்டது" என்றேன்.

* *

"பிறகு என்ன ஆயிற்று?" என்றேன்.

"இன்னும் என்ன இருக்கிறது? 'கிளைமாக்ஸ்' முடிந்த பிறகு கதையும் முடிய வேண்டியதுதானே?"

"மறுநாள் கல்யாணம் நடந்ததா?"

"பேஷாய் நடந்தது. உடல் முழுவதும் காயங்களுக்குப் போட்ட கட்டுகளுடன் மாப்பிள்ளை வந்து நடுங்கும் கரத்தினால் கையெழுத்துப் போட்டான்."

"முத்துவுக்குப் பிரஜாஉரிமை கிடைத்ததா? அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.


"ஏது! ஏது! இப்படிக் கேள்விகள் கேட்கிறாயே? தம்பிப்பிள்ளைக்கு ஒருவாறு பிரஜாவுரிமை கிடைத்து அங்கேயே தங்கி விட்டார். பறிக்கப்பட்ட சொத்தும் திரும்பி வந்தது. ஸாரங்கினியின் பெற்றோர்கள் மனம் மாறினார்கள். போதுமா?" என்றார் சத்தியலிங்கம்.

"போதாது! தறுதாயகா என்ன ஆனான் என்று சொல்லவில்லையே. அவன்தானே இந்தக் கலகங்களைப் பயன்படுத்தி முத்துவை அடித்துப் போட்டது?"

"முத்துவுக்குத் தன்னை அடித்தது யார் என்பது தெரியவில்லை. மூன்று பேர்கள் கையில் தடியுடன் ஓடி வந்து அடித்தார்களாம். முத்துவின் கூக்குரலைக் கேட்டு அந்த வாலிபன் உதவிக்கு வந்திருக்கிறான். அவனையும் அடித்துப் போட்டு விட்டார்கள், அந்தக் காலிப் பயல்கள். இமே விழுந்தபோது ஒரு சிவப்புக் கார் வந்ததைப் பார்த்ததாகவும் உடனே உலகம் இருண்டு விட்டதாகவும் அந்த இளைஞன் சொல்கிறான். ஒரு அதிசயம் என்னவென்றால், முத்துவைக் காப்பாற்ற வந்த இளைஞன் ஒரு சிங்கள வாலிபன். பாவம்! அவனையும் அடித்து விட்டார்கள்.

"இரண்டு நாட்கள் கழித்துப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. 'ஒரு சிவப்பு நிற மோட்டார் கார் நேற்றிரவு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. காரின் பெட்ரோல் டாங்கியில் திக்குச்சியைக் கிழித்துப்போட்டுச் சாம்பலாக்கி யிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. காரின் உள்ளே இருந்த ஒரு நபரை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை' என்று எழுதியிருந்தது. அதற்குப் பிறகு தறுதாயகா என்ன ஆனான் என்று என்னைக் கேட்காதே. ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் கதைகளில்தான் முடிவு சொல்ல வேண்டும். உண்மை வாழ்க்கையில் ஒவ்வொருவருடைய முடிவும் என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்கிறோமா என்ன?" என்று கதையை முடித்தார் சத்தியலிங்கம்.



உங்களுக்கு
மனமார்ந்த தீபாவளி
மற்றும் புதுவருட
வாழ்த்துக்கள்
plato
இது மாத்ரே தயாரிப்பு
வியாபார சம்பந்தமான எல்லாம் எங்கள்
ஸோல் டிஸ்டிரிபூடர்களுக்கு எழுதவேண்டும்
பெஸ்ட் பவுண்டன் பென் டிப்போ
79, தேவ்கரன் மான்ஷன்.
பிரின்ஸெஸ் தெரு. பம்பாய்.
PLATO


எமது தீபா
வாழ்த்துக்கள்
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 8,00,00,000
வழங்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,00,00,000
ரிசர்வ் நிதி ரூ. 1,34,00,000
G. D. பிர்லா,
S. T. சதாசிவன், ஜெனரல் மானேஜர்
தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க் லிட்.,
கல்கத்தா
உறுதிக்கும், சேவைக்கும்
பெயர் பெற்றது


கூந்தல் வளர்ச்சியில்
எவ்வாறு புது வனப்பை
காண்பது!
தினசரி தவறாது உபயோகித்தால் கூந்தல் மிக செழுமையாகவும், புத்தம்புதிய சோபையுடனும் வளருவதை நீங்கள் காணலாம்
கூந்தலை செழிப்பாக வளர்க்கிறது
காந்தரிடைன்
கூந்தல் தைலம்
பெங்கால் கெமிகல்
கல்கத்தா - பம்பாய் - கான்பூர்
தென்னிந்தியாவுக்கு
பூரண விநியோகஸ்தர்கள்
அர். எல். கொடர் & கோ.


The first name in
FLUORESCENT
FITTINGS
Coolex
INDUSTRIAL
COMMERCIAL
DECORATIVE
STREET
LIGHTING
Unparalleled
in reputation, COOLEX
fluorescent fittings serve the needs of
industry and commercial organizations and also
those who require special lighting arrangements and fixtures.
Manufactured by
Hindco Lighting Industries (Private) Ltd., Bombay.
Sole Distributors in South India
SETHURAM THIAGARAJAN & CO.
MADRAS-1
MADURAI
Elegant


பிரஸிடெண்ட்
டாய்லெட்ஸ்
தயாரிப்பாளர்களிடமிருந்து
தீபாவளி
வாழ்த்துக்கள்!
RATHOD TRADING CO.
MADRAS-1
President
PRESIDENT
PRESIDENT
hair oil



Manufacturers of:

60s Cone Yarn

Manufacturers of:

40s, 60s, 80s Single and Double Combed Yarn.

40s, 20s in Cone and Hanks and Staple Fibre Yarn.


CONES & HANKS

G. RAMASWAMY & CO.,
GANGA TEXTILES
2/249. AVANASHI ROAD. P.N. PALAYAM.
PHONE: 197 · GRAMS "GARCO"


SRI KARTHIKEYA
SPINNING & WEAVING MILLS LTD.
SINGANALLUR · COIMBATORE
PHONE: 616 [P.B.NO.18] GRAMS "GANGA" COIMBATORE

SUNDARAM.


"கலைக்கடல் முத்தாக
தமிழகத்தின் சொத்தாக"
நவம்பர் 7-முதல்
தென்னாடெங்கும்
நடைபெறுகிறது!
ஆர்.ஆர்
பிக்சர்ஸ்
காத்தவராயன்
டைரக்ஷன்... ராமண்ணா
R.R.PICTURES.



Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Ltd. at the Kalki Press, Kilpauk, Madras-10. Managing Editor: T. Sadasivam.




வியாபார நிமித்தமாகவோ, உல்லாசப் பிரயாணமாகவோ
பம்பாய் செல்வதா யிருந்தால் தங்குமிடத்தைப் பற்றியோ
சாப்பாட்டு வசதிகளைப் பற்றியோ சிறிதும் கவலை வேண்டாம்
"திருச்சூர் லாட்ஜ்" எல்லா வசதிகளையும் அளிக்கிறது

TRICHUR LODGE

2, MATUNGA MANSION, BHANDARKAR ROAD
MATUNGA - Central Railway - BOMBAY-19
Grams: "THRYMES" Phone: 61041


சரவணபவா - யூனிட்டி பிக்சர்ஸ்
நான் வளர்த்த
தங்கை
டைரக்ஷன்
ch. நாராயணமூர்த்தி B.A.
அஸோஸியேட் டைரக்டர்
T·K·ராமு


Winning Card......
PHONE 82. ALWAYE
361. COIMBATORE
GRAMS "UMAYAL"
THE ASHOK TEXTILES PRIVATE LTD.
MILLS. ALWAYE - KERALA
OFFICE - R.S. PURAM. POST.
COIMBATORE
MANAGING DIRECTOR
Mrs. BAGYALAKSHMI KRISHNAN
YARN
20s to 60s
YARN
10s to 80s
PHONE: 202
GRAMS "VIJAYAKUMAR" PALNI
THE VIJAYAKUMAR MILLS LTD.
KALAYAMPUDUR... PALNI
MANAGING AGENTS
M/S. R. GURUSWAMY NAIDU & CO.
PHONE 6
GRAMS "PULLICAR"
THE PULLICAR MILLS LTD.
TIRUCHENGODE. SALEM DT.
MANAGING DIRECTOR
G. KRISHNAN.
THE COIMBATORE SPINNING & WEAVING CO. LTD. COIMBATORE
YARN
36s to 80s
Yarn: 20s to 100s
Longcloth, Mulls
Dothies, Towels Etc.
Agents & Secretaries
R. G. S. NAIDU & CO.
.... in Spinning field!
SUNDARAM.

कैलास-कालडी-काम-
कोटि-त्रिपथ-वाहिनी ।
कारुण्यनिर्झरी कापि
शांकरी शं करोतु नः ॥

"கைலாயம், காலடி, காமகோடி என்று மூன்று வழிகளில் பாயும் சங்கரம் என்னும் கருணை நதி சாந்தியையும் சந்தோஷத்தையும் அருள்வதாக!"


கல்கி
தீபாவளி மலர்

ஆசாரிய விஜயம்



ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாம் வருஷத்துக்குப் பிறகு இருபத்தைந்து ஆண்டுகளாக ஆசார்ய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்யாததினால் அவர்கள் சென்னைக்கு வரவேணும் என்ற மிகுந்த ஆவல் பல பக்தர்கள் மனத்தில் தீவிரமாக எழுந்திருந்தது. நாஸ்திகம் தலைவிரித்தாடும் இச்சமயத்தில்தான் ஆஸ்திகர்களுக்குப் புத்துயிர் அளிக்க அவர்கள் அவசியம் சென்னைக்கு வரவேண்டும் என்று தவித்த சில ஆழ்ந்த பக்தர்கள் கண்ணும் கண்ணீருமாக அதை ஸ்வாமிகளிடத்தில் தெரிவித்தும் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் சென்னைக்கு நல்ல காலம் பிறக்காமல் இருந்தது. நல்ல வேளையாக 1957-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஒரு சம்பவம் ஏற்பட்டது. ஐம்பது வருஷங்களாகக் காமகோடி பீடத்தில் அமர்ந்து திகழ்ந்த நம் ஜகத்குருவினுடைய பெரும் பேற்றுக்கு அறிகுறியான கனகாபிஷேகத்தை, எண்பது வயது சென்ற ஒரு பெரிய ஆசார்ய பக்தரின் வேண்டுகோளுக்கிணங்கி, செய்துகொள்ளச் ஸ்வாமிகள் இசைந்தார்கள். இந்த அற்புதக் காட்சியை நாம் அனுபவிக்கப் பெற்றோம்.

அதில் பக்தர்களெல்லாருடைய மனமும் அழகாக எப்படி ஒருமைப்பட்டது என்று கேள்விப்பட்டிருப்பார்கள். அச்சமயத்தில் ஒரு எண்ணம் மக்களுடைய மனத்திலும் ஊசலாடியது. இனி ஆசார்ய ஸ்வாமிகள் சென்னைக்கு வராமலிருக்கக் கூடாது என்பது தான். அதனால் நானும்கூட என்னை அறியாமலே அந்த ஆவேச நிலையில் மக்களின் சார்பாக அக்கருத்தை ஸ்வாமிகளிடத்தில் தெரிவித்ததுண்டு. ஈசன் செயலால் ஸ்வாமிகளின் மனத்தில் இடமென்று சென்னை மக்களின் பேரில் கருணை ததும்பி நவராத்திரி மஹோத்ஸவத்துக்கே வரவேணும் என்ற எண்ணம் உதித்தது.

சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் 22-ம் தேதி மயிலாப்பூரில் நடந்த பட்டினப் பிரவேச வைபவம் இதுவரையில் யாரும் காணாத ஒரு காட்சியாக அமைந்தது. பதின்மூன்று மாத காலத்துக்கு மேல் ஸ்வாமிகள் நம் மத்தியில் பூஜை முதலியன செய்து வசித்தருளிய காரணத்தினால் தெய்வ பக்தி எங்கும் நிறைந்து பொலிந்தது. "தர்ம மிகு சென்னை" என்று ராமலிங்க ஸ்வாமிகள் பாடியருளிய இப்பட்டினத்தில் நம்முடைய சநாதன தர்மம் தழைத்தோங்கியது. தண்டையார்ப்பேட்டையில் சென்னை ராஜ்ய கவர்னர் ஸ்வாமிகளைத் தரிசித்த பொழுது, "சென்னை ராஜ்யத்தின் தலைவர் என்ற முறையில், தாங்கள் மனித குலத்துக்குச் செய்துவரும் பேருதவிக்காக மக்களின் சார்பாகத் தங்களுக்கு நான் நன்றி பாராட்டுகிறேன்" என்று அவர் உள்ளம் உருகி உரைத்தார்கள். சென்னையில் பல தர்ம ஸ்தாபனங்களுக்கும் ஆசார்ய ஸ்வாமிகள் கருணைகூர்ந்து நன்கொடை அளித்தார்கள். ஸம்ஸ்க்ருத ஸேவாஸமிதிக்கும் மறைமலை அடிகள் மொழிபெயர்த்த சாகுந்தல நாடகத்தைப் படித்துக் கட்டுரை எழுதுகிற கல்லூரி மாணவர்களுக்கும் பரிசு அளிக்க, ரூ. 5000 மூலதனம் அளித்தார்கள். திரு வி. க. மண்டபக் கட்டட நிதிக்கு ரூ. 1000 உதவி அருளினார்கள். ஸம்ஸ்க்ருத ஸர்வகலாசாலை ஏற்படுத்தும் நோக்கமுள்ள ஸம்ஸ்க்ருத கல்விக்குழுவுக்கு ரூ. 10,000 தாராளமான கொடை அளித்தார்கள். இவை போன்ற பல நல்ல காரியங்களுக்கும் உபகாரம் செய்துள்ளார்கள். ஒவ்வொரு நாளும் பூஜை முடிந்த பிறகு இந்து சமய தத்துவங்களையும் பாரத தர்ம நுட்பங்களையும் மனத்தைக் கவரும்படியான வெகு அழகான முறையில், எளிய நடையில், பேசும் தமிழில் மக்களுக்கு நன்கு மனத்தில் பதியும்படி போதித்தார்கள். ஆயிரக்கணக்கான மாந்தர்கள் நிச்சலமாக இருந்து ஒருமைப்பட்ட மனத்துடன் அப் பொன்மொழிகளைக் கேட்டு இன்புற்றார்கள். ஆசார்யாள் அவர்கள் விஜயத்தினால் சென்னைமாநகரம் அடைந்த பயன் அளவுகடந்தது என்று சொன்னால் அது சிறிதும் மிகையாகாது.




நாம் அடைந்த மற்றொரு பாக்கியமுமுண்டு. பெரிய தீபத்திலிருந்து சின்ன தீபம் ஏற்றியதுபோல் பிரகாசிக்கின்ற ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பெரிய ஆசார்ய ஸ்வாமிகளுடன் இங்கு விஜயம் செய்தார். 'புதுப் பெரியவா' என்று அன்புடன் சொல்லப்பட்டு, சாந்தி, தவம், புன்சிரிப்புடன் பக்தர்களைக் கவர்ந்திருக்கிறார்.

ஒன்று மட்டும் நிச்சயம். ஆசார்ய ஸ்வாமிகளுடைய சாந்தி, தவம் இவற்றின் ஒளிவீசும் விசால நேத்ரமும், புன்முறுவலும் மனக்கவலை அகற்றி அமைத்திடும் பேச்சும், பரிவும், கருணை பொழியும் மொழிகளும் என்றைக்கும் சென்னை மக்களின் மனத்தை விட்டு அகலமாட்டா.

நம் ஜகத்குரு காமகோடி பீடாதிபதிகள் பல்லாண்டு வாழ்க! பாரத தர்மம் தழைத்தோங்குக!

கே. பாலசுப்பிரமணிய அய்யர்

மணியம்







தோற்றம். 6. சென்னை பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தபோது சமஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் ராகவன் பல்கலைக் கழகத்திலுள்ள பழைய சமஸ்கிருத நூல்களைக் காண்பிக்கிறார். 7. 'கல்கி' காரியாலயத்துக்கு விஜயம் செய்தபோது பூரண கும்பம் அளித்து வரவேற்கப்படுகிறார். 8 ஆசாரிய சுவாமிகள் காரியாலயத்துக்குள் நுழைந்தபோது இருமருங்கும் 'கல்கி' அச்சகத் தொழிலாளர்கள் புத்தாடை உடுத்தி, நெற்றியில் வெண்ணீறு பூசி வரிசையாகக் கரங்கூப்பி வரவேற்கிறார்கள். 9. ஸ்ரீ சதாசிவம் தம்பதிகள் ஆசாரிய சுவாமிகளுக்குப் பாதபூஜை செய்கிறார்கள். 10. 'கல்கி' காரியாலயத்தினருக்கு ஆசாரிய சுவாமிகள் ஆசிமொழி வழங்குகிறார்.















சென்னையில் சங்கரர்

மணியம்...

சென்னை மாநகருக்குக் காஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் விஜயம் செய்திருந்தே சென்னை நகரம் புதுக் களைபெற்று விளங்குகிறது. சென்னை நகரின் பல பகுதிகளில் தங்கி, அவர் பொன்மொழிகளை அருளி மக்களுக்கு ஆத்ம மார்க்கத்தை அளித்த பெருமையைச் சொற்களால் சொல்லி முடியாது. மகானைக் கண்களால் கண்டவர்கள் பிறப்பெடுத்த பயனை அடைந்ததாகக் கருதுகிறார்கள். அம்மகான் சென்னையில் சில பகுதிகளுக்குச் சென்று பக்தர்களுக்கு ஆசி மொழி கூறிய சில காட்சிகளை இந்தப் பக்கங்களில் காணலாம்.

1. சென்னை நகரத்துக்குள் புகுந்த அன்றிரவு, பெரிய புஷ்பப் பல்லக்கு அமைத்து ஆசார்ய ஸ்வாமிகளை நகரப் பொதுமக்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள். 2. சென்னையில் நுழைந்ததும், முதலில் ஹிந்து பத்திராதிபர் ஸ்ரீ கே. சீனிவாசன் இல்லத்திற்கு வந்தார். ஸ்ரீ சீனிவாசன் தம்பதிகள் வந்தனம் செலுத்துகிறார்கள். 3. சென்னை தியாகராய நகரில் ஆசார்ய ஸ்வாமிகள் தங்கியிருந்தபோது பக்தகோடிகள் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தார்கள். புது ஸ்வாமிகள், ஆசார்ய ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்கிறார். 4. பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குச் சென்ற போது அங்குள்ள அன்பர்களுக்கு நல்லுரை நல்கிறார். 5. ஆசார்யஸ்வாமிகளின் மற்றொரு







ஸ்ரீசங்கராச்சாரியாரின்

ஸ்ரீமுகம்

தீபாவளி அன்று அன்னை லக்ஷ்மி எண்ணெயிலும், ஜலத்தில் கங்கையும் ஸாந்நித்யம் பெற்றிருப்பதாக இவ்வைப்பசி மாதத்தின் புனிதத்தன்மையை விளக்கும் துலாபுராணம் கூறுகிறது. தீபாவளி அன்று இருட்டினின்று ஒளியை அடையவும், அழுக்கினின்று தூய்மை அடையவும், உள்ளத்தின் மாசுகளினின்று தூய்மை அடையவும், குடும்பமும், நாடும் லக்ஷ்மிகரமாய் விளங்கவும் பிரகாசஜோதியாம் பரம்பொருளைத் தீபத்தில் ஆவாஹனம் செய்து வழிபட்டு வருகின்றோம். மாணி, இல்வாழ்வான், தவசி, துறவி எனும் நான்கு ஆச்ரமங்களோரும், விலக்கில்லாது தீபாவளியை அனுஷ்டித்து வரவேண்டும் என்பது தர்மநூல் கட்டளை. ஆதலால் எந்த வெறுப்புக்காகவோ பயத்துக்காகவோ சத்தியாக்கிரஹ முறையிலோ தீபாவளி அனுஷ்டானத்தை ஒருவரும் நிறுத்தக் கூடாது. நாடு பிரிவதற்கு முன்னுண்டு, சிந்து மாகாணத்தின் தலைநகரமான கராச்சியில் வியாபாரம் செய்து வந்த கோடீச்வரர்கள் எல்லாம் நாடு பிரிவதாக ஏற்பட்ட வருந்தியினால் மனத்தில் கிலேசப்பட்டுத் தீபாவளியை நிறுத்தினார்கள். அவ்வாறு செய்திருக்கக் கூடாது. எந்த ஆபத்திலும் தீப ஜோதியையும் மகாலட்சுமியையும் வழிபடும் முறையை பக்தியுடனும் நேர்மையுடனும் அனுஷ்டித்து வரவேண்டும்.

மனிதர்களாகப் பிறந்து விட்டோம். கஷ்டந்தான் நமக்கு எப்போதும் அதிகமாக இருக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு பெரிய மனிதர்களாக இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பெரிய கஷ்டங்களாக வரும். இவற்றையே பெரிதாக நினைத்துக் கொண்டிருக்காமல் நம்மால் இந்த உலகத்துக்குச் சிறிதாவது சந்தோஷம், சுகம் உண்டாகும் என்றால் அதையே பிரார்த்தித்துக்கொள்ளுகிற மனோபாவமுள்ள கொள்கைதான் மிகச் சிறந்தது. "நான் இறந்தாலும் உலகத்தில் எல்லாரும் சந்தோஷமாக இருக்கட்டும்" என்று சொன்ன நரகாசுரன் உயர்ந்த மனப்பான்மையைக் காட்டினான். தன்னுடைய மகன் இறந்ததை ஒரு பண்டிகையாக மக்கள் கொண்டாட வேண்டும் என்று விரும்பிய அவன் தாயின் மனப்பான்மை இன்னும் உயர்ந்தது. தீபாவளிப் பண்டிகையின் அடிப்படையான கருத்து இதுதான்: "நமக்குக் கஷ்டம், நமக்குத் துக்கம் என்பதைப் பாராட்டாமல் லோகம் எல்லாம் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் பிரார்த்தித்துக் கொள்வோமாக."

— ஸ்ரீசங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்




அகில உலக சர்க்கஸ்






பிரான்ஸ்
ஐயுப்கான்
பாகிஸ்தான்
நாஸர்
நீங்கள் கீழே இறங்கவில்லை
என்றால் நான் மேலே
ஏறிவிடுவேன்!
ஜெயப்பிரகாஷ்
அரபு தேசீயம்
கால்
சீனா
மா. சே. துங்
பார்மோஸா
சியாங்
அமெரிக்கா



வி.கே.கே. மேனன்
நேரு
நமது வெளிநாட்டுக் கொள்கை
இரண்டாவது திட்டம்
மொரார்ஜி
அந்நியக் கடன் உதவி
ஈ.எம்.எஸ்.
கேரள கம்யூனிஸ்ட் கட்சி
சட்டத்துக்குட்பட்ட சர்க்கார்
ஈ.வெ.ரா.

மற்றவர்கள் பார்வையில் - ராஜாஜி




தனிச்சிறப்புற்ற உன்னத ரக
டார்ஜிலிங் தேயிலை
Brooke Bond Choicest Tea
ப்ரூக் பாண்ட் இந்தியா ப்ரைவேட் லிமிடெட்
BB 307

நல்ல நண்பன்

மேகத்தைக் கண்டு தோகை மயில் மகிழ்ச்சி கொள்ளும். தனது அழகிய தோகையை விரித்து ஆடும்.

அடுத்தாற் போல் காதலனைப் பிரிந்திருக்கும் காதலிகள் நீண்ட கார்மேகத்தைக் கண்டவுடன் மகிழ்ச்சியில் பொங்கிப் பூரிப்பார்கள் ; தங்கள் காதலன் வரவை அறிவிக்கும் சூசகமாகக் கொண்டு மகிழ்வார்கள். இவ்வாறெல்லாம் நமது புராதனக் கவிஞர்கள் பெண்களின் இயல்பையுணர்ந்து பாடியிருக்கிறார்கள்.

மகாகவி காளிதாஸர் மேகதூதன் என்றொரு காவியம் பாடியிருக்கிறார்.

குபேரனின் சாபத்தால் ஒரு யக்ஷன் விந்திய மலைச்சாரலை வந்தடைகிறான்.

தன்னந்தனியனாய், காதலியின் பிரிவாற்றாமையால், வருந்தும் அவன் மேகத்தைத் தூது விடுகிறான்.

அவன் மேகத்திடம் கூறுகிறான்:

"வாயு வாகனத்திலேறி நீ செல்ல ஆரம்பிக்கும் பொழுது, வெளியூர் சென்றிருக்கும் தம் கணவரைச் சிந்தித்துச் சோர்வுறும் மாதர்கள் உன்னைக் கண்டு ஆறுதலடைவார்கள். ஆடி மேகத்தைப் பார்த்து, நம்மை விட்டுப் பிரிந்திருக்கக் காதலர்களுக்கு மனம் வராது; விரைந்து ஓடி வருவார்கள் என்று எண்ணி அகம் மகிழ்வார்கள். இவ்வித நற்செய்தியைக் கொண்டு வரும் நண்பனைக் கண்ணாரக் காணலாமென்று நெற்றியில் படர்ந்து பார்வையைத் தடுக்கும் முன்னந் தலைமயிரைக் கையால் விலக்கிக் கொண்டு, கண் குளிர நிமிர்ந்து நோக்குவார்கள். ஆனால் சுதந்திரமிழந்து பிறரிடம் சேவகம் செய்து பராதீனமான பாவியேன் ஆடியிலும் என் காதலியைச் சந்திக்க முடியாமல் வாடுகிறேன்."

இது காளிதாஸர் இயற்றிய மேகதூதனில் வரும் ஒரு பாடலின் சித்திர விளக்கம். இந்தச் சித்திர விளக்கத்துக்கு ஒரு சித்திரம் தந்திருக்கிறார் ஓவியர் ரத்தினம்.





பாட்டி: லெராமா! நீ தபஸ் பண்ணித்தான் இப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை உனக்குக் கிடைச்சிருக்கான்!

அலையும் அழகியும்

"நெரித்த திரைக் கடலில்
என்ன கண்டிட்டாய்?"
"நெரித்த திரைக் கடலில்
நின்முகம் கண்டேன்!"

அவள் கடற்கரையில் போய் அமர்ந்தாள். மனத்துக்குச் சற்று நிம்மதி வேண்டும் என்றுதான் போய் உட்கார்ந்திருந்தாள். கடலிலிருந்து வரும் தண்ணிய குளிர்காற்று உடலுக்கும் உள்ளத்துக்கும் சிறிது ஆறுதல் அளிக்காதா என்று நினைத்தாள்.

ஆனால் கடற்கரைக்குப் போனவுடனேயே, அவள் கண்கள் அலை மோதும் கடலையே பார்த்தன. ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து எழும் அலைகளைப் பார்த்தாள்!

நம் உள்ளக் கடல் போலவே இருக்கிறதே இந்த உப்புக் கடலும் என்று நினைத்தாள்.

வானளாவ எழும் அலைகளும் அதை முட்டி மோதிக் கொண்டு, பின்னாலிருந்து வரும் அலைகளும் இவை ஒன்றையொன்று கவ்வி உண்ணப் பார்க்கும் பான்மையும் தன் உள்ளத்தில் எழும் எண்ண அலைகள் போலவே இருக்கின்றனவே என்று நினைத்தாள்!

இவ்வளவு தூரம் அவள் சிந்தனையைக் கவர்ந்த எண்ணங்கள் தான் என்ன?

காதலரைப் பற்றிய எண்ணங்கள்தான்.

அவர் கூடிப் பிரியும்போது எவ்வளவு இனிமையாகப் பேசி விட்டுப் போனார்!

"இதோ விரைவில் வந்து விடுகிறேன்!" என்று ஆறுதல் சொல்லி விட்டுப் போனார்.

நாட்கள் வாரங்கள் ஆயின. வாரங்கள் மாதங்களாயின; மாதங்களும் வருடமாகப் போகின்றன! ஆனால் அவர் வரும் வழியைத் தான் காணோம்!

ஆனால் போகும்போது என்ன இனிமையாகப் பேசினார். எவ்வளவு அழகாக இருந்தது அவர் முகம்; எவ்வளவு பரவசமாகப் பேசினார்!

இப்படி அவர் எண்ணமே மேலோங்க, மேலோங்க அந்தக் கடல் அலையில் அவர் முகம் தோன்றியது. அந்த அலை கரையை நோக்கி நெருங்கி வர வர அந்த முகமும் அலைமீது வந்தது.

அவளை நெருங்கி வந்து விட்டது. நெருங்கி வந்து,

"நெரித்த திரைக் கடலில்
என்ன கண்டிட்டாய்?"

என்று கேட்டது.

"நெரித்த திரைக் கடலில்
நின்முகம் கண்டேன்!"

என்றாள். அடுத்த கணம் அந்த முகத்தைக் காணோம்! மீண்டும் அவள் என்று காண்பாளோ?

இந்த அழகிய இனிய காதல் காட்சியை ஓவியர் வினு கண்ணைக் கவரும் வண்ண ஓவியமாக வழங்கியிருக்கிறார்.



தலை (வலி) தீபாவளி!



மாப்பிள்ளை : தலைதீபாவளியா இது?

மாமனார் : பேஷ், பேஷ்! தலைதீபாவளி என்றால் இப்படின்னு இருக்கணும்! நம்ம தலை தீபாவளிக்கு ஒருவரும் இல்லாமே தனியா அகப்பட்டுத் திண்டாடினோமே!

அன்பர்மேல் பிழையில்லை!

மாதவன்பால் மட்டற்ற காதல் கொண்ட மங்கையொருத்தி அல்லும் பகலும் அவனையே நினைந்து உருகினாள். கனவிலும் நனவிலும் அவனது திவ்விய ரூப சௌந்தரியத்தைக் கண்டாள்; அவள் கனவில் வந்த மாதவன், கார்காலத்தில் அவளிடம் வருவதாகக் கூறினான். மகிழ்ச்சியில் திளைத்த மங்கை அவனையே எண்ணி, காலத்தையும் எண்ணிக் கொண்டிருந்தாள்.


முன்பனி வந்தது; பின்பனியும் பிறந்து மறைந்தது; வேனிலும் சென்று கடைசியில் கார்காலமும் வந்தது. ஆனால் மங்கையின் மனங்கவர்ந்த மாதவன் மட்டும் வரவில்லை. இந்நிலையில் அவள் உள்ளம் என்ன பாடு படும்! உள்ளங் குன்றி, உடல் குன்றி, உருகி வாடும் மங்கையைக் கண்டு அவள் தோழிகள் வருந்தினர். பொய் சொல்லி ஏமாற்றியாவது அவளைத் தேற்ற முயன்றனர்.

"கார்காலம் வந்துவிட்டதாக நீ நினைத்து வீணே வருந்துகிறாய். உன் காதலர் மேல் குற்றம் கூறுகிறாய். ஆனால் உண்மையில் கார்காலம் இன்னும் வரவில்லை. வானத்தில் இருண்டு தெரிவது மேகமல்ல; பீதாம்பரம் அணியும் பெருமான் ஏறிச் செல்லும் பெரிய யானை. நீ கேட்கும் ஓசை இடியோசையல்ல, "அந்த" யானை பிளிறும் ஓசை. ஆகவே, கவலைப்படாதே" என்று ஒரே போடாகப் போட்டனர்.

"வாடையாய், இருபனியுமாய், வேனிலாய்
வந்தது காரென்றே
பேடைமா மயிற் சாயலாய் அன்பர்மேல்
பிழை கருதிடல்—செம்பொன்
ஆடை நாயகன், திருமகள் நாயகன்,
அரங்க நாயகன் ஏறும்
ஓடை மா இது; மதம் இது; பிளிறிய
ஒலி இது; மழை அன்றே;"

ஓவியக் கலைஞர் கனுதேசாய் தீட்டியிருக்கும் வண்ண ஓவியத்துக்குப் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் இந்த அழகிய கவிதை நன்கு விளக்கம் தருகிறது.




தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட், மதராஸ் - 1
SANKAR
I C
BRAND
சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்ட்
IC-572

REGISTERED No. M. 4392
Supplement to the Kalki issue dated 9 - 11 - 1958

Registered as a Newspaper in Ceylon

